ஜனவரி இதழ்கள் } 1983
பெப்ரவரி இதழ்கள் }

# தமிழரசு

௧

JL
V211m N83
N83.1
8534

# முழரசு





திருவள்ளுவர் ஆண்டு 2013
துந்துபி — மார்கழி 17





424

பாரதியார் பிறந்த நாளான 11-12-'82 தேசிய ஒருமைப்பாடு நாளாகக் கொண்டாடப் பெற்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் காமராசர் சாலையில் உள்ள பாரதியார் சிலை அருகில், நாட்டுக் கொடி ஏற்றி, ஒருமைப்பாடு உறுதி மொழி செய்து வைத்தார்.

# தேசிய
# ஒருமைப்பாடு உறுதிமொழி

நாட்டின் சுதந்திரத்தையும், ஒருமைப்பாட்டையும் காத்து வலுப்படுத்த முழுமனதான ஈடுபாட்டுடன் பாடுபடுவேன் என்று நான் காணிக்கை உணர்வுடன் உறுதி கூறுகிறேன்.

நான் ஒருபோதும் வன்முறையில் ஈடுபட மாட்டேன் என்றும், சமயம், மொழி, வட்டார, மற்ற அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளைப் பொறுத்த வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் அமைதியான முறையில் சட்டநெறி சார்ந்த வழிகளில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறேன்.

Verified

திருவள்ளுவர் ஆண்டு 2013
துந்துபி - மார்கழி 17
மலர் : 13 இதழ்: 13
1-1-1983

தமிழரசு

# தாயகத்திற்குச் சிறப்புச் சேர்ப்பீர்!

# சமுதாயத்திற்கு உயர்வு தருவீர்!

மேதகு பல்கலைக் கழகவேந்தர் அவர்களே, இணை வேந்தர் அவர்களே, துணை வேந்தர் அவர்களே, பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பேராசிரியர்களே, பட்டம் பெறுவதற்காக இங்கே வந்து இந்த அவையினை அணி செய்கின்ற என் அன்பிற்குரிய மாணவச் செல்வங்களே !

இன்றைய தலைமுறையினரான இளைஞர்களைச் சந்திப்பது எனக்கு எப்போதுமே ஒரு மகிழ்ச்சி தருகின்ற அனுபவம். அதுவும் பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டம் பெற்று இந்தச் சமுதாயத்தின் எதிர்காலத்தை உருவாக்குகின்ற மகத்தான பொறுப்பினை ஏற்பதற்கு முதற்படியில் அடி எடுத்து வைக்கின்ற உங்களை இன்று சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நான் கல்வி நிலையங்களில் அதிகம் படிக்காதவன் ; படிக்க வேண்டுமென்ற ஆர்வம் இருந்த நாட்களில் உழைத்து வாழ வேண்டுமென்ற கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டதினால் படிக்கும் வாய்ப்பை இளமையிலேயே இழந்தவன். பல்கலைக் கழகங்களில் திறமையாகக் கல்வி பயின்று பட்டம் பெற்று வெளி வருகின்ற உங்களையெல்லாம் இன்று காணும் பொழுது, ஒரு குடும்பத்தில் கல்வி பயின்று பட்டம் பெறாத ஒரு குடும்பத்தலைவன் தனது குடும்பக் குழந்தைகள் பட்டம் பெற்று வெளி வருகையில் எவ்வாறு பெருமிதம் கொள்வானோ அந்தப் பெருமையை, பெருமிதத்தை நான் இன்று அடைகிறேன்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில், ஏழைகளெல்லாம் இலவச பள்ளிக் கல்விபெற வேண்டுமென்று பாடு பட்டவரும், விடுதலை வீரரும், தன்னலமற்ற தியாகியும், ஏழைகளின் தோழருமான பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் பெயரால் இந்தப் பல்கலைக் கழகம் இயங்க வேண்டுமென எண்ணினேன். அந்த எண்ணத்தைத் தமிழக மக்கள் பேரன்போடு போற்றினார்கள். கல்லூரியில் பட்டம் பெறாத ஒருவரின் பெயராலே ஒரு பல்கலைக் கழகம் இயங்குவது இந்தக் காலத்தில் தமிழ்த்திற்குப் பெருமை சேர்க்கும் சிறப்பாகும்.

இந்தச் சிறப்பை மேலும் எடுத்துக் காட்டுகிற வகையில் தான், ஒரு கல்லூரிப் பட்டத்தைப் பெறாத, பெறுவதற்கான வாய்ப்பை இழந்து விட்ட என்னை, பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்த அழைத்திருக்கிறார்கள் என்று கருது கிறேன்.

அறிவு வளர்ச்சி அல்லது ஆராய்ச்சி அறிவு என்பது கல்லூரிகளில் பெறுகிற பட்டங்களினால் மட்டும் கிடைத்து விடுவதில்லை என்பதை இன்றைய



# பெற்றோருக்குப் பெருமை தேடுவீர்!

# வருங்காலத்தை ஒளிமயம் ஆக்குவீர்!

இளைஞர் உலகத்திற்கு, மாணவ சமுதாயத்திற்கு, இந்தப் பல்கலைக் கழகத்தின் வேந்தரும் துணை வேந்தரும் இந்த வாய்ப்பை என் போன்றவர்கட்கு அளிப்பதன் மூலம் உணர்த்த விரும்புகிறார்கள் என்றே நான் இதைக் கருதுகிறேன்.

இதே பல்கலைக் கழகத்தில் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் முதல் பட்டமளிப்பு விழாவில் சொற்பொழிவு ஆற்றியதை இன்று நாம் நினைவு கூர்வது நமது நீங்காத கடமையாகும். பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக வரலாற்றில் ஒரு சகாப்தம். தந்தை பெரியாரின் பாசறையில் பயின்று தனக்கென தனித்தன்மையான கொள்கைகளை வகுத்துக்கொண்டு, அவற்றிற்கு உதாரணமாக வாழ்ந்து, சமுதாயப் புரட்சிக்கு வழி காட்டிய மாபெரும் சிந்தனையாளர். 'கடமை கண்ணியம் கட்டுப்பாடு','எதையும் தாங்கும் இதயம் வேண்டும்', 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு ', 'மறப்போம் மன்னிப்போம்', 'வசவாளர்கள் வாழ்க', 'எங்கிருந்தாலும் வாழ்க' என்ற சொற்றொடர்கள் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களால் வெறும் வார்த்தை அலங்காரங்களுக்காகச் சொல்லப்பட்டவை அல்ல. அவை அவர் கடைப்பிடித்த வாழ்க்கை நெறிகள்; மற்றவர்கட்கு அவர் காட்டிய வாழ்க்கைத் தத்துவங்கள். அதனால்தான் அவர் ஒரு ஈடு இணையற்ற அன்புடையவராக, பேரிதயம் படைத்த ஒரு மாமனிதராக இன்றும் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

அத்தகைய மேதை, கல்வியைப் பற்றியும், மாணவர்களுடைய கடமை, ஒழுக்கம் ஆகியவை பற்றியும் இந்த மன்றத்திலேயும் வேறு பல இடங்களிலும் வாழ்நாள் முழுவதும் எடுத்துக் கூறியவை என்றென்றும் நமது நினைவில் இருத்திக் கடைப்பிடிக்க வேண்டியவையாகும்.

# மாண்புமிகு முதல்வர்

அவரது கொள்கைகளைப் பின்பற்றி, அவரை வழிகாட்டியாகக் கொண்டு மக்களுக்குத் தொண்டாற்றும் நான் அவர் சொன்னதற்கு மேலாக புதிதாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லை ; என்றாலும் சமுதாயத்தின் இன்றைய நிலையையொட்டி ஒரு சில கருத்துக்களை உங்கள் முன் எடுத்துரைப்பதை என் கடமையாகக் கருதுகிறேன்.

தொன்மையான பெருமை பெற்றது நம் இந்தியத் திருநாடு. குறிப்பாக நமது தமிழ் நாட்டிற்குப் பல ஆயிரம் ஆண்டுகளாகத் தழைத்து





மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் (7.9.1967) பேரறிஞர் அண்ணா உரை ஆற்றுகிறார்.

வளர்ந்து வரும் வரலாற்றுப் பெருமை உண்டு. என்றாலும், எவ்வளவு தொன்மையான சிறப்பைப் பெற்றிருந்தாலும் மாற்றங்கள் சமுதாயத்தில் இன்றியமையாதவை. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்பது நமது தமிழ் இலக்கணம். அதே நேரத்தில் எந்த மரபுகளையும் பண்பாடுகளையும் நல்லவையென்று காலங்காலமாகப் போற்றி வந்தோமோ, அவைகளை உதறிவிட்டு, புதுமை என்ற பெயரில் போலித்தனத்தை நாடி அலைவதும் நமக்கு உகந்ததல்ல. ஆனால் அதே சமயத்தில் பழமையிலேயே சிறைப் பட்டுப் புதிய சூழ்நிலைகளை உணர மறுத்தால் தேக்கம் தான் மிஞ்சி நிற்கும். இந்த இரண்டு நிலைகளிலும் சிக்குறாமல், பழைமையை ஆதாரமாகக் கொண்டு, புதுமையிலே ஆர்வம் காட்டி, நமது பழைய மரபுகள், பண்பாட்டு நெறிகள் இழையோடுகின்ற சமூகப் பொருளாதார அமைப்புதான் நமது நாட்டுக்கு ஏற்றதாகும். மாறுதலைக் கண்டு அஞ்சாமல் அறிவுடைமையோடும் ஆண்மையோடும் நின்று எதையும் நன்றாய் ஆராய்ச்சி செய்து காலத்திற்கும் அவசியத்திற்கும் தக்க வண்ணம், தன்னைத் தயாரித்துக்கொள்ள வேண்டியது பகுத்தறிவுடைய மனிதனின் இன்றியமையாத கடமையாகும் :

இன்று நாகரிகத்தின் வளர்ச்சி, மிக உச்ச நிலைக்கு எட்டியுள்ள போதிலும் வசதியுள்ள மனிதனுக்குப் பல வாய்ப்புகளும், சாதனங்களும், எட்டியுள்ளபோதிலும், பெரும்பாலான மனிதர்கள் தங்கள் மன அமைதியைப் பறிகொடுத்துள்ளார்கள். இதற்குக் காரணம் தான் வாழும் சமுதாயத்திற்கு, தான் சொந்தமானவன் (sense of belonging) என்ற உணர்வு இல்லாமல் போனதுதான். தான் உயரவேண்டும்—இல்லை தான் மட்டும் உயர வேண்டும் என்ற வேட்கை உணர்வையும், போட்டி உணர்வையும் நாகரிகச் சமுதாயம் வளர்த்துள்ளதே யொழிய, தான் ஒரு சமூகத்தைச் சார்ந்தவன், அந்தச் சமூகத்திற்குச் சொந்தமானவன் என்ற ஒட்டுறவை இன்றைய நாகரிகச் சமுதாயம் வளர்த்துக் கொள்ளவில்லை. அதற்குக் காரணம் நாகரிகமுள்ள சமுதாயமாக வளர வேண்டுமென்று விரும்புகிறோமே தவிர, அறிவார்ந்த, அன்பார்ந்த சமுதாயமாக நம்மை வளர்த்துக் கொள்ள நாம் முனைவதில்லை.

கல்வி அல்லது பட்டப்படிப்பு மட்டுமே ஒருவனை முழுமை பெறச் செய்துவிடாது. மனிதனுடைய அறிவாற்றலையும், திறமைகளையும் வளர்த்து அவனுக்கும் அவன் வாழும் சமுதாயத்திற்கும் பயன்படுமாறு செய்யும் கருவியே கல்வி. மனிதன் என்று ஒருவன் தன்னைச் சொல்லிக் கொள்ள வேண்டுமானால் அவன் கல்வி அறிவைப் பெற்றாக வேண்டும். மக்களாட்சி தத்துவத்தில் எல்லோரும் சமம் என்ற நிலை உருவாவதற்கு ஒவ்வொருவரும் கல்வி கற்கும் வசதியைப் பெறுவது அவசியம். கல்வி வசதியை எல்லோரும் பெறுகின்ற நிலை இல்லையெனில் ஒரு சமத்துவ, சமுதாய அமைப்பு ஏற்பட முடியாது. பள்ளிக்கூடங்களையும் பல்கலைக் கழகங்களையும் அதிக அளவில் ஏற்படுத்தினால் மட்டும் நாம் கல்வியை வளம்பெறச் செய்துவிட்டோமென்று கூறமுடியாது. எல்லோருக்கும் கல்வி கற்க வாய்ப்பு இருந்தால் தான் ஒரு சமத்துவ சமுதாயம் அமைவது சாத்தியம். பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் விளைவாக கல்வி கற்க வேண்டிய இளம் பருவத்தில் வேலைசெய்து பிழைக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படும் நிலையில் குழந்தைகள் கல்வி கற்கும் வாய்ப்பினை இழக்க நேர்ந்தால், அது சமுதாயத்திற்குப் பெரிய இழப்பாகும். எல்லோரும் கல்வி கற்கும் வாய்ப்பினைப்பெற வேண்டுமென்றும், அதற்கு பொருளாதார காரணங்கள் முட்டுக்கட்டையாகி விடக் கூடாதென்ற கருத்தின் அடிப்படையில்தான், குழந்தைகளின் மதிய உணவுத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி, இன்றும் சுமார் 65 லட்சம் குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு வழங்குகிறது. இதனால் அவர்களது குடும்பத்தின் பொருளாதார சூழ்நிலைகள் அவர்களது கல்வியைப் பாதிக்காது என்பது உறுதி செய்யப்படுகிறது. இது எதிர்கால சமுதாயத்தின் நன்மைக்காக நாம் செய்யும் முதலீடு.

கல்வி என்பது ஏட்டுப் படிப்பிலும், எண் எழுத்துப் பயிற்சியிலும் மட்டும் அடங்கியது அல்ல. ஆழ்ந்த அறிவும் சிறந்த அனுபவமும், பண்பட்ட குணமும் சமூக உணர்வும் கொண்ட நோக்கும், நெறிமிக்க நடத்தையும்தான் மாணவர்களை நாட்டின் சிறந்த குடிமக்களாக ஆக்கும். பல்கலைக்கழகப் பரிட்சையிலே வெற்றி கண்டு; பட்டம் பெற்று இன்று வெளியே செல்லத் தொடங்குகிறீர்கள். இனி, வெளியே உங்களுக்குக் காத்திருப்பது வாழ்க்கைப் பரிட்சை. அந்தப் பரிட்சையிலேயும் நீங்கள் வெற்றி கண்டு இந்த நாட்டின் நல்ல குடிமகன் என்ற பட்டத்தையும் நீங்கள் பெறவேண்டுமென்று உங்களை நான் உளமார வாழ்த்துகிறேன்.

'இந்தியா கிராமத்திலே வாழ்கிறது' என்ற உண்மையை இந்திய நாட்டின் தந்தை அண்ணல் காந்தி அடிகள் நமக்கு உணர்த்தினார். நாம் கற்கின்ற நுட்ப அறிவும், கிராம மக்களின் அனுபவ அறிவும் ஒன்றாக இணைந்தால்தான் சமுதாயம் முன்னேற முடியும் என்றார் பேரறிஞர் அண்ணா. அந்த நோக்கிலே நீங்கள் இன்று பல்கலைக்கழகத்தின் தூதுவர்களாகப் பாமரர்களிடம் செல்ல வேண்டும். வாழ்வையே அடகு வைத்து, தங்கள் உடலையே உரமாக இட்டு உழைத்து வரும் இப்பாமர மக்கள், தங்கள் வாழ்நாள் முழுவதும் சேகரித்துள்ள அனுபவ அறிவு, ஒருசில புத்தகங்களை மட்டும் படித்துப் பெறக்கூடிய ஏட்டு அறிவைவிட, மிக உயர்ந்ததும், உண்மையானதும், நிலையானதுமாகும். அவர்கள் அனுபவ அறிவையும், நம் ஆராய்ச்சி அறிவையும் ஒன்றாகப் பிணைக்க வல்ல, புதிய உத்திகளைக் கண்டுபிடிப்பதுதான், பல்கலைக்கழகத்தின் முன் இன்றுள்ள பெரும் பொறுப்பாகும்.

கல்விச் சாலையில் உள்ள ஆய்வுக் கூடங்களில் உங்களில் பலர் பரிசோதனைகள் நடத்தி உள்ளீர்கள். ஆனால், சமுதாயம் என்ற பரந்த ஆய்வுக்கூடத்தில் பரிசோதனை நடத்த இனி உங்கள் இளம் உள்ளங்களை நீங்கள் பக்குவப் படுத்த வேண்டும்.

அண்ணா வேடிக்கையாகச் சொன்னார்கள்— "மேல்நாடுகளில் நூற்றுக்கு தொண்ணூறு பேர் படித்தவர்களாக இருக்கிறார்கள். நம் நாட்டில் நூற்றுக்கு அறுபது பேர் எழுத்தறிவு அற்றவர்களாக இருக்கிறார்கள். ஆனால், நூற்றுக்கு எண்பது பேர் அறிவுள்ளோர் வாழும் நாட்டின் மக்கள் நம் நாட்டவரை மதிக்கவேண்டுமென்று நாம் எண்ணுவதற்கு நாம் மெத்த துணிச்சல்காரர்களாகத்தான் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். இன்று மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 46 பேர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இன்னும் அண்ணா கூறிய துணிச்சலுக்கு உண்மையிலேயே பொருத்தமுள்ளவர்களாக நம்மை நாம் தயார் செய்து கொள்ளவில்லையென்றே கூற வேண்டியுள்ளது. ஏனெனில் இந்த சதவிகிதம் 100க்கு 60 பேர் என்றோ அல்லது 70 பேர் என்றோ இந்த 15 ஆண்டு காலத்தில் உயர்ந்திருந்தால் நாம் அவ்வாறு கூறியிருக்கமுடியும். இதற்கு என்ன காரணம்? கல்விக்கூடங்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் எண்ணிக்கையில் பெருகியிருக்கின்றன. ஆயினும் நமது முன்னேற்றத்தில் வேகம் இல்லாததற்குக் காரணம் என்ன என்பதை நாம் சிந்திக்கவேண்டும். ஆண்டுதோறும் நாம் கல்விக்காகச் செலவிடும் தொகை அதிகரித்துக் கொண்டே



போகிறது. ஆனால் அதற்கேற்ப நாம் முன்னேற்றம் பெற்றுள்ளோமா என்றால் இல்லை. நமது கல்விச் சாலைகளின் பணி இந்தியாவின் இதயம் போன்ற கிராமங்களை எட்டவில்லையென்பதே காரணம். எனவே, நமது கல்வித் திட்டத்தில், படிப்பு முறையில், அடிப்படையான மாற்றங்கள் தேவையென்று நான் கருதுகிறேன். இந்தியாவின் மக்கள் தொகையில் மூன்றில் இரு பங்கினர் கிராமப்புறங்களில்வாழ்கின்றனர். கிராமங்களிலுள்ள கல்வியறிவில்லாத பெரியோர்கள், தாய்மார்கள் ஆகியோர்களுக்கு அடிப்படையான கல்வியையூட்டுகின்ற வழிமுறைகளை நாம் கண்டறிந்தாகவேண்டும். பள்ளி சென்றுதான் படிக்கவேண்டும் என்ற நிலைமையை நாம் படிப்படியாக மாற்றியாக வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி, சமுதாயக் கல்வி, பொருளாதாரக் கல்வி, அறிவியல் கல்வி இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளுடன் இணைந்த கல்வியே கற்றுத்தரப்



படவேண்டும். அடிப்படை ஆதாரக்கல்வியை முதியோர் பள்ளிக்குச் செல்லாமல் வீட்டிலிருந்தோ அல்லது மாலைக்கல்வி மூலமோ கற்க வசதிசெய்து தரப்படவேண்டும். இந்த வசதி ஏற்பட்டால் தங்கள் தொழில்களைச் செய்து கொண்டே பொதுக் கல்வியறிவைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். பட்டம் பெற்று வெளிவரும் மாணவர்களாகிய நீங்கள் பல்வேறு தொழில்களில் நிபுணர்களாக உங்கள் வாழ்க்கையினை அமைத்துக் கொண்டு வாழ்கின்றபோது வயதுவந்தோருக்கும், பெண்களுக்கும் வாய்ப்புக் கிடைக்கும் வகையில் நீங்கள் அவர்களுக்குக் கல்வி கற்றுத்தருவதற்கு உங்கள் ஓய்வு நேரத்தை அல்லது மாலை நேரத்தை ஒதுக்கலாம். இதன் மூலம் நீங்கள் நாட்டுக்கு ஒரு அரிய தொண்டைச் செய்த பெருமைக்கு உரியவர்களாவீர்கள். எனவே, கல்வியைப் பரவலாக்குவதற்கு இதுவொரு நடைமுறை யோசனை என்று நான் கருதுகிறேன்.

அறிவியல், தொழில்நுட்பவியல், கணிதம், வேளாண்மை ஆகிய பல்வேறு துறைகளில் உலகின் பல்வேறு பகுதிகள் அடைந்துள்ள முன்னேற்றங்கள் யாவும் சாதாரண குடிமகன் அறியும் வகையில் செய்யப்படவேண்டும். இவைகள் அனைத்தையும் தமிழில் கற்பதற்கு வசதி செய்யப்படவேண்டும். அறிவியல், தொழில் நுட்பவியல் போன்ற கல்விகளையெல்லாம் தமிழில் கற்பதற்காக அந்த அடிப்படை இயல்களை விளக்க, தமிழில் நிறையப் புத்தகங்கள் வேண்டும். அவைகள் மாணவர்கள் சுலபமாகக் கற்கும் வகையில் தமிழில் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் மகாகவி பாரதியார் கூறியுள்ளார். ஜப்பான் நாடு, இன்று அமெரிக்கா போன்ற மிகவும் முன்னேற்றமடைந்த நாடுகளுக்குப் போட்டியாக பல்வேறு துறைகளில் முன்னேறியுள்ளதற்குக் காரணம் அங்கு விஞ்ஞானம் நுட்பவியல் உட்பட எல்லாப் பாடங்களும் அந்த நாட்டு மொழியிலேயே கற்பிக்கப்படுவதுதான். சாதாரண குடிமகனும் கல்வியின் பயனை எளிதில் பெற்று மேலும் மேலும் முன்னேறுவதற்கும், அவர்களது ஆர்வத்தை, அறிவாற்றலை வளர்த்துக்கொள்வதற்கும் அங்கு முடிகிறது. இந்த முறையை நாம் கையாண்டு அறிவுத் துறையிலே நாம் ஒரு பெரும் புரட்சியைச் செய்யலாமென்று தோன்றுகிறது.

" பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும் "

என்று பாரதியார் பாடியுள்ளதை அவருடைய நூற்றாண்டு விழாக்காலத்திலாவது நாம் நினைவில் கொண்டு முயற்சிக்கவேண்டும்.

கல்வி கற்பது, பட்டப்படிப்பு படிப்பது என்பது படித்து முடித்தவுடன் ஏதாவது ஒரு வேலை பார்ப்பதற்குத்தான் என்ற ஒரு தவறான அடிப்படையில் திண்ணமாக நம்முடைய இளைஞர்களை உருவாக்கி வந்துவிட்டோம். ஏதாவது ஒரு வேலைபார்ப்பதற்குத்தான் கல்வி பட்டம் என்றால், நாட்டில் உள்ள அனைவருக்கும் கல்விகற்க வேண்டிய அவசியமேயிராது.



ஆங்கிலேயர் காலத்திலே அவர்களுக்குத் தேவையான, நிர்வாகத்திற்குத் தேவையானவர்கள் மட்டுமே கல்விகற்கும் வாய்ப்பைப் பெற்றார்களே அந்த அடிப்படைதான் சரியெனத் தோன்றும். " வேலைபார்க்கத்தான் படிப்பு " என்ற பழைய கல்வித் திட்டத்திலேயே நாம் சென்றுகொண்டிருப்பதும், வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவருவதற்கு ஒரு காரணம் எனலாம். தற்போதுள்ள கல்விமுறைக்குப் பதிலாக தொழிற்கல்விமுறை பெருக வேண்டும். கல்வி அறிவு என்பது மனிதனுக்கு அடிப்படை, தொழிற்கல்வி என்பது வாழ்க்கைக்கு அடிப்படை என்ற உணர்வைக்கல்வி நிலையங்கள் வளர்த்தாக வேண்டும். எனவே, கல்வி குறித்து நமது கருத்துக்களில் புரட்சிகரமான மாறுதல் தேவை என்பதையும், அதைப் பற்றிச் சிந்திக்கவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகி உள்ளோம் என்பதையும் நான் இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். படித்த இளைஞர்கள் நம்பிக்கையுடன், கிராமங்களுக்குச் சென்று அல்லது தாங்கள் வாழுகிற இடங்களில், கல்வியைப் பரப்பவோ, தொழிலைத் துவங்கவோ அல்லது வியாபாரம் செய்யவோ முனையலாம். அதற்கு அரசும் துணை புரியப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்துகிறது. உங்கள் சொந்த முயற்சியிலே தொழிலை மேற்கொள்ள முன்வந்தால் உங்கள் வாழ்க்கையில் வளமும் நாட்டின் பொருளாதார வளமும் உறுதிப்படும்.

" வாலிபர்கள் ஆசிரியர்களாக வேண்டும். உலகத்தைக் கிராமத்திற்குக் காட்டவேண்டும். வாலிபர்கள் வைத்தியர்களாக வேண்டும். உடல், உள்ளம் இரண்டிலுமுள்ள நோய் தீர்க்கும் மருந்து அளிக்க வேண்டும். வாலிபர்கள் பாலம் அமைக்க நீர்த்தேக்கம் அமைக்க, உழவு முறையை மாற்றப் பணிபுரிய வேண்டும். பழமையின் பிடியிலிருந்து மக்களைப் பக்குவமாக விடுவித்துப் புதுமையின் அவசியத்தைக் காட்டிப் புத்துலகம் அமைக்க வேண்டும் படித்த வாலிபர்கள். இதற்கான திறமும், தீரமும் தேவை" என்று அண்ணா அவர்கள் கூறியதை நாம் இங்கு நினைவு படுத்திக் கொள்வது பொருத்தமுடையது.

நீங்கள் பட்டதாரிகளாக, சமுதாயத்தில் அடியெடுத்து வைக்கும்பொழுது சில பிரச்சினைகள் உங்களைச் சந்திக்கின்றன. சாதி, சமயப் பூசல்கள் அவற்றுள் முக்கியமானது. கல்லூரிகளில் சாதி, சமய வேறுபாடின்றி வாழ்ந்து வந்த நீங்கள் சமுதாயத்திலே அவைகளைச் சந்திக்கும் நிலையுள்ளது. விடுதலை பெற்று 35 ஆண்டுகள் ஆகியும் நமது நாடு உலக நாடுகளிடையே பின்னடைந்த நிலையில்தான் இன்னும் இருக்கின்றது. இதனை நாம் மாற்றியமைத்தே ஆகவேண்டும் என்று உறுதியுடன் உங்கள் செயல் முறைகளை வகுத்துக்கொள்ளுங்கள், ஆண்டு ஆண்டுகாலமாக நம்மைப் பிடித்து வந்துள்ள சாதி. சமய வேறுபாடுகளுக்கு நீங்கள் இடம் கொடுத்துவிட வேண்டாம். உயர்வு தாழ்வு என்பது சாதி வேற்றுமையால் மட்டும் இல்லை. படித்தவர் பாமரர் என்றும்கூட உயர்வு தாழ்வு காட்டப்படும் உணர்வை நாம் வளர்த்துக் கொண்டு அதன் விளைவாகச் சமுதாயத்தில் பெரும்பகுதியினரை வாழத்தகுதியற்றவர்கள் என்ற கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டதாக அப்போதிருந்த பெரியவர்கள் சுட்டிக்காட்டிக் கண்டித்தார்கள். அப்படிக் கீழானவர்களாகக் கருதப்பட்டவர்களை மற்றவர்களுக்குச் சமமான நிலைக்குக் கொண்டு வருவதற்காகக் கல்வி பெறும் வாய்ப்பை அளிக்க வேண்டும் என்ற ஆதங்கத்தில்தான் பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள் ஆகியோருக்கு விழுக்காடு முறையில் இடம் ஒதுக்கும் முறை கொண்டு வரப்பட்டது. இந்த உயர்வுதாழ்வுகள் எல்லா மட்டத்திலும் நமது ஒற்றுமையைக் குலைத்து, நம்மை பலவீனப் படுத்தி, நமது ஆக்க சக்திகளைப் பாழ்செய்து,



நம்மை முன்னேற விடாமல் தடுத்தும், கெடுத்தும் வருகின்றன. இதற்கு மனத்துணிவு வெண்டும். 'துணிவுடைமை என்பது உடல் உரத்தைக் குறிப்பிடுவது அல்ல, மனத்திண்மையே துணிவுடைமை' என்று காந்தியடிகள் கூறினார். "நல்லொழுக்கமும், மனத்திண்மையும் \ உள்ளவர்கள் நம்பிக்கையை எளிதில் உருவாக்குவதோடு தங்களைச் சுற்றியுள்ளவர்களையும் தூய்மைப் படுத்துகின்றனர் என்றும் காந்தியடிகள் கூறியுள்ளார். எனவே, சமுதாயத்தைப் பின்னோக்கி இழுத்துச் செல்லக்கூடிய இதுபோன்ற தீயசக்திகளுக்கு இரையாகாமல் தெளிந்த சிந்தனையுடனும், மனஉறுதியுடனும், துணிவுடனும் செயல்படுவதற்கு நீங்கள் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். எது நன்மை, எது தீமை, என்பதை அறிந்துகொள்வதற்கும், எதை ஏற்பது, எதைத் தவிர்ப்பது என்ற முடிவு எடுத்துக்கொண்டு மேலே மேலே முன்னேறுவதற்காகவும்தான் நாம் கல்வி கற்றிருக்கின்றோம்.

'' உண்மையான கல்வியின் நோக்கம், ஒழுங்கானவற்றைச் செய்வோராக மட்டுமின்றி, ஒழுங்கானவற்றில் பற்றுக்கொள்வோராகவும் உழைப்போராக மட்டுமின்றி, உழைப்பை மதிப்பவராகவும், கற்றவர்களாக மட்டுமின்றி அறிவின் மீது நாட்டமுடையோராகவும், தூயோராக மட்டுமின்றி, தூய்மையை, நியாய உணர்வும், நல்வாழ்வும் உடையோராகவும் மக்களை ஆக்குதல் வேண்டும் '' என்று காந்திஅடிகளைப் பெரிதும் கவர்ந்த பேரறிஞர் ரஸ்கின் கூறியுள்ளார்.

கல்வி கற்றுள்ள நீங்கள் அறிவொளி பெற்றுள்ளீர்கள். கண்மூடித்தனமாக எதையும் ஏற்றுக் கொள்ளாமல், தீர ஆராய்ந்த தெளிவு பெற்று முடிவுகளைத் துணிவுடன் செயலாக்குவதுதான் நீங்கள் பெற்ற கல்விக்கு அழகாகும். எந்த வழியைப் பின்பற்ற வேண்டும் என்ற தம் கருத்தை உங்கள் மீது சுமத்த எவருக்கும் உரிமையில்லை. ஆனால், எந்த வழியை ஏற்றுக்கொள்கிறீர்களோ அந்த வழி அறவழியாக இருக்கவேண்டும் என்பதை மட்டும் நான் வலியுறுத்திக் கூறுவேன். சில அடிப்படைக் கடமைகள் நம் அனைவருக்கும் உண்டு. அவற்றை ஆற்றும் வகையிலே நான் உங்களைக் கேட்டுக்கொள்வது ஒன்றுதான். தன் ஊனையும், உதிரத்தையும் அளித்து உங்களுக்கு உயிரளித்த உங்கள் அன்னையை என்றென்றும் வணங்குங்கள். '' யாதும் ஊரே, யாவரும் கேளிர் '' என்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பொதுமை நெறி போதித்த, தாய்மொழியாம் செந்தமிழ் மொழியை என்றென்றும்போற்றுங்கள். உங்களை வாழவைத்து எனது குடிமகன் என்ற பெருமையை உங்களுக்கு அளிக்கும் பிறந்த தாய் நாட்டை நேசியுங்கள். ''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே '' என்ற மகாகவி பாரதியின் வாக்கை நினைவில் வையுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக உங்களுக்கு நீங்களே உண்மையாக இருங்கள். அப்பொழுதுதான், உங்கள் வாழ்க்கை மட்டுமல்லாது, உங்களை நம்பி நிற்கும் இந்த நாட்டின் வாழ்வையும் நீங்கள் உருவாக்கமுடியும், உயர்த்த முடியும். கனிவுடனும், பணிவுடனும், துணிவுடனும், பாசத்துடனும், பரிவுடனும், வாய்மையுடனும், வலிவுடனும், தூய்மையுடனும், நீங்கள் நன்மக்களாக வாழ்ந்து, உங்கள் பெற்றோருக்குப் பெருமை தேடித்தந்து, உங்களுக்கு ஆதரவு அளித்த சமுதாயத்திற்கு உயர்வு தேடித்தந்து, உங்களைக் குடிமக்களாகப் பெற்றுள்ள இந்த நாட்டிற்குச் சிறப்பைத் தேடித்தந்து, எதிர்காலத்தை ஒளிமயமாய் ஆக்க வேண்டுமென்று உங்களை வாழ்த்துகின்றேன்.

அண்ணா நாமம் வாழ்க.

[மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தி பதினாறாவது பட்டமளிப்பு விழாவ (18-12-1982) மாண்புமிகு தமிழக முதல் திரு எம்.ஜி.ஆர்., அவர்கள் ஆற்றிய உரை]

# சென்னையில் பாரதி நூற்றாண்டு நிறைவு விழா

## ஒருமைப்பாட்டுக் கவிஞர்

—திரு ஏ. ஆர். கித்வாய்
(மேதகு பீகார் மாநில ஆளுநர்)

நான் பாரதியின் கவிதைகளைத் தமிழ் மொழியில் படிக்கவில்லையென்றாலும் அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பைப் படித்திருக்கிறேன். தமிழ் அறிந்த என் மகள் மூலம் நான் விளக்கம் பெற்றிருக்கிறேன். இந்தியாவில் தோன்றிய மிகச் சிறந்த கவிஞர்களுள் பாரதியும் ஒருவர். இதை நான் தயக்கமின்றிக் கூறுவேன்.

பாரதி நூற்றாண்டு விழாவுக்கென அமைக்கப் பெற்றுள்ள மையக்குழு, பாரதியின் நூல்களை இந்தியாவின் முக்கிய மொழிகளில் எல்லாம் பெயர்த்து வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்துவருவது குறித்து மகிழ்கிறேன்.

பாரதி தேசிய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டவராகத் திகழ்ந்தார். அவர் மத, இன, சாதி வேறுபாடின்றி, இந்தியர்களைப் பற்றியே பேசினார்.







## பாரதி இன்னும் வாழ்கிறார்!

திரு எஸ். எல். குரானா
(மேதகு தமிழக ஆளுநர்)

பாரதி-புகழ்பெற்ற புரட்சிக் கவிஞர். வாழ்நாள் முழுதும் நாட்டுப் பற்றுடையவராக-தேச பக்தி கொண்டவராக அவர் விளங்கினார். அவர் நிகழ்காலத்திற்குரிய கருத்துக்களையும் எதிர்காலத்திற்கு உதவும் தத்துவங்களையும் எடுத்துச் சொன்னார்.

சுதந்திரம்பற்றி-சோஷலிஸம் பற்றிப் பாடியுள்ளார். அவரது பாடல்களை இந்த நாட்டு இளைஞர்களும் இளம் பெண்களும் படிக்க வேண்டும். இளைஞர்களின் உள்ளத்தில் தேசிய உணர்ச்சியை ஊட்டியவர் அவர். 'பாரதநாடு எனது தாய்போல்' என்று பாடினார். அவரது கவிதைகள் அவரை இன்னும் வாழவைக்கின்றன.

பாரதி நூற்றாண்டு விழாவை இவ்வளவு சிறப்பாகக் கொண்டாடும் தமிழக அரசை-குறிப்பாக முதல்வரை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

# பாரதி பெயர் எந்நாளும் வாழ்க!

## திரு ஆர். வெங்கட்ராமன்

(மாண்புமிகு இந்திய அரசு பாதுகாப்புத்துறை அமைச்சர்)

எந்த ஒரு கனவைப் பாரதி கண்டாரோ. அது நிறைவேற்றப்படும் வகையில் பாரதி விழா நடைபெறுவதுகண்டு நான் மகிழ்ச்சி கொள்கிறேன். இந்திய நாட்டின் ஒற்றுமைக்குப் பாடுபட்ட பெருமை பாரதிக்கு உண்டு. அதே முறையில் பீகார் மாநில ஆளுநர், உத்தரப் பிரதேச அமைச்சர் ஆகியோரை தமிழ்நாட்டுக்கு வரும்படியாகச் செய்த பெருமை தமிழ் நாட்டு அரசுக்கு இருப்பதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

சுதந்திரம் வேண்டும், சகோதரத்துவம் வேண்டும் சமதர்மம் வேண்டும் என்ற கொள்கைகளை பாரதி பரப்பி, மக்களைத் தட்டி எழுப்பிய காரணத்தால் தமிழ் மக்கள் வீறுகொண்டு எழுந்தனர். அவரைக் கவி என்றும் மகாகவி என்றும் சொன்னோம். உண்மையில் அவர் உலக மகாகவி.

அடிமை என்ற நிலை மாறவேண்டும்; ஒருவரை ஒருவர் ஏமாற்றிப் பிழைக்கும் நிலை மாற வேண்டும். உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்றெல்லாம் கூறினார். எந்த ஒரு சமுதாயமும் மற்ற சமுதாயத்தைச் சுரண்டிப் பிழைக்கக்கூடாது என்றார். பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டால் சமூக முன்னேற்றம் ஏற்பட்டுவிடும் என அறிந்து சொன்னார்.





# தூயவரின் தொண்டுகளைப் போற்றுவோம்!

## திரு என். கே. பி. சால்வே

(மாண்புமிகு இந்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர்)

நான் பாரதியின் புரட்சிகரமான கவிதை ஓசையின் பெருமையை உணர்கிறேன். அடிமைத் தனத்தை ஒழிப்பதற்கு அவரது கவிதைகள் பயன்பட்டன. அவருக்கு நன்றி செலுத்த வேண்டியது நமது கடமை

தன்மானத்தை -நாட்டுப்பற்றை -வளர்க்கும்வகையில் அவர் வழங்கிய கவிதைகள் ஏராளம்.

அவர் சிறந்த கவிஞர்-சிறந்த தத்துவ மேதை- சிறந்த தேசியவாதி. அந்தத் தூய ஆத்மாவின் தொண்டுகளைப்போற்றிவாழ்த்துவோம்.

# பாரதிக்குப் பாராட்டு

## திருமதி ஷீலா கௌல்

(மாண்புமிகு இந்திய அரசு கல்வி அமைச்சர்)

பாரதி, இந்திய நாட்டின் தவப்புதல்வர்களில் ஒருவர்; அவர் என்றென்றும் நினைவு கொள்ளப்பட வேண்டியவர். அவரது நூற்றாண்டு விழா நாடெங்கிலும் கொண்டாடப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும். டில்லியில் பாரதியார் நூற்றாண்டு விழா அகில இந்திய அளவில் ஜனவரி, 8, 9 ஆகிய நாட்களில் கொண்டாடப்பட இருக்கிறது. அதன்பின் அனைத்துலக அளவில் கொண்டாடப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.



# தீர்க்கதரிசி பாரதி

## திரு ஆர். வி. சாமிநாதன்

(மாண்புமிகு இந்திய அரசின் வேளாண்மைத்துறை இணை அமைச்சர்)

பாரதி உலக மகாகவி. பெரிய புரட்சிகரமான கவிஞர். தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அந்தப் புரட்சிக் கவிக்கு எடுக்கும் விழா சிறப்பாக உள்ளது.

பாரதியார், பாடலால் தேசிய உணர்வை எழுப்பினார். 40 வருடம்தான் வாழ்ந்தார். எப்போதும் விடுதலை விடுதலை என்றே முழக்கமிட்டார். அடிமையாக இருக்கமாட்டேன் என்று கர்ஜித்தார். அவர் சிறந்த புலவர். சிறந்த பாடலாசிரியர். அவர் ஒரு தீர்க்கதரிசி.



# இணையற்ற கவிஞர் பாரதியார்

## மாண்புமிகு முதல்வர்



நேற்றைய நிகழ்ச்சியையும் இன்றைய நிகழ்ச்சியையும் எடை போட்டுப் பார்க்க வேண்டும். நேற்றுப் பேசிய பெண்களின் பேச்சு போராட்டத்திற்குத் தயாராக இருந்தது. இன்று இங்கே பேசிய ஆண்களின் பேச்சு, சமாதானத்துக்கு வழிவகுப்பதாக இருந்தது.

நேற்று எழுச்சியுடன் நடைபெற்ற மகளிர் பேரணியை ஊர்வலம் என்று சொல்வதா? பேரணி என்று சொல்வதா? போராடச் செல்லும் வீராங்கனைகளின் அணிவகுப்பு என்று சொல்வதா? என்று எண்ணிப்பார்க்கும் போது எந்தப் பெயர் சொல்லி அழைத்தால் பொருத்தமாக இருக்குமோ அந்தப் பெருமைக்கு வழிவகுத்த அந்த வீராங்கனைகளுக்கு நான் தலை வணக்கம் செலுத்துகிறேன்.

அவர்களை ஊர்வலத்தில் கலந்து கொள்ள அனுமதித்த அவர்களது குடும்பத்து ஆண்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். எவ்வளவு பெரிய நம்பிக்கையில் பெண்களை அவர்கள் அனுப்பியுள்ளார்கள் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால் அவர்களது தகுதியை உணர முடியும்.

என் வாழ்நாளில் இதுபோன்ற ஊர்வலத்தை இதுவரை நான் கண்டதில்லை. அதிகப் பொதுமக்களும் - அரசில் வேலை செய்யும் அதிகாரிகளும் தங்களை ஊர்வலத்தில் இணைத்துக் கொண்டு சில கிலோமீட்டர் தூரம் நடந்து வரும் நிகழ்ச்சியை இதுவரை நான் கண்டதே இல்லை. நேற்று, வங்கியில் பணி புரிவோர், தனிப்பட்ட மகளிர் அனைவரும் ஊர்வலத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று சட்டம் எதுவும் போடவில்லை. அவர்கள் தாங்களாகவே வந்து கலந்து கொண்டது, எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கை தரும் வகையில் அமைந்திருக்கிறது.

நேற்று செல்வி ஜெயலலிதா அவர்கள் இங்கே ஒரு பயங்கரமான கருத்தைச் செயல்படுத்த வேண்டும் என்றார். அது பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கிறது. வரதட்சணைக்காகக் கொடுமைப் படுத்துபவர்களைத் தூக்கில் போட வேண்டும் என்று சொன்னார். அதையும் உடனே போடவேண்டுமாம், காலதாமதம் கூடாதாம். கருணை மனு போடுவதற்குக் கூட நேரம் தரக் கூடாதா? என்ன கோபம்? என்ன ஆத்திரம்? நேற்று இது பற்றிச் சிந்திக்க வாய்ப்பு ஏற்பட்டது.

திருமணம் செய்து கொள்ள வரும் ஆண்கள், தட்சணை கேட்பது என்றால் அது நியாயமில்லை. நான் சொல்வதெல்லாம் பெண்கள் ஆண்களிடம் தட்சணை கேட்க வேண்டும் என்பதுதான்.

''நான் படித்தவள்; பணியாற்றுகிறேன்! எனக்கு என்ன கொடுக்கிறீர்கள்?'' என்று பெண்கள் கேட்க வேண்டும். சில நேரங்களில் (Turn the table) என்று சொல்வார்கள், அந்த நிலை வர வேண்டும்.

ஸ்ரீதனம் என்கிறார்கள். ஸ்திரீ தனமா, ஸ்திரீ தானமா, எது எப்படி ஆயிற்று என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெண்களைத் தானமாகக் கொடுத்து, சொத்துக்களையும் கொண்டு செல்கிறார்கள். அப்படிக் கொண்டு செல்பவர்கள் பெண்களை வாழ வைக்க வேண்டாமா? அரைப் பவுன் நகை குறைந்து விட்டது என்பதற்காக ஒரு பெண் தற்கொலை செய்து கொள்ளும் நிலை வந்துவிட்டால் அதை அனுமதிக்கலாமா?

பாரதி நூற்றாண்டு விழாவைப் பொறுத்த அளவில் ம.பொ.சி அவர்களுக்கு வாழ்த்துக் கூற

கடமைப்பட்டிருக்கிறேன். இந்த' பாரதி நூற்றாண்டுவிழா எட்டயபுரத்தில் தொடங்கப்பட்டபோது - அவர் மருத்துவ மனையில் இருந்தார். நான் போய்ப் பார்த்துச் சென்றேன். அதன் பிறகு அவருக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றது.

எட்டயபுரத்திற்கு வர முடியவில்லை என்பதில் அவருக்கு இருந்த வேதனை இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. அவர், இந்த நூற்றாண்டு நிறைவு விழாவுக்குத் தலைமை வகிக்கிறார். அவர் நூற்றாண்டுக் காலத்திற்கு மேல் வாழ்ந்து ஒவ்வொரு ஆண்டும் அவரது தலைமையில் பாரதி விழா கொண்டாடப்படவேண்டும்.

முன்பு சிவாஜி கணேசன், ம.பொ.சி., படத்தயாரிப்பாளர் எம்.ஏ.வேணு மற்றும் பல கவிஞர்கள் சேர்ந்து ஒருங்கிணைந்து மாபெரும் விழாவை எட்டயபுரத்தில் நடத்தியதை நினைவு கூர்ந்து நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ரா. கிருஷ்ணமூர்த்தி என்ற கல்கி அவர்கள் பாரதிவிழாவை எட்டயபுரத்தில் நடத்தியபோது, பாரதி தேசிய கவியா, மகா கவியா என்ற கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு அவர் தேசிய கவி மட்டுமல்ல, மகாகவி என்று வாதாடினார் என்ற செய்தியைப் பத்திரிகைகளில் படித்ததை வைத்து நினைவுபடுத்திப் பார்க்கிறேன். அவர் தேசிய கவி மட்டுமல்ல, உலக மக்களுக்காகப் பாடிய கவி.

ஒருவர் உயிரோடு இருக்கும் போது கொடுக்கப்படும் பாராட்டை விட அவர் மறைந்து பற்பல ஆண்டுகளுக்குப் பின் அவருக்கு நாட்டு மக்கள் பாராட்டுக் கொடுக்கிறார்கள் என்றால் அதுதான் உண்மையான பாராட்டு அது அவரது அறிவுக்குக் கொடுக்கும் பாராட்டு.

எப்போதோ கொண்டாடப்பட்ட அந்த விழா இன்று வளர்ச்சி பெற்றிருக்கிறது.பல திட்டங்கள், மருந்தகங்கள், பள்ளிக் கட்டடங்கள் எல்லாவற்றையும் 8 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து உருவாக்கி, அவரது பெயரைச் சூட்டியிருக்கிறோம் என்றால், அது அவரது தியாகத்தைப் பாராட்டியதாகும்.

பாரதியார் 39 வயதில் மறைந்தார். இன்று சொல்ல முடியாத விஷயங்களைக்கூட அன்றே சொல்லியிருக்கிறார். கலப்புத் திருமணம் இப்போது சாதாரணமாக இருக்கிறது. அன்று எவ்



பீகார் மாநிலத்தில் நடைபெற்ற பாரதி விழா புகைப்படத் தொகுப்பை மேதகு பீகார் ஆளுநர், மாண்புமிகு முதல்வரிடம் வழங்குகிறார்.

வளவோ பெரிய பிரச்சனையாக இருந்தது. பிராமண சமுதாயத்தைப் பார்ப்பன சமுதாயம் என்று அந்த நாளிலேயே சொன்னார் அவர். எத்தனை காலத்திற்கு முன்பு சொல்லியிருக்கிறார் என்று பார்க்க வேண்டும். ''பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே - வெள்ளைப் பரங்கியைத் துரை என்ற காலமும் போச்சே'' என்று பாரதி அந்நாளிலேயே பாடியிருக்கிறார். அந்தத் துணிச்சலுக்கு எல்லையே கிடையாது. அவரைத் தவிர வேறு யாரும் இவ்வளவு துணிவாகச் சொல்ல முடியாது.

மக்கள் என்ற முறையில் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்.' என்ற கொள்கையில் ஒன்று திரண்டு வந்தனர்.

ம. பொ. சி. அவர்கள் பேசும்போது, நாமெல்லாம் விலகி விட்டு, பெண்களிடம் பொறுப்பை ஒப்படைத்து விடலாம் என்றார். இப்போதென்ன ஒப்படைக்காமலா இருக்கிறோம் ? எப்பவோ இந்தியாவை இந்திரா காந்தியிடம் ஒப்படைத்து விட்டோமே! சரோஜினி நாயுடு கவர்னராக இருக்கவில்லையா? பெண்கள் முன்பும் இந்தத் தகுதியுடன்

**பெண்ண றத்தினை யாண்மக்கள் வீரந்தான்**
**பேணு மாயிற்பிறகொரு தாழ்வில்லை.**

**—பாரதியார்**

மதிய உணவைப் பற்றிச் சொன்னால் சிலருக்கு ஆத்திரம் வருகிறது. 'இந்து'விலே ஆதாரம் போட்டும்கூட, பலர் பேசியபடி இருக்கிறார்கள். ஆயிரம் விளக்குப் பகுதியில் 62 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பள்ளிக் கூடத்தில் மதிய உணவு கொடுக்கப்பட்டது.

ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு இலவசமாகக் கொடுக்க வேண்டும்; துணியையும் கொடுக்க வேண்டும் என்று பாரதியார் சொல்லியிருக்கிறார். அதற்கு அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் ?

தமிழ்நாட்டில் அறிவுக்குப் பஞ்சம் கிடையாது. பகுத்தறிவு என்று சொன்னவுடன் வேறு இடத்திற்குப் போய்ப் பார்க்கிறார்கள்.

நேற்று, பேரணியில் கலந்து கொண்ட தாய்மார்கள் கட்சி வேற்றுமை இன்றி, இந்நாட்டு இருந்திருக்கிறார்கள். ஆனால் அதை ஏற்றுக் கொள்ளச் சமுதாயத்திற்கு மனம் இல்லை. ஆதிக்கத்திற்கு வந்து விட்டவர்களுக்கு அதை விட்டுக் கொடுக்க மனம் இருப்பதில்லை. பதவி நாற்காலிக்கு வந்தவர்கள், மற்றவர்கள் வெகுநேரமாக நிற்கிறார்களே, அவர்கள் உட்காரட்டும் என்று நினைப்பது கிடையாது. இந்தப் பதவிப் போட்டிகள் நம்மை விட்டு நீங்க வேண்டும்.

ஜாதி உணர்வு, வகுப்புவாதம், விழுக்காடு இப்படிப் பேசப்படுகிறது. வகுப்பு வாதம் என்பது எங்கே தொடங்குகிறது? நான் இன்ன வகுப்பைச் சேர்ந்தவன். என் நண்பர்கள் இன்னார் என்று நினைக்கும்போது வகுப்புவாதம் ஏற்படுகிறது. தரம் இருக்கிறது. ஆனால் அதற்குரிய தகுதி தரப்படவில்லை. தகுதி பெற வகுப்புவாதத்தை எதிர்த்துப் போராட வேண்டும். இது எந்தக் காலத்தில் நடைபெறு



மகளிர் பேரணியில்பங்குபெற்ற பல்வேறு சங்கங்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார் மாண்புமிகு முதல்வர்.

கிறதோ, அதுவரை ஒருமைப்பாட்டை எழுத்தில்தான் காண முடியும்! ஜாதிக் கட்சியை ஒழிக்க வேண்டும்: வகுப்புவாதக் கட்சியை ஒழிக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் இந்திய ஒருமைப்பாட்டை ஜாதியற்ற முறையில் அமைக்க முடியும். இதை நான் சொன்னால் கோபப்படுவார்கள். இதை பாரதியாரே சொல்லிச் சென்றிருக்கிறார். அவரது கவிதைகளைப் படிக்கிறோம்; ஆனால் வீட்டுக்குச் சென்றவுடன் வேறு மாதிரி அமைத்துக் கொள்கிறோம் வாழ்க்கையை.

''நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை செய்வாரடி - கிளியே-
வாய்ச்சொல்லில் வீரரடி.''

என்று பாரதியார் கூறினார். ஆண்களைப் பற்றிப் பெண்களுக்குச் சொல்லியிருக்கிறார். இது ஆண் இனத்துக்கு எவ்வளவு அவமானமாக உள்ளது?

ஜாதி உணர்வு, வகுப்புவாதம் விழுக்காடு இப்படிப் பிரித்துக் கொண்டு போனால் பலர் மனுப் போடுகிறார்கள், எங்களையும் தாழ்த்தப்பட்ட இனத்தில் சேர்த்து விடுங்கள் - பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் சேர்த்து விடுங்கள் என்று கேட்கின்றனர். ஏன்? விழுக்காடு பெறுவதற்காக- பதவி பெறுவதற்காக.'

மருத்துவர்களிடம் நம்பிக்கையுடன் உடலை ஒப்படைக்கிறோம் அவர் கல்வி கற்று, தேர்ச்சி பெற்று, பயிற்சி பெற்று அந்தப் பணியைச் செய்கிறார். ஒருவர் 30 விழுக்காடு பெற்றால்போதும் தேர்ச்சி பெறுவதற்கு, மற்றொருவர் 90 விழுக்காடு பெற வேண்டும் தேர்ச்சி பெறுவதற்கு என்ற நிலை இருக்குமானால், இதில் யார் செய்கிற அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக இருக்கும் - திறமையாக இருக்கும் என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதனால்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, தனியாகப் பயிற்சி தர வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. அதற்கேற்ற வகையில் பயிற்சி வகுப்புகள் தரும் நிலையங்களைத் திறந்திருக்கிறோம். இதன் மூலம், வெளிநாட்டு மாணவர்களுடன் கூட இவர்கள் போட்டியிட்டு முன்னுக்கு வர முடியும்.

தாழ்த்தப் பட்டவர்களுக்கு என்று விழுக்காடு இன்றி அனைவருக்கும் விழுக்காடு ஒன்றுதான் என வைத்தால்தான் சரியாக இருக்கும். நேற்று நடைபெற்ற ஊர்வலத்தில் சுத்தப்படுத்தும் தொழிலாளர் கலந்து கொண்டனர். அவர்களின் பிள்ளைகளுக்கு விழுக்காடு தனியாக வைக்க வேண்டாம். அவர்களுக்குத் தனிக் கல்வி தர வேண்டும் என்று பாரதி சொல்லியிருக்கிறார்.

மக்களுக்கு நெஞ்சுறுதி வேண்டும்; இது உடற் பயிற்சியால் வராது. கொள்கைப் பிடிப்பில் உள்ள உறுதியால்தான் வரும். ''அடுத்த ஜென்மத்தில் உனக்குப் புண்ணியம் வரும் என்பதால் இவருக்குப் பணம் கொடு'' என்று யாரும் சொன்னால் அதற்குச் சீட்டு வாங்கத் தயாராக இல்லை என்று பாரதியார் குறிப்பிட்டிருக்கிறார்.

பாரதியின் கருத்து உயர்ந்தது மட்டுமல்ல - சிறந்ததும் ஆகும். 39 வயதுக்குள் அவ்வளவு கருத்துகளை - மகத்தான கருத்துகளைச் சொல்லிச் சென்றிருக்கிறார். எந்த நாட்டிலும் இப்படி ஒரு கவிஞன் வந்ததில்லை என்று சொல்வதில் தமிழ்நாட்டுக்கு உரிமை உண்டு.

மனிதர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? குழந்தைகள் எப்படி விளையாட வேண்டும்? பெரியவர்களின் நடத்தையை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும்? என்பதையும் திரும்பத் திரும்பச் சொல்லி இருக்கிறார்.

தமிழைப் பற்றி - தமிழ்நாட்டைப் பற்றிப் பாடியிருக்கிறார்; தமிழ்நாட்டைப் பற்றிப் பாடும் போது இந்தியத் துணைக் கண்டத்தை இணைத்துப் பாடினார். இந்தியா ஒன்றுதான் என்பதில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். தேசிய உணர்வு கொண்டு விளங்கினார்.

பாரதி விழாவை ஆண்டு தோறும் கொண்டாட அரசு முடிவு செய்துள்ளது. இங்கே, மகாலிங்கம் தலைமையில் உள்ள ஒரு குழு மணி மண்டபம் அமைக்க இருப்பது குறித்தும் அதற்கு அரசு உதவும் என்றும் ம.பொ.சி. குறிப்பிட்டார். அதற்கு 10 லட்ச ரூபாய் தரும் என்று மூன்று ஆண்டுகளுக்கு முன்பே சொல்லியிருக்கிறேன். ஆனால் யாரிடம் அந்தப் பணத்தை ஒப்படைப்பது? அது ஒரு தனி அமைப்பாக இருப்பதால் பணம் தருவதில் சில பிரச்சினைகள் உள்ளன. ஆடிட்டர் ஜெனரல் கேட்பதற்கும் எதிர்க்கட்சிகள் கேட்பதற்கும் பதில் அளிக்க வேண்டியுள்ளது. அரசுக்கும் இதில் பொறுப்பிருந்தால் அரசின் பாதுகாப்பும் இருக்கும்; கண்காணிப்பும் இருக்கும்; அதிகாரிகளும் இருப்பர். இதை எல்லாம் நல்ல முறையில் பேசி முடிவு செய்ய வேண்டும்.

தமிழக அரசு இப்போதுதான் செய்ய வேண்டிய கடமையைத் தொடங்கி இருக்கிறது. மதிய உணவு ஒரு தொடக்கம். இல்லாமையைப் போக்கும்போதுதான் அண்ணாவின் கொள்கையை நாங்கள் நிறைவேற்றுகிறோம் என்று பொருள். அந்தக்குறையை நாங்கள் இன்னும் முழுமையாக நிறைவேற்றிவிடவில்லை.

ஆதரவற்ற முதியோர்கள் — தாய்மார்கள் ஆடவர்கள் என ஏறக்குறைய 2 லட்சம் பேருக்கு மாதம் 35 ரூபாயும் ஆண்டுக்கு 2 வேட்டிகள், 2 சேலைகள் கொடுத்து வருகிறோம். பொங்கல் திருநாள் முதல் அவர்களுக்கு மதிய உணவை வழங்க இருக்கிறோம். இந்த நாட்டில் பிறந்தவர்கள் வாழ்ந்தாக வேண்டும். வாழ உரிமை படைத்தவர்கள் வாழ்ந்தாக வேண்டும்.

பாரதி சொன்ன கருத்து அண்ணாவின் கொள்கைக்கு ஒத்து

வருகிறதென்பதால் அதை நாங்கள் அமல்படுத்துகிறோம்.

ஏப்ரல் மாதத்திலிருந்து வறுமைக் கோட்டிற்குக் கீழே யுள்ள குடும்பத்தைச் சேர்ந்த-வேலையில்லாத குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வேலை தரும் திட்டத்தை அமல்படுத்த இருக்கிறோம்.

அண்ணா சொன்னார்'நாங்கள் மெல்ல மெல்ல அடி எடுத்து வைக்கிறோம்; ஆனால் அழுத்தமாக, உறுதியாக எங்கள் நடை இருக்கும்' என்று. அதுபோல நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

இந்த பாரதி விழா எந்தக் கழகத்திற்கும்-கட்சிக்கும் நடத்தப்படும் விழா அல்ல. ஊர்வலத்தில் தாய்மார்கள் கொண்டுவந்த பாரதி படம் எதைக் காட்டுகிறது? அவர்களது உள்ளத்தில் உள்ள வெப்பத்தைக் காட்டுகிறது. நேற்று, ஒரு தாய் குதித்துக் கொண்டு ஊர்வலத்தில் சென்றதைப் பார்த்தேன். அதன் பொருள் என்ன ? என் வீட்டில் திருமணம் ஆக வேண்டிய பெண் இருக்கிறாள். வரதட்சணை தருவதற்குப் பணம் இல்லாததால் விலை போக முடியவில்லை என்ற எண்ணத்தில்தான் அந்தத் தாய் சென்றார்.

பாரதியின் கருத்து, நாட்டின் கொள்கையாக மாறி, அதுதான் தமிழகத்தின் கொள்கையாக—இந்திய நாட்டின் கொள்கையாக உலக நாடுகளில்-சமதர்மம் பேசக் கூடிய நாடுகளின் கொள்கை என்ற நிலை எதிர்காலத்தில் வரும் என்பது உறுதி.

''கலியை எதிர்ப்போம்...சத்தியம் காப்போம்'' என்று பாரதி கூறுகிறார். இதை நிறைவேற்ற வாருங்கள் என்று அனைவரையும் அழைக்கிறேன்.

தேசிய ஒருமைப்பாடு என்பது வெறும் வார்த்தையில் மட்டுமில்லை-எழுத்தில் மட்டுமில்லை-ஜாதி பாகுபாடு இல்லாத நிலையில், மத உணர்வு இல்லாதநிலையில் மனிதன் என்று பொருளாதாரத்தில் வெற்றி பெறுகிறானோ அன்றுதான் ஒருமைப்பாடு வரும்.

9 ஆயிர ரூபாய்க்குக் கீழே வருமானமுள்ள குடும்பத்தினர் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று ஒரு திட்டம் கொண்டு வந்த போது எதிர்த்தார்கள். அதனால் 50 சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு எனச் சொல்லி உள்ளோம்.

முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் பொருளாதாரத்தில் பின் தங்கி இருக்கிறார்கள். அவர்களது நிலையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. எனவே இன்கம்டாக்ஸ் கட்டாத அனைவரும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் என்று சொல்லலாமா என்று யோசித்து வருகிறோம். சமுதாயத்தில் பிறப்பால் பிற்பட்டவர்களாக யார் யார் இருக்கிறார்களோ அவர்களைப்போல, பொருளாதாரத்தால் பிற்பட்ட நிலையில் பலர் இருக்கின்றனர். அவர்கள் எதையும் அனுபவிக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கும் பயன்பட வேண்டும் என்ற முறையில், பொருளாதார ரீதியிலும், சமுதாய ரீதியிலும் பயன் பெறத் தக்க அளவுக்கு ஒரு திட்டத்தைக் கொண்டு வரலாமா என்ற யோசனை இருக்கிறது. நியாயம் எது என்று தெரிந்து அதற்கு நீங்கள் ஆதரவு கொடுங்கள். பதவி நாற்காலி பற்றிக் கொஞ்சம்கூடக் கவலைப் படாமல் எங்கள் பணியைச் செய்கிறோம்.

பாரதி நூற்றாண்டு விழாவை ஊராட்சி ஒன்றியங்களில் எல்லாம் கொண்டாடிய அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி! மதம், மொழி, ஜாதி, வேறுபாடின்றி பாரதியைக்கொண்டாடிய எல்லாருக்கும் நன்றி. போஸ்டர் ஒட்டியவர் முதல் அத்தனை பேருக்கும் வாழ்த்துக்கள்! பாராட்டுகள்!

**(17-12-'82ல் ஆற்றிய உரை)**

## மாநிலம் புகழும் மகாகவி!

### சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி.

**(மாண்புமிகு சட்ட மேலவைத் தலைவர்)**

நாலரைக் கோடித் தமிழர்கள்-ஒவ்வொருவரும் இன்று பெருமையடைகிறோம். வான் புகழ் கொண்ட பாரதிக்குக் கிடைத்தபெருமை எளிதில் கிடைத்ததல்ல.

ஒரு பெண், பிறந்த வீட்டில் மதிக்கப் பட்டால்தான். புகுந்த வீட்டிலும் அவள் மதிக்கப்படுவாள். அதுபோல பிறந்தநாட்டில் மதிக்கப்பட்டால்தான் ஒரு மகாகவி உலக நாடுகளில் மதிக்கப்படுவான்.

மாநில அரசு பாரதி விழாக் கொண்டாட வேண்டுமென்று மைய அரசுக்குக் கடிதம் எழுத, உலக நாடுகளில் எங்கெல்லாம் இந்தியாவின் தூதரகங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் பாரதியின் பிறந்த நாள் கொண்டாடப் பட வேண்டும் என்று மைய அரசு தெரிவித்திருக்கிறது.

பெண்கள் பல்கலைக் கழகம் அமையப் போகிறது என்னும் செய்தி அறிந்து மகிழ்கிறேன்.

சுதந்திரம் வந்து 35 ஆண்டுகள் ஆகிவிட்டன. பெண்களுக்கு உரிமை கிடைக்கவில்லை. அந்த உரிமை கிடைத்திருக்கிறது என்பதைச் சென்னை நகரம்தான் நேற்று எடுத்துக் காட்டியது. பல்லாயிரக் கணக்கான பெண்கள் அணிவகுத்து வந்த ஊர்வலத்தை இந்தியாவே நேற்றுதான் முதன் முறையாகக் கண்டிருக்கிறது. அந்த ஊர்வலத்தில் சிரித்த முகத்தைத் தவிரச் சினந்த முகத்தை நான் காணவே இல்லை.

பாரதியின் பாடலுக்கு அந்நிய அரசு இரு முறை தடைவிதித்தது. பின்னர் பாரதியின் பாட்டுக்குத் தடை நீக்கப்பட்டு, பாரெல்லாம் பாடும் பாட்டாக அது மாறியது. அந்தக் கவிதா வேந்தன் - தெய்வம் நமக்குக்கொடுத்த பரிசு எனச் சொல்லலாம்.



## பாரதி புகழ் பரப்பும் தமிழக அரசு

### திரு இராம. வீரப்பன்

**(மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)**

தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அன்பான அழைப்பை ஏற்று பீகார் மாநில ஆளுநர், மைய அரசின் கல்வித்துறை அமைச்சர், மற்றும் பல்வேறு அமைச்சர்கள் பங்கேற்கிறார்கள்.

இவ்வளவு காலமாக அந்தக் கவிஞர் பாராட்டப்பட வேண்டிய அளவுக்குப் பாராட்டப்படவில்லை. நமது புரட்சித் தலைவர் ஓராண்டுக் காலமாக மகாகவி பாரதியின் விழாவைக் கொண்டாடத் தொடங்கியபின், தமிழகம் மட்டுமில்லை, இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு மாநில அரசுகளும், மத்திய அரசின் துணையுடன் கொண்டாடத் தலைப்பட்டுள்ளன. இந்தச் சிறப்பான நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார் நமது முதல்வர் என்பதைப் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாரதியார் எத்தனை கருத்துக்களை-எந்தக் காலத்திலேயே சொல்லிவிட்டுப் போயிருக்கிறார் என்பதை ஆய்ந்து மக்களுக்குத் தந்துகொண்டிருக்கிறோம். இந்த நாட்டுக்குப் பல்வேறு திட்டங்களை அன்றைக்கே வழங்கி மறைந்த காரணத்தால் ஓராண்டுக்காலம் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறோம்.

தலைவர்கள் - தியாகம் செய்த தலைவர்கள் பலரின் நூற்றாண்டு விழாக்கள் புரட்சித் தலைவர் முதலமைச்சராக வரட்டும் எனக் காத்திருந்ததுபோலத் தெரிகிறது.



## திருப்புமுனை காட்டிய பெருங்கவிஞர்

### டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன்

**(மாண்புமிகு நிதி அமைச்சர்)**

நெல்லைச் சீமையில் பிறந்த பாரதி சென்னைச் சீமையில்தான் மறைந்தார். எட்டயபுரத்தில் தொடங்கிய நூற்றாண்டு விழா சென்னை நகரில் நிறைவு பெறுகிறது.

வருங்காலச் சமுதாயம் பாரதியை என்றும் நினைவு கொள்ள வேண்டும் என்று கருதி நூற்றுக்கணக்கான கட்டடங்களுக்கு அவரது பெயர் வைக்கப்பட்டுள்ளது.



எந்தெந்தத்துறைகள் வளர வேண்டும்—எந்தெந்த நிலையில் வளர வேண்டும் என்று பாரதி பாடினாரோ அவற்றை நிறைவேற்றி வருகிறது தமிழக அரசு.

அரண்மனைகளில் தவழ்ந்த அழகு தமிழை ஆலமரத்தடிக்குக் கொண்டு வந்தார் பாரதி. பண்டிதர்கள் மட்டுமே பழகிய தமிழை, சாதாரண-பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் கொண்டு வந்தார்.

காயமே இது பொய்யடா - வெறும் காற்றடைத்த பையடா என்று புலவர்கள் பாடிக்கொண்டிருந்தார்கள். வீரமும் இல்லாமல் திரமும் இல்லாமல் இருந்த நாட்டில்,வரலாற்றுப் புகழை உருவாக்கும் வகையில் பாரதியார் வந்தார். திருப்புமுனை காட்டிய பெருமைக்குரியவராகத் திகழ்ந்தார். இந்த நாட்டின் சிந்தனையையே மாற்றியமைத்த பெருமை பாரதிக்கு உண்டு.



## பாரதிக்கு நினைவுச் சின்னங்கள்

### திரு க. இராசாராம்

**(மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர்)**

பாரதியின் நினைவாகத் தமிழகம் முழுவதும் பல கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியத்திற்குக் குறைந்தது 2 கட்டடங்களுக்காவது பாரதியின் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற முறையில் நடைபெற்றிருக்கிறது. இங்கிலாந்தைச் சேர்ந்த ஷேக்ஸ்பியர், ஷெல்லி, ஜெர்மனியைச் சேர்ந்த பீதோவன் அவர்களுக்கெல்லாம் கூட ஒரே ஒரு கட்டடம்தான் உண்டு. நோபெல் பரிசு பெற்ற தாகூருக்குக்கூட இத்தனை கட்டடங்கள் அமைக்கப்படவில்லை. அமெரிக்கக் கவிஞரான வால்ட் விட்மனுக்குக் கூட இந்த அளவு கட்டடங்கள் இல்லை என்பது வரலாற்றில் காணப்படுகிறது.

'செப்பு மொழி பதினெட்டுடையாள் எனிற் சிந்தனை ஒன்றுடையாள்' என்று ஒரு வரியில் பாரதி பாடிவிட்டார். அதைப் பாராளுமன்றம் ஏற்றுக் கொள்வதற்கு நாங்கள் 10 ஆண்டுக்காலம் போராடவேண்டி வந்தது.

பாரதி 40 ஆண்டுகள்தான் வாழ்ந்தார். அதற்குள் அவர் எழுதிய கவிதைகள், கட்டுரைகள் என்றும் சாகாவரம் பெற்று விளங்கு கின்றன. பாரதியாரை இவ்வளவு காலம் மறக்க விடாமல் செய்திருந்த தலைவர்களை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.



## பாரதி பெயரால் பற்பல பணிகள்

**திரு. செ. அரங்கநாயகம்**

**(மாண்புமிகு கல்வி அமைச்சர்)**

விழா கொண்டாடுவது விழா கொண்டாடப்பட வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல; திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொல்வதற்கு இலக்கணமாக இந்த விழா அமைந்துள்ளது.

பெண்கள் தனித்து வாழும் தகுதியை நாம் அவர்களுக்குத் தந்தாகவேண்டும்.

தியாகம் செய்யும் வகையில் நமது குழந்தைகளை நாம் வளர்க்க வேண்டும். சாதனை புரிபவர்களாக அவர்களை வளர்க்க வேண்டும் நாட்டின் மானத்தைக் காப்பவர்களாக வளர்க்க வேண்டும். அதற்கு பாரதியாரின் கவிதைகள் மிகவும் பயன்படுகின்றன.

## பெண்குலத்துக்குப் பெருமை சேர்த்த கவிஞன்

**டாக்டர் கா. காளிமுத்து**

**(மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்)**

**19-ஆம்** நூற்றாண்டின் கடைசியில் பிறந்து 20-ஆம் நூற்றாண்டில் இந்த நாட்டைத் தன் வசமாக்கிக் கொண்ட சொல்லா



ளர் பாரதி.

சொற்களைச் சோம்பல் முறிக்க வைத்து மூடத்தனத்தின் முதுகெலும்பை உடைத்த அந்த மேதை மனித குலத்தின் மனச்சாட்சியாக விளங்கினார்.

அவரது சிந்தனைகளில் எல்லாம் சிறந்தது பெண் விடுதலைதான். பெண்ணை அதிகமாகப் பாராட்டினார்; சக்தி என்றார். சோவியத் நாட்டின் புரட்சியைப் பாடும்போது கூட 'மாகாளி கடைக் கண் வைத்தாள்; ஆகா என்றெழுந்தது பார் யுகப் புரட்சி' என்று வியந்து, சக்தியைப் போற்றுகிறார்.



## பாரதியின் நினைவாகப் பற்பல பணிகள்

**திரு ப. குழந்தைவேலு**

**(மாண்புமிகு ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**பா**ரதியின் பிறந்த நாளை ஓராண்டு முழுதும் ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் கொண்டாட வேண்டும் என்று திட்டமிட்டதற்கிணங்க. ஜாதி ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாடு, நாட்டுப்பற்று, மொழி உணர்வு ஆகியவை குறித்து, பள்ளி, கல்லூரி, மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி ஆகியவை நடத்தப் பெற்றுப் பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பட்டிமன்றம்-கருத்தரங்கம் பெருமளவில் நடத்தப்பட்டன. பாமர மக்களுக்கும் புரியும் வகையில் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

378 ஊராட்சி ஒன்றியங்களில் பாரதி நினைவாக பள்ளிக் கட்டடங்கள் 982 திறக்கப்பட்டன. தாய் சேய் நல விடுதிகள் 30, ஒன்றிய மருந்தகங்கள் 6, சமுதாயக் கூடங்கள் 4, குழந்தைகள் காப்பகம் 1 என மொத்தம் 1023 வேலைகளுக்கு ரூபாய் 8 கோடியே 13 லட்சம் செலவிடப்பட்டது. நகராட்சிகளைச் சார்ந்த பள்ளிகள் 95, மருந்தகம் 1, அலுவலகம் 3, அங்காடி 7, பேருந்து நிழற்கொடை 1, சாலை 107, பூங்கா 15, நீர்த்தேக்கத் தொட்டி-2, நீர்த்தேக்கம் 1 ஆக 232 வேலைகளுக்கு ரூபாய் 2 கோடியே 27 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1255 கட்டடங்கள் அவரது நினைவாகத் தமிழகத்தில் எழுப்பப்பட்டுள்ளன.

## பாரதியின் கனவு நனவாகிறது!

**திருமதி கோமதி சீனிவாசன்**

**(மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்)**

**சா**தி இல்லை என்பதையும் ஒற்றுமையையும் பாரதி உணர்த்தினார். பெண் விடுதலை பற்றி எடுத்துக் காட்டினார். தாயும் பெண் தான்; தங்கையும் பெண்தான்; மனைவியைக் கொடுமைப்படுத்துவதாக எண்ணி, தாய், தங்கை அனைவரையும் கொடுமைப்படுத்துவது நியாயமா என்று கேட்டார் பாரதி. தேசிய ஒற்றுமையை வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

பாரதியின் கனவுகளை நனவாக்கும் வகையில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. வயிற்றுக்குச் சோறிட வேண்டும்; இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் என்று அவர் பாடினார். குழந்தைகள் எதிர்காலத்தில் நல்ல முறையில் விளங்க வேண்டும் என்பதற்காகப் புரட்சித் தலைவர் 65 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கி வருகிறார்.






# சென்னை மாநகராட்சியின் குடும்பநலப் பணி

**செ**ன்னை மாநகராட்சி மக்களின் அடிப்படை வசதிகளான துப்புரவுப் பணி, சாலை வசதிகள் வீதிவிளக்குப் பராமரிப்பு, பொதுச் சுகாதாரம், மலேரியா ஒழிப்பு, கல்வி, மரம் வளர்த்தல், வெள்ளம், தீ, போன்ற இயற்கையால் விளைகின்ற தீமைகளுக்கான நிவாரணங்கள் போன்ற பணிகளில் மக்களுக்குச் சேவை செய்து வருகின்றது. இவற்றில் குடும்பநலத் திட்டத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துச் செயல்பட்டு வருகிறது.

குடும்பம் -சமுதாயத்தின் ஒரு அடிப்படை அங்கம், பல குடும்பங்களின் கூட்டே நமது சமுதாயம். இச்சமூகம் நலம்பெறக் குடும்ப நலத்திட்டம் இன்றியமையாததாகும்.

குடும்ப நலத்திட்டத்தை மாநகராட்சி ஆரம்பித்த காலத்தில் சென்னை நகரின் மக்கள் தொகை 16 இலட்சமாக இருந்தது. அது தற்போது 32 இலட்சமாக உயர்ந்துள்ளது. இதிலிருந்து மக்கள் தொகை குறுகிய காலத்தில் இரட்டிப்பாக உயர்ந்துள்ளது என்பது தெளிவு. எந்த அளவிற்கு மருத்துவ வசதிகள், பேருந்துகள், சாலைகள், மின்வசதி குடிநீர், பொதுச் சுகாதாரம் எனப் பல வசதிகளை விரைந்து பெருக்கினாலும் பெருக்குகின்ற மக்கள் தொகைக்குப் போதியவையாக இவை அமையா.

எனவே, சென்னை நகரின் குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றுவதில் மாநகராட்சி முழுப் பொறுப்பையும் ஏற்றுச் செயலாற்றி வருகின்றது. தற்போது சென்னையில் 48 குடும்ப நல நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 32 மாநகராட்சியின் நேரடி நிர்வாகத்திலும், 4 அரசினர் மருத்துவ மனைகளிலும், 12 தன்னியக்க நிறுவனங்களாலும் ( Voluntary Organisation ) நடத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு குடும்ப நல நிலையத்திலும், ஒரு மருத்துவர், 4 குடும்ப நலக் களப்பணியாளர்கள் பணிபுரிகின்றனர். எல்லாக் குடும்ப நல நிலையங்களிலும், மருத்துவப் பரிசோதனை, மருத்துவச் சிகிச்சை, கருத்தடை ஆலோசனை, கருத்தடைச் சாதனங்கள் வழங்குதல், குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் நோய்த்தடுப்பிற்கான ஊசிமருந்து கொடுத்தல், ஊட்டச்சத்து மாத்திரை வழங்குதல், நிரந்தர அறுவைச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தல் ஆகிய பணிகள் நடைபெறுகின்றன. சுருக்கமாகக் கூறினால், குடும்ப நலத் திட்டத்தில், ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய திருமண வயது எது என்று கூறுவதிலிருந்து, அவர்கள் முதல் குழந்தையைத் தாமதப்படுத்துவது, இரண்டாவது குழந்தையைப் போதிய இடைவெளி விட்டுப் பெற்றுக் கொள்வது, இரண்டுக்கு மேல் நிரந்தரமாகக் குழந்தைப் பேற்றை நிறுத்திக் கொள்வது, கருவுற்ற தாய்மார்கள் நல்ல முறையில் குழந்தையைப் பெறப் போதிய கவனிப்பும், பாதுகாப்பும் வழங்குவது, பிறந்துவிட்ட குழந்தைகளை நோய் நொடியின்றிப் பாதுகாத்தல் போன்ற குடும்ப நலத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் நிறைவேற்றப் படுகின்றன. அத்துடன், குழந்தையே இல்லாதவர்களுக்கும், குழந்தை பெறச் சோதனைகள் செய்து, சிகிச்சைகள் அளித்து, குழந்தை பெற உதவுவது கூட, குடும்பநலத் திட்டத்தின் குறிக்கோளாகும். இவையனைத்தையும், எந்தவிதக் கட்டாயமுமின்றி, தம்பதியர் தாங்களாகவே முன்வந்து குடும்ப நலத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் விளக்கிக் கூறப்படுகின்றது. பொதுவாக, அறுவைச் சிகிச்சை முறையை மட்டும் வலியுறுத்தாமல், தற்காலிக முறைகளான கருத்தடை வளையம், கருத்தடை மாத்திரைகள் போன்ற தற்காலிக முறைகளைப் பற்றியும் எடுத்துக் கூறப்படுவதுடன், அனைத்தும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன.

மாநகராட்சியின் சிறப்பு அதிகாரியின் தலைமையில், ஆணையர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சேவா சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு 'ஆலோசனைக் குழு அவ்வப்போது கூடி, திட்டம் சிறப்பாகச் செயல்பட

**கு. ர. கருப்பண்ணன், இ. ஆ. ப.,**
**ஆணையாளர் :**
**சென்னை மாநகராட்சி**



# பனையின் பெருமை

பனைத்தொழில் தெரிந்தவர்களுக்கு 1,600 பனைவெல்ல, பனையோலைக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன. பனை நடும் திட்டம் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படுவதால், இன்னும் 10 ஆண்டுகளில் மேலும் ஒரு கோடி மரங்கள் பயன் தரக் கூடியனவாக இருக்கும்.

ஏற்கெனவே வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பெரும்பாலோர், பனையிலிருந்து கிடைக்கும் வெல்லம், ஓலை, மட்டை, ஈர்க்கு, நார்த் தும்பு ஆகியவற்றை உபயோகித்து வாழ்கின்றனர்.

மணப்பாடு கை வண்ணத் தட்டுகளும், மெய்ஞ்ஞானபுரம் கூடைகளும், இராமநாதபுரம் நார்ப் பெட்டிகளும், தென்காசி வர்ணக் கடகங்களும், நகரத்தார் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் வக்கூடு பெட்டிகளும், திருப்புல்லாணி மக்கள் செய்யும் கைப்பைகளும், நாகூர் மக்கள் செய்யும் மடக்கு விசிறிகளும், சித்தார்க்கோட்டை வர்ணத் தடுக்கும், இராமநாதபுரத்துக் குருத்தோலைப் பாய்களும், தங்கச்சிமடம் கட்டுப்பாய்களும், உடன்குடி உயர்தர வெல்லமும், திருச்செந்தூர் சுக்குக் கருப்பட்டியும், பனங்கற்கண்டும், சாயல்குடி கருப்புக் கட்டியும், ஸ்ரீவில்லிபுத்தூர் பொடி வட்டும், கோவை மாவட்டத் தென்னை வெல்லமும், குமரப்பாபுரம் உண்பொருள், உண்ணாப் பொருட்களும் தமிழகத்தின் தலைசிறந்த பனைப்பொருள்களாகும்.

வேலை வாய்ப்பைக் குறைக்காமலும், உற்பத்தியைப் பெருக்கவும், தும்பு அடிக்கும் பெண்கள் சிரமத்தைக் குறைக்கவும், பத்தலடிக்கும் மின் கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கருவிகளை, பத்தல் அதிகமாகக் கிடைக்கும் கிராமங்களில் நிறுவினால் பெண்கள் இலகுவில் பத்தலடித்துத் தும்பைச் சேகரித்துக் கொள்வார்கள். தினம் ரூ. 5 சம்பாதிக்கும் பெண்கள் குறைந்தது ரூ. 8 வரை சம்பாதிக்க இயலும்.

சாரோலைப் பாயை விரைவில் பின்னவும், அதிக வருமானம் பெறவும் பாய் பின்னும் கருவி ஒன்று முன்னாள் இராணுவ வல்லுநர் ஒருவரால் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில், நடைபெறும் பனைத் தொழில் வளர்ச்சியானது, இந்தியாவிலேயே முதல் இடத்தைப் பெறுகிறது.

---

ஆலோசனைகளைக் கூறி வழி நடத்திச் செல்கின்றது. குடும்ப நல அலுவலர்கள் குடும்ப நல நிலையம் நாடி வரும் தம்பதியர்களுக்கு மட்டுமின்றி, அவர்களது வீடு, பணியாற்றும் இடங்கள், பொழுதுபோக்கு மன்றங்கள், முக்கியமாகக் குடிசைப் பகுதிகள் என மக்களைத் தேடிச் சென்று குடும்பநலத் திட்டத்தின் நன்மைகளை, நாடகம், குழு விவாதம், பொதுக் கூட்டம் ஆகியவற்றின் மூலமாகவும், திட்ட விளக்கம் கூறிச் செய்து வருகின்றனர். இவை தவிர பொருட்காட்சிகளிலும் அரங்கங்கள் அமைத்துக் குடும்பநலம் பற்றி எடுத்துக் கூறுகிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, ஆங்காங்கே பகுதித் தலைவர்களைக் கூட்டி, குடும்ப நலத் திட்டத்தைப் பற்றிய ஒரு நாள் பயிற்சி முகாம்களை நடத்தி அவர்களுக்குத் திட்டத்தின் நோக்கம், செயல்படும் விதம், குடும்பநல முறைகள், வதந்திகளைத் தவிர்க்கும் வழி, சந்தேக விளக்கம், தலைவர்களின் பங்கு போன்றவற்றைத் தெளிவாகவும், விரிவாகவும் எடுத்துக் கூறி, திட்டத்தை அவர்கள் பகுதியில் செம்மையாக நிறைவேற்றவும் பாடுபடுகின்றனர். இந்த ஆண்டு மாநகராட்சி 400 பயிற்சி முகாம்கள் நடத்துவதற்காக ஒரு இலட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளது. இது வரை 100க்கு மேலாகப் பயிற்சி முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன.

இயங்கி வரும் 48 குடும்பநல நிலையங்களில், 8 நிலையங்கள் கடந்த செப்டம்பர் மாதம் புதிதாகத் துவக்கப்பட்டவை. மேலும் அறுவைச் சிகிச்சை வசதியும், நவீன அறுவைச் சிகிச்சை ''லேப்ரோஸ்கோப்பி'' எனப்படும் சிகிச்சை வசதி உள்ளிட்ட பல வ்சதிகள் கொண்ட 4 மகப்பேறு பினபணி நிலையங்களுக்குத் (Post Partum Programmes) தமிழ் நாடு அரசு அனுமதி வழங்கி, அவை விரைவில் சிறப்பாகச் செயல்படும் நிலையில் உள்ளன.

குடும்ப நலத் திட்டத்தில் 1973-74ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 1978-79 வரை சிறப்பான சாதனை புரிந்ததற்காக அரசு விருதுகளை மாநகராட்சி பெற்றுள்ளது. 1981-82ல் கொடுக்கப்பட்ட இலக்கை இரண்டு மடங்கு அளவில் நிறைவேற்றிச் சாதனை புரிந்துள்ளது. இந்த ஆண்டு, கடந்த ஆண்டின் சாதனையைவிட இரண்டு மடங்கிற்கும் மேலாகச் சாதனைபுரிய எண்ணித் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகின்றது. 1982-83 அக்டோபர் மாதம் முடிய 15,114 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றுள்ளது.

அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் பெண்களுக்கு ஊக்கத் தொகையாகத் தலைக்கு ரூபாய் 130ம் ஆண்களுக்கு ரூபாய் 100ம் அரசு வழங்குகிறது. அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்குப் பின்கவனிப்புகளுக்கான ஏற்பாடுகள் நல்ல முறையில் செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டைப் போலவே, இந்த ஆண்டும் ரோட்டரி சங்கங்கள், அரிமா சங்கங்கள், அரிமா நங்கையர் சங்கங்கள், ஜேஸீஸ் சங்கம், மயிலாப்பூர் மகளிர் வட்டம்-4, இந்திய மகளிர் சங்கம், உழைக்கும் மகளிர் அணி போன்ற பல தொண்டு நிறுவனங்கள் மாநகராட்சியுடன் ஒத்துழைத்துப் பரிசுப் பொருட்களாகவும், திட்ட விளக்கம் மற்றும் விளம்பரப் பணிகளில் நேரிடையாகவும் ஈடுபட்டு உதவி வருகின்றது.

தகுதி வாய்ந்த தம்பதிகள் அனைவரும் இத்திட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டு, குடும்ப நலத்திட்டம் வெற்றிகரமாக நடத்தித் தங்களது முழு ஒத்துழைப்பை நல்குமாறு மாநகராட்சி வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

# முதியோர் வாழ்வில் புதியதோர் திருப்பம்!

நமது சமுதாயத்தில் மாதா, பிதா, குருவிற்கு அடுத்தபடியாக மதிப்புக் கொடுத்து வருவது நமது முதியோர்களுக்குத்தான். வயது முதிர்ந்தவர்க்கு மதிப்புக் கொடுப்பது, அவர் அறிவுரைப்படி நடத்தல், அவர் சொல்படி கேட்டல், எந்த ஒரு பிரச்சினைக்கும் அவர்களது அனுபவத்தின் சொற்களை கேட்டு அதன்படி நடத்தல் - இவை நமது பண்பாட்டின் ஓர் அங்கம்! இது, நீண்ட காலம் தொட்டு நடந்து வருகின்ற ஒன்றாகும்.

இன்றும்கூட கிராமப்புறங்களில் ஒரு வீட்டிலோ- கிராமத்திலோ, - தனிநபர் பிரச்சினையிலோ - எதுவாக இருந்தாலும் அவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண முதியோரின் உதவியை நாடுவது நமது வழக்கத்தில் இன்றும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.

வரலாற்று ஏடுகளை நாம் திருப்பிப் பார்த்தால், அரசர் தமது அமைச்சரவையில் அறிவு வாய்ந்த முதியோர்களைப் பேணிக் காத்தலைத் தமது அரசவைக்கே ஒரு தனிச் சிறப்பாகக் கருதி வந்தார்கள். அதியமான் அரசவையில் ஒளவை, பாண்டியன் அவையில் நக்கீரன்.

எனவே முதியோர்கள் அனுபவம், திறமை, தொடர்ந்து வருகின்ற மரபு, முறைகளைப் பேணிக் காத்து அடுத்து வரும் பரம்பரைக்குப் புகட்டுதல், குடும்பத்தைப்பேணிக்காத்தல், நீதி நெறிமுறைகளை சிறுவர் இளம் வயதினர்களுக்கு வழங்குதல், நீதி, நியாயங்கள் வழங்குதல், திருமணம் சாஸ்திரம் முதலியவைகளை முன் நின்று நடத்தி வைத்தல் போன்ற அரும்பெரும் சாதனைகளை நமது சமுதாயத்தில் நடத்திக் கொண்டு வந்திருக்கின்றனர். எனவே முதியோர்கள் குடும்பம் நாடு, தேசம், வளர்ச்சிக்கு ஒரு பங்காக இருந்துவருகிறார்கள்.

மக்கட் பெருக்கத்தின் காரணமாகவும், மருத்துவ வளர்ச்சி



## குஜராத் மாநிலத்திற்கு தமிழக அரசு வழங்கியுள்ள புயல் நிவாரண நிதி

குஜராத் மாநிலத்தில் நவம்பர் 8ஆம் நாளன்று வீசிய பெரும் புயல், அங்கு மிகுந்த சீரழிவை ஏற்படுத்தி விட்டது. நிவாரணப் பணிகளுக்கு உதவும் வகையில், தமிழக அரசு, முதல்வர் பொது நிதியிலிருந்து ரூ. 2 லட்சத்தை நிதியாக வழங்கியுள்ளது.

---

காரணமாகவும் (பிறப்பின் எண்ணிக்கை அதிகரித்தலும், இறப்பின் எண்ணிக்கை குறைதலும்) போன்றவற்றின் காரணமாக முதியோர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது

> *''இவர்கள் உலகில் இருந்தென்ன சாதிக்கப்போகிறார்கள்?''*
>
> *''இவர்கள் வாழ்வதால் யாருக்கு இலாபம்?''*
>
> *''இவர்கள் இருந்தும் ஏன் தொந்தரவு செய்து வருகிறார்கள்?''*

இவை யாவும் முதியோர்களைப் பற்றி மக்கள் மத்தியில் நிலவுகின்ற எண்ணங்கள் ஆகும். (முதியோர் நல மையம் (ஸிவா), சென்னை 40ல் உள்ள நடுவக்கரைப் பகுதியில் மக்கட் கணக்கெடுப்பு நடந்தபோது மக்கள் முதியோரைப் பற்றிக் கூறிய எண்ணங்கள் ஆகும்.

இந்த வாசகங்கள் முதியோரைப் பற்றி மக்கள் மத்தியில் நிலவி வரும் எண்ணங்கள் எத்தகையன என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

இதுபோன்ற எண்ணங்கள் மக்கள் மத்தியில் நிலவுகின்றமைக்குக் கீழ்க்கண்டவைகள் காரணங்களாக இருக்கின்றன. அவை பெருகிவரும் மக்கள் தொகை; சமுதாய மாற்றம்; தொழில் வளர்ச்சி; தனிக்குடும்பம்; நகர வளர்ச்சி; மேல்நாட்டுமோகம்; வறுமைக் கோட்டின் கீழ் வாழும் வாழ்க்கை; உற்பத்தித் திறன்குறைவு போன்றவைகள்தாம்.

முதியோர்களும் தங்களைப் பற்றித் தாழ்வு மனப்பான்மையுடன், தங்களை இரண்டாந்தர மக்களாகவே நினைக்கின்றனர்.

> *''நாம் ஏன் இன்னும் உயிருடன் இருக்கிறோம்! எமன் நமது ஏட்டை எடுக்காமல் இவர்களுடன் மரியாதை குறைந்தும், வேதனையடைந்தும் வாழ்க்கை நடத்த வேண்டியதாக உள்ளதே!''*
>
> *''மனைவி, மக்கள் இருந்தும் என்னபயன்? கடைசிக் காலத்தில் கஞ்சிகூட ஊத்தாமல் இருக்கிறார்கள். அவர்கள் பார்த்து எதாவது கொடுத்தால் தான் காசு, இல்லையேல் பட்டினி''.*

—இதுபோன்ற வாசகங்கள் முதியோர்கள் தங்களைப் பற்றிக் கூறுகின்ற எண்ணங்களாக இருந்து வருகின்றன. நமது நாட்டின் மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது போல் முதியோர்களின் எண்ணிக்கையும் வளர்ந்து வருகிறது. 1981-ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இப்போது இந்தியாவில் மொத்தம் 4 கோடி (60 வயதிற்கு மேற்பட்டவர்கள்) முதியோர்களும், 5கோடி (50 வயதிற்கு மேற்பட்டவர்கள்)5 கோடியினரும் உள்ளனர். இவர்களில் 67·/. அதாவது மூவரில் இருவர் வேலைக்குச் செல்லாதவர்களாக உள்ளனர்.

முதியோர்கள் உடல் நலக் குறைவுகூட வேலையின்மை, தன்னையும். தன் குடும்பத்தையும் காப்பாற்ற இயலாத நிலை, மக்கள் மத்தியில் நிலவி வரும் கருத்துக்கள், குடும்ப நபர்களின் ஆதரவில் வாழும் வாழ்க்கை, மரணத்தை எதிர் நோக்கும் எண்ணங்கள் மேற்கூறிய பிரச்சினைகளே முதியோரைச் சார்ந்த பிரச்சினைகள் ஆகும்.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு அரசும், தனியார் சமூக சேவை நிறுவனங்களும் இரண்டு வழிகளைக் கையாளுகின்றன. ஒன்று, அரசு நிறுவனம் சமுதாய உதவித்திட்டத்தின் (Social Assistance) கீழ் தனியார் சமூக சேவை நிறுவனங்கள் முதியோர்களுக்கு என்று முதியோர் இல்லம் அமைத்து அந்த இல்லத்தின் மூலம் சேவை செய்துவருகின்றது.

முதியோர்களுக்கு உதவித் தொகை: முதியோர் இல்லத்தின் சேவைகள் மூலம் இந்தப் பிரச்சனைகள் தீர்ந்ததாக தெரியவில்லை. முதியோர்களுக்கு தங்களது வீடு, இருப்பிடம், சுற்றத்தார்களை விட்டு முதியோர் இல்லத்தில் வாழ பெரும்பாலும் விருப்பமில்லை. வீட்டில் பேரக் குழந்தைகள், சுற்றத்தார்கள், நண்பர்கள், வேலை செய்த இடத்திலிருந்து நண்பர்களை விட்டுத் தனியாக ஓர் இல்லத்தில் இருக்கவும் மனமில்லை.

வீடு, குடும்பம், சுற்றுப்புறச் சூழ்நிலை, சமுதாய மாற்றம் காரணமாக முதியோர்களுக்குச் சரிவரப் பாதுகாப்புக் கொடுக்காமல் இருந்து விடுகிறார்கள். போதுமான முதியோர் இல்லங்களும் நமது நாட்டில் இல்லை. இந்த முதியோர்களை அவர்கள் வாழும் இல்லங்களிலும் வசிக்கும் இருப்பிடங்களிலும், மற்றும் குடும்ப சூழ்நிலையைப் பேணிக்காத்து வந்தால், நம் நாட்டில் முதியோர் இல்லங்கள் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

எனவே முதியோர்களை தனியாக வீட்டிலிருந்து பிரித்து, அவர்கள் கட்டுப்பாட்டுடன் உள்ள நிலையான ஒழுங்கு அமைப்பு முறையில் அவர்களுக்குச் சேவை செய்வதின் மூலம் அவர்களது பிரச்சினைகள் தீரா என்றும், அவரவர் இல்லத்திலே மற்றும் வசிக்கும் இருப்பிடத்திலே சேவை (Family and community approach) செய்வதின் மூலம் அவர்களது பிரச்சினைகள் தீரும் என்ற கருத்தை முழுமையாகக் கொண்டு உருவானதுதான் முதியோர் நல மையம். (ஸிவா) Centre for the welfare of the aged என்ற ஒரு சமூக சேவை நிறுவனம் ஆகும்.

இந்த நிறுவனத்தின் முக்கிய கோட்பாடு, முதியோர் அவர்களது குடும்பம் சமுதாயத்தின் ஒத்துழைப்பையும், இருப்பிடத்தைச் சார்ந்த சுற்றுப்புறச் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு Non Institutional approach அவர்களது வாழ்வை வளமாக்குவது! இந்தக் குறிக்கோளைக் கருத்தில் கொண்டுதான் முதியோர் நல மையம் (ஸிவா) தனது சேவைகளை முதியோர்களுக்கு சென்ற டிசம்பர் 1981 முதல் செய்து வருகின்றது. இந்தச் சமூக சேவை நிறுவனம் இந்திய முதியோர் நற்பணி மன்றம் (Helpage India) ஒத்துழைப்புடன் சேவைகளைச் செய்து வருகின்றது. முதியோர்களின் நல்வாழ்விற்கு, முதியோர் நல மையம் (ஸிவா) பின்வரும் சேவைகளைச் செய்து வருகின்றது.

### 1. முதியோர் தினசரி பாதுகாப்பு நிலையம் (Day Centre):

முதன் முதலாக, சென்னையில், நடுவக்கரையில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். காலனியில் வாழ்ந்து வரும் குடிசை மக்களுக்கு முதியோர் தினசரி பாதுகாப்பு நிலையம் சென்ற டிசம்பர் 1981ல் துவக்கப்பட்டது. இந்தக் குடிசைப் பகுதியில் வாழும் மக்களிடம் கலந்து உரையாடியும், முதியோர்களை அழைத்துக் கலந்து பேசியும் - இந்தப் பாதுகாப்பு நிலையம் துவங்கப்பட்டது. முதலாவதாக முதியோர்களுக்கு நடத்தப்பட்டு, அதில் முதியோர் தினசரி பாதுகாப்பு நிலையத்தின் கருத்துக்களையும், அதன் தத்துவத்தையும் முதியோர்களுக்கு விளக்கின. அதன் பிறகு வீட்டுக் கணக்கெடுப்பு நடக்க துவங்கியது.

வீட்டுக் கணக்கெடுப்பின்படி இந்தக் குடிசைப் பகுதியில் 108 முதியோர்கள் (50 வயதிற்கு மேற்பட்டவர்கள்) வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் 63 பேர் ஆண்கள், 45 பேர் பெண்கள். இதில் வேலைக்குச் செல்லாதவர்கள் 43 நபர்கள், மற்றும் உள்ள 65 நபர்கள்வேலைக்குச் செல்பவர்கள். இந்தக் கணக்கெடுப்பின் முடிவுகளையும், அவர்களின் பிரச்சினைகள், தேவைகள் முதலியவற்றையும் கூறி அவைகளைச் செயல்படுத்துவதற்கு உறுதி கொண்டனர். அவர்களுக்குத் தமிழில் சொல்லிக் கொடுத்து, அவர்களைக் கலந்துஉரையாடச்சொல்லியும் இந்த நிலையத்தின் மூலம் இங்குள்ள 108 முதியோர்களுக்கு சேவை செய்ய முற்படுகிறது. மற்றும், இந்தக் குடிசைப்பகுதியின் அருகில் உள்ள இதர இரண்டு குடிசைப்பகுதிகளில் உள்ளமுதியோர்களுக்கு சேவை செய்ய முற்பட்டு உள்ளது. இந்தப் பகுதிகளில் கூட கணக்கெடுப்பு நடத்தி வருகிறது.

மருத்துவ உதவி செய்யப்பட்டது. மக்களுக்கு முதியோர்களை பேணிக் காப்பதின் அவசியத்தையும், தினசரி பாதுகாப்பு நிலையத்தின் நோக்கத்தையும் தெரியப்படுத்தியது. இந்தக் குடிசைப்பகுதியில் வாழும் ஒரு பெண்மணி தனது குடிசையை இந்தத் தேவைக்காக தர முன்வந்தார். இந்தக் குடிசையில்தான் தினசரி பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டு, அதன் மூலம் முதியோர்களுக்குச் சேவை செய்து வருகிறது. எனினும், இந்த நிறுவனம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடம், இந்தப் பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்கு ஒருவெற்றிடம் கேட்டுக் கொண்டு இருக்கிறது.

இந்த எம்.ஜி.ஆர். காலனியில் வாழும் முதியோர்கள் தங்களுக்கு என ஒரு முதியோர் சங்கம் அமைத்துள்ளனர். இந்தச் சங்கம் மாதத்திற்கு குறைந்தபட்சம் இருமுறையாவது கூட்டம் நடத்தி, அவர்களது பிரச்சினைகளைக் கலந்துரையாடித் தீர்வு காணும்.

இந்த முதியோர் தினசரி பாதுகாப்பு நிலையத்தில் முதியோர்களுக்கு என ஒரு முதியோர் மருத்துவ நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மருத்துவ நிலையம் வாரத்திற்கு மூன்று நாட்கள் செயல்படும். மற்றும் அரசு பொது மருத்துவ மனை (முதியோர் புற நோயாளி பிரிவு, சென்னை-3) முதியோர்களுக்கு இலவச மருத்துவ முகாம் குடிசைப் பகுதியில் நடைபெற்றது. மற்றும் முதியோர்களுக்கு கண்ணாடிகளும் வழங்கியுள்ளது.



முதியோர்களின் தொழில் வளர்ச்சிக்காக, பேங்க் ஆஃப் பரோடா, தியாகராய நகர் கிளையின் மூலம் கடன் உதவி அளிக்கப்படுகிறது. மற்றும் முதியோர்களுக்கு தினசரி காப்பு இல்லத்திலேயே பை உறைகள், ஊதுவத்தி செய்தல் போன்ற வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

முதியோர்களுக்குத் தினசரி பாதுகாப்பு நிலையத்தில் தற்போது ஏறத்தாழ 20 நபர்களுக்கு உணவு அளிக்கப்படுகிறது. இவர்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது. மற்றும் சுற்றியுள்ள இரண்டு குடிசைப்பகுதியில் 50 நபர்களுக்காவது உணவு வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

முதியோர்களுக்கு தினசரி பாதுகாப்பு நிலையத்தில், அவர்களுக்கு தினமும் நாளேடு, கதைப் புத்தகங்கள் படித்தல், வார இதழ்கள் படித்தல், விளையாடுதல் மற்றும் அவர்களைக் கோவில்களுக்கு அழைத்துச் செல்லுதல் போன்ற சேவைகளும் செய்து வருகின்றனர்.

**2. முதியோர் வசிக்குமிடத்தில் மருத்துவ சேவை:**

முதியோர் நல மையம் (ஸிவா), கை, கால், இழந்த மற்றும் உடல் ஊனமுற்ற முதியோர்களுக்கும், நோய்வாய்ப் பட்டுப் படுத்த படுக்கையில் உள்ள முதியோர்களுக்கும் அவர்களின் வீடுகளுக்குச் சென்று மருத்துவ உதவி அளித்து வருகின்றது. உடல் ஊனமுற்ற முதியோர்களுக்கு அவர்களது தேவைகளுக்கு ஏற்ப சக்கர நாற்காலி (Wheel Chair) வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்தல்; கை கால் முடநீக்கு பயிற்சி அளித்தல், மற்றும் மருத்துவர் அவர்தம் வீடுகளுக்குச் சென்று வைத்தியம் செய்தல் போன்ற சேவைகளைச் செய்து வருகின்றன. மேலும் உடல் ஊனமுற்ற முதியோர்களுக்கு வேலை செய்ய விருப்பமிருந்தால், அவர்களது திறமைக்கு ஏற்ப வேலை வாய்ப்பு அளிக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

**3. முதியோர் வேலைவாய்ப்புச் சேவை**

முதியோர்களும வேலை செய்யும் திறமையுடையவர்கள் என்றும், அவாகளும் நாட்டுப் பொருளாதார பகுப்பில் பங்கு உடையவர்கள் என்ற ஒரு கோட்பாட்டையும் இந்த முதியோர்கள் நல மையம் கருதுகின்றது. எனவே முதியோர்களின் திறமை, தொழில் அனுபவம், உடல் நலத் திறன் இவற்றைக் கொண்டு அவர்களுக்கு வேலை வாய்ப்பளித்து வருகிறது.

மற்றும் முதியோர் சுய வேலை வாய்ப்பின் கீழ் அவர்களுக்குப் பண உதவியும் செய்கின்றனர். முதியோர் உதவித் தொகை கிடைக்க உதவியும் செய்து வருகின்றனர்.

எம்.ஜி.ஆர். காலனியில் உள்ள முதியோர் தினசரி பாதுகாப்பு நிலையத்தில் கவர், உறைகள் செய்யும் ஒரு வருமானம் வரக்கூடிய தொழில் செய்யப்படுகிறது.

**4. முதியோர் மருத்துவப் பிரிவில் —சமூக சேவை**

அரசு பொது மருத்துவமனை முதியோர் பிரிவு சென்னை-3

வயது முதிர்ந்த முதியோர்கள் மருத்துவமனைக்கு தங்கள் உடல்நலம் - குறைகளை சோதித்து, மருந்துகளைப் பெறுவதுடன் தங்கள் குடும்பம், பொருளாதாரம், மனப் பிரச்சினைகளையும் கூறுவர். எனவே இங்குவரும் முதியோர்களுக்கு அவர்களது பிரச்சினைகளுக்கு ஏற்ப சேவை அளிக்கப்படுகிறது.

**5. முதியோர் இல்லத்தில் சமூகப் பணி**

முதியோர்களை வீட்டை விட்டு தங்கள் குடும்பச் சூழ்நிலையை பிரிந்து அவர்களை முதியோர் இல்லத்தில் காப்பது, அவர்களுக்கு தனிமையில் வாழும் வாழ்க்கையும் மற்றும் சமுதாயத்தில்மற்றவர்களுடன் தொடர்பு இல்லாது வாழ்கிற எண்ணம், ஏற்படுகிறது. இந்த எண்ணங்களை நிறைவு செய்வதற்கும், மற்றும் அவர்களை வீட்டில் இருப்பதுபோல் பேணிக் காப்பதுடன் அவர்களுக்கு சமூக சேவையும் செய்து வருகின்றன.

குறிப்பாக, சென்னை இராயபுரத்திலுள்ள ராஜா வெங்கட கிரி-மாணிக்கர் முதியோர் இல்லம் முதியோர்களுக்கு மருத்துவ வசதி செய்தல் பொழுது போகும் சாதனங்கள் அமைத்தல் கோவில்களுக்குச் சென்று வருதல் போன்ற பல சமூகப் பணியில் ஈடுபட்டுள்ளது.

**6. முதியோரைப்பற்றி ஆராய்ச்சியும், வெளியீடுகளும்**

முதியோர் நல மையம் (ஸிவா), முதியோரைப்பற்றி ஆராய்ச்சியும், அவர்களைப் பற்றி வெளியீடுகளும் செய்து வருகின்றது. குறிப்பாக முதியோர்களுக்கு இந்தியாவில் இருக்கின்ற சமூக சேவை நிறுவனத்தின் கருத்தைப்பற்றி ஒரு வழிகாட்டி, குறிப்புநூல் வெளியிடப்பட்டுள்ளது.

**7. முதியோர் தொடர்பு சேவை**

முதியோர் நலத்தின் முக்கிய குறிக்கோள், முதியோர்களின் நல்வாழ்விற்கு சேவை செய்வதே. எந்த முதியோர்களுக்குப் பிரச்சினைகள் இருந்தால் அவர்களின் பிரச்சினை மற்றும் தேவைகளை அறிந்து உதவி செய்வதுடன் மற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கும் சேவை செய்துவருகின்றன.

எனவே மேற் சொன்ன சேவைகளை முதியோர்களின் நல் வாழ்விற்காக, முதியோர் நல மையம் தனது சேவைகளைச் செய்து வருகின்றது. குடும்பத்தில் முதியோர்கள் நன்கு வாழ்ந்தால், அவர்களது குடும்பம் மிக்க மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். முதியோர்களது குடும்பம் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தால் நாடு செழுமையாகும்.

**இந்த தேச வளர்ச்சிக்கு நம்து முதியோர்களின் பங்கும் உண்டு என்பதை அறிந்து அவர்களது வாழ்வை வளமாக்க முற்படுவோம்.**

### நுங்கும் இளநீரும்

* **நூறு கிராம் இளநீரில் சுமார் 0.1 கிராம் புரதச்சத்துள்ளது.**
* **நூறுகிராம் நுங்கில் சுமார் 0.7 கிராம் புரதச் சத்து உள்ளது.**
* **நுங்கைவிட இளநீரில் கொழுப்புச் சத்தும் பாஸ்பரசும் அதிகம்.**

## பார்த்தோம் படித்தோம்

இந்துமதி எழுதிய 'அவன் கண்ட கனவு' என்னும் சிறுகதை என்னை மிகவும் கவர்ந்தது.

—கே. கனகமணி
அபிராமம்.

'நோய் தீர்க்கும் வெற்றிலை' என்னும் கட்டுரை, வெற்றிலையின் நன்மை பயக்கும் தன்மைகளையும், மருத்துவ முறைகளையும் தெளிவாகக் கூறுகிறது.

—டி.ஏ.பவானிசங்கர்,
தட்சக்காடு.

சிறுகதைகள், மாணவ மாணவியரின் எழுத்தோவியங்கள், அரசின் பணிகள் பற்றிய கட்டுரைகள் — படித்து பாதுகாக்க வேண்டியவையாகும்.

— ஹேமாதாசன்
உடையார்கோவில்.

சத்துணவு பற்றிய கவிதைகள் என் நெஞ்சைக் கவர்ந்தன.

—எஸ்.மின்னல்கொடி,
முத்துப்பேட்டை.

'ஆனைமலை அற்புதங்கள்' என்னும் கட்டுரை மூலம் சுவையான தகவல்களைத் தெரிந்து கொள்கிறோம்.

—எஸ்.ரவீந்திரன்,
நந்தம்பாக்கம்குடியிருப்பு
சென்னை-89.
ஆர்.பி.அதியமான்.
சென்னை-19.

'கோவில் யானை' கட்டுரை நிகழ்ச்சி, நேரில் பார்ப்பது போன்று சித்திரிக்கப்பட்டிருக்கிறது. பாரதி நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படும் சமயத்தில், இம்மாதிரியான கட்டுரை வெளியிடுவது மிகவும் பொருத்தமாகும்.

—த.சுப்பிரமணியன்,
திருவோணம்.

## பரங்கிமலையில் ஒரு பயனுள்ள கூட்டுறவு



பரங்கிமலை ஊராட்சி ஒன்றியப்பகுதி மண்வளச் செழிப்புமிகுந்தது. இங்குப் பயிரிடப்படும் காய்கறிகளை, இடைத்தரகர்கள் அந்தந்த விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு வாங்கி, சென்னை நகரில் அதிக விலைக்கு விற்று லாபமடைந்து வந்தனர். இந்த நிலையை மாற்றி முழு நன்மையும் விவசாயிகளுக்கே கிடைக்கச்செய்ய, பரங்கிமலை ஊராட்சி ஒன்றியம், விவசாயப் பெருங்குடி மக்களை ஒன்றுபடுத்திக் காய்கறி, கனி உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்துள்ளது.

இந்த நல்லியக்கம், உற்பத்தியாளர்களிடமிருந்து காய்கறி, கனி. வகைகளை நியாயமான விலைக்குப் பெற்றுக் கூட்டுறவு அங்காடிகள், விற்பனை நிலையங்கள் மூலமாகத் தரமான, சத்துள்ள காய், கனி, கீரை வகைகள் பொதுமக்களுக்கு மலிவான விலையில் கிடைக்க வழி செய்கிறது.

காய்கறி பயிரிடுவதில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு நவீன விவசாய முறைகளில் பயிற்சி அளிப்பதுடன், தரமான விதை, உரம், பூச்சி மருந்து ஆகியவற்றுடன் கடனுதவியும் வழங்கப்படுகிறது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகளை நல்ல விலைக்கு விற்பனை செய்து தரும் பொறுப்பினையும் இச்சங்கம் மேற்கொண்டுள்ளது. அதிக அளவில் உற்பத்தியாகும் பொருள்களைப் பதப்படுத்தி, நீண்ட நாள் கெடாமல் பாதுகாத்து, நல்ல சுகாதாரமான முறையில் மக்களுக்குக் கிடைக்கவும், அதன் மூலம் பல ஏழைகள் தொழில் நுட்ப அறிவோடு உற்பத்தி செய்யவும் சங்கம் ஏற்பாடு செய்கிறது. அரசு உணவு நிறுவனங்கள், பெரிய உணவு விடுதிகள், மருத்துவ மனைகள் இவைகளுக்குக் காய்கறி, கனிகள் விநியோகிக்கப்படுகின்றன. இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 350 விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர்.

கனி வகைகளைப் பதப்படுத்துதல், கனிச்சாறு தயாரித்தல் ஆகிய பணிகளையும் இச்சங்கம் மேற்கொண்டுள்ளது. இதற்காக இச்சங்கம் 45 மகளிர்களைத் தேர்ந்தெடுத்து அடையாற்றில் உள்ள சமையற்கலைத் தொழில் நுட்ப நிறுவனத்தில் பயிற்றுவித்துள்ளது. தமிழக அரசும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட வாயிலாக மைய அரசும் இக்கூட்டுறவு அமைப்புக்கு உதவுகின்றன.

தமிழகத்திலேயே முதன்முறையாக, பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தின் வாயிலாக ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தின் குறிக்கோள்களையும், சாதனைகளையும் கருத்தில் கொண்டு அரசு மற்றும் ஊராட்சி ஒன்றியங்களையும் இது போன்ற அமைப்பை ஏற்படுத்தும்படி கருத்து தெரிவித்துள்ளது.

**இரா. வெங்கடசுப்பிரமணியம்**

[redacted]



# குழந்தைகள் நல மருத்துவம் - ஆராய்ச்சி நிலையம்

பி. எல். ராஜேந்திரன்

'பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற'
— என்றார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

எந்தப் பேறு பெற்றிருந்தாலும் சரி; அறிவு நலம் வாய்ந்த மக்கட்பேறு இல்லையேல் அந்தப் பேறெல்லாம் செல்லாக் காசாகி விடும் என்பது இதன்மூலம் விளங்கும்.

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்பது இதனால்தான்.

'குழந்தைகள் நலன், நாட்டில் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்; ஏனென்றால், புதிய இந்தியாவை உருவாக்கக்கூடிய நாளைய குடிமக்கள் அவர்களே' என்றார் பண்டித நேரு அவர்கள்.

இதற்கெல்லாம் மதிப்பளிக்கும் விதத்தில், நாட்டுக் குழந்தைகளின் நலம் காக்கப் பல்வேறு ஏற்பாடுகளைப் பயன்மிகு விதத்தில் செய்துவருகிறது தமிழக அரசு. நாடெங்குமுள்ள குழந்தைகள் மருத்துவமனைகள் நன்முறையில் ஊக்குவிக்கப்பட்டு வருவதே இதற்குச் சான்றாகும்.

## கவனமான கண்காணிப்பு

தமிழ் நிலத்தின் தலைநகராம் சென்னை மாநகரில், எழும்பூர் பகுதியில் உள்ள 'குழந்தைகள் நல ஆராய்ச்சிக் கழகம் -மருத்துவமனை, இவ்வகையில் ஆற்றிவரும் அரிய பணிகள் குறிப்பிடத்தக்கவைகளாகும்.





இந்தியாவில் உள்ள குழந்தைகள் மருத்துவமனைகளிலேயே மிகப்பெரிய மருத்துவமனையாகும் இது. பிறந்த குழந்தைகளிலிருந்து பன்னிரண்டு வயது வரையிலான குழந்தைகளின் நலன் இங்கே நல்லபடி கண்காணிக்கப்படுகிறது.

சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவமனையோடு இணைந்து தனிப் பிரிவாக இயங்கிவந்த இது, 1968 டிசம்பர் 15 முதல்தான் தனி மருத்துவமனையாகவே எழும்பூரில் புதுக் கட்டடத்தில் இயங்கத் தொடங்கியது.

250 படுக்கைகளோடு உருவான இந்த மருத்துவமனைக்கு, இப்போது மேலும் 250 படுக்கை வரை விரிவாக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

''இப்போது கூட, இருப்பது 250 படுக்கையே ஆனாலும் தவிர்க்கமுடியாத நோய் வேகத்தோடு வருகிற குழந்தைச் செல்வங்களின் உயிர்ப் பாதுகாப்பு கருதி 300 வரை இங்கே உள்ளிருப்பு நோயாளிகள் அனுமதிக்கும் படி ஆகிவிடுகிறது.'' என்றார் குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலைய மருத்துவமனை இயக்குநர் டாக்டர் திரு. திருஞானசம்பந்தம்.

24 மணி நேரமும் இந்த மருத்துவமனையில் வேலை நேரமே! அவசரச் சிகிச்சைப் பிரிவு ஒன்றும் இங்குண்டு.

## பிற மாநிலங்களிலிருந்தும்...

முத்தடுப்பு ஊசி, போலியோ சொட்டு மருந்து என்பதிலிருந்து எல்லா வகைக் குழந்தைகள் நலன் காக்கும் பணிகள் அனைத்தும் இங்கே சிறப்புறச் செய்யப்படுகின்றன. தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலே இருந்து மட்டுமல்ல; இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் இங்கே மருத்துவம் பெறக் குழந்தைகள் கொண்டுவரப்படுகின்றன.

30 டாக்டர்கள் பணியாற்றிடும் புறநோயாளிகள் பிரிவில் மட்டும் நாளொன்றுக்கு ஏறத்தாழ மூவாயிரம் குழந்தைகள் வந்து போகின்றன.

தொற்றுநோய்க்கு ஆளான குழந்தைச் செல்வங்கள் தனிவார்டில் வைத்துக் கண்காணிக்கப்படுகின்றன.

நிறை மாதத்தில் பிறந்த குழந்தைகள் மட்டுமல்ல; குறைமாதத்தில் பிறந்த குழந்தைகள் சரியான வளர்ச்சி பெறவும் வகை செய்கிறார்கள் இங்கே.

சில குழந்தைகளுக்குப் பிறக்கும் போதே மஞ்சள் காமாலை நோய் கண்டு, இருக்குமோ இறக்குமோ என்ற அச்சத்தைப் பெற்றோருக்கு உண்டாக்கி விடுவதுண்டு. அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு உடலிலுள்ள இரத்தம் முழுவதையும் அகற்றிவிட்டுப் புது இரத்தம் செலுத்தி உயிரூட்டும் உயரிய பணி.....

விரல்கள் ஒட்டியோ, உணவுக் குழல் அல்லது மலக்குழாய் போன்றவை அடைபட்டோ பிறக்கும் குழந்தைகளை அறுவைச் சிகிச்சை மூலம் சரிப்படுத்தும் சீரிய பணி...

பிறக்கும்போதே தாயை இழந்து விடும் தளிர்களுக்குத் தக்க பராமரிப்பு அளித்துக் காக்கும் பணி எல்லாமே இந்த மருத்துவமனையில் நல்லமுறையில் நடைபெற்று வருகின்றன.

## எடையைக் கூட்டலாம்

பிறக்கும் குழந்தைகள் 40 வாரம் கருவிலிருந்து 3 கிலோவாவது எடையோடு பிறக்க வேண்டும் என்பது நியதி. அடிக்கடி பிள்ளைப் பேறு காணும் தாய்மார்கள் பெற்றெடுக்கும் குழந்தைகளுக்குச் சில நேரங்களில்





இந்த எடை இருப்பது அரிதாகிவிடும். அப்படிப்பட்ட குழந்தைகளைத் தனிப்பிரிவில் வைத்து ( Premature Unit ) தக்கபடி பராமரித்து, பதினைந்தே நாட்களில் உரிய எடை உடையதாக்கப்பட்டுவிடும் அதிசயமும் இந்த மருத்துவமனையில் நடக்கிறது.

'குழந்தைகள் வளர்ச்சிக் கலை விளக்க நிலையம்' என்ற ஒன்று இங்கே செயல்பட்டு வருகிறது. இந்தப் பகுதி தனிக் கட்டடத்தில் 1980 முதல் இயங்கிவருகின்றது.

**சத்தான உணவுகள்**

பொதுவாக எல்லா மருத்துவமனைகளிலும் வரும் நோயாளிகளுக்குச் சிகிச்சை மட்டும்தான் கொடுத்தனுப்புவர். ஆனால் இந்த மருத்துவமனையில் சிகிச்சை அளிப்பதோடல்லாமல், குழந்தைகளை எவ்வாறு ஆரோக்கியமாக வளர்க்கவேண்டும், நோய்கள் வராமல் எவ்வாறு பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதை போதனை மூலமாகவும், செயல்விளக்க மூலமாகவும் இங்கே சொல்லிக் கொடுக்கிறார்கள். குழந்தை பிறந்தது முதற்கொண்டு நோய் வராமல் பாதுகாக்கத் தடுப்பு ஊசி என்னென்ன போட வேண்டும் என்று கற்பிக்கிறார்கள். தடுப்பு ஊசியும் போடுகிறார்கள்.

இந்தப்பகுதியைக்கண்காட்சிபகுதிபோல அமைத்துள்ளனர். இங்கு தாய்மார்களும் தங்கள் குழந்தைகளும் எப்படி நலமுற வாழ வேண்டும், குழந்தைகளுக்கு என்னென்ன தடுப்பு ஊசி போட வேண்டும், சுற்றுப்புறச் சுகாதாரம் எப்படி இருக்க வேண்டும், தாய்மார்கள் கர்ப்பகாலத்தில் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பன போன்ற வண்ணப் படங்கள் பாமர மக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் அளவில் அமைக்கப்பட்டுள்ளன. படக்காட்சியும் பயன்படுத்தப்படுகிறது.

இந்தப் பகுதியின் நோக்கம் மருத்துவமனைக்குவரும் எல்லா தாய்மார்களுக்கும் நாள்தோறும் நலபோதனை நல்குவதாகும்.

குழந்தைகள், நோஞ்சான் குழந்தைகள், எடைக் குறைவான குழந்தைகள் இங்கு வந்தவுடன் முதலில் அந்தக் குழந்தையை ஆராய்கிறார்கள்; நீர், மலம், இரத்தப் பரிசோதனை இவைகளைச் செய்கிறார்கள். பிறகு அந்தக் குழந்தையின் எடை, உயரம், இவைகளை எடுத்துப் பதிவு செய்துகொண்டு குறைந்த செலவில் அதிகமான சத்துள்ள உணவு எப்படிக் கொடுப்பது என்பதைச் சொல்லித் தருகிறார்கள். மேலும் அவ்வகை உணவு தயாரிப்பதைச் செய்தும் காட்டுகிறார்கள். மறுபடியும் இரண்டு வாரத்திற்கு



ஒரு முறை அந்தக் குழந்தையின் எடையை எடுத்துப் பார்க்கிறார்கள். கற்பித்தபடி அவர்கள் செய்திருந்தால் கண்டிப்பாக எடை கூடி இருக்கும். பெரும்பாலான குழந்தைகள் இங்கு வந்து நல்ல பயனை அடைகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**பயனுறப் பணிபுரிவோர்**

மேலும் சமுதாய நலப் பயிற்சிப் பணியாளர்கள், சமூக நலப் பயிற்சியாளர்கள், தேசிய சமூக நலப் பயிற்சி பெறும் கல்லூரி மாணவ மாணவிகள், தனியார் மன்றங்களில் உள்ள தாய்மார்கள், பள்ளி மாணவ மாணவிகள், செவிலியர், பயிற்சியாளர்கள், மருத்துவப் பயிற்சியாளர்கள் யாவரும் இந்தப் பகுதியில் பங்கேற்றுப் பணியாற்றி வருகிறார்கள்.

குழந்தைகள் ஆராய்ச்சி நிலைய மருத்துவமனை டாக்டர்கள் மூவர் இந்தப்பிரிவில் பணியாற்றுகிறார்கள்.

இந்த மருத்துவ மனையில் - சேர்க்கப்படும் குழந்தைகளின் நோய் விவரம் சிகிச்சை அளிக்கப்பட்ட முறை, அக்குழந்தையின் பெற்றோர்; ஊர் முதலான விவரங்கள் ஆகியவை இங்கே தனிப்படப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. எத்தனை ஆண்டுக்குப் பிறகானாலும் சரி, ஒரு குழந்தையைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டுமானால்— அவசியமான பட்சத்தில் முறைப்படி இயக்குநரை அணுகி அக்குழந்தை பற்றிய விவரங்களை ( Records ) நாம் பார்வையிட முடியும்.

''நிறைமாதக் கர்ப்பிணிக்கு, எப்போதுமுள்ள எடையிலிருந்து பத்து முதல் பன்னிரண்டு கிலோ வரை எடை கூடினால் பிரசவம் சுகப்பிரசவமாக இருக்கும். டாக்டர்கள், ஏ.என்.எம்., ஹெல்த் விசிட்டர், தாய் எனப்படும் கிராமப்புற மருத்துவப் பெண்மணிகள் போன்ற தாய்மார்கள் பிரசவம் பார்க்க வேண்டும். பிறந்த குழந்தைக்கு நாலுமாதம் வரையோ, ஆறுமாதம் வரையோ அவசியம் தாய்ப்பால் கொடுத்தே ஆகவேண்டும். இதெல்லாம் சரியாக இருக்கும்பட்சத்தில் குழந்தைகள் நலமுற வளரும்'' என்று கூறும் குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலைய மருத்துவ மனைஇயக்குநர் திரு. திருஞான சம்பந்தம்— ''ஊனமாகவே பிள்ளைகள் பிறப்பது எப்படி?'' என்ற நம் கேள்விக்கு இப்படிப் பதிலளித்தார். ''கருப்பை சரியின்மை, தாய்க்குப் பெரியம்மை, டி. பி. போன்ற கடுமையான நோய் காணல், பால்வினை நோய்க்கு ஆட்படல் ஆகியவற்றால் பிறக்கும் குழந்தைக்கு ஊனம் ஏற்படும். இது பரம்பரையாகக் கூட வருவதுண்டு.''





பத்து வார்டுகள் இருக்கும் இந்த மருத்துவமனையில் உள்ள பல்வேறு பிரிவுகளுக்குமாகத் தலைமை மருத்துவர்கள் மட்டும் 15 பேர் இருக்கிறார்கள்.

**வெளியிட முகாம்கள்**

இங்குள்ள மருத்துவர்கள் வெளியிடங்களில் போய் மருத்துவ முகாம்கள் நடத்துகிறார்கள். 'Voluntary Agency' களுடனும் அரிமா சங்கம் போன்றவற்றோடும் குழந்தைகள் நல மருத்துவத்தில் இவர்கள் ஒத்துழைக்கிறார்கள்.

ஆண்டொன்றுக்குச் சுமார் 30,000 குழந்தைகள் இங்கே சேர்க்கப்படுகிறார்கள் என்றால், அவர்களில் ஐயாயிரம், ஆறாயிரம் பேர்களுக்கு பேதி, வயிற்றுப் போக்குக் கண்டிருக்கும். இதைத் தடுத்து அவர்களைக் காக்க 'ORT cell' என்ற பிரிவு ஒன்று இங்கே உள்ளது.

காது மூக்கு தொண்டை கவனிப்பு, முடநீக்கியல், பல் வியாதி, எக்ஸ்ரே என எல்லாவற்றுக்குமே இங்கு தனித்தனிப் பிரிவுகள் இருக்கின்றன. க்ஷயம், மார்பு நோய் போன்றவற்றைக் கவனிக்க 25 தனி மருத்துவப் பிரிவுகள் (Special Clinic) இங்குண்டு.

மத்திய அரசு உதவியோடு, மாநில அரசு செயல்படுத்தி வரும் 'ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்' இந்த மருத்துவமனை அரவணைப்புடனேயே சென்னை மாநகரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இளஞ்சிறார்களைப் பற்றிப் பாட வந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்— 'இன்று குழந்தைகள் நீங்கள், இனி இந்த நாட்டினை ஆளப் பிறந்தீர்' என்று பாடினார். அந்தச் சொற்களின் நேர்த்தி உணர்ந்து அரசு ஆற்றிவரும் குழந்தைகள் நலப்பணி மேம்பட அரசோடு பொதுமக்களும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும். உதவி பல புரிய உவந்து முன் வர வேண்டும்.



# சத்தியமங்கலத்தில் சந்தனமரக் கிடங்கு

அந்த 'மினி' லாரி மின்னல் வேகத்தில் பறந்து கொண்டிருந்தது !

'சந்தன மரங்களைக் கடத்திக் கொண்டு ஒரு லாரி காட்டு வழியே வந்து கொண்டிருக்கிறது.........' என்ற தகவல் கிடைத்ததுதான் தாமதம், வனத்துறையினர் விரைந்தனர்.

உடனே, லாரி வருகிற வழியாகப் பார்த்து, சாலையின் குறுக்கே இரண்டு கட்டை வண்டிகளை நிறுத்தினர். அதோடு இரண்டு மரங்களையும் போட்டுக் கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

எதிர்பார்த்தபடி, அந்த வழியாக அந்த 'மினி' லாரி படு வேகத்தில் வந்துகொண்டிருந்தது. எவ்வளவு எச்சரித்தும் அது நிற்கவில்லை. இரண்டு கட்டை வண்டிகளையும் தகர்த்தெறிந்து விட்டு மேலும் செல்லப் பார்த்தது. ஆனால், மரங்களில் ஒன்று லாரியின் உட்பகுதியைத் தாக்கி உடைத்துவிட்டது. அதனால் லாரியின் வேகம் தடைப்பட்டது. உடனே அதிலிருந்த நால்வர் தப்பியோட முயன்றனர். அவர்களில் மூவர் பிடிபட்டனர். ஒருவர் மட்டும் தப்பிவிட்டார் ; 'மினி' லாரியும், அதிலிருந்த சந்தனக் கட்டைகளும் கைப்பற்றப்பட்டன.

அண்மையில் நடந்த இந்தச் சந்தனக் கட்டைகள் கடத்தல் சம்பவத்தைப் பற்றி நாம் தெரிந்து கொள்வது , பெரியார் மாவட்டத்திலுள்ள சத்தியமங்கலம் சந்தன மரக்கிடங்கில்!

## இயற்கை தந்த அருட்கொடை!

சென்னையிலிருந்து சென்ற செய்தியாளர்கள் கிடங்கைப் பார்க்கச் சென்றிருந்தபோது, மேலும் பல சுவையான தகவல்களும் கிடைத்தன.

கிடங்குக்குள் நுழைகிறோம். கமகமவெனச் சந்தன மணம் கமழ்கிறது. அதோ! ஓரிடத்தில் சந்தனமரக் கட்டைகள்-பட்டைகள் குவியல் குவியலாய்த் தென்படுகின்றனவே!

காட்டில் பட்டுப்போய்க் கீழே விழுந்த ஒரு சந்தனமரத்தைக் கூட அப்படியே அங்குப் போட்டு வைத்திருக்கிறார்களே! செய்தியாளர்கள் அதைச் சூழ்ந்து கொண்டு பார்க்கிறார்கள்.

சந்தனமரம் ஒன்று முதிர்ந்து தானாகப் பட்டுவிட்ட பின்னர், அதன் வேர்ப் பகுதி உட்பட எடுக்கப்படும் சந்தனமரத்தால், வேர்ப்பகுதி மணம் மிகுந்ததாகவும், அதிக விலை பெற்றுத்தரக் கூடியதாகவும் கருதப்படுகிறது என்ற தகவல்களை மாவட்ட வன அலுவலர் திரு என். இராமச்சந்திரன் அவர்கள் சொல்லத் தெரிந்து கொள்கிறோம்.

## ஒரு சந்தன மரத்தின் ஆயுள் எவ்வளவு?

சந்தனமரங்கள் 50 முதல் 60 ஆண்டுகள் வரை வாழக் கூடியவை. பெரும்பாலும் தமிழகக் காடுகளில் உள்ள சந்தனமரச் செல்வங்கள் அனைத்தும் நமக்கு இயற்கை தந்த அருட்கொடையாகும்.

## சத்தியமங்கல சந்தனக் கிடங்கு

சந்தன மரம் காடுகளில் இருந்தாலும் சரி, தனியார் நிலங்களில் இருந்தாலும் சரி அவை அனைத்தும் அரசுக்கே சொந்தமாகும்.

**பி.வி. கிரி**



சந்தன மரமொன்றைச் செய்தியாளர்கள் பார்வையிடுகிறார்கள்.

தமிழகச் சந்தனமரக் கிடங்குகளில் ஒன்றான சத்தியமங்கலக் கிடங்கு 1919-ல் அமைக்கப்பட்டது. கடந்த 63 ஆண்டுகளாக இயங்கி வரும் இந்தக் கிடங்கில் பல உயர்தர சந்தன மரக் கட்டைகள் சேகரிக்கப்படுகின்றன. பிறகு அவை துண்டுகளாகவும், சக்கைகளாகவும், தூளாகவும் தயாரிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் சேலம், திருப்பத்தூர், சத்தியமங்கலம் ஆகிய 3 இடங்களில் சந்தன மரக் கிடங்குகள் உள்ளன.

சந்தன மரங்கள் நமக்குப் பல வகையிலும் பயன்படுகின்றன.

சந்தன மரத்தில் அழகிய வேலைப்பாடு மிக்க கைவினைப் பொருட்கள், மணங்கமழும் சந்தனப் பொடி, சந்தனத்தைலம் அரைத்த சந்தனம் எல்லாம் மங்கல விழாக்களில் மணக்கின்றன அல்லவா? 'அரைக்கினும் சந்தனம் தன் மணம் அறாது' என்ற முதுமொழி இதன் பெருமையை உணர்த்துகின்றதன்றோ? பட்டு வேட்டியும், பட்டுச் சட்டையும் போட்டு கொஞ்சம் சந்தனத்தையும் வைத்துப் பாருங்கள், அதன் மகிமையே மகிமை! சந்தனம் வேனல் கட்டி போன்றவற்றுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது. சந்தனமரத்தின் அடி முதல் நுனி வரை வீணாகாமல் பெரிதும் பயன்படுவதால் அதன் பெருமை பலராலும் பேசப்படுகின்றது.

## இரட்டைப் பூட்டு!

'ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்! என்பார்கள். அதைப் போல, 'ஏலம் விடும் மரத்துக்கு இரட்டைப் பூட்டு!' என்று இங்கு அழைக்கிறார்கள். அதாவது ஒற்றைப் பூட்டு பூட்டப்பட்டுள்ள கிடங்கில் (Single lock godown) சுத்தம் செய்யப்படாத சந்தன மரங்கள் வைக்கப்படுகின்றன. இரட்டைப் பூட்டுபூட்டப்பட்டுள்ள கிடங்கில் (Double lock godown) சுத்தம் செய்து தரம் பிரிக்கப் பெற்ற, விற்பனைக்குத் தயார் நிலையிலுள்ள சந்தனக் கட்டைகள் வைக்கப்படுகின்றன.



விற்பனைக்குத் தயார் நிலையில் உள்ள சந்தன மரத்துண்டுகள்.

சுத்தமாக்கப்பட்ட, சந்தன மரங்கள் 19 வகைகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வகைக்கும் எண் இடப்பட்டு, முத்திரை குத்தப்படுகின்றன.

சந்தன மரத்துக்குப் பல திருநாமங்கள் உண்டு.

விளையாத் புத், சினா புத், பஞ்ஜம், கட்லா, கட்பட்லா, பக்ரதாத், ஜஜ்போக்கல்,செரியா, ஹூத்தேரி சில்ட்டா, பசோலா புக்னி-இப்படி இதற்குப் பெயர்கள் உண்டு.

விலை மதிப்புமிக்க சந்தன மரங்களைக் கடத்தும், சமூக விரோதிகள் பயங்கர ஆயுதங்கள் வைத்திருப்பதும் உண்டு. கடத்தல் தடுப்பில் ஈடுபட்டுள்ள வனத்துறையினருக்கு வாகனம் மற்றும் ஆயுத வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை அரசு ஏற்றுக் கூடுதல் வாகனங்களையும் ஆயுதங்களையும் வழங்க உத்தரவிட்டுள்ளது.

இந்தக் கிடங்கில், ஓராண்டில் இருமுறை ஜூலை மற்றும் டிசம்பர் மாதங்களில் ஏலம் விடப்படுகின்றது. கடந்த ஜூலை மாதத்தில் நடந்த ஏலத்தின் மூலம் 100 டன் நல்ல ரக சந்தன மரமும், 80 டன் சாதாரண மணமில்லா சந்தன மரத்துண்டுகளும் விற்கப்பட்டு ரூ. 33 இலட்சம் வருவாய் கிடைத்தது. டிசம்பர் ஏலத்தில் 250 டன் விற்க இயலும் என்று வன அலுவலர்கள் தெரிவித்தனர். ஏலம் எடுக்க இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து வணிகர்கள் வருகிறார்கள். தமிழ்நாட்டுச் சந்தனம் இந்தியாவெங்கும் மணம் பரப்பி நம் ஒருமைப்பாட்டைச் சொல்லாமல் சொல்கிறது. அல்லவா?

# இதன் வயது 125



இந்தியாவிலேயே மிகப்பழமை வாய்ந்த பல்கலைக் கழகங்கள் மூன்றில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகமாகும். இலண்டன் பல்கலைக் கழகத்தை முன்மாதிரியாகக் கொண்டு 1857ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட இப்பல்கலைக் கழகம், 1957ஆம் ஆண்டு நூற்றாண்டு விழாவினைக்கொண்டாடி முடித்து, இந்த ஆண்டில் தனது 125வது ஆண்டு விழாவினைச் சீரும் சிறப்புமுறக் கொண்டாடத் திட்டமிட்டு வருகின்றது. இது தொடர்ந்து நாட்டிற்கு நல்ல அரசியல் அறிஞர்களையும், நிர்வாகத் திறன்மிக்க ஆட்சியாளர்களையும், வழக்கறிஞர்களையும், நீதிபதிகளையும், பல்வேறு நிபுணர்களையும், கல்வியாளர்களையும், பொறியியல் வல்லுநர்களையும், மருத்துவர்களையும், தொழிலதிபர்களையும், தத்துவஞானிகளையும், அறிஞர் பெருமக்களையும் அளித்துள்ளது.

தாய்ப் பல்கலைக் கழகமான சென்னைப் பல்கலைக் கழகம் 1916ஆம் ஆண்டில் மைசூர் பல்கலைக்கழகம், 1918ஆம் ஆண்டில் உஸ்மானியா பல்கலைக் கழகம், 1926ஆம் ஆண்டில் ஆந்திராப்பல்கலைக் கழகம், 1929ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1937ஆம் ஆண்டில் கேரளப் பல்கலைக் கழகம், 1954ஆம் ஆண்டில் ஸ்ரீ வேங்கடேஸ்வரா பல்கலைக் கழகம், 1966ஆம் ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1971ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், 1978ஆம் ஆண்டில் அண்ணா பல்கலைக் கழகம், 1981ஆம் ஆண்டில் தமிழ்ப் பல்கலைக் கழகம், 1982ஆம் ஆண்டில் பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழகங்கள் தோற்றங் கொண்டுள்ள இடமாயிருந்திருக்கின்றது.

கல்விக்கோயிலாகத் திகழும் இப்பல்கலைக் கழகம் காலந்தோறும் புதிய புதிய துறைகளில் காலத்திற்கேற்பக்கல்விப்பரப்பை விரிவு படுத்தி வருகின்றது. போர்க் கல்வி, கம்ப்யூட்டர் அறிவியல் தொழில் நுணுக்கம், விண்வெளி அறிவியல், நிர்வாகத் துறைப் படிப்பு, முதியோர் தொடர் கல்வி, பத்திரிகை இயற் கல்வி, நூலகவியற் கல்வி, மண்ணியல் அறிவியல், இயற்பியல் அறிவியல், மானுடவியல் முதலான துறைகளில் தன் கல்வி எல்லையை விரித்து வருகின்றது. அடிப்படை மருத்துவ இயல்புப் படிப்பும், தரமணி என்னுமிடத்தில் நிறுவப்பட்டுள்ளது. அஞ்சல் வழிக் கல்வித் துறை தொடங்கப்பெற்ற பி.ஏ., பி.காம்., எம்.ஏ., எம்.காம்., வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன. வேலைவாய்ப்புத் திட்டத்திற்குரிய கல்வியும் கருதப் பெற்று வருகின்றது வணிக, தொழில் துறைகளோடுபல்கலைக் கழகம் தொடர்பு கொண்டு தொழில் நிர்வாகப் படிப்பின் எல்லையினை விரிவாக்கிக் கொண்டு வருகின்றது.

இவ்வாறு கல்வித் துறையில் காலத்திற்கேற்ற மாற்றங்களைச் செய்துவரும் சென்னைப் பல்கலைக் கழகம், தான் விரைவில் கொண்டாடவிருக்கும் 125வது ஆண்டு விழாவினையொட்டிச் சில புதிய துறைகளைத் தொடங்கவிருப்பதோடு, ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கும் சில துறைகளை விரிவுபடுத்தவும் திட்டமிட்டுள்ளது.

தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் இயங்கும் தமிழ்க் கலைகளுக்கென (பெர்பார்மிங் ஆர்ட்ஸ்) ஒரு துறை தொடங்கப் பெற்று, இதற்கென ஓர் அரங்கமும் அமைக்கப்படவிருக்கிறது. கம்ப்யூட்டர் அறிவியற்கூடம் ஒன்றும் நிறுவப்பட உள்ளது. காந்தியப் படிப்பு, சர்வதேச நல்லுறவு, இந்திய ஜப்பானியப்படிப்பு, சமணவியல், நிர்வாகப் படிப்பு, அறிவியல் காட்சிக்கூடம், நூலகத்தை நவீனப்படுத்துதல், அச்சுக்கூடம் அமைத்தல், பதிப்பகம் ஏற்படுத்தல், கருத்தரங்க அறைகள் அமைத்தல் அடிப்படை மருத்துவ அறிவியல் படிப்பு விரிவாக்கம், இப்போது இயங்கிவரும் துறைகளை மேம்பாடுறச் செய்தல், தேசிய சேவை விளையாட்டுப் பயிற்சிகள், ஊழியர்கள் நலத் திட்டங்கள் முதலியன திட்டமிடப்பட்டுள்ளன.

### ராட்சதத்தவளைகள்

நண்டுகளை விழுங்கும் தவளைகள் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? நண்டுகள் என்ன? பாம்புகள், பறவைகளையும் விழுங்கியுள்ளன இந்தத் தவளைகள்!

கொங்கன் கிரிஷி வித்யாபீட விஞ்ஞானிகள், சில தவளைகளின் உடலைக் கீறி, சோதனைகள் நடத்தியபோது அவற்றின் வயிற்றில் சிறிய பாம்புகள், பறவைகள் இருந்ததைக் கண்டுபிடித்துள்ளனர்.

வயல்களில் பயிர்களுக்கு ஏற்படும் தொல்லைகளைக் கட்டுப்படுத்துவதில் தவளைகள் எங்ஙனம் உதவுகின்றன என்பதுபற்றி இந்த விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

பூச்சிகளை உட்கொண்டு இந்தத் தவளைகள் பயிர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன.

# நூல் நயம்



## அழகோவியம்

**ஆசிரியர் :** புலவரேறு அரிமதி தென்னவன்.

**வெளியீடு:** சேகர் பதிப்பகம், பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை-600 076.

**பக்கம்:** 126 **விலை:** ரூ. 9-00

இருபத்தேழு தலைப்புகளில் ஓவியத் தமிழ் என்ற பகுதியுடன் தொடக்கம் பெற்று 'துணைகள்' என்னும் பகுதியுடன் முடிவுறும் கவிதைத் தொகுப்பு இந்நூல். அறுசீர், எண்சீர் ஆகிய இரண்டினாலும் அருஞ்சுவையுடன் படைத்திருக்கிறார் கவிஞர்.

கவிதைகள் அனைத்தும் கற்கண்டுகளாக இனிக்கின்றன. படிப்போர்க்குத் திகட்டவே இல்லை. புதுவை மண்ணின் சிறப்போ, புரட்சிப் பூங்குயில் பாவேந்தரிடம் நூலாசிரியர் கொண்டுள்ள பற்றின் காரணமோ பாவேந்தரின் கவிதைகளில் உள்ள ஓட்டமும் அழுத்தமும், சொல்லாட்சியும், இந்நூல் முழுதும் காணப் பெறுகின்றன.

இயற்கையின் வனப்பும், இயற்கைப் பொருள்களும்இவரின் பாடல்களில் ஓவியங்களாகக் காட்சி தருகின்றன. குரங்கை வைத்து ஆட்டி கும்பியைக் கழுவுவான் குரங்காட்டி. இவரோ குரங்கைப் பாடு பொருளாக்கி, தங்கக் கம்பி போன்ற தத்துவங்களை அடித்துக் கொடுக்கிறார். காக்கை, கோழி, பூனை, அணில், எருமை ஆகிய அனைத்தும் கவிஞருக்குத் துணையாகி நிற்கின்றன; தூய கவிதையை உருவாக்க வழி வகை செய்கின்றன. 'புதுச்சேரி'யை ஒரு ஓவியமாகவே வடித்துத் தந்து விடுகிறார். கவிஞர். அவரது பிறந்த மண்ணான திண்டிவனம் குறித்தும் சுவையாக எழுதியுள்ளார். எனவே திண்டிவனமும் 'பாடல் பெற்ற ஸ்தலமாகி' விடுகிறது! தலைப்புகளுக்கேற்ற ஓவியங்கள் நூலின் உள்ளே இடம் பெற்று நூலை அழகோவியமாக்கி உள்ளன.

## பாரதி பதியம்

**ஆசிரியர் :** கவிஞர் தமிழ்முடி.

**வெளியீடு:** தமிழ்முடி நிலையம், 1332, செக்டர் 7, தெரு 33. கே. கே. நகர், சென்னை-600 078.

**பக்கம்:** 96 **விலை:** ரூ. 4-50

பாரதி நூற்றாண்டை ஒட்டி அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் எழுதியுள்ள இந்நூல் பாரதியின் இதயத்தைப் பாங்காகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

பாரதியின் மொழிப்பற்று, நாட்டுப் பற்று, புரட்சி மனப்பான்மை, பெண்ணுரிமைபோன்ற கொள்கைகளை எளிய, இனிய நடையில், எல்லாருக்கும் புரியும் விதத்தில் விளக்கியிருப்பது நூலாசிரியரின் திறமைக்கு எடுத்துக் காட்டு ஆகும்.

புறநானூறு, இராமாயணம் போன்ற இலக்கியங்களிலிருந்து மேற்கோள் காட்டி, மன்னர்களின் சிறப்பைச் சொல்லும் நூலாசிரியர் - 'அமைச்சர்களை அரசர்கள்தான் நியமிக்கிறார்கள்' என்று எடுத்துக் கூறி இன்றைய ஜனநாயக முறைத் தேர்தல்களைச் சுட்டிக் காண்பித்து, அதனால்தான் மக்களை எல்லாம் மன்னர்கள் என பாரதியார் பாடியுள்ளார் எனக் குறிப்பிடுவது பாராட்டுக் குரிய விளக்கமாகும்.

## ஒட்டக்கூத்தரின் ஈட்டி எழுபது

**குறிப்புரை:** புலவரேறு பெ. வேலு,

**வெளியீடு:** தமிழ்ச்சங்கம், தாரமங்கலம், சேலம் மாவட்டம்.

**விலை:** ரூ. 5.00 **பக்கம்** 84.

விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன், இராசராச சோழன் ஆகிய மூன்று மன்னர்கள் குறித்தும் உலா நூல்கள் எழுதிய பெரும் புலவர் ஒட்டக்கூத்தர் செய்த நூல் இது.

செங்குந்தர் என்னும் இனத்தவரின் சிறப்பையும் பழங்காலத்தில் அவர்கள் படைவீரர்களாகத் திகழ்ந்து புகழ்பெற்ற செய்திகளையும் இந்நூல் பாடுகிறது. அக்காலத்து வரலாற்றுச் செய்திகளும் புராணக் கதைகளும் நூலில் நிறைந்திருக்கின்றன.

குறிப்புரை இனிய, எளிய நடையில் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது. சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கும் ஒட்டக்கூத்தர் வரலாறு சுவையாக உள்ளது.

—தமிழ்ப்பித்தன்

## அறிவியல் இன்பம்

**ஆசிரியர் :** கு. ராஜாராம்

**வெளியீடு :** மீனாட்சி புத்தக நிலையம், 222, டாக்டர் நடேசன் சாலை, சென்னை-5.

**விலை:** ரூ. 6-00 **பக்கங்கள்:** 123

குழந்தைகளுக்காகப் பல நூல்கள் வெளிவந்தாலும், அறிவியல் நூல்கள் குறைவு என்பதை நாம் உணர வேண்டும்.

'அறிவியல் இன்பம்' என்ற இந்த நூல், நாளைய தலைமுறைகளின் அறிவு வளர்ச்சிக்கு வழி கோலும் என்பதைக் கோடிட்டுக் காட்டலாம். பெரியவர்களுக்கு எப்படியும் எழுதலாம்; புரிந்து கொள்வார்கள். ஆனால், குழந்தைகளுக்கு இப்படித்தான் எழுத வேண்டும் என்ற வரையறை உள்ளது. அப்போதுதான் அதை அவர்கள் புரிந்துகொள்ள முடியும். அதுவும் அறிவியல் கருத்தை எப்படிச் சொல்ல வேண்டுமோ அப்படிச் சொல்லி, அவர்களைத் தம் பக்கம் கவர்ந்திழுக்கிறார் நூலாசிரியர்.

எளிய சொற்கள்: இனிய நடை; எவரும் எளிதில் கிரகித்துக் கொள்ளும் கதைபோன்றபோக்கு

—அதில் நகைச் சுவை வேறு— கேட்க வேண்டுமா? படிக்க இனிக்கிறதே!

இந்நூலில் பத்துக் கட்டுரைகள் உள்ளன. சந்திரமண்டலம், கண்ணாடிகள், தார், முத்து, கடல், சூரியன், இரைச்சல் போன்ற கட்டுரைகளில்எத்தனைவிதமான புதிய செய்திகளை நாம் தெரிந்து கொள்கிறோம்!

மாணவர்க்கு மட்டுமல்ல, பெரியவர்க்கும் பயன்தரும் நல்ல நூல் இது.

## மு. வ. முப்பால்

**ஆசிரியர்: டாக்டர் ம.ரா.போ. குருசாமி,**
**விற்பனை உரிமை: முல்லைச் சுற்றம்,**
**எச்-7-2, நான்காவது அவென்யூ,**
**இந்திரா நகர், சென்னை-600020.**
**விலை: ரூ. 12 பக்கங்கள்: 223**

மு.வ. என்ற இரண்டெழுத்துப் பெயர், எல்லார் இதயங்களிலும் என்றும் நிலைத்திருக்கும் திருப் பெயராகும். அவரது படைப்பிலக்கியங்கள் எல்லாமே இனிக்கின்ற கற்கண்டாக, முக்கால முக்கனியாக விளங்குபவை. கதை நாவல், கட்டுரை-இப்படி எதிலும் அவர் சோடை போனதில்லை. தெளிந்த நீரோடை போல் ஒவ்வொன்றையும் ஒழுங்காக ஆக்கித் தந்திருக்கிறார்.

டாக்டர் மு. வ. அவர்களின் படைப்பிலக்கியங்களைப் பலரும் வியந்து போற்றும் வகையிலே, திறம்படத் திறனாய்வு செய்திருக்கிறார் டாக்டர் ம.ரா.போ. குருசாமி அவர்கள்.

நூலாசிரியர், பல்வேறு கருத்தரங்குகளில் ஆற்றிய அரிய சொற்பொழிவுகளின் அழகிய கோவையாகத் திகழும் இவ் வாய்வு நூலில், மு. வ. அவர்களை நேரில் பார்க்கிறோம் - அவர் நம்முடன் பேசுவது போன்றும் உணர்கிறோம்.

டாக்டர் மு.வ. அவர்களை உலகியல் - உளவியல் - ஆன்மிக இயல் என்று மூவகையாகப் பிரித்து 'மு.வ.-முப்பால்' என்று தமிழன்னைக்கே மகுடம் சூட்டி மகிழ்கிறார் நூலாசிரியர்.

திறனாய்வு செய்வோருக்கு மட்டுமல்ல. தீந்தமிழில் ஆர்வமுடைய ஏனையோருக்கும் கூட இந்நூல் ஓர் வரப்பிரசாதமாகும்.

## பொன்மயில் குழந்தைப் பாடல்கள்

**ஆசிரியர் : குன்றக்குடியான்**
**வெளியீடு: குழந்தை இல்லம்,**
**5ஏ, அம்பாள்புரம் முதல் வீதி,**
**செக்காலை, காரைக்குடி-623002.**
**விலை: ரூ. 3.50 பக்கங்கள்: 50**

'காலை எழுந்தவுடன் படிப்பு-பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு' என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க நல்ல கவிதை நூல்கள் பெருகிட வேண்டும். குறிப்பாக, குழந்தைகளுக்கான பாடல்கள், அவர்கள் ஆடிப்பாடி மகிழ்வதற்கேற்ற பாடல்கள் நிறைய வெளிவருதல் வேண்டும். குழந்தை இலக்கியம் வளர்வதற்கு இவையெல்லாம் உறுதுணையாக இருக்கும். இந்த வகையில், திரு குன்றக்குடியான் எழுதிய 'பொன் மயில்-குழந்தைப் பாடல்கள்' விளங்குகின்றன. 27 பாடல்களில் பல பாடல்கள் பெரியவர்கள் மனத்தையும் கவர்கின்றன; பொன் மயிலைப் போல அழகாகவும் இருக்கின்றன.

**பி.வி. கிரி**

## வாழ்நாளை வளர்ப்பது எப்படி ?

**ஆசிரியர் : திரு மு. முத்துக் காளத்தி, எம்.ஏ.**
**வெளியீடு: பாரி நிலையம்,**
**184, பிராட்வே,**
**சென்னை-1.**
**விலை: ரூ.8.25 பக்கங்கள்: 136**

'பிறப்பு' என்றாலே 'இறப்பும் ஒருநாள் வந்தே தீரும்! இது இயற்கையின் நியதி! சாகப்போகிறோம் என்பதற்காக, தினம் தினம் செத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. மனிதனாகப் பிறந்தவர்கள் அத்தனைப்பேரும் என்றைக்கோ ஒருநாள் மறைவு எய்யத்தான் போகிறார்கள். மனிதன் நோய் நொடி இன்றி வாழ வேண்டும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

நோய் வருவதற்கு முன்னரே நோய் வராதபடி நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டும். நோய் வந்த பின் கண்ணீர் சிந்தி பலன் இல்லை.

திரு மு. முத்துக்காளத்தி எழுதிய ''வாழ்நாளை வளர்ப்பது எப்படி?'' என்ற நூலைப் படித்தால் அது, நோயற்று மனிதன் எப்படி வாழமுடியும் என்பதை உணர்த்தும் நூலாக விளங்குகிறது. மருத்துவ முறையில் துணிச்சலான முயற்சியை ஆசிரியர் மேற்கொண்டிருக்கிறார். அவரது முயற்சி வீண்போகவில்லை. இந்த நூலைப் படித்தாலே போதும். நம் பக்கம்



### 12 ஆண்டுகளில் 57 ஆராய்ச்சி நூல்கள்

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது பேரறிஞர் அண்ணா அவர்களால் அமைக்கப்பட்ட 'உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்' கடந்த 12 ஆண்டுகளில் 57 சிறந்த ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டுள்ளது. இந்நிறுவனத்தின் நூல்கள் ஆண்டொன்றுக்கு 2 இலட்ச ரூபாய்க்கு விற்பனையாகின்றன.

எந்த நோயும் நிச்சயம் அண்டப் பயப்படும் என்று கூறலாம். அந்த அளவுக்கு நோயையும் சொல்லி, அதை எப்படித் தவிர்ப்பது என்பதையும் கூறி, தெளிவு படுத்தியிருக்கிறார் நூலாசிரியர்.

**ஜி. ஆனந்தன்**

## சுவையான பலகாரங்கள் தயாரிப்பது எப்படி ?

**ஆசிரியர் : செல்வி**
**வெளியீடு: இலக்குமி நிலையம்**
**10, காசிம் சாகிப் தெரு, இராயப்பேட்டை**
**சென்னை-600 014.**

எவ்வளவுதான் செலவு செய்து பண்டம், பலகாரம் செய்தாலும், அவை வாய்க்கு ருசியாக இருக்க வேண்டுவது மிகவும் முக்கியம் அல்லவா?

படித்த பெண்களுக்குப் பலகாரங்கள் செய்வது என்பது சற்றுக் கடினமான காரியம்தான் என்றாலும், பழகப் பழக எல்லாம் கைவந்த கலையாக மாறி விடும் எனலாம். சிறு வயதுமுதற்கொண்டே தாயுடன் சமையல் கலையைக் கற்றுக் கொள்பவர்களுக்கு இந்தக் கவலை இல்லை.

பலகாரங்கள் தயாரிப்பது-அதுவும் சுவையான பலகாரங்கள் தயாரிப்பது எப்படி? என்ற இந்த நூல், பொதுவாகப் பெண்மணிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று துணிந்து சொல்லலாம்.

**—மருது**





## விழாவில் திறந்து வைக்கப்பெற்ற மாதர் திலகங்களின் உருவப்படங்கள்

மகளிரைப் போற்றிய பாரதியின் நினைவாக, பாரதி நூற்றாண்டு நிறைவு விழாவில் பதினோரு பெண்மணிகளின் உருவப்படங்கள் திறந்து வைக்கப்பெற்றன. இந்திய நாட்டில் தலைமைப் பதவிகள் வகித்த அந்தப் பெண்மணிகளின் படத்தை மைய அரசின் மாண்புமிகு கல்வி அமைச்சர் திருமதி ஷீலா கௌல் திறந்துவைத்தார். படங்களில் இடம் பெற்ற மாதர் திலகங்கள் விவரம்:

தில்லையாடி வள்ளியம்மை

நாகம்மையார்

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

சரோஜினி நாயுடு

ராஜகுமாரி அமிர்த கௌர்

டாக்டர் தர்மாம்பாள்

துர்காபாய் தேஷ்முக்

கமலாதேவி சட்டோபாத்யாயா

சுசேதா கிருபளானி

கிளப்வாலா ஜாதவ்

வை. மு. கோதைநாயகி

## திறந்து வைக்கப்பெற்ற வேறு படங்கள்

மகாகவி பாரதியார் அவர்களின் திரு உருவப்படத்தை திருமதி சத்தியவாணிமுத்து எம்.பி. திறந்து வைத்தார்.

பாரதியார் விழாவையொட்டி நிறைவேற்றப்பட்ட திட்டங்களை விளக்கும் தமிழ்நாடு படத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் திறந்து வைத்தார்.



திருமதி சத்தியவாணிமுத்து, எம். பி. பாரதி படத்தைத் திறந்து வைத்தார்.

●

திருமதி மரகதம் சந்திரசேகர், எம்.பி. பாரதி கண்காட்சியைத் திறந்து வைத்தார்.





மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்ற பட்டி மன்ற நிகழ்ச்சி.





பல்வேறு மாநிலத்தவர்கள் நடத்திய கலை நிகழ்ச்சி







மேதகு தமிழக ஆளுநர்,



மேதகு பீகார் ஆளுநர்,





மாண்புமிகு இந்திய அமைச்சர்களுக்கு
மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்குதல்.





நெடுங்காலமாகப் பாரதியின் பெருமையைத் தமிழகத்தில் எடுத்துச் சொல்லி வந்த பல்வேறு துறையினர், மாண்புமிகு முதல்வர் அவர்களால் பாராட்டுப்பெற்றனர்.

சிலம்புச் செல்வர் திரு. ம.பொ.சி.
திரு சுத்தானந்த பாரதியார்
திரு பெ.தூரன்
திரு சோமயாஜுலு
திரு பெ. நா. அப்புசாமி
திரு ஏ.கே.செட்டியார்
திரு அ.வெ.ரா.கிருஷ்ணசாமி ரெட்டியார்
திரு ஆர்யா
திரு கவிஞர் ஆறுமுகனார்.
திரு நாரண துரைக்கண்ணன்
திரு எஸ்.வி.சகஸ்ரநாமம்
திரு நா.மகாலிங்கம்
ஏவி.எம். நிறுவனத்தார்
திரு ரா. அ. பத்மநாபன்
திருமதி டி.கே.பட்டம்மாள்
திரு டி.என். இராமச்சந்திரன்
திரு சீனி விசுவநாதன்

## பாரதி புகழ் பரப்பிப் பாராட்டுப் பெற்றவர்கள்









பாரதியின் குடும்பத்தவரை மாண்புமிகு முதல்வர் பாராட்டுதல்.







இசை நிகழ்ச்சிகள்











நாட்டிய நிகழ்ச்சிகள்

# புது வரலாறு படைத்த மகளிர் பேரணி

பாரதியாரின் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி சென்னையில் நடைபெற்ற ''மகளிர் பேரணி'' புதிய வரலாற்றைப் படைத்துவிட்டது!

சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் பிரம்மாண்டமான முறையில் அமைக்கப்பட்டிருந்த அலங்கார மேடையில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் 'மகளிர் பேரணி' யைக் கண்டு களித்தார்கள்.

பாரதியார் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி 16.12.82 அன்று மாலை 4 மணி அளவில் சென்னை எழும்பூர் இராசரத்தினம் விளையாட்டு அரங்கிலிருந்து 'மகளிர் பேரணி' புறப்பட்டது. முழுக்க முழுக்க மகளிரே பங்குபெற்ற இந்தப் பேரணி பென்னிசாலை, பிறகு அண்ணாசாலை, நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம் ஆகிய நெடுஞ் சாலைகள் வழியாக ''வள்ளுவர் கோட்டத்''திற்கு மாலை வந்தடைந்தது. மகளிர் பேரணி சென்ற பாதைகளின் இருபுறங்களிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் 'மகளிர் பேரணி'யின் எழுச்சியைக் கண்டு வியப்புற்றனர்.

ஆடவர்களுக்கு நாங்கள் எந்த வகையில் சளைத்தவர்கள்? என்று கேள்வி கேட்பது போன்ற உணர்ச்சியும் எழுச்சியும் மகளிர் பேரணியில் இருந்ததைக் காண முடிந்தது.

**இசை முழக்கம்!**

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள், சத்துணவுத் திட்ட உயர் மட்டக் குழு உறுப்பினர் செல்வி ஜெயலலிதா, குடிசை மாற்று வாரியத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத், கோழி அபிவிருத்திக் கழகத் தலைவர் திருமதி கல்யாணி ராமசாமி ஆகியோர் பேரணியில் முன்நின்று வர, மகளிர் அணி தொடர்ந்தது.

அதைத் தொடர்ந்து பாரதியார் சிலை அமைக்கப்பட்ட அலங்கார ஊர்தியில் மகளிர் நாதசுரக் குழுவினர் நாதஸ்வர இசை முழங்கி வந்தனர். இதனைத் தொடர்ந்து டெல்லியில் ஆசிய விளையாட்டுப் போட்டியில் நடைபெற்ற கலைஞர்களின் கரக ஆட்டம், காவடி ஆட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம் ஆகியவை இடம் பெற்றிருந்தன, பிறகு, ''இந்திய அரசுப் பணி, காவல் பணி'' என்ற பதாகை ஏந்தியவாறு, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கரியாலி, சமூக நலத்துறை இயக்குநர் திருமதி யாஸ்மின் அகமது ஆகியோர் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து மாவட்டத்திலுள்ள மகளிர் ஆட்சித் தலைவர்கள் மாநிலம் முழுவதிலும் பல்வேறு துறைகளில் பணிபுரியும் ''ஐ.ஏ.எஸ்.,'' ''ஐ.பி.எஸ்'' அலுவலர்கள் சென்றனர்.

அலங்கார வண்டியில் பாரதியாரின் பேத்தி திருமதி லலிதா பாரதி, உழைக்கும் மகளிர் சங்கத் தலைவர் திருமதி ஜெயா அருணாசலம், சமூலநலத்துறை தலைவி சரோஜினி வரதப்பன், திருமதி அலமேலு அப்பாத்துரை ஆகியோர் தலைமையில் பெண்கள் அணி வகுத்து வந்தனர்.

**எம்மதமும் சம்மதம்**

சென்னையிலுள்ள அனைத்துக் கல்லூரி மாணவிகள் - அனைத்து மேல்நிலைப் பள்ளி மாணவியர்கள் தங்கள் கரங்களில் மகளிர் பெருமைகளை உணர்த்தும் பாரதியாரின் பாடல்களில் குறிப்பிட்டுள்ள வாசகங்களை ஏந்தி வந்தனர். இடையிடையே ''பாரதி வாழ்க!'' என்ற வாழ்த்து முழக்கங்களையும் முழங்கினர்.






தமிழக மகளிர் பிரிவினைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி, பஞ்சாப், குஜராத், உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான், கேரளா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த மகளிர் பிரதிநிதிகள் அணிவகுத்து வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாகவும் தேசிய ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துவதாகவும் இருந்தது.

தமிழக அரசு தலைமைச் செயலக மகளிர், மருத்துவர்கள், செவிலியர்கள், தொழிற்பயிற்சி கல்லூரியைச் சேர்ந்தவர்கள், கல்லூரி - பள்ளிப்பேராசிரியர்கள், ஆசிரியர்கள், சென்னை மாநகராட்சி மகளிர் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள், சமூக நலத்துறையைச் சேர்ந்த மகளிர், என்.சி.சி. மாணவிகள், பெண் காவலர்கள் ஆகியோர் நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்டபார்வை என்று பாரதி கூறிய புதுமைப் பெண்களாக மிடுக்கு நடைபோட்டு வந்தனர்.

ஊர்வலத்தின் நடுவே, மகளிர் கரக ஆட்டக் கலைஞர்கள், காவடி ஆட்டம், கரக ஆட்டங்களை ஆடினர். பாரதியாரின் வீரம் செறிந்த பாடல்களை ஒலிபரப்பிக் கொண்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து வருமானவரி மகளிர் பிரிவினர் - அஞ்சல் அலுவலக மகளிர் பிரிவினர் அணி அணியாக வந்தனர்.

சென்னைப் பொது மருத்துவமனை முதல்வர் டாக்டர் லலிதா காமேசுவரன் மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர்சரசுவதி ஆகியோர் தலைமையில் நூற்றுக் கணக்கான டாக்டர்கள் அணி வகுத்து வந்தனர்.

மகளிர் பேரணியினர் பல வண்ண உடை அணிந்து வண்ணத்துப் பூச்சி போன்று காட்சி அளித்தனர். மகளிர் பேரணியினர் கட்டுக் குலையாமல் கடமையே கண்ணாகப் பேரணியில் வந்தது காண ஆயிரம் கண்கள் வேண்டும் என்பதுபோல் இருந்தது.

பேரணியைப் பார்ப்பதற்காக சென்னை ஆயிரம் விளக்கு மசூதி அருகே, மிக பிரம்மாண்டமான அலங்கார மேடை அமைக்கப்பட்டிருந்தது. அந்த மேடையிலிருந்து மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள், மேதகு பீகார் ஆளுநர் கித்வாய் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் சட்ட மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள், திரு இராம. வீரப்பன் அவர்கள், திரு அரங்கநாயகம் அவர்கள், திரு எஸ். இராகவானந்தம் அவர்கள், டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள், திரு எஸ்.என்.ராஜேந்திரன் அவர்கள். சட்டப் பேரவை மேலவை உறுப்பினர்கள் பார்த்து மகிழ்ந்தனர்.

அரசு அச்சகம், நர்சுகள், மருத்துவத்துறை அலுவலர்கள், தொழில்துறை, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், சென்னைப் பெருநகர் நீர்வழங்குதுறை, திட்டக்குழு, இந்து சமய அறநிலைய வாரியம், வருவாய்த்துறை, உப்புக்கழகம், குடிசை மாற்று வாரியம், விளையாட்டுக்குழு, தமிழ்நாடு அக்ரோ தொழிற்கழகம், தமிழ்நாடு கைத்தறி முன்னேற்றக்கழகம், கருவூலம் மற்றும் கணக்குகள் அலுவலகம், தமிழ்நாடு கனிமவளம், டிட்கோ, பெண் காவலர் போன்ற பல்வேறுபட்ட மகளிர் பிரிவைச் சேர்ந்தவர்களும், ஊர்காவல் பிரிவினரும் அணிவகுத்து வந்தனர்.

மேதகு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் அமர்ந்திருந்த மேடையினைக் கடந்தபோது ஊர்வலத்தினர் கரம்கூப்பி வணங்கினர் - பதிலுக்கு மேடையில் இருந்தவர்களும் வணங்கினார்கள்.

இதுபோன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க 'மகளிர் பேரணி' ஓர் இடத்தைக் கடக்க $1\frac{1}{2}$ மணி நேரம் பிடித்தது. புதிய வரலாற்றைப் படைத்த இந்த மகளிர் பேரணி தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்துவதாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

முன்பக்க அட்டையில் :

மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா

பின்பக்க அட்டையில் :

பாரதி விழாவில் மகளிர் பேரணி

நிகழ்ச்சித் தொகுப்பு :

ஜி. ஆனந்தன்.



## செந்தமிழ்க் கவிஞனுக்கு தாய்க்குலத்தின் பாராட்டுகள்

பாரதி இந்திய நாட்டின் தவப்புதல்வர்களில் ஒருவர். அவர் என்றென்றும் நினைக்கப்பட வேண்டியவர்.

திருமதி ஷீலா கௌல்.
—மாண்புமிகு மத்திய கல்வி அமைச்சர்

பாரதி பெண் விடுதலைபற்றி எடுத்துக் காட்டியிருக்கிறார்.

திருமதி கோமதி சீனிவாசன்
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

தமிழ்க் கவிதையில் புதிய சகாப்தம் கண்டவர் பாரதி.

—திருமதி சுலோசனா சம்பத்
குடிசை மாற்று வாரியத் தலைவர்

பெண் விடுதலை வேண்டும் என்று ஒவ்வொரு கவிதையிலும் சொன்னவர்.

—திருமதி ஜெயா அருணாசலம்
உழைக்கும் மகளிர் சங்கத்தலைவர்

பெண் இனத்திற்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, ஆக்கத்தையும் ஊக்கத்தையும் ஊட்டியவன் பாரதி.

—டாக்டர் லலிதா காமேசுவரன்
சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர்

ஸ்திரீகளுக்கு இன்னும் இருந்து வரும் கஷ்டங்களை நீக்க முயற்சி செய்வது பாரதிக்குச் செய்யும் அஞ்சலியாகும்.

—திருமதி ருக்மணி அருண்டேல்
கலாட் சேத்திரா தலைவர்

மிகச் சிறந்த கவிஞர் பாரதியை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

—திருமதி மேஜார்ஜ்
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்
தலைமைப் பொறியாளர்

புரட்சிக்காரராகத் திகழ்ந்த பெருங்கவிஞன் பாரதியின் தொண்டு, தியாகத் தொண்டாகும்.

—திருமதி தாரா செரியன்
தமிழ்நாடு சமூக கல வாரியத் தலைவர்

பாரதி ஒரு சமுத்திரம். அதில் மூழ்கி அவரது குண முத்துக்களை ஏராளமாய் எடுத்துச் செல்லலாம்.

—திருமதி சிவசங்கரி
எழுத்தாளர்

திட்டக்குழு 6 ஆண்டுகளுக்குப் போடும் திட்டங்கள்போல் 60 ஆண்டுகளுக்குத் திட்டம் போடுவதற்குரிய விஷயங்கள் பாரதியின் பாடலில் உள்ளன.

—திருமதி டி. என். அனந்தநாயகி
வழக்கறிஞர்



விடுதலை ஆவேசத்தை நாடுமுழுதும் மூட்டி விட்ட முதற்கவி பாரதி.

—திருமதி இராதா தியாகராஜன்
தியாகராசர் ஆலைத் தலைவர்

பாரதி, பெண்களுக்காக வீர முழக்கமிட்டதால்தான் இன்று பெண்கள் கல்லூரியில், நாடாளுமன்றத்தில் - மற்றும் பல துறைகளில் பங்கு பெறும் பெருமை கிடைத்துள்ளது.

—திருமதி மரகதம் சந்திரசேகர், எம்.பி.

பாரதியின் கற்பனா சக்திக்கு எட்டாதது எதுவுமே இல்லை.

—திருமதி சரோஜினி வரதப்பன்
இந்தியப் பெண்கள் சங்கத் தலைவர்

தொகுப்பு: தமிழ்ப்பித்தன்

தந்தை பெரியார் சொல்லிய சீர்திருத்தக் கருத்துக்களை, பாரதியார் வேறு முகாமிலிருந்து கூறினார்.

—திருமதி சத்தியவாணிமுத்து, எம்.பி.

பாரதியின் கவிதை நமக்குச் சிந்தனையைத் தூண்டும்; ஆவேசத்தைத் தூண்டும்; சமுதாய மாற்றத்திற்கு வழி வகுக்கும்.

—செல்வி ஜெயலலிதா
சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழு உறுப்பினர்

[16.12.'82-ல் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு நிறைவு விழாவில் ஆற்றிய உரைகளிலிருந்து.]


1.2.1983
தமிழரசு
திருநெல்வேலி மாவட்டச்
சிறப்பிதழாக
வெளிவருகிறது!






# தன்னை விளக்கும் கண் மருத்துவ நூல்

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் பதிப்பித்துள்ள 'கண்மருத்துவம்' என்னும் நூல் வெளியீட்டு விழா, 7.12.82ல் சென்னை தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலகக் கூட்ட அறையில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.அரங்கநாயகம் அவர்கள் நூலை வெளியிட்டு, நூலாசிரியர் திரு. வே.இரா. மாதவனுக்குப் பொன்னாடை போர்த்தி, உரை நிகழ்த்தினார்.

அமைச்சர் தம் உரையில் குறிப்பிட்டதாவது:

''தமிழக அரசு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் ஓலைச் சுவடிகளைப் பதிப்பிக்க ஏற்பாடு செய்ததின் காரணமாக, இதுகாறும் பத்துக்கும் மேற்பட்ட ஓலைச் சுவடிகளிலிருந்து நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. எத்தனை ஆயிரம் சுவடிகள் கிடைத்தாலும் அவற்றைப் பதிப்பிக்கும் ஆசை தமிழக அரசுக்கு இருக்கிறது. சுவடிகளைப் படித்துப் படியெடுத்துப் பதிப்பிக்கப் பயிற்சி கொடுக்கிறோம் - பயிற்சியாளர்களுக்கு உதவித் தொகையும் கொடுக்கிறோம் என்றபோது ஐந்தாறு பேர்கள்தாம் வந்தார்கள். அவர்களில் ஒருவர் இந்த நூலைப் பதிப்பித்திருக்கிறார்; இது நமது முயற்சிக்குக் கிடைத்துள்ள வெற்றி. இந்த முயற்சி தொடர்ந்து நடைபெற வேண்டும் சித்த மருத்துவர்கள் இதனைப் படித்துப் பார்த்துப் பயன்படுத்த வேண்டும்.

''மருத்துவர்களுக்குத் துணை செய்யக்கூடிய வழிகாட்டியாக இந்நூல் அமையும். கிராமங்களிலுள்ள ஏழை மக்களுக்கும், கண்களைப் பாதுகாத்துக்கொள்ளற்குரிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நூல் துணைபுரியும்''.

நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்ட கல்வித்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு செ. இராமதாஸ், இ.ஆ.ப. தமிழக அரசு மருத்துவப் பல்கலைக்கழகம் அமைக்க முயன்று வருகிறது என்றும் இந்நிலையில் இந்த நூல் வெளிவந்துள்ளது பாராட்டத்தக்கது என்றும் குறிப்பிட்டார்.

விழாத் தலைவர் மாண்புமிகு மேலவைத்தலைவர் டாக்டர் திரு ம.பொ.சிவஞானம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெற வேண்டும் என்பதிலே காரிய சாத்தியமான நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது.

''இந்த நூலைப் பார்க்கும் போது, தமிழே மருத்துவத்துறை போதனா மொழியாக வர முடியும் என்ற நம்பிக்கை உறுதியாகிறது.

''தமிழோடு இயைந்த மருத்துவ முறையை விளக்க இந்த நூல் பெரிதும் பயன்ட்டும்''.

''கண் மருத்துவத்துறையில் சித்த மருத்துவத்தை நல்ல முறையில் ஆராய்ந்து பயன்படுத்த இந்த நூல் உதவும்.

''நான் மாஸ்கோ போயிருந்த போது, அங்குள்ள ரஷ்ய டாக்டர், நோய் விளக்கத்தையும், மருந்துகளையும் ரஷ்ய மொழியிலேயே எழுதிக் கொடுத்தார்.

''நான் பாரிசுக்குப் போயிருந்த போது, அங்குள்ள டாக்டர் பிரான்சு மொழியிலேயே எழுதிக் கொடுத்தார்.

''இங்குள்ள மருத்துவர்களோ இன்னும் ஆங்கிலத்தில்தான் எழுதுகிறார்கள்.

''இதனை நான் கூறும்போது, இதனை மொழிப் பிரச்சனையாக யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது. மொழிப் பிரச்சனை வேறு - கல்விப் பிரச்சனை வேறு. தெரியாத மருத்துவ முறையைத் தெரிந்து கொள்ள, தெரிந்த மொழியில் சொல்லிக் கொடுத்தால்தானே புரியும்? எனவே இது கல்விப் பிரச்சனையே தவிர மொழிப்பிரச்சனையல்ல. இரண்டையும் ஒன்றாக்கிக் குழப்பக் கூடாது.

''தமிழிலே எல்லாம் நடக்கும் என்பதற்கு இந்தக் 'கண் மருத்துவம்' நூல் ஒரு சான்று. இதனைப் பதிப்பிப்பதில் ஏட்டின் ஒவ்வொரு பக்கத்தோடும், ஒவ்வொரு வரியோடும் ஒவ்வோர் எழுத்தோடும் போராடிப் பணி புரிந்துள்ளவர்களைப் பாராட்டுகிறேன்-வாழ்த்துகிறேன்.''

விழாத் தொடக்கத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் திரு டாக்டர் ச.வே.சுப்பிரமணியம் அனைவரையும் வரவேற்று, நிறுவனத்தின் பணிகளை விளக்கினார்.

சென்னை பேரறிஞர் அண்ணா மருத்துவ மனையில் மருத்துவராகப் பணிபுரியும் டாக்டர் ஜி. கீதா, கண்மருத்துவம் என்ற நூலை அறிமுகப்படுத்தினார்.

திருவாளர்கள் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், டாக்டர் இரா. கு. நாகு, டாக்டர் க.ப. அறவாணன், டாக்டர் இராம. குருநாதன், டாக்டர் இ. சுந்தரமூர்த்தி ஆகியோர் நிறுவன நூல்களை மதிப்பீடு செய்தார்கள்.

நூலாசிரியர் திரு வே. இரா. மாதவன் இறுதியாக, அனைவருக்கும் நன்றி கூறினார்.

—சாமி பழனியப்பன்

## பத்திரிகையில் வந்த பயனுள்ள செய்திகள்!

அன்றாடப் பத்திரிகையை அலசிப் பார்த்த போது பல அரிய செய்திகள் கிடைத்தன. அவை தான் இவை:

**நீளமான மலைக்குகை இரயில் பாதை**

நாட்டிலேயே மிகவும் நீளமான 'குகை ரயில்பாதை' மத்திய ரயில்வேயின் பம்பாய் - புனே பிரிவில் அமைக்கப்பட்டுள்ளது.

மங்கிஹில், கண்டாலா என்னும் ரயில் நிலையங்களுக்கிடையே 2 கிலோ மீட்டர் தூரத்துக்கு மேல் மலையைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ள இந்த ரயில்பாதை 1982 ஜூலையில் திறந்து வைக்கப்பட்டது. 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 3 ஆண்டுக் காலத்திற்குள் இந்த ரயில்பாதை போடப்பட்டுள்ளது.

**டெலிவிஷனைக் கண்டுபிடித்தவர்**

'டெலிவிஷனின் தந்தை' என்று அமெரிக்காவில் பிரபலமாக விளங்கியவர் ரஷிய விஞ்ஞானி விளாபடிமீர்ஸோரிகின். ஸோரிகின் ஒரு மின்சாரப் பொறியாளர். டெலிவிஷனில் புகைப்பட டியூபை முதன் முதலில் கண்டுபிடித்த இவர், அண்மையில் காலமானார்.

**உடலைச் சோதனை செய்யும் கருவிகள்**

ஈரல், சிறுநீரகம் போன்ற உறுப்புக்களைக் கூட நுட்பமான முறையில் சோதனை செய்யும் நவீனமான 'அல்ட்ரா சவுண்ட் ஸ்கானர்' கருவி சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனையில் உள்ளது. இதுபோன்ற நவீன கருவி சென்னை நகரில் முதன் முதலாக இங்குதான் வைக்கப்படுகின்றது.

இக்கருவியுடன் இணைக்கப்பட்டுள்ள மற்றொரு சாதனம் அறுவைச் சிகிச்சை எதுவும் செய்யாமலேயே உடலில் சில பகுதிகளில் உருவாகும் சீழ் மற்றும் தேவையில்லாத திரவம் ஆகியவற்றை வெளியேற்றும் திறன் கொண்டதாகும்.

**வயது 136 ஆகியும்**

சீனாவில் 136 வயதான முதியவர் ஒருவர் இப்போதுங்கூட விறகு வெட்ட அவ்வப்போது மலைகளுக்குச் செல்கிறாராம்.

'லான் பூபிங் எனப்படும் அவர், சீனாவின் தெற்குப் பகுதியில் வசிக்கிறார். 1846ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் தேதி அவர் பிறந்தார்.

அவரது தலை முடிகள் விழுந்து வழுக்கையாக உள்ளபோதும், அவருக்கு நல்ல மனதிடம், உள்ளது. சமையல் போன்ற வேலைகளையும் அவர் செய்கின்றார்.

**கற்றவர் எத்தனை பேர்?**

இந்தியாவிலேயே எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை கேரளத்தில் அதிகமாக உள்ளதாகத் தெரிய வந்துள்ளது. கேரளத்தில் படித்தவர்கள் 69.17 சதவிகிதம் பேர்.

மகாராஷ்டிரமும், தமிழ்நாடும் முறையே, இரண்டாவது மூன்றாவது இடத்தைப் பெறுகின்றன. மகாராஷ்டிரத்தில் 47.37 சதவிகிதம் பேரும், தமிழ்நாட்டில் 45.78 சதவிகிதம் பேரும் படித்தவர்கள் ஆவர். கர்நாடகம் 11-வது இடத்தைப் பெறுகிறது. கர்நாடகத்தில் படித்தவர்கள் 38.41 சதவிகிதம் பேர் உள்ளனர்.

**நிலக்கடலையிலிருந்து பிஸ்கட்**

நிலக்கடலையிலிருந்து புரதச் சத்து மிகுந்த பிஸ்கட்டுகளையும், மிட்டாய்களையும் தயாரிக்கும் முறையை மைசூரிலுள்ள மத்திய உணவுப் பொருட்கள் ஆராய்ச்சிக் கழகத்தினர் உருவாக்கியுள்ளனர்.

**இந்தியர் தொகுத்த ஆங்கில அகராதி**

இந்தியர் ஒருவர் புதிய ஆங்கில அகராதி ஒன்றைத் தொகுத்துள்ளார். அமெரிக்காவில் நியூயார்க்கில் உள்ள டைம்ஸ் புத்தக நிறுவனம் இதை வெளியிட்டுள்ளது.

அவரது பெயர் தாமஸ் எம். பாய்கடே. இவர் முன்பு டில்லி ஸ்டேட்ஸ்மென் பத்திரிகையில் பணி புரிந்தவர். தற்போது அவர் கனடாவில் உள்ளார். 'நியூயார்க் டைம்ஸ் தினசரி அகராதி' என்று அதற்குப் பெயர்

**மாணவர் பக்கம்**

## அறிவியல் பாடம் கற்போம்!

விண்வெளிக் கூடம் தன்னில்
விரிந்துள விண்மீன் கூட்டம்,
கண்களைக் கூசச் செய்யும்
கதிரவன் கதிரின் வெப்பம்,
தண்ணொளி நிலவின் சுற்றுத்
தளப்பரப் பளவு, யாவும்
நன்முறை யினிலே காண
நல "அறி வியலைக் கற்போம்!"

கடலிலே விதையை நட்டுக்
கணக்குடன் உரமும் இட்டுப்
படையுடன் சென்று நல்ல
பயன்அறுத் திடுவ தற்கும்
முடிந்திடும்; எனில் வைத்தால்
முழுப்பயன் பெறலாம்; அஃது
அடைந்திட வேண்டும் என்றால்
"அறிவியல் பாடம் கற்போம்!"

சித்தர்கள் சொல்லிச் சென்ற
சிறப்புவைத் தியங்க ளோடு,
புத்தியைச் செலவு செய்து,
போனதோர் உயிரைக் கூட
இத்தரை கொண்டு வந்து
இன்பமாய் வாழ்வ தற்கு,
வித்தெனும் மருத்து வத்து
வியன் "அறி வியலைக் கற்போம்"!

வீர. இராசேந்திரன்,
மேனிலை 2-ஆம் ஆண்டு,
அறிவியல் பிரிவு,
தூயமரியம்மை மேல்நிலைப் பள்ளி,
திண்டுக்கல்.



## அமெரிக்காவில் அயல் மாணவர்கள்

அமெரிக்கக் கல்லூரிகளிலும், பல் கலைக்கழகங்களிலும்படிக்கும் அயல் நாட்டு மாணவர்கள் தொகை 1982-ல் கூடுதலாயிற்று. இப்படிக் கூடுவது இது 8-வது ஆண்டாகும். ஆசிய மாணவர்கள் தொகையே பெரிதும் கூடியது.

அயல் நாட்டு மாணவர்கள் தொகை 3,26,299. இது மொத்த மாணவர்கள் தொகையில் 2.6 சதவீதம். அவர்கள் படித்த கல்வி நிலையங்களின் எண்ணிக்கை 2,454.

கலிஃபோர்னியா மாநிலக் கல்வி நிலையங்களிலேயேமிகக் கூடுதலாக அயல் மாணவர்கள் படித்தார்கள். அவர்கள் 51,520 பேர். அடுத்து நியூ யார்க் மாநிலம்: 28,222 பேர். டெக்ஸாஸ்: 24,397; ஃபிளோரிடா: 17,011; மாஸச்சூஸட்ஸ்: 15,446.

புகழ் பெற்ற கல்விநிலையங்களிலேயே பெரும்பாலோர் படித்தனர்.

ஈரான் தான் தொடர்ந்து மிகப் பெரும் தொகையில் மாணவர்களை யு.எஸ். அனுப்பி வருகிறது. ஜப்பானுக்கு 25-வது இடம். இந்தியாவுக்கு 7-வது.

ஐரோப்பிய மாணவர்கள் தொகை சற்றே கூடியது. அதாவது மொத்தம் படிக்கும் அயல் மாணவர்களில் இது 9 சத வீதத்துக்குச் சற்றுக் குறைவு. 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட மிகவும் குறைவு.



## கேள்வியும் பதிலும்

1. விமானம் மேலே ஏறுவதற்கும், இறங்குவதற்கும் உதவும் சாதனம் எது?
2. முதன் முதலில் ஹெலிகாப்டர் விமானத்தை விண்ணில் பறக்க விட்டவர் யார்?
3. ஜகனாஸ்கோப்பினுள் உள்ள தட்டானது எதனால் ஆனது?
4. எலெக்ட்ரான் எக்ஸ் கதிர் சாதனத்தை கண்டு பிடித்தவர் யார்?
5. உலகத்தின் மிகப் பெரிய கோபுரம் எது?
6. ஊதா மேல் ஒளியைக் கண்டறிந்தவர் யார்?
7. காமாக் கதிர்களின் இயல்பைக் கண்டு பிடித்தவர் யார்?
8. எலெக்ட்ரான் போன்ற துகள்கள் அலைகள் போலச் செயல்படுகிறது எனக் கூறியவர் யார்?
9. Canal rays எனப்படும் புழைக் கதிர்களை கண்டு பிடித்தவர் யார்?
10. ரேடாரை முதன் முதலில் வெற்றிகரமாக இயக்கியவர் யார்?

விடைகள்

1. எலிவேட்டர்
2. பிரிகேட் என்ற விஞ்ஞானி
3. மைக்கா அல்லது அபிரகம்
4. டாக்டர் ரஸ்ஸெல் எச். மார்க்கன்
5. டோக்கியோ கோபுரம்
6. ஜான் வில்ஹெம் ரிட்டர்
7. ஹென்றி பேக்குரல்
8. பிரைம் லாயி டிப்ராக்ஸி
9. கோல்ட் ஸ்டீன்
10. எட்வர்ட் ஆப்பிள்டன்

# தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் ஆக்கப் பணிகள்!

- ஆழ்கடல் மீன் பிடிப்பு
- அண்மைக்கடல் மீன் பிடிப்பு
- நீர்த்தேக்கங்களில் மீன் வளர்ச்சியும், பிடிப்பும்
- தரமான மீன்குஞ்சுகள் உற்பத்தி
- உள்நாட்டு மற்றும் கடல் மீன் விற்பனை
- பனிக்கட்டி உற்பத்தி
- உறைய வைத்தல் மற்றும் குளிர்பதன வசதிகள்
- மீன்தூள் உற்பத்தியும் விற்பனையும்
- மீனவர்களுக்குத் தேவையான டீசல் விற்பனை.

**தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்**
15, அசோக் நகர் மெயின் ரோடு,
சென்னை 600 024




DIPR-2545-82/AW

ADWAVE/TNFDC//2189






ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

பதிவு எண். M. 8676

Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு

1-1-1983



# தமிழரசு

16.1.1983 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2014

துந்துபி - தை 3



# முதலமைச்சர் பதக்கம் வழங்கும் விழா

## சென்னை 27-12-1982





# பொங்கல் புது நாள்!

பேரறிஞர் அண்ணா

உலக நாடுகள் பலவற்றின் தலைநகரங்களை ஒருமுறைக்கு மும்முறை கண்டு வந்தேன். அங்கு எங்கும் விழாக்கள் பலப்பல நடத்தப்படினும் தமிழகத்தின் பொங்கற் புதுநாள் போன்றதோர் பொன் விழா இல்லை, நிச்சயமாக இல்லை. கோலாகல விழாக்கள் உள்ளன; பரபரப்பூட்டும் விழாக்கள் நடத்தப்படுகின்றன; கேளிக்கைகள், மதுபான விருந்துகள் மிகுதியாக எனினும் ஆர்ப்பரிப்பின்றி ஆனால் அகமகிழ்ச்சியுடன், போலிப் பூச்சுகளின்றி ஆனால் புதியதோர் பொலிவுடன், வீட்டில் உள்ள அனைவரும் கலந்துரையாடி மகிழ்ந்திருக்கும் நமது பொங்கற் புதுநாளுக்கு ஒப்பான விழா அங்கு எங்கும் இல்லை.

நாட்டியக் கூடங்களிலே அமளி! பாதைகளிலே புதுவேகம். மோதல். உயிர்ச்சேதம். அங்காடிகளிலே ஆரவாரம்! இவைகள் ஏராளமான அளவு! ஆனால் இங்கு வீடுதோறும் எழுகிறதே, முதியவரும் மூதாட்டியும், இளைஞரும் இளநங்கையும், சிறாரும் சிறுமியரும் கலந்து எழுப்பும் ''பொங்கலோ! பொங்கல்!'' என்ற இசை; அது அங்கு எங்கும் இல்லை. இருந்திடத் தக்கவிதமான சமூக அமைப்பே இல்லை!

வேறெல்லா விழாக்களும், ''போகும் இடத்திற்காக''! பொங்கற் புதுநாள் இருக்கும் இடத்திற்காக!

தமிழரின் தனிச் சிறப்பினை அறிந்திடப் பயன்படும் நமது இலக்கியச் செல்வத்தை நினைவிற்கொள்ளவும், மற்றையோர்க்கு எடுத்துக் கூறவும் பொங்கற் புதுநாள் ஏற்றது என்பதாலேயே பெரியோர்கள் இதனைத் ''தமிழர் திருநாள்'' என்றழைக்கின்றனர்.

பழம் பெருமை பேசி, பெருமூச்செறிந்து கொண்டே செயலற்று இருப்பதல்ல நமது குறிக்கோள். செயலினால் பெற்றிடும் செழுமையை எடுத்துக் காட்டிடும் நன்னாளாம் பொங்கற் புது நாளில், செயலார்வம் மிகுந்திடுவது இயல்பு. செயலும் செம்மையானதாக அமைந்திட வேண்டும். பயனும் சமூகம் முழுவதற்கும் கிடைத்திடத் தக்க முறை கண்டாக வேண்டும். வெள்ளம் அழித்திடும்! வாய்க்கால் வளமூட்டும். செல்வம் சிலரிடம் சென்று குவிந்திடுவது-வெள்ளத்துக்கு ஒப்பானது. அது கொண்டவனையும் அழித்திடும், சமூகத்தில் வலிவற்றோரையும் அழித்திடும். எனவேதான் — சிந்தனையாளர், ''செல்வம் பெருக்கிட வேண்டும். அஃது முடக்கப்படாமல் சமூகம் முழுவதற்கும் பயன் அளிக்கக்கூடிய வழிமுறை கண்டாக வேண்டும்' என்று எடுத்துக் கூறினார்.

தமிழர் திருநாளாம் பொங்கற் புதுநாள் தனித்தன்மை பெற்றது.

உழைப்பே செல்வம்,<br>
உழைப்பே உயர்வு<br>
உழைப்பின்றி உலகு இல்லை.

என்பன போன்ற நற்கருத்துக்களைத் தருவதாக அமைந்திருக்கின்றது.

சீமான் மகன் கொண்டாடும் விழா அல்ல பொங்கற் புதுநாள்! சமூகத்தின் கோணல்களை நிமிர்த்தியாக வேண்டும் என்ற குறிக்கோள் கொண்டவர்க்கென்றே அமைந்துள்ள விழாவாகும்!

(1969-ல் 'தம்பிக்கு' எழுதிய கடிதத்திலிருந்து)


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2014

துந்துபி — தை 3

மலர்: 13 இதழ்: 14

16-1-1983


## பொங்கல் வாழ்த்து

அன்பு நெஞ்சங்களே!....

வணக்கம்.

பொங்கற் புதுநாளில் தமிழரசு வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும், தமிழ்ப்பெருமக்களுக்கும் பொங்கல் வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.



# பண்பாட்டோடு இணைந்த கல்வி தேவை!

## – மாண்புமிகு முதல்வர்

நினக்கெனத் தனி வரலாறு ணண்ட இச் சென்னை மாநகரில் அதன் தனிச்சிறப்புக்கு இங்கு நடைபெறும் வயது வந்தோர் கல்வி ஆய்வு அரங்க மாநாடு அமையும் எனக் குறிப்பிட விரும்புகிறேன்.

உலகெங்கிலுமுள்ள கல்வி வல்லுநர்கள் இங்கு பங்கு பெறுகிறார்கள் என்பதை எண்ணி எண்ணி மகிழ்கிறேன். இதற்குத் தனிப்பட்ட முறையிலும்-அமைச்சரவையின் சார்பிலும் தமிழக மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு நடைபெறும் இநத மாநாடு தமிழகத்துக்குத் தனிச் சிறப்பை வழங்கும் வகையில் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் இங்கு வந்திருப்பதை எண்ணிப் பார்க்கும்போது, தமிழகத்தைப் பெரிதாக மதிக்கிறீர்கள் என்று நான் கருத வேண்டியுள்ளது.

வயதுவந்தோர் கல்வி, அறிவு தரும் பணியாகும்; மற்றவர்களுக்கு வழிகாட்டி இருக்கும் நீங்கள் எடுக்கவிருக்கும் முடிவுகள்-தரப்படும் கருத்துகள் - மக்களை வாழவைக்கப் போகிறது என்பதை எண்ணிப் பெருமகிழ்வு கொள்கிறேன்.

படிப்பறிவு இந்தியத் துணைக கண்டத்தைப் பொறுத்த அளவில் 31 சதவிகிதம் என்றும், தமிழகத்தைப் பொறுத்த அளவில் 46 சதவிகிதம் என்றும் இருப்பதிலிருந்து உண்மையைப் புரிந்து கொள்ள உதவும் என்று கருதுகிறேன். ஆனால் நாங்கள்பொறுப் பேற்ற பிறகு படியாதவர் தொகை குறைகிறது என்பதுடன் வயதுவந்தோர் கல்வி அதிகரிக்கப்பட்டு ரூப்ஸ்கயா பரிசு பெறும் அளவுக்கு எங்கள் கடமைகளை ஆற்றியிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

பால் மாக்கி அவர்கள் குறிப்பிடும்போது, ஜனநாயகம் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். ஜனநாயகம் என்பதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

அமரர் நேரு அவர்கள், வயது வந்தோர் அத்தனை பேருக்கும் வாக்குரிமை என்று சொன்னார். எந்த அடிப்படையில் சொன்னார் என்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

கல்வி எந்த அளவுக்குத் தேவையோ அதைப்போல ஒரு மனிதனுக்கு அனுபவம் தேவைப் படுகிறது. அனுபவத்துக்கு ஈடாக வேறு எதுவும் கிடையாது. மகாத்மா காந்தி ஆதாரக்கல்வி வேண்டும் என்று சொல்லியதை மனத்தில் எண்ணிப்பார்க்க வேண்டும். அடிப்படைக்கல்வி உணர்வு கொள்ளவேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார் என்றுதான் நாம் கருத வேண்டும்.

தமிழக அரசைப் பொறுத்த அளவில் நாங்கள் எங்கள் தலைவரென மதிக்கும் அமரர் அண்ணா அவர்கள் சொல்லிய கருத்துக்களை மறக்கவில்லை; அவர் சொல்லிய வழியில் செல்கிறோம். அனுபவத்தைச் சரிவரச் செயல் படுத்த வேண்டுமென்றால் கல்வி வேண்டும் என்பது அவர் கொள்கை.

அந்த வகையில் நாங்கள் 11 ஆயிரம் பள்ளிகளுக்கு முதியவர்களை அனுப்புகிறோம் என்று சொல்வதில் பெருமையடைகிறோம். ஏறத்தாழ 3 லட்சத்து 60 ஆயிரம் முதியோர் கல்வி கற்கின்றனர். இந்த 3 லட்சத்து 60 ஆயிரம் பேர் கற்றுக் கொள்ள மாலை நேரத்தை எடுத்துக் கொள்கிறார்கள் என்பது எங்களுக்குத் திருப்தியைத் தருகிறது என்றாலும் சில அடிப்படை மாறுதல்களைச் செய்ய விரும்புகிறோம்.

எழுத்தை, எண்ணைக் கற்றுக் கொடுத்து அவற்றின் மூலம் அனுபவம் கொடுக்க காலம் அதிகமாகிவிடுகிறது. அந்த வகையில் புதிய கல்வி முறையை அறிமுகப் படுத்த ஆவல் உள்ளவர்களாக இருக்கிறோம். அதற்கு உங்களின் யோசனைகள் புதிய திட்டங்களாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் பல ஜாதி, மதம் உள்ளன. எல்லோரும் ஒன்று என்று பாரதியார் சொல்லியதை இந்த நேரத்தில் நினைவு படுத்த வேண்டியவனாக இருக்கிறேன். குறிப்பாக. தமிழ்நாடு, பொதுவாக எந்த அளவு ஒற்றுமையுடன் வாழ முடியுமோ அந்த அளவு ஒற்றுமையுடன் நடந்து வருகிறோம் என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்ளவிரும்புகிறேன். இதற்கு அடிப்படையாக பல்லாயிரக்





நெஞ்சிலே முள் தைத்தால் கூட அது குழந்தையின் நகமாக இருந்தால் அந்தக் காயம் பட்ட இடத்தில் வலியேற்படுவதில்லை, சிரித்துக் கொண்டிருப்போம்.

சமூகம் என்று வரும்போது அது பரவலாக இருக்க வேண்டும்; அனைத்துப் பிரிவிலே வாழும் மக்களுக்கும் அது வழிகாட்டுவதாக இருக்கவேண்டும். அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வதாக இருக்கவேண்டும்.

கர்ணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்துள்ள பண்பாடுதான் காரணம் ஆகும்.

பண்பாடு இன்றி, கல்வி மட்டும் ஒருவரை நல்லவராக்க முடியாது. ஆகவே கல்வி, பண்பாட்டோடு அமைய வேண்டும். அப்படி இருக்கும் போதுதான் உங்களது போக்கு எங்களின் வரவேற்புக்கு ஒத்துக் கொள்ளும் நிலை உருவாகியுள்ளது என்பதை இங்கு சொல்லிக் கொள்கிறேன். உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்களைப் போலப் பண்பாடு இருக்கிறது. அதன் அடிப்படையில் தோன்றும் நோக்கங்கள் மக்களுக்கு நல்வாழ்வு கொடுக்க வேண்டும் என்ற நேரடி உணர்வு

அத்தனையும் நம்மை ஒற்றுமைப் படுத்தியிருக்கிறது. இதற்கு அடிப்படை - குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல், வயதுவந்தோர் அறிவு பெறுவதற்கு நீங்கள் முயற்சி செய்வது, இன்று பலருக்கும் புரியாவிட்டாலும், எதிர் காலத்தில் இதைப் புரிந்து கொள்ளும் நிலை உருவாகும் என்று நம்புகிறேன். இதைக் கூறுவதில் நல்ல அனுபவம் எனக்கே இருக்கிறது.

நான் ஒரு கிராமத்துக்குச் சென்றபோது அங்கு முதியோர் ஒருவரைச் சந்தித்து - ''நீங்கள் ஏன் முதியோர் பள்ளிக்குச் செல்லவில்லை'' என்று கேட்டேன்.

''இனிமேல் பள்ளிக்குச் சென்று என்ன பயன் எனக்கு'' என்று கேட்டார் அவர்.

''வயது வந்தோர் இனிமேல் கல்வி கற்று என்ன செய்யப் போகின்றனர்'' என்று கேட்பவர்களும் உள்ளனர்.

முதியவர்கள் ஓர் அகராதி என்பதை அவர்கள் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். முதியவர்கள் தரும் பதில் அகராதிகளில் கூடக் காண முடிவதில்லை.

நான் அமெரிக்கச் சுற்றுப் பயணத்தை மேற் கொண்டிருந்த போது இரண்டொரு நாட்கள நைரோபியில் தங்கும் வாய்ப்புப் பெற்றேன்.

மகாத்மா காந்தியை நைரோபி மக்கள் மதிக்கிறார்கள். ஒவ்வொருவரும் அவரைப் பாராட்டுகிறார்கள். கறுப்பர் எனப்படும் அவர்களுக்கு விடுதலை வாங்கித் தந்தார் அவர் என்ற உணர்வைப் பெற்றிருப்பதாகச் சொன்னார்கள்.

அமெரிக்கா சென்று பார்த்த போது வெள்ளையர்களும் கறுப்பர்களும் அங்கு ஒற்றுமையாக வாழ்ந்து வருவதைக் கவனித்தேன். முதியவர்கள் எல்லாம் கடவுள் போல எண்ணி வணங்கப்படுகிறார்கள். அதுபோன்ற உணர்வுகளை முதியவர்கள் பெற்றிருந்தாலும் கூட அதை அவர்கள் வெளியில் சொல்ல - எழுதிக் காட்ட நீங்கள் எல்லாம் பணி புரிகிறீர்கள் என்பதை நான் நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். ஜனநாயகம் காப்பாற்றப்பட பண்பாட்டை - கல்வியை - ஒற்றுமையை - முதியோர்களுக்குக் காட்ட ஒட்டுமொத்தமாக உலாவரச் செய்யும் முயற்சி தேவை.

(14-12-82ல் வயது வந்தோர் கல்வி கருத்தரங்கில் ஆற்றிய உரையிலிருந்து)

இந்த இதழுடன் இலவச இணைப்பு

1983-ஆம் ஆண்டு நாட்காட்டி



# பத்திரிகையாளர்களின் நண்பன் - தமிழக அரசு

சென்னை செய்தியாளர் சங்கத்தின் வெள்ளிவிழாவில் கலந்து கொள்கின்ற ஒரு மிகச் சிறந்த வாய்ப்பை அளித்திருக்கின்ற இந்தச் சங்கத்தின் நிர்வாகிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் முதலில் எனது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்! இந்தச் சங்கத்திலே எத்தனை பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்ற கணக்கைவிட, இவர்கள் ஆற்றுகிற பணியின் மூலம் இந்த நாட்டு மக்களுக்கு எத்தகைய சேவையைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் கணக்கிலே எடுத்துக் கொள்ளக்கூடிய செய்தியாகும்.

இன்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகள் இதைக் கட்டிக்காத்து, இந்த வெள்ளிவிழாவை கொண்டாடுகிறவர்களை நான் இந்த நாட்டின் சார்பாக, குறிப்பாகத் தமிழக மக்களின் சார்பிலும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் சார்பாகவும் வாழ்த்தவும் பாராட்டவும் நன்றி தெரிவிக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன். 25 ஆண்டுகள் இது போன்ற சங்கங்களை உருவாக்கி நடத்துவது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல.

இந்தச் சங்கத்தினுடைய விழாவில் கலந்து கொண்டு இதிலே வந்து உரையாற்றிய நமது மதிப்பிற்குரிய அமரர் பண்டிதநேரு அவர்கள் உரையாற்றியதையும், பிறகு பெருந்தலைவர் காமராஜர், முன்னாள் முதல்வர் திரு. பக்தவச்சலம், அமரர் பேரறிஞர் அண்ணா போன்றவர்களெல்லாம் இந்தச் சங்கத்தில் கலந்து கொண்டு கருத்துகளை வழங்கியிருக்கிற சூழ்நிலைகளையும் எண்ணுகிற நேரத்தில், அதனுடைய 25-வது ஆண்டு விழாவிலே இந்த தகுதி அளவுக்கு அருகில் கூட வரமுடியாத என்னைக் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைத்த நண்பர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால்-அவர்கள் என்னை அழைத்திருக்கிறார்கள் என்பதைவிட தமிழக முதல்வர் அவர்களை இங்கே அழைத்திருக்கிறார்கள் என்றுதான் கருதுகிறேன்.

முதல்வர் அவர்கள் வருகிற இடத்திலே அவர்கள் வர இயலாமல் போன சூழ்நிலையில் அவருக்குச் செய்தியைச் சொல்லுகிற அந்தத் தொண்டனாக இருக்கிற என்னை அவர்கள் அழைத்திருக்கிறார்கள் என்று நான் எடுத்துக் கொள்கிறேன்.

இந்தச் சங்கத்தின் நிகழ்ச்சிகளில் இதற்கு முன்னாலும் கலந்து கொண்டிருக்கிறேன். இவர்கள் முதல் முயற்சியாக இந்தச் சங்கத்தினுடைய உறுப்பினர்களுக்கு 'ஆயுள் காப்பு உறுதி' வழங்குகிற ஒரு நிகழ்ச்சியிலேயும் கலந்து கொள்கிற வாய்ப்பை அன்றைக்குப் பெற்றேன். அதைப்போல இந்தச் சங்க உறுப்பினர்களுக்கு மருத்துவ வசதியை அளிப்பதற்கான திட்டத்தை உருவாக்கி, அதை நமது அருமை நண்பர் ராயல் என்பீல்டு கம்பெனி நிர்வாக இயக்குநர் அவர்கள் இங்கே நன்கொடையாக அந்த 'பிரிமியத் தொகை'யை அளித்து அந்த பாலிசிகளை வழங்குகிற அந்த வாய்ப்பினையும் இந்த வெள்ளிவிழாவில் செய்தியாளர் சங்கத்தின் நிர்வாகிகள் அளித்திருக்கிறார்கள். அதை மிகப் பெருமையாக நான் கருதுகிறேன்.

இந்தச் சங்கத்தின் கோரிக்கையைப் பொறுத்தவரை ஏற்கனவே இச் சங்கத்திற்கென்று கட்டடம் கட்டுவதற்காக இடம் ஒதுக்கப்பட்டிருக்கிற செய்தியை நம்முடைய நிருபர்கள் சங்கத்தலைவர் வரவேற்புரையில் தெரிவித்திருக்கிறார்கள். தினசரி சந்தித்துக் கொண்டிருக்கிற நமது செய்தியாளர்கள் இந்தக் கருத்தை முன்னமே சொல்லியிருக்கலாம். சொல்லியிருந்தால் இதற்குள் இந்நேரம் அந்த இடமே அவர்களுக்கு வந்து இருக்கும்.

ஆகவே அப்படி அரசு ஆணை பிறப்பித்து இடம் ஒதுக்கப்பட்டிருக்குமேயானால் அது விரைவிலேயே உங்களுக்கு எந்தத் தடையும் இல்லாமல் கிடைப்பதற்கு தமிழக அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தமிழக முதல்வர் சார்பிலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதைப்போலவே இந்தச் சங்கத்தை நடத்துவதற்கு வேறு எந்த உதவிகள் அரசாங்கத்திடம் இருந்து வரவேண்டும் என்று விரும்பினாலும் அதை அரசாங்கம் செய்து தரும். அதை மீண்டும் இந்த நேரத்திலே அவர்களுக்கு நினைவுபடுத்த மட்டுமே நான் விரும்புகிறேன். ஆதலால் தான், இன்றைக்கு விவாதத்திற்குள்ள பிரச்சனையாக இருக்கிற இந்தச் சட்டத்திருத்தம் 292(ஏ) இருக்கிறதே அதைப்பற்றிக் கூட மாண்புமிகு மத்திய செய்தித்துறை அமைச்சர் குறிப்பிட்டு இது ஒரிசாவில் நிறைவேற்றியபோது எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. தமிழகத்தில் நிறைவேற்றியபோது எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இப்போது பீகாரில் நிறைவேற்றியபோது எதிர்ப்பு தெரிவிக்கிறார்களே என்று ஆச்சரியப்பட்டார். நான் மத்திய அமைச்சர் அவர்களுக்கு அன்போடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக அரசின் மீது அவ்வளவு நம்பிக்கை நமது செய்தியாளர்களுக்கு - பத்திரிகையாளர்களுக்கு இருக்கிறது.

அதனால்தான் 20 ஆண்டுகளுக்கு மேலாக நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டத் திருத்தத்தைப் பற்றியோ சட்டத்தைப் பற்றியோ, அவர்கள் கவலைப்படாமல் இருந்தார்கள் என்றால், தமிழக அரசு கையிலே ஒரு ஆயுதத்தை எடுத்துக் கொள்கிறது என்றால், அது தற்காப்பிற்காக எடுத்துக் கொள்கிறதே தவிர, மற்றவர்களைத் தாக்க அல்ல. அதிலும் குறிப்பாக மிகவும் அன்பிற்குரிய பத்திரிகையாளர்களைத் தாக்குவதற்கு அல்ல என்ற நம்பிக்கையை நம்முடைய பத்திரிகையாளர்களுக்கு உருவாக்குகிற அடிப்படையை தமிழக அரசு, இன்றைக்கு மட்டுமல்ல அன்றைக்கு இருக்கிற அரசு ஏற்படுத்தியது என்பதினால் தான் 292(ஏ) திருத்தம் கொண்டுவந்தபோதும் யாரும் அதைப்பற்றி அஞ்சவில்லை - கவலைப் படவில்லை.

தண்டனையைக் கடுமையாக்கி அந்தத் தண்டனையை உயர்த்திய காரணத்தினாலே தான் ( Non-bailable ) திருத்தத்தை. மாற்றிய நேரத்திலும் - இது சட்டத்தின் விளைவாலே வருகிறதே தவிர யாரையும் தண்டிக்க வரவில்லை என்ற உணர்வு நமது மாநிலத்திலுள்ள பத்திரிகையாளர்களுக்கு நிறைவாக இருந்தது, இருக்கிறது... இன்னும்

## மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர்

## திரு. இராம. வீரப்பன்

இருக்கிறது என்ற நம்பிக்கையை அரசு காப்பாற்றும் என்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

அப்படியானால் பீகார் அரசைக் குறை சொல்கிறேனோ என்று நமது மத்திய செய்தித்துறை அமைச்சர் அவர்கள் எண்ணிவிடக் கூடாது. ஒரிசா அரசு மீது கோபப் படாமல் தான் இருந்திருக்கிறார்கள். ஆகவே சூழ்நிலைக்கேற்ப இந்தச் சில பிரச்சினைகள் உருவாக்கப்படுகின்றன. அல்லது தோன்றுகிறதே தவிர அது சட்டத்தினால் மட்டும் அல்ல என்பதை நாம் உணர்ந்து கொண்டாக வேண்டும். மத்திய அமைச்சருக்குக்கூட நமது விளக்கத்தைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(Non-bailable) என்று தமிழக அரசு தானே கொண்டுவந்திருக்கிறார்கள் என்று உதாரணம் காட்டிப் பேசப்படுகிறது என்று எங்களுக்குச் செய்தி வந்திருக்கிறது. நீங்கள் ஒரு அமைப்பை-அடிப்படையை-அங்கே இருக்கிற மிகப் பெரிய வேறுபாட்டை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதே என் பணிவான வேண்டுகோள்.

தமிழகத்தைப் பொறுத்தவரை நீதியையும் நிருவாகத்தையும் ரொம்ப நாளைக்கு முன்னாலே தனியாகப் பிரித்துவிட்டோம். இங்கு யாரையாவது அதிகாரியைக் கைது செய்தால் அந்த அதிகாரியே அந்த நபரை ஜாமினில் விடமுடியாது என்பதுதான் (Non-bailable) கைது செய்யப்பட்டவர் நீதிமன்றம் போய் ஒரு மாஜிஸ்திரேட்டிடம் தன்னை ஜாமீனில் வெளிக் கொண்டுவரத் தடை விதிக்கவில்லை. அதற்குக் காரணம் நீதி வேறு, நிருவாகம் வேறு என்று பிரிக்கப் பட்டது. ஆனால் பீகார் மாநிலத்தில் அப்படி இல்லை. யார் கைது செய்கிறார்களோ அவரேதான் இன்னொரு இடத்தில் போய் மாவட்ட மாஜிஸ்திரேட்டாக இருந்துகொண்டு ஜாமீனுக்கு வரும்போது, ''இவரை விடுவதா வேண்டாமா'' என்பதில் நீதிபதியாக இந்த நிருவாகியே இருக்கிறார் என்ற மிகப்பெரிய வேறுபாட்டை அருள்கூர்ந்து அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். ஆகவே கைது செய்கிற போலீஸ் அதிகாரி அவரை உடனடியாக ஜாமீனில் விட முடியாது என்பதுதான் இன்றைக்கு இருக்கிற சட்டத்திருத்தம். அந்தச் சட்டத்திருத்தம் வந்ததற்குக் காரணம்

---

## பத்திரிகைகளின் பொறுப்பு

### திரு என். கே. பி. சால்வே

**(மாண்புமிகு இந்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர்)**




பொறுப்புள்ள பத்திரிகை தர்மத்தை வளர்க்கப் பத்திரிகையாளர்கள் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். பத்திரிகைகளின் உரிமைகள் பறிக்கப் படமாட்டாது என்பதில் அரசு சார்பில் உறுதி அளிக்கிறேன். அதே போலப் பத்திரிகைகளும் பொறுப்பில்லாமல் எழுதுவதையும், தவறான செய்திகளைப் பிரசுரிப்பதையும் நிறுத்த வேண்டும். இந்திய ஜனநாயக அமைப்பில் பத்திரிகைச் சுதந்தரம், வழங்கப்பட்ட உரிமை தான். ஆனால் பொறுப்பற்ற பத்திரிகை தர்மம் தவிர்க்கப்பட வேண்டும்

(நிருபர்கள் சங்க வெள்ளிவிழாவில்)

கூட பிறகு தண்டனையை அதிகப்படுத்தும்போது அது இயற்கையாகவே அந்தச் சட்ட விதிகளின்படி அது (Non-bailable) வந்துவிடுகிறது.

அப்படி ஏற்பட்டதே தவிர, திட்டமிட்டுச் செய்யப்பட்டது அல்ல என்பதை நான் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். இங்கேகூட நீங்கள் ஒன்றை உணர்ந்து கொள்ளவேண்டும். சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றது. அது ( Reasonable Restriction ) என்று அது இந்திய அரசின் சட்டத்திலேயே உரிமை தருகிறது. அந்தக் கருத்துச் சுதந்தரம், பேச்சுச் சுதந்தரம், பத்திரிகைச் சுதந்தரம் என்று பேசப்பட்டாலும் சுதந்தரங்கள் எல்லாம்இந்த நாட்டு மக்களுக்காகத் தான். ஒருவருக்கு எழுத்துச் சுதந்தரம் என்றால் அவருக்காக அல்ல எழுத்துச் சுதந்தரம் அவர் இந்த நாட்டு மக்களுக்காக எழுதுகிறார். அதனால் தான் இந்தச் சுதந்தரம். அவர் இந்த நாட்டு மக்களுக்காகப் பேசுகிறார். அதனால் தான் பேச்சுச் சுதந்தரம் வேண்டும். ஆகவே நாட்டு மக்கள் நன்மைக்காகப் பத்திரிகை நடத்துகிறார்; அதனால் பத்திரிகைச் சுதந்தரம் வேண்டும். அதை விட்டுவிட்டு நான் என் இஷ்டத்திற்கு எதையாவது பேசுவேன், எதையாவது எழுதுவேன் எனக்குச் சுதந்தரம் வேண்டும் என்று கேட்பதற்காகச் சில சுதந்தரங்களும் வரவில்லை. அந்த அடிப்படையில் நாமும் கேட்டுக் கொண்டிருக்கவில்லை.

அப்படிக்கேட்டால், அது எங்கே போய் நிற்கும் என்றால், ஒரு விபச்சாரி 'எனக்குச் சுதந்தரம் உண்டு; இந்த நாட்டில் விபச்சாரம் செய்யச் சுதந்தரம் வேண்டும்-ஈடுபடுவதற்கு' என்று கேட்பது போல மாறிவிடும். ஆகவே பேச்சுச் சுதந்தரம், பத்திரிகைச் சுதந்தரம், எழுத்துச் சுதந்தரம் வேண்டும் என்பதெல்லாம் யாருக்காக? இந்த நாட்டு மக்களுக்காக! இந்த நாட்டு மக்களுக்காக எழுதும் ஒரு எழுத்தாளனை - செய்தியாளரை - ஒரு பத்திரிகையாளரைத் தடுக்கக்கூடாது. எப்போது? உண்மையைச் சொல்லுகிறபோது. இந்த நாட்டு மக்களுக்கு நன்மையைத் தேடித்தரும் போது. மறைக்கப்பட்ட விவரங்களை வெளியில் கொண்டுவரும்போது - தடுக்கக் கூடாது. அதுதான் சுதந்தரம்.

நம்முடைய பண்டித நேரு அவர்கள் உரையாற்றியதிலிருந்து எடுத்துச் சொன்னார்கள். உண்மைதான்! இது வெறும் கோஷம் அல்ல, பத்திரிகைச் சுதந்தரம் என்பது இன்றைக்கு வெறும் கோஷமாக எடுத்துக் கொள்ளமுடியாது என்பதுதான் இன்றைக்குள்ள பிரச்சனை! இது வெறும் கோஷம் அல்ல. இந்த நாட்டு மக்களுடைய வாழ்வை மாற்றியமைக்கிற கோஷம்! மாற்றி அமைக்கிற பிரச்சனை.

இந்த நாட்டை நாம் எந்த அளவுக்கு உயர்த்தப்போகிறோமோ அதற்கு அடிப்படை அமைக்கிற பிரச்சினை. ஆகவேதான் இதில் வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்றைக்கு வளர்ந்து வந்திருக்கிற சூழ்நிலையில் எப்படியெல்லாம் பிரச்சினைகள் வந்துகொண்டிருக்கின்றன என்பதையும் நாம் பார்க்கிறோம். அதனால்தான் தமிழகத்தில் இந்தச் சட்டத்திருத்தம் வந்த அந்தக் காலத்திலேயும் சரி, இந்தக்காலத்திலேயும் சரி, நல்ல பத்திரிகையாளர்கள் நிரம்பியிருக்கிற தமிழகத்தில் இந்தச் சட்டத் திருத்தம், நல்ல பத்திரிகையாளர்களை ஒன்றும் செய்யாது என்ற நம்பிக்கையில் சும்மா இருந்தார்கள். இன்றைக்கும் சும்மா இருக்கிறார்கள். அப்படி ஒரு வேளை வெளியிலே சந்தேகம் ஏற்பட்டுவிட்டதே என்கிற காரணத்திலேதான் தமிழக அரசே பத்திரிகையாளர்களை எல்லாம் அழைத்து, என்ன சந்தேகம், ஏன் சந்தேகப்படுகிறீர்கள்? 'என்று கேட்பதற்காக குழு அமைத்திருக்கிறது. அதற்கும் தமிழகம்தான முன்னோடியாக இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பத்திரிகையாளர்களைப் பார்த்துப் பயப்படுகிறவர்களும் இங்கே இல்லை. அல்லது பயமுறுத்துகிற பத்திரிகையாளரும் இங்கே இல்லை. ஆனால் பத்திரிகையாளர்கள் என்ற பெயராலே இன்றைக்குச் சிலர் நுழைந்துகொண்டு அந்தப் பத்திரிக்கையாளர் கூட்டத்தில் வந்துகொண்டு பெரிய திருவிழாக் கூட்டத்தில் 2 பேர் ஏன் பிக்பாக்கெட்அடிக்க வருகிறவன்போல மிகப் பெரிய கூட்டத்திற்குள்ளே ஒரு நாலு பேர் தவறு செய்ய உள்ளே நுழைவதுபோல், இன்றைக்குப் பத்திரிகையாளர் உரிமையைப் பயன்படுத்துவதற்கு இந்தக் கூட்டத்தில் உள்ளே நுழைந்திருக்கிறார்களே அவர்களைக் கண்டுபிடிப்பதற்குத்தான் இப்படிப்பட்ட சில ஆயுதங்கள் தேவைப்படுகின்றன. சில இடங்களில் செக்போஸ்ட்வைத்திருக்கிறார்கள். அதை பல இலாக்காக்கள் நிருவகிக்கின்றன-விற்பனை வரித் துறை வைத்திருக்கிறது, வனத்துறை வைத்திருக்கிறது-சுங்க இலாகா வைத்திருக்கிறது. ஆகவே பாதையில் பயணம் செய்கிறவர்கள் எல்லாம் காரில் பயணம் செய்கிறவர்களெல்லாம் ஏன் இந்த செக்போஸ்ட்டை வைத்திருக்கிறார்கள் என்று கேட்பதில்லை. காரணம் அவர்களுக்குத் தெரியும். இது நமக்கல்ல. திருடிக்கொண்டு வருகிறவர்களுக்கு-வரி கட்டாமல் வருகிறவர்களுக்கு அல்லது வனத்துறைப் பொருளை வெட்டிக் கொண்டு வருகிறவர்களுக்கு இந்த ''செக்போஸ்ட்'' என்பது மற்றவர்களுக்கெல்லாம் தெரியும். அதனாலே செக்போஸ்ட்டைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.

அப்படி ஒருவேளை அந்த செக்போஸ்ட், சில வேளைகளில் நல்ல பயணிகளைக்கூடத் தடுத்து நிறுத்தும். தடுத்து நிறுத்தினால் நல்லவர்களாக இருப்பவர்கள் இறங்கி அந்த 'செக்'

## மருதுபாண்டியன் போக்குவரத்துக் கழகம்

**1983**-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் காரைக்குடியைத் தலைமையகமாகக் கொண்டு, மருதுபாண்டியன் போக்குவரத்துக் கழகம் அமைக்கப்படவிருக்கிறது.

தற்போதுள்ள பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, அதன்வசமுள்ள 1,219 பேருந்துகளில் 350 பேருந்துகள் புதிய போக்குவரத்துக்கழகத்திற்குக் கொடுக்கப்படும். மருதுபாண்டியன் போக்குவரத்துக் கழகம் புதுக்கோட்டை மற்றும் கிழக்கு இராமநாதபுரம் பகுதிகளில் தனது பேருந்துகளை இயக்கும். பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மதுரை மற்றும் மேற்கு இராமநாதபுரம் பகுதிகளில் இயங்கும்.



நிருபர்கள் சங்க உறுப்பினர்களுக்கு 'மருத்துவ வசதி அளிப்பதற்கான திட்டத்தை' மாண்புமிகு செய்தி–அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் துவக்கி வைத்தார்.

போஸ்ட்டில் இருக்கிறவர்களிடத்திலே "ஐயா, நாங்கள் இந்தக் காரிலே வருகிறவர்கள். இந்த ஊருக்குப் போகிறவர்கள். அந்தத் தவறைச் செய்கிறவர்களல்ல. உங்களுடைய சந்தேகம் நியாயமானது. ஆனால் நாங்கள் உங்கள் சந்தேகத்திற்குரியவர்கள் அல்ல'' என்றுசொல்லிவிட்டு அந்த செக்போஸ்ட்காரன் அந்த செக்போஸ்ட்டை எடுத்தபிறகு போகவேண்டும். அதுதான் (Reasonable Restriction) ஆனால் செக்போஸ்ட் போட்டிருக்கிறது என்று வருகிறவன், எனக்கு செக்போஸ்ட்டா? என்னுடைய பயணத்தைத் தடுக்க செக்போஸ்ட்டா? ஆகவே நான் நிறுத்தமாட்டேன். நான் தாண்டிப்போவேன். அல்லது எடுத்துக் கொண்டு போவேன் என்று நல்லவர்கள் போனாலும் அது குற்றம் தான். நல்லவர்கள் போனாலும் அது சந்தேகத்திற்கு இடமளித்துவிடும்.

ஆகவே செக்போஸ்ட் போன்று ஒன்று இருந்தால் அதை நிறுத்தி தெளிவுபடுத்திவிட்டுப் போகமுயலவேண்டுமே தவிர தாண்டிப்போக வேண்டும் என்பது அது சமுதாயத்திற்கு நல்லது அல்ல; நாட்டை வளர்ப்பதற்கும் பயன்படாது-காரணம் இரண்டு நாட்களுக்கு முன்னாலே ஒரு செய்தியைப் பார்த்தீர்கள். ஜோலார்பேட்டை ரயில்வே கேட் காவலாளியைக்கட்டிப் போட்டு, அடித்துப் போட்டு அதை மூடிவைத்துவிட்டு அந்த வழியிலுள்ள பஸ்ஸை, கார்களை அதிலே இருந்தவர்களையெல்லாம் காயப்படுத்தி, நகைகளை எல்லாம் திருடிக்கொண்டு போனார்களே அப்படித் திருடிக்கொண்டு போன நிகழ்ச்சியைப் பார்த்தபோது, சில நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தால் ''இது தவறு. இது சுதந்தரத்தில் தலையிடுவது. மனித நடமாட்டத்தையே கட்டுப்படுத்துவது'' என்று சொல்ல ஆரம்பிப்போமானால் நமக்கே எப்படிப் பாதுகாப்புக் கிடைக்கும். அந்தக் காரில் நான் இல்லை- அந்த அடி வாங்கியவர்களில் என் மனைவி இல்லை, என்பதினாலே அங்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை தவறு என்று ஆகிவிடுமா?

எனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்றால் நான் எங்கே வேண்டுமானாலும் போய் சொல்லுவேன். ஆனால் மற்றவர்களுக்கு ஏற்படுகிறபோது எடுக்கப்படுகிற பாதுகாப்பு நடவடிக்கை தவறு என்று விமர்சிக்க ஆரம்பித்தால் இந்த நாட்டிலே பாதுகாப்பு எப்படி ஏற்படுத்தமுடியும்? ஆகவேதான் (Reasonable Restriction) என்ற வார்த்தைக்கு மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது. - பொருள் இருக்கிறது.

பண்டித நேரு அவர்கள் சொன்னது போல எந்தச் சுதந்தரம் என்றாலும் அது பத்திரிகைச் சுதந்தரம் ஒன்று மாத்திரம் தனியாக வந்துவிடுவதில்லை. இந்த நாட்டில் சுதந்தரமாக வாழுவதற்காகத்தான் நாம் சுதந்தரமே பெற்று இருக்கிறோம். ஆனால் இந்த சுதந்திரம் யாருக்காக? நான் எழுத்துச் சுதந்தரம் கேட்கிறேன். என்றால் எனக்காக எழுதுகிறேன் என்றால் நான் எதைவேண்டுமானாலும் எழுதிப் பணம் சம்பாதிப்பதற்கு எனக்குச் சுதந்தரம் தராது. அந்தச் சுதந்தரம் கிடைக்காது. 'மக்களுக்கு எழுதுகிறேன், அதை, நீங்கள் தடுக்கிறீர்கள் என்றால் அதில் நியாயம் இருக்கும்; ஆகவேதான் அப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் பத்திரிகை சுதந்தரத்தைப் பற்றி - எழுத்துச் சுதந்தரத்தைப் பற்றி-பேசுகிற நேரத்திலே நம்முடைய மாநிலத்திலே இருக்கிற பத்திரிகையாளர்கள் இங்கே பெரியவர்களெல்லாம் பாராட்டியிருக்கிறார்களே அந்தத் தகுதியை நீண்ட காலமாக பெற்றுக் கொண்டிருப்பவர்கள். அதனால் தான் இங்கே அமைதி இருக்கிறது. இந்த அமைதியான குட்டையைக் குழப்பச் சிலபேர் வந்திருக்கிறார்கள். நாமெல்லாம் இன்றைக்கு மிகச் சிறந்த வரலாற்றைப் படைத்துக் கொண்டிருக்கிற சிறந்த பத்திரிகைகளைத் தமிழகம் பெற்றிருக்கிறது.

மிகச் சிறந்த எழுத்தாளர்களை ஆசிரியர்களை-பத்திரிகையாளர்களை - செய்தியாளர்களைத் தமிழகம் பெற்றிருக்கிறது.

இந்தியா முழுவதும் வழிகாட்டும் ஆற்றல் மிக்கவர்களை-நேர்மையானவர்களைத் தமிழகம் பெற்றிருக்கிறது. அதனால்தான் திரு.சால்வே அவர்களே! இங்கே கொந்தளிப்பு இல்லை! இங்கே கிளர்ச்சி இல்லை! அவநம்பிக்கை இல்லை! எங்களை அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்! நாங்கள் அவர்களைப் புரிந்து கொண்டிருக்கிறோம். எங்களை என்று, இன்றைக்கு இருப்பதினால் நான் சொல்லுகிறேன். முன்னாலே சட்டத்திருத்தம் கொண்டுவந்தபோதும் அவர்களை இவர்கள் புரிந்து கொண்டிருந்தார்கள். இவர்களை அவர்களும் புரிந்து கொண்டிருந்தார்கள். எனவே தான் தமிழகத்தின் சார்பில் இந்தச் சட்டத்தை தமிழக முதல்வர் அவர்கள் கொண்டுவந்தாலும் வேறு எங்கேயும் எதிரொலித்தாலும் இதனுடைய விளைவுகளைப் பற்றிப் பரிசீலிப்பதற்கு குழுவை அமைத்திருக்கிறார்கள் என்பதை நான இங்கே மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சில காளான்கள் முளைத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே அந்தக் காளான்களைக் கிள்ளி எறியவேண்டும். வயலுக்குள் இருக்கிற விவாசாயி அரிவாளைக் கையில் எடுத்துக் கொண்டு போனால் அவன் ''களை'' எடுக்கப் போகிறான் என்று நம்பவேண்டுமே தவிர, விளைகின்ற பயிரையே அவன் அறுக்கப் போகிறான் என்று நீங்கள் நினைத்துவிடக் கூடாது. ஆகவே, 'களையாக இருப்பவர்கள் சப்தம் போடுவார்கள். களை போடுகிற சப்தத்திற்குப் பயிர்கள் ஆதரவாக இருக்கக் கூடாது.




பயிர் எது! களை எது? அதை நீங்கள் தான் காட்ட வேண்டும். ஆகவே தமிழ் மக்களின் சார்பில்-ஏழை எளியவர்கள் சார்பில்-படிக்காத பாமரர்கள் சார்பிலேயும் இன்றைக்கும் வாழ்க்கைக்காகப் போராடிக் கொண்டிருப்பவர்கள் சார்பிலேயும் நான் பத்திரிகையாளர்களை-செய்தியாளர்களை -நம்பிக்கையோடு கேட்கிறேன். தமிழகத்திலுள்ள செய்தியாளர்கள் இதற்கு வலு அளிப்பார்கள். உரம் அளிப்பார்கள்-இதை ஊக்குவிப்பார்கள் என்ற தைரியத்தினால் தான் அந்த ஏழை மக்களின் சார்பிலே இந்தப் பிரச்சினைகள் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தேனே தவிர, அரசு சார்பிலோ-அமைச்சர் என்ற முறையிலோ இந்தக் கருத்தை எடுத்து வைக்கவில்லை என்று தெரிவித்து, நாம் அனைவரும் சுதந்தரத்திற்காகப் பாடுபடுவோம்.

எழுத்துச் சுதந்தரம் மாத்திரமல்ல· எல்லாச் சுதந்தரமும் வந்தாகவேண்டும்; என்னைப் பற்றி இழிவாக எழுதுகிறானே அவனைத் தடுப்பதற்கு எனக்குச் சுதந்தரம் இல்லை. அதற்கும் வழிகண்டாக வேண்டும். ஆகவே அப்படிப்பட்ட பிரச்சினைகளை நாமெல்லாம் கலந்து பேசி ஒரு முடிவை எடுக்கத்தான் தமிழக அரசு அந்தக் குழுவைப் போட்டிருக்கிறது. அந்தக் குழுவைப் போட்டதே செல்லாது-சட்டப்படி செல்லாது என்று வழக்குமன்றத்திற்குப் போயுள்ள விசித்திரத்தைப் பார்க்கிறோம். முன்னே போனால் இடிக்கிறது. பின்னே போனால் உதைக்கிறது என்கிறார்கள். ஆகவே கடிக்கிற குதிரை எது? உதைக்கிற குதிரை எது? ஆளைச் சுமந்து கொண்டு போகிற குதிரை எது? என்பதை நீங்கள் தான் நாட்டிற்கு அடையாளம் காட்ட வேண்டும் என்று சொல்லி, இவ்வளவு மிக சிறந்த விழாவில் கலந்து கொள்ள அழைத்த உங்களின் அன்பு உள்ளத்திற்கு என்னுடைய அன்பைத் தெரிவித்து தமிழக அரசின் சார்பிலே குறிப்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இருக்கிற எழுத்தாளர்கள் அனைவரையும் நண்பராகக் கருதுகிறார். நீங்களும் அவரை நண்பராகக் கருதுகிறீர்கள். ஆகவே அந்த நட்புறவோடு நாம் சட்டத்தின் பக்கங்களில் விதிகளைத் தேடிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. ஒருவருக்கு ஒருவர் புரிந்து கொண்டுவிட்டால் நாம் எல்லோரும் நண்பர்கள்தாம். சகோதரர்கள்தாம். சந்தேகம் என்று வந்துவிட்டால் தொட்டதெல்லாம் சந்தேகம்தான். கணவன் மனைவி இடத்தில் சந்தேகம் பிரித்துவிடுகிறது என்றால், வாழ்க்கையிலே பிரிப்பதற்குக் கேட்கவேண்டியது இல்லை. ஆகவே அந்தச் சந்தேகங்களையெல்லாம் தாண்டி நாம் நம்முடைய உறவை இந்த நாட்டு மக்களின் நன்மைக்காக வளர்ப்போம்! பாதுகாப்போம்! என்ற உறுதியை இந்த இருபத்தைந்தாவது வெள்ளி விழாவில் நாம் அனைவரும் எடுத்துக்கொண்டு, செய்தியாளர்களின் நன்மைக்கு பழி வாங்கப்படுகிறார்களே அவர்களைப் பாதுகாப்பதற்கு-கடைசிக் காலத்திலே கைவிடப்படுகிறார்களே -நிராதரவாக அவர்களுக்கு உதவி செய்வதற்கு நாம் அனைவரும் சேர்ந்து இந்தச் சங்கத்தின் மூலம் பாடுபடுவோம்!



[1.1.'83 அன்று சென்னை நிருபர்கள் சங்க வெள்ளி விழாவில் ஆற்றிய பேருரையிலிருந்து]

# வளம் பெருக்கும் குழாய்க் கிணற்றுக் கழகம்



**த**மிழ்நாடு அரசு 1982-ஆம் ஆண்டில் உருவாக்கிய தமிழ்நாடு குழாய்க்கிணற்றுக் கழகம் தமிழ் நாட்டில் 1000.16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாட்டு மாவட்டங்களில் ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டங்களை வகுத்து வருகிறது. அதன் பணிகளை விளக்கி தமிழ்நாடு குழாய்க் கிணற்றுக் கழகத் தலைவர் திரு ம. சின்னசாமி, எம்.எல்.ஏ., அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:

பேட்டி : அ. மருதவிநாயகம்

**தமிழ்நாடு குழாய்க்கிணற்றுக் கழகம் எந்த ஆண்டு துவக்கப்பட்டது? அதன் நோக்கம் என்ன?**

19.3'82 அன்று இந்தக் கழகம் துவக்கப் பட்டது. தமிழகத்தில் சிறு, நடுத்தர விவசாயிகளின் வறுமை நிலையைப் போக்கி, துயர் துடைக்கும் நோக்கோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாடு குழாய்க்கிணற்றுக்கழகம் என்னும் இந்த வாரியத்தை உருவாக்கினார்கள்.

வறண்ட வானம் பார்த்த மேட்டுப் பக்கத்தில் உள்ள சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுடைய நிலங்களில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, நீர் இறைக்கும் இயந்திரங்கள் பொருத்தி, சமுதாயக் கிணறுகளாகப் பராமரித்து, பாசன வசதிகளைப் பெருக்குவதே இந்தக் கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

தமிழகத்தின் மொத்தப் பரப்பான 130 லட்சம் எக்டரில் 60 லட்சம் எக்டர் பரப்பளவு வேளாண்மை செய்யப்படுகிறது. இதில் 32 லட்சம் எக்டர் நிலப்பரப்பு நீர்ப் பாசன வசதிகளைப் பெற்றுள்ளது. மீதமுள்ள 28 லட்சம் எக்டர் நிலப்பரப்பு மானாவாரி நிலப்பரப்பாக உள்ளதால் பாசனத்திற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அப்படிப் பட்ட நிலங்களுக்குக் குழாய்க் கிணறு அமைத்து, நிலத்தடி நீரைப் பயன்படுத்திப் பாசன வசதியைப் பெருக்கி, பசுமைப் புரட்சி ஏற்படுத்துவதுதான் இந்த வாரியத்தின் நோக்கமாகும்.

**இந்த வாரியத்தின் மூலதனம் எவ்வளவு?**

இந்தக் கழகத்திற்குத் தமிழ்நாடு அரசு 3 கோடி ரூபாய் மூலதனம் வழங்க ஆணை பிறப்பித்துள்ளது.

## உறுப்பினர்கள் யார்? யார்?

தமிழ்நாடு குழாய்க் கிணற்றுக் கழகத்தின் பணிகளைத் திட்டமிடவும், அறிவுரை வழங்கவும் 16 உறுப்பினர்களைக் கொண்ட ஓர் ஆணைக் குழுவை அரசு அமைத்துள்ளது. இக்கழகத்தின் ஆணைக்குழுவின் இயக்குநர்கள் குறித்த விவரம் பின்வருமாறு:

1. திரு ம. சின்னசாமி, பி.எஸ்.சி., பி.எல்.,எம்.எல்.ஏ.,தலைவர்.
2. திரு ப. செல்வம், இ.ஆ.ப. நிர்வாக இயக்குநர்.
3. திரு எம். சின்னராஜ், எம்.எல்.ஏ.,
4. திரு ஜே.சி.டி. பிரபாகரன், எம்.எல்.ஏ.,
5. திரு வி. சத்தியமூர்த்தி, எம்.எல்.ஏ.,
6. திரு எஸ்.செம்மலை, எம்.எல்.ஏ.
7. திரு சி. சீனிவாசன், விவசாய சங்கத் தலைவர்
8. திரு கே. சந்திரசூடன், இ.ஆ.ப கூட்டுறவுத்துறைப் பதிவாளர்
9. திரு டி ஏ.எஸ். பிரகாசம், இ.ஆ.ப., நிதித்துறை இணைச் செயலர்.
10. திரு கே.மாதவசர்மா, இ.ஆ.ப. முதுநிலைச் செயலாளர், பொதுப்பணித்துறை.
11. திரு எஸ்.ஜே.அம்புரோஸ், பி.இ. தலைமைப் பொறியாளர் (பொது சிறுபாசனம்)
12. திரு ஏ. மோகனகிருஷ்ணன், பி.இ., தலைமைப் பொறியாளர், பாசனம்.
13. திரு ஆர்.குப்புசாமி, பி.இ. தலைமைப் பொறியாளர், நிலநீர்
14. திரு டாக்டர் ஆர். சக்திவடிவேலு, இயக்குநர், நீரியல் ஆய்வுத்துறை, அண்ணா பல்கலைக் கழகம்.
15. திரு ஆர்.கே. சிவனப்பன், பி.இ., முதல்வர், விவசாயப் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர்.
16. திரு வி.டி.துரைராஜ், இ.ஆ.ப. இயக்குநர், வேளாண்மைத்துறை.



### எங்கெந்த மாவட்டங்களில் இந்த அமைப்பு உள்ளது?

செங்கற்பட்டு, திருச்சி, தென்னார்க்காடு, மதுரை ஆகிய நான்கு மாவட்டங்களில் நான்கு மண்டல அலுவலகங்கள் உள்ளன.

### மாவட்ட அளவில் ஆற்றியுள்ள பணிகள் யாவை?

ஆதிதிராவிடர் மக்களுக்குப் பாசனக் குழாய்க் கிணறுகள் அமைக்க இவ்வாரியத்தின் பல்வேறு பணியாளர்களும் இணைந்து செயலாற்றுகின்றனர். பொதுப்பணித்துறையின் நிலநீர் பிரிவினரின் புள்ளி விவரங்களைக் கொண்டு நீர் மிகுந்து இருக்கும் பகுதிகளில் முடிவு செய்யப்பட்டு, இவ்வாரியத்தின் வருவாய்த்துறை அலுவலர்கள், நில அளவை அலுவலர்கள், பொறியாளர்கள், நிலவியல் நில இயற்பியல் ஆய்வாளர்கள் அனைவரும் இணைந்து சிறந்த தொழில் நுட்ப ஆய்வுகளைச் செய்து, குழாய்க் கிணற்றுத் திட்டங்களைத் தீட்டுகின்றனர்.

நீர் எலிகள் வடஅமெரிக்காவில் ஏராளமாகக் காணப்படுகின்றன. அவை, பாதிநேரம் நீரிலும் பாதி நேரம் நிலத்திலுமாக வாழ்க்கை நடத்துகின்றன.

நீர் எலிகள் 4 முதல் 10 குட்டிகள் வரை போடும். ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று முறை இவை குட்டிபோடுகின்றன.

நீர் எலிகளின் தோல் மிகவும் மென்மையாக இருக்கும். இந்த மென்மையான தோலுக்கு உலகின் பல பகுதிகளிலும் கிராக்கி உள்ளது.

இதுவரை 3,154.03 ஏக்கர் பாசனவசதி பெறும் வகையில் செங்கற்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ரூ.194 இலட்சம் மதிப்பீட்டில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### வாரியத்தின் எதிர்காலத் திட்டங்கள் என்ன?

மாவட்டங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான திட்டங்கள் தயாரித்து, செயல்படுத்த அரசு அனுமதி பெற்றுள்ளது. தமிழக குழாய்க் கிணற்றுக் கழகம் படிவுப் பாறைகள் அதிகம் இருக்கும் பகுதிகளான செங்கற்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சை



திருச்சி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங் களிலே குழாய்க்கிணறு அமைக்கும் பணியில் செயலாற்றிக் கொண்டு வருகிறது.

பின்னர் 1983-84ஆம் ஆண்டில புதுக் கோட்டை, திருநெல்வேலி மாவட்டங்களிலும் படிவுப் பாறை பகுதிகளில் குழாய்க் கிணறு அமைக்கும் பணி நடைபெறும். இந்தத் திட் டத்தின் கீழ் மேற்கூறிய மாவட்டங்களில் 1,187 கிணறுகள், 1982 முதல் 1984 வரை அமைக்கப்படும். இதில் தோண்டு கிணறு, வடி முனைக் குழாய்க் கிணறு, குழாய்க் கிணறு, ஆழ் குழாய்க் கிணறு ஆகியவைகள் அடங்கும்.

இதன்படி குழாய்க் கிணறு அமைக்கும் திட் டங்களை நிறைவேற்றும் பொருட்டு, தேவைப் படும் மதிப்பீட்டுத் தொகையை அரசு ஒரு பகுதியை மான்யமாகவும், கடனாகவும் கொடுப்பதுடன் வங்கிகளிடமிருந்தும் கடன் பெறுவதற்கான வழி வகைகளையும் வரையறுத்துள்ளது. மேற்குறிப்பிட்ட அரசு ஆணையில் ஆதிதிராவிட மக்கள், பின் தங்கிய வகுப்பினர் மற்றும் இதர வகுப்பினர்களுக்கான திட்ட விதிமுறைகளை விவரமாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் குழாய்க் கிணறு அமைக்கும் திட் டங்களைச் செயலாற்றுவதற்கு வேண்டிய அதிகாரிகளும், இயந்திர சாதனங்களும், வாகனங்களும் சேகரிக்கப்பட்டு, ஜூலை மாதம், முதல்களப்பணிகள் மும்மரமாக எடுத்துக் கொள்ளப்பட்டு பல திட்டங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன.

இதுவரை மேற்கூறிய 5 மாவட்டங் களிலே 155 குழாய்க் கிணறுகள் அமைப்பதற் கான திட்ட மதிப்பீடுகள் 194 லட்ச ரூபாய் பெறுமானத்திற்குத் தயார் செய்யப்பட் டுள்ளன. இந்தக் கழகம் 1983ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதிக்குள் சுமார் 3,000 ஏக்கர் நிலப்பரப்புக்கு நீர்ப்பாசனவசதிகளைச் செய்து தரத் திட்டமிட்டுள்ளது. 1983-84ஆம் ஆண்டில் மேற்கூறிய 7 மாவட்டங்களிலும் சுமார் 12,000 ஏக்கர் நிலத்திற்கு நிலையான பாசன வசதிகள் செய்து கொடுக்கத் திட்ட மிட்டிருக்கின்றது.

இத்திட்டம் ஆதிதிராவிட மக்கள், பிற் பட்ட வகுப்பினர் மற்றும் இதர வகுப்பினர் நிலங்களுக்குக் குழாய்க் கிணறு அமைத்துப் பாசன வசதிகளைப் பெருக்கும் திட்டங்களை ஏற்றுச் செயலாற்றி வருகின்றது. இதுவரை 22குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒன்பது இடங்களில் துளையிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### தமிழ்நாடு குழாய்க் கிணற்றுக் கழகம் ஆதிதிராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பு விவசாயிகளுக்கு அளிக்கும் சலுகைகள் யாவை?

ஆதிதிராவிடர் நிலங்களில் செயலாற்றப் படும் திட்டங்களிலிருந்து ஆகும் மதிப்பீட்டுத் தொகையில் ஐம்பது விழுக்காடு அரசு மான்யமாகவும், இருபத்தைந்து விழுக்காடு அரசு கடனாகவும், மீதமுள்ள இருபத்தைந்து விழுக்காடு வங்கியிலிருந்து கடனாகவும் பெற்று இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும். ஆதி திராவிட மக்கள் கடன் பெறுவதற்காக நில உச்சவரம்பு கிடையாது.

பிற்பட்ட வகுப்பினர்களில் 2.5 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளவர்கள் சிறுவிவசாயிகளாகக் கருதப்படுகிறார்கள். அவர்களுக்கு அரசு மான்யமாக ஐம்பது விழுக்காடு கொடுக்கிறது. பிற்பட்ட வகுப்பினர் அவர்களுடைய நிலப் பரப்புக்கேற்றவாறு திட்ட மதிப்பீட்டில் 12.5 விழுக்காடு முன் பணம் கட்ட வேண்டும். மீதமுள்ள 37.5 விழுக்காடு வங்கிகளின் மூலம் கடனாகப் பெற்று, குழாய்க் கிணற்றுக் கழகம் இத்திட்டங்களையும் செயலாற்றும்.

மற்ற வகுப்பினருக்கு அரசு மான்யம் கிடையாது. மற்ற வகுப்பினர்களின் திட்டங் களுக்கான குழாய்க் கிணறு திட்ட மதிப்பீட் டில் அவர்கள் நிலப்பரப்புக்கேற்றவாறு 12.5 விழுக்காடு முன்பணமாகவும் கட்டுதல்வேண் டும். மீதமுள்ள திட்டத் தொகை 87.5 விழுக் காடு இத்திட்டங்களினால் அமைக்கப்படும் குழாய்க் கிணறு, நீர் இறைவை இயந்திர சாதனங்கள் முதலியவற்றைப் பயன்பெறும் விவசாயிகள் ஒரு நீர்ப்பாசன சேவை சங் கத்தை ஏற்படுத்திக் கொண்டு பராமரித்து வரவேண்டும். இதற்காக ஏற்படும் செலவினங் களை இந்தச் சங்கமே செய்து கொள்ளவேண் டும்.

### இதுபோன்ற வாரியங்கள் வேறு எந்த எந்த மாநிலங்களில் உள்ளன?

மராட்டியம் ,பஞ்சாப், அரியானா, ஒரிசா,ஆந்திரா போன்ற மாநிலங்களில் உள் ளன.

''வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோலுயரும்'' என்பது பழமொழி. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி, மக்களின் வேலை வாய்ப்புக்களைப் பெருக்குவது இந்தக் கழகப் பணியாகும். வானம் பார்த்த புஞ்சை நிலங்களை நிலத்தடி நீர் மூலம் பாசனத்திற்குக் கொண்டு வருவதும் இந்தக் கழகத்தின் நோக்கமாகும். நிலத்தடி நீர் எடுத்து வளத்துடன் வாழ்வுயர்வோம் என்பது தான் இக்கழகத்தின் முக்கிய நோக்கம்.



# தஞ்சை நகரில் நெஞ்சை அள்ளும் விழா

தஞ்சாவூர் மாவட்டத்தில் மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழா தஞ்சாவூர் திருவள்ளுவர் திரையரங்கில் டிசம்பர் 5 ஆம் நாள் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

திருவையாறு அரசர் கல்லூரி மாணவர்களின் நாயன இசையுடன் விழா தொடங்கியது. தஞ்சை கோட்டாட்சியர் திரு. வி. தங்கவேலு வரவேற்புரையாற்ற, 'பாரத மணித் திருநாடு' என்னும் இளைய பாரத நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்ப்பல்கலைக் கழக இணைப் பேராசிரியர் டாக்டர் தெ. ஞானசுந்தரம் தலைமையில் திரு. மு. அந்தோணிராஜ், செல்வி. க. இராஜேஸ்வரி, திரு. கங்கை மணிமாறன் உரையாற்றினர்.

பாரதியாரின் புகைப்படம் மற்றும் நூல் கண்காட்சியை மாண்புமிகு தமிழக சட்ட மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர், டாக்டர் ம. பொ. சி., அவர்கள் திறந்து வைத்து உரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்த கருத்துகள் ஆவன:

''பாரதிக்கு முன் வாழ்ந்த கவிஞர்கள், குவியல் குவியலாகப் பாடினார்கள். அவை யாருக்கும் புரியவில்லை. புரியாமல் இருந்தால்தான் புலமை என்ற கருத்து நிலவி வந்தது. ஒரு செய்யுளுக்கு பதவுரை, விருத்தியுரை, பொழிப்புரை, இத்தனை சொல்லப்பட்டன. வாத்தியாருக்கு வேலை வேண்டாமா? அதற்காக அத்தனை உரைகள் எழுந்தன.

''பாரதி பாடினான். அந்தப் பாடலை, மக்களுக்குப் புரியும் தன்மையில் எழுதினான். அதைக் கேட்ட பின்னர்தான், 'வெள்ளைக்காரன் நமக்குக் கொடுமை செய்கிறானா' என்று மக்கள் கேட்டனர்; கொதித்தெழுந்தனர்; பாரதி பாதையை மட்டுமல்ல, பாணியையும் மாற்றினான்.''

பிற்பகல் 4 மணி அளவில், தேசிய மாணவர் படை, மாணவ மாணவியர், சுதந்திரப்போராட்ட வீரர்கள் பங்கு கொண்ட ஊர்வலம், புனித அந்தோனி மேல்நிலைப் பள்ளியிலிருந்து புறப்பட்டு, 7 மணி அளவில் காவேரி, கூட்டுறவு சிறப்பு அங்காடித் திடலை அடைந்தது.

பிற்பகல் 5 மணியளவில் 'பாரதியார் கண்ட சமுதாயத்தினை உருவாக்காமல் இருப்பது மக்களின் குற்றமே' என்னும் தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது.

பேராசிரியர் செல்வ கணபதி வழக்கைத் தொடுத்தார்; எதிர் வழக்காடிய பேராசிரியர் சத்தியசீலன் மறுப்புரைகளைச் சரமாரியாக உலா வரச் செய்தார்.

நடுவராகப் பொறுப்பேற்றிருந்த வலம்புரி ஜான் தமது தீர்ப்புரையில் தெரிவித்ததாவது:

"பாரதிக்குவிஞ்ஞானப்பார்வை-ஆழ்ந்த பார்வை இருந்தது. அவன் கண்ட சமுதாயம் உருவாகிவிட்டது என்று சொல்லி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. எனவே பேராசிரியர் செல்வ கணபதி தொடுத்த வழக்கினை நான் ஏற்கிறேன்.''

சோழன் போக்குவரத்துக் கழகத்தினரின் மெல்லிசை நிகழ்ச்சி, விழாவின் சிறப்பம்சமாகத் திகழ்ந்தது.

பின்னர் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்திற்கு, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் தலைமை ஏற்றார்.

வந்திருந்தோரை வரவேற்ற மாவட்ட ஆட்சியாளர் திரு. ச. மெய்கண்டதேவன் இ. ஆ. ப. குறிப்பிட்டார்:

''பாரதி நாட்டுக்கவி, தேசிய கவி; நாடு, சமுதாயம், உலகம், பொதுவுடைமை, புதுமை, ஆகியவை குறித்து ஆயிரம் ஆயிரம் பாடல்களை எழுதி, புதிய பாரதத்திற்குப் பாயிரமாக விளங்கினார்.''

பின்னர், பாரதி நூற்றாண்டு விழாத் திட்டத்தை விளக்கியும் பாரதி உருவப்படத்தைத் திறந்து வைத்தும் உரையாற்றிய செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எஸ். டி. காசிராஜன் இ. ஆ. ப. குறிப்பிட்டார்:

"மக்கள் வாழ வேண்டும்-தமிழ் செழிக்க வேண்டும் என்றுஎண்ணி எழுதிய முதல் கவிஞன் இந்தக் கவிஞன்தான். ஆனா, ஆவன்னா என்று எழுத்துக் கூட்டிப் படிப்பவர்கள் கூட இந்த பாரதியின் நூல்களைப் படிக்க முடிந்தது. தமிழர்கள் அனைவரும் ஒருமுறையாவது பாரதியின் கவிதைகளை வாசிக்க வேண்டும்."

அடுத்து, உரையாற்றிய மாவட்ட வருவாய் அதிகாரி. திரு சோனை முத்துவேலன் தெரிவித்தார்:

''பாரதியைப் பார்த்தாலே வீரம் வரும்: அவரது பாட்டைக் கேட்டாலே வீரம் வரும். அத்தகைய தனிப் பண்பு - தனித்திறமை அவரிடம் இருந்தது.''

அடுத்து உரையாற்றிய திரு வலம்புரி ஜான் குறிப்பிட்டார்:

''கல்லறையில் பூத்த கறுப்பு மலராக பாரதி விளங்கினான். மரணம் அவனுக்கு முற்றுப்புள்ளியில்லை; இடைவெளிதான்! உலகத்து நாடுகளில் எங்கெல்லாம் விடுதலை விழா கொண்டாடப்படுகிறதோ அங்கெல்லாம்பாரதி நினைக்கப்படுகிறான்."

அடுத்து உரையாற்றிய தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் தெரிவித்தார்:

''உலகத்தில் உள்ள எல்லா மதங்களையும் - எல்லா மக்களையும் பற்றி பாரதி பாடினார். இப்படி விரிந்த மனப்பான்மை கொண்டு தலைவர்களாக-புலவர்களாக - வீரர்களாக நாம் ஆவதற்குத் துணை புரிந்தார்.''

அடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் திரு எல். கணேசன் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

"நம் கவிஞர்கள் எல்லாம் மகேசனைப் பற்றியும் மன்னர்களைப் பற்றியும் பாடிய காலத்தில் அவன் மக்களைப் பற்றிப் பாடினான். எனவே மக்கள் இருக்கும் வரை அவனும் இருப்பான்''.

தலைமைதாங்கிய மாண்புமிகு சமுக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் மகாகவி பாரதியார் நினைவுப் பள்ளிக் கட்டடத்தினைத் திறந்து வைத்து உரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்:

''அவர், ஜாதிகள் இல்லையடி பாப்பா என்று குழந்தைகளைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார். 5ல் வளையாதது 50ல் வளையாது என்பதை உணர்ந்தவர் அவர். அதுமட்டுமல்ல, 'இளமையில் கல்' என்ற கொள்கைப்படி சிறுவர்களின் மனத்தில் நல்ல கொள்கைகளை விதைத்தால் - அவர்கள் நல்ல சமுதாயமாக உருவாவார்கள் என்று நினைத்தார். அந்த நோக்கத்தை நமது முதல்வர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள் - சத்துணவுத் திட்டத்தின் வாயிலாக!''

பின்னர், பாரதியார் நினைவுக் கவிதை, கட்டுரைப் போட்டிகளில் பரிசு பெற்ற மாணவ, மாணவியர்களுக்குப் பரிசளித்த மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர், அரசின் நலத்திட்ட உதவிகளைப் பலருக்கு வழங்கினார்.

அதன் பின்னர், செல்வி உமா தண்டாயுதபாணி குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சியுடன் தஞ்சை பாரதி நூற்றாண்டுவிழா இனிது நிறைவேறியது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
—தமிழ்ப்பித்தன்—

# தமிழைத் தொழுவோம் வருவீர்

## பாவலர் பேகன்

தமிழைத் தொழுவோம் வருவீர் - நாம்
தமிழைத் தொழுவோம் வருவீர்—
அமிழ்தின் மிகவே இனிக்கும்
அரிய மொழிதான் மடவார்
சமைத்த ஒருபொங் கலினிற் சுவையாய்
தவழ்ந்தே உழவர் உளத்தில் களிக்கும்

இமய முடியில் இலங்க
எழில்வீற் றிருக்கும் மொழிதான்
நமது வயலின் நலம்காண் மணியாய்
நவமாய்ப் பொலிந்து நமையே புரக்கும்

மலையைப் பிளக்கும் வலிவும்
மதியைத் துலக்கும் பொலிவும்
கலையின் கலையாய்த் துலங்கும் தமிழ்தான்
கலப்பை தனிலே கனிந்தே விளங்கும்

புலவர் மனத்திற் பிறந்தே
புரப்போர் மடியில் தவழ்ந்தே
உலக மொழிகள் பலவும் சுரக்க
உயரும் மொழிநம் உயிராய்த் திகழும்







# பழனி மலையின் பழங்குடிகள்

குரங்கணி மலையில் உள்ள முதுவர் குடும்பப் பெண்கள்.


## நே. தேவசகாயம்

**காப்பாட்சியர்,**
**மானிடவியல் பிரிவு,**
**சென்னை அரசு அருங்காட்சியகம்.**


மதுரை மாவட்டத்தில் பாண்டியனது சரித்திர கலாச்சாரங்கள், பண்பாடுகள் ஆகியவைகளை ஒருங்கே திரட்டியவாறு, கோபுரங்கள், கலைக் கோவில்கள் எழுத்தோவியங்கள் நமக்குக் காட்டுகின்றன. அதைப்போன்றே தமிழ்நாட்டின் ஒரு தரப்பைச் சார்ந்த ஆதிவாசிகளின் பண்பாடு, நாகரிகம், வளர்ச்சி ஆகியவற்றை மதுரை மாவட்டத்தின் உயர்ந்துள்ள மலைகள், நமக்குப் புலப்படுத்துகின்றன. அம்மலைகளில் மிகவும் முக்கியமானது மேற்குத் தொடர்ச்சி மலையைச் சார்ந்த பழனி மலையாகும். கீழ்ப் பழனி மலையை ஒட்டிய சிறுமலை, தென்மலை, தாண்டிக்குடி, குரங்கணி என்னும் சிறு மலைகளில், பரவலாக முதுவர்கள், பலியர்கள், புலையர்கள், மன்னன், காட்டு நாயகன், இருளர், சோலகர், பனியர் ஆகிய பழங்குடியினர் காணப்படுகின்றனர். இவர்களில் மிகவும் முக்கியமானவர்கள் முதுவர்கள், பலியர்கள், புலையர்கள் ஆவர்.

போடிநாய்க்கன் ஊரை அடுத்துள்ளதே குரங்கணி எனப்படும் சுமார் இரண்டாயிரம் அடி உயரமுள்ள சிறுமலையாகும். இதனை அணுக, வேண்டிய போக்குவரத்து வசதிகள் தற்போது உண்டு. இச்சிறுமலையில் காணப்படும் சிற்றூர்களில் முதுவர்கள், மற்றும் புலையர்கள் வசிக்கின்றனர். தம்பிரான் புல்லுகோடி எனப்படும் முதுவர்களின் குக்கிராமம் சுமார் பத்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. சிறிது தூரம் வண்டிப் பாதையிலும், பிறகு ஒற்றை நடைப்பாதையிலும் நடந்து செல்ல வேண்டும்.

மலையில் உயரமான இடத்தில் தனியாக பதினைந்து குடும்பங்களாக ஒன்று சேர்ந்து மலைச் சரிவுகளில் வாழ்ந்து வருகின்றனர். மலைச்சரிவுகளில் இரண்டு; மூன்று வரிசைகளில் காணப்படும் அவர்களின் சிறிய மண் வீடுகள், மற்ற கீழ்நாட்டு கிராமங்களில் காணப்படும் வீடுகளைப் போன்றே அமைந்துள்ளன. அவை ஓலையும், அதன் மேல் காட்டுப்புல்லினாலும் மூடப்பட்டவை. இந்தப் பழங்குடிகள் இன்னும் பழமையிலும், எளிய வாழ்க்கையிலும், உலகத்தை அறியாதவர்களாகவும், ஒதுங்கி வாழ்ந்து வருகின்றனர். தமிழ்நாட்டுப் பழங்குடிகளில் எழுபது சதவிகிதத்திற்கு மேற்பட்ட ஆதிவாசிகள் விவசாயத்தை முக்கிய தொழிலாக கொண்டுள்ளனர் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் இங்குள்ள முதுவர்களுக்கு தங்களுக்கென்று விவசாயம் செய்யத் தனிநிலம் கிடையாது. ஆகவே மிகவும் பிற்போக்கிலுள்ள இவர்கள் அருகிலுள்ள தேயிலைத் தோட்டங்கள் பழத்தோட்டங்களில் தொழிலாளிகளாகப் பணிபுரிகின்றனர். ஆடவர் தினப்படியாக ரூபாய் நான்கு அல்லது ஒருபடி அரிசி பெறுகின்றனர். அவ்விதமே பெண்டிர் ரூபாய் மூன்று அல்லது ஒரு படி அரிசி கூலியாகப் பெறுகின்றனர்.

இவர்களின் முக்கிய உணவு கேழ்வரகு மற்றும் அரிசியும் ஆகும். மேலும் காடுகளில் கிடைக்கும், கிழங்குகள், தண்டுகள், வேர்கள், தேன், ஆகியவையும் இவர்களின் இதர உணவு. தங்கள் இருப்பிடங்களில் ஆடுகள், கோழிகள், வாத்துகள் ஆகியவைகளை வளர்த்து வருகின்றனர். நேரம் கிடைக்கும் சமயங்களில் தாங்களாகவே செய்த எளிய வலையுடன் அல்லது பொறியுடன் வேட்டையாடுவர். அம்பு எய்திப் பறவைகளைப் பிடிப்பதில் இவர்கள் சிறந்தவர்கள்.

கேரளம், கோவை, ஆகிய இடங்களிலுள்ள மலைப் பகுதிகளில் வாழும் முதுவர்கள் பழனி முதுவரை விட இன்னும் கீழ் நிலையில் உள்ளனர். அவர்களின் வீடுகள் கட்டையினாலும், தட்டியினாலும் ஆனவை. இன்னும் திருமணங்களில் தங்கள் மனைவியருக்கு தாங்கள் செய்த சிறப்பு வேலை மிகுந்த மூங்கில் சீப்புகளை வெகுமதிகளாகவும், தாலியின் மதிப்பைப் போன்றதாகவும் கருதிப் பரிசாக அளித்து வருகின்றனர். தாயான முதுவர்கள் இன்னும் தங்கள் முன்னோர்கள் போலவே, தோளில் சரியும் சேலையை முடிபோட்டுத் தங்கள் சிறுகுழந்தைகளை முதுகில் தூக்கிச் செல்லுகின்றனர். தங்கள் உடையிலும், வேலையிலும், வெகுவாக இவர்கள் தங்களுடன் வேலை செய்து வரும் கீழ்நாட்டவரின் நட்பினால் புதிய மாறுதல்களை அடைந்து வருகின்றனர். போக்குவரத்து மூலமாகவும் நடந்தும், போடிநாயக்கன் வாரச்சந்தைக்குச் சென்று குடும்பப் பொருள்களை வாங்கி வருகின்றனர்-முக்கியமாக பண்டிகைக் காலங்களில்.



சிறுமலையில் உள்ள அழகர் என்னும் பலியர்- குடும்பத்தவருடன்.

பலியர் எனப்படும் பழங்குடிகள் பழனி மலைகளில் ஒன்றான சிறுமலையில் வசிக்கின்றனர். திண்டுக்கல்லை அடுத்து, சுமார் பத்து மைல் தொலைவில் சிறுமலை இரண்டாயிரம் அடி உயரத்தில் அமைந்துள்ளது. மலையைச் சுற்றி வளைந்து செல்லக்கூடிய போக்குவரத்து வசதிகள் பல உண்டு. பழையூர் என்னும் கீழ்நாட்டவர் வாழும் மலைப் பகுதியைப் பேருந்து மூலம். அடைந்து அங்கிருந்து வளைந்து செல்லும் ஒற்றையடிப் பாதையில், காட்டில், மேட்டில், குன்றில் நடந்து, சிறுசிறு ஊற்றுகளையும் கடந்து செல்ல வேண்டும்.

பலியர் இக்காட்டு மலைப்பகுதிகளில் பெரிய பழத்தோட்டங்களில் பரவிக் கிடக்கின்றனர். கல்லறைக்காடு, 'செம்பூத்துக்காடு ஐந்துமாமரத்துப் பள்ளம், தழைக்காடு ஆகிய சிறு சிறு கூட்டமாக பலியர் வசிக்கும் குக்கிராமங்களைச் சிறுமலையில் காணலாம். அவர்கள் இரண்டு, மூன்று குடும்பங்களாகச் சேர்ந்து அருகிலுள்ள வாழை, கொய்யா, எலுமிச்சை, மாதுளம், பலா, ஆகிய பெருந்தோட்டங்களில் நாற்று நடுதல், களை எடுத்தல், வாழை இலைகளைப் பறித்தல், காய், பழங்களைப் பறித்தல், ஆகிய வேலைகளில் ஈடுபடுகின்றனர். முக்கியமாக வாழைத் தோட்டத்தில் வேலை செய்யும் ஒவ்வொரு பலியனிடமும் இரண்டு வித வெட்டுக் கத்திகள் உண்டு. ஒன்று L வடிவமும், மற்றொன்று U வடிவமும் ஆனது. வாழைக் குலைகளை வெட்டவும் வாழை இலைகளைத் தரிக்கவும், இக்கத்திகள் உதவுகின்றன. காய்த் தோட்டங்களில் வேலை புரியும் ஆண்கள் ரூபாய் இருபத்தி இரண்டு வாரக் கூலியாகப் பெறுகின்றனர். இவ்வேலையைத் தவிர்த்து ரோட்டில், தோட்டத்தில், பள்ளத்தாக்கில் காணப்படும் தேனை, நீண்ட கொம்பின் உதவியால் சேகரிப்பது இவர்களின் முக்கிய தொழிலாக் கருதப்படுகிறது. எலி, அணில் போன்றவைகளை ஈட்டியால் வேட்டையாடுவர். மற்றும் காட்டின் கனிகள், வேர்கள், தண்டுகள் இவர்களின் இதர உணவாகும். பலியர்கள் நல்ல உடல் வலிமையைப் பெற்றுள்ளார்கள். ஆனால், உயரத்தில் சற்றுக் குறைந்தவராக உள்ளனர்.

ஐந்து மாமரத்துப் பள்ளம் என்னும் மலைப்பகுதியில் தன்னந்தனியாகத் தனது குடும்பத்துடன் வாழ்ந்து வரும் நூற்று இருபது வயதான அழகர் என்னும் முதிர்ந்த பலியரைப் பற்றி ஒரு சில குறிப்புகள் சிறப்பானவை. சுற்றிலும் மலைச்சரிவு, வாழைத் தோட்டத்தின் நடுவில் மற்றக் காட்டுச் செடிகளின் நடுவே அமைந்துள்ளது அவரது சிறிய ஓலை வீடு. அழகர், நூற்று இருபது வயதாகியும் நாலு திருமணங்கள் தனது சொந்தத்தில் செய்திருந்தும் இந்த வயோதிகக் காலத்தில் மிகவும் சுறுசுறுப்பாகவும், அமைதியுடனும் வீட்டின் எல்லாக் காரியங்களையும் கவனித்து வருகிறார்.



கொடைக்கானல் வி. எஸ். ஆர். புரம் காலனியில் பலியப் பெண்.

கோடைக்கானல், பனைக்காடு கிராமத்தின் அருகே புதியதாக அமைக்கப்பட்டிருக்கும் வி. எஸ். ஆர். புரம் பலியர்களின் புதிய கிராமம் ஆகும். 1975-ஆம் ஆண்டு படித்த கீழ்நாட்டு வாலிபர்கள் இருபதுபேரின் பெருமுயற்சியால் ஒரு 'உதவிக்குழு' அமைக்கப்பட்டு, தங்கள் பண உதவியாலும், மற்றும் பெரிய தனவந்தர்களின் உதவியாலும் பத்து பலியர் குடும்பங்களுக்குப் புதிய கல்வீடுகள் கட்டப்பட்டுள்ளன. தற்பொழுது பலியர்களின் நல்வாழ்விற்காக குழந்தை காப்பகம், குழந்தைகள் பள்ளி, பெண்கள் தையலகமும் இங்கு இயங்கி வருகின்றன.

முதுவர்கள், பலியர்கள் தவிர புலையர் என்னும் பழங்குடியினர் தாண்டிக் குடி மலையில் இரண்டாயிரம் அடி உயரத்தில் வாழ்ந்து வருகின்றனர். வத்தலக்குண்டு

எனப்படும் ஊரை மேற்கு நோக்கியதே தாண்டிக் குடிமலையாகும். செல்வதற்கு வேண்டிய போக்குவரத்தும், சாலையும் உண்டு. மங்களம் கொம்பு காலனி, தாண்டிக்குடி காலனி ஆகிய சிற்றூர்களில் வாழும் புலையர்கள் சற்று நல்ல வசதிகளைப் பெற்றவராகத் தென்படுகின்றனர். மங்களம் கொம்பு காலனியில் கீழ்நாட்டு மக்களின் இருப்பிடங்களுக்கு அருகே தமிழ்நாடு அரசு கட்டியுள்ள புதிய கல்வீடுகளில் சுமார் பதினைந்து புலையர் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்கள் தோட்டங்களில் வேலை செய்தல், மற்றும் இதர கூலி வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். தினக் கூலியாக ஆண்கள் ரூபாய் ஆறும், பெண்கள் ரூபாய் மூன்றும் பெறுகின்றனர்.

பழனி மலை வாழ் பழங்குடிகளாகிய முதுவர், பலியர், புலையர் ஆகியவரிடம் ஒரு சில ஒற்றுமைகள் வாழ்க்கையில் காணப்படுகின்றன. பழனி மலைகள் யாவும் அதிக உயரம் உள்ளவைகள் அல்ல. அவை யாவும் சுமார் இரண்டாயிரம் அடிமுதல் மூவாயிரம் அடி உயரம் உள்ளவைதான். மேலும் பழனி மலைகள் யாவும் கீழ்நாட்டவருடன் போக்கு வரத்து வசதியுடன் இணைக்கப்பட்டுள்ளன. இம்மலைவாசிகள் யாவரும் தொழிலாளிகளாகவும், கூலியாட்களாகவும், தோட்டங்களில் பணிபுரிகின்றனர். யாவரும் ஓரளவு வாழ்க்கையில் திருப்தியுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டின் மற்ற பழங்குடிகள் மலைகளில் இயங்கி வருகின்ற பழங்குடிகளின் மேம்பாட்டுக் கூட்டுறவுச் சங்கம் (லாம்ப்) பழனி மலையில் காணப்படவில்லை. காரணம் அது தேவையின்மையே. தினம் தினம் போக்குவரத்து மூலமாக, சுலபமாக, மேல் வாழ் சமூக, பொருளாதார வாழ்க்கையை நேரில் பார்த்து, கேட்டு, கண்டறிந்ததுமல்லாமல் அவர்களால் செய்யப்பட்டு தினமும் உபயோகப்படுத்தப்படும் அவர்களின் வீட்டுப் பொருள்கள், தொழில் கருவிகள், பாத்திரங்கள் ஆகிய ஐம்பது கலைப் பொருள்கள் சென்னை, மதுரை அரசு அருங்காட்சியகங்களுக்கென அண்மையில் சேகரிக்கப்பட்டன.

பழங்குடிகளின் இக்கலைப் பொருள்களைக் காட்சிக்கு வைக்கும் பொழுது மலையில் வாழும் ஆதிகுடிகளின் சீரிய வாழ்க்கை, எளிமை, அமைதி ஆகிய தன்மைகளைப் படம் பிடித்துக் காட்டுவது மட்டுமல்லாமல் அதன் வழியே நமது நாகரிகம், பண்பாடு, கலை உணர்ச்சி ஆகியவைகளை ஒப்பிட்டுப் பார்க்கவும் முடிகிறதல்லவா!

பலியர், கழுதைகளில் சுமை ஏற்றிச் செல்லல்.





தாண்டிக்குடி மலையில் உள்ள புலையர் இனப் பெண்கள் விறகு சுமந்து வருதல்.

பயிர்த்தொழிலில் ஈடுபடவிலலை. இன்னும் மிகக் கூச்சத்துடன் கீழ்நாட்டவருடன் பழகுகின்றனர். கீழ்நாட்டு மக்களுடன் காய்த் தோட்டங்களில் இப்பழங்குடிகள் வேலை செய்தாலும் அதிக அளவில் நாகரிக முன்னேற்றம் காணப்படவில்லை. இப்பழங்குடிகள் இன்னும் எளிமையுடனும் பழங்குடிகள் கீழ்நாட்டிற்கு வந்து வேண்டிய தேவையுள்ள பொருள்களை வாங்கிச் செல்வதால் லாம்ப் சங்கம் தேவையில்லாமையைக் காட்டுகிறது. இம்மலைப் பழங்குடிகளின் எண்ணிக்கை மிகவும் சொற்பமே.

இவ்விதமாக முதுவர், பலியர் புலையர் ஆகிய பழங்குடிகளின்

# இன்பப் பொங்கல்

-தணிகை உலகநாதன்-



வறுமையெனும் இருள்கிழித்து வளங்களெலாம் சேர்கும்
வாகையினைச் சூடுதல்போல் கீழ்வானம் தன்னில்
தருக்கோடு செங்கதிரோன் தோன்றுவதைக் காணீர்!
தமிழ்த்திருநாள் வள்ளுவர்நாள் வந்ததெனத் தமிழர்
வெறுப்புவிருப் பில்லாமல் இன்பமெனும் வெள்ளம்
விளையாடித் திளைத்திடவே வந்ததிந்தப் பெருநாள்!
பொறுப்பான உழைப்பாலே அறுவடையைச் செய்தே,
புதுநெல்லை இல்லமெலாம் கொண்டுவந்து சேர்த்தோம்.

வந்ததுகாண் பொங்கலெனும் மறத்தமிழர் நன்னாள்;
மாண்புடனே புதுச்செயல்கள் தொடங்குகின்ற பொன்னாள்.
கந்தலுடை பழஞ்சட்டி பானைவெளி ஏகும்;
கவினாரும் புத்துணவும் புதுப்பொருளும் சேரும்;
செந்தமிழர் வீடெங்கும் வெண்ணிலவு காயும்;
சீர்திருத்தம் வந்துபுகும் சிறப்பெல்லா மோங்கும்;
செந்நெல்மணிப் புத்தரிசி செழும்பாலில் பொங்கும்;
தெருவெல்லாம் பொங்கலொலி வானத்தும் பரவும்!



# பொலிவுமிகு பொருட்காட்சி

அ. மருதவிநாயகம்

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியினை எடுத்துக் காட்டும் வகையில், தமிழ்நாடு சுற்றுலா வாரியம் ஏற்பாடு செய்துள்ள 10-வது சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சித் திறப்புவிழா 24.12.82 அன்று சென்னை தீவுத்திடலில் துவங்கியது. சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு க. பாலசுப்பிரமணியன், எம்.எல்.ஏ. அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது; ''கடந்த 5 ஆண்டுக் காலமாக மாண்புமிகு முதல்வர் எம்.ஜி. ஆர். ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, மிகுந்த வலிவோடும், பொலிவோடும், புதிய அம்சங்களோடும் தமிழகசுற்றுலாவள்ர்ச்சிக் கழகம் இந்தப் பொருட்காட்சியினைச் சிறப்பாக நடத்தி வருவதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

''இத்தனை ஆண்டிலும் இல்லாத ஒரு சிறப்பு இந்த ஆண்டு. பாரதியார் நூற்றாண்டு விழா நடத்தப்படுவதால் அவருடைய கருத்துக்களை விளக்குகின்ற வகையில் இந்தப் பொருட்காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது.

பொருட்காட்சியின் முகப்பில், 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற பாரதியாரின் கருத்து வரிகள் நம்மை வரவேற்கின்றன. சாதிமதபேதமற்ற சமுதாயம் அமைத்திடவும், சமுதாயத்திற்கு வேண்டிய கருத்துகளை அறிந்திடவும், மற்றும் பல்வேறு கருத்துகளை விளக்குகின்ற வகையிலும் பொருட்காட்சி அமைந்துள்ளது. மிகச் சிறப்பான அம்சமாக இந்த ஆண்டு தமிழகத்தின் தலைநகரையே காட்டும் வகையில் இந்தப் பொருட்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன மேலும் தமிழகத்தில் உள்ள பதினாறு மாவட்டங்களைச் சேர்ந்த அரங்குகள், அந்தந்தப் பகுதிகளின் கலை, தொழில் வளர்ச்சி பற்றி போட்டி போட்டுக்கொண்டு விளக்கும் வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரங்கினை அமைத்துள்ளனர். இவ்வளவு பெரிய முயற்சியை ஜெனரேட்டர் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

''இந்தியாவிலேயே மத்திய அரசு நடத்தும்பொருட்காட்சிக்கு அடுத்தபடியாகவும், மற்ற மாநிலங்கள் நடத்தும் பொருட்காட்சிகளைவிட பெரிதாகவும் சிறப்பானதாகவும் தமிழகம் மட்டுமே நடத்தி வருகின்றது.

''கடந்த ஆண்டுநடத்தப்பட்ட சுற்றுலாப் பொருட்காட்சியில் ஏறத்தாழ 350 அரங்குகள் மட்டுமே அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் இந்த ஆண்டு 400-க்கு மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 94 தமிழக அரசுத் துறைகளும், நிறுவனங்களும் பங்கேற்றுள்ளன. 10 பிற மாநிலங்களும், 30 தனியார் நிறுவனங்களைச் சார்ந்த பெரிய நிறுவனங்களும் பொருட்காட்சியில் பங்கு பெற்றுள்ளன.



# சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி பற்றிய சில தகவல்கள்



தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1974-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பொருட்காட்சியினை நடத்தி வருகின்றது. அந்த வரிசையில் இவ்வாண்டு நடைபெறும் பொருட்காட்சி பத்தாவது ஆகும்.

இப்பொருட்காட்சி சென்னை தீவுத் திடலில் கூவம் ஆற்றின் இரு கரையிலும் சுமார் 22 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

பொருட்காட்சியில் மொத்தம் 400 நிறுவனங்கள் பங்கு கொள்கின்றன.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், தென்னிந்திய ரெயில்வே, இந்தியன் டெலிபோன் இண்டஸ்ட்ரீஸ், இந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸ், கோல் இந்தியா லிமிடெட், மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ், ஸ்பிக் ஆகிய நிறுவனங்களும் காஷ்மீர், இமாசலப்பிரதேசம், கர்னாடகம், கேரளம் மற்றும் புதுவை மாநிலங்களும் இந்தப் பொருட்காட்சியில் பங்கேற்கின்றன.

கண்காட்சியைக் காண வருவோரின் எண்ணிக்கை இவ்வாண்டு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பொருட்காட்சி 24.12.82 அன்று தொடங்கியது. 21.2.83 வரை நடைபெறும். பொருட்காட்சி மாலை 2 மணி முதல் இரவு 10 மணி வரை நடைபெறும்.

பல்லவன் போக்குவரத்துக் கழகம் பல்வேறு பகுதியிலிருந்தும் பொருட்காட்சிக்குப் பேருந்து வசதி செய்து கொடுத்துள்ளது.

''மாலை நேரக் கல்லூரி போல பள்ளிக்குச் செல்லாதவர்கள் உலகத்தைக் கற்கும் அளவிற்கு இந்தப் பொருட்காட்சி 'பயன் உடையதாக அமைந்துள்ளது. இப் பொருட்காட்சி வெறும் பொழுது போக்கு அம்சம் கொண்டதாக மட்டும் அமையவில்லை. பொதுவாக, பொருட்காட்சிகள் சூதாட்டக் களமாக இருக்கும் நிலைமையை மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் மாற்றி அமைத்துள்ளார்கள். இந்தப் பொருட்காட்சி இலாப நோக்கம் கொண்டதல்ல. வருமானம் எவ்வளவு கிடைக்கின்றது என்பதை விட மக்களுக்கு என்னசெய்தோம் என்பதையே கணக்கிட்டுப் பார்க்கிறோம்.

''ஒரு நிரந்தரச் சுற்றுலாப் பொருட்காட்சியினை இதே இடத்தில் அமைக்க அரசு கொள்கை அளவிலான முடிவை எடுத்துள்ளது. நிரந்தரப்பொருட்காட்சியினை அமைப்பதற்கான வடிவமைப்பினை நிபுணர்களிடம் கேட்டுள்ளோம். யார் நல்ல வடிவமைப்பினைத் தருகிறார்களோ அதைத் தேர்ந்தெடுத்து, அடுத்த ஆண்டு இதே இடத்தில் நிரந்தரப் பொருட்காட்சி அமைப்பதற்கான அடித்தளம் அமைக்கப்பட இருக்கின்றது. இதே இடத்தில் நிரந்தரப் பொருட்காட்சி அமைவதால் பல லட்சக் கணக்கான ரூபாய் செலவில் அரங்குகள் அமைக்கப்பட்டு, இடித்துத் தள்ளப்படும் நிலைமையை மாற்ற முடியும். அதனால் ஏற்படும் இழப்பை நிரந்தரப் பொருட்காட்சி அமைப்பதன் மூலம் சரி செய்ய முடியும். அந்நியச் செலாவணியை எதிர்நோக்கும் இந்தியாவுக்கு வெளிநாட்டுப் பயணிகள் வருகையால் ரூ. 800 கோடிக்கு அந்நியச் செலாவணி கிடைக்கின்றது. மூலப் பொருள் அனுப்பாமலே அந்நிய செலாவணி பெறும் துறையாகச் சுற்றுலாத்துறை ஒன்றுதான் விளங்குகின்றது. ஆகவே மத்திய அரசு இத்துறைக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். சுற்றுலா வளர்ச்சி பெறவேண்டுமென்பதற்காகத்தான் அந்தக் காலத்திலேயே காசி முதல் இராமேசுவரம் வரை செல்ல வேண்டுமென்று பக்தி வழியாகப் போதிக்கப்பட்டது. ஆனால் இன்று காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை உள்ள இடங்களினைக் காணப் பயணிகள் பக்தியுடன் வரலாம். அல்லது இயற்கை அழகைக் கண்டு அனுபவிக்கவும் வரலாம்.

''ஒவ்வொரு மாநில மக்களின் நிலைமைகளைத் தெரிந்து கொள்ளவும், பண்பாட்டினைத் தெரிந்து கொள்ளவும், சுற்றுலாத் துறைதான் உதவியாக உள்ளது. பாரதியார் வலியுறுத்திய தேசிய ஒருமைப்பாட்டு வழியில் எல்லா மாநிலங்களும் தேசிய அளவில் சுற்றுலாவை வளர்க்க வேண்டும்.

''சுற்றுலாத்துறை இன்றைய நிலையில் மக்களுக்குத் தேவையானவற்றுள் ஒன்றாகிவிட்டது. ஆகவே மாநில சுற்றுலாத்துறைகளை வளர்த்தாக வேண்டும். மத்திய அரசு மாநிலங்களை மதித்து மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடுகளைச் செய்ய இன்னும் கருணை காட்ட வேண்டும்.

''மாநிலங்களுக்கிடையில் மக்களின் ஒற்றுமையை வளர்ப்பதற்கு மத்திய அரசு சுற்றுலாத் துறையைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொருட்காட்சியினைத் தொடங்கி வைத்து மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் உரையாற்றுகையில் பேசியதாவது: ''வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் ஏறத்தாழ 60 சதவிகிதம் தமிழ்நாட்டிற்கு வருகிறார்கள். இந்தியாவிற்கு வரும் அவர்கள் தமிழகத்தின் கலாச்சாரத்தை அறிந்து கொள்ள, சுற்றுலாப் பயணிகளுக்கு வேண்டிய வசதிகளை நமது சுற்றுலாத்துறை செய்தாக வேண்டும். இந்தியாவில் தயாரிக்கப்படும் நூல் தயாரிப்பில் கால் பங்கு தமிழகத்தில் தயாரிக்கப் படுகின்றது. கடந்த பல ஆண்டுகளோடு இந்த ஆண்டினை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, இப்பொழுது உள்ள தொழில் வளர்ச்சி பெரிதும் பாராட்டுதற்குரியது. கடந்த 4 ஆண்டுகளில் சிறுதொழில்கள் இரண்டு மடங்கு அளவில் வளர்ச்சி அடைந்துள்ளன. மேல்நாடுகளில் சுற்றுலா வளர்ச்சி அடைந்துள்ளது போல் தமிழகத்திலும் சுற்றுலா வளர்ச்சியடையவேண்டும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

''கடந்த ஆண்டு நடத்தப்பட்ட இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சியில் ஏறத்தாழ 20 இலட்சம் மக்கள் கண்டு களித்துள்ளார்கள். இந்த ஆண்டு அதைவிட அதிக அளவில் மக்கள் கண்டு களிப்பார்கள் என்று நினைக்கின்றேன்.''

சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு எம்.மாதவன் நம்பியார், இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார். டாக்டர் செல்வி பத்மா சுப்ரமணியம் அவர்களின் 'பாரதிக்கு அஞ்சலி' நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

பொருட்காட்சியில் நிறுவப்பட்ட அரங்குகள் அனைத்தும், பாரதியார் நூற்றாண்டு விழாக் கொண்டாடிய சிறப்பில் பாரதியாரின் எண்ணங்களையும் கருத்துக்களையும் எடுத்துக்காட்டும் வகையில் அமைக்கப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



# சத்துணவும் சமத்துவமும்!

மலேசியக் கவிஞர் ஐ. உலகநாதன்



வாய்மணக்கும் நல்லுணவு
மண்மணக்கும் கல்விநலம்
தாயின் பணியனைத்தும்
தருமத்தில் நடக்கிறது.

மேல்த்தட்டும் கீழ்த்தட்டும்
ஓர் தட்டின் முன்னாலே
ஊர்க்கட்டுப் பாட்டிற்குள்
ஒழுங்காக நடக்கிறது.

கஞ்சிக்கும் பஞ்சமெனும்
கடைநிலையில் உள்ளவர்தம்
நெஞ்செலும்பு நிமிர்கின்ற
நேரமொன்று நடக்கிறது.

மதியத்துச் சத்துணவில்
மறுமலர்ச்சிப் புத்துணர்வில்
புதியதொரு தலைமுறைதான்
புறப்பட்டு வருகிறது.

ஊரில்உள்ள பிள்ளைக்கும்
சேரிவாழ் கிள்ளைக்கும்
வேரில்உள்ள வேற்றுமையை
வெட்டி முறிக்கிறது!

சாணத்தில் கலந்தஇளம்
சந்ததிகள் காலையிலே
காணத் தகுந்தபடி
காட்சிநலம் தருகிறது.

மாடடுத்துப் போன
மரப்பாச்சிப் பிள்ளையெலாம்
ஏடெடுத்து நாள்தோறும்
எதிர்காலம் படைக்கிறது.

முடமாகிப் போகாமல்
முளைக்கின்ற அரும்பெல்லாம்
திடமாகச் சத்துணவுத்
திட்டம்வழி சமைக்கிறது!



சாரமுள்ள சமுதாயம்
தழைத்துவர நாட்டிலுள்ள
ஈரமுள்ள புள்ளிகளின்
இதயம் திறக்கிறது!

# பொன்னிக்கும் ஆதரவு

## கோமதி ஸ்வாமிநாதன்

**முதியோர் ஓய்வு ஊதியத் திட்டம்**

**போ**ன்னம்மா கிழவி பிறக்கும்போதே கிழவியாகப் பிறக்கவில்லை. எல்லோரையும் போல குழந்தையாகத்தான் பிறந்தாள்.

கட்டை வண்டி ஓசையைத் தவிர வேறு எந்தவித நாகரிக வாகனங்களின் போக்குவரத்து ஒலியையும் கேட்டறியாத ஒரு குக்கிராமத்துக் குழந்தையாகத் தான் பிறந்தாள்.

பொன்னிக்குட்டியாகவும், பொன்னியக்காவாகவும், பொன்னியம்மாவாகவும் ஒரு காலத்தில் அவள் இருந்தாள் என்பது அவளுக்கே மறந்து போய்விட்டிருந்தது.

கடந்த பல வருடங்களாக அவள் மற்றவர்களுக்கு பொன்னிக் கிழவிதான். கொஞ்சம் பழகியவர்கள், அவசரத்திலும், வேகத்திலும் ஈடுபட்டிருக்காத நேரங்களில் 'ஆயா' என்று கூப்பிடுவார்கள்.

அந்த நேரத்தில் அவள் உடல் கொஞ்சம் புல்லரிக்கும். மிகவும் நெருங்கியவர்கள், பேரன், பேத்திகள் அன்புடன் அழைப்பது போலக் கற்பனை செய்து கொண்டு சில கண நேரம் மெய் மறந்து போவாள். அப்புறம்தான் அவளுக்கு நினைவுக்கு வரும், தனக்கு என்று யாருமே உறவுக்காரர்கள் இந்தப் பரந்த உலகத்தில் இல்லை என்னும் விஷயம்.

அன்றாடக் கஞ்சிக்கு மாலை நேரங்களில் கடைவாசலில் நின்று அரிசி வாங்கி உலை வைக்கும் குடும்பத்தில்தான் பிறந்தாள். அந்தக் கிராமத்தில் பள்ளிக்கூட வாசனை அடிக்கவேயில்லை. எல்லோருக்குமே இடது கைப்பெரு விரல் ரேகைதான், கடன் பத்திரங்களிலும் புரோ நோட்டுக்களிலும் புரள உதவின.

ஆனால், பொன்னி வாய் மொழியாகவே அல்லி அரசாணி மாலையையும் புலந்திரன் களவையும் பாடம் பண்ணி இனிய குரலில் பாடுவாள். ஊரில் கும்மி கோலாட்டம் என்றால், மதமதப்பால் வளர்ந்து கலகலப்பாய்ப் பேசும் பொன்னிக்குட்டி கலந்து கொள்ளாமல் அந்த நிகழ்ச்சி நடக்காது.

அரைவயிற்றுக் கஞ்சியிலும் ஆனந்தத்துடன் வாழத் தெரிந்த குடும்பம்தான் அவள் குடும்பம். ஆனால் அவளுக்குப் பதினைந்து வயது நடந்து கொண்டிருந்த போது, பொன்னியின் அப்பன் மாயாண்டி ஒரு மகா தவறைச் செய்தான்; பொன்னிக்குக் கல்யாணத்தைப் பண்ணி வைத்தான். கல்யாணம் செய்து வைத்தது தவறு இல்லை. ஆனால் கோளாறு எல்லாம் அவன் தேர்ந்தெடுத்த மாப்பிள்ளை முனுசாமியிடம் இருந்தது. அவனுக்கு முப்பது வயதாகியிருந்தும் எந்தத் தொழிலிலும் ஈடுபடாத முழுச் சோம்பேறி-அவன் ஈடுபட்டதெல்லாம், சீட்டுக்கட்டைப் பிரிப்பதிலும், கள்ளு மொந்தையைக் கையிலெடுப்பதிலும்தான்.

பாவம் மாயாண்டி! ஏமாந்து விட்டான். திருத்த முடியாத தவறைச் செய்து விட்டான்! பொன்னி மாயாண்டி வீட்டிலிருந்து இடம் மாறி, திருமணம் செய்து கொடுத்த அந்தஸ்தினால் பொன்னி அக்கா ஆனாள். சீக்கிரமே கால்வயிற்றுக் கஞ்சிக்கே சிரமப்பட ஆரம்பித்தபோது அவளுக்கு வயது இருபத்து ஐந்து. தளர்ச்சியினாலும், உடல் உழைப்பினாலும், அவள் அப்போதே பொன்னியம்மா ஆகி விட்டாள்.

ஆனால் அவளை மேலும் தளர்ச்சியடைய வைக்க குழந்தைகள் பிறக்கவில்லை. அப்போதுதான் முனுசாமி அந்த கிராமத்தை விட்டே கிளம்ப ஏற்பாடு செய்தான். பட்டணத்திற்குப் போனால் புதுப்பிழைப்புத் தேடலாம் என்று யாரோ சொல்லி வைத்தார்கள். மனைவியை இழுத்துக் கொண்டு கிளம்பிவிட்டான். அது ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பதாம் ஆண்டு.

''ஆயா! ஆயா! கொஞ்சம் தொட்டில் ஆட்டேன்! தூங்க மாட்டேன் என்று அடம் பிடிக்கிறான்!'' என்ற குரல் சமையல் கட்டிலிருந்துவந்தது. பொன்னி, முற்றத்தில் கழுவிய பாத்திரங்களை உள்ளே கொண்டு போய் வைப்பதில் முனைந்திருந்தாள்.

சில நிமிடங்களில் கீச்சுக் குரலில் ஒரு கிராமியப் பாட்டு தொட்டில் பக்கத்தில் ஒலித்தது. தொடர்ந்த சில நிமிஷங்களில் குழந்தை தூங்கி விட்டது.

வீட்டு எஜமானி அம்மாள் வெளியே வந்தாள்.

''ஆயா! இந்த வயசிலேயும் நீ ரொம்ப நல்லா தாலாட்டுப் பாடறே! உன் குரல் கேட்டா அந்தப் போக்கிரிப் பயலும் தூங்கிப் போறான். என்ன மாயமோ? ராவேளைகளிலே அவன் தூங்காம முரண்டு பிடிக்கிறபோது, நான் பாடினா, அவனும் தூங்கறது இல்லை. என் வீட்டுக்காரருக்கும் அது பிடிக்கிறதில்லை!'' வீட்டு எஜமானி தேவகி பெருமிதத்துடன் பொன்னியைப் பாராட்டினாள்.

பொன்னிக்கு அந்த வயதிலும் நாணம் வந்தது. 'சின்னம்மா' உங்களுக்கு நினைவிருக்காது. ஒரு காலத்திலே உங்களுக்கே இந்த மாதிரி தாலாட்டுப் பாடி தூங்க வச்சிருக்கேன்! அப்ப, இன்னமும் நல்லாப் பாடுவேன். உடம்பிலே தெம்பு இருந்தது. ஹூம்! முப்பது வருஷம் ஓடிப்போச்சு!





உங்க ஐயா! டில்லியிலிருக்காரே! கடுதாசி போட்டாரா? சௌக்யமாயிருக்காங்களா? நேத்து தபால்காரரொருவர் வந்த போதே கேட்கணும்னு - நினைச்சேன்..'' என்றாள் பொன்னி உரிமையுடன்.

''எல்லாரும் சௌக்கியமா இருக்காங்களாம் ஆயா! இரண்டு மாசம் கழிச்சு அப்பாவும் அம்மாவும் இந்தப் பக்கம் வரப்போறாங்களாம்!...ஆயா!...நீ மார்க்கெட் பக்கம் போகப் போறியா? கொஞ்சம் தக்காளி வாங்கிக் கொடுத்துட்டுப் போயேன்...'' தேவகி நீட்டினாள்.

பொன்னிக்கு மனத்துள் கொஞ்சம் சபலம். தன்னைப் பற்றி தேவகியோட அப்பா விசாரிச்சிருக்கார் கடுதாசியிலே என்று சொல்லியிருக்க மாட்டாளா என்ற ஏக்கம்....! ஹூம் அவருக்கு எத்தனை வேலையோ? அவர் மறந்திருக்கலாம்! ஆனால் அந்த மகானுபாவனை என்னால் மறக்க முடியுமா! அந்த மனுஷன் ஒரு தெய்வம் கணக்காக் காப்பாற்றினாரே என்று நினைத்துக் கொண்டே கிளம்பினாள் அவள்.

பொன்னி-முனிசாமி இடையே புருஷன் பெஞ்சாதி உறவு அவர்கள் அன்று சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் இறங்கும் வரைதான் நீடித்தது. பொன்னியின் தலையிலே மூட்டையைத் தூக்கி வைத்துவிட்டு முன்னாலே நடந்த முனிசாமி, ராமேஸ்வரத்திலிருந்து திரும்பி யிருந்த பைராகிகள் கூட்டத்தில் கலந்து போயே போய்விட்டான்! அப்புறம் பொன்னி அவனைப் பார்க்கவே இல்லை. 'என்னை இப்படி முன்பின் தெரியாத சீமையிலே தவிக்க விட்டு விட்டுப் போனதுக்கு, ஊரிலிருந்தே சொல்லாமல் கொள்ளாமல் ஓடியிருக்கலாமே என்று பொன்னி புலம்பி அழுதாள்.

அடுத்து வந்த ஒரே ரயிலிலிருந்து இறங்கிய ஒரு இளைஞனும் அவன் மனைவியும், அழுது கொண்டிருந்த பொன்னிக்கு அவள் நிலையை உணர்ந்து உதவி செய்ய முன் வந்தார்கள். அங்கேயே நாலு ஆறுதல் வார்த்தை சொல்லிக் கையில் கொஞ்சம் சில்லறையைக் கொடுத்துக் கத்தரித்து விடவில்லை.

தங்களுடன் வீட்டிற்கே அழைத்துப் போனார்கள். அவளுக்கு ஊருக்குத் திரும்பிப்போகப் பணம் கொடுத்து உதவுவதாகச் சொன்னார்கள். பொன்னி தீர்மானமாக மறுத்து விட்டாள்.

''என் புருஷனுக்கு கிராமத்துக்குத் திரும்ப யோக்கியதை இல்லை. ஒரே கடன். நான் அங்கே போகணும்னா அவரு இருக்கணும். அவரு இருக்கமாட்டாருன்னு தெரிஞ்சு போச்சு. என்னையே ஒரு கடனாக நினைச்சு மனுஷன் தலைமறைவாய் போயிட்டாரு! ரயிலிலே அவரு பேசிக்கிட்டு வந்ததை நினைச்சுப் பார்க்கிறேன். பட்டும் படாமலும், நான் பல வீடுகளிலே வாசல் பெருக்கி, பாத்திரம் கழுவி புழைச்சுப் பழகணும்னு ஏதோ சொன்னாரு! ஏதோ ஒரு முடிவுக்கு அவரு அப்பவே வந்துட்டாருன்னு தோணுது. இங்கே இருந்தா அகஸ்மாத்தாகவாவது அவரைமறுபடியும் பார்க்கலாம்ங்கற நம்பிக்கை. ஊருக்குப் போயிப் பிரயோசனமில்லை. எனக்கு இங்கேயே வயிற்றைக் கழுவிக்க ஒருவகை சொல்லுங்க. பெத்தவங்களுக்கு பாரமாக நான் போக விரும்பலேங்க'' பொன்னி ஒரு முடிவிற்கு வந்து விட்டாள்.

இரண்டாவது உலக மகா யுத்தம் நடந்து கொண்டிருந்த நேரம். பலர் சென்னையைக் காலி செய்துவிட்டுப் போயிருந்தார்கள். பொன்னிக்கு இரண்டு மூன்று தெரிந்த வீடுகளில் வேலைக்கு ஏற்பாடு செய்து கொடுப்பது அந்த இளைஞனின் மனைவிக்கு வசதியாக இருந்தது. அவைகளில் அவள் வீடு ஒன்று. பக்கத்திலேயே பொன்னிக்கு ஒரு மூதாட்டியின் துணையும், வசிக்கக் குடிசையும் கிடைத்தன.

அந்தத் தம்பதியின் கருணையினால் பத்து வருட காலம் ஓட்டினாள். அப்போதுதான் தேவகி பிறந்தாள். தேவகி பிறந்த இரண்டாவது வருடம் அந்தக் குடும்பம் உத்தியோக காரணமாக டில்லிக்குப் போக வேண்டி வந்தது. பொன்னியும் தன் உத்தியோகத்தை மாற்றிக் கொண்டாள். வீட்டு வேலைகள் செய்வதற்குப் பதிலாகச் சாப்பாட்டுக் கூடை சுமக்கத் தொடங்கினாள்.

இடையே மாயாண்டி விலாசத்தைச் சொல்லி ஒரு கார்டு எழுதச் சொன்னாள். அது விலாசதார் இல்லை என்ற குறிப்புடன் திரும்பி வந்தது. முனுசாமி திரும்பவும் அவள் கண்களில் படவே இல்லை. ஊர், உற்றார், கணவன் எல்லாவற்றையும் மறந்துவிட்டாள். அதற்குப் பதிலாக மனிதாபிமானம் பொங்கும் மனத்துடன் உழைத்தாள். உழைக்காமல் ஓடிப்போன தன் கணவன் பங்கிற்கும் சேர்த்து உழைத்தாள். உடலில் வலு இருக்கிறவரை உழைத்துச் சாப்



பிட வேண்டும் என்ற கொள்கை அந்தப் பாமரப் பொன்னியிடம் ஒட்டிக்கொண்டது.

நான்கு வருஷத்திற்கு முன்புதான் அந்தச் சம்பவம் நடந்தது. அறுபது வயதைத் தாண்டிய பொன்னிக்கிழவி ஒருநாள் அரண்மனைக்காரன் தெரு சந்திப்பின் பக்கம் பேருந்திலிருந்து இறங்கிய பிறகு சாப்பாட்டுக் கூடையை அகற்றும் நேரத்தில் அவசரமாக நடைபாதைக்கும், பேருந்துக்கும் நடுவே வந்த சைக்கிள் ஓட்டி அவள் மீது மோதித் தள்ளிவிட்டான்.

உடலில் காயம் ஏதும் இல்லை என்றாலும் அவள் ஒருவித அதிர்ச்சிக்குள்ளானாள். முழங்கால்களில் வலி தொடர்ந்தது. விளைவு-தனக்குப்படி அளிக்கும், சாப்பாட்டுக் கூடை எடுக்கும் வேலையைச் செய்ய முடியவில்லை.

இந்த நிலையில் ஒரு காலத்தில் அவள் தாலாட்டுப்பாடி வளர்ந்த தேவகி பெரியவளாகி, தாயாகி, கணவனுடன் டில்லியிலிருந்து சென்னைக்கு வந்தாள்.

''ஆயா! நீ இனிமேல் வேலை செய்ய வேண்டாம். எங்கள் வீட்டிலேயே எங்களோடு இருக்கலாம்'' என்று தேவகி சொல்லிப் பார்த்தாள். பொன்னிக்கு அந்த ஏற்பாடு திருப்தியாக இல்லை. ''சின்னம்மா! உழைக்கணும் சாப்பிடணும். நான் உங்க வீட்டிலே கொஞ்சமாவது வேலை செய்ய அனுமதிக்கணும்'' என்றாள் பொன்னி.

தேவகி பேச்சை மாற்றினாள்.

''ஆயா! ரொம்ப வருஷமாச்சே! உங்க ஊர் உனக்கு நினைவிலே இருக்கா? உங்க ஊர்க்காரங்க யாரையாவது பார்த்தியா?'' என்று உரிமையுடன் கேட்டாள்.

''சின்னம்மா! அந்த வேடிக்கையை ஏன் கேட்கறீங்க? போன வருஷம் எங்க பேட்டையிலிருந்து ஒரு குடும்பம் மதுரைப் பக்கம் ஏதோ திருவிழாப் பார்க்கப் புறப்பட்டாங்க. எனக்கும் எங்க கிராமத்தைப் பார்க்கணும்னு ஆசை, கொஞ்ச நாளாகவே! அவங்க கூடப் போயிருந்தேன்..''

தேவகி இடைமறித்தாள்; ''உன்னை யாரும் அடையாளம் கண்டுக்கிட்டாங்களா?'' என்றாள்.

''சின்னம்மா! எனக்கே எங்க கிராமத்தை அடையாளம் கண்டுக்கிட முடியலியே! அப்படியில்ல மாறிப் போயிருக்கு. எங்க கிராமத்துக்கே பஸ் போகுதே! முன்னே எல்லாம் அஞ்சு மைல் மாட்டு வண்டியிலே போயில்ல காலையிலே பஸ்ஸுக்கு நிக்கணும்''.

''அப்புறம்?''

''எங்க ஊருக்கு எலக்ட்ரிக் விளக்கு வந்துடுச்சு. குடி தண்ணிக்கு குழாய் போட்டிருக்காங்க. ரோடு எல்லாம் போட்டிருக்காங்க. கம்மாயைப் பெரிசு படுத்தி இப்போ விவசாயத்துக்கு நிறைய வசதி பண்ணியிருக்காங்களாம்! சின்னம்மா! எங்க அய்யாவோட குடிசை இருந்த இடமே தெரியலே! அங்கே ஒரு பள்ளிக்கூடம் வந்திருச்சி பெரிசா! ஜனங்க சந்தோஷமாயிருக்காங்கசின்னம்மா! அந்த சந்தோஷத்திலே நானும் திரும்பி வந்துட்டேன். சர்க்காரு கிராமங்களுக்கு ரொம்ப உதவி செஞ்சிருக்கு.''

பொன்னியின் குரல் உற்சாகத்தில் கரகத்தது.

''ஆயா! அதே சர்க்கார் உன்னைப்போல சொந்தக்காரங்களோ மற்ற வசதியோ இல்லாத வயசானவங்களுக்குப் பென்ஷன் கொடுத்து உதவுது. தெரிஞ்சுக்க. நான் உதவி பண்றேன்னு உனக்கு அதை ஏத்துக்கிட மனசு இடம் கொடுக்கலே! சர்க்கார் கொடுத்தா வாங்கிக்கணும். அது உங்க கிராமத்திற்கே உதவியிருக்கே! நாளைக்கு எங்க வீட்டுக்காரர்கிட்டே சொல்லி அதற்கான வழியைப் பார்க்கச் சொல்றேன். அதற்குப் பதிலாக நீ அப்பப்போ இங்கே வந்துஎன் மகனுக்கு தாலாட்டுப் பாடணும், என்ன சொல்றே ஆயா?''

தேவகி நிறுத்தினாள். பொன்னியின் முகத்தில் வெகுநாட்களுக்குப் பிறகு சிரிப்புப் படர்ந்தது. அது அவள் சம்மதத்தைக் குறிப்பிட்டது.

''சின்னம்மா! அந்தச் சேலை நல்லாயிருக்கா எனக்கு சொல்லுங்க'' என்று ஆனந்தத்துடன் ஒரு நாள் வந்தாள் பொன்னி. நடை தளர்ந்திருந்தாலும் அவள் மனம் தளரவில்லை.

''ஓ! சுதந்திரத் தினப் பரிசு தானே! சர்க்கார் உங்களுக்கு வழங்கும் அன்பளிப்பு! நல்லா இருக்கு ஆயா! இப்போ உதவித் தொகை கூட இருபத்தி ஐந்து ரூபாயிலிருந்து முப்பத்தி ஐந்து ரூபாயாக உயர்ந்திருக்கில்ல? உன் புடவை உனக்கு ரொம்பப் பொருத்தமாக இருக்கு! உனக்கு எழுபது வயசு இருக்குமா? பார்க்க அம்பது வயசு மாதிரி இருக்கு....'' தேவகி நிறுத்தினாள்.

''போங்க சின்னம்மா! அந்த மனுஷன் என்னை என்னிக்கு எழும்பூர் ஸ்டேஷனிலே விட்டுட்டுப் போனானோ அன்னிக்கே எனக்கு எழுபது வயசாயிருச்சு'' பொன்னி கண்களில் ஈரம் படர்ந்தது.

''ஆயா! அதை எல்லாம் மறந்துடு! மிச்சமிருக்கிற நாட்களைச் சந்தோஷமாகக் கழிக்கணும். உனக்குத் தெரியுமா? பொங்கல் திருநாளிலிருந்து உனக்குப் பகல் நேரங்களிலே சத்துணவையும் சர்க்கார் கொடுக்கப்போகுது. உடம்பிலே உயிரோடு தென்பும் இருக்க வேண்டாமா? அதுக்குத் தான்! உன்னைப்போல் சுமார் இரண்டு லட்சம் பேருக்குத் தமிழ்நாட்டிலே அந்தச் சாப்பாடு வசதி கிடைக்கப்போகுது.''

''நிஜமாகவா சின்னம்மா? ஜனங்களுக்கு உதவ சர்க்கார் என்னென்ன ஏற்பாடுகளோ செய்யறாங்க! மகராஜங்க. பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கு சத்துணவு கொடுக்கிறாங்களே, அது மாதிரியா சின்னம்மா?''

''ஆமா, அந்தக் காலத்திலே இல்லாத வசதிகளெல்லாம் இப்போ கிடைக்குதே போய் கொஞ்சம் தொட்டிலை ஆட்டேன்.''

''கண்ணே ராசா! கண் உறங்குடா'' என்று பாடிக்கொண்டே உள்ளே போனாள் பொன்னி.

இப்போது பொன்னிக் குட்டியின் உற்சாகம் அவள் மனத்தில் ஓடிக்கொண்டிருந்தது.



# தமிழகம் மீண்டும்



கங்கைகொண்ட சோழன் என்றும், கடாரம் கொண்ட சோழன் என்றும் பட்டம் ஏற்றவனும், ராஜராஜ சோழனின் அருமை மகனுமான முதவரம் இராசேந்திர சோழனின் பிறந்தநாளான மார்கழித் திருவாதிரையை இரு நாள் விழாவாக (1982 டிசம்பர் 29, 30) கொண்டாடத் தமிழ் நாடு அரசு முடிவு செய்தது. திருச்சி மாவட்டம் செயங்கொண்டம் அருகில் உள்ள கங்கைகொண்ட சோழபுரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்ள, விழா சிறப்புடன் நடைபெற்றது.

கங்கைகொண்ட சோழபுரத்தில் டிசம்பர் 29ஆம் நாள் காலை 6 மணி அளவில் திரு சனார்த்தனம் அவர்களின் நாதசுர இசையுடனும், கும்பகோணம் திரு செயராமன் அவர்களின் வீணை இசையுடனும், காசிமடம் தியாகராசன் பாடிய தேவாரப் பதிகங்களுடனும் விழா தொடங்கியது.

காலை 9 மணி அளவில் கருத்தரங்கம் திருப்பனந்தாள் காசிவாசி சுவாமிகள் தவத்திரு முத்துகுமாரசாமித் தம்பிரான் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கருத்தரங்கில் டாக்டர் கலைக்கோவன், திரு. கருப்பமுத்து, திரு பி.அன்பரசு, திரு இ.சுந்தரமூர்த்தி, திரு என்.சேதுராமன் திரு. சாத்தையா, திரு சீதாமூர்த்தி, திரு எல். தியாகராசன் திரு.மு.கலைவாணன் இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டு இராசேந்திர சோழனின்பெருமைகளைச் சிறப்பாக எடுத்துக் கூறினார்கள்.

மாலையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் நடுவராக இருந்து பட்டிமன்றம் நடைபெற்றது. பட்டிமன்றத்திலே கங்கை கொண்ட சோழனின் பெரும் புகழுக்குக் காரணம் கலையே, வீரமே, நிர்வாகமே என்றுமூன்று அணியினர் தத்தம் கருத்துக்களை எடுத்துரைத்துப் பொதுமக்களின் கைதட்டலைப் பெற்றனர்.



கலையே என்ற தலைப்பில் திரு நடராசன், திரு. தாமரைக் கண்ணன், திரு ம.வெ.பசுபதி ஆகியோரும் வீரமே என்ற தலைப்பில் திரு தெ.ஞானசுந்தரம், திரு வே.மகாதேவன், திரு கே.என்.ராமச்சந்திரன் ஆகியோரும் ,நிர்வாகமே என்ற தலைப்பில் திரு.தங்கமணி, திருமதி.ஆ.பத்மாவதி, திரு.தமிழ்க் குடிமகன் ஆகியோரும் பட்டிமன்றத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நடுவர், தவத்திரு குன்றக்குடி அடிகளார் ''கங்கை கொண்ட சோழனின் பெரும்புகழுக்குக் காரணம் கலையே'' என்று தீர்ப்பளித்தார்.

இரவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு அறிஞர்கள், தலைவர்கள், சிறப்புரையாற்றினார்கள்.

திரு.பெ.முத்தையன் (அறங்காவலர், அருள்மிகு கங்கை கொண்ட சோழீச்சுரர் கோயில், கங்கைகொண்ட சோழபுரம்) அவர்கள் பேசுகையில் இந்தப் பகுதியில் உள்ள 'பொன்னேரி' ஏரியை ஆழப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

உடையார் பாளையத்தைச் சேர்ந்த ஜமீன் திரு பெரிய குழந்தை ராஜா பேசுகையில், ''இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இராசேந்திர சோழன் பிறந்நாள் விழா பட்டிமன்றமாகக்



COMMISSIONER OF TAMILNADU
ARCHIVES & HISTORICAL RESEARCH
27 JAN
EGMORE MADRAS-8




# 1983 நாட்காட்டி

**ஜனவரி**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | × | × | × | × | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

**பிப்ரவரி**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| × | × | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | × | × | × | × | × |

**மார்ச்**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| × | × | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | × | × |

**ஏப்ரல்**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| × | × | × | × | × | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**மே**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | × | × | × | × |

**ஜூன்**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| × | × | × | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | × | × |

**ஜூலை**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 31 | × | × | × | × | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

**ஆகஸ்ட்**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| × | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | × | × | × |

**செப்டம்பர்**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| × | × | × | × | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | × |

**அக்டோபர்**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | × | × | × | × | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

**நவம்பர்**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| × | × | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | × | × | × |

**டிசம்பர்**

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| × | × | × | × | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

# பெருமையை பெறுகிறது





நிகழ்ச்சித் தொகுப்பு
அ. மருதவிநாயகம்

கொண்டாடப்பட்டது. இன்று அரசு பெரிய அளவில் விழா நடத்துவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்'' என்றார்.

ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினர் திரு சா. கிருஷ்ண



மூர்த்தி அவர்கள் பேசுகையில், ''வரலாற்றுச் சிறப்பு மிக்கவர்கள் வாழ்ந்த இடம் எப்படி உள்ளது என்பதை நீங்கள் இன்று பார்க்கிறீர்கள். இந்தப் பகுதியில் எந்தத் தொழில் வளமும் இல்லை ஆகவே புதிய தொழில்களைத் துவக்கவேண்டும்'' என்றார்.

செயங்கொண்டம் முன்னாள் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு கோ. தியாகராசன் அவர்கள் பேசுகையில், ''நல்ல முறையில் சீரும் சிறப்புமாக இங்கு இராசேந்திர சோழன் விழா முதல் முறையாக நடைபெறுகிறது'' என்றார்.

செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் திரு ப. தங்கவேலு அவர்கள் பேசுகையில் ''300 ஆண்டுகளுக்குப் பிறகு சீருடனும் சிறப்புடனும் இங்கு விழா நடைபெறுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்'' என்றார்.

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. ஐ. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில், ''இந்துக்களுக்கு கங்கை புனிதமானது. சேரன், சோழன் முதலிய மன்னர்கள் கிழக் கடற்கரையோரமாகக் கங்கைக்குச் சென்றார்கள். சிந்து நதிப் பகுதியில் இந்து மதத்திற்கு சாதகமானவர்கள் அந்நாளில் இல்லை'' என்றார்.

திரு இரா. சௌந்தரராஜன் எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், ''புரட்சித் தலைவர் அவர்கள் சட்டமன்றத்தில் பேசும் போது ஆலயங்களைப் பராமரிப்பேன்; புராதன கலைகளைப் பாதுகாப்பேன் என்று சொன்னார் அதை இன்று செய்து காண்பிக்கிறார். மறைந்த, மறைக்கப்பட்ட வரலாறுகளை இந்த அரசு வெளிக் கொணரும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்'' என்றார்.

மத்திய அரசின் கலாச்சாரத் துறையைச் சார்ந்த கூடுதல் செயலர் டாக்டர் கபிலவத்சயன் அவர்கள் உரையாற்றுகையில், ''தஞ்சாவூர் பெரியகோவில் கங்கை கொண்ட சோழபுரம் பகுதிகளைக் கடந்த 30 ஆண்டுகளாகப் பார்த்து வருகின்றேன். இங்கு பிறந்த மன்னன் பலதேசங்களுக்குச் சென்றுள்ளான். அவனது பிறந்தநாள் விழாவை இவ்வளவு சிறப்பாகக் கொண்டாடும் உங்களுக்கு எனது வணக்கத்தையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.





முத்தமிழ்க் காவலர் திரு கி.ஆ பெ.விசுவநாதம் அவர்கள் பேசுகையில், ''சேர சோழ பாண்டியர்களை மூவாயிரம் ஆண்டுகள் யாராலும் வெற்றிகொள்ள முடியவில்லை. அதனால்தான் மாமன்னர்களாக விளங்கிய அசோகர், அலெக்சாண்டர் ஆகியோர் காவிரிக் கரையைத் தாண்டித் தமிழகத்திற்கு வரமுடியவில்லை. அத்தகைய வீரம் செறிந்தவர்களாகத் தமிழ் மன்னர்கள் இருந்தார்கள். நமது தமிழ் மன்னர்கள் இமயத்தின் உச்சியிலே புலிக் கொடியையும், வில் கொடியையும் பொறித்து இருக்கிறார்கள். அந்த அளவிற்குத் தமிழர்களின் வீரம் உலகமே வியக்கும் வண்ணம் இருந்தது. ஆனால் இன்றைக்குத் தமிழர்கள் நிலையை உணர்ந்து பார்க்க வேண்டும்'' என்று கூறினார்.

விழாவில் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் வரவேற்புரை நிகழ்த்தி விழா சிறப்பு மலரினை வெளியிட, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள், விழா நோக்கம் பற்றித் தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் விவரித்தார்கள்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ்.என். இராசேந்திரன் அவர்கள் சுற்றுலா மையத்திற்கு அடிக்கல் நாட்டிச் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''இதுபோன்ற விழாக்களை இந்த அரசு நடத்துவது மாமன்னர்களின் வாழ்க்கையையும், ஆட்சி முறையையும் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே கல்வியை வளர்த்தவர்கள் தமிழர்கள். ஆங்கிலேயர்கள் இங்கே வரும் முன்னே கட்டடக் கலையில் தமிழ் மன்னர்கள் எவ்வளவு சிறந்து விளங்கினார்கள் என்பதை வரலாறு நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

''இந்தப் பகுதியில் உள்ள இன்று 'பொன்னேரி' என்று அழைக்கப்படும் சோழ கங்கை ஏரிக்கு, அன்று கொள்ளிடத்திலிருந்து 60 மைல் வாய்க்கால் வெட்டி தண்ணீர் கொண்டு வந்து இருக்கிறார் இராசேந்திர சோழர். ஆனால் அதுபோன்று இன்றைய நிலையில் கொண்டுவருவது கடினம். இந்த ஏரியைத் தூர்எடுத்து ஆழப்படுத்துவதற்காக ரூ. ஒரு இலட்சம் விரைவில் செலவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் பல ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்''

முதல் நாள் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நிகழ்ச்சிக்கு மாண்புமிகு சட்டமன்ற மேலவைத்தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் தலைமை தாங்கியும், கங்கை கொண்ட சோழனின் இலச்சினையைத் திறப்பு செய்தும் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''கங்கைகொண்டான், கடாரம் கொண்டான் என்று
சிறப்புப் பெயர் பெற்ற
மாமன்னனின் விழாவில்
கலந்து கொள்ளும் நான்

தமிழ் நாட்டின் வரலாற்றைச் சிறிது நினைத்துப் பார்த்தேன். இன்றைக்கு இதுபோன்ற விழாக்கள் எடுப்பது தமிழர்களின் பிறவிக் கடமையாகும். தமிழ் மன்னர்களின் கட்டடக் கலையையும், சிற்பக் கலையையும், ஆட்சித் திறமையையும் உலகமே வியந்து வியந்து பாராட்டுகின்றது. சிதறிக் கிடக்கும் சிறுபான்மையினர் ஒன்றுபட வேண்டும், தமிழன் யார் என்பதை உலகம் உணர, நமது கல்வி முறையை மாற்றி இழந்த பெருமையை நாம் மீண்டும் பெற்றாக வேண்டும்.''



அரியலூர் கோட்ட உதவி ஆட்சித் தலைவர் திரு மு.கலைவாணன் இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார். விழா இறுதியில் கலைமாமணி செல்வி ஸ்ரீபிரியா மற்றும் வைஜந்தியமாலா குழுவினரின் பரதநாட்டியம் நடைபெற்றது.

இரண்டாம்நாள் விழா காலை 6 மணி அளவில் திருவிசைப்பா பாடலுடன் தொடங்கியது. கங்கைகொண்ட சோழீச்சுரருக்கு அபிசேக, அலங்கார தீபாராதனைகளை திருவேற்காடு ஐயப்ப சுவாமிகள் முன்னின்று நடத்தினார்கள்.

காலை 10 மணி அளவில் அண்ணாமலைப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு சை.வே.சிட்டிபாபு அவர்கள் தலைமையில் ஆய்வரங்கம் நடைபெற்றது. திருமதி ஆர். வசந்தகல்யாணி கோயிற் பணிகள் பற்றியும், திரு. ஸ்ரீதரன் கல்வெட்டுக்களின் அமைப்பு பற்றியும், திரு எஸ். இராமச்சந்திரன் அயல் நாட்டுத் தொடர்பு பற்றியும், திரு. செந்தில் செல்வக்குமரன் கொடைகள் பற்றியும், திரு. வேதாச்சலம் நாட்டுப் பிரிவுகள் பற்றியும், திரு மா.இராசேந்திரன் நிர்வாகத்தில் பெண்கள் பற்றியும், திரு.மு.அருணாச்சலம் சோழர் காலத்திய கோயில்கள் பற்றியும், திரு அருமைராசு ஒப்பற்ற தலைநகர் பற்றியும் டாக்டர் பிஸ் சார்ட் (பிரெஞ்சு) கட்டடக் கலை பற்றியும், டாக்டர் தஷன்ஸ் (பிரெஞ்சு அறிஞர்) நகரமைப்பு பற்றியும், செல்வி கொரினா வெசல்ஸ் (ஜெர்மானிய அறிஞர்) இராசேந்திர சோழன் காலத்திய வரலாறுகளைப் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்கள்.

## இராசேந்திரன் காலத்து அறிஞர்கள்

- சர்வசிவ பண்டிதர்
- இலகுளீச பண்டிதர்
- ஈசானசிவ பண்டிதர்
- நம்பியாண்டார் நம்பி
- கருவூர்த் தேவர்
- நம்பிகாட நம்பி
- நாராயண கவி
- அமிதசாகரர், குணசாகரர்
- சதுரானன பண்டிதர்



# கங்கைகொண்ட சோழபுரத்தின் முன்னேற்றம்



பிற்காலச் சோழர்கள் பெருமையுற்ற பின் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். சோழ மன்னர்களில் திலகமாய்த் திகழ்ந்த ராஜராஜனுக்குப் பின்னர் அவனது மகன் முதலாம் இராசேந்திரன் கி. பி. 1012-ல் அரியணை ஏறினான். அவனது வீரதீரமிக்க சிறப்பான ஆட்சி கி. பி. 1044 வரை கோலோச்சியது. முதலாம் இராசேந்திரன் கடாரத்தைக் கைப்பற்றியதோடு கங்கைவரை சென்று கவின்பெரு புலிக்கொடியை வானுயர்த்திப் புகழ் பெற்றான்.

கங்கை வரை வெற்றி கண்ட காரணத்தால் அவன் கங்கை கொண்ட சோழன் என்றே அழைக்கப்பட்டான். அந்த வெற்றியை நினைவுறுத்தும் வகையில் கங்கை கொண்ட சோழபுரம் என்ற பெருநகர் உண்டாக்கினான். அது அவனது கலைநகராய்த் திகழ்ந்தது. இன்று களையிழந்து காணப்படும் அந்த இடம் அன்று சீரும் சிறப்பும் பெற்று திருநகராய் விளங்கியிருக்கிறது.

அங்கு சிற்பக் கலையின் உன்னத நிலையினைப் பறை சாற்றிக் கொண்டிருக்கும் பிரகதீசுவரர் ஆலயத்தை எழுப்பினான். கட்டிடக் கலையின் சிறப்பைக் காட்டும் வண்ணம் கோட்டம், கொத்தளங்கள் உருவாக்கப்பட்டன. எழில்மிகு மாடமாளிகைகள் கட்டப்பட்டன. தலைநகரைச் சுற்றி உயர்மதில்கள் எழுப்பப் பட்டிருந்தன. பொறியியல் வில்லாண்மைக்கு எடுத்துக்காட்டாக சோழகங்கம் என்ற வளம் செய்யும் மிகப் பெரிய ஏரி உருவாக்கப்பட்டு மக்களுக்கு வளமும் வாழ்வும் அளித்தது.

நகரம் தமிழகத்தின் ஆழ்ந்த கலைச் சிறப்பினையும், கட்டடக் கலையின் ஆற்றலையும் மாறாத கடவுள் தன்மையையும் புராதனத் தன்மையையும் எடுத்துக்காட்டும் சரித்திரச் சான்றாக என்றும் இந்த விளங்குகிறது.

மாலையில் இராசேந்திரசோழனின் சிறப்புகள் பற்றித் திருச்சி எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு அ.வெ.ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. கவியரங்கில் திரு.இராமராசன் (கம்பராமன்) 'பெண்கள்' என்ற தலைப்பிலும், வருவாய்த்துறை ஊழியர் திரு பெ.சீனிவாசன் 'வழி' என்ற தலைப்பிலும், திரு பொ. இராசேந்திரன் 'ஆட்சி' என்ற தலைப்பிலும், திரு. திருமலைராசன் 'கீர்த்தி' என்ற தலைப்பிலும் திருநா. காமராசன், 'வெற்றி' என்ற தலைப்பிலும் மற்றும் அரசப்பனார், திரு. செல்வராஜ் ஆகியோரும் கவிதை பாடினர்.

தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் இரா.நாகசாமி அவர்கள் இராசேந்திர சோழன் வளைவுக்கு அடிக்கல் நாட்டிச் சிறப்புரை செய்தார்.



இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு. சண்முகசிகாமணி இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி, கங்கை கொண்ட சோழன் வளைவுக்கு அடிக்கல் நாட்டினார்.

திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சாந்தாஷீலா நாயர் இ.ஆ.ப. அவர்கள் பேருந்து நிலையத்தைத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் சத்துவுணக் கூடத்திற்கு அடிக்கல் நாட்டிச் சிறப்புரையாற்றுகையில் கூறியதாவது:



''இராசேந்திரன் கலைநுணுக்கம் உள்ளவர் என்பதற்கு இந்தக் கோயில் ஓர் எடுத்துக்காட்டு. போரில் வெற்றி பெற்றவர்கட்கும் தமிழ் அறிஞர்கட்கும், வீர மரணம் எய்தியவர்கட்கும் இந்த அரசு விழா நடத்தி வருகின்றது. மன்னர் மிகவும் சிவபக்தி மிகுந்தவர். உழைப்பால் உயர்ந்தவர்கள் சோழர்கள். பிரெஞ்சு நாட்டு நிபுணர்கள் இங்கு நுட்பமான கருவிகள் மூலம் ஆராய்ச்சிசெய்து வருகின்றார்கள். அவர்கள் தமிழ் கற்று வருகிறார்கள். தமிழ்நாட்டின் பெருமையை இந்த விழா மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மக்கள் அறிந்துகொள்வதற்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். இந்தப் பகுதி கடலால் சூழப்பட்டிருக்க வேண்டும் என்று இங்கு வைத்துள்ள கண்காட்சி மூலம் உணர்ந்தேன்''

மாண்புமிகு நிதிஅமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்து, கங்கைகொண்ட சோழ மாளிகை வரலாற்றுக்கூடத்தைத் திறந்து வைத்து உரை ஆற்றிய போது குறிப்பிட்டதாவது:

''இராசேந்திர சோழனின் பிறந்தநாள் விழாவை அரசு நடத்துகிறது. இந்த இடம் சுற்றுலா மையமாகத் திகழும். வரலாற்றுப் புகழ்மிக்க கலைப் பொருட்காட்சி இங்கு வைக்கப்படும். இது போன்ற விழாக்களின் மூலம் சோழமன்னர்களின் வீரம், கலை ஆற்றல் ஆகியவற்றை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. நாடெல்லாம் தமிழ் மன்னர்களின் புகழ் எவ்வாறு பரவிக் கிடந்தது என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. சோழ மன்னர்களுக்கு விழா எடுப்பது போல் சேர, பாண்டிய, பல்லவ மன்னர்களின் வரலாறுகளையும் நன்கு ஆராய்ந்து அந்த மன்னர்களுக்குத் தமிழக அரசு விரைவில் அந்தந்தப் பகுதிகளில்விழா எடுக்கும். தஞ்சை மாவட்டத்திலே மலைகளே கிடையாது. ஆனால் உலகமே வியக்கத் தக்க அளவில் தஞ்சைக் கோபுரமும், அங்குள்ள நந்தியும் கட்டப்பட்டு இருக்கின்றன. இந்தப் பெருமை இராசராச சோழனையே சாரும்.

''பஞ்சாயத்துத் தேர்தல்களில் மக்கள் எப்படி வாக்களித்தார்கள்? வேட்பாளர்களின் தகுதி, தேர்தலில் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் என்ன? என்பவை பற்றி கல்வெட்டுகள் கண்டு பிடிக்கப்பட்டு இருக்கின்றன.

''தமிழ் மன்னர்களின் வீர வரலாறுகளை முழுவதும் தெரிந்து கொள்ள இப்படிப்பட்ட விழாக்களைத் தமிழக அரசு தொடர்ந்து நடத்தும்.''

இரண்டு நாள் நிகழ்ச்சிகளும் கங்கைகொண்ட சோழீச்சுரர் வாயிலில் உள்ள பீரங்கி மேடை அருகே அமைக்கப்பட்டிருந்த கடாரங்கொண்ட சோழன் கலையரங்கில் நடைபெற்றன.

லண்டனைச் சார்ந்த தமிழ் அறிஞர் திரு.ஆஷ் அவர்கள் இராசேந்திர சோழன் பற்றித் தமிழில் உரையாற்றினார்.

இரவில் கங்கை கொண்ட விடங்கர் வீதி உலா, வாண வேடிக்கைகள், கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கங்கை கொண்ட சோழன் பிறந்தநாள் விழா, உள்ளத்தைக் கொள்ளை கொண்ட விழாவாக அமைந்தது.



## முதல் இராசேந்திர சோழன்

| | | |
|---|---|---|
| தந்தை | .. | இராஜராஜ சோழன் |
| தாய் | .. | வானவன் மாதேவி என வழங்கும் திருபுவன மாதேவி |
| பிறப்பு | .. | மார்கழித் திங்கள் திருவாதிரை நட்சத்திரம். |
| இயற்பெயர் | .. | மதுராந்தகன் |
| பட்டப்பெயர் | .. | இராசேந்திரன் |
| ஆட்சிக்காலம் | .. | கி.பி. 1012—1044 |
| மறைவு | .. | கி. பி. 1044 |

இராசேந்திர சோழனின் சிறப்புப் பெயர்கள் இருப்தைந்து.

இராசேந்திர சோழனின் மனைவியர் ஐவர்

இராசேந்திர சோழனின் மக்கள் பன்னிருவர்

இராசேந்திரன் காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் முப்பத்திரண்டு.

இராசேந்திர சோழன் வெற்றி கொண்ட நாடுகள் முப்பத்து மூன்று.

இராசேந்திர சோழனின் சேனாதிபதிகளும், வீரத்தலைவர்களும் அதிகாரிகளும் அறுபத்தேழு பேர்கள்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்து ஆண்ட இராசேந்திர சோழனும் அவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்த அரசர்களும் மொத்தம் பதின்மூன்று பேர்.

வடக்கே கங்கைக்கரை வரையிலும், தெற்கே இலங்கை முழுவதும், மேற்கே மேலக் கடற்கரை முதல் கிழக்கே மலேயா, சிங்கப்பூர், பர்மா, சுபத்ரா, ஜாவா, நிக்கோபார் முதலிய நாடுகளை அடிப்படுத்திச் சோழர்தம் வெற்றிக் கொடியான புலிக்கொடி பறக்கவிட்ட மாபெரும் சோழப் பேரரசன்.



## மாளிகை மேடு

கங்கை கொண்ட சோழபுரத்தில் 'மாளிகை மேடு'' என்று அழைக்கப்படும் கோவிலின் அருகில் உள்ள இடத்தில் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் அகழ்வாராய்ச்சி நடத்தி, இராசேந்திர சோழனின் அரண்மனை அடித்தளம், கோட்டை-கொத்தளத்தின் அடித்தளம் போன்றவற்றைத் தோண்டி, காட்சிக்காக வைத்துள்ளனர். திருச்சி மாவட்டத்தில் கிடைத்த காட்சிப் பொருள்கள்_தொல்பொருட்களையும் அருகில் ஒரு காட்சி நிலையம் அமைத்துப் பொதுமக்கள் பார்வைக்கு வைத்திருந்தனர்.













# தமிழிசை இயக்கம்

இல. பழனியப்பன்



தமிழிலே என்ன இருக்கிறது என்ற நிலைமாறி, தமிழிலே எல்லாம் இருக்கிறது என்ற நிலை உருவாகி வரும் காலத்தில் நாம் வாழ்வது நமக்குக் கிடைத்த பெரும்பேறு. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்றதொரு பொற்காலத்தை நோக்கி நாம் பீடு நடை போடுகிறோம். பாராண்ட மொழி மீண்டும் புதிய உணர்வுடன் வளர்ந்து பல்கலைச் செல்வமும் தமிழில் வளர்ந்தோங்கி வரும் காலமிது. வேற்று மொழிகளின் ஆதிக்கத்தால் தமிழர்களின் கலை, சமுதாயம், பண்பாடு, நாகரிகம் ஆகிய அனைத்திற்கும் சவால் ஏற்பட்டிருந்த நேரத்தில் தமிழிசையும் நம் மக்களாலே புறக்கணிக்கப்பட்டிருந்தது. மேடையிலே தமிழிலே பாடும் இசை வாணர்கள் எள்ளி நகையாடப்பட்டார்கள். இசை மேடைகளிலே இறை வணக்கத்திலும்கூட தமிழ் தடைபட்டிருந்தது. தேவாரமும், திருவாசகமும், திருக்குறளும், சிலப்பதிகாரமும் கண்ட செந்தமிழுக்கு இந்நிலை ஏற்பட்டதைக் கண்டு 'வாடிய பயிரைக் கண்டு வாடும்' அருளுள்ளம் படைத்த பல தமிழப் பெரியார்கள் உள்ளம் துடித்தனர். அந்தத் துடிப்பு ஓர் இயக்கமாக உருவெடுத்தது. அந்த மாபெரும் இயக்கம்தான் தமிழிசை இயக்கம்.

அந்த இயக்கத்தின் தந்தையாகத் திகழ்ந்தவர் தில்லையிலே தமிழ்ப் பல்கலை வளர அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கண்ட கொடை வள்ளல் அண்ணாமலை அரசரானவர். தமிழ்நாடு முழுவதும் தமிழிசை முழங்க வேண்டும் என்பதையே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட அப்பெருமகனார் இன்று நம்மிடையே இல்லையெனினும், அவருடைய இலட்சியக் கனவு இன்று நனவாகி, நாடு முழுவதும் நல்லோர் உள்ளந்தோறும் குடிகொண்டு, தமிழிசைத் தென்றல் வீசிக் கொண்டிருக்கிறது.

முத்தமிழ் நடுநாயகமாகத் திகழும் இசைத்தமிழ், பழங்காலத்தில் மேம்பாட்டுடன் திகழ்ந்தது. வேற்று நாட்டாரும் விரும்பிக் கற்ற தமிழிசை, நம்நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் அந்நியர் ஆட்சியில் நலிவுற்றது. இந்நிலை இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை நீடித்திருந்தது. நாயக்கர் ஆட்சிக்காலத்தில் வேரூன்றிய தெலுங்கு இசை, தமிழிசையை இசையரங்குகளில் இறுதியாகப் பாடும் துக்கடா இசையாக மாற்றிவிட்டது.

1936ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இசை மாநாடு அண்ணாமலையரசரின் உள்ளத்தில் புதியஉணர்வினை ஏற்படுத்திற்று. 16.11.1940ல் நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழக பட்டமளிப்புவிழாவில் தமிழிசைவளர்ச்சிக்காக அண்ணாமலையரசர் பத்தாயிரம் ரூபாய் நன்கொடை அளித்தார். அதைத் தொடர்ந்து அண்ணாமலைநகரில் 1941ல் முதல் தமிழிசை மாநாடு நடைபெற்றது. இம்மாநாடு, இதன் பின்னர் திருச்சிராப்பள்ளியில் தந்தை பெரியார் அவர்களின் தலைமையில் நடந்த மாநாடு, அதையடுத்துத் தமிழிசையை ஆதரித்து நடந்த மாநாடு, அதையடுத்துத் தமிழிசையை ஆதரித்து இசைவாணர்கள் விடுத்த அறிக்கைகள், காஞ்சியில் நடந்த சென்னை மாநிலக் கலைச்சொல் ஆக்க மாநாட்டின் தீர்மானங்கள் ஆகிய அனைத்தும் தமிழிசை இயக்கத்தின் வளர்ச்சிக்கும், தமிழிசைச் சங்கத்தின் தோற்றத்திற்கும் முன்னோடியாகத் திகழ்ந்தன. அதே ஆண்டில், தொடர்ந்து சென்னை விக்டோரியா மண்டபத்தில் நாடகத் தந்தை பம்மல் சம்பந்தனார் தலைமையில் பேரறிஞர் அண்ணா, டாக்டர் திருமூர்த்தி, டி.செங்கல்வராயன், இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர், டி.எஸ். இராசரத்தினம், கே.பொன்னையா ஆகியோர் பங்கு கொண்டு தமிழிசை இயக்கத்தை ஊக்குவித்து ஆற்றிய உரைகள் இவ்வியக்கம் சாதி, சமய அடிப்படைகளுக்கு அப்பாற்பட்ட இயக்கம் என்ற உணர்வினைத் தமிழகத்தில் ஊக்குவித்ததோடு, தமிழ் மக்களின் தமிழிசை எழுச்சியைக் கூறுவதாகவும் அமைந்தது. இந்நிகழ்ச்சி அண்ணாமலையரசரின் அருமைக் குமாரர் முத்தையாவேள் அவர்களை இவ்வியக்கத்தின்பால் ஈடுபாடு கொள்ளச் செய்தது.

1941ம் ஆண்டு சென்னை தியாகபிரம்ம மகோற்சவ சபையின் இசை விழாவில் அண்ணாமலையரசரின் தலைமையுரை தமிழிசை இயக்கத்தின் முன்னுரையாக அமைந்தது. அதே ஆண்டு நிகழ்ந்த அண்ணாமலையரசரின் மணி விழாவில் அப் பெருமகன் பெருந் தொகையைத் தமிழிசைக்கு நன்கொடையாக வழங்கியது தமிழிசைக்கு மேலும் வலுவூட்டியது. தொடர்ந்து தமிழிசைக் குழந்தை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தாலாட்டிச் சீராட்டி வளரத் தொடங்கிற்று. தமிழிசை நூல்களின் வெளியீடுகளும், இசையரங்குகளும் சீராகவும், செம்மையாகவும் நடைபெறத் தொடங்கின.

அதன் பின்னர் தேவகோட்டையில் ரசிகமணி டி. கே. சி. தலைமையில் நடந்த தமிழிசை மாநாடும், திருச்சிராப்பள்ளியில் பொன்னையா பிள்ளை தலைமையில் நடந்த மாநாடும் இவ்வியக்கத்திற்கு மேலும் புத்துணர்ச்சியூட்டின. இதைத் தொடர்ந்து தமிழகத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் தமிழிசைக்குரல் ஒலிக்கத் தொடங்கியது. 1942-ல் நடந்த மதுரைத் தமிழிசை மாநாடு, புதுக்கோட்டை மாநாடு, ஆத்தங்குடி இசையரங்கம், குடந்தை மாநாடு ஆகியவை குறிப்பிடத்தக்கன. பின் திருப்பத்தூர், கானாடுகாத்தான், திண்டுக்கல், வேலூர் மற்றும் எல்லா ஊர்களிலும் தமிழிசைக் கல்லூரிகளும் கழகங்களும் தொடங்கப்பட்டன.

தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னை மாநகரில் தமிழிசைச் செம்மல் டாக்டர் ஆர். கே. சண்முகனார் அவர்களின் சீரிய ஒத்துழைப்போடு அண்ணாமலையரசரால் 1943-ஆம் ஆண்டு தமிழிசைச் சங்கம் உருவாயிற்று. இந்நாள் தமிழிசை வரலாற்றிலே ஒரு பொன்னாள். தமிழிசைச் சங்கத்தின் தலைவராக அண்ணாமலையரசரும், துணைத்தலைவராக ஆர். கே. சண்முகம் அவர்களும் ஆனார்கள். அதே டிசம்பர் இறுதியில் முதல் தமிழிசை மாநாடு சென்னை செயிண்ட்மேரி மண்டபத்தில் தொடங்கிற்று. தமிழ்ச் சங்கநாதம் ஒலித்தது.

அண்ணாமலையரசர் தலைமையில் நடந்த இம்மாநாட்டில் பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் இராஜாஜி, பேராசிரியர் கல்கி, நாடகவாணர் பம்மல் சம்பந்தனார் போன்ற அறிஞர் பெருமக்கள் ஒரே மேடையில் தமிழிசை முழக்கம் செய்தார்கள். மாநாட்டின் இறுதியில் பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாடு நடந்த எல்லா நாட்களிலும் நாள்தோறும் தமிழிசை வாணர்களின் இன்ப இசை விருந்தை தமிழ் உள்ளங்கள் செவிமடுத்து, இன்பவெள்ளத்தில் மூழ்கின. பல்வேறு எதிர்ப்புகளைத் தவிர்த்து தமிழிசை இயக்கம் வேரூன்றி வளரத் தொடங்கிற்று. அன்று தொடங்கிய தமிழிசைப்பணி இன்று தொடர்ந்து பல்லாற்றாலும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

பல்லாண்டுகளாக நடந்து வரும் பண் ஆராய்ச்சி மாநாடு, பழந்தமிழ் இசையைப் பற்றி நாம் நன்கு அறிந்து கொள்ளவும், தமிழ் மக்களிடம் தமிழிசையுணர்வை ஊட்டவும் பயன்படுகிறது.

தமிழிசைச் சங்கம் தொடங்கப்பட்ட மறு ஆண்டிலேயே தமிழிசைக் கல்லூரி தொடங்கப்பட்டு, பணியாற்றி வருவதை தமிழ் நெஞ்சங்கள் மனதார வாழ்த்தி வரவேற்கின்றன. இக் கல்லூரியில் வாய்பாட்டு, வீணை, மிருதங்கம் முதலிய அனைத்து இசையிலும் முறையான பயிற்சி ஆண், பெண் இருபாலருக்கும் அளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இக்கல்லூரியின் பணியினைப் பாராட்டி அரசினர் பல்வேறு உதவிகளைச் செய்து வருவது தமிழிசைக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வளர உதவி செய்கிறது. வெளி நாட்டினர் சிலரும் இதில் பயின்று பலன் பெற்றுள்ளனர். 'இராசா அண்ணாமலை மன்றம்' என்ற மிகப் பெரிய சொந்தக் கட்டிடத்தில் தமிழிசைச் சங்கத்தின் பொன் விழா 1967-ல் இவ்வியக்கத்திற்கு தொடக்க காலம் முதல் ஆதரவளித்த பேரறிஞர் அண்ணா தலைமையில் நிகழ்ந்தது, வரலாற்றுச் சிறப்புமிக்கதோர் நிகழ்ச்சியாகும். தமிழிசை விழாவில் ஆண்டுதோறும் சிறந்த இசைவாணர் ஒருவருக்கு இசைப் பேரறிஞர் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது.

தமிழிசைச் சங்கத்தின் சார்பு அமைப்புக்கள் இன்று மதுரை, காரைக்குடி போன்ற இடங்களில் செயலாற்றுவது மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். தமிழிசை இயக்கம் மாபெரும் மக்[illegible] இயக்கமாக உருவாகித் [illegible] பண்பாட்டினைத் [illegible] செய்து [illegible]



## ஈடு எதிர் இல்லாத இசை

வளைந்து வளைந்தோடும் அந்த அருவி, வெண்மணலைத் தழுவிக் கொண்டு, தழதழத்த குரலில் பாடுவது கேளீர்! எந்தப் பாட்டு இதற்கு ஈடாகும்?

செடியும் கொடியும், தளிரும் இலையும், மலரும் கனியும் ஆடும் காரணம் அறியீரோ! அதோ, வீசும் காற்றுடன் கலந்து வரும் இசை கேட்டே, அவைகள் ஆடுகின்றன, நடன சுந்தரிகள் போல!

பச்சிளங்கன்று, தாயைக் கூப்பிடும் குரல் கேட்டீரோ! அதிலுள்ள இசை இன்பமே தனியானது!

போர்வீரன், தனது உடலில் கவசமணிந்து வாளை உறையினின்றும் எடுக்கிறானே, அச்சமயம் கிளம்பும் ஒலி! வீர உள்ளம் படைத்தோர்க்கு இசை!

இம்மட்டுந்தானோ! குழலா இனிது? யாழா இனிது? மக்களின் மழலையே இனிது. ஈடு எதிர் இல்லாத இசையாகும் இது!

இங்ஙனம் இசை இன்பத்தை, ஓடும் அருவியில், வீசும் காற்றில், விளையாடும் கன்றின் குரலில், கொஞ்சும் குழந்தையிடம், வீரரின் செயலில், காதலியிடம் காண்பீர்! களிப்பீர்!

## இசை இன்பத்தைத் தர வேண்டுமென்றால்..........

இசை, இன்பத்தைத் தரவேண்டுமானால், அதைக் கேட்போரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள வேண்டுமானால், யார் முன்னால் பாடல் பாடப்படுகிறதோ, அது அவர்கள் புரிந்து கொள்ளக்கூடியதான மொழியில் இருத்தல் வேண்டும். இது அறிவுத் துறையில் அரிச்சுவடி!

நீக்ரோவின் நடனத்தைக் காண்கிறோம், கண்டு விட்டு நகைக்கிறோம். ஆனால் நீக்ரோவுக்கு நெஞ்சு இழைகிறது. நீக்ரோ நடனத்தைக் கண்டு! ஏன், அதனைப் புரிந்து கொள்கிறான்.

— பேரறிஞர் அண்ணா

# பொங்கல் விழா பிறந்த கதை

## மாணவர் பக்கம்

**தை** மாதம் முதல் நாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடுவதன் பொருள் என்ன? தை மாதத்திற்கும் தமிழனுக்கும் என்ன தொடர்பு? தமிழனுக்கு இந்நாள் மாத்திரம் ஏன் சிறந்த திருநாள்? என்பவை முதலில் விளக்கப்படல் வேண்டும்.

இது தை மாதம். ஒரு வருடத்தை வான நூற்பயிற்சி வல்லுநர், பகல் அதிகமாக உள்ள பகுதி இரவு அதிகமாக உள்ள பகுதி என இருபெரும் பிரிவுகளாக வகுத்துள்ளனர். ஆடி முதல் மார்கழி முடிய இரவு அதிகமான காலம். தை முதல் ஆனி முடிய பகல் அதிகமான காலம். தை பிறந்தால் பகல் தோன்றும். நேற்று வரை சூரியன் தெற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தான். இரவு அதிகமாகிக் கொண்டிருந்தது. குளிரும் மக்களை அதிகமாக வருத்திக் கொண்டிருந்தது. இவ்வாறு சூரியன் தெற்கு நோக்கியே சென்று கொண்டிருந்தால் உலகத்தில் இருள் நிறையுமே, பனி வருத்துமே என ஏங்கிக் கொண்டிருந்தனர் உலகினர். இன்று சூரியன் திரும்பி, வடக்கு நோக்கிச் செல்ல ஆரம்பித்து, வாடிய மக்களுக்கு ஆறுதல் அளிக்கின்றான். ஆகவே தான் இது நன்னாள்-திருநாள். இதைப் பார்த்துத்தான் தமிழ் மக்கள் இதைத் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள்.

இனி இது எப்படி முதல்நாள் என்று பார்ப்போம்? இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் என்னும் பிரிவினர்க்கு எப்போது நாள் தொடங்குகிறது என்றால், இந்துக்களுக்குக் காலை 6 மணிக்கு நாள் ஆரம்பித்துவிடுகிறது. முஸ்லீம்களுக்கு மாலை 6 மணிக்கு நாள் தொடங்குகிறது. முஸ்லீம்கள் சூரியனுக்கு மாறாக பிறையைக் கண்டு நாள் கணக்கு வைக்கிறார்கள். உதாரணமாக, இந்துக்களுக்குத் திங்கள் இரவாயிருப்பது முஸ்லீம்களால் செவ்வாய் இரவாகக் கருதப்படும். கிறிஸ்தவர்கள் முன்னே சொன்ன இரண்டு முறையையும் விட்டு விட்டார்கள். அவர்களுக்கு நள்ளிரவு 12 மணி அடித்த பிறகு நாள் தொடங்குகிறது. ஆனால் இவர்களல்லாத பழந்தமிழர்களுக்கு உச்சிப் பொழுதிலிருந்து நன்னாள் தொடங்கும். 'உச்சிக்கு அச்சமில்லை' என்றும் சொல்வார்கள். உச்சிக்கு நாள் இல்லை நட்சத்திரம் இல்லை, தேதி இல்லை, கிழமை இல்லை, சுத்தமான, வெள்ளையுள்ளம் படைத்த களங்கமற்ற நேரம் அல்லவா?

மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத புதுப் பொருள்கள் விளையவும், மகிழ்ச்சிக்குரிய புதுமலர்கள் பூக்கவும், மக்களைத் துன்பத்தினின்றும் நீக்கவும் சூரியன் தென் திசையினின்றும் வட திசை நோக்கித் திரும்பத் தொடங்குகின்ற இந்நாள்-முதல் நாள் - நன்னாள் - திருநாள் எனச் சொல்லப் பெறுகின்றது.

தமிழர் திருநாளை ஓர் வெற்றித் திருநாள் எனலாம். ஏன் இது வெற்றித் திருநாளாகக் கருதப்படுகிறது? புதிய நெல் விளைந்து விட்டது. கரும்பைச் சாறாக்கிச் சர்க்கரை காய்ச்சியாய்விட்டது. இரண்டையும் சேர்த்தும் பொங்கிச் சாப்பிடுகிறோம். உழைப்பின் முழுப் பயனை இன்று பெறுகிறோம். மஞ்சளும், இஞ்சியும், வானுயர் கரும்பும் எல்லாமும் விளையும் காலம். வீடு புதிதாகிறது. ஆளும் புதியவனாக மாறுகிறான். எங்கும் புதிய நெல், புதிய பானை, புதிய உடை புதிய மலர், புதிய உள்ளம் காணப்படுகின்றது. இதைப் பார்த்துத் தமிழ் மக்கள் இந்நாளை இயற்கையோடு இயங்கும் திருநாளாகக் கருதி வெற்றித் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள்.

ஆதாரம் : வள்ளுவர் உள்ளம்.

தகவல் :

**வ. இரவிச்சந்திரன்**
12ஆம் நிலை 'அ' பிரிவு
அரசினர் மேனிலைப்பள்ளி
கலவை அஞ்சல்
வட ஆர்க்காடு மாவட்டம்



### இந்தியாவில்...

| | |
|---|---|
| மிக அதிகம் கற்றவர்களைக் கொண்டுள்ள மாநிலம் | — கேரளம் (60.4%) |
| மிக அதிக மக்கள் தொகை உள்ள மாநிலம் | — உத்தரப் பிரதேசம் |
| மிக நீளமான நதி | — கங்கை |
| மிக அதிகப் பரப்பளவுள்ள மாநிலம் | — மத்தியப் பிரதேசம் |
| மிகப் பெரிய இரயில் என்ஜின் உற்பத்திச் சாலை | — சித்தரஞ்சன் |
| மிக நீளமான சாலை | — கிராண்ட் ட்ரங் சாலை |
| மிக அதிகமான பழுப்பு நிலக்கரி கிடைக்குமிடம் | — நெய்வேலி |
| மிக உயரமான அணைக்கட்டு | — பக்ராநங்கல் |
| மிகப் பெரிய பாலைவனம் | — தார் பாலைவனம் |
| மழை வளம் அதிகமுள்ள இடம் | — சிரபுஞ்சி |
| மிகச் சிறிய மாநிலம் | — சிக்கிம் |

வை. சமுத்திரக்கனி,
மேல்நிலை இரண்டாமாண்டு 'அ' பிரிவு,
சி.இ.நா.வி. மேல்நிலைப் பள்ளி,
சிவகாசி.

# முதுவையிலே புது எழுச்சி



**மா**வட்டம் தோறும், தலைநகரில் தந்தை பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண் திறக்கப்பட்டு வரும் தொண்டின் தொடர்ச்சியாக இராமநாதபுர மாவட்டத்தில், முகவை நகர் என வழங்கப்பெறும் இராமநாதபுரம் நகரில் 6.12.'82ல், நினைவுத் தூண் திறக்கப்பட்டது.

நாதசுர இசையுடன் விழா தொடக்கம் ஆகியது; வண்ண விளக்குகளின் பின்னணியில் - வீர நெஞ்சத்து மக்களின் முன்னிலையில் எழுச்சியுடன் கொண்டாடப்பட்ட விழா - அனைவரின் இதயத்தையும் மகிழ்வித்தது.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு எஸ்.டி. காசிராஜன் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''புத்தரின் கொள்கையினால் வயப்பட்ட அசோக மன்னர், அன்று பொறித்துவைத்த கல் தூண் இன்று ஆராய்ச்சியாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. அதுபோன்றே பெரியார் அவர்களின் கருத்துகள் பொறிக்கப்பட்ட தூண்களை நாம் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறுவி வருகிறோம்.''

விழாவுக்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கா.காளிமுத்து அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்.

''நொடிக்கு நொடி பழமை நூலாம்படையை அடித்ததால் பெரியாரைத் தமிழகம் நன்றியோடு நினைவு கூர்கிறது. தமிழ்ச் சமுதாயத்தின் உய்வுக்காக-உயர்வுக்காகப் பாடுபட்டவர் அவர் என்பதால் நன்றி காட்டுகிறது. பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு-மேட்டுக்குடியினரால் மிதிபட்ட சமுதாயத்திற்கு-மெய்க்காப்பாளனாக அவர் உதவினார்.

கி.பி 2ம் நூற்றாண்டில் கண்மூடிய சமுதாயத்தின் கண்களை 20ஆம் நூற்றாண்டில் திறந்து வைத்தார் பெரியார்''

''பெரியாரின் பொன்மொழிகள் இந்தச் சமுதாயத்திற்கு ஊட்ட மாத்திரைகள்-தூக்கமாத்திரைகள் அல்ல. அவர், வழி காட்டும் இலக்கணப் புத்தகமாகத் திகழ்ந்தார்''

அடுத்து உரையாற்றிய திரு இராஜனார்த்தனம், எம்.எல்.சி. தெரிவித்தார்:

''இன்று தந்தை பெரியார் அவர்களின் கருத்து நாடெங்கும் பரவியிருப்பதற்கு அவரது உழைப்புதான் காரணம் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

''பெண் இன உயர்வுக்காகப் பெரும்பாடுபட்டவர் பெரியார். பெண்கள் அஞ்சா நெஞ்சத்துடன், அறிவுக் கூர்மையுடன் வாழ வேண்டும் என்பது அவரது போதனை''.

அடுத்து, உரையாற்றிய திருவாரூர் கே. தங்கராசு தெரிவித்தார்:

"தமிழ் இனம் ஏன் தாழ்ந்து போனது என்பதைத் தமது 8வது, 9வது வயதிலேயே எண்ணிப் பார்த்திருக்கிறார் அவர்.''

அடுத்து உரையாற்றிய இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி. இராமசாமி தெரிவித்தார்:

''பெரியாரின் கருத்துக்கள் நாட்டு மக்களிடம் தோல்வியடையவில்லை; வெற்றி நடைபோட்டு வருகிறது.

அடுத்து உரையாற்றிய கடலாடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு வி.சத்தியமூர்த்தி குறிப்பிட்டார்:

''எப்படிப் பேசினால் இந்த மக்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று எண்ணிப் பேசியவரல்ல; எப்படிப் பேசினால் இந்த மக்களைச் சிந்திக்க வைக்க முடியும் என்று எண்ணிப் பேசியவர் பெரியார்.

அடுத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு பொ. அன்பழகன் தெரிவித்ததாவது;

''நாயாக - பன்றியாக - நடைபோட்டு வந்த மக்களைப் பகுத்தறிவு வாதிகளாக நடக்க முடியும் வகையில் மாற்றியமைத்த தந்தை பெரியாரின் கருத்துக்களுக்கு நினைவுத்தூண் எழுப்புவது நியாயமான செயல்''

நினைவுத் தூணைத் திறந்து வைத்து உரையாற்றிய மாண்புமிகு நிதிஅமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் குறிப்பிட்டார்:

''மனிதத்தன்மை வளர-மனிதப் பாங்கு வளரப் பாடுபட்ட தந்தை பெரியார் தமது உடல்நோய் குறித்துக் கவலைப் படாமல், 95வது வயதிலும் தமிழகம் முழுதும் சுற்றிச் சுழன்று வந்தார். உலகத்தில் வேறு எங்கும் இப்படி ஒரு தலைவரைக் காணமுடியாது.

''அவரது நூற்றாண்டை கொண்டாட உருவாக்கப்பட்ட குழு, 30 காரியங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற அறிக்கையைக் கொடுத்தது. அவற்றை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக ஆணையிட்டார்கள். அவை ஒவ்வொன்றாக நிறைவேற்றப் பெற்று வருகின்றன.''

பேருரையை முடித்துவிட்டு, மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள், 22 பேருக்கு நிலப் பட்டா, 51 பேருக்கு வீட்டுமனைப் பட்டா ஆகியவற்றை வழங்கியதுடன், முதியோர் உதவித் தொகை, விவசாயத் தொழில் உதவித்தொகை, இலவசசலவைத் தேய்ப்புக் கருவிகள், சைக்கிள் ரிக்ஷா, தையல் இயந்திரங்கள் ஆகியவற்றை அளித்தார்.

மாவட்ட ஆட்சியாளர் திரு. அர.சந்தானம் இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை கூறினார். அதன் பின்னர் கே. பி. ராஜ்மோகன் குழுவினர் நடத்திய 'அண்ணா ஒரு காவியம்' நாடகத்தில் சில காட்சிகளும் - அண்ணாவின் 'குமரிக்கோட்டம்' நாடகமும் நடைபெற்றன. இரவு 3 மணி வரை மக்கள் ஆர்வத்துடன் குழுமியிருந்த நிகழ்ச்சி-தந்தை பெரியாரிடத்தும் அறிஞர் அண்ணாவிடத்தும் அவர்கள் கொண்டிருந்த பற்றுதலை எடுத்துக்காட்டியது.

—நிகழ்ச்சித் தொகுப்பு,
தமிழ்ப்பித்தன்

# செலவு குறைய, சிபாரிசுப்படி உரமிடுங்கள்.






நெல்லுக்கு சிபாரிசுப்படி உரமிடுவது மிகவும் லாபகரமானது.

எந்த ஒரு பயிருக்கும் சிபாரிசுப்படி உரமிட்டால் ஒரு குவின்டாலுக்கான உற்பத்தி செலவு குறையும். சம்பா நெல்லைப் பொறுத்தவரை, இதைக் கீழே தெளிவாகக் காணலாம்.

| | உரம் இடாவிட்டால் | சிபாரிசுப்படி உரமிட்டால் |
|---|---|---|
| உயர்விளைச்சல் நெல் சாகுபடி செலவு (ஏக்கருக்கு) | ரூ. 970 | ரூ. 1388 |
| விளைச்சல் (ஏக்கருக்கு) | 9 குவி. | 24 குவி. |
| எனவே ஒரு குவின்டால் உற்பத்திக்கு ஆகும் செலவு | ரூ. 108 | ரூ. 58 |

பார்த்தீர்களா! சிபாரிசுப்படி உரமிட்டால் உற்பத்தி செலவு கிட்டத்தட்ட பாதியாகக் குறைந்து விடுகிறது. லாபமும் மிக அதிகமாகிறது.

சம்பா நெல்லுக்கு ஏற்ற உரம் விஜய் 17-17-17. ஏக்கருக்கு 120 கிலோ விஜய் 17-17-17 உரத்தை அடியுரமாகவும்

45 கிலோ விஜய் யூரியாவை மேலுரமாகவும் இடவேண்டும். 5 கிலோ யூரியாவுக்கு 1 கிலோ வேப்பம் புண்ணுக்கு என்ற விகிதத்தில் கலந்து இட்டால் உரத்தின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும்.

மேலும் நெல் பயிருக்கான சாகுபடி முறைகளை விவரிக்கும் புத்தகத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001





VIJAY
MADRAS FERTILIZERS

சமச்சீர் உரமிட
விஜய்

| விஜய் 17-17-17 உரத்தின் விவரக் குறிப்புகள் (சதவிகிதத்தில்) | |
|---|---|
| தழைச் சத்து | 17 |
| மணிச் சத்து | 17 |
| சாம்பல் சத்து | 17 |
| நிரப்பி (குறுமணல் அல்லது டாலமைட்) | 12.5 |

HTM-MFL-283




# ஒகேனக்கல் உயிரோவியம்!

சலசலவென அருவி கொட்டு கிறது!
கலகலவென மக்கள் நீராடு கின்றனர்!

இந்த ரம்மியமான காட்சியை, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியில் காண முடிகிறது!

ஆடவர், பெண்டிர் குழந்தைகள்-இப்படிக் குதூகலமாய் நீராடுகின்ற இனிய அனுபவம் மறக்க முடியாத நிகழ்ச்சியல்லவா?

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் அழகிய சுற்றுலாத் தலங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்புற்று விளங்குகின்றன.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒகேனக்கல் உல்லாசத்தலம், புராணச் சிறப்பும், வரலாற்றுப் பெருமையும் கொண்டதாகும்.

தருமபுரியிலிருந்து 43 கிலோ மீட்டர் தொலைவிலும், பெங்களூரிலிருந்து 130 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது ஒகேனக்கல்.

'ஒகேனக்கல்' என்றால் என்ன?

'புகைப்பாறை' என்பது அதற்குப் பொருள். கன்னடத்தில் 'ஒகே' என்றால் புகை என்பதாகும்.

மிக உயரமான மலையிலிருந்து அருவி வேகமாகப் பாறைகளில் பட்டுத்தெறித்து, பள்ளத்தில் வீழ்கின்றபோது, அதன் நீர்த் திவலைகள் பனிப்படலமாய்க் காட்சியளிக்கும். அவை வெண் புகைபோலத் தோற்றமளிக்கும். அதனால் தான் இதற்கு இப்பெயர் வந்தது.

இயற்கையாக அருவி விழும் இடத்திலும் (சுமார் 100 அடி உயரம் )செயற்கையாக அமைக்கப்பட்ட நீர் வீழ்ச்சியிலும் குளிக்கலாம்.

ஒகேனக்கல், பென்னாகரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது. இங்கிருந்து 16 கி.மீ. தூரத்தில் தாழ்வான பகுதியில் உள்ளது தான் ஒகேனக்கல். பென்னாகரம் கடல் மட்டத்திலிருந்து 1,500 அடி உயரத்தில் உள்ளது.

குளிக்கும் இடத்தை 'ஞான தீர்த்தம்' என்று அழைக்கிறார்கள். காவிரி ஆறு மூலிகைகளைத் தழுவி வருவதால், இப்புனித நீர் சக்தி வாய்ந்தது என்றும், இதில் நீராடினால் பிணிகள் நீங்கும் என்றும் பெரியோர்கள் கூறுகிறார்கள்.

இந்த ஆற்றுக்கு இடைப்பகுதியில் உள்ள அருவிகள் மிக உயரமானவை. அவை அடி பாதாளத்தில் வீழ்கின்ற 'ஓ' என்ற இரைச்சல் காதைச் செவிடாக்கும். இந்தப்பகுதி எழில் வாய்ந்தது. சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்வது. இந்த மையப்பகுதிக்குப் 'பரிசலில்' தான் போய் வர வேண்டும். அதற்கான நிறைய பரிசல்கள் கரைகளில் காத்துக் கொண்டிருக்கின்றன.

ஒகேனக்கல்லில், சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கென, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ்நாடு இருக்கிறது. இங்கே ஒரு காவல் நிலையமும் உள்ளது. அவ்வப்பொழுது போய்வர பேருந்து வசதியும் உள்ளது.

இவையன்றி, ஊராட்சி ஒன்றியப் பயணிகள் விடுதியும், வனத்துறையின் பயணிகள் விடுதியும் இங்கு உள்ளன. மேலும் தனியார் உணவுவிடுதி, சிறுசிறு கடைகள் ஆகியவையும் இருக்கின்றன. ஒகேனக்கல்லைச் சுற்றி ஊட்ட மலை, கோவிந்தப்பாடி ஆகிய கிராமங்கள் . உள்ளன. இங்குள்ள கிராம மக்களின் தொழில் மீன் பிடித்தல், ஆடு மாடுகள் மேய்த்தல்.

மேற்கிலிருந்து காவிரி கிழக்காக வந்து, தெற்கு நோக்கிப் போகிறது. அதனால் இதைத் 'தட்சிணவாகினி' என்று அழைக்கிறார்கள். 'மேக தாது' என்ற பெயரும் இதற்கு உண்டு.

சுற்றுலாப் பயணிகள் நீராடிவிட்டு மட்டும் போகாமல், சற்றுக் காலார நடந்துபோய்க் கண்டு களிக்கவும் இப்பகுதிகளில், வனத்துறையின் சார்பில் நிர்வகிக்கப்படும் 'குட்டி' உயிர்க்காட்சிச் சாலையும், முதலைப்பண்ணையும் உள்ளன.

இங்கே மிகப் பழமையான தேசநாதீஸ்வரர் கோயில் ஒன்றும் உள்ளது. இது அதியமான் காலத்தது என்று கூறப்படுகிறது. கோயிலில் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இக்கோயில், மைசூர் மன்னர்களால் பரிபாலிக்கப்பட்டது என்றும், 1915-ஆம் ஆண்டு மே மாதம் 10ந் தேதி கும்பாபிஷேகம் நடந்தது என்றும் ஒரு கல்வெட்டு கூறுகின்றது.

தென்னகச் சுற்றுலாத் தலங்களில் தொன்மைமிக்கதான ஒகேனக்கல் உல்லாசத்தலம், உள்ளம் கவர் உயிரோவியம் என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

—பி. வி. கிரி

# வள்ளுவர் குறளுக்கு பாரதி படைத்த உரை

—டாக்டர் கு. மோகனராசு

இருபது நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மண்ணிலும், முந்நூறு ஆண்டுகளாக உலக அரங்கிலும் போற்றுதலுக்கு உரிய முதன்மைக் கவிஞராக-முழுமைக் கவிஞராக-தலைமைக் கவிஞராக—தாய்மைக் கவிஞராக விளங்கி வருபவர் வள்ளுவப் பெருந்தகை, இருபதாம் நூற்றாண்டின் ஏற்றமிகு கவிஞராக—எழுச்சிக் கவிஞராகத் தமிழ் மண்ணிலும் உலக அரங்கிலும் போற்றப்படும் சிறப்பிற்குரியவர் கவியரசர் பாரதியார்.

## பாரதி கண்ட வள்ளுவர்

எழுச்சிக் கவிஞர் பாரதியார் வள்ளுவரிடத்தும் குறளிடத்தும் கொண்ட பெருமதிப்பும் பேரீடுபாடும் அளவிடற்கரியன.

அவர்தம் கவிதைகளில்,

தெய்வ வள்ளுவன்

(சுயசரிதை)

என்றும்,

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

(செந்தமிழ் நாடு)

என்றும், வள்ளுவரை வானளாவப் புகழ்ந்துரைக்கின்றார்.

திருக்குறளுறுதியும் தெளிவும்பொருளின் ஆழமும் விரிவும் அழகும் கருதியும், ......................முன்பு நான் தமிழ்ச் சாதியை 'அமரத் தன்மை வாய்ந்தது' என்று உறுதி கொண்டிருந்தேன்.

(தமிழ்ச்சாதி)

என்றும், 'வான்மறை' என்றும் திருக்குறளைப் புகழ்ந்துரைக்கின்றார்.

## பாரதியின் உரைநடை

பாரதியாருக்குத் திருக்குறளில் உள்ள உண்மையான ஈடுபாட்டை உண்மையாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் கவிதைகளைப் போலவே—ஒரு வகையில் அவற்றினும் மேலாக — உரைநடைகள் பெரிதும் துணை நிற்பதை, அவ்வுரைநடைகளை ஆராய்வார் தெளிதல் கூடும்.

உரைநடைகளில் வள்ளுவரை உலகப் பெருங்கவிஞராகப் பாராட்டி அவருக்கு விழா எடுக்க வேண்டும் என்றும், சிலை வைக்க வேண்டும் என்றும், தம் உள்ள வேட்கையை வெளிப்படுத்தும் பாரதியார், இருபத்து மூன்று (23) முழுக் குறள்களை இருபத்தேழு (27) இடங்களில் தக்கவாறு பயன்படுத்தித் தம் கருத்துகளுக்கு அணி செய்கின்றார். அவற்றுள் ஒன்பது (9) குறள்களுக்கு உரையும் எழுதியுள்ளார்.

## பாரதியாரின் குறள் உரைகள்

பாரதியார் உரை வரைந்துள்ள ஒன்பது குறள்களும் பெரிதும் உரை வேறுபாடுகள் அற்ற—உரை முரண்பாடுகள் அற்ற குறள்களாகவே அமைந்துள்ளன. ஆகவே, பாரதியார் எழுதிய உரையில் காணப்படும் 'உரை வேறுபாடுகள்' என்று குறிப்பிடத்தக்கதாக எதனையும் கொள்ள முடியாது. ஆனால், அதே நேரத்தில் கீழ்வரும் பண்புகள் பாரதியார் வரைந்துள்ள உரைகளுள் காணப்படுகின்றன.

## நடைமுறைக்கு ஏற்ற உரை விளக்கம்

சமுதாய நடைமுறைகளை மதிப்பீடு செய்வதே பாரதியாரின் அடிப்படை நோக்கமாக இருந்த காரணத்தினால், பாரதியார் குறளுக்கு எழுதிய உரைகள் அவர் வாழ்ந்த கால நடைமுறையைத் தழுவி அமைந்திருப்பதைத் தெளிவாகக் காண முடிகின்றது. சான்றாகத் திருக்குறளில் 'நாடு' என்ற அதிகாரத்தில் வரும்

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா(து) இயல்வது நாடு

(குறள். 734)

என்னும் குறளுக்கு,

அதிகமான பசியும், அதாவது பஞ்சங்களும், நீங்காத நோய்களும் அதாவது பிளேக், காலரா முதலியவற்றைப்போல் விடாத இயல்பு கொண்ட தொத்து வியாதிகளும் அழிவு செய்யும் விரோதிகளும் இல்லாமல் விளங்கும் இயல்புடையதே 'ராஜ்யம்' அல்லது 'நாடு' என்று சொல்லத் தக்கதாகும்.

(ராஜ்யம் அல்லது நாடு, பாரதி தரிசனம் நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், 1977, ப. 43)

என உரை வரைந்திருப்பதைக் கொள்ளலாம்.

## பொதுமைப்படுத்தல்

சாதி, மதம், மொழி, இனம், நாடு, காலம் ஆகியவை கடந்த உலகப் பெரும் பொதுமை நூலாக—புதுமை நூலாக விளங்குவது திருக்குறள். இந்நூலில் காணும் மற்றொரு புதுமை என்னவென்றால், ஓர் அதிகாரத்துக்குள் சிறைப்பட்டிருக்கும் குறள்களை அவ்வதுகாரச் சிறையில் இருந்து மீட்போம் என்றால் அது எல்லார்க்கும் உரிய பொதுவான குறளாக அமைவதே ஆகும். இப்புதுமைப் பண்பு, திருக்குறளில் உள்ள பெரும்பாலான குறளுக்கும் பொருந்தும்.

அதிகார அமைப்பு என்னும் சிறையில் இருந்து மீட்டு, குறளுக்குப் பொதுமையான உரைகாணும் திறத்தைப் பாரதியாரிடம் தெளிவாகக் காணுகிறோம். இதற்குச் சான்றாகப் பாரதியார் எழுதிய, 'விடுதலை' என்னும் கட்டுரையில் பயன்படுத்தியுள்ள குறளையும், பொருளையும் அவை பயன்படுத்தப் பட்டுள்ள சூழலையும் கொள்ளலாம். சமுதாயத்தில் அறம் செய்ய வேண்டியதன் இன்றியமையாமையினையும் அந்த அறம் செய்வதற்குப் பொருள் தேவை என்பதனையும் ஒவ்வொரு மனிதனும் அந்தப் பொருளை நல்ல நெறிகளில் ஈட்ட வேண்டும் என்பதனையும் திருக்குறள் வழிநின்று வலியுறுத்தும் பாரதியார், அதனை அடுத்து,

தீய காரியம் செய்து, கெட்ட தொழில் செய்து சேர்த்த செல்வம் நிற்காது. செல்வம் சேர்ந்த பிறகு அதன் உரத்தால் பிறருக்குத் தீங்கு செய்வோரும் விரைவிலே கெடுவார்.

(தமிழருக்கு-ஸ்ரீ புவனேசுவரி பதிப்பகம், 1978. ப. 46)

எனக் கூறி அதற்கு உறுதுணையாக

அல்லற்பட் டாற்றா(து) அழுதகண்
ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

என்னும் குறளைக் கூறி அதற்கு,

துன்பப்பட்டார் அது பொறுக்காமல் அழும் கண்ணீரானது, அந்தத் துன்பமுண்டாக்கியவனுடைய ஐசுவரியத்தை அறுத்தெரியும் ஆயுதமாகும்.

எனப் பொருள் உரைக்கின்றார். இங்குக் 'கொடுங்கோன்மை' என்னும் அதிகாரத்தில் வரும் மேற்சுட்டிய குறளை அவ்வதிகாரச் சிறையில் இருந்து மீட்டு, எல்லார்க்கும் பொருந்தும் பொதுமைப் பொருள் தருவதைத் தெளிவாக அறிய முடிகின்றது.





## உரையில் வேகம்-அழுத்தம் உடைமை

சில குறள்களுக்குக் குறளில் இல்லாத வேகம்—அழுத்தம் பாரதி தருகின்ற உரைகள் சிலவற்றில் காணப்படுவதையும் தெளிவாக உணர முடிகின்றது.

சான்றாக, மேற்சுட்டிய குறளில் வரும் 'தேய்க்கும்' என்பதற்கு 'குறைக்கும்' அல்லது 'மெல்ல மெல்ல அழிக்கும்' என்றே பலரும் பொருள் கொள்ள, பாரதியார் 'அறுத்தெரியும்' எனப் பொருள் கொண்டிருப்பது அவருடைய உணர்ச்சி வேகத்தையே காட்டுகின்றது. அதே போன்று,

இன்சொல் இனிதீன்றல் காண்பான்
எவன்கொலோ
வன்சொல் வழங்குவது

(குறள்.99)

என்னும் குறளுக்கு,

இனிய சொற்கள் சொல்வதனின்றும் நன்மைகள் விளைவது கண்டும் மானுடர் ஒருவருக்கு ஒருவர் கொடுஞ் சொற்கள் வழங்குவது மடமை.

(தமிழருக்கு—மு. நூ. ப. 84)

என உரை எழுதும்பொழுது, 'மடமை' எனக் கூடுதல் செய்திருப்பது அவருடைய உரையில் காணும் உணர்ச்சி வேகத்திற்கு அல்லது உரையில் காணும் பொருள் அழுத்தத்திற்குச் சான்றாக அமைகின்றது.

## வைப்பு முறை மாற்றம்

குறளுக்குப் பொழிப்புரை தர வேண்டும் என்ற எண்ணம் பாரதியாரிடம் இருந்த அடிப்படை எண்ணம் அல்ல. தம் கட்டுரையை அல்லது தலையங்கத்தைப் படிக்கின்றவர்கள் இடையிடையே பயன்படுத்தும் குறளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலேயே - அதன் கருத்து இன்னதென அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலேயே பெரும்பான்மையும் உரை எழுதியுள்ளார். அதனால் குறள் கூறும் கருத்து வைப்புக்கும் பாரதியார் கூறும் உரையில் வரும் கருத்து வைப்பிற்கும் வேறுபாடு காணப்படுவதையும் அறிய முடிகின்றது. சான்றாக,

விலங்கொடு மக்க ளனையர்— இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்

(குறள் 410)

- என்னும்குறளுக்கு

## மணத்தோடு பணத்தோடு மல்லிகைப் பூ

தமிழ்நாட்டில் மல்லிகைச் செடிகள் வளர்ப்பு மிகவும் பிரபலமானதாகும். கிட்டத்தட்ட 8,000 ஹெக்டேர் நிலத்தில் மல்லிகைச் செடிகள் வளர்க்கப்படுகின்றன. பழைய காலத்தில், பெரும்பாலும் அரசுத் தோட்டங்களிலும், கோயில்களுக்கு அருகிலும் பொது மைதானங்களிலுமே மல்லிகைச் செடிகள் வளர்க்கப்பட்டன. இன்றோ அது ஒரு துணைத் தொழிலாக வளர்கிறது.

தமிழ்நாட்டில் பூமாலைகளுக்கு பிச்சி, குண்டுமல்லி, முல்லை வகைகள் அதிக அளவில் உபயோகப்படுத்தப்படுகின்றன. பிச்சியை, சாதி மல்லிகை எனவும் கூறுவதுண்டு. சாதிமல்லிகையிலிருந்து விலை உயர்ந்த தைலம் வடிக்கப்படுவதால் இப்பூவிற்கு வணிக முக்கியத்துவம் உண்டு. வாசனைப் பொருட்கள், சோப்பு போன்றவற்றைத் தயாரிப்பதற்கு இத்தைலம் மிகவும் தேவைப்படுகிறது. இதனால். இதன் தேவை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

மல்லிகைச்செடி வளர்க்க அதிக ஆள்பலம் தேவை என்பதால், கிராமப்புற வேலைவாய்ப்பிற்கு இதில் அதிக வாய்ப்பு உள்ளது. ஒரு ஏக்கர் நிலத்திலுள்ள மல்லிகைச் செடியிலிருந்து பூவை எடுக்க, சராசரி 30 முதல் 40 பேர் தேவைப்படுகிறார்கள். 60 ஏக்கர் நிலத்தில் உள்ள மல்லிகைச் செடிகளிலிருந்து அன்றாடம் சுமார் 1000 கிலோ மல்லிகை எடுக்கலாம்.

மல்லிகைப்பூத் தைலம் தயாரிக்கும் ஆலைக்கு இது போதுமானதாகும்.

அதிக அளவில் மல்லிகைச் செடியை வளர்க்க விவசாயிகள் விருப்பம் காட்டுவதால், தோட்டப் பயிர்த்துறை, மலர்ச்செடி வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இடு பொருள்களுக்கு 50 விழுக்காடு மானியத்தையும், இலவசத் தொழில் நுட்ப வழிமுறைகளையும் வழங்குகிறது.

ஒரு ஏக்கர் நிலத்தில் மல்லிகைச் செடி வளர்க்க 10,000 ரூபாய் செலவாகும். இச்செடிகளிலிருந்து 4,000 கிலோ மல்லிகைப்பூ கிடைக்கும். இதற்கு கிலோ 5 ரூபாய் வீதம் 20,000 ரூபாய் கிடைக்கும். ஆகவே ஒரு ஏக்கரில் மல்லிகைச் செடி பயிரிட்டால் நிகர இலாபம் 8,000 ரூபாய்க்கு மேல் கிடைக்கிறது. இதனால், தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகள் மேலும் அதிக நிலத்தில் மல்லிகைச் செடியை வளர்க்கத் தொடங்கியுள்ளனர்-

*மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் எத்தகைய பேதமிருக்கிறது. அத்தனை பேதம் கற்றார்க்கும் கல்லாதார்க்கும் இடையே உளது.*

*(தமிழருக்கு— மு. நூ., ப. 136)*

என உரை கூறுகின்றார். இங்குக் குறளில் 'விலங்கு, மனிதர்' என முறை வைப்பு இருக்க பாரதியார் தம் உரையில், 'மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும்' என முறை வைப்பை மாற்றி அமைத்திருப்பது நோக்கத்தக்கதாகும். இதே குறளுக்குப் பிறிது ஓர் இடத்தில் குறள் கூறும் முறைவைப்பை மாற்றாமல்,

*படியாதவனுக்கும் படித்தவனுக்கும் தாரதம்யம் எத்தனையென்றால் மிருகத்துக்கும் மனிதனுக்கும் உள்ளது அத்தனை.*

*(ஊருக்கு நல்லது- புவனேசுவரி பதிப்பகம், 1979, ப. 14)*

எனக் கூறியிருப்பதும் கருதத்தக்கது.

**புதிய குறள் உருவாக்கம்**

திருக்குறளில் பெருமதிப்பும் பேரீடுபாடும் கொண்ட பெருங்கவிஞர் பாரதியார் அவர்கள் குறளை மேற்கோளாக எடுத்துக்காட்டி, அதற்கு உரை வரைந்துள்ளதோடு ஒரு புதுமையினையும் செய்துள்ளார்.

*ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோ னெனக்கேட்ட தாய்* (குறள் 69)

என்னும் குறளுக்குப் பாரதியார்,

*புத்திரப் பேறு உண்டான காலத்திலே மாதாவுக்குண்டான மகிழ்ச்சியைக் காட்டிலும், அப்புத்திரன் சான்றோனென்ற சொல்லைக் கேட்கும்போது அதிக மகிழ்ச்சி விளையும்*

*(சக்ரவர்த்தினி கட்டுரைகள், வானவில் பிரசுரம் 1979, ப. 41)*

என உரை வகுக்கின்றார். இவ்வாறு உரை வகுத்து, இக்குறளின் பொருளில் இருந்து பெறத்தக்க எதிர்மறைப் பொருளை,

*மகன் சான்றோன் அல்லன் என்ற சொல் செவிப் படும்பொழுது அத்தாய் மனம் அவன் இறக்கும்பொழுது உண்டாகும் துயரத்திலும் அதிகத் துயரம் அடையும்.*

எனக் கூறி, அக்கருத்தை அப்படியே குறள் வடிவமாகத் தந்தும் உள்ளார். பாரதி தந்துள்ள அப்புதிய குறள் வருமாறு,

*மாயும் பொழுதிற் பெரிதழுங்குந் தன்மகனைக்*
*கீழோன் எனக் கேட்ட தாய்*

இப்புதுமை பாரதியாரின் சிந்தனை நுட்பத்திற்கும், யாப்பறி திறத்திற்கும் எடுத்துக்காட்டாக அமைவதோடு பாரதியார் குறள் மீது கொண்ட மதிப்பிற்கும் ஈடுபாட்டிற்கும் அரண் செய்வதாக - பேரரணாக அமைந்துள்ளது; அன்றியும் குறளுக்கு உரை கண்ட பிற உரையாசிரியர்களிடம் காணாத தனிச் சிறப்புடையவராகப் பாரதியாரைப் பிரித்தும் காட்டுகிறது.



# பலருக்கும் வேலைதரும் பனைத்தொழில்



பி. வி, கிரி

தமிழ்நாட்டில் எத்தனைப் பனை மரங்கள் உள்ளன என்று நமக்குத் தெரியுமா?

5 கோடி பனை மரங்கள்!

இவற்றுள் 2 கோடி பனை மரங்களே நமக்குப் பயன்படுகின்றன. பனையின் விளைவால் பயன்கள் பலப் பல. பல்லாயிரக் கணக்கானோர் அதனால் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர். குறிப்பாக, இது கிராம மக்களுக்குக் கைகொடுத்து உதவி வருகிறது.

இந்தத் தகவல்களையெல்லாம் நாம் தெரிந்து கொள்வது, 'கிராமங்களில் பனைத் தொழில் மூலம் சுயவேலை வாய்ப்பை உருவாக்கும் திட்ட விழா'வில்.

நவம்பர் திங்கள் 27ஆம் நாள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் சார்பில், பனைத் தொழில் மூலம் சுயவேலை வாய்ப்பை உருவாக்கும் திட்ட விழா, மாதவரம் பனைப் பண்ணையில் மிகச் சிறப்பாக நடந்தது.

தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் இந்தச் சீர்மிகு விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

பனையின் பெருமையைப் புகழும் பாடல்கள் பறைசாற்றும். அதனை நேரில் காணும் வாய்ப்பு நமக்குக் கிட்டியது. விழா மேடைக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த பனைப்பொருட்கள் நிரம்பிய கண்காட்சி ஒன்று நம்மையெல்லாம் பிரமிக்க வைத்தது. வாழை மரத்தைப் போல், பனைமரத்தின் எல்லாப் பகுதியும் நமக்குப் பயன்படுகிறது. அதனாற்றான் பனையைக் கற்பகத்தரு என்று அழைக்கிறார்கள் போலும்!

கண்காட்சியில் பனந்தும்பு, பனை ஓலைப் பெட்டிகள், தொப்பிகள், விசிறிகள், பனை மரத்தாலான நாற்காலிகள் இப்படி எத்தனையோ பொருள்கள், ஓங்கி வளர்ந்த பனை மரத்தின் உயர்வைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன!

விழாப் பந்தலில் பெருமளவில் மகளிரே காட்சி தருகின்றனர். அவர்களில் பெரும்பாலோர் பனை மூலம் வேலைவாய்ப்பைப் பெற்றவர்கள் என அறிகிறோம்.

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எச். ஜே. ராமச்சந்திரன், இ. ஆ. ப. அவர்கள் இந்த விழாவுக்குத் தலைமை வகித்தார். சிறப்பு அலுவலர் திரு. கூ. சம்பந்தம் அவர்கள் திட்டத்தை அறிமுகம் செய்து பேசினார். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. குமரி அனந்தன், திரு ஆனூர் ஜெகதீசன், திரு சி. கணேசன், தமிழ்நாடு கதர்கிராமத் தொழில் வாரியத் துணைத் தலைவர் திரு, எஸ். பட்டுக்கோட்டை பாப்பையன் ஆகியோர் பனையின் சிறப்பினையும், அதனால் விளையும் பயன்களையும் எடுத்துக் கூறினார்கள்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் பேசுகையில்—

''பனைமரங்கள் மக்களை வாழ்விக்கும் மரங்களாக விளங்குகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 5 கோடி பனைமரங்களில் சுமார் 2 கோடி பனை மரங்களே பயன்படுகின்றன. இன்னும் 2 கோடி பனை மரங்களைப் பயன்படுகிற வகையில் நாம் செயல்பட வேண்டும். இங்கே அமைக்கப்பட்டிருக்கின்ற பனை ஓலைப் பொருட்காட்சி, செங்கை மாவட்டச் சிறப்புக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது. காந்தி, அண்ணா, வினோபாபாவே வழியில் இந்த வாரியம் செயல்பட்டு வருகிறது'' என்றார்.

தமிழ்நாட்டில் உள்ள 5கோடிப் பனை மரங்களில் 2 கோடி மரங்களே பதநீர் இறக்கி வெல்லம் காய்ச்சவும், கற்கண்டு, சீனி தயாரிக்கவும், ஓலை, நார்ப் பொருள்கள், தும்பு தயாரிக்கவும் பயன்படுகின்றன. ஒரு கோடி மரங்கள் தொழிலுக்குப் பயன்படாத வகையில் முதிர்ந்தும், காட்டுப் பகுதிகளில் மனிதன் இலகுவில் சென்று பயன்படுத்த முடியாத நிலையிலும் இருக்கின்றன.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் பொருட்காட்சியைப் பார்வையிடுகிறார்.

மரங்களை எப்படிப் பயன்படுத்துவது, இதன் மூலம் ஏழை எளியவர்களுக்கு எப்படி வேலை வாய்ப்புத் தருவது, அதன் மூலம் உருவாகும் பொருள்களை எப்படி விற்று, கிராமவாசிகளுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பை அளிப்பது என்று இந்த இணையம் தீவிரமாகச் சிந்தித்து வருகிறது.

பனைத் தொழிலில் தற்போது 3.5 இலட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் உற்பத்தி ஆண்டுக்கு ரூ. 19 கோடியாகும். மேலும் 2 கோடி பனை மரங்களைப் பயன்படுத்தும்பொழுது உற்பத்தியும், வேலை வாய்ப்பும் பெருகும் அன்றோ?

2 கோடி பனை மரங்களைப் பயன்படுத்தி வறுமைக் கோட்டின் கீழ் இருக்கும், ஏழை எளியவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட வந்த ஓர் உன்னத திட்டம்தான், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

செங்கை மாவட்டத்தை மாதிரி மாவட்டமாகத் தேர்ந்தெடுத்து இத் திட்டத்தினைச் செயல்படுத்திட, பனைத் தொழிலைக் கொண்டு வேலை வாய்ப்பளிக்கக் கடந்த ஆண்டு மாநில இணையம் தீர்மானித்தது. இதன் விளைவாக, மாவட்டம் முழுவதும் 40 பயிற்சி நிலையங்கள் நடத்தப்பட்டன. இதில் பெரும்பாலானவர்கள் பெண்கள். இவர்களுக்கு 6 மாத காலம் பயிற்சி அளித்து பயிற்சியின்போது மாதம் ரூ. 125 உதவித் தொகையும் வழங்கப்பட்டது. இவ்வாறு பயிற்சி முடித்த மகளிருக்குப் பரிசுகளும், சான்றிதழ்களும், விழாவில் வழங்கப் பெற்றன.

செங்கல்பட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனமானது, இம் மாவட்டத்தில் ஏழை எளிய கிராம மக்களுக்குப் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்க நிதி உதவி செய்கிறது. அவற்றுள் பனைத்தொழிலும் ஒன்றாகும். இந்த நிறுவனம், தமிழ்நாடு பனை வெல்லக் கூட்டுறவு இணையத்தின் வாயிலாக 1,200 பேருக்குப் பல்வேறு பனைப் பொருள்கள் தயாரிப்பதில் ஆறு மாதக் காலம் பயிற்சி அளித்துள்ளது. இவர்களில் பெரும்பாலோர் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த பெண்களாவர்.

ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டிலேயே இவ்வளவு பேருக்குப் பயிற்சி அளித்து அவர்களுக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்திருப்பது இதுவே முதல் முறையாகும் என்பதைப் பெருமிதத்தோடு குறிப்பிட வேண்டும்.



# மாணவர் உருவாக்கிய சாலை



புதிய இருபது அம்சத் திட்டத்தின்படி ஏதேனும் ஒரு கிராமத்தை தொழில் நுட்பக் கல்விக் கூடங்கள் ஏற்று அவ்வூர் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைய வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் ஊரகப்பகுதிகள் திட்டமிட்ட முறையில் வளரவும் அப்பகுதியில் வாழும் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழி செய்யும் வகையிலும் 'கிராம ஏற்புகள்' அமைந்து வருகின்றன.

நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கிகள் கிராமங்களைத் தத்து எடுத்துக் கொண்டு அவ்வூர் மக்களில், பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களின் நல்வாழ்வுக்காக பலவகைகளில் உதவி அளிக்கின்றன.

கல்வி நிறுவனங்கள், ஊரகப் பகுதிகளை ஏற்றுக் கொள்ளும் பொழுது அவ்வூர் மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு உரியவைகளைச் செய்து வருகின்றன. அத்துடன் சமுதாய மேம்பாட்டுக்கு உரியவைகளை முன்னிருந்து செய்து வருகின்றன. அப்பகுதியில் தொழில் வளர்ச்சிக்குத் திட்டமிட அடிப்படைத் தேவைகளான வரைபடம் தயாரித்தல் ஊரில் கிடைக்கும் வசதி வாய்ப்புக் கூறுகள் ஆகியவற்றைச் செய்து வருகின்றன.

கிராம மக்களுக்குத் தொழில் நுட்ப அறிவுகளைப் புகட்டுவதுடன், உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழிமுறைகளையும் சொல்லித் தருகின்றன. மக்களுக்கு மற்ற வசதிகளையும் செய்து தர உழைப்பையும் நல்குகின்றனர்.

அண்மையில் சென்னை மத்திய பல்தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பள்ளிக்கரணை என்ற கிராமத்தை ஏற்றுக்கொண்டு அவ்வூர் வளர்ச்சிக்கு உரிய பணிகளைச் செய்து வருகின்றனர்.



மத்திய பல் தொழில்நுட்பக் கல்லூரி தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்கள் 60 பேர்கள். பள்ளிக்கரணை மக்களுக்குப் பயன்படும் வகையில் புதிய சாலையை அமைத்தனர்.

தேசிய மாணவர் படையைச் சேர்ந்த பி. செல்வராஜ், கே. வேலாயுதம், எஸ். தனஞ்செயன், கே. ரவிக்குமார், கே. வாசுதேவன் கே. வி. பி. ராவ் போன்ற முதுநிலை தேசிய மாணவர் படையினர் முன்னணியில் இருந்து இச்சாலையை அமைத்தனர்.

மத்திய பல்தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் திரு ஞானசம்பந்தம், ஆசிரியர் ஆர். சுப்ரமணியம், தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மேஜர் ஜெயராமன் போன்றவர்கள் உடனிருந்து மாணவர்களின் முயற்சிகளை ஊக்குவித்தனர்.

மாணவர்கள் சாலை போடுவது கண்டு பள்ளிக்கரணை ஊர் மக்களும் சமூகநல ஊழியர் தங்கராஜுவுடன் சேர்ந்து வந்து சாலை போடுவதில் உதவினர்.

சென்னை மாநகரத்தை அடுத்துள்ள ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊர் பள்ளிக்கரணை என்றாலும் அவ்வூரின் வளர்ச்சிக்கு அவசியமான சின்னஞ்சிறிய பணிகள் ஏராளமாக உள்ளன.

அந்தப் பணிகள் இளைய தலைமுறையினரான மாணவர்கள் செய்து வருகின்றனர். புதிய வாழ்வும் வளர்ச்சியும் ஊரகப் பகுதிகளில் உருவாக உதவி வரும் மாணவர்களைப் பாராட்டுவதும், அவர்களுடைய ஆர்வத்தைப் போற்றி வளர்ப்பதும் நமது கடமை ஆகும்.



# பொன்னேரி கண்ட புதுவிழா

டாக்டர் பி. பி. ராஜன்
முதல்வர்
சென்னை பல் மருத்துவக் கல்லூரி

ஆசிய ஜோதி, பண்டிதநேரு அவர்களின் பிறந்த நாளாகிய நவம்பர் 14ஆம் நாள், குழந்தைகள் திருநாளாக நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு இத்திருநாளை தமிழக அரசு சிறப்போடு கொண்டாடியதோடு, கிராமக் குழந்தைகளுக்கு இலவசப் பற்பொடி வழங்கும் திட்டத்தைத் துவக்கி,வரலாற்றுச் சிறப்பினைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் துவக்கவிழா செங்கல்பட்டு மாவட்டத்தில் பொன்னேரி தாலுகா வேம்பாக்கத்தில் 14-11-'82-ஆம் நாள் நடைபெற்றது. விழாவிலே பல் மருத்துவத்துறை சிறப்பாகப் பங்கு பெற்றது.

வாயிலும் பற்களிலும் ஏற்படுகின்ற நோய்கள், பல்வலி, வாய் துர்நாற்றம், இரணங்கள், ஈறுகளில் இரத்தம் வருதல், வாய் திறவாமை போன்ற தொல்லைகளைக் கொடுப்பதோடு, நோய் உடலின் பல பாகங்களுக்குப் பரவி உடல் உறுப்புகளையும் பாதிக்கின்றன. பல்நோய்களைத் தடுக்கவும், குணப்படுத்தவும் பல நவீன வசதிகள் பல் மருத்துவத்தில் இருந்தும் அவற்றின் பயனை முழுமையாகப் பெற முடியாமல் தவிப்பவர்கள் கிராம மக்கள். சென்னை பல் மருத்துவக் கல்லூரியின் சமுதாய பல்நலப் பாதுகாப்புத் துறையின் கீழ் மருத்துவர்கள், கிராமங்களில் இலவச பல் மருத்துவ முகாம்கள் நடத்தி, கிராம மக்களுக்குக் கூடுமான வரையில் பல் நலம் காப்பதில் உதவி புரிகின்றனர். கிராமங்களில் நடைபெறும் பல் மருத்துவ முகாம்களை அமைச்சர் பெருமக்களும், மற்றும் தலைவர்களும் கண்டு கிராம மக்களின் வாய், பல் சம்பந்தப்பட்ட நோய்களைக் கண்டறிந்துள்ளனர். திருச்சி மாவட்டத்தில் ஆமூரில் நடைபெற்ற பல் மருத்துவ முகாமில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு, கிராம மக்களில் குறிப்பாக குழந்தைகளின் பல்வேறு பல்நோய்களைக் கண்டறிந்தார்கள்.

பற்களில் ஏற்படும் நோய்களைத் தடுக்கப் பல்வேறு முறைகளைக் கையாண்டாலும் நாள்தோறும் பல் துலக்கும் பழக்கம் மிக முக்கியமானது. இனவேறுபாடின்றி, சமய வேறுபாடின்றி, எந்நாட்டவரும் கடைப்பிடித்து வரும் அன்றாட சுகாதாரப் பழக்கங்களில் ஒன்றுதான் பல்துலக்குதல். நகரத்திலுள்ளோர் நவீன வசதிகளுடன் இப்பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தாலும் நமது கிராமங்களில் உள்ள குழந்தைகள் இந்தப் பழக்கத்தைச் சரிவரக் கடைப்பிடிப்பதில்லை. சரிவரப் பல் துலக்காத காரணத்தால், குழந்தைகள் ஈறுநோய்களாலும், பல்நோய்களாலும் பாதிக்கப்பட்டு வேதனைப்படுவதோடு உடல்நலமும் பாழ்பட்டு வாடுகிறார்கள்.

பற்களைத் துலக்கும் இந்தப் பழக்கத்தை பாலப்பருவத்தில் குழந்தைகளுக்குப் புகுத்த நல்லதொரு திட்டமாய் இந்த இலவசப் பற்பொடி வழங்கும் திட்டத்தை, மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தீட்டியுள்ளார்கள்.

தமிழக முதலமைச்சரின் சத்துணவுத்திட்டத்தில் பங்குபெறும் குழந்தைகளுக்கு இலவசப் பற்பொடி வழங்கும் திட்டத்தின் துவக்க விழாவே பொன்னேரி கண்ட புதுவிழாவாக அமைந்தது.

*அந்த விழாவில்...*

பல்நலக் கண்காட்சி - காண வந்த மக்களுக்குக் கண்கொள்ளாக் காட்சியாக, அறிவுக்கு விருந்தாக அமைந்திருந்தது.

இந்தக் கண்காட்சியில் கிராமக் குழந்தைகள் சிலர் பற்களைத் துலக்காததால், அவர்களின் பற்களில் அழுக்குகள் படிந்து பற்படலம் உண்டாகி, பற்காரை உருவாகி, ஈறுகளைத் தாக்கி, இரத்தம் வரும் காட்சிகள் படம் பிடித்துக் காட்டப்பட்டன. பல்துலக்கும் அவசியம் குழந்தைகளுக்குப் பக்குவமாய்ப் போதிக்கப்பட்டது.

ஆற்றுமணல், செங்கல், அடுப்புக்கரி, சாம்பல் இவைகளைப் பல் துலக்க உபயோகிப்பதால் ஏற்படும் தீங்குகள் வண்ண ஓவியங்களாக வரைந்து காண்பிக்கப் பெற்று, காணவந்த மக்களுக்கு விளக்கப்பட்டன. இவைகளை உபயோகிப்பதால் பற்கள் சிறுகச் சிறுகத் தேய்ந்து கூராவதும் இந்தக் கூரான பற்கள் சதையினைக் குத்திக் குத்தி அங்கு ரணம் உண்டாக்குவதும் அந்த ரணம் ஆறாமல் இருப்பதும், ஆறாத புண் புற்றாக மாறுவதும் படங்களின் மூலம் விளக்கப்பட்டன.

உண்ணும் உணவில் ஊட்டச்சத்து குறைவதால் ஏற்படும் வாய் நோய்களை வண்ணப்படங்கள் மூலம் விளக்கி, அவற்றைத் தவிர்க்க ஊட்டச்சத்து நிரம்பிய- கிராமங்களில் விளையும் கனிகளையும் காய்களையும் சுட்டிக்காட்டி, அவைகளை உண்டு, அந்நோய்களைத் தவிர்க்க வேண்டிய உண்மை மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது.

குழந்தைகள் பற்பொடியை விழுங்கினால் எந்த
விதத் தொல்லையும் இல்லை.

பற்பொடியை அறிவியல் முறைப்படி தயாரிக்
கப்படுகிறது.

பற்பொடி தேய்க்க ஆரம்பிக்கும் பொழுது விறு
விறுப்பு ஏற்படும்; அதனால் பயப்பட வேண்டிய
தில்லை.

ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்கு 1 கிராம் வீதம்
30 கிராம் கொண்ட பாக்கெட் பற்பொடி குழந்
தையின் பெற்றோரிடம் வழங்கப் படுகின்றது.

தமிழகம் முழுவதும் 185 டன் பற்பொடி விநி
யோகிக்கப்பட்டுள்ளது.





பற்களிலும் ஈறுகளிலும் நோய்களால் உண்டாகும் சீழ் மற்றும் நச்சுப்பொருட்கள் இரத்தத்தில் கலந்து உடலின் பல பாகங்களுக்குச் சென்று நோய்கள் உண்டாக்குவதை ஒரு சித்திரத்தில் மூலம் விளக்கி, பழுதான உடல் உறுப்புகள் சிலவற்றை மக்களின் பார்வைக்கு வைத்து உடல் நலமாக இருக்கப் பற்கள் பாழ்பட்டு இருக்கக்கூடாது என்ற கருத்து மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

உடைந்த பற்களாலும், உருமாறிய பற்களாலும் பொலிவிழந்த குழந்தைகளின் படங்களைக் காட்டி, அப்பற்களைப் பல் மருத்துவத்தால் செப்பனிட்டுச் சீர்செய்து சிறந்த பொலிவைக் கொடுக்கமுடியும் என்பது சான்றுகளுடன் விளக்கப்பட்டது.

நிலைமாறிய பற்களை வரிசைப்படுத்தி, பொலிவு கொடுக்கக் கூடிய பல் சீரமைப்பு முறைகளும் நிறம் மாறிய பற்களுக்கு நிரந்தர நிவாரணம் கொடுக்கக் கூடிய பல் மருத்துவ முறைகளும், காணவந்த மக்களுக்குத் தெளிவாக்கப்பட்டன.

குழந்தைகளிடம் பரவலாக இருக்கக்கூடிய சொத்தைப் பல் எப்படி உருவாகிறது; எப்படிப் பற்களிடையே பரவுகிறது என்னென்ன தொல்லைகளைக் கொடுக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தப் பல படங்களைக் காட்டி பற்சொத்தையைத் தடுக்கும் முறைகளும் குழந்தைகளுக்குப் போதிக்கப்பட்டன. கடைத்தெருவில் விற்கும் மிட்டாயும் ஐஸ்ஃபுருட்டும் குழந்தைகள் விரும்பும் நொறுக்குத் தீனியும் பற்களில் சொத்தை வருவதற்குத் காரணங்கள் என்பதை வலியுறுத்தி அவற்றை தவிர்க்க வேண்டும் என்று குழந்தைகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. பனங்கொட்டையைக் கடித்தாலும், சுண்டங்கத்திரிக்காயை சுவைத்தாலும் தான் பற்சொத்தை வருகிறது என்று எண்ணிவந்த கிராமமக்களுக்குப் பற்சொத்தையின் உண்மை[illegible] எடுத்துச் சொல்லப்பட்டன.

வளரும் சில குழந்தைகளிடம் காணப்படும் கைசூப்புதல், விரலைக்கடித்தல், உதட்டைக் கடித்தல், வாய் மூலம் சுவாசித்தல் ஆகிய பழக்கங்களால் மாறுபட்டு வளரும் தாடை அமைப்பையும் நிலைமாறி வளரும் பல்வரிசையும், அழகான சித்திரங்கள்மூலம் தெளிவுபடுத்தி அவற்றைச் சரிப்படுத்தக் கூடிய பல் சீரமைப்பு முறைகளை, விளக்கி அருங்கருத்துகள் கொண்ட அட்டைகள் பல ஆங்காங்கு தொங்கவிடப்பட்டிருந்தன. அதுமட்டுமல்லாமல் இந்தப் பழக்கங்களைப் பால பருவத்திலேயே தவிர்க்க வேண்டுமென்று பெற்றோர்களிடம் வற்புறுத்தப்பட்டது.

நகைச்சுவைக்காக மட்டுமல்லாமல், நல்ல பல கருத்துகளை நாட்டுமக்களுக்கு எடுத்துச் சொல்லும் பொருட்டு. ''பேசும் எலும்புக்கூடு'' ஒன்று பொருத்தப்பட்டு எலும்புக் கூண்டின் இசை விழாவும் சொல்விழாவும் இந்தக் கண்காட்சியில் நடைபெற்றன். இதன் மூலம் அறிவியல் கருத்துக்கள் பல மக்களுக்கு அருமையாக எடுத்துச் சொல்லப்பட்டன.

**இலவச பல் மருத்துவ சிகிச்சை முகாம்:**

சென்னை பல் மருத்துவக் கல்லூரியின் சமுதாயப் பல் நல பாதுகாப்புத்துறையின் கீழ், 50 மருத்துவர்கள் கொண்ட ஒரு குழு இலவச பல்மருத்துவ முகாம் நடத்தினர். பற்களைப் பரிசோதனை செய்து பார்த்துக் கொள்வதற்கு வாய்ப்பில்லாத கிராமக் குழந்தைகள் பலர் இந்தப் பல் மருத்துவமுகாமில் பங்கு பெற்றனர்.

மருத்துவ முகாமிற்கு வந்த குழந்தைகள் அனைவரையும்,

''நோய்நாடி நோய்முதல்
நாடி அதுதணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல்'',

என்னும் வான் புகழ் கொண்ட வள்ளுவனின் பொய்யா மொழிக்கிணங்க, முறைப்படி பரிசோதனை செய்து வாயிலும் பற்களிலும் தென்படுகின்றநோய்களைக் கண்டறிந்து, அந்நோய்களைக் குணப்படுத்தும் முறைகள் குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் எடுத்துச் சொல்லப்பட்டன. நோயாளிகளின் உள்ளங்களில் உள்ள எண்ணற்ற ஐயங்களுக்கு, அறிவியல் ரீதியில் அவர்கள் புரிந்து கொள்ளும் அளவுக்கு விளக்கங்கள் கொடுக்கப்பட்டன.

பழக்க வழக்கங்களால் ஏற்படும் மாற்றங்களை அவர்களுக்குச் சுட்டிக்காட்டி அந்தப் பழக்கங்



களைத் தவிர்க்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது.

பற்சொத்தையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்பலருக்குப் பழுதடைந்த பற்கள் மரப்பு மருந்து கொடுத்துப் பக்குவமாய் எடுத்தெறியப்பட்டன. பல் எடுத்தால் மூளை கெட்டுவிடும், கண் கெட்டுவிடும் என்றெல்லாம் பயந்து கொண்டிருந்த கிராமமக்கள், வலியில்லாமல் பல் எடுப்பது, அறுவைச் சிகிச்சையில் ஒரு கலையாக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். பற்சொத்தையால் வேதனைப்பட்டு, சீழ்கட்டிகளோடு வந்த குழந்தைகள் சிலருக்கு, பல் அகற்றப்பட்டதோடு சீழ் கட்டிகளுக்கும் மருந்திட்டுப் பாதுகாக்கப்பட்டன.

ஈறுகளில் ரத்தம் வருகிறது என்று முகாமிற்கு வந்த குழந்தைகளுக்கு, அவர்களின் பற்களில் பச்சை நிறமாகவும் மஞ்சள் நிறமாகவும் படிந்துள்ள காரைகளைச் சுட்டிக்காட்டி, அந்தக் காரைகள் தான் ஈறுகளைத்தாக்கி இரத்தப் பெருக்கை வரவழைக்கிறது என்று அவர்களுக்கு எடுத்துக் காட்டப்பட்டது. மேலும் மருத்துவர்கள் அவர்களுக்கு வலியில்லாமல் இதமாக அந்தக் காரைகளை அகற்றி ஈறுகளைச் சுத்தம் செய்து, பற்களைப் பளப்பளப்பாக்கி, மருந்திட்டனர். பற்களில் படியும் காரைதான் பற்களை, உறுதியாகத் தாடைகளில் பொருத்தியிருக்கிறது என்று எண்ணியிருந்த கிராமமக்கள், அந்தக் காரைகளினால் ஏற்படும் தொல்லைகளை உணர்ந்து ஆச்சரியப்பட்டார்கள். பால் பற்கள் பழுதடைந்து, கூராகி, சதையில் குத்திக் கொண்டிருந்த குழந்தைகளுக்கு, அந்தப் பற்களின் கூரான பகுதியைத் தேய்த்து அது குத்தாமல் இருக்க வழி செய்யப்பட்டது.

ஆரம்பகாலச் சொத்தையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு முகாமிலேயே, இயந்திரங்களின் உதவியால் அந்தச் சொத்தையை அகற்றி, அகற்றப்பட்ட பகுதியில் வெள்ளி உலோக அடைப்புகள் செய்து, அப்பற்கள் பாதுகாக்கப்பட்டன. சொத்தைப் பற்களுக்கு இப்படி அடைப்புகள் செய்யப்படுவதைக்கண்டு அக்கிராம மக்கள் ஆனந்தப்பட்டார்கள். இதுபோன்ற வைத்தியங்கள் அவர்கள் கிராமங்களில் இல்லையே என்று வேதனையடைந்தார்கள்.

முகாமில், பல்மருத்துவ அறிவுரைகள் பைந்தமிழ் மொழியில் கவிகளாக எழுதித் தொங்கவிடப்பட்டிருந்தன.

''கூரான பற்களால் ஏற்படும் ஆறாத புண், தீராத புற்று நோயை வரவழைக்கும்''

''காயும் கனியும் கனிசமாய்த் தின்றால் வாயும் பற்களும் வனப்புடன் இருக்கும்''

''சொல் சுவையாக இருக்க பல் பழுதின்றி இருக்கவேண்டும்''

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்; பழுதற்ற பல்லே பயனுள்ள செல்வம்''

இதுபோன்ற பைந்தமிழ் வாசகங்கள் முகாமை அலங்கரித்ததோடு, படித்தவர்கள் உள்ளங்களிலெல்லாம் ஒரு பரவசத்தை உண்டாக்கின. மனிதனின் பொழுதுபோக்கு மட்டுமல்லாமல், அறிவுரைகளைப் பெறவும், புதியனவற்றை அறிந்து கொள்ளவும் திரைப்படங்கள் மிகவும் பயனுடையவை என்பது நாடறிந்த உண்மை. புகை பிடிப்பதாலும், புகையிலை போடுவதாலும் ஏற்படும் புற்றுநோய்களின் கொடுமைகளைத் திரைப்படமாக ஓட்டி கிராம மக்களுக்கு, இந்தப் பழக்கங்கள் எவ்வளவு கெடுதலானவை என்று போதிக்கப்பட்டது.

நாட்டுக்காக நாளெல்லாம் உழைத்துவரும் கிராமமக்களின் வாழ்க்கையில் மலர்ச்சியும் மறுமலர்ச்சியும் பெருக வேண்டும் என்று நாட்டுக்கு உழைத்த நமது மாபெரும் தலைவர்களின் லட்சியங்கள், தமிழக அரசால் நிறைவேற்றப்படும் பொன்னான இக்காலத்தில் பல் மருத்துவத்தைப்பற்றி கிராமங்களில் ஒரு விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்திய இந்தத் திட்டத்தின் வெற்றிக்கு அயராது உழைப்போம் என முடிவுகட்டி, அரசுக்கு நன்றி தெரிவித்து மனநிறைவோடு முகாமை முடித்து வெற்றி நடைபோட்டு வீடு திரும்பினோம்.




## பாரதிதாசன் ஒரு நோக்கு

**ஆசிரியர் :** டாக்டர்
ச. சு. இளங்கோ

**விற்பனையுரிமை:**
பாரி நிலையம்,
184, பிராட்வே,
சென்னை-1.

**விலை : ரு 15 பக்கங்கள்: 251.**

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 'ஆத்திசூடி' நூலை ஆய்வு முறையில் நோக்கி, அரியதொரு நூலாக்கியுள்ளார் ஆசிரியர்.

ஆத்திசூடியின் அடிப்படை- நீதிபோதனையாகும். எனவே உலகின் பல நாடுகளில் உருவான நீதிநூல்கள் இங்கே ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

ஔவையின் ஆத்திசூடியிலிருந்து இளையர் ஆத்திசூடி முடியப்பல்வேறு ஆத்திசூடிகளின் சிறப்பையும் குறிப்பிட்டு ஒப்பு நோக்கி ஆய்வு செய்திருக்கிறார். உரையாசிரியர்களைப் பற்றியும் விவரங்களைக் கொடுத்திருக்கிறார். பாட வேறுபாடுகளையும் விட்டு வைக்கவில்லை. மற்ற ஆத்திசூடிகளிலும் பாவேந்தர் ஆத்திசூடி வேறுபட்டிருப்பதுடன் பகுத்தறிவுக் கொள்கையையும் பரவச் செய்கின்றது என்பதை ஆசிரியர் தேர்ந்து-தெளிந்து- வலியுறுத்திக் கூறியுள்ளார்.

'உணவு நெறிகள்' என்னும் பகுதியில் சங்ககால உணவுமுறையிலிருந்து இன்றைய உணவுவரை இலக்கியங்களின் வாயிலாகத் தொகுத்துக் கூறுகிறார். பாவேந்தர் அவர்களின் உணவு முறையையும் தமது நூல்களில் அவர் கூறியுள்ள உணவு முறையையும் எடுத்துக் காட்டி பாவேந்தர் 'அசைவ உணவுப் பிரியர்' என்பதை நிலைநாட்டியிருக்கிறார். ஆனால், எல்லோரும் அசைவ உணவுதான் உண்ணவேண்டும் என்று ஆசிரியர் வலியுறுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்க செய்தி.

பாவேந்தர் நூலில் சொல்லப்படும் கனிகள், உணவு வகைகள் ஆகியவற்றிற்காக இணைப்பு என்னும் பகுதியும் மேற்கோள் நூல்களுக்குரிய நூல்பட்டியல் என்னும் பகுதியும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மொத்தத்தில் ஆசிரியரின் உழைப்பு இந்த நூல் முழுதும் தெரிகிறது. ஆய்வு முறையில் இவர் ஒரு தனி பாணியைச் சிறந்த பாணியைக் கையாளுவது போற்றதற்குரியது.

## திரு. வி. க. சிந்தனைகள்

**ஆசிரியர் :** பி.எல். ராஜேந்திரன்

**வெளியீடு:** செல்வ நிலையம்,
18, முத்துமுதலி தெரு
இராயப்பேட்டை,
சென்னை-600 014.

**விலை ரு. 12 பக்கங்கள் 195**

தலைப்பைக் கண்ணுற்றதும் திரு.வி.க. அவர்களின் பொன்மொழிகளின் தொகுப்பு என எண்ணத் தோன்றுகிறது. ஆனால் இது திரு. வி. க. அவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் திறனாய்வு முறையில் தெரிவிக்கும் ஒப்பற்ற நூல்.

அவரது மொழிப்பற்று, நாட்டுப்பற்று, சமயப்பற்று, தொழிலாளரிடத்துத் தோழமை ஆகி செய்திகள் சான்றுரைகளுடனும் மேற்கோள்களுடனும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவரது சிந்தனையில் தெறித்து வந்த வைர மணிவாசகங்களும் ஆங்காங்கே எடுத்துக் காட்டப் பெற்றிருக்கின்றன.

திரு.வி.க.வின் மேடைத்தமிழ், பத்திரிகைத் தமிழ், அனைத்தும் இந்நூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஆற்றொழுக்கு நடையில் இந்நூலை எழுதியிருக்கும் ஆசிரியர் பாராட்டுக்குரியவர். 'தமிழர்களுக்கு அவர் ஒரு தமிழ்ச் சுரங்கம்; தேசிய வாதிகளுக்கு அவர் ஒரு வீர சிங்கம்' என்று ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது சரியான படப்பிடிப்பு ஆகும்.

இந்நூலில் தமிழகத்தின் -ஏன் இந்திய நாட்டின் ஒரு நூற்றாண்டுக்கால வரலாறே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்று கூறலாம்.

## வாழ்வது எப்படி?

**ஆசிரியர்:** மு. முத்துக்காளத்தி எம்.ஏ.

**விற்பனை உரிமை:** பாரி நிலையம்,
184, பிராட்வே,
சென்னை-600 001.

**விலை: ரூ. 4.50 பக்கம் 82.**

சிரிப்பது சுலபம், பிறரைச் சிரிக்க வைப்பது கடினம். அது போல், வாழ்க்கை நூல்களைப் படிப்பது சுலபம், பிறர் படிப்பதற்குரிய வகையில் படைப்பது கடினம். மக்கள் எளிதில் படித்தறிந்து கொள்ளும் வகையில் வாழ்க்கை நூலை எழுதியிருக்கிறார் இந்நூலாசிரியர் என்பது பாராட்டுக்குரியது.

உடல் நலம் குறித்தும் உள்ள நலம் குறித்தும் கவனிக்க வேண்டிய உண்மைகள் சான்றுகளுடன் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. நூலாசிரியர் பெற்றுள்ள அனுபவம் நூலுக்குத் துணை செய்திருக்கிறது.

நோய் வருவதற்கு முன்னர் அதனைத் தடுத்துக் கொள்வதற்குரிய உபாயங்கள் இந்நூலில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. சொல்லவந்த விஷயம் சுவையுறச் சொல்லப்பட்டிருக்கிறது. எளிய, இனிய, விறுவிறுப்பான நடை நூலுக்குச் சிறப்புச் சேர்க்கிறது.

—தமிழ்ப்பித்தன்

## புகை அகராதி

**தொகுப்பு :** து. ரங்காச்சாரி

**நூல் கிடைக்குமிடம்:**
135, மேல சித்திரை வீதி;
ஸ்ரீரங்கம்-620 006.

**விலை: ரூ. 1-50 பக்கங்கள்: 36**

புகை நமக்குப் பகை என்பார்கள். அதனால் விளையும் தீமைகள் அநேகம். இந்த உண்மையை உணர்த்துகிறது இச்சிறுநூல்.

சிகரெட் புகையிலுள்ள நஞ்சுகள் என்று 19 பெயர்களைப் பட்டியலே போட்டிருக்கிறார்கள். சிகரெட் குடிப்பதால் ஏற்படும் விளைவுகள்-அதனால் உயிருக்கே ஏற்படுகின்ற தீமையெல்லாம் சொல்லி நம்மை எச்சரிக்கும் இந்நூலில், இந்தப் பொல்லாத பழக்கத்தைக் கு... ஆம் வழிவகை...

## குடும்ப அசைவ சமையல்

**ஆசிரியர் : செல்வி**

**வெளியீடு : இலக்குமி நிலையம்,**
**10, காசிம் சாயிப் தெரு,**
**இராயப்பேட்டை,**
**சென்னை-600 014.**

**விலை: ரூ. 5-80 பக்கங்கள்: 127**

உணவில் சைவம், அசைவம் என இருவகை இருப்பதை நாமறிவோம. சிலர் சைவ உணவு தயாரிப்பதில் கெட்டிக்காரர்களாகவும், சிலர் அசைவ உணவைத் தயாரிப்பதில் கெட்டிக்காரர்களாகவும் இருப்பார்கள். ஆனால் இரு வகை உணவையுமே சமைப்பதில் தேர்ந்தவர்களாக இருப்பார்கள் சிலர். சைவ உணவை விட, அசைவ உணவைச் சமைப்பதில் சற்று சிரமம் இருக்கத்தான் செய்யும். அந்தச் சிரமத்தைக் குறைக்கின்ற வகையிலேயும், சுவையாகச் சமைக்கின்ற வகையிலேயும் இந்நூலிலுள்ள குறிப்புகள் பெரிதும் துணை செய்யும். ஆட்டுக்கறிக் குருமா முதல் மீன் புட்டு வரை சுமார் 103 அசைவச் சமையல் குறிப்புகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. தேவையான பொருட்களும், தயாரிக்கின்ற முறையும் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.

**—பி. வி. கிரி**

## இராணுவப் பழமொழிகளும் முதுரைகளும்

**தொகுப்பாளர்:**
**சாமி. வெண்கண்ணன்**

**விற்பனையுரிமை:**
**307, லிங்கிசெட்டி தெரு,**
**சென்னை-600 001.**

**பக்கங்கள்: 136 விலை: ரூ. 8.00**

தமிழில் பழமொழித் தொகுப்பு நூல்களும், பொன்மொழித் தொகுப்பு நூல்களும் ஏராளமாக வெளிவந்திருந்தாலும், ஒரு குறிப்பிட்ட துறைப் பழமொழிகளையும் முதுரைகளையும் (பொன்மொழி) தொகுத்து வெளியிடப்படும் முதல் நூல் இதுவே.

இந்நூலில், உலகின் பல்வேறு பகுதிகளில் புழக்கத்தில் இருந்து வரும் இராணுவப் பழமொழிகளும், இராணுவ இயல் முதுரைகளும் பேரளவில் திரட்டப் பெற்று அகர வரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

படிப்பவர்க்கு மட்டுமன்று, எழுத்தாளர்களுக்கும் சொற்பொழிவாளர்க்கும்கூட இந் நூல் ஒரு மிகச் சிறந்த 'களஞ்சியம்' என்றால் அது மிகையாகாது. ஆசிரியரின் பல்லாண்டு முயற்சியின் விளைவால் உருவான இந்த அரிய தொகுப்பு நூல், தமிழுக்குப் பெருமை சேர்க்கிறது. அச்சும், நூலமைப்பும் சிறப்பாக அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## நித்திரை பலன்

**ஆசிரியர்:**
**டாக்டர்-வைத்திய ரத்னா**
**எஸ். சிதம்பர தாணுப்பிள்ளை**

**வெளியீடு: சித்த மருத்துவ நூல்,**
**ஆராய்ச்சி நிலையம்**
**இ-32, அண்ணாநகர்**
**(கிழக்கு)**
**சென்னை-600 102**

**பக்கங்கள்: 50 விலை: ரூ. 5-00**

உழைக்கும் உயிரினங்களுக்கு உறக்கம் இன்றியமையாதது; உறக்கம் உயிரினங்களுக்குப் புத்துணர்வு தருகிறது. உள்ளத்திற்கு அமைதியையும், உடலுக்கு ஆற்றலையும் தருகிறது. இரத்தம் தூய்மை இழப்பதைத் தடுக்கவும் தூக்கம் தேவை என்பது உடற்கூற்று ஆய்வாளர் கருத்து.

பொதுவாக, ஆழ்ந்த நித்திரை கொள்வதும், குறைந்த நேரம் தூங்குவதுமே உடலுக்கு நலன் விளைவிக்கும். நிம்மதியற்ற நித்திரை-நெடுநேர உறக்கம் பல்வேறு வகையான பாதிப்புகளை உண்டாக்கும். 'நித்திரை பலன்' என்னும் இந்நூல் தூக்கத்தையும் கலையாக்கிக் காட்டுகிறது.

ஆசிரியர் இந்நூலில், தூங்கும் திசை, தூங்கும் விதம், தூங்கும் இடம், தூங்கும் நேரம், படுக்கை ஆகியவற்றிற்கும் உடல்நலத்திற்கும் உள்ள தொடர்புகளையும், பயன்களையும் - சிறந்த முறையில் ஆராய்ந்து தெளிவுபடுத்தியுள்ளார். தமிழில் - 'தூக்கக் கலை' இலக்கிய வரிசையில் ஒரு குறிப்பிடத்தக்க நூல் இது.

**—'சாமிபழ'**

## எளிய வைத்தியம் 250

**ஆசிரியர் : இந்திரா சுப்பிரமணியம்**

**வெளியீடு: இலக்குமி நிலையம்**
**10, காசிம் சாயிப்**
**தெரு, இராயப்பேட்டை**
**சென்னை-600 014.**

**விலை ரூ. 3-50**

அலோபதி, ஆயுர்வேதம், ஹோமியோபதி, சித்தா என்று மருத்துவ வகைகளைப் பிரித்தும் அதை மக்கள் கையாண்டும் வருகிறார்கள். இன்றைக்கும் கூட கிராமப்புறங்களில் நாட்டு வைத்தியத்தின் மீது அபரிமிதமான நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள்.

மருத்துவ வசதியற்ற கிராமப்புறங்களில் இன்னமும் 'சித்தா முறை' கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. நோய் ஏற்பட்டால் மருத்துவர்கள் அருகில் இல்லாத இடங்களில் உள்ள ஏழை -எளியவர்களுக்கு மாமருந்தாகப் பயன்படும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளதால் இது கை கண்ட மருந்து நூல் எனலாம்.

**—ஜி. ஆனந்தன்**

## இறைவைப் பயிருக்கு பயிர் பாதுகாப்பு

**ஆசிரியர்: அரு. சோலையப்பன்**

**வெளியீடு: புத்தகப் பூங்கா,**
**48, முத்து முதலி தெரு,**
**சென்னை-600 014**

**பக்கங்கள்: 104 விலை: ரூ. 5**

"மேழிச் செல்வம் கோழை படாது'' என்று ஒரு பழமொழி தமிழ்நாட்டில் வழக்கில் இருந்து வருகிறது. நமது பாரத நாட்டில் பெரும் பான்மையான மக்கள், விவசாயத்தையே நம்பி இருக்கின்றனர்.

இந்நூலில் ஆசிரியர், முதலில் நெல்லைத்தாக்கும் பூச்சிகள், நெல்லைத் தாக்கும் வைரஸ்கள் மற்றும் பூஞ்சானங்கள் (நோய்கள்) பற்றி விவரிக்கிறார். பிறகு நெற்பயிர்க்குப் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் பற்றி மிகத் தெளிவாகக் கூறுகிறார்.

அடுத்து, சோளத்தைத் தாக்கும் பூச்சிகளும், நோய்களும், அவற்றைத் தடுக்கும் முறைகளும் விவரிக்கப்பட்டுள்ளன. வாழையைத் தாக்கும் பூச்சிகளும், நோய்களும் பற்றிக் கூறப்படுகிறது. இறுதியாக, பருத்தியைத் தாக்கும் நோய்களும், அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளும் பற்றி ஆசிரியர் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று திண்ணமாகக் கூறலாம்.

**—வா. சோமசு**



# ஏறு தழுவல்

## டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

**தமிழ் மொழித் துறைத் தலைவர்**
**சென்னைப் பல்கலைக் கழகம்**

பழந்தமிழர் வாழ்வு பீடும் பெருமையும் சான்றது. வரலாற்றின் தொடக்க காலத்திலேயே தமிழர் தமக்கெனத் தனித்ததோர் இடத்தினை வரலாற்று ஏடுகளில் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை முதலான ஐவகை நிலங்களில் வாழ்ந்த தமிழர்தம் வாழ்வில் தனித்தனி வாழ்வுப் போக்குகளை அமைத்துத் தொல்காப்பியனார் ஒழுகலாறுகளைப் படைத்திருக்கச் சங்க இலக்கியங்கள் அவ்வொழுகலாறுகளை விரிவாக விளக்கும் போக்கும் பாடல்களைக் கொண்டிலங்குகின்றன.

முல்லை நில மக்களின் வாழ்வு விழுமிய தாய்-தூயதாய்த் துலங்கியது.

> 'ஆகாத் தோம்பி ஆப்பய னளிக்கும்
> கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா
> டில்லை'

என்று சிலப்பதிகாரமும் முல்லை நில மக்களாம் ஆயர்தம் அருமையான வாழ்வினைப் புலப்படுத்தியுள்ளது. முல்லை நிலத்துப் பூவான முல்லைப்பூவினை ஆயமகளிர் தம் கற்பிற்கு அடையாளமாகத் தலையிற் சூடினர். முல்லை என்பதே, கற்பிற்கு அடையாளமாகப் பழந்தமிழ் இலக்கியங்களில் இலங்கியது.

முல்லை நில மக்களின் ஒழுக்கம்' இருத்தலும் இருத்தல் நிமித்தமும்' எனப் புகலப்பட்டது. அக்காலத்தே செல்வ-வளனைக் காட்டுதற்கு எடுத்துக்காட்டாகப் பசுக்கள் திகழ்ந்தன. எனவே, பசு மந்தைகளை மிகுதியாகக் கொண்டவன் செல்வ வளம் மிக்கவனாகக் கருதப்பட்டான். 'மாடு' என்ற சொல்லே செல்வம் என்னும் பொருளுடைத்து. எனவே மாடுகளைச் சுற்றியே ஆயர் வாழ்வு சுழன்றது. ஒரேயொரு பசுவினைக் கொண்டு அதன் வருவாயில் வாழும் ஒரு குடும்பம் வறிய குடும்பம் என உரைக்கப்பட்டதாக 'ஓரான் வல்கிச் சீரில்வாழ்க்கை' என்னும் குறுந்தொகைப் பாடலடியால் உணரற்பாற்று.

முல்லைநில மக்கள் எந்நில மக்கள் போலவே காதல் வயப்பட்டனர். காதல் வாழ்வு கற்பு வாழ்வில் நிறைந்தது. காதலர் காதலரையே மணந்து கொள்ளக் காதலியரின் தாய் இசைவு தந்தாள். காரணம் அத்தாயும் ஒரு காலத்தே காதலியாயிருந்து காதலித்த காதலனையே கடிமணம் புரிந்தவளாயிற்றே! எனவே களவு மணம் கற்பு வாழ்வில் நிறைய அவள் மறுப்பேதும் சொல்வதில்லை. இதனைக் 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' பின்வருமாறு குறிப்பிடுகின்றது :-

> ஆயர் மகனாயின் ஆயமகள் நீயாயின்
> நின்வெய்ய னாயின் அவன்வெய்யை
> நீயாயின்
> நினைநோ தக்கதோ இல்லைமன்
> நின்நெஞ்சம்
> அன்னைநெஞ் சாகப் பெறின்

**முல்லைக் கலி: 7. 20-23**

ஆயினும் தாய்க்கு அஞ்சிக் காதலைச் சொல்ல முடியாமல் வாளாயிருந்தால் அதன் விளைவு வருத்தத்தில் போய் முடியும்; காதலுக்கு மணமன்றி மாற்று மருந்து வேறில்லை என்றும் தோழி காதலியைத் தெருட்டுவதைக் காணலாம்.

> ஆயர்மகனையுங் காதலை கைம்மிக
> ஞாயையும் அஞ்சுதி யாயின் அரிதரோ
> நீயுற்ற நோய்க்கு மருந்து

**முல்லைக் கலி: 7. 25-27**

நிற்க, முல்லைத் திணைப் பாடல்களில் காதலும் வீரமும் கைகோத்து நிற்பதனைக் காணலாம். காதல் வீரத்திற்கு நிலைக்களனாக இருப்பதையும் வீரத்திற்குக் காதல் பரிசாக அமைவதனையும் முல்லைப் பாடல்களிற் காணலாம். காதலியைக் கைபிடிப்பது கொல்லேற்றுக் கோடு பிடித்து வெல்வதாய் அமையும். எனவேதான் கொல்லேற்றுக் கோடுபிடிக்க அஞ்சியவன் காதலியின் தோள் தழுவும் வாய்ப்பு இழந்தவனாகிறான் என்று கலித்தொகை நுவல்கின்றது.

> ஆங்கு, பேசேற் றருந்தலை அஞ்சலும், ஆய்ச்சியர்
> காரிகைத் தோன்கா முறுதலும் இவ்விரண்டும்
> ஓராங்குச் சேறல் இலவோ ...

மேலும், கொல்லேற்றுக் கோட்டிற்கு அஞ்சி நிற்பவனை ஆயமகள் மறுபிறவியிற் கூட மணஞ்செய்ய மறுப்பாள் என்ற கருத்தமைந்த கலித்தொகைப் பாடலடி, பழந்தமிழர் தம் வீரவாழ்க்கையினை வியக்கப் பேசி நிற்கின்றது.

கொல்லேற்றுக் கோடஞ்சு வானை
மறுமையும்
புல்லாளே ஆய மகள்

முல்லைக் கலி: 3. 63-6

இதுபோன்ற வீர விளையாட்டுகள் பண்டைய கிரேக்கத்தில் மிகுதி என அறிகிறோம்.

எண் வகை மனத்தில் 'அசுரம்' என்பது ஒரு வகை என்றும், 'அசுரம் என்பது, கொல்லேறு கொண்டான் இவளை எய்தும், வில்லேற்றினான் இவளை எய்தும், திரியன்றி எய்தான் இவளை எய்தும், மாலை சூட்டப்பட்டான் இவளை எய்தும் என இவ்வாறு சொல்லிக் கொடுப்பது. இஃது அரும்பொருள் வினைநிலை என்பது என்று இறையனார் அகப்பொருளுரை குறிப்பிடுகின்றது. நம்பியகப் பொருள் இதனை 'விடை தழாஅல்' என்று நுவலும். இதற்கு உரை கண்ட பேராசிரியர் கா. ர. கோவிந்தராச முதலியார் அவர்கள், 'விடை தழாஅலாவது, வெல்லுந் திறனுடையனாகிய தலைமகன் தான் விழைந்த தலைமகளை மணத்தற் பொருட்டு கொல்லுந் திறலமைந்த ஓர் எருத்தினைப் பிடித்துத் தழுவி அடக்குதல்' என்பர்.

தான் விரும்பிய ஆய மகளை மணக்க விரும்பும் ஆயமகன், ஆயமகளின் அன்னை ஐயர் அரிதின் வளர்த்துவரும் கொல்லேற்றினைச் சாடிப் பிடித்துத் தழுவி அடக்கி அந்த வெற்றிச் சிறப்பிற்காக - வீரப் பரிசிலாக ஆய மகளிரை அடைவர் என்பது முல்லைக் கலிப்பாடல் முறைப்படி உரைக்கும் செய்தியாகும். அவை வருமாறு :

ஓஒ இவள், பொருபுகல் நல்லேறு கொள்பவர்
அல்லால்
திருமெய் தீண்டலர் என்று கருமமா
எல்லாருங் கேட்ப அறைந்த தறைந்து
எப்பொழுதும்
சொல்லால் தரப்பட்ட டவள்.

முல்லைக் கலி: 2. 9-12

கோளாளர் என்னொப்பார் இல்லென
நம் ஆனுள்
தாளாண்மை கூறும் பொதுவன் நமக்
கொரு நாள்
கோளாளன் ஆகாமை யில்லை அவர்கண்டு
வேளாண்மை செய்தன கண்.

முல்லைக் கலி: 1. 43-46

ஒன்றிப் புகரினத்து ஆயமகற் கொள்ளிமாய்
இன்றெவ னென்னை யெமர் கொடுப்ப
தன்றவன்
மிக்குத்தன் மேற்சென்ற செங்காரிக்
கோட்டிடைப்
புக்கக்காற் புக்கதென் நெஞ்சு.

முல்லைக் கலி: 5. 66-69

இவ் ஏறு தழுவுதல் பல நேரங்களில் தொழுவில் நடைபெறும்.

ஒரே வழி வியன்புலத்திலும் - அகன்ற வெளியிலும் நடைபெறும். மேய்ச்சல் நிலம் அன்று வியன்புலம் என வழங்கப்பட்டது. தம்முள் மாறுபட்டுத் தாக்கிக் கொள்ளும் ஏறுகளைப் பிரிப்பான் வேண்டி ஆயமகன் ஏறு தழுவி அவற்றை அடக்குதலும் உண்டு. சண்டு மகட்கொடை நேரும் நிகழ்ச்சி இல்லை. தம்முள் மாறுபட்டு உடற்றும் கொல்லேறுகளின் நிலையினைக் கலித்தொகை பின்வருமாறு குறிப்பிடும்.

நீறெடுப்பவை நிலஞ்சாடுபவை
மாறேற்றுச் சிலைப்பவை மண்டிப்பாய்
பாவையாய்த்
துளங்கிமில் நல்லேற் றினம்பல களம்புகும்
மள்ளர் வனப்பொத்தன.

முல்லைக் கலி: 6. 6-10

ஆயமகள் மோர் விற்கச் செல்லும்போது கொல்லேறு கொண்ட கணவனின் வீரத்தைப் பலரும் பாராட்டக் கேட்கும் வாய்ப்பினைப் பெறுவாள். ஆனாலுங்கூட அதற்குங்கூட அவளைப் பிரிந்திருக்க வொல்லா நிலையில் ஆயமகன் அவள் மாட்டுப் பேரமர் காதல் கொண்டு விளங்குகின்றான் என்பதனைப் பின்வரும் கலித்தொகைப் பாடலடிகள் பகரும்:

கொல்லேறு கொண்டான் இவள்
கேள்வன் என்று ஊரார்
சொற்லுஞ்சொற் கேளா அளைபிறி யாம்வரும்
செல்வம்எம் கேள்வன் தருமோஎங் கேளே

முல்லைக் கலி: 6. 43-45

இப்பகுதிக்கு 'உச்சிமேற் புலவர்கொள்' நச்சினார்க்கினியர் தரும் உரை, நுட்பமும் சிறப்பும் வாய்ந்தது எனலாம்.

''எம்முடைய தோழி! இவளுடைய கணவன் கொல்லுகின்ற ஏற்றைத் தழுவினான் என்று ஊரார் புகழ்ந்து சொல்லுகின்ற அச்சொல்லைக் கேட்டு மோரை விற்று யாம் வருஞ்செல்வத்தை எங் கணவன் தருமோ?

''ஓகாரம் தெருநிலை என்றது. அவன் புறத்துப்போய் இப்புகழ்கேட்க என்னை விடானென அவன் தன்மேலுள்ள விருப்பங் கூறிற்று''

இவ்வாறு பண்டைத் தமிழர் வீரமும் காதலும் இயைந்து நின்ற நிலையினை ஏறுதழுவுதல் என்னும் பண்டைய வழக்கு மெய்ப்பிக்கின்றது. ஏறுதழுவுதலின் முடிமணியாய இலங்கும் பாடல்களோடு இக் கட்டுரையினை முடிப்பாம் :

அஞ்சார் கொலையேறு கொள்பவரல்லதை
நெஞ்சிலார் தோய்தற் கரியவுயிர் துறந்து
நைவாரா ஆயமகள் தோள்;

வளியா அறியா உயிர்காவல் கொண்டு
நளிவாய் மருப்பஞ்சும் நெஞ்சினார் தோய்தற்
கெளியவோ ஆயமகள் தோள்;

விலைவேண்டார் எம்மினத் தாயர் மகளிர்
கொலையேற்றுக் கோட்டைத் தாம்வீழ்வார்
மார்பின்
முலையிடைப் போலப் புகின்.

முல்லைக் கலி: 3. 55-73

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.





# தமிழரசு

1-2-1983 75 காசு
திருவள்ளுவர் ஆண்டு 2014
துந்துபி - தை 19

COMMISSIONER OF TAMILNADU
ARCHIVES & HISTORICAL RESEARCH
7 FEB 1983
EGMORE, MADRAS-3



திருநெல்வேலி
மாவட்ட
சிறப்பிதழ்



சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் நாள் விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், யாழ்ப்பாணப் பொது நூலகத்திற்குத் தமிழக அரசின் சார்பில் ஸ்ரீலங்கா உதவி ஹைகமிஷனரிடம் நூற் கொடை வழங்கினார். மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ.சி., மாண்புமிகு இலங்கை அமைச்சர் திரு, ராஜதுரை ஆகியோர் உடனிருக்கின்றனர் (15.1.83)



மாண்புமிகு முதல்வர் அவர்களை மாண்புமிகு மத்திய ரசாயனத்துறை அமைச்சர் திரு. வசந்த் சாத்தே அவர்கள் சென்னையில் சந்தித்துப் பேசினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம், அறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக உயர்மட்டக் குழு அறிக்கையைத் துணை வேந்தர் திரு வி. சி. குழந்தைசாமி அவர்... அளித்தார். மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவ... உடனிருக்...

# பிப்ரவரி 3
# பேரறிஞர் அண்ணா நினைவு நாள்



தமிழுக்குத் தொண்டுசெய்து
சிறைக்குச் சென்றோன்
தலைசிறந்த பேச்சுவல்லோன்
தமிழ வீரன்
தமர்என்றும் தான்என்றும்
நினைப்ப தன்றி
தமிழ்நாட்டின் நிலத்தினுக்கே
உயிர் உடல்கள்
அமைகஎன இரவுபகல்
உழைக்கும் மேலோன்!
பாரதிதாசன்

மங்கையர் சிரிப்பி னுள்ளே
வாலிபக் கவர்ச்சி தேங்கும்!
வாணிகர் சிரிப்பி னூடே
வாணிபத் திறமை தேங்கும்!
பொங்குமென் அருமை அண்ணாப்
புலவனின் சிரிப்பி னுள்ளே
சங்கமுத் தமிழும் நாட்டுச்
சனத்திரள் யாவுந் தேங்கும்!
கண்ணதாசன்



## தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2014
துந்துபி — தை 19

மலர்: 13 இதழ்: 15
1-2-1983

அளந்துவரும் சொற்கள்
ஆழ்ந்தபொருள் இருளூடே
பிளந்துவரும் மின்வெட்டு
பேச்சுக்கொரு புலவன்
அண்ணாவென்றே இளைஞர்
அன்போடரு கணைவார்
பண்புடைய சொல்ஒன்றால்
பச்சையன்பு பாய்ச்சிடுவார்
திருலோக சீதாராம்

அண்ணா துரையென்னும்
அண்ணல் தமிழ்நாட்டு
வண்ணான் அழுக்கெடுப்பில்
வாய்மொழியில்—பண்ணாவான்
சிற்பனெழுத் தோவியத்தில்
செவ்வரசு காவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமியென் றாடு
திரு. வி. க.

திருநெல்வேலி
மாவட்டச்
சிறப்பிதழ்



# வாழ்வில் வளங்காண வழிவகுப்போம்!

## மேதகு ஆளுநர் திரு சுந்தர் லால் குரானா

தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவையில் மேதகு ஆளுநர் திரு. சுந்தர்லால் குரானா அவர்கள்
(திருவள்ளுவர் ஆண்டு 2014 – துந்துபி - தைத் திங்கள் 11-ஆம் நாள்) 24-1-1983 அன்று ஆற்றிய உரை

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே,

இம் மாநிலத்தின் ஆளுநராக நான் பொறுப்பேற்ற பின்னர், உங்கள் அனைவரையும் கூட்டு அவையில் சந்திப்பதற்கு இதுதான் எனக்குக் கிடைத்த முதல் வாய்ப்பு. முதற்கண் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்தும் பொங்கல் வாழ்த்தும் அளிக்க விழைகிறேன்.

இம் மாநிலத்தில், வெவ்வேறு நடவடிக்கைத் துறைகளில் பல்வேறு திட்டங்கள் 1982ஆம் ஆண்டில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிடத் தகுந்த மாபெரும் சாதனை அடைந்துள்ள திட்டம், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டமாகும். இத் திட்டம் இம் மாநிலத்தின் சிற்றூர்ப் பகுதிகளில் 1–7–1982 முதல் தொடங்கப்பட்டது. அதன்பின், இத் திட்டம் 15–9–1982 முதல் நகரப் பகுதிகளுக்கு நீட்டிக்கப்பட்டது. இரண்டு வயது முதல் நான்கு வயது வரையுள்ள 23 இலட்சம் குழந்தைகள் 27,800 குழந்தை நல நிலையங்களிலும், ஐந்து வயது முதல் ஒன்பது வயது வரையுள்ள 42 இலட்சம் குழந்தைகள் 33,700 பள்ளி நிலையங்களிலும், அன்றாடம் முழுமையான, நல்ல சத்துணவு அளிக்கப்பட்டு வருகின்றனர். பள்ளிக்கூடங்கள் மூடப்படும் முக்கியமான அரசுவிடுமுறை நாட்கள் ஒரு சில நீங்கலாக, ஆண்டு முழுவதிலும் எல்லா நாட்களிலும் குழந்தைகளுக்கு உணவு அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இந்த விடுமுறை நாட்களுக்கு முதல் நாள் மாலையிலேயே அவர்கள் பள்ளி விட்டுச் செல்கையில், முன்னதாகச் சமைக்கப்பட்ட உணவுப் பொட்டலங்கள், வீடுகளுக்கு எடுத்துச் சென்று அடுத்த நாள் உட்கொள்வதற்காக, அவர்களிடம் கொடுக்கப்படுகின்றன. இந்த ஏற்பாட்டினால் ஆண்டு முழுவதிலும் எல்லா நாட்களிலும் அவர்கள் சத்துள்ள உணவு உட்கொள்கின்றனர். இத் திட்டத்தின் காரணமாக, பெரிதும் கிராமப்பகுதிகளில் 1,40,000-க்கு மேற்பட்டவர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது; இவர்களில் பெரும்பாலோர் மகளிர் ஆவர். ஏராளமான கைம்பெண்கள், ஆதரவற்றோர், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள், ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் ஆகியவர்கள் இத் திட்டத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள புதிய வேலை வாய்ப்புகளினால் பயனடைந்துள்ளனர்.

பள்ளிகளில் உணவளிக்கும் திட்டத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள பொறுப்பினின்றும் தலைமை ஆசிரியர்களையும், ஏனைய ஆசிரியர்களையும் விடுவிப்பதற்காகவும் அவர்களைக் கல்வி கற்பிக்கும் பணியிலேயே ஆழ்ந்து ஈடுபடச் செய்யும் பொருட்டும், உணவு அளிக்கும் பள்ளி நிலையங்கள் பலவற்றிலும் அமைப்பாளர்களை அரசு நியமிக்க முடிவு செய்துள்ளது. தலைமை ஆசிரியர்களுக்கும், ஏனைய ஆசிரியர்களுக்கும் புதிய பொறுப்பு முழுவதும் நீங்குவதுடன், இதனால் 35,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும். சமுதாயத்தின் வறிய நிலையிலுள்ள ஏழை மக்களுக்கு இத் திட்டம் பெரிதும் பயனுள்ளதாக இருக்கிறது. நாடு விடுதலை அடைந்து பல பத்தாண்டுகள் ஆன பின்னர் இப்போதுதான் இத் திட்டத்தின் காரணமாக, ஏழை இளஞ் சிறார்கள் ஒரு நாளைக்கு ஒரு வேளையாகிலும் நல்ல சத்துள்ள உணவை உட்கொள்ள முடிகிறது. இந்த ஒரு வேளை உணவுகூட அவர்களுக்கு இதற்குமுன் வயிறாரக் கிடைத்ததில்லை. அவர்களுடைய பெற்றோர்கள் பணி புரியும் நேரங்களில் தங்கள் குழந்தைகளுக்கு உணவளிக்க வேண்டுமே, அவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டுமே என்ற கவலையின்றி, தங்கள் பணிகளில் முழு மூச்சுடன் இத் திட்டத்தினால் ஈடுபட முடிகிறது. ஏற்கெனவே சொல்லியுள்ளதுபோல், ஏராளமான மக்களுக்கு அவர்கள் வாழும் இடங்களிலேயே இத் திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு கிட்டியுள்ளது. வேறெந்தத் திட்டத்தின் மூலமாகவும் சாதாரணமாக இவ்வாறு செய்திருக்க முடியாது; அதுவும் இவ்வளவு பேர்களுக்குச் செய்திருக்க முடியாது. சத்துள்ள உணவு உட்கொண்ட, சிறந்த முறையில் கல்வி கற்பிக்கப்பட்ட [illegible] இள்ள, உடல் நலமுள்ள குழந்தைகளைக் கொண்ட புதிய தலைமுறை கிடைப்பதால் இம் மாநிலமும் இத் திட்டத்தினால் பயனடையும். இந்த ஆண்டில், முக்கியமாக இத் திட்டத்தின் காரணமாக, 2·63 இலட்சம் மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மக்களில் விவரம் தெரிந்த, அறிவார்ந்த எல்லாப் பிரிவினரும் பத்திரிகையாளர்களும் இத் திட்டத்தை உளமாரப் பாராட்டியுள்ளனர். இத் திட்டத்திற்கென பல்வேறு மக்களிடமிருந்தும் தாராளமாக நன்கொடை கிடைத்துள்ளது. இந்நாள் நிலவரப்படி, முதலமைச்சர் சத்துணவுத் திட்ட நிதிக்கு மக்களின் நன்கொடையாக ரூ. 2 கோடிக்கு மேல் கிடைத்துள்ளது. இந்த மக்கள் நலத்திட்டம், இம் மாநிலத்தில் முதியோர் உதவித் திட்டத்தின்கீழ் பயன் பெறுபவர்களுக்கும் 15–1–1983 முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

கிராமப் பகுதிகளிலுள்ள உணவளிக்கும் நிலையங்கள், 14–11–1982-லிருந்து தொடங்கப்பட்ட இலவச பற்பொடித் திட்டத்தின்கீழ் பற்பொடியை வழங்குவதற்கும் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் காரணமாக, இந்த நிதி ஆண்டில் ஏறக்குறைய ரூ. 112 கோடி செலவாகக் கூடும். இத்தொகை மிக உன்னதமான பணிக்கு நல்லமுறையில் செலவிடப்படுகிறதென, இவ்வரசு நம்பிக்கை கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மாபெரும் தன்மை காரணமாக, இத்திட்டம் செயல்படுத்தப்படுவது தொடர்ந்து உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. மேலும், முதலமைச்சர் தலைமையிலான உயர் அதிகாரக் குழுவால் இத் திட்டத்தின் செயல்பாடு கண்காணிக்கப்பட்டு வருகிறது.



மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் 1982ஆம் ஆண்டில் நிறைவெய்தியது மற்றொரு சிறப்பு நிகழ்ச்சியாகும். 1981 டிசம்பர் முதல் 1982 டிசம்பர் வரையுள்ள நூற்றாண்டு விழா ஆண்டு இந்த அரசால் தேசிய ஒருமைப்பாட்டு ஆண்டாக அறிவிக்கப்பட்டது. இந் நாட்டிலுள்ள வேறு பல மாநிலங்களும், மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக நிகழ்ச்சிகள் பலவற்றை நடத்தியுள்ளதும் மனநிறைவளிப்பதாக உள்ளது. இக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, பல்வேறு நாடுகளுக்கும் கலைக் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கல்வித் துறையில் 1982ஆம் ஆண்டில் இம் மாநில அரசு பலரது பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது. [illegible] எழுத்தறிவின்மையைப் போக்குவதில் இம் மாநில அரசு மேற்கொண்ட முயற்சிகளும் முதியோர் கல்வித் துறையில் ஆற்றிய சிறந்த பணியும் சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ளன. ஒப்புயர்வற்ற க்ரப்ஸ்காயா கல்விப் பரிசினை அளிக்க யுனெஸ்கோ 1982ஆம் ஆண்டில் தமிழ் நாட்டைத் தெரிந்தெடுத்துள்ளது.

இம் மாநிலத்தில் கடந்த சில ஆண்டுகளாக வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கையில், புதிதாக வேலைவாய்ப்பு ஏற்படுத்த மேலும் ஊக்கமளிக்கும் வகையில் புதிய உத்வேகம் அளிப்பது அவசியமென்று இவ்வரசு கருதுகிறது. குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்க மாபெரும் திட்டமொன்றைத் தொடங்குவதெனத் தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் ரூ. 15 கோடி வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டுடன் இப் பணி தொடங்கப்படும்.

கிராமங்களில் சமூக, பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த, கிராமங்களில் அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்காக 1980–81-ல் கிராமப் பகுதிகளில் தொடங்கப்பட்ட தன்னிறைவுத் திட்டம், 1982–83-ல் நிறைவெய்தும். முதலாம் ஆண்டில் 69 வளர்ச்சி வட்டாரங்கள் இத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டன. 1981–82-ல் மேலும் 150 வளர்ச்சி வட்டாரங்கள் இத் திட்டத்தின்கீழ் வந்தன. 1982–83-ல் மேலும் 159 வளர்ச்சி வட்டாரங்கள் இத் திட்டத்தின் கீழ் வருகின்றன. ஆகவே, இம் மாநிலத்தில் உள்ள 378 வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்தும் இத் திட்டத்தின்கீழ்

வந்துள்ளன. அடுத்த நடவடிக்கையாக, தன்னிறைவுத் திட்டம் ஒரு சில மாற்றங்களுடன் பேரூராட்சிகளுக்கு நீட்டிக்கப்பட்டு, நடப்பாண்டில் 146 பேரூராட்சிகளில் ரூ. 5 கோடி நிதி ஒதுக்கத்துடன் இத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடுத்த நிதி ஆண்டில் இத் தொகை ரூ. 10 கோடியாக உயர்த்தப்படும்.




ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் பொதுக் கழிப்பிடங்களைக் குறிப்பாகப் பெண்களுக்குக் கட்டித் தருவதற்காக மொத்தம் ரூ. 22·56 கோடி செலவாகும் பெருந்திட்டம் ஒன்றும் நடப்பாண்டில் வகுக்கப்பட்டுள்ளது. பொதுக் கழிப்பிடங்கள் அடுத்த நிதி ஆண்டு இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சமுதாயத்தில் நலிவுற்ற பாமர மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான பல்வேறு நலத் திட்டங்களை அரசு மேற்கொண்டிருந்த போதிலும், இம் மாநிலத்தில் பருவமழை தொடர்ந்து பெய்யத் தவறியது கடுமையான பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. 1982-ல் தென்மேற்குப் பருவ மழையும் வடகிழக்குப் பருவமழையும் பொய்த்துவிட்டதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். மின் உற்பத்திக்கும் பாசனத்திற்கும் மட்டுமல்லாமல், குடிநீருக்கும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தென்மேற்குப் பருவமழை பொய்த்துவிட்டவுடனே, பொது மக்களுக்குக் குடிநீர் வழங்கும் பணிகளை அரசு தொடங்கிவிட்டது. கிராமப் பகுதிகளிலும் நகராட்சிப் பகுதிகளிலும் 1982 ஆகஸ்டு தொடங்கி 1983 ஜனவரி வரையில் ரூ. 17·50 கோடி செலவில் தமிழ்நாடு, குடிநீர்-வடிகால் வாரியம் 7,500 துளைக் கிணறுகள் இறக்கி, கை பம்புகள் பொருத்தியுள்ளது.

சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் அளவைப் பெருக்க, குழாய்க் கிணறுகளும் ஆழ்துளைக் கிணறுகளும் இந்நகரில் இறக்கப்பட்டுள்ளன. மேலும், பொதுநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தவும், கடற்கரை மாவட்டங்களில் உறைகிணறுகளையும், சிறு கிணறுகளையும் அமைக்கவும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. நகராட்சிகளில் குடிநீர் வழங்கும் நிலையங்களுக்காக கிளை மின்சாரக் கம்பிகள் போடும் பணிக்கும் ரூ. 1·50 கோடி செலவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் விளைந்து கொண்டிருக்கும் பயிர்களைக் காப்பாற்றுவதற்காக ஓராயிரம் வடிமுனைக் குழாய்க் கிணறுகளை இறக்குவதற்கென்று சிறு உழவர்களுக்கும் சொற்ப நில உழவர்களுக்கும் ரூ. 1·50 கோடி கடன் வழங்கவும் அரசு அண்மையில் அனுமதி அளித்துள்ளது. வறட்சித் துயர் தணிப்பிற்கு ரூ. 190 கோடி செலவாகும் விரிவான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதுபற்றி இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்தில் தற்போது நிலவுகிற வறட்சி நிலைமை நமக்கு நினைவு தெரிந்தவரை மிக மோசமான நிலைமையாகும். இதன் கடுமையை மத்திய அரசு கருதிப் பார்த்து, இயற்கைச் சீற்றத்தினால் ஏற்பட்ட இந்த வறட்சி நிலைமையைப் போக்குவதற்குத் தாராள மனப்பான்மையுடன் நிதி உதவி நல்குமென்று நம்புகிறோம். வறட்சி நிலைமை சந்தேகத்திற்கிடமின்றி மிகவும் கடுமையாகவே உள்ளது. ஆனால், மக்கள் படும் துன்பத்தைக் குறைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டிற்கும் கர்நாடகத்திற்கும் இடையே காவிரி நீரைப் பகிர்ந்து கொள்வதைப் பொறுத்தவரை, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் சட்டப்படிச் செல்லத்தக்கது என்றும், புதியதோர் ஒப்பந்தம் ஏற்படும்வரை தொடர்ந்து செயல்படுத்தக் கூடியது என்றும் இவ்வரசு எப்போதும் கூறி வந்துள்ளது; இப்போதும் அவ்வாறே கூறி வருகிறது. காவிரி பாசனப் பகுதியில் நீர்ப் பற்றாக்குறை காரணமாக வறட்சி நிலைமை இருந்து வருகிறது; நிலைமை இவ்வாறிருக்க, காவிரி நீரில் தமிழ்நாட்டிற்குச் சட்டப்படி உரிமையான பங்கினைக் கர்நாடக அரசு தடுக்கவும் மறுக்கவும் முயன்று வருகிறது. இத் தகராறில் மத்திய அரசு சமரசம் செய்வதுடன், பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணவும் வேண்டும். மேலும் சென்னையில், 15—12—1982-ல் நடைபெற்ற மாநிலப் பாசன அமைச்சர்கள் மாநாட்டில் நமது முதலமைச்சர் இதனை வலியுறுத்தினார்; அப்போது இது குறித்து விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக மத்தியப் பாசன அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னலை ஓரளவேனும் குறைக்க, அவர்களின் நலன் கருதி, கிடைக்கின்ற நீரைப் பயன்படுத்தும் பொருட்டு, தமிழ்நாட்டின் எல்லைக்குள் ஓடும் காவிரி கிளை நதிகளின் குறுக்கே அணைகள் கட்டுவதுபற்றி இவ்வரசு யோசித்து வருகிறது.

தமிழ்நாட்டில் தொடர்ந்து பருவமழை பொய்த்ததாலும், கர்நாடகாவிலிருந்து காவிரி மூலம் மிகக் குறைந்த நீர் வரவு காரணமாகவும், கேரளாவிலிருந்து மின்சாரம் நமக்குப் போதிய அளவு கிடைக்காததாலும், இம் மாநிலத்தில் மின்சார நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக எல்லாவகைப் பயனீட்டாளருக்கும் மின்



வெட்டு விதிப்பதைத் தவிர அரசுக்கு வேறு வழியேதும் இல்லை. இந்த மின்வெட்டு உயரழுத்த மின்சாரம் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்குத் தேவையில் 75 சதவீதமாகவும் மின் அழுத்தத்தில் 60 சதவீதமாகவும் உள்ளது. அடுத்த பருவமழை பொழியத் தொடங்கும் வரையில் மின் உற்பத்தி நிலைமை மிகவும் இக்கட்டாகவே இருக்கும். ஆயினும், அனல் மின் நிலையங்களில் மின்சாரம் உயரளவுக்கு உற்பத்தியாவதை உறுதி செய்வதற்குத் தன்னாலியன்ற அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது. ஆனால், இம் மாநிலம் தற்போது பல்லாண்டுகளாகத் தொடர்ந்து மின் வெட்டினால் அல்லலுறும் நிலைமை, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் புதிய அனல் மின் நிலையங்களை அமைப்பதன் வாயிலாக மட்டுமே சீரடையும்.

இந் நோக்கத்தினை எய்தும் பொருட்டு, மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு மாநில அரசு பல திட்டங்களைத் தீட்டியுள்ளது. மைய அரசும் மின் உற்பத்திப் பெருக்கத்தை வலியுறுத்துகிறது. இத் திட்டத்தினை வெற்றிகரமாகச் செயற்படுத்தவும் தற்போதுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் செவ்வையாகச் செயல்படுவதை உறுதி செய்யவும், மத்திய அரசின், அதன் பல்வேறு நிறுவனங்களின், ஒத்துழைப்பும் உதவியும் கணிசமான அளவுக்கு இன்றியமையாது தேவைப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மின் நிலையங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்திய அரசு நிர்ணயம் செய்த நிலக்கரிடன் அளவைக் காட்டிலும் நமது அனல் மின் நிலையங்களுக்கு வழங்கும் நிலக்கரி அளவு குறைந்து விட்டதை நாம் இப்போது காண்கிறோம். இவ்வாறு வழங்கப்படும் நிலக்கரியின் தரமும் சிறந்ததாக இல்லை. இத்தகைய காரணங்களை முன்னிட்டு, இம் மாநிலத்தின் அனல் மின் நிலையங்கள் மின் உற்பத்தியில் அதிகச் செலவு கொள்ளும் எரி எண்ணெயைப் பயன்படுத்தி ஓரளவு மின் உற்பத்தி செய்யும் நிலைக்கு உந்தப்பட்டுள்ளன. நிலக்கரியை முடையிருப்பு வைக்க வெளிநாட்டிலிருந்து ஒருமுறை இறக்குமதி செய்வதற்கான இம் மாநில அரசின் செயற்குறிப்பு இன்னும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இது குறித்து மாநில அரசுக்கு உதவும் வகையில் மைய அரசு உடனடி முடிவெடுக்கும் என்று உளப்பூர்வமாக நம்புகிறோம்.

அனல் மின் நிலையம் ஒன்றைப் புதிதாக அமைப்பதற்கு அதிகச் செலவாகும் என்பதையும் இது தொடர்பாகக் கருத்தில் கொள்ள வேண்டும். அனல் மின் உற்பத்திக்கு புனல் மின் உற்பத்தியை விட அதிகம் செலவாகும் என்பது அனைவருக்கும் தெரியும். அநேகமாக நம்மிடமுள்ள புனல் மின் ஆதாரங்கள் அனைத்தையும் இந்த அரசு பயன்படுத்தி விட்டது. எனவே, மின் உற்பத்திக்கு நம்மிடமுள்ள ஒரே மாற்று வழி அனல் மின் உற்பத்தித் திட்டங்களை அல்லது அணு மின் உற்பத்தித் திட்டங்களை மேற்கொள்வதேயாகும். இக்கட்டான இந்தத் தொல்லைகளிலிருந்து விடுபட இந்த அரசுக்கு உதவி செய்வதற்காக மத்திய அரசு தமிழ்நாட்டில் அணு மின் திட்டங்களைத் தொடங்கும் என்று நம்புகிறோம். அனல் மின் நிலையங்களைப் பொறுத்தவரையில், இம் மாநில அரசு அதிக முதலீடு செய்ய வேண்டியிருக்கும். இத் திட்டங்களை தொடங்குமுன் இம் மாநில அரசின் நிதி ஆதாரங்களைப் பெருக்கவேண்டிய அவசியம் உள்ளது. மின் பயனீட்டாளர்களிடமிருந்து வசூலிக்கும் மொத்த மின் கட்டணங்கள் தற்போது மின் உற்பத்திக்கான செலவுக்குக்கூட கட்டிவராத நிலையில் உள்ளது. நடப்பு நிதி ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை முன் வைத்து உரையாற்றியபோது, நிதி அமைச்சர், மின் வாரியத்திற்கு ஆகும் செலவுகளை ஈடு செய்ய அதற்கு ரூ. 271 கோடி தேவைப்படும் என்பதைச் சுட்டிக் காட்டியிருந்தார். எனவே, மாநில மின் வாரியத்தின் ஆண்டு வரவு-செலவுப் பற்றாக்குறை பல கோடிக்கணக்கான ரூபாய் வரை உயர்ந்து கொண்டே போவதை ஓரளவுக்கு ஈடு செய்ய, மின் கட்டணங்களை மனமின்றி உயர்த்துவதைத் தவிர வேறெந்த வழியும் இந்த அரசுக்கு இல்லை. மின் கட்டண வீதங்களை உயர்த்துமாறு மாநில அரசை, மத்திய திட்டக் குழுவும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தவிர்க்க முடியாதது என்பதால், இதனை அரசு ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

தற்போது இம் மாநிலத்தில் மிகவும் இக்கட்டான உணவு நிலைமை உள்ளது. கடந்த இரண்டாண்டுகளாகத் தமிழகத்தில் தொடர்ந்து பருவ மழை தவறியதால் உணவு தானிய உற்பத்தி மிகவும் தாழ்ந்துள்ளது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். எடுத்துக்காட்டாக, 1982-ல் குறுவை சாகுபடிப் பரப்பளவு 20 சதவீதம் குறைந்து விட்டது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 'சம்பா' பயிர் சாகுபடியும் ஊக்கமளிப்பதாக இல்லை. எனவே, இம் மாநிலத்தில் நெல் உற்பத்தி இறங்குமுகத்தைக் காட்டுகிறது. பொதுப்பங்கீட்டு முறையின் கீழ் செலவாகும் அரிசியின் அளவு உயர்ந்துவிட்டதால், உணவுப் பிரச்சினை தீவிரமாகி விட்டது. 1982 ஏப்ரலில் இவ்வாறு செலவான அரிசி 36,000 டன் ஆகும். இந்த அளவு ஏறத்தாழ 86,000 டன் ஆகத் தற்போது உயர்ந்துள்ளது. பொதுப்பங்கீட்டு முறையின் மூலம் பயனீட்டாளர்கள் அரிசி பெறுவது இனி வரும் மாதங்களிலும் தொடர்ந்து அதிக அளவில் இருக்கும். அரிசி உற்பத்தி குறைந்துபோய், செலவாகும் அரிசியின் அளவு உயர்ந்துவிட்டதால், அரிசிக் கையிருப்பு அளவு மிகவும் குறைந்து விட்டது. நம்மிடம் ஒரு இலட்சம் டன் அரிசியும் இரண்டு இலட்சம் டன் நெல்லும் தற்போது இருப்பிலுள்ளன. தற்போது இருப்பிலுள்ள அரிசியும் நெல்லும் நீண்ட காலத்திற்கு வராது. இந்திய அரசுடன் இம் மாநில அரசும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும் அதிகாரிகள் நிலையிலும் அமைச்சர்கள் நிலையிலும் தொடர்ந்து அயராது முயற்சிகள் எடுத்துக் கொண்ட போதிலும், 1982-ம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து

இம் மாநிலத்திற்கு அரிசி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. இந்நிலையில், மேலும் காலதாமதம் செய்யாமல் உற்ற தருணத்தில் உறுதுணையாக உதவ மத்திய அரசு முன்வந்து உடனடியாகக் கணிசமான அளவு உணவு தானியங்களை ஒதுக்கும் என்று நம்புகிறோம். அதே சமயத்தில், உணவு நிலையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துவர மாநில அரசு முடிந்த அளவுக்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது என்று மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு உறுதிகூற விழைகிறேன்.

பருவ மழை பொய்த்துப்போனது, நிலக்கரி, சிமிட்டி முதலிய மூலப் பொருள்கள் கிடைக்காமலிருப்பது போன்ற இக்கட்டான நிலைமைகள் அரசுக்கு ஏற்பட்டிருந்தபோதிலும், வளர்ச்சிப் பணிகள், எவ்வித தங்கு தடையுமின்றி விரைவாக நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டில், ரூ. 711 கோடி திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளித்திருக்க, திட்ட சாதனை, திட்ட ஒதுக்கீட்டை விஞ்சக்கூடும். அண்மையில் மத்திய திட்டக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், 1983–84ஆம் ஆண்டுக்கான திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 845 கோடி என இறுதி செய்யப்பட்டுள்ளது. இது நடப்பாண்டு நிதி ஒதுக்கீட்டினைவிட 18.87 சதவீதம் அதிகமாகும். கடந்த சில ஆண்டுகளில் அனுமதித்த திட்ட ஒதுக்கீட்டைக்காட்டிலும் அதிக அளவில் சாதனை செய்துகாட்டிய தனிச் சிறப்பினை இம் மாநிலம் பெற்றுள்ளது. வரும் ஆண்டுகளிலும் இந்த நல்ல நிலைமை தொடர்ந்து இருக்குமெனத் தோன்றுகிறது.

இந்தியப் பிரதம மந்திரியின் "புதிய 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்திற்கு" இவ்வரசு முற்றிலும் ஆதரவளிக்கிறது. திட்டப் பணியில் ஏற்படும் முன்னேற்றத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே உன்னிப்பாகக் கண்காணித்து வருவதுடன், வளர்ச்சி வேகம் சற்றும் குறையாமலிருக்குமாறு முறையாக ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இம் மாநிலத்தின் பொருளாதார நடவடிக்கையின் முக்கிய துறைகள் சிலவற்றை இப்போது நான் குறிப்பிட விழைகிறேன். இம் மாநிலத்தில் பெரும்பான்மையினருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிற வேளாண்மைத் துறையில் இவ்வரசு, தொடர்ந்து சிறப்பு நாட்டம் செலுத்தி வருகிறது. வேளாண்மையில் நல விரிவுத் திட்டத்தின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டுள்ள பயிற்சி-நேர் காணல் திட்டம், உலக வங்கி உதவி பெறும் திட்டமாகும். இத் திட்டம் 1982, ஜூலை முதல் மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. நல விரிவாக்கப் பணிக்கு ஏற்புடைய தொடர் நடவடிக்கையாக, ஒழுங்குமுறை அங்காடிகளில் கிராமக் கிடங்குகள் கட்டுவதன் மூலம் உழவர்களுக்கு விற்பனை வசதிகளை இம் மாநில அரசு செய்து கொடுத்துள்ளது. உழவர்கள் தங்களது விளை பொருள்களைக் கொண்டுவந்து, அவர்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வரையில் அவற்றை உரியவாறு சேமித்து வைக்க இத்திட்டம் பெரிதும் உதவும்.

"இந்தியப் பால் பண்ணைக் கழகத்தின்" நிதியுதவியைப் பெறுகின்றதும் தேசிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்திடமிருந்து தொழில் நுட்ப வகையில் உதவியைப் பெறுகின்றதுமான "பால் பெருக்க IIஆம் திட்டத்திற்கு" இவ்வரசு ரூ. 44 கோடி ஒதுக்கியுள்ளது. இத் திட்டம் செயல்படுகின்ற செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, சேலம், பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை ஆகிய மாவட்டங்கள், 1984–85ஆம் ஆண்டிற்குள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 5,000ஐக் கொண்டிருக்கும். மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும் வறட்சிப்பாங்கான பகுதித் திட்டத்தின்கீழும் உதகமண்டலத்திலும் கிருஷ்ணகிரியிலும் மொத்தம் இரண்டு பால் பண்ணைகள் தொடங்கப்பட்டு வருகின்றன. தரமான விதைகள் வழங்கப்படும் அளவை உயர்த்துவதற்காக, ரூ. 80 இலட்சம் செலவில் விதைப் பண்ணைகள் இரண்டு தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் மேற்கொண்டும் விதை பதப்படுத்தும் பிரிவுகள் மூன்றினை ஏற்படுத்துமாறு அரசு ஆணையிட்டுள்ளது. பண்ணை மேம்பாட்டைப் பொறுத்தவரையில், கீழ் பவானித் திட்ட பாசனப் பகுதிக்கும், காவிரி பாசனப் பகுதிக்கும், பெரியாறு-வைகை பாசனப் பகுதிக்கும் இந்த மேம்பாட்டுப் பணிகள் நீட்டிக்கப்பட்டு வருகின்றன. தோட்டக் கலையும் மேம்படுத்தப்பட்டு வருகிறது: கோயம்புத்தூரிலும் திருச்சிராப்பள்ளியிலும் தோட்டப் பண்ணைகள் தொடங்கப்பட்டு வருகின்றன. இதனால், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் தோட்டப் பண்ணை ஒன்று அமைக்கப்பட்டிருக்கும்.

உழவர்களுக்கு உறுதுணையாக இவ்வரசு முற்போக்கான நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் பலவற்றைச் செயற்படுத்தும் பொறுப்பை ஏற்றுள்ளது. நிலச் சீர்திருத்தச் சட்டத்தைச் செயற்படுத்துவதை விரைவுபடுத்தும் பொருட்டு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 323 (b) பிரிவின்படி மேல் முறையீட்டுத் தனி நடுவர் மன்றம் ஒன்றை அமைப்பதென அரசு முடிவெடுத்துள்ளது. நில நடுவர் மன்றம், நில ஆணையாளர்கள், நில வாரியம் அளித்த தீர்ப்புகள்மீது செய்து கொள்ளும் மேல்முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரம் இந்த மேல் முறையீட்டு நடுவர் மன்றம் பெற்றுள்ளது. இது குறித்து, தேவையான சட்டம் விரைவிலேயே இயற்றப்படும்.

நாளது வரையில் திருத்தியமைக்கப்படுகிற நில விவரப் பதிவு முறைத் திட்டம் உழவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகக் காணப்படுகிறது. இத் திட்டம் அண்மையில் மறு நில அளவை செய்யப்பட்ட பகுதிகள், தீவிர நில உட்பிரிவுத் திட்டத்தின்கீழ் வரும் பகுதிகள் நீங்கலாக, இம் மாநிலம் முழுவதற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதற்காக, இப்போதுள்ள 28 பிரிவுகளை வலுப்படுத்துவதுடன், 80 புதிய பிரிவுகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கு ரூ. 5.17 கோடி செலவாகும்.







காடுகளை அழித்ததாலும், வரைமுறையின்றி மரங்களை வெட்டி வீழ்த்தியதாலும், உயிரினவாழ்க்கைச் சூழலில் ஏற்றத் தாழ்வும் விரும்பத்தகாத விளைவுகளும் ஏற்பட்டுள்ளன. மிகப் பரந்த அளவில் மரங்களை நடும் பணியை மேற்கொள்வதில் அரசு நாட்டம் செலுத்தி வருகிறது. தென் மேற்கு, வடகிழக்குப் பருவ மழை மிகமோசமாக இருப்பினும், 8.2 கோடி செடிகள் ஏற்கெனவே நடப்பட்டுள்ளன. 11 கோடி செடிகள் நடுவது என்னும் திட்ட இலக்கினை எய்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீனள மேம்பாட்டுக்கான பல்வேறு திட்டப் பணிகள் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருட்டு, இவ்வரசு, ரூ. 67 இலட்சம் திட்டச் செலவில், தஞ்சாவூர் மாவட்டத்தில் பழையாறு என்னுமிடத்தில் மீன்களைக் கரைசேர்க்கும் தோணித்துறை அமைப்பதற்கு அனுமதிக்காக அனுப்பியிருந்த திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி கிடைத்துள்ளது. இப் பணி விரைவிலேயே தொடங்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு நன்கு பரந்த அளவில் அமையப்பெற்ற சாலை வசதி ஏற்பாடு மிகவும் இன்றியமையாததாகும். சாலைகள் மேம்பாட்டுக்காக இவ்வரசு கணிசமான தொகையைச் செலவிட்டு வருகிறது. நடப்பு நிதி ஆண்டில், ரூ. 10 கோடி செலவில் 500 கிலோ மீட்டர் கிராமப்புறச் சாலைகள் மேம்படுத்தப்படும். இத்துடன் ஏறத்தாழ 18,927 கிலோ மீட்டர் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டு, தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ. 43 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. இரு மாநிலங்களுக்கிடையிலான சாலை அமைப்பின் பொருளாதார முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, மத்திய அரசு கிழக் கடற்கரைச் சாலையில் சில பகுதிகளை மேம்படுத்த ரூ. 300 இலட்சம் செலவுள்ள திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இதில் 50 சதவீதச் செலவை மத்திய அரசு மாநில அரசுக்குக் கடனாகக் கொடுக்கும். எஞ்சிய பாதிச் செலவை மாநில அரசு தன் சொந்த நிதியிலிருந்து செய்யும்.

இம் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தொழில் துறை வளர்ச்சி மிகவும் முக்கியமாகும். இம் மாநிலத்தில் மைய அரசின் முதலீடு சில ஆண்டுகளாகப் படிப்படியாகக் குறைந்து வருகிறது. இந்துஸ்தான் புகைப்படச் சுருள் நிறுவனத்தைச் சேர்ந்த கலர் பிலிம் தயாரிப்புப் பிரிவு உதகமண்டலத்தில் அமைக்கப்படும் என்று இம் மாநில அரசு நம்பியிருந்தது. ஆனால், இது வேறொரு மாநிலத்தில் அமைக்கப்படக்கூடும் என்பதை நாம் இப்போது அறிகிறோம். இந்திய நாட்டில் தயாராகும் திரைப் படங்களில் பாதிக்குமேல் தென் இந்தியாவில் தயாராகிறது. இப் பிரிவு இங்கு அமையுமானால், ஒருங்கிணைந்த உடனடி விற்பனை வசதியும் துணையான அடிப்படை வசதிகளையும் கொண்டு பல அநுகூலங்களைப் பெற்றிருக்கும் என்பது வல்லுநர் கருத்தாகும். இத்தகைய காரணங்களைக் கொண்டு, இம் மாநிலத்தில் இப் பிரிவையும் வேறு சில பிரிவுகளையும் போதுமான முதலீட்டுடன் அமைக்குமாறு இவ்வரசு மத்திய அரசை வலியுறுத்துகிறது.

இம் மாநிலத்தைத் தொழில் மயமாக்கும் பணியை விரைவுபடுத்துவதற்கான முயற்சிகளைத் தன்னால் இயன்ற வரையில் இவ்வரசு செய்து வருகிறது. மேலும், ஐந்து தொழிற்சாலைத் தொகுதிகளை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலைத் தொகுதிகளில் அமையவிருக்கும் தொழில்கள், பின் தங்கிய பகுதிகளில் அமையும் தொழில் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளைப் பெறத் தகுதியுண்டு. தொழில் தொடங்கியதிலிருந்து முதல் ஐந்து ஆண்டுக் கால அளவில் இத் தொழிற்சாலைகளுக்கு மின் வெட்டு இராது. இத் திட்டத்திற்குத் தொழில் முனைவர்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவு மிகவும் ஊக்கமளிப்பதாயுள்ளது. தொழிற்சாலைத் தொகுதிகள் விரைவிலேயே ஏற்படுத்தப்படுமென்று எதிர்பார்க்கிறோம்.

இம்மாநில அரசின் பரிந்துரைகளின் அடிப்படையில், மத்திய அரசு, 50,000 டன் உற்பத்தித் திறனளவுடன், "லீனியர் ஆல்கைல் பென்ஸீன்" உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை ஏறத்தாழ ரூ. 50 கோடி செலவில் நிறுவ 'டிட்கோ' நிறுவனத்திற்கு அனுமதிக் கடிதம் வழங்கியுள்ளது. எட்டையபுரம், தருமபுரி, புதுக்கோட்டை, தேனி ஆகிய இடங்களில் கூட்டுறவு நூற்பாலைகள் அமைக்கும் பணி திட்டமிட்டப்படி நடைபெற்று வருகிறது. ஆதி திராவிடர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க மேலும் ஒரு நூற்பாலை இராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் அமைக்கப்பட்டுள்ளது. அரசுத் துறை நிறுவனமாகிய தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம், "அலுமினியம் எலக்ட்ரானிட்டிக் கபாசிட்டர்கள்" தயாரிப்பதற்கான அனுமதிக் கடிதத்தைப் பெற்றுள்ளது. இச் செயல்திட்டத்திற்கு ஏறத்தாழ ரூ. 179 இலட்சம் செலவு ஆகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சோதனை அடிப்படையிலான உற்பத்தி தொடங்கி நடைபெறுகிறது. வணிக அளவிலான உற்பத்தி இவ்வாண்டு மார்ச்சு-ஏப்ரலில் தொடங்கக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இம் மாநிலத்தில் சர்க்கரை ஆலைகள் இரண்டினை அமைப்பதற்காகவும் அனுமதிக் கடிதங்களை இவ்வரசு பெற்றுள்ளது.

ஆதி திராவிடர்களின் முன்னேற்றத்திற்கான பல்முனைப் பணிகளின் அங்கமாகச் சிறப்புக் கூறுகள் திட்டமொன்றை அரசு செயற்படுத்தி வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் ஆதி திராவிடர் குடும்பத்தினரில் 50 சத வீதத்தினரை ஏழ்மைக் கோட்டைத் தாண்டச் செய்வது, ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை சாதனங்களுக்கு, வசதிகளுக்கு ஏற்பாடு செய்வது என்ற நோக்கத்தை 1980-81-லிருந்து அரசு பின்பற்றி வருகிறது. அரசின் எல்லா அமைப்புகளின் நிதி ஆதாரங்களும் முயற்சிகளும் இதற்கு உறுதுணையாக இருக்கின்றன. சிறப்புக் கூறுகள் திட்டத்தின் அளவு, நடப்பு நிதி ஆண்டில் ரூ. 104·84 கோடி இருக்குமென்றும், அடுத்த நிதியாண்டில் இது ரூ. 120 கோடியை எட்டுமென்றும்

எதிர்பார்க்கப்படுகிறது. ஆதி திராவிடர்கள் செய்யும் தொழில்களைப் பல்திறப்படுத்த சிறுதொழில்கள், தொகுதித் திட்டங்கள், குடும்ப அளவிலான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் முதலானவற்றுக்குத் தாரான நிதியுதவி அளிக்கப்பட்டு ஊக்கமளிக்கப்படுகிறது. மத்திய அரசின் சிறப்பு நிதியுதவியுடன் இப்பணி மேற்கொள்ளப்படுகிறது. நடப்பாண்டில், இந்த நிதியுதவி ரூ. 10·20 கோடியாகவும் அடுத்த நிதியாண்டில் ரூ. 11·20 கோடியாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆதி திராவிடர் குடியிருப்பின் அடிப்படைத் தேவைகளைக் கண்டறிய ஆய்வு நடத்தப்பட்டது. ஆறாவது திட்டக் கால இறுதிக்குள் இக் குடியிருப்புகளின் குறைந்த அளவுத் தேவைகளை நிறைவு செய்ய இந்த ஆய்வு உதவியாக இருக்கும். ஆதி திராவிடர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ள மனைகளில் வீடுகட்டவும் அவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

இதே போன்று, மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டமும் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளை மேம்படுத்த, பழங்குடி மக்களில் 4,200 குடும்பத்தினர் 1983-84-ல் ஏழ்மைக் கோட்டைத் தாண்டிவர அம் மக்களுக்கு உதவும் நோக்கத்தில், மலைவாழ் மக்கள் துணைத் திட்டம் செயற்படுத்தப்படும். இத் திட்டத்திற்கென, 1983—84-ல் ரூ. 6.50 கோடி செலவிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. மலைவாழ் மக்கள் அனைவருக்கும் இரண்டாண்டுகளுக்குள் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்படும். பின்தங்கிய வகுப்பினர் நலன் கருதி பல திட்டங்களை அரசு தொடர்ந்து செயற்படுத்தி வருகிறது. பின்தங்கிய வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டுக்காக, தமிழ்நாடு பின்தங்கிய வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் என்ற அமைப்பு தற்போது நிறுவப்பட்டுள்ளது. பின்தங்கிய வகுப்பினரின் தற்போதைய பட்டியல், அவர்களுக்கான ஒதுக்கீட்டுச் சதவீதம் ஆகியவற்றை மறு பரிசீலனை செய்ய பின்தங்கிய வகுப்பினர் நல ஆணையம் என்றோர் அமைப்பையும் அரசு நிறுவியுள்ளது.

நிதி வகையில் நலிந்துள்ள இஸ்லாமிய சமய-அற நிறுவனங்கள் ஏறத்தாழ 2,700 இருக்கின்றன. இந்த நிறுவனங்கள் தங்கள் மசூதி முதலிய சொத்துக்களைச் செப்பனிடவும் புதுப்பிக்கவும் இவற்றில் ஏறத்தாழ 650 நிறுவனங்களுக்கு மாநில அரசு பல காலமாக நிதி உதவி அளித்து வருகிறது. எஞ்சியுள்ள நிறுவனங்களுக்கு உதவி செய்யும் பொருட்டு, இரண்டாண்டுக் கால அளவில் ரூ. 1 கோடி அளவுக்கு மானியம் அளிக்கும் முனைப்புத் திட்டமொன்றை மேற்கொள்வதென அரசு முடிவு செய்துள்ளது.

சுற்றுலா வளர்ச்சியில் அரசு எப்போதும் தனி கவனம் செலுத்திவந்துள்ளது. மாமல்லபுரம், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், உதகமண்டலம் போன்ற பெரிய சுற்றுலா மையங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப் பெருந் திட்டங்களை அரசு வகுத்துள்ளது. இத் திட்டங்களுக்கு மொத்தம் சுமார் ரூ. 80 கோடி வேண்டியிருக்கலாம். இத் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசின் உதவி நாடப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதி உதவி கிடைக்கும் வரை, தனது அதிகார வரம்பிற்குட்பட்ட பல்வேறு துறைகளின் வரவு-செலவுத் திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ள பெருந் திட்டங்களில் இடம் பெற்றுள்ள திட்டப் பணிகளில் தன்னாலியன்ற திட்டப் பணிகளையெல்லாம் மேற்கொள்ள அரசு முயன்றுவருகிறது.

புதிய எரிசக்தி ஆதாரங்களையும் உறுதியாகக் கிடைக்குமென நம்பக்கூடிய எரிசக்தி ஆதாரங்களையும் கண்டறிய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்த வேண்டிய தேவையில்லை. தேவைக்கேற்ற மின்சக்தி கிடைக்காத பற்றாக்குறைநிலை நீடித்துக்கொண்டே போகிறது. இந்த நிலைமை சீரடைய எரிசக்தி உற்பத்திக்கான திட்டமிட வேண்டியிருக்கிறது. இதில் அரசு முக்கியமாக நாட்டம் செலுத்த வேண்டியதாகவும் இருக்கிறது. இம்மாநிலத்தில், குறிப்பாக, கிராமப் பகுதிகளின் வளர்ச்சிக்கு கிடைக்கின்ற நிதி ஆதாரங்களைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்றதொரு எரிசக்தி உற்பத்தி—தொழில் நுட்ப அமைப்பை நிறுவுவது மிகவும் அவசியமாகிறது. எரிசக்தி உற்பத்தியைப் பொறுத்தவரை, பல்வேறு தொழில் நுட்ப நிறுவனங்களில் பரிசோதனைகள், ஆராய்ச்சிகள் பல மேற்கொண்டுள்ளபோதிலும், அவற்றின் முடிவுகளை நடைமுறையில் செயற்படுத்துவதில் சிறிதளவே செய்ய முடிந்துள்ளது. மின்சக்தி உற்பத்தித் திட்டமொன்றை மேற்கொள்வது, இம்மாநிலம் முழுவதற்கும் எரிசக்தி வழங்கும் தனிப் பெரும் அமைப்பைத் தொடங்குவதற்கு வழிகோலும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கையின் பேரில், அடுத்த நிதியாண்டில் குறிப்பிட்ட சில பகுதிகளில் இத்திட்டத்தை மேற்கொள்வதென அரசு முடிவு செய்துள்ளது.

நான் எனது உரையை முடிக்குமுன், அண்ணாவின் இருமொழிக் கொள்கையை இவ்வரசு செயற்படுத்தக் கடமைப்பட்டுள்ளது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். காலஞ்சென்ற பிரதமர் பண்டித நேரு அவர்களும் இந்நாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களும், இந்தி பேசாத மக்கள் மீது இந்தி மொழி திணிக்கப்பட மாட்டாது என்று வாக்குறுதிகள் அளித்திருந்தபோதிலும், இரயில்வே பணியாளர்கள் ஆண்டுச் சம்பள உயர்வு பெற இந்தித் தேர்வுகளில் தேறியாக வேண்டும் என்று இரயில்வே நிர்வாகத்தினர் வற்புறுத்துவதும் அகில இந்திய வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் இந்திக்கு அளிக்கும் முக்கியத்துவம் அதிகரித்து வருவதும் சில துறைகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்தியைத் திணிப்பதாக அமைவதுடன் மேற்படி வாக்குறுதிகளுக்கு முரணாகவும் இருக்கின்றன. ஏற்கெனவே கொடுத்துள்ள வாக்குறுதிகளின்படி நடப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை வலியுறுத்த இவ்வரசு விழைகிறது.

எனது உரையில், இவ்வரசு எய்தியுள்ள சாதனைகளையும், எதிர்நோக்கியுள்ள சிக்கல்களையும், வருங் காலத்திற்கென எண்ணியுள்ள திட்டங்களையும் நான் உங்கள்முன் வைத்துள்ளேன். தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு வகுத்துள்ள திட்டங்களையும், பணிகளையும் செயற்படுத்த, நீங்கள் அனைவரும் இணைந்து செயல்படுவீர்கள் என்று நம்புகிறேன்.

வணக்கம்.

## திருநெல்வேலி மாவட்டம் - ஒரு கண்ணோட்டம்

கோட்டங்கள் : 4

1. திருநெல்வேலி, 3. சேரன்மாதேவி,
2. கோவில்பட்டி, 4. தூத்துக்குடி

வட்டங்கள் : 16

1. திருநெல்வேலி, 9. ஸ்ரீவைகுண்டம்,
2. தென்காசி, 10. திருச்செந்தூர்,
3. செங்கோட்டை, 11. சாத்தான்குளம்,
4. சங்கரன்கோயில், 12. நாங்குனேரி,
5. கோவில்பட்டி, 13. அம்பாசமுத்திரம்,
6. விளாத்தி குளம், 14. ராதாபுரம்
7. ஒட்டப்பிடாரம் 15. பாளையங்கோட்டை,
8. தூத்துக்குடி, 16. சிவகிரி,

ஊராட்சி ஒன்றியங்கள்: 31

நகரியங்கள் : 2

நகரப் பஞ்சாயத்துகள் : 58

நகராட்சிகள்: 11

கிராமப் பஞ்சாயத்துகள் : 829

வருவாய்க் கிராமங்கள் : 1039

குக்கிராமங்கள் : 3900

மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு : 4407 சதுர மைல்கள் 10109 சதுர கிலோ மீட்டர்

முக்கியத் தொழில் : வேளாண்மை

முக்கிய ஆறுகள் : தாமிரபரணி, சிற்றாறு

விவசாயப் பரப்பு : 12,21,904 ஏக்கர்கள்

மக்கள் தொகை : (1981) 35,73,751

ஆடவர் : 17,48,321

பெண்டிர் : 18,25,430



கல்வி கற்றோர் சதவிகிதம் : 50.79%
ஆடவர் : 61.91%
பெண்டிர் : 40.14%
தொடக்கப் பள்ளிகள்: 2459
நடுநிலைப் பள்ளிகள்: 675
உயர்நிலைப் பள்ளிகள்: 118
மேல்நிலைப் பள்ளிகள்: 132
கல்லூரிகள்: 27
ஆதிதிராவிடர் எண்ணிக்கை: 5,89,468
ஆண்: 2,88,376
பெண்: 3,01,092

மலை வாழுநர் எண்ணிக்கை: 11,954
ஆண்: 5787
பெண்: 61167
அரசினர் பொது மருத்துவமனைகள்: 18
அரசு கிராமப்புற மருத்துவமனைகள்: 16
நடமாடும் மருத்துவ ஊர்திகள்: 3

1. அம்பாசமுத்திரம்
2. சங்கரன்கோயில்
3. ரெட்டியார்பட்டி

தொழுநோய் மையங்கள்: 4

1. சிறுதாராபுரம்
2. சிவகிரி
3. கோவில்பட்டி
4. அம்பாசமுத்திரம்

ஆயுர்வேதிக் மருத்துவ மனை: 1
(செங்கோட்டை)

மருத்துவக் கல்லூரிகள் : 2

1. அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, பாளையங்கோட்டை.
2. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை (அலோபதி), பாளையங்கோட்டை.

பெருந்தொழில்கள் : (சிமெண்ட், பிளாஸ்டிக் இண்டஸ்ட்டிரிஸ், உரம், கெமிக்கல் காஸ்டிக் சோடா தொழிற் கூடங்கள்)

நடுத்தரத் தொழில்கள்: 19
குடிசை மற்றும் சிறு தொழில்கள்: 1,051
சட்டமன்றத் தொகுதிகள்: 18
நாடாளுமன்றத் தொகுதிகள்: 4

## திரு நிர்மல்சிங்ஹீரா, இ.ஆ.ப.
திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர்



நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவராகப் பொறுப்பேற்றிருப்பவர் திரு நிர்மல்சிங் ஹீரா, இ. ஆ. ப. அவர்கள்.

ஒவ்வொரு வாரமும், திங்கட்கிழமையன்று மாவட்ட ஆட்சித் தலைவரும் முக்கிய அதிகாரிகளும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயே மக்களைச் சந்தித்து அவரவர் குறைகளைக் கேட்டறிகிறார்கள்; தீர்க்க முடிந்த பிரச்சனைகள் அப்போதே தீர்த்து வைக்கப்படுகின்றன; சிக்கலானவை எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் பரிசீலிக்கப்படுகின்றன.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அவ்வப்போது மனு நீதிநாள் நடத்தப்படுகிறது. அப்படி மானூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தென்பத்து கிராமத்தில் நடந்த மனுநீதி நாளில் மாவட்ட ஆட்சித் தலைவரோடு நாமும் சென்றிருந்தோம். இருநூறுக்கு மேல் மனுக்கள் குவிந்தன. அவ்வளவையும் படித்து, உடன் வந்த பல்வேறு துறை அதிகாரிகளோடு கலந்து பேசி, அவற்றில் சிக்கலற்ற முக்கால் பங்கு மனுப்பிரச்சனைகளை அங்கேயே தீர்த்து வைத்தார் அவர்.

பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு கருப்புசாமி பாண்டியன் அவர்கள் நன்றியுரையோடு, மக்கள் குறை நீக்கும் நாள் விழா முடிவுற்றது.

அலுவலகத்தில், பின்னர் நாம் மாவட்ட ஆட்சித் தலைவரைப் பேட்டி கண்டோம்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமாகட்டும், தன்னிறைவுத் திட்டமாகட்டும்-எல்லாவற்றையுமே குறிப்பிட்ட காலத்தில் நல்லபடி முடிந்திருப்பதாகப் பெருமையோடு சொன்னார் நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர். சாத்தான்குளம், விளாத்தி குளம், குருவிகுளம், கயத்தாறு, கோவில்பட்டி, புதூர், ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி, உடன்குடி, ஆகிய ஒன்பது கிராமங்களின் வறட்சி நிவாரணத்திற்காக இவர் கேட்ட ரூ. 3 கோடி நிதி ஒதுக்கீடு அரசின் ஒப்புதலுக்குச் சென்றிருப்பதாக அவர் கூறினார்.

''தீர்க்க முடியாத - அல்லது தீர்க்கத் திணறிய பிரச்சனைகள் ஏதேனும் நெல்லை மாவட்டத்தில் உங்களுக்கு ஏற்பட்டதுண்டா?'' என்ற நம் கேள்விக்குச் சிரிப்போடு இரு கரங்களையும் குவித்து- ''இன்று வரை இல்லை'' என்றார், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு நிர்மல்சிங் ஹீரா அவர்கள்.

மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி திரு நடேசன், உதவி மக்கள் தொடர்பு அதிகாரிகள் திரு தீனதயாளன், திரு லாரன்ஸ் மூவரும் - 'பாரதி நூற்றாண்டு விழாவை எட்டயபுரத்தில் நாங்கள் சிறப்புற நடத்திட மூல காரணமே மாவட்ட ஆட்சித் தலைவரின் உற்சாகமான வழிகாட்டுதலால்தான்' என்று மிகப் பெருமையோடு சொன்னார்கள்.



# ஒரு குடையின் கீழ் ஓங்கிடும் தொழில்கள்!

சமுதாயத்தில் பின் தங்கிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கும் நோக்குடனும், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி பொருள் உற்பத்தியைப் பெருக்கி புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும், கிராம மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் வழி வகுத்து தேசிய அளவில் தனி நபர் வருமானம் உயரவும், அதன் மூலம் மக்கள் வாழ்க்கைத் தரம் சிறக்கவும், ஏற்பாடுகள் செய்யும் முகமாக மாவட்டத் தொழில் மையங்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள், சிறுதொழில்கள் முதலானவற்றைத்தொடங்கி நடத்துவதற்கான எல்லா உதவிகளையும், ஒரே குடையின் கீழ் வழங்கும் அமைப்பாக மாவட்டத் தொழில் மையம் இயங்கி வருகின்றது.

### வழிகாட்டி

நெல்லை மாவட்டத்தில், தொழில் மையம் 1.7.78 முதல் செயல்பட்டு வருகிறது. தொழில்கள் தொடங்கி நடத்துவதற்குத் தேவைப்படும் எல்லா உதவிகளையும் செய்து சிறு தொழில் முனைவோருக்கு நண்பராக, வழிகாட்டியாக, ஆலோசகராக இருந்து முன்னேற்றப் பாதைக்கு வழி வகுத்து வருகிறது. அவை யாவன:

சிறு தொழில் பதிவுச் சான்றிதழ் வழங்கல்.

பல்வேறு துறைகளில் இருந்து பல்வகை உரிமங்களையும் விரைவில் பெற்றுத் தருதல்.

இயந்திரம், நிலம், கட்டடம், நடைமுறை மூலதனம் ஆகியவற்றிற்கு ஆகும் நிதி உதவிக்கு ஏற்பாடுகள் செய்தல்.

தொழில் நுட்ப ஆலோசனை வழங்கல்,

மூலப் பொருட்கள் கிடைக்க வகை செய்தல்,

கிராமக் கைத் தொழில், சிறு வியாபாரம் ஆகியன தொடங்கி நடத்துவதற்கு உதவுதல்,

பொருளாதார அமைப்புக்களைக் கண்டறிந்து புதிய தொழில்களைத் தொடங்க தகுந்த இடங்கள் தேர்வு செய்தல்,

கிராமக் கைவினைஞர்களுக்குச் சிறு ரகத் தொழிற் கூடத்திற்கு ஏற்பாடுகள் செய்தல்,

நடைபெற்று வரும் தொழில்களை விரிவாக்க நிதி உதவிக்கு ஏற்பாடுகள் செய்தல்,

நலிவுற்ற தொழில்களைச் சீர் படுத்தி புத்துயிரூட்டல்,

தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்.

### வேலை வாய்ப்புகள்

இம்மாவட்டத்தில் தொழில் மையம் அமைத்த பின், 1440 நிரந்தரப் பதிவுச் சான்றிதழ்களும், 5218 தற்காலிகச் சான்றிதழ்களும், 1928 கைவினைஞர் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இத்தொழிலகங்கள் மூலம் சுமார் 13,650 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்துள்ளன.

தொழில் முனைவோரைக் கண்டறிந்து, புதிய தொழில்களைத் துவக்க வழி வகுக்கும் வகையில் இம்மாவட்டத்தில் 35 தொழில் ஊக்குவிப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 936 தொழில் முனைவோர் கண்டறியப்பட்டுள்ளனர்.

### பின் தங்கிய வட்டங்களில்

பின் தங்கிய வட்டங்களாகிய தென்காசி, சங்கரன்கோவில், செங்கோட்டை ஆகிய வட்டங்களில் தொழில் வளரும் நோக்குடன் தீவிர தொழில் ஊக்குவிப்பு முகாம் 22.10.82 அன்று குற்றாலம் நகரிய கலைவாணர் கலையரங்கில் தேசிய சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தினரால், மாவட்டத் தொழில் மையத்தின் உதவியுடன் நடத்தப்பட்டது. இந்த ஊக்குவிப்பு முகாமிற்குத் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அருணாசலம் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் 150 தொழில் முனைவோர் கண்டறியப்பட்டதுடன், மாவட்டத் தொழில் மையம் மற்றும் தேசிய சிறு தொழில் நிறுவனங்களின் செயல்முறைகள் பற்றி தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. இக்கூட்டத்தில் 21சிறு தொழில் முனைவோர்களுக்கு ரூ 7,40,899 மதிப்புள்ள இயந்திரங்கள் வழங்குவதற்காக உள்ள உத்தரவுகள் வழங்கியதுடன். ஏழு நிறுவனங்களுக்கு முற்றுப் பொருகள் விற்பனை பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும் 16 தற்காலிகச் சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் புதிய தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

புதிதாகத் தொழில் துவங்குவோருக்குத் தேவைப்படும் உரிமங்களை எளிதில் பெற மாவட்ட ஆலோசனைக் குழுக் கூட்டம் 14 முறை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டுள்ளது. இக் கூட்டத்தின் வாயிலாக சுமார் 167 உரிமங்கள் பெறுதல் சம்பந்தமான பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

### தொழிற் பயிற்சித் திட்டம்

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சுமார் 1131 பேர்களுக்கு உதவித் தொகையுடன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குடிசைத் தொழில், கிராமத் தொழில், சிறுதொழில் துவக்க வழி வகுக்கும் வகையில் பயிற்சி தேவைப்படுவோருக்குத் தகுந்த பயிற்சி அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் மானியத்துடன் கருவிகள் வழங்கும் திட்டமும் உள்ளது. இப்பயிற்சித் திட்டம் தற்சமயம் மாவட்ட ஊரக வளர்ச்சித்திட்ட அலுவலரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.


மா. ரத்தினம்
பொதுமேலாளர்,
மாவட்டத் தொழில் மையம்
திருநெல்வேலி.



தூத்துக்குடி ஆல்காலிக் கெமிக்கல்ஸ் உரத் தொழிற்சாலை தயாரிப்புகளை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பார்வையிடுகிறார்.

### அரசு தொழிற் கடன்

கிராமப் புறங்களில் தொழில் வளரும் நோக்கத்துடன் குறைந்த வட்டியில் (6 ) விதைப் பணமாக சிறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ.10,000 வரை வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோராண்டும் ரூ. 3 இலட்சம் வரை இம்மாவட்டத் தொழில் மையம் வழங்கிவருகிறது. ரூ 11,28,000 கடன் வழங்கியுள்ளது. இவ்வாண்டு ஒதுக்கீடு ரூ 4 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

சிறு தொழில் நிறுவனங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கும், இயந்திரம் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்கும் தேவையான நீண்டகாலக் கடன்களை வங்கியிலிருந்து பெற இம்மாவட்டத் தொழில் மையம் ஆவன செய்து வருகின்றது. இப்பணிக்கென்றே ஒரு தனிப்பட்ட மேலாளர் தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து பெறப்பட்டு இவ்வலுவலகத்தில் பணிபுரிகிறார். இதுநாள் வரை சுமார் 2758 நிறுவனங்களுக்குச் சுமார் 193 இலட்ச ரூபாய் வங்கிக் கடன் பெற இம் மையம் வழி வகை செய்துள்ளது.

### தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

தொழில் ஆரம்பிப்பதற்கான பொருளாதாரம், மூலப் பொருள் விற்பனை வசதி, சாதுரியம், அனைத்தும் ஒரே இடத்தில் சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினரிடம் இருப்பது அரிது. அத்தகைய சூழ்நிலையில் தொழில் ஆரம்பிக்க சிறந்த இயக்கம் தொழிற் கூட்டுறவுச் சங்கமேயாகும். மொத்தம் 126 சங்கங்கள் இயங்கிவருகின்றன. இவற்றால் கிட்டத்தட்ட 30,000 பேர்களுக்கு நிரந்தரமான, இலாபகரமான வேலை வாய்ப்புக் கிடைத்துள்ளது. மேலும் எந்தெந்த இடங்களில், எந்தெந்தத் தொழில்கள் ஆரம்பிப்பதற்குச் சாத்தியக்கூறு இருக்கின்றனஎன்பதைஆராய்ந்து அந்தந்த இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஆதி திராவிட மக்களுக்குக்காக இம்மாவட்டத்தில் ஏர்வாடி மற்றும் கோவில்பட்டி ஆகிய இடங்களில் சிறு 'தீப்பெட்டி தயாரிப்போர் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பதியப்பட்டுத் தொடங்கப்பட்டுள்ளன. பங்கு மூலதனக் கடனாக ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த தொழில் முனைவோருக்கு ரூ 1,00,000 கொடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத் தொழில் மையம் தொழில் முனைவோருக்கும், தொழில் அதிபர்களுக்கும் உற்ற நண்பராகவும் வழிகாட்டியாகவும் வும், ஆலோசகராகவும், விளங்குவதுடன், தொழில் துவக்க விழாவிலும் பங்கு பெற்று ஊக்குவித்து வருகின்றது.

## மாவட்டத் தொழில் மையம் - சில புள்ளி விவரங்கள்

1982 நவம்பர் திங்களில் 20 தொழில்கள் நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்டு, அதற்கான சிறு தொழில் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 120 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

42 சிறு தொழில்களுக்குப் புதிதாகத் தொழில் துவங்கும் பொருட்டு தற்காலிக சிறு தொழில் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

27 சிறு தொழில்கள் மற்றும் கைவினைத் தொழில்களுக்கு ரூ. 2.23 இலட்சம் கடன் தொகை வழங்க தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

30 சிறு தொழில் மற்றும் கைவினைத் தொழில்களுக்குத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் ரூ. 1.07 இலட்சம் கடன் ஒப்பளித்துள்ளன.

1982-83 ஆம் ஆண்டுக்கு ஊரகத் தொழில்களுக்குத் தொழில் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ. 4.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 95,500 கடன் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

1982 நவம்பர் திங்களில் 49 கைவினைத் தொழில் பதிவு செய்யப்பட்டு சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 98 ஆதிதிராவிடப் பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

உடன்குடி ஊராட்சியில் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பனை நார்த்தொழில் மற்றும் வானொலிப் பெட்டி பழுது பார்த்தல் முதலானவற்றில் பயிற்சி பெற நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.





## எட்டயபுரம் மகளிர் பல்தொழில் பயிலகம்



பெண் அடிமை நீங்கவேண்டுமெனக் குரல் கொடுத்த மகாகவி பாரதி நினைவாக எட்டயபுரத்தில் 'பாரதியார் நூற்றாண்டு நினைவு அரசினர் மகளிர் பாலிடெக்னிக்' ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதற்கென ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஒண்ணேகால் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் முதல்வராகத் திரு. கு. வீரன் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிறார். 29-10-82 முதல் வகுப்புகள் தொடங்கப் பெற்ற இந்த மகளிர் பாலிடெக்னிக், எட்டயபுரம் ஜமீந்தார் சத்திரத்தில் தற்சமயம் நடக்கிறது.

எட்டயபுரம் - கோயில் பட்டி சாலையில் சுமார் 40 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு 75 இலட்சம் ரூபாய் செலவில் நிரந்தரக் கட்டடப் பணிகள் துவங்கியுள்ளன.

இப்போது இம் மகளிர் பாலிடெக்னிக்கில் மின்னணுவியலில் 40 பேரும், இயந்திரவியலில் 40 பேருமாக 80 மாணவிகள் படிக்கிறார்கள். அலங்கார ஆடை வடிவமைப்பு - ஆடை தயாரித்தல் பிரிவில் 42 மாணவிகள் படிக்கிறார்கள்.



இந்த 122 மாணவிகளும் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அல்ல; கன்னியாகுமரி, மதுரை, இராமநாதபுரம், தர்மபுரி ஆகிய பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் உள்ளனர்.



தொழிற் கல்விப் படிப்பின் கால அளவு மூன்றாண்டுகளாகும்.

முதல்வர் உட்பட 20 ஆசிரியர்கள் பணியாற்றும் இங்கே படிப்பு முடிந்து வெளியேறும் மாணவிகள் தமிழக அரசின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுடர் வீசும் எதிர்காலத்தைக் காண்பார்கள் என்பது உறுதி!

— பீ.எல்.ஆர்.



# நீர் வளம்

**த**மிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 'நீரின்றி அமையாது உலகு' என்ற சின்னத்தை அங்கிங்கெனாதபடி தமிழகமெங்கும் பார்க்கிறோம் நாம். அச்சின்னத்தின் கீழ் நடைபெறுகின்ற புணிகள் நெல்லைச் சீமையிலே நிறைய இருப்பதை நம்மால் காண முடிகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தம் 3420 கிராமங்கள் இருக்கின்றன என்றால், எல்லாக் கிராமங்களுக்குமே எவ்விதச் சங்கடமும் இன்றிப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட வேண்டுமென்ற கருத்தில் அவை ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில். முதல்-இரண்டாம் வகையினைச் சேர்ந்தவை குடிநீருக்கு வழி சிறிதும் அற்ற கிராமங்களாகும். அத்தகைய 246 கிராமங்களுக்கு 1978-79 ஆம் ஆண்டுகளில் ஏறத்தாழ ரூ. 152 இலட்சம் செலவில் குடிநீர் கிட்டச் செய்யும் பணி சிறப்புற நடைபெற்றுள்ளது. இத்திட்டத்தால் 1.37 இலட்சம் பேர் இம்மாவட்டத்தில் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

1980-81-ல், தன்னிகரற்ற தன்னிறைவுத் திட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்கென நெல்லை மாவட்டத்தில் ஐந்து கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அத்திட்டத்தின் மூலம் 61 லட்சம் ரூபாய் செலவில் 54 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள அத்திட்டங்களால் ஏறக்குறைய 25 ஆயிரம் மக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

1981-82 ஆம் ஆண்டுகளில் இரண்டாம் கட்டமாக நிறைவேற்றுவதற்கென நெல்லை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 ஊராட்சி ஒன்றியங்களில் 109 கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. ரூபாய் 107 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள இத்திட்டங்களாலே பயன்பெற்றிடும் மக்கள் தொகை சற்றேறக்குறைய 49,500 ஆகும்.

### பயன் பெறுவோர்

இவை தவிர—நடப்பு நிதியாண்டில், தன்னிறைவுத் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகளின் கீழ் 14 ஊராட்சி ஒன்றியங்களின் கிராம மக்கள் நலன் கருதி ரூ. 268 இலட்சம் குடிநீருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. 208 கிராமங்களில் நிறைவேற்றப்படவிருக்கும் குடிநீர்த் திட்டத்தால் இவ்வாண்டில் 1,47,000 பேர் பயன்பெற்றிடுவர்.

நெல்லை மாவட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் திட்டப்பணிகள் இவை மட்டுமா என்றால் அதுதான் இல்லை!

மேலும் 809 கிராமங்களில், மக்கள் விண்ணப்பங்களை ஏற்று தங்கு தடையின்றிக் குடிநீர் கிட்டச் செய்யும்புணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது இங்கே. இதனால் 11 இலட்சம் பேர் பயன் பெற உள்ளனர்.

மாவட்ட வளர்ச்சி நிதியிலேயிருந்து, நடப்பு ஆண்டில் பருவமழை தவறியதால் தண்ணீர் தட்டுப்பாடு நேர்ந்துவிடலாகாது

**—இல. இராசேந்திரன்**

தண்ணீர் தண்ணீர்' என்ற தவிப்பேற்படக் கூடாது என்ற நற்கருத்தில் ரூ. 35 இலட்சம் செலவில் 138 கிராமங்களுக்கு ஆழ்குழாய்க் கிணறுகள் போடப்பட்டுள்ளன. சிறப்புத் திட்டமென வகுக்கப்பட்டு நூறு இலட்சம் ரூபாய் செலவில் 490 கிராமங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்திடும் பணி அல்லும் பகலும் நடைபெற்று வருகிறது.

கிராமப்புறக் குடிநீர்த்திட்டப் பணிகள் இப்படி 'கிறுகிறு'வென நடந்து வருகின்றன நெல்லை மாவட்டத்தில்.

### தூத்துக்குடி திட்டங்கள்

தேர்வுநிலை பெற்ற தூத்துக்குடி நகராட்சியின் மக்கள் தொகை 1,92,000 ஆகும்.

துறைமுக நகரான இங்குள்ள மக்கள் நலன் கருதி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.



20 மில்லியன் காலன் குடிநீர்த் திட்டம், 3 மில்லியன் காலன் குடிநீர்த் திட்டம், தூத்துக்குடி குடிநீர் வளர்ச்சித் திட்டம், காயல்பட்டினம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், காயல்பட்டினம் குடிநீர் வளர்ச்சித் திட்டம், ஆறுமுகநேரி பேரூராட்சிக் குடிநீர்த் திட்டம், காயல்பட்டினம் பேரூராட்சிக் குடிநீர்த் திட்டம், புன்னகாயல் குடிநீர்த்திட்டம், தூத்துக்குடி பாதாள சாக்கடைத் திட்டம்—எனப் பல திட்டங்கள் தூத்துக்குடியில் நிறைவேற்றப்பட்டு, மக்கள் பயன் பெற்று மகிழ்ந்து வருகின்றனர்.

### நகர்ப்புறத் திட்டம்

திருநெல்வேலி நகர மக்களுக்குப் பயன்படும் விதத்தில் ரூ. 57.62 இலட்சம் செலவில் பல்வேறு பணிகள் நிறைவேறி வருகின்றன.

பேட்டையில் 8 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உடையதாகவும், பழைய பேட்டையில் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்டதாகவும், நெல்லைச் சந்திப்பில் ( Junction ) 8 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உடையதாகவும், கண்டியப்பேரி மருத்துவ மனையருகே 10 லட்சம் லிட்டர் கொள்ளளவோடும் பிரம்மாண்டமான மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. மிக விரைவில் இவை முடிவுற்றுப் பயனுக்கு வரும்.

இன்னும்-பாளையங்கோட்டை, நாசரேத், கோபாலபுரம் குடிநீர்த் திட்டப் பணிகளும், திருநெல்வேலி வடிகால் திட்டப் பணியும் மளமளவென நடை பெற்று வருகின்றன.

நகரில் இப்போதே சிறிதளவும் தண்ணீர்த் தட்டுப்பாடில்லாத அளவில் பலவகைப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும் மேற்காணும் திட்டங்கள் நிறைவேறி விரைவிலேயே நெஞ்சம் நிறைவுறுவர் நெல்லை நகர மக்கள் என்பது உறுதி!

## மஞ்சள்நீர்க்காயலில்



**த**மிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகளில், நெல்லை மாவட்டத்தில் உள்ள மஞ்சள்நீர்க் காயல் திட்டமொன்று குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

## மாபெரும் குடிநீர்த்திட்டம்

தூத்துக்குடியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் வழியில், 17வது கிலோமீட்டரில் உள்ள இந்தச் சிறு கிராமத்தின் மேற்கே ரு 360 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள இந்தக் குடிநீர்த்திட்டம் மிகப்பெரும் தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் வழங்குவதற்கென்றே 32 ஏக்கர் பரப்பளவில் உருவாகியுள்ளது.

இந்தக் குடிநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து—தூத்துக்குடியிலுள்ள 'ஸ்பிக்' தொழிற்சாலைக்கு 9 மில்லியன் காலனும், அனல் மின் நிலையத்திற்கு 1.33 மில்லியன் காலனும், தாரங்கதாரா கெமிக்கல்ஸுக்கு 1.5 மில்லியன் காலனும், தூத்துக்குடி ஆல்காலிக் கெமிகல்ஸுக்கு 2 காலன் மில்லியன் காலனும், மிகப்பெரும் நீர்த்திட்டமொன்றுக்கு 1.6 மில்லியன் காலனும் ஒவ்வொரு நாளும் தண்ணீர் வழங்கப்பட்டுவருகிறது.

தாமிரபரணியாற்றின் வடக்கு முக்கியக் கால்வாயிலிருந்தும், அங்கே நீர் குறையும் போது ஆறுமுகமங்கலம் குளத்திலிருந்தும் மஞ்சள் நீர்க்காயல் குடிநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீர் கொணரப்படுகிறது. மிகப்பெரும் அளவில் இங்கே அமைக்கப்பட்டுள்ள நீர்த் தொட்டியின் கொள்ளளவு 20 மில்லியன் காலன் ஆகும்.

இத்திட்டம் ஒழுங்குற இயங்க 125 பேர் பணிபுரிகின்றனர்.

இயற்கையன்னை கொலுவிலிருக்கும் மஞ்சள் நீர்க்காயல் கிராமம் இத்திட்டத்தின் மூலம் இன்னும் மேம்படவிருக்கிறது.



இலவச சத்துணவு

**உ**ண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்கிறது புறநானூறு.

அந்த வகையில், இந்த நாட்டு ஏழை எளிய மக்கள் வீட்டுச் சின்னஞ்சிறு அரும்புகளுக்குக் கல்விக் கண் திறப்பதே நோக்கமாக உருவாக்கப்பட்டதுதான் இலவசச் சத்துணவுத் திட்டம்.

அத்திட்டத்தை நன்முறையிலே செயல்படுத்துவதற்காகத் திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தம் 4,865 சத்துணவுத் திட்ட மையங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

கல்வித் துறைமூலம் 3,303 சமூக நலத்துறை மூலம் 1,536, மாவட்டப் பிற்பட்டோர் நலத்துறை மூலம் 10, மாவட்ட ஆதி திராவிடர் நலத்துறை மூலம் 24, மாநகராட்சி மூலம் 262 அமைக்கப்பட்டுள்ள அந்தச் சத்துணவுத் திட்ட மையங்கள் மூலம் மொத்தத்தில், நெல்லை மாவட்டத்தில் 5,69,273 மாணவ மாணவிகள் சத்துணவு பெறுகின்றனர்.

ஒவ்வொரு துறை மூலமும் எவ்வளவு குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கப்படுகிறது, நெல்லை மாவட்டத்தில் என்ற விவரமும் கிடைத்திருக்கிறது. இதோ அது:

கல்வித்துறை உணவு மையங்கள் மூலம் 3,82,999 மாணவ, மாணவிகள், சமூக நலத்துறை மையங்கள் மூலம் 1,41,984 பேர், மாவட்ட பிற்பட்டோர் நலத்துறை மையங்கள் மூலம் 1,141 பேர் மாவட்ட ஆதி திராவிடர் நலத்துறை மையங்கள் மூலம் 2,896 பேர் நகராட்சி மையங்கள் மூலம் 40,253 மாணவ மாணவிகள் திருநெல்வேலி மாவட்டத்திலே தினசரி இலவசச் சத்துணவு பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்திற்குத் தேவைப்படுகின்ற உணவுப் பொருட்களை 16 இடங்களில் வைத்துப் பாதுகாத்து (Storage Points) விநியோகித்து வருகின்றனர்.

## ஐக்கம்மா திருவிழா



பாஞ்சைப் பதியில் வளர்ந்தோங்கும்—வீர
பாண்டியக் கட்டபொம் மேந்திரன் மேல்
வாஞ்சையாய்க் கும்மி தமிழ்பாட—திரு
வாக்கருள் செய்வாளே ஐக்கதேவி...

ஐக்கதேவி கோயில் ஆலயமாம்—நல்ல
சன்னதி வாசல் விலாசங்களாம்!
மிக்க நெடுந்தெரு வீதிகளாம்—ராசா
வீற்றிருக்கும் கொலு மண்டபமாம்!

ஆசார வாசல் அலங்காரம்—துரை
ராசர் கட்டபொம்மு சிங்காரம்
பூவாசம் வீசும் புகழ்வீசும்—எங்கும்
பொன்வாடை வீசும் அரண்மனையில்...

—ஆண்டுதோறும் சித்திரை கடைசி வெள்ளியில் நடக்கும் பாஞ்சாலக்குறிச்சி அருள்மிகு ஜக்கம்மா கோயில் திருவிழாவில் கும்மியடித்துப் பெண்கள் பாடும் பழம்பாடல் இது. தகவல்: அக்கோயிலின் ஒரே அறங்காவலர் வீமராசா என்ற ஜெகவீரபாண்டிய சுப்பிரமணிய கட்டபொம்மு (வீரபாண்டியக் கட்டபொம்முவின் வாரிசு)

## சத்துணவுத் திட்டத்திற்கு

பட்ட மாங்கள்



# நெல்லைக்கு வாரீர்

—புலவர் ச. கண்ணபிரான்

திருஞான சம்பந்தர் எங்கள் சீமை
திக்கெல்லாம் புகழுவதாம் என்று ரைத்தார்!
அருமைமிகு செந்தமிழின் சிறப்புக் காத்த
அகத்தியனார் தமிழ்வளர்த்த தெங்கள் மண்ணில்!
பெருமைமிகு தமிழுக்குப் புகழைச் சேர்த்த
புலவர்பலர் வாழ்ந்தபூமி திருநெல்வேலி!
உருக்குவெள்ளி போல்வீழும் குற்றா லத்தில்
உவக்காத நெஞ்சும்ஒரு நெஞ்சா சொல்வீர்!

முற்றியசெங் கரும்பொக்கும் தமிழால் செய்த
முக்கூடற் பள்ளு! படிப்போரை ஈர்க்கும்
குற்றாலக் குறவஞ்சி! சிறுக தையில்
குன்றனைய புகழ்குவித்த புதுமைப் பித்தன்;
பற்றற்றோர் பற்றுவைக்கும் நெல்லை நாதர்;
பாங்குறவே இந்தியாவில் விடுத லைத்தீ
பற்றவைத்த பாரதியார் போன்ற பல்லோர்
பிறந்தஇடம் வாழ்ந்தஇடம் எங்கள் மண்ணே!

தஞ்சையென்ன, நெல்லையிலே பச்சைப் பட்டைத்
தரையெல்லாம் விரித்ததுபோல் விளங்கச் செய்யும்
விஞ்சுபுகழ் பொருநைநதிக் கீடொன் றுண்டா?
வேல்முருகன் திருச்செந்தூர்க் கடலோ ரத்தில்
கொஞ்சிவிளை யாடுகின்ற அலைகள்; பாவக்
கறைநீக்கும் பாவநாசம்; கிறிஸ்த வர்க்கும்
குஞ்சம்வைத்த குல்லாய்கொள் முஸ்லீம் கட்கும்
கொஞ்சமாஇங்கே தலங்கள்? காண வாரீர்!

# திருக்குற்றாலம்





**தி**ருநெல்வேலியிலிருந்து 56 கி. மீ. தூரத்தில் உள்ளது, திருக்குற்றாலம். இத்தலத்தில் குறும்பலா மரம் மிக்க சிறப்புடையது.

திருக்குற்றாலநாதர் திருக்கோயில், மலை அடிவாரத்தில் சங்கு வடிவத்தில் இருக்கின்றது. இந்தக் கோயிலில், சோழர், பாண்டியர் காலக் கல்வெட்டுகள் நிறைய உள்ளன. கோயிலுக்குப் பக்கத்தில் மலையினின்றும் அழகிய பெரிய அருவி விழுகின்றது. பருவ காலத்தில் (ஜூன்-செப்டம்பர்) இந்தியாவின் பலபகுதிகளிலும் இருந்து எண்ணற்றவர்கள் இங்கு வந்து தங்கி மகிழ்வர். 1300 ஆண்டுகளுக்கு முன்னர் திருஞானசம்பந்தர் "கூதல் மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம்'' என்று பாடியுள்ளார்.

இத்தலம், பஞ்ச சபைகளில் ஒன்றாகிய சித்திர சபையை உடையது. திருக்குற்றாலத்திற்குத் திரிகூடராசப்பக் கவிராயர் என்ற பெரும் புலவர், புராணம், குறவஞ்சி இயற்றியுள்ளார். இது மொத்தம் ஒன்பது அருவிகளை உடையது. இதில் பேரருவிதான் முக்கிய அருவி, இவையன்றி சிற்றருவி, செண்பகஅடவி அருவி, தேனருவி, ஐந்தருவி, புலியருவி, பழைய குற்றாலம் அருவி, புது அருவிகள் பழத்தோட்ட அருவி என பல அருவிகள் பார்ப்போரைப் பரவசப்படுத்தும்.

மலைமீதுள்ள அரிய மூலிகைகளைத் தழுவிக் கொண்டு அருவி வருவதால், இதில் நீராடுவது உடல் நலத்துக்கு உகந்தது என்று கூறுவர். குற்றாலத்துக்குச் சற்று தொலைவில் இலஞ்சி என்ற முருகன் தலமும், சுமார் 8 மைலில் திருமலை என்னும் மலைமீதுள்ள முருகன் தலமும் இருக்கின்றன.

# பணம் தரும் பட்டுத் தொழில்

சீன நாட்டு இளவரசி நந்தவனத்தில் அமர்ந்து தேனீர் அருந்திக் கொண்டிருந்தாள். அது சமயம் தேனீர் கோப்பைக்குள் வெண்மையான ஒரு பொருள் வந்து விழுந்தது. அதனை ஒரு குச்சி கொண்டு அப்புறப்படுத்தவும், அப்பொருளினின்றும் மெல்லிய இழைகள் குச்சியில் ஒட்டிக் கொண்டு நீளமாக வெளி வந்தன. அப்பொருளைப் பணியாட்களை அழைத்து அப்புறப்படுத்தச் சொன்னாள் இளவரசி.

பணியாட்கள் வியப்புடன் ஆராய்ந்து கொண்டிருக்கும் பொழுது அவர்களுள் ஒருத்தி அம்மாதிரி பொருட்களை அதிகமாக நந்தவன மரங்களில் பார்த்திருப்பதாகக் கூறினாள். அவள் கூறியபடி நந்தவன மரங்களில் அம்மாதிரி பொருட்களைக் கண்டனர். இறுதியில் அது ஒரு பூச்சியின் கூடு என்றும், காற்றின் அசைவின்போது மரக்கிளையிலிருந்து தவறி அந்தச் சூடான பானத்தில் விழுந்து விட்டது என்றும், சூடான பானத்தில் விழுந்ததால் மெல்லிழைகள் பிரிந்து குச்சியில் ஒட்டிக்கொண்டன என்றும் அறிந்தனர்.

அற்புதமான கூட்டை உருவாக்கியது பட்டுப்பூச்சி என்றும், அப்பூச்சி கட்டிய கூடு பட்டுக்கூடு என்றும், அதனின்றும் வெளிப்பட்ட மெல்லிழைகள்தான் பட்டு என்றும் பின்னர் அவர்களால் உணர முடிந்தது. சுமார் 3000 ஆண்டுகள் வரை பட்டுத்தொழில் சீனாவில் மிக இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டு வளர்ந்து வந்தது. பின்னர் நாளடைவில் வணிகப்போக்குவரத்தின் காரணமாக இந்தப் பரம இரகசியம் நாடெங்கிலும் பரவி விட்டது.

பட்டின் பிறப்பிடம் சீனாவாக இருந்த போதிலும், இன்று உலக நாடுகள் பலவற்றிலும் பட்டுத் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கி. மு. 140 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவில் பட்டுத் தொழில் நடைபெற்று வருகிறது.

இயற்கைப் பட்டு நான்கு வகைப்படும். அவை மல்பரி, ஈரி, மூகா, டசார் எனப்படும். மல்பரி என்பது முசுக்கொட்டைச் செடியினைக் குறிக்கும் ஆங்கிலச் சொல். முசுக்கொட்டைச் செடி இலைகளை உண்டு, பட்டு நூலினை உற்பத்தி செய்யும் பட்டுப் பூச்சி இனம் தரும் பட்டு மல்பரி பட்டு.

மலைப்பாங்கான இடமும் குளிர்ச்சியான சீதோஷ்ண நிலையுமே முசுக்கொட்டைச் செடி பயிரிடவும், பட்டுப்புழு வளர்க்கவும் உகந்த நிலை என்ற பழை

**கே. இராசப்பா**
**உதவி இயக்குநர்**
**பட்டு வளர்ச்சித் துறை**
**தென்காசி.**

மையை மாற்றி, மிகக் குறைந்த மழையும் வெப்ப நிலையும் கொண்ட தமிழகப் பட்டி தொட்டிகள் முழுவதும் முசுக்கொட்டைச் செடி சாகுபடியும், பட்டுப்புழு வளர்ப்பும் பெருகி வருகிறது என்றால் அது நவீன அறிவியலின் சாதனை என்றே ஒப்புக் கொள்ள வேண்டும்.

பட்டுத் தொழில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட குடிசைத் தொழில் ஆகும்.

ஒரு ஏக்கர் முசுக்கொட்டைச் செடி பயிரிடுவதால் ஆண்டு முழுவதும் 5 ஆட்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது.

முசுக்கொட்டைச் செடி பயிரிட்டுப் பட்டுப்புழு வளர்க்கும் விவசாயிக்கு மாதந்தோறும் வருமானம் கிடைக்கிறது.

மருந்துக் கொல்லிகள் உபயோகிக்க வேண்டிய தொல்லை இல்லை.

திருட்டுப் பயம் இல்லை.

அதிக நீர் தேவையில்லை.

திருநெல்வேலி மாவட்டத்தில் பட்டுத் தொழிலை அறிமுகப்படுத்தும் முகாமாகத் தென்காசி-குற்றாலம் சாலையில் உள்ள நன்னகரம், குடியிருப்பு, செங்கோட்டை ஆகிய இடங்களில் அரசு சார்பில் பட்டுப் பண்ணைகள் துவக்கப்பட்டன.

அந்நாள் முதல் பட்டுத் தொழில் ஆங்காங்கே தனிப்பட்ட விவசாயப் பெருமக்களால் நடத்தப்பட்டு வந்தாலும், 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதியில் அரசு மேற்கொண்ட தீவிரப் பட்டு வளர்ச்சித் திட்டத்தின் பயனாகப் பட்டுத் தொழில் பெரிதும் வளர்ச்சியுற்றது. இதன் முன்னேற்றத்தைக் கண்ட அரசும் 1979-ஆம் ஆண்டில் இதற்கென தனித் துறையை சேலத்தில் துவங்கியது.

தனித்துறையின் தனிக் கவனத்தில் கிராமங்கள் முழுவதும் பட்டுத் தொழில் பரவி கிராம மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறது.





பூக்களல்ல.... புழுக்கள்தாம்!

திருநெல்வேலி மாவட்டத்தில் 1000 ஏக்கரில் முசுக்கொட்டைச் செடி பயிரிடப்பட்டு வருகிறது. ஏறக்குறைய 1200 குடும்பங்கள் பட்டுத் தொழிலில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

மாநிலத் திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு முசுக்கொட்டை செடி விதைக்குச்சிகள் இலவசமாக வழங்குதல், தரமான பட்டு முட்டைகள் வழங்குதல், தொழிலில் ஈடுபடுவோர்க்குப் பயிற்சி அளித்துத் தொழில்நுட்ப விவரங்கள் அறிவித்தல், பட்டுப்புழு வளர்ச்சிச் சாதனங்கள் வாங்க மற்றும் பட்டுப் புழு வளர்க்கக் கொட்டகைகள் அமைக்க மானியம் வழங்குதல் போன்ற பணிகளைச் செய்து, பட்டுத் தொழில் திருநெல்வேலி மாவட்டத்தில் செழித்து வளர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பட்டுத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மானியங்கள்**

வீரிய ரக முசுக்கொட்டை செடி பயிரிட மானியம் ஒரு ஏக்கருக்கு ரூ. 250. பட்டு விவசாயப்பயிற்சிக் காலமானியம் (ஒரு மாதத்திற்கு ரூ. 150 வீதம் 3 மாத காலங்களுக்கு). ரூ. 450. ரூ. 300 பெருமான பயிற்சிக் கருவிகள் 50 சத வீத மானியத்தில் ரூ. 150. பட்டுப்புழு வளர்ப்பு உபகரணங்கள் மானியம் ரூ. 500. பட்டுப்புழு வளர்ப்புக் குடில் அமைக்க மானியம் ரூ. 750.

நடப்பு நிதியாண்டில் புதிதாக 500 ஏக்கரில் முசுக்கொட்டைச் செடி சாகுபடியின் கீழ் கொண்டு வரத் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இதற்கென அரசும் 6.21 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

**அரசினர் பட்டுப் பண்ணைகள்**

செங்கோட்டையில் உள்ள அரசு பட்டுப் பண்ணை 42 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டு வருகிறது. இப்பண்ணையின் புனரமைப்புக்காக அரசு முதற் கட்டமாக ரூ. 7.44 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பண்ணை விவசாயிகளுக்கு முசுக்கொட்டை விதைக்குச்சிகளை வழங்குவதோடு குற்றாலத்தில் உள்ள அரசு பட்டு முட்டை வித்தகத்திற்கு விதைக்கூடுகளை வழங்குகிறது.

புனரமைப்புத் திட்டத்தின் பயனாக 36 இலட்சம் வெளிநாட்டின் விதைக்கூடுகள் மற்றும் 20 லாரி சுமை விதைக்குச்சிகள் உற்பத்தியாகக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அருகில் உள்ள கிராமங்களில் 50-க்கும் மேற்பட்ட குடும்பங்களில் இப்பண்ணையை நம்பி வாழ்க்கையை நடத்துகின்றனர்.



இளைஞர் கையில் இருப்பவை இளம் புழுக்கள்

புதிதாகப் பட்டுத் தொழிலில் ஈடுபடுவோர்க்குச் செயல் விளக்

# முத்துசாமி தீட்சிதர் ஆராதனை மண்டபம்



**கர்நாடக சங்கீத மேதை முத்துசாமி தீட்சிதரின் ஆராதனை மண்டபம், எட்டயபுரத்தில் பாரதியார் பேருந்து நிலையத்திற்குப் பக்கத்தில் அழகுற அமைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகளை இவ்விடம் வெகுவாகக் கவர்ந்துள்ளது.**

கத்திற்காகவும், சிறந்த பயிற்சியினை வழங்குவதற்காகவும் செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் ஒன்றினைத் திருநெல்வேலியில் நிறுவிட அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. அதற்கென ரூ. 9.46 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இம்மையத்திற்கென நிலத் தேர்வு துரிதமாக நடைபெற்று வருகின்றன.

பட்டுத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்குத் தேவையான தொழில் நுட்பங்கள் எடுத்துரைத்தல் மற்றும் பட்டு முட்டைகள் வழங்குதல் ஆகிய பணிகளுக்காகச் சரக விரிவாக்க மையங்கள் அடைக்கலப்பட்டிணம், கடையநல்லூர், கடையமகளக்காடு, எட்டையபுரம், சங்கரன் கோவில், சாத்தான் குளம், ஆகிய இடங்களில், சிறப்பாக; செயல்பட்டு வருகின்றன.

விவசாயிகளுக்கு ஏற்படும் சந்தேகங்களைப் போக்குவதற்கும் புதிய தொழில் நுட்பங்களை எடுத்துரைப்பதற்கும் அதனைக் கடைப் பிடிக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், மண் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கும் உரமிடுதலின் அவசியத்தை எடுத்துரைப்பதற்கும் புழு வளர்ப்பு மனைகளில் புழு வளர்ப்பு முடிந்த பின் விசைத் தெளிப்பான் கொண்டு பார்மலின் என்னும் கிருமிநாசினி தெளிப்பதற்கும் பிரத்யேகமாகத் தொழில் நுட்பச் சேவை நிலையம் சங்கரன்கோவிலில் செயல்பட்டு வருகிறது.

இதன் பயனை உணர்ந்து அரசு நடப்பு ஆண்டில் இம்மாதிரி இரு நிலையங்கள் இம்மாவட்டத்தில் செயல்பட அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையங்கள் திருநெல்வேலி மற்றும் கடையத்தில் துவங்கப்பட்டுள்ளன.

நெல்லை மாவட்டத்திற்குத் தேவையான பட்டு முட்டைகள் ஓசூர், சேலம் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள அரசு பட்டு முட்டை வித்தகங்களில் இருந்து பெறப்பட்டு வந்தது. தொலை தூரங்களில் இருந்து முட்டைகளைக் கொண்டு வருவதன் சிரமத்தைத் தவிர்க்கவும் இதனால் ஏற்படும் பாதிப்பினைத் தவிர்க்கவும், காலத்தே முட்டைகளை வழங்கும் நோக்கோடும், அரசு கலப்பினப் பட்டு முட்டை வித்தகம் ஒன்றினைக் குற்றாலத்தில் ரூ. 4.5 இலட்சம் செலவில் கடந்த ஆண்டில் நிறுவியுள்ளது.

இவ்வித்தகம் இம்மாவட்டம் முழுமைக்குமான பட்டு முட்டை தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது. தரமான முட்டைகளைக் காலத்தே விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. நடப்பு ஆண்டில் 5 இலட்சம் பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டு உள்ளது.

'விளையும் பயிர் முளையிலே' என்றாற் போல் பட்டுத் தொழிலின் வெற்றி சிறு புழு வளர்ப்பில் தனிக் கவனம் செலுத்துவதில் உள்ளது.

மையங்கள் அடைக்கலப்பட்டினம், இடைகால், வடநத்தம் பட்டி, குருவிகுளம்புதூர், சாத்தான் குளம், நாகலாபுரம், சேரகுளம், மூலக்கரைப்பட்டி ஆகிய எட்டு இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளைக் கொள்முதல் செய்வதற்காக அரசு பட்டுக்கூடு அங்காடிகள் தென்காசி (நன்னகரம்) சங்கரன் கோவில், சாத்தான்குளம், ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. கூடுகளின் தரத்திற்கேற்ற நியாயமான விலை நிர்ணயிக்கப்பட்டு அதற்கான தொகை உடனுக்குடன் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டில் 17,000 கிலோ பட்டுக் கூடுகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 85,000 கிலோ பட்டுக் கூடுகள் கொள்முதல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் பட்டுக்கூடுகளிலிருந்து பட்டு நூலினைப் பிரிப்பதற்கு அரசு பட்டு நூற்பகங்கள் தென்காசி, சங்கரன்கோவில் சாத்தான் குளம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு இம்மாவட்டத்தில் 1480 கிலோ பட்டு நூல் உற்பத்தி செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் 5000 கிலோ பட்டு நூல் உற்பத்தி செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நடப்பு ஆண்டில் மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 403 மிகச் சிறு விவசாயிகள் புதிதாகப் பட்டுத் தொழிலில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக ரூ. 10.3 இலட்சம் மானிய ஒதுக்கீடும் பெறப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில், பட்டுப்புழு வளர்ப்பு, பட்டு நூற்பு ஆகியவைகளில் 290 கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி வழங்கப் பட்டு வருகின்றன. இதற்காக ரூ. 3.05 இலட்சம் ஒதுக்கீடும் பெறப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் சேரகுளத்தில் குடியமர்த்தப்பட்ட 30 குடும்பங்கள் பட்டுத் தொழிலில் ஈடுபட ரூ. 36,250 மானியமாக வழங்கப்பட்டது. உறுதியான-நிலையான மாத வருமானம் கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டிலும் இடைகால் அருகே குடியமர்த்தப்பட இருக்கும் 35 குடும்பங்களுக்கு உதவத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய பணிகளினால் கிராமப்புற மக்களுக்குச் சுய வேலைவாய்ப்பிற்கு வழிகோலுவதோடு, பட்டுத் தொழிலில் ஈடுபடும் விவசாயிக்கு மாத வருமானமும் கிடைக்கிறது. மேலும் பட்டு நெசவுக்குத் தேவையான கச்சாப் பட்டினை உற்பத்தி செய்வதன் மூலம் பட்டு நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பினையும் அளிக்கிறது.



## நெல்லை மாவட்டத்தில் ...

# நூலக இயக்கம்

**இ**ந்தியாவிலேயே முதன் முதல் பொது நூலகச் சட்டத்தை 1948ல் இயற்றி, 1950-ல் அமுலாக்கிய பெருமை தமிழ் நாட்டையே சாரும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நூலகப் பணியின் முதல் கட்டமாக மாவட்ட மைய நூலகம் 5.2.1952ல் பாளையங்கோட்டையில்தான் துவக்கப்பட்டது. 22.3.1954 அன்று நான்குனேரியில் முதல் கிளை நூலகம் செயல்படத் தொடங்கியது. கடந்த முப்பது ஆண்டுக் காலத்தில் 128 கிளை நூலகங்கள் திறக்கப்பட்டு நன்கு பணியாற்றிவருகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பெரும்பான்மையான ஊர்களில் நூலகங்கள் செயல்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பள்ளி ஆசிரியர்கள் உதவியுடன் 18 பகுதி நேர நூலகங்கள் இம்மாவட்டத்தில் செயல்படுகின்றன. மாவட்ட மைய நூலகத்தில் சுற்றுப்புறங்களில் இயங்கு ஊர்தி ( Jeep van ) மூலம் இயங்கும் நூலகம் பணியாற்றி வருகிறது.

''வீதிகள் தோறும் நூலகம் வேண்டும்'' என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். ஒவ்வொரு வீடும் ஒரு பல்கலைக் கழகமாக வேண்டும் என்ற கருத்தில் வீட்டிற்கு ஒரு நூலகம் வேண்டும் என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

இவ்வாறான அறிஞர் பெருமக்களின் பொன் மொழிகளைச் செயல்படுத்த, நூலகம் இல்லாத ஊரே இருக்கக் கூடாது என்ற நோக்கோடு நம் அரசு கிராமங்கள் தோறும் நூலகங்கள் திறந்து வருகிறது. நெல்லை மாவட்டத்தில் 1982-83ஆம் ஆண்டு 127வது கிளை நூலகம் சிவந்திபுரத்திலும் 128வது கிளை நூலகம் பழவூரிலும் திறக்கப்பட்டுள்ளன. பாளையங்கோட்டையில் சிறுவர் சிறுமியர்க்கெனத் தனி நூலகமும், பெருமாள்புரத்தில் பெண்களுக்கென ஒரு தனிக் கிளை நூலகமும் நடைபெறுகின்றன.

**திருநெல்வேலி மாவட்டத்தில் நூலகப் பணி வளர்ச்சி பற்றிய முழு விவரம் பின்வருமாறு**

நூல்கள் இருப்பு 6,27,762. உறுப்பினர்கள் 70,442. ஒரு ஆண்டிற்கு வாசகர்கள் 25,07,492. ஒரு ஆண்டிற்கு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட நூல்கள் 5,50,726. ஒரு ஆண்டிற்கு ஆலோசனைக்கு வழங்கப்பட்ட நூல்கள் 3,50,372. நூல்கள் பயன்பாடு (ஒரு ஆண்டிற்கு) 9,01,098. நன்கொடை மூலம் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்ட ஏழை மாணவர்கள் 420. நிலைய உறுப்பினர் திட்டம் மூலம் காவல்துறையின் 6 பிரிவுகள் நூல்கள் மூலம் பயனடைகின்றன.

ஒவ்வொரு நூலகத்திற்கும் நூலக வளர்ச்சிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. நூலக வளர்ச்சிக்குழு நூலக வளர்ச்சிக்கு பொது மக்கள் ஒத்துழைப்புடன் பல பணிகளைச் செய்து வருகிறது.

ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ.21,02,000 நூலகத் துறைக்கென நெல்லை மாவட்டத்தில் செலவாகிறது.

நூலகப்பணி, மக்கள் பணி. மக்கள் அதன் பயனை முழுமையாகத் துய்க்க வேண்டும். எனவே, நூலகப் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்ய, மாதந்தோறும் புத்தகக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. மேலும் மாதந்தோறும் இலக்கிய அறிவியல் சொற்பொழிவுகள், பாளையங்கோட்டை மைய நூலகம், திருநெல்வேலி நகர், திருச்செந்தூர், தென்காசி, சங்கரன்கோவில் கிளை நூலகங்களில் நடைபெறுகின்றன.

கடையத்தில், பாரதியார் பாடியதுபோல் காணி நிலத்தில் பாரதியார் நினைவு நூலகக் கட்டடம் கட்ட அரசு ரூ. 50,000 அனுமதித்துள்ளது. இதற்கான கட்டடப் பணி விரைவில் தொடங்கவிருக்கிறது. இதுதவிர, எட்டையபுரத்தில் உமறுப்புலவர் நினைவு நூலகக் கட்டடம் கட்ட என அரசு ரூ.3.5 லட்சம் அனுமதித்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் நூலக வளர்ச்சி மாநாடு நடத்தத் திட்டமிடப்பட்டு, நூலக வளர்ச்சிக் குழுக்களும் ஆக்கப்பணிகளைத் தொடங்கியுள்ளன. நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் பெற-அல்லது கட்டடம் கட்ட மனை பெற நூலகத்திற்குத் தேவையான நூல்கள், தளவாடச் சாமான்களை நன்கொடையாகப் பெற எனப் பல்வேறு முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

**தொ. சி. குப்புசாமி**
**மாவட்ட நூலக அலுவலர்,**
**திருநெல்வேலி.**





# கூட்டுறவு தரும் கோடி நன்மை


சிவ கிருஷ்ணன்
தனி அலுவலர்,
திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு ஒன்றியம்


பாபநாசம் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் 'காணிகள்' என்றழைக்கப்படுகின்றனர். எத்தனையோ ஆண்டுகளாகக் கொத்தடிமைகளாக வாழ்ந்து, தனிப்பட்ட 'காண்ட்ராக்டர்' களிடம் சிக்கித்தவித்த இந்த மலை வாழ் மக்களின் இருண்ட வாழ்வில் ஒளி பிறந்தது! ஆம் அன்றுதான் கூட்டுறவுச் சங்கம் மலைவாழ் மக்களுக்காக நெல்லையில் துவக்கப்பட்டது. கொத்தடிமைகளாக வேலை பார்த்து, ஊதியம் காலா காலத்தில் பெறப்படாத அவர்கள் வாழ்வில், இயற்கை அன்னை தந்துள்ள வனப் பொருட்கள் சேகரித்திடும் குத்தகை. அரசின் வனத் துறை மூலம் இந்தக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அளிக்கப்பட்டு முண்டந்துறை வனவிலங்குச் சரணாலயம் பகுதி முழுவதும் வனப் பொருட்கள் சங்க மலை வாழ் மக்களால் சேகரிக்கப்படுகிறது. சமூக நலத்துறை கீழ்க்கண்ட சலுகைகளை இந்தச் சங்கத்திற்கு 8.7.81 அன்று வழங்கியுள்ளது.

(1) வட்டியில்லாத பங்குத் தொகைக் கடன் ரூ.20,000 (2) குத்தகை எடுத்துத் தொழில் நடத்த வட்டியில்லாத மூலதனக் கடன் ரூ. 35,000 (3) மானியம் ரூ. 10,000

மேலும் ரூ 2 இலட்சம் நடைமுறை மூலதனக்கடன் தர அரசு ஆலோசித்து வருகிறது. 1981 செப்டம்பர் திங்கள் முதல் வனப் பொருட்கள் சேகரிக்கும் பணி இந்தச் சங்கத்தில் துவங்கியது.

500 மலை வாழ் மக்கள் வசித்துவரும் பாபநாசம் மேல் அணைக்கட்டுப்பகுதி, காணிக் குடியிருப்பு, இஞ்சிக்குழி, சேர்வலார், கீழ் அணை ஆகிய பகுதிகளில் 200 மலை வாழ் மக்கள் உறுப்பினர் ஆகியுள்ளனர். அவர்கள் விலைமதிப்பற்ற பொருட்களைச் சேகரித்துத் தருகின்றனர். அவை:

கடுக்காய் ஏலக்காய் கொடம்புளி நான்கு முத்து பளிங்குக்காய் குந்திரிக்கம்.



அவர்களது உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலை பெற்றுத்தர கூட்டுறவுத்துறை தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. கொத்தடிமைகளாக வாழ்ந்த மலைவாழ் மக்கள் இன்று உல்லாசப்பறவைகளாக வாழ்கின்றனர். போதிய வருவாய் பெறுகின்றனர். பொருளாதார ரீதியாக மறுமலர்ச்சி கண்டு ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி வெற்றி நடைபோட்டுக்கொண்டிருக்கின்றனர்.

### மணப்பாடு பெண்கள் பனை ஓலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம்

1980-81 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் மிகச்சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற சங்கங்களில் ஒன்று எனத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் பாராட்டுக் கேடயம் பெற்றது, திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் அருகில் உள்ள மணப்பாடு பெண்கள் பனை ஓலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.

பனை ஓலை இங்கு எல்லாவற்றெல்லாம் கண்கவர் பொருளாக மாற்றப்பட்டு, மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்பதை ஒவ்வொருவரும் நேரில் பார்த்துப் பெருமைப்பட வேண்டும். ஏற்றுமதியினால் இப்பகுதியில் உள்ள மக்களுக்குப் பெருமளவு வேலை வாய்ப்பு பெருகியுள்ளது.

சாதாரண ஒரு சங்கமாகச் செயல்பட்டு வந்த இது, இன்று வளர்ந்து அந்தப் பகுதி வாழ் மக்களுக்கு வளமான வாழ்வுக்குத் துணை நிற்கிறது.

### செங்கோட்டை விசுவநாதபுரம் பிரம்பு, மூங்கில் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

நெல்லை மாவட்டத்தில் கிராமத் தொழில் துறையின் கீழ் செயல்பட்டு வரும் சங்கம் செங்கோட்டை விசுவநாதபுரம் பிரம்பு மூங்கில் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கமாகும். பொதிகைத் தென்றல் தினம் வீசி பல புதுமைகள் செய்கின்ற பொதிகை மலை அடிவாரத்தில், திருக்குற்றாலத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இந்தச் சங்கம்.

இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் 100 பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தரப்பட்டுள்ளது. கொத்தடிமைகளாக வாழ்ந்து தனிப்பட்டவரிடம் பிரம்பு,மூங்கில் தொழில் செய்தவர்கள், இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம், தொழில் பெற்று வளமோடு வாழ்கிறார்கள்.

சிறிய அளவில் செயல்பட்ட இந்தச் சங்கம் 1977-78 ஆம் ஆண்டில் ரூ 3 இலட்சத்துக்கு விற்பனை செய்தது. இன்று பெருமளவு உற்பத்தி விற்பனை இந்தச் சங்கத்தின் மூலம் நடைபெற்று ரூ. 23000 நிகர இலாபம் பெற்றுள்ளது.

## ஓட்டப்பிடாரத்தில் வ.உ.சி. நினைவு நிலையம்

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த வீட்டில், மாவட்ட நூலக ஆணைக் குழுவின் நூலகம் உள்ளது. இதில் 4056 நூல்கள் இடம் பெற்றுள்ளன. இவையன்றி பல்வேறு இதழ்களும் இங்கு உள்ளன.

வ. உ. சிதம்பரனாரின் வரலாறு, தமிழ்த்தொண்டு ஆகியவை நன்கு தொகுக்கப் பெற்றுக் காட்சிக்கு வைக்கப் பெற்றுள்ளன.



இந்தச் சங்கத்தினுடைய பணிக்கூடத்திற்குத் தமிழக அரசு 3.3.1982 அன்று, 60,000 ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது. இதில் ரூ. 30,000 மானியமாகும்.

அரசின் உதவிகளால் கடந்த 3 ஆண்டுகளாக இந்தச் சங்கத்தின் மூலம் இங்கு பணி புரியும் தொழிலாளர்களில் பலர் மாதம் ஒன்றுக்கு 900 ரூபாய் வரை ஊதியம் பெறுகின்றனர்.

கண்கவர் பிரம்பு நாற்காலிகள் 60 வடிவமைப்பிலும் நாற்பு ஆலைகளுக்குத் தேவையான கூடைகள் 15 வடிவமைப்பிலும், மற்றும் பிரம்பு சோபாக்களும் இவர்களால் தயாரிக்கப்படுகின்றன.

### ஆறுமுகனேரி உப்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

இராமேசுவரம் - கன்னியாகுமரி கடற்கரைச் சாலையில் தூத்துக்குடியிலிருந்து 24 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது தான் இந்தக் கூட்டுறவுச் சங்கம்.

இந்தப்பகுதியில் உப்புத் தொழிலை நம்பி வாழும் குடும்பங்கள் நூற்றுக்கணக்கில் உள்ளன. அவர்கள் போதிய வருவாய் பெற இந்தக் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்தச் சங்கத்தின் மூலம் உற்பத்தி ஆகும் ''வேபர்சால்ட்'' தமிழகத்தில் மட்டுமல்லாது கேரளா, ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம் ஒரிஸ்ஸா, கோவா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் அதிக அளவு விற்பனை செய்யப்படுகின்றது. 347 தொழிலாளர்கள் இந்தச் சங்கத்தின் மூலம் பயன் பெறுகின்றனர். இத் தொழிலாளர்களுக்குக் குடியிருக்க வீடுகள் கட்டித்தர தமிழக அரசு உதவியிருப்பது சிறப்புத் தன்மையாகும்.

1976ஆம் ஆண்டு இந்தச் சங்கம் மூலம் 396 தொழிலாளர்களுக்குத் தரப்பட்ட கூலி ரூ. 2.09 இலட்சம். சங்கம் 1977க்குப் பின் வளர்ந்து 1980ஆம் ஆண்டில் 347 தொழிலாளர்களுக்கு ரூ.5.27 இலட்சம் கூலியாகத் தந்துள்ளது.

### தேன் பொத்தை மண் பாண்ட உற்பத்தியினர் தொழில் கூட்டுறவுச் சங்கம்.

திருக்குற்றாலத்துக்கு அருகில் 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இந்தக் கூட்டுறவுச் சங்கம். கண்கவர் பொம்மைகள், ஜாடிகள், மண் பாண்டங்கள் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. தனிப்பட்டவர்களுக்குக் குறைந்த விலைக்கு உற்பத்தியை விற்று அடிமைகளாக வாழ்ந்த மண் பாண்டத் தொழிலாளர்கள், இந்தக் கூட்டுறவுச் சங்கம் மூலம் பொருளாதார மறுமலர்ச்சி கண்டுள்ளனர்.

### பாரதி சிறு தொழில் தீப்பெட்டிக் கூட்டுறவுச் சங்கம்

எட்டயபுரம் - கோவில்பட்டிப் பகுதியில் 1978-ஆம் ஆண்டுக்குப் பின் தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏராளமாகத் துவங்கப்பட்டுள்ளன. அந்த வகையில் சிறப்புத் தன்மை பெற்று விளங்குவது எட்டயபுரம் பாரதி, சிறு தொழில் தீப்பெட்டிக் கூட்டுறவுச் சங்கமாகும். ஜமீன் ஒழிப்பினால் பாதிக்கப்பட்டு தனிப்பட்ட தீப்பெட்டி முதலாளிகளிடம்

சிக்கித் தவித்து, மாதம் 100 ரூபாய் வருவாய் பெற்று தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்கள் இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ந்து மாத வருவாய் 500 ரூபாயிலிருந்து ரூ. 600 வரை பெறுகிறார்கள்.

வட இந்தியா முழுவதும் இந்தத் தீப்பெட்டி அதிகமாக விற்பனையாகிறது. நெல்லை மாவட்டத்தின் வடபகுதியில் அதிகமாக நடைபெறும் தொழில்களில் தீப்பெட்டித். தொழிலும் ஒன்று. இதன் மூலம் ஆயிரக் கணக்கான பேர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

2595 கூட்டுறவுச் சங்கங்கள் நெல்லை மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன. 9.66 இலட்சம் மக்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

கூட்டுறவுகள் மூலம் வழங்கப்பட்ட கடன் ரூ. 17.46 கோடி.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் விவசாயிகளின் விளை பொருட்கள் ரூ. 2.69 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணைய நெல்லைக் கிளை ரூ. 2.65 கோடி மதிப்புள்ள 10912 டன் உரம் விநியோகம் செய்துள்ளன.

கூட்டுறவுப் பண்டக சாலைகள் மூலமாக ரூ. 20.83 கோடிக்கு நுகர் பொருட்களை உபயோகித்துள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 3520 டன் சிமெண்ட் விநியோகிக்கப்பட்டுள்ளது.

மாணவர் கூட்டுறவுப் பண்டக சாலைகள் ரூ. 86 இலட்சம் மதிப்புள்ள மலிவு விலை நோட்டுப் புத்தகங்கள், பாட நூல்கள் வழங்கியுள்ளன.

விவசாயிகள் விளைபொருட்களைச் சேமித்திட 285 கிட்டங்கிகள், கூட்டுறவுச் சங்கங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2 கூட்டுறவு நூற்பாலைகள் ரூ.17 கோடி மதிப்புள்ள 5,625 டன் நூல் உற்பத்தி செய்துள்ளன.

621 பால் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 6.13 கோடி மதிப்புள்ள பால் விநியோகம் செய்துள்ளன.

505 கதர் கிராமத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 83 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்துள்ளன.

128 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.3.15 கோடி மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்துள்ளன.

49 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.6 இலட்சம் கடன், உபகரணங்கள் வழங்கியுள்ளன.

103 வீட்டுவசதிச் சங்கங்கள் ரூ. 2 கோடி கடன் வழங்கி கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 9,357.



மரத்திலிருந்து குங்குலியம் எடுத்தல்

102 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 1.78 கோடி மதிப்புள்ள ரூ.35.87 இலட்சம் மீட்டர் கைத்தறித் துணியை உற்பத்தி செய்துள்ளன.

## பழமையான நகராட்சி

திருநெல்வேலி நகராட்சி மிகவும் பழமை வாய்ந்தது. இது 1.1.1886 முதல் செயல்பட்டு வருகிறது. இது தேர்வு நிலை நகராட்சியாக ஆக்கப்பட்டுள்ளது.



நகராட்சியின் சார்பில் 1 நடுத்தரப் பள்ளி, 2 உயர்நிலைப்பள்ளி, 3 மேல்நிலைப்பள்ளிகள் உள. இதன் மூலம் 4700 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். 18 துவக்கப்பள்ளிகள் மூலம் 5300 மாணவர்கள் பயனடைகிறார்கள்.

மருத்துவ நிலையங்கள்—அலோபதி 5. சித்தா 2. குடும்ப நல மையம் 1, மகப்பேறு மையங்கள் 7. மகப்பேறு நிலையங்கள் 4 இவையன்றி, 85.377 கி.மீ தூரத்துக்குச் சாலைகள் போடப்பட்டுள்ளன. தெருவிளக்குகளின் எண்ணிக்கை 1750.

நகராட்சி சார்பில் படிப்பகங்கள், ஓய்வு இல்லம், திருமண மண்டபம், அங்காடிகள், பேருந்து நிலையம், பங்குகள், கட்டணக் கழிப்பிடங்கள், பொதுக் குடிநீர்க் குழாய்கள் உள்ளன. இவையன்றி வீடுகளுக்கும் குடிநீர்க் குழாய்கள் போடப்பட்டுள்ளன. இதன் மூலம் ஆண்டுக்கு ரூ. 5.5 இலட்சம் வருமானம் கிடைக்கிறது.

# கடமை தவறாத காவல் துறை



காவல்துறை கண்காணிப்பாளர், கூடுதல் கண்காணிப்பாளர், உதவி கண்காணிப்பாளர், துணைக் கண்காணிப்பாளர், வட்ட ஆய்வாளர், உதவி ஆய்வாளர், ஆயுதப் படை ஆய்வாளர், ஆயுதப்படை உதவி ஆய்வாளர், ஆயுதப்படை இளம் உதவி ஆய்வாளர், தலைமைக் காவலர்கள், முதனிலைக் காவலர்கள், பெண் உதவி ஆய்வாளர்கள், பெண் தலைமைக் காவலர்கள், பெண் முதனிலைக் காவலர்கள் என நெல்லை மாவட்டக் காவல்துறையில் மொத்தம் 3362 பேர் பணியாற்றுகின்றனர்.

இவர்கள், கடமையே கண்ணாகப் பணியாற்றிடவென 85 காவல் நிலையங்கள் இங்குள்ளன.



புறக்காவல் நிலையங்களோ 25 உள்ளன.

வீட்டுநலம் கருதாமல் நாட்டு நலம் காப்போரானாலும் காவல் துறையினர் குடியிருக்க வீடு வேண்டாமா? அவர்கள் குடும்ப நலனில் பெரும் அக்கறை கொண்ட தமிழக அரசு, நெல்லை மாவட்டக் காவல் துறையினருக்கெனக் கட்டித் தந்துள்ள வீடுகளின் எண்ணிக்கை 1702 ஆகும். இவை தவிர மேலும் 235 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. 310 வீடுகள் கட்டப்பட உள்ளன.

தமிழக அரசு, காவல்துறையினருக்கென அண்மைக் காலத்தில் வழங்கிய பொதுச் சலுகைகளான உயிர்ப்பாதுகாப்புப் படி, மலிவு விலையில் உணவுப்பொருள் போன்ற யாவும் இம் மாவட்டக் காவல் துறையினருக்கும் பயனளித்து வருகின்றன.

இந்த மாவட்டத்தில் பெண் போலீசாருக்கெனத் தனிக்காவல் நிலையம் ஏதுமில்லை எனினும், 'ஜங்ஷன்' காவல் நிலையத்தை யொட்டி புதியதோர் தனிக் கட்டடம் கட்டித்தரப்பட்டுள்ளது.

சிறந்து முறையில் பணிபுரிந்தமைக்கெனவும், வீரதீரச் செயல் புரிந்தமைக்கெனவும் வழங்கப்படும் 'முதலமைச்சர் விருது' நெல்லை மாவட்டக் காவல் துறையைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் திரு. தங்கராஜ், திரு. முத்தையா இருவருக்கும் கிடைத்திருப்பதைப் பெருமையோடு தெரிவித்தார்கள் டி.ஐ.ஜி. திரு ராஜ்மோகன், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. ஆர்.வி.கோபாலன் ஆகியோர்.

'முதலமைச்சர் விருது' பெற்ற இருவரில் "ஒருவரான திரு. (மூக்கத் தேவர்) முத்தையா — 1980ல் திருநெல்வேலி மாவட்டம் குரிஞ்சக்குளத்தில், விவசாயிகள் போராட்டம் என்ற பெயரில் அராஜகங்கள் கடைவிரிக்கப்பட்டபோது, உயிரைத் துச்சமென மதித்துக் கடமையாற்றி அங்கே அமைதி நிலவச் செய்தவர். முப்பத்திரண்டு காலக் காவல்துறைப் பணியில் அப்பழுக்கற்ற கடமை வீரராகத் திகழ்ந்திருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

[illegible] திருநெல்வேலி [illegible] துறையினர் [illegible] வீரர்களாக [illegible]

**கா**ல்நடைகள் நாட்டிற்கு நிறைந்த பயனளிக்கக்கூடியவை இவை வேளாண் மக்களின் முதுகெலும்பாகத் திகழ்கின்றன. நாட்டின் பொருளாதாரம் இவற்றால் முன்னேற்றம் அடைகிறது. இவற்றால் கிடைக்கும் இறைச்சி, பால், முட்டையால் மக்களுக்குத் தேவையான புரதச்சத்து கிடைக்கின்றது. மேலும் இவற்றினின்று கிடைக்கும் துணைப் பொருட்களின் ஏற்றுமதியால் அந்நியச் செலாவணி ஏற்றம் பெறுகிறது. இவ்வாறு நல்ல பயன்கள் அளிக்கும் கால்நடைகளின் ஏற்றத்திற்காகக் கால்நடைப்பராமரிப்புத் துறை ஆற்றிவரும் பணிகள் ஏராளம்.








நெல்லை மாவட்டத்தில் இத்துறை ஆற்றிவரும் பணிகள் பல தரப்பட்டவைகளாகும். வேளாண் மக்கள் - குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழைகளின் தரம் உயரப்பல திட்டங்கள் தீட்டப்பட்டு அவை சிறப்பாக நடந்து வருகின்றன இங்கே.

## மேற்குத் தொடர்ச்சி மலை கன்றுகள் வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் மூலம் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளான தென்காசி, செங்கோட்டை, அம்பாசமுத்திரம், நாங்குநேரி, சிவகிரி, சங்கரன்கோவில் வட்டங்களில் கலப்பினக்கிடேரிக் கன்றுகள் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட எருமைக் கிடேரிக் கன்றுகளுக்குத் தீவனம் மானிய விலையில் ஏழை வேளாண்குடி மக்களுக்கு அளிக்கப்படுகிறது. தீவன விலையில் மானியமாக விவசாயக் கூலிகளுக்கு 50 சதவீதம் 66 1/3 சதவீதம் சிறுவிவசாயிகள் மற்றும் குறு விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் தரும் தீவனம் நவீன முறையில் தயாரிக்கப்பட்ட கலப்புத் தீவனமாகும். கன்றுக்குத் தேவையான [illegible] சத்துக்களும் இத்தீவனத்தில் கலந்துள்ளன. இதனால் இதை உண்ணும் கன்றுகள் உடல் வளர்ச்சி பெற்று விரைவில் சினைக்கு வரும் பருவம் பெறுகின்றன.

இவை பசுக்களாகும்போது பால் அதிக அளவில் கொடுக்க வாய்ப்புண்டு. கன்றுகள் 4-வது மாத முதல் 28 மாதம் முடிய தீவனம் பெறுகின்றன.

இத்திட்டத்தால் நெல்லை மாவட்டத்தில் 450 கன்றுகள் பயன்பெறுகின்றன. இதற்கான நிதி ஒதுக்கீடு தொகை ரூபாய் 4,66,833 ஆகும்.

## கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டம்

இத்திட்டத்தினால் இம்மாவட்டத்திலுள்ள நாட்டு மாடுகளின் தரம் உயர்த்தப்படுகிறது. கலப்பினக் கன்றுகள் பெருக்கப்படுகின்றன. இதனால் இம்மாவட்டத்தின் பால் உற்பத்தியில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மாடுகளுக்குப் பசைத் தீவனம் அளிக்க, தீவனப்புல் வளர்ப்புப் பணிகள் செய்யப்படுகின்றன; இதனால் மாடுகள் விரைவில் சினைப்பிடிக்கவும்பால் உற்பத்தி பெருகவும் வழிகோலப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் கால்நடைகளுக்கு வரும் கொடிய தொற்று நோய்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டு நோய்வராது தடுக்கப்படுகிறது. தேவையற்ற நாட்டுக் காளைகளால் ஏற்படும் தீமைகளை நீக்க அவைகள் காயடிக்கப்படுகின்றன.

---

**டாக்டர்**
**பி. என். பாலகோபால்,**
**கால்நடை பராமரிப்பு இணை இயக்குநர்,**
**திருநெல்வேலி.**

---

கரும்பும் கொடுத்து அதைத் தின்னக்கூலியும் கொடுப்பது போல் நல்ல கலப்பினக் கன்றுகள் பெறுவதற்குமேலை இனக்காளைகளின் விந்தினைச் செயற்கை முறையில் பசுக்களுக்குக் கருத்தரிப்புச் செய்வதோடு அவற்றினின்று பெறும் கிடேரிக்கன்றுகளைச் சரியாக வளர்ப்பதற்குக் ''கன்று மானியமும்'' அளிக்கப்படுகிறது. கன்றுகளின் 6மாத வயதிலிருந்து சுமார் 30 மாதங்களுக்கு ரூ. 15 மாதத்திற்கு மானியமாக வழங்கப்படுகிறது. முதலில் ரூபாய் பத்து மட்டும் வழங்கப்பட்டு, பின் அக்கன்று பசுவாகி ஈன்றபின் மீதமுள்ள ரூபாய் 5 மொத்தமாகத் தரப்படுகிறது. கன்றுகள் வளர்ப்பில் விவசாயிகளுக்கு நல்ல ஊக்கம் அளிக்க இது உதவி புரிகின்றது.

## திரவ நைட்ரஜன் தயாரிப்பு-உறை விந்து தயாரிக்கும் நிலையம்

இம்மாவட்டத்தில் இதுவரை திரவ விந்து மூலமாகவே மாடுகளுக்குச் செயற்கை முறைக் கருத்தரிப்புப் பணி நடைபெற்று வருகிறது. உறைவிந்து மூலம் கருத்தரிப்புச் செய்திட முனைப்பான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

உறைவிந்து பயன்படுத்துவதால் பல நன்மைகள் உள்ளன. திரவ விந்து பயன்படுத்துவதால் ஏற்படும் பல தடைகள் இதனால் உடைக்கப்பட்டு உயர்வுக்கு இது வழிவகுக்கிறது.

காளையின் விந்து திடப்பொருளாய் உறையச் செய்யப்பட்டு நீண்ட காலத்திற்குப் பயன்படுத்தவும் நீண்ட தொலைவுகளுக்கு எளிதில் எடுத்துச் செல்லவும் இதனால் எளிதாகிறது. இது இருபது ஆண்டுகள் வரை கெடாது பாதுகாப்பாக வைக்க வசதியுடையது என நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த உறை நிலை விந்தினைப் பாதுகாத்து வைப்பதற்குத் திரவ நைட்ரஜன் மிகவும் தேவை. இத்திரவ நைட்ரஜன் தயாரிக்க இந்நிலையம் நெல்லைக்கு அருகிலுள்ள அபிசேகப்பட்டியில் நிறுவப்பட்டு வருகிறது. ரூ.19.22 இலட்சம் செலவில் இத்திட்டம் விரைவில் செயலாக்கப்படவிருக்கிறது.







## உறைவிந்து பயிற்சி நிலையத் திட்டம்

இத்திட்டத்தால் செயற்கை முறைக் கருத்தரிப்புப் பணியிலுள்ள கால்நடை ஆய்வாளர்களுக்கு, உறை விந்தினைப் பயன்படுத்தி எவ்வாறு கருத்தரிப்புப் பணி மேற்கொள்வது என்பது பற்றி சிறப்பான பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆண்டுக்கு 240 கால்நடை ஆய்வாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1981 டிசம்பரில் இப்பயிற்சி துவங்கப்பட்டு இதுவரை 376 கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளார்கள். இத்திட்டம் அபிசேகப்பட்டி மாவட்டக் கால்நடைப் பண்ணையில் செயல்பட்டு வருகிறது.

கால்நடைகளுக்கு உண்டாகும் நோய்களைத் தவிர்த்திட நோய்ப் புலனாய்வுத் திட்டம் என்றஒன்று சரியான முறையில் செயலாக்கப்பட்டு விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ள திட்டமாய் விளங்கி வருகிறது.

## சிறப்புக் கால்நடைத் திட்டம்

இது மத்திய அரசோடு இணைந்த மாநிலத்திட்டமான சிறப்புக் கால் நடைத்திட்டம். திருநெல்வேலி மாவட்டத்தில் 1976 லிருந்து செயல்பட்டு வருகிறது. இது ஆடு வளர்ப்புக்கு ஊக்கம் அளிக்கிறது. இதனால் சிறிய மற்றும் குறு விவசாயிகளோடு விவசாயக்கூலிகளும் பெரிதும் பயன்படுகின்றனர். இவ்வாறான சுமார் 5000 குடும்பங்கள் இத்திட்டத்தால் நன்மை பெறுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் ஆடு வளர்க்கும் விவசாயிகளுக்கு 20 செம்மறி ஆடுகளும், ஒரு செம்மறி ஆட்டுக்கிடாவும் வாங்கிட ரூ. 3500 வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகிறது. இக்கடன் தொகையில் மானியமாகச் சிறிய விவசாயிகளுக்கு 25 சதவீதம் குறு விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகளுக்கு 33 1/3 சதவீதம் என அளிக்கப்படுகிறது.

ஆடுவளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு அதன் அங்கத்தினர்களுக்குத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகிறது. இதனால் ஆடுவளர்ப்போர் பெரிதும் பயனடைந்து வருகின்றனர். ஆடுகளின் உற்பத்தி நெல்லை மாவட்டத்தில் பெருகி வருகிறது. மேலும், ஆடுகளின் நல்வாழ்வுக்கு நோய்த்தடுப்பு மற்றும் குடல் புழு நீக்கப்பணி இத்திட்டத்தின் கீழ் பணிபுரிபவர்களால் அவ்வப்போது செய்யப்படுகின்றன.

## கேந்திர கிராமத் திட்டம்

கேந்திர கிராமத் திட்டத்தில் 10 கேந்திர கிராமக் கிளை நிலையங்கள் நிறுவப்பட்டு ஒவ்வொன்றுக்கும் 10கிளைநிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கலப்பின இனவிருத்தி மூலமோ அல்லது தரம் உயர்த்தப்படுவது மூலமோ நம் மாவட்டத்திலுள்ள நாட்டு மாடுகளின் தரத்தினை உயர்த்தி பால் பெருக்கம் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். செயற்கை முறைக் கருத்தரிப்புப்பணி கிராமங்களில் செய்யப்படுகிறது. இத்திட்டத்திலும் கருத்தரிப்பில் பிறந்த சிறந்த கன்றுகளுக்கு மானியம் அளிக்கப்படுகிறது.

## நடமாடும் கால்நடை மருத்துவக் குழு

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இம் மாவட்டத்தில் எண்ணிறைந்த பசு, எருமை, ஆடுகள், கோழிகள், வாத்துக்கள் பல்வேறு கிராமங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றிற்கான நல்வாழ்வுப்பணி கால்நடைப பராமரிப்புத் துறையினரால் செய்யப்பட்டுவருகிறது. ஆனாலும் கிராமங்களுக்கு முறையான காலத்தில் சென்று தேவையான உதவிகள் புரிய நடமாடும் மருத்துவக்குழு ஒன்று 9.9.82ல் திருநெல்வேலி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் உதவியோடு இம்மாவட்டத்தில் நிறுவப்பட்டது.

இக்குழுவிற்கு நடமாடும் ஊர்தி ஒன்று தரப்பட்டுள்ளது. இதன் மூலம் இக்குழுவினர் கிராமங்களுக்குச் சென்று பராமரிப்புப் பணிகளை ஆற்றி வருகின்றனர்.

## ஆட்டு இறைச்சி அதிகரிப்புத் திட்டம்

பல்வேறு திட்டங்களின் மூலம் செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை இம்மாவட்டத்தில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இறைச்சிக்காகவே பொதுவாக இங்கு ஆடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. ஆடுகளின் உடல் எடை அதிகரிக்க அவற்றின் குடல்புழுக்கள் நீக்கப்படவேண்டும். சென்ற ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் இம்மாவட்டத்திலுள்ள செம்மறி ஆடுகளுக்கு இருமுறை குடல் புழு நீக்கம் செய்யப்பட்டது. குடல் புழுநீக்கம் செய்யும் முன்பும் பின்பும் அதன் எடை நிறுக்கப்பட்டு கணக்கிடப்பட்டது. சாதாரணமாக ஏற்படும் எடை அதிகரிப்பைக் காட்டிலும் இக்குடற் புழு நீக்கப்பணியின் பின்பு அதிக எடை அதிகரிப்பு ஏற்பட்டது.

இவ்வாறான பல்வேறு திட்டங்கள் சிறப்பான முறையில் திருநெல்வேலி மாவட்டத்தில் கால்நடைபராமரிப்புப்புத் துறையினரால் செயலாக்கப்படுகின்றன.

## மாவட்ட கால்நடைப் பண்ணை

இத்தோடு இம்மாவட்டத்தில் அபிசேகப்பட்டியில் ஒரு மாவட்

டக் கால் நடை பண்ணை அமைந்திருப்பது இம்மாவட்டத்திற்கே ஒரு தலையாய சிறப்பாகும்.

சிறந்த கால்நடைகளை வளர்த்து விவசாயிகளுக்கு ஒரு மாதிரிப் பண்ணை போன்றும் தகுந்த சமயத்தில் அவர்களுக்கு அவற்றினை வழங்கவும் இப் பண்ணை பெரிதும் உதவுகிறது.

இப்பண்ணை 1946.14 ஏக்கர் நிலத்தில் செயல்பட்டுவருகிறது. கலப்பினப்பசுக்கள் தரமான எருமைகள் உயரின ஆடுகள் யார்க்சயர் சீமைப் பன்றிகள் உயரினக்கோழிகள் இங்கு வளர்க்கப் பட்டு வருகின்றன.

**பசுமடம்— ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.**

பசுக்களை பொது நிலையங்களில் சிறந்த முறையில் பராமரிக்க ஊக்கம் கொடுக்கும் பொருட்டு பசு மடத்திட்டம் தமிழக அரசால் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இம் மாவட்ட குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கலைக் கல்லூரியில் ஒரு பசுமடம் நிறுவப்பட்டுள்ளது. இதுவரை 15 பசுக்கள் அரசால் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. கல்லூரி நிர்வாகம் 15 மாடுகள் வாங்கியுள்ளது. பசுவுக்குப் பராமரிக்கப்படும் செலவு ஆண்டுக்கு ரூ.800-ம் கன்றுகள் பராமரிப்புக்கு ரூ 600ம் அளிக்கப்படுகிறது. இப்பசுமடம் ஒரு மாதிரிப் பண்ணையாய்த் திகழ்கிறது. கன்றுகள், சுற்றியுள்ள விவசாயிகளுக்கு விற்கப்பட்டுள்ளன. இப்பசு மடத்திலுள்ள மாடுகளுக்குஎல்லா விதக் கால்நடை உதவிகளும் துறையைச் சார்ந்த அலுவலர்களால் அவ்வப்போது அளிக்கப் பட்டு வருகின்றன.

இங்கு நோயுள்ள கால்நடைகளுக்கான சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோய்த் தடுப்புப்பணி, செயற்கைமுறைக் கருத்தரிப்புப் பணி, காயடித்தல் போன்ற பல பணிகளும் செய்யப்படுகின்றன.

மேலும் இம்மாவட்டத்தில் வெக்கைநோய் என்ற கொடுமையான தொற்றுநோய் மாடு ஆடுகளைத் தாக்கா வண்ணம் தடுப்பு நடவடிக்கை எடுத்திட இரண்டு வெக்கை நோய்த் தடுப்புப் பணி திட்டப்பிரிவுகள் இயங்கி வருகின்றன.

இம்மாவட்டத்தில் கால்நடை பெரு மருத்துவமனைகள் - 6ம், தலைமை மருத்துவரின் கீழ் உள்ள பெரு மருத்துவமனைகள் -2ம், கால்நடை மருத்துவமனைகள் -49ம், கால்நடை மருத்துவக் கிளை நிலையங்கள் -150ம், கோழிப்பண்ணைகள் -3ம், சிறப்புறச் செயலாற்றி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.




திருநெல்வேலி மாவட்டத்தில் 6 கதிர் இராட்டைகள் கொண்ட 49 கிராமிய நூற்பு நிலையங்களும் 12 கதிர் இராட்டைகள் கொண்ட 4 கிராமிய நூற்பு நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கிராமிய நூற்பு நிலையத்திலும் 30 மகளிர் நூற்போர்கள் பயன் அடைகின்றனர். மொத்தம் 1,590 நூற்போர்கள் பயன் அடைகின்றனர். இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 4 முதல் ரூ. 6 வரை கூலி வழங்கப்படுகிறது.

நூல் உற்பத்தி

| ஆண்டு | நூற்போர் | உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1979-80 | 775 | 23.37 |
| 1780-81 | 888 | 28.00 |
| 1781-82 | 915 | 35.71 |
| 1982-83 (நவம்பர் முடிய) | 1590 | 22.30 |

மேற்படி நூற்பு நிலையங்களுக்குத் தேவையான பஞ்சுப் பட்டை தயாரிக்க வள்ளியூரில் கார்டிங் யூனிட் ஒன்று ஐந்து கார்டுகளுடன் நிறுவப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 11 கதர் துணைக் கிளைகள் இயங்கி வருகின்றன. அவைகளில் 25 நெசவாளர்கள் கதர் நெசவு செய்து வருகிறார்கள். ஒவ்வொரு நெசவாளர்களுக்கும் வாரத்திற்கு ரூ. 100 வீதம் கூலி வழங்கப்படுகிறது.

கதர் உற்பத்தி

| ஆண்டு | உற்பத்தி மீட்டர் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1979-80 | 2.58 | 15.60 |
| 1980-81 | 3.60 | 25.20 |
| 1981-82 | 5.52 | 44.06 |
| 1882-83 (நவம்பர் முடிய) | 3.24 | 27.90 |

இம்மாவட்டத்தில் 11 காதி கிராப்ட் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. 1981-82ம் ஆண்டில் ரூ. 43 இலட்சம் மதிப்புள்ள கதர் ரகங்கள் விற்பனை ஆகியுள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில் 1981ஆம் ஆண்டு அதிகப்படியாகக் கதர் விற்பனை செய்த பின்வரும் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டுள்ளன. திருச்செந்தூர், சங்கரன்கோவில், செங்கோட்டை, தென்காசி.

கடந்த ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திற்கு 41 இலட்சம் இலக்கு என நிர்ணயம் செய்யப் பட்டது. ஆனால், 43 இலட்சம் மதிப்புள்ள கதர் ரகங்கள் விற்பனை செய்யப்பட்டு இக்குறியீட்டையும் விஞ்சியது. இந்த ஆண்டு 45 இலட்சம் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி குறியீடும் அடையப்பட்டது.

தூத்துக்குடியில் 'ஸ்பெஷல் காம்பொனெண்ட்' திட்டத்தின் கீழ் நேபால் தறி நெசவுக்கூடம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. அதனால் 39 பெண் நெசவாளர்கள் பயன் பெறுவார்கள். ஒவ்வொரு நெசவாளர்களும் தினம் ஒன்றுக்கு ரூ. 6 முதல் ரூ. 8வரை. கூலி பெற வாய்ப்பு உள்ளது இது போன்று ஆதி திராவிடப் பெண்களுக்கு, புளியங்குடியில் 12 கதிர் இராட்டை அலகு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.




தமிழகத்தின் தென் பகுதியில் உள்ள நெல்லை மாவட்டத்தில் பாளையங்கோட்டையில் இயங்கி வரும் அரசு சித்த மருத்துவக் கல்லூரி, இந்தியாவிலேயே, ஏன் உலகத்திலேயே சித்த மருத்துவத்தைப் போதிக்கும் ஒரே கல்லூரி என்னும் சிறப்புடன் இயங்கி வருகிறது. அரசினர் இந்திய முறை மருத்துவக்கல்லூரி என முன்பு அழைக்கப்பட்டு வந்த இக் கல்லூரி, சித்த மருத்துவ மேம்பாட்டுக் குழுவின் வேண்டுகோளின் படி, தற்பொழுது 'அரசு சித்த மருத்துவக் கல்லூரி' என்ற பெயருடன் சிறந்து விளங்குகிறது.

1980 ஆம் ஆண்டு முதல் எழுபத்து ஐந்து மாணவர்கள் தேர்வு செய்து பி.ஐ.எம் பயிற்சிக்குச் சேர்க்கப்படுகிறார்கள். முதலில் பி.ஐ.எம். பயிற்சிக் காலம் நான்கு ஆண்டு படிப்பும், ஒரு ஆண்டுக் காலம் பயிற்சி மருத்துவர் பணியும் அடங்கியதாகும். இக் கல்லூரி தற்பொழுது மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ளது. 1977-78ஆம் ஆண்டு முதல் பி.ஐ.எம் பட்டப் படிப்பை பி.எஸ்.எம்.எஸ் என்று மாற்றி படிப்புக் காலத்தை ஐந்து ஆண்டுப்படிப்பும், ஆறு மாத காலம் பயிற்சி மருத்துவர் பணியும் என்று பாடத்திட்டத்தை மாற்றி அமைக்கப்பட்டது. இது நாள் வரை, 401 பி.ஐ.எம் பி.எஸ்.எம்.எஸ். பட்டதாரிகள் வெளி வந்து மாநிலத்திலுள்ள பல்வேறு மாவட்ட, வட்ட மருத்துவமனை, சித்த மருத்துவப்பிரிவுகளிலும், ஆரம்பச் சுகாதார நிலையத்திலும் பணி புரிந்து வருகின்றனர். பி.எஸ்.எம்.எஸ். பயிற்சிக்கான கல்வித் தகுதி மாற்றப்பட்டதனால் முன்னர், அதற்கான நுழைவுத் தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் பி. எஸ். எம். எஸ். பயிற்சியில் சேரத் தகுதியுடையவர்களாகக் கொண்டுவர அவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டி, தமிழகஅரசு இக்கல்லூரியில் 1981 82-ஆம் ஆண்டில் புகுமுக சித்தா (Pre - Sidha) என்ற பயிற்சியை 14.12.81 அன்று தொடங்கியது. இருபத்து ஐந்து மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கான பயிற்சி நடந்து வருகின்றது. இவர்களுக்கு மாதம் ரூ.75வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. பி.எஸ்.எம்,எஸ். பட்டப் படிப்பு மாணவர்களுக்கு மாதம் ரூ.75 உதவித் தொகையும், பயிற்சி மருத்துவர்களுக்கு ரூ 175 உதவித் தொகையும் அளித்து வருகின்றது. 20.1.75 முதல் இக் கல்லூரி 10 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

**முதுநிலைப் பட்டப்படிப்புத் துறை**

1972 ஆம் ஆண்டு முதல் இக் கல்லூரியில் மேற்பட்டபடிப்பு எம்.டி. (சித்தா) பயிற்சி மத்திய அரசின் நிதி உதவியுடன் தொடங்கியுள்ளது எம்.டி. (சித்தா) பட்டப் படிப்பில் மருத்துவப் பிரிவு, குணப்பாடப் பிரிவு என்று இரு பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவிற்கும் முறையே பத்து மாணவர்கள் வீதம் தேர்வு செய்து பயிற்சி அளித்து வருகின்றது. மேற்பட்ட படிப்பின் பயிற்சிக் காலம் மூன்று ஆண்டுகளாகும். அவர்கள் மூன்று ஆண்டுகளும் பல்கலைக்கழகத் தேர்வுகள் எழுதுவதோடு இறுதியாண்டில் நோய்கள், மருந்துகள் பற்றிய விவரங்களைத் தீவிரமாக ஆராய்ச்சி செய்து, இறுதியாண்டில் ஆய்வுக் கட்டுரை (dissertations) வழங்குவார்கள். எம்.டி.(சித்தா) பட்டப்படிப்பு மாணவர்களுக்கு ஆங்கில மருத்துவத் தத்துவங்களையும், தெரிந்து கொள்வதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் ஏதுவாக ஆங்கில மருத்துவ முறையில் பட்டம் பெற்ற மருத்துவர்கள், நியமிக்கப்பட்டுள்ளனர். மேற்பட்டப்படிப்பு மாணவர்கள் அவர்கள் கல்வி போதனைகளை மனத்திற் கொண்டு ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றார்கள். மேற்பட்ட படிப்புப் பயிற்சி தொடங்கிய நாள் முதல் இது நாள் வரை நாற்பத்துஒன்று மேல் படிப்புப் பட்டதாரிகள் வெளி வந்துள்ளார்கள். அவர்களில் இருபத்து நான்கு பட்டதாரிகள் நோய்கள் பற்றிய ஆராய்ச்சியிலும், பதினேழு பட்டதாரிகள் மருந்துகள் பற்றிய ஆராய்ச்சியிலும் தேர்ச்சி பெற்று வெளி வந்துள்ளார்கள்.

**டாக்டர் வி. சுப்பிரமணியம்,**
**முதல்வர்**
**அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி**
**பாளையங்கோட்டை**

இன்று குமரி முதல் டெல்லி வரை இங்கு பயின்று வெளிச்சென்றவர்கள் தங்களுடைய சீரிய கல்வியின் திறத்தால் சித்த மருத்துவத்தை வளர்த்து வளப்படுத்தி வருகின்றார்கள். மேற்பட்ட படிப்பு மாணவர்கள் ஒவ்வொரு மாதமும் ரூ.375 வீதம் உதவித் தொகைபெற்று கல்வி பயின்று வருகின்றார்கள். 1981-82-ஆம் ஆண்டு முதல் பணியினின்று ஐந்து ஆண்டு பூர்த்தியாகி படிக்க வரும் பி.ஐ.எம். மருத்துவர்களுக்கு சில தனிச் சலுகைகளைத் தமிழக அரசு அளித்து மாதம் ரூ.650 உதவித் தொகையும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அவர்கள் படிக்கும் காலத்தைப் படிப்பு விடுப்பு என்று அளித்து ஆங்கில முறைக் கல்விக்கு ஏற்ப தமிழக அரசு விரிவாக்கியுள்ளது.

**மேல் பட்டப் படிப்புத் துறையின் ஆராய்ச்சிச் சாதனைகள்**

உயிர் வேதியியல் ( Bio Chemistry Department ) துறையில் சீரிய ஆராய்ச்சிகள் நடைபெற்றன. சுமார் முப்பது ஆராய்ச்சிக் குறிப்புகள் இந்திய முறை மருத்துவ இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ளன.

**மருந்தியல் துறை (Pharmacology)**

இத்துறை இக் கல்லூரியை அகில இந்திய அளவில் உயர்த்

தியது என்று கூறினால் மிகை யாகாது. அயராத உழைப்பின் பயனாக இத்துறை இதுவரை சுமார் அறுபது ஆராய்ச்சிக் கட்டு ரைகளைஇந்திய மருத்துவத்துறை இயக்குநருக்கு வழங்கியுள்ளது. ஒரு கட்டுரை பிரான்சு நாட்டில் 1980ல் நடந்த அகில உலக மருத் துவ ஆராய்ச்சி மாநாட்டில் படிக் கப்பட்டது. பல கட்டுரைகள் தலை சிறந்த ஆராய்ச்சி ஏடுகளி லும் வெளியாகி உள்ளன. தேசிய விருதுகள் 1978ஆம் ஆண்டு அகில இந்திய அளவில் இந்திய முறை மருத்துவத்துறை ஆராய்ச்சிக்காக ஸ்ரீஹரி ஓம் ஆசிரம தங்கப்பதக் கம் நிறுவப்பட்டது. அந்த ஆண்டு இந்திய மருத்துவத்தில் அனு பானத்தில் விஞ்ஞான அடிப் படை' என்ற ஆராய்ச்சியின் படைப்பிற்காகஜே.ஜோசப்தாஸ் அவர்களுக்கு இந்தியாவின் முதல் தங்கப்பதக்கம் கிடைத்தது. இப் பதக்கத்தைப் பெற்ற முதல் தமி ழன் மட்டுமல்ல; முதல் இந்தி யரும் இவரே!

அடுத்த ஆண்டு (1979) இந்திய மருத்துவத்தில் ''பத்தியம், அபத் தியம் ஆகியவற்றின் விஞ்ஞான அடிப்படை'' என்ற மற்றொரு ஆராய்ச்சிக் கட்டுரைக்கு அந்த ஆண்டில் தங்கப்பதக்கம் ஸ்ரீ ஹரி ஓம் ஆசிரமத்தினரால் வழங்கப்பட்டது.

1980-ஆம் ஆண்டு ''மருந்து களின் செயலெதிர் செயல்தான் ( Drug inter action ) அனு பானம், பத்தியம் ஆகியவற்றின் விஞ்ஞான அடிப்படை'' என்ற கட்டுரை அந்த ஆண்டின் தங்கப் பதக்கத்தை அன்னாருக்குத் தந் தது. அதே 1980ஆம் ஆண்டு போட்டிக்கு மதுரை காமராசர் உயிர் வேதியியல் துறை ஆராய்ச் சியாளர்களுடன் கூட்டு முயற்சி யில் ''அமுக்கரா கிழங்கு'' பற்றி ஆராய்ச்சி முடிவுகள் கட்டுரை வடிவில் வழங்கப்பட்டன. அக் கட்டுரையும் அந்த ஆண்டு மற்று மொரு தங்கப்பதக்கத்தையும் பெற்றது.

### இரண்டு ஆண்டு மருந்தாளுநர் பயிற்சி

இக் கல்லூரியில் முதலில் ஓராண்டு மருந்தாளுநர் பயிற்சி தொடங்கி அதை இரு ஆண்டு பயிற்சியாக 1974-75 முதல் விரி வாக்கப்பட்டுள்ளது. முதலில் எட்டு மாணவர்கள் சேர்க்கப் பட்டு, பின்பு இருபத்து ஐந்து மாணவர்கள் என விரிவாக்கப் பட்டு மாணவர்கள் பயின்று வரு கின்றார்கள். இது நாள் வரை அறுபத்து நான்கு மாணவர்கள் தேர்ச்சி பெற்று வெளி வந்து இம் மாநிலத்திலுள்ள பல்வேறு மருத்துவ நிலையங்களில் பணி யாற்றி வருகின்றார்கள்.

8.20 இலட்ச ரூபாய் செலவில் 108 படுக்கைகள் கொண்ட மருத் துவமனைக்கட்டடம்முதல் கட்ட மாகத் தமிழக அரசால் அனுமதி அளித்து கட்டப்பட்டு 21-1-75 முதல் செயல்பட்டு வருவதுடன் 5.95 இலட்ச ரூபாய் செலவில் 100 படுக்கைகள் கொண்ட மற்று மொரு கட்டடமும், எழுப்பி, செப்டம்பர் 77 முதல் செயல் பட்டு வருகின்றது. தற்சமயம் இருநூற்று எட்டு படுக்கைகள் மருத்துவமனையில் உள்ளன. 3.32 இலட்ச ரூபாய் செலவில் இருபத்து நான்கு படுக்கைக்ள் கொண்ட குழந்தைகள் பகுதி கட்ட அரசு ஆணை பிறப்பித்துள் ளது. கட்டடப் பணிகள் ஆரம் பிக்கப்பட்டு நடந்து வருகின்றன. தினமும் சுமார் அறுநூற்று ஐம் பது நோயாளிகள் வெளி நோயா ளர் பகுதியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். புதிய வெளி நோயாளிகள் பகுதி கட்டப்பட்டு ஏப்ரல் 1978 முதல் செயல்பட்டு வருகின்றது.

மருத்துவமனையில் பின்வரும் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் உள்ளன. 1. ஆண்கள் மருத்துவப் பகுதி, 2. பெண்கள் மருத்துவப் பகுதி, 3. ஆண்கள் அறுவை மருத் துவப் பகுதி, 4. பெண்கள் அறுவை மருத்துவப் பகுதி, 5. மகப்பேறு, மகளிர் நோய்ப் பிரிவு, 6. தொக்கணம், 7. குழந் தைகள் பிரிவு, 8. வர்மம், 9. பட்ட மேற்படிப்பு மருத்துவப் பிரிவு.

மருத்துவமனையில் உள் நோயாளிகள் சராசரியாக இரு நூறுக்கு மேல் தங்கிச் சிகிச்சை பெறுகின்றனர். மூட்டுவாதம் பக்கவாதம், வர்மம், காமாலை, குன்மம், பாண்டு இரைப்பு, இளம் பிள்ளை வாதம், கழிச்சல், தோல் நோய்கள், மேக நோய்கள் போன்ற நோய்களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு குணப் படுத்தப்பட்டு வருகின்றது. இம் மருத்துவமனையில் பல்வேறு ஊர்களினின்றும் நோயாளிகள் வருகை தந்து சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

99,000 ரூபாய் செலவில் பசுமை இல்லம் தமிழக அரசால் நியமிக்கப்பட்டு செயல்படும் நிலையில் உள்ளது. இதில் கிடைத் தற்கரிய மூலிகைகள் பயிரிட்டு ஆராய்ச்சி செய்யப்படும்.

> **நிலக்கரிக்குப் பதில் எண்ணெய்**
>
> தூத்துக்குடி அனல் மின்சார நிலையத்தில் நிலக்கரிக்குப் பதி லாக அதிவேக கந்தக எண் ணெயையும் உபயோகப்படுத்த லாம் என்ற தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

மூலிகை ஆய்வுத் திட்டம் (சித்தா) ஆயுர்வேதா சித்தா மத்திய ஆராய்ச்சிக் கழகம் புது டெல்லியின் தமிழ்நாட்டுக் கிளை யாகப் பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியினுள் அமைந்து 1971-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது.

தமிழ்நாட்டின் மூலிகை வளங் களைக் கண்டறிவதுடன் அவை களின் மாதிரிகள் ஹெர்போரி யம் முறையில் பக்குவப்படுத்தி பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

### மருத்துவ ஆராய்ச்சி நிலையம்

இக்கல்லூரியின் வளைவிற்குள் (சித்த) மருத்துவ ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஆயுர்வேத, சி[illegible]க் கழகம் [illegible]த்த மத்திய ஆராய்ச்[illegible] புது டெல்லியின் நிர்வாகத்தின் கீழ் 1980 முதல் செயல்பட்டு வரு கின்றது. இதன் ஆராய்ச்சிக்காகப் பத்து படுக்கைகள் ஒதுக்கி, பாண்டு, காக்காய் வலிப்பு, கழிச்சல் போன்ற நோய்களுக்குப் பரிகாரத்திற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. இந்த நிலையத் திற்குக் கல்லூரி முதல்வர் கவுரவ திட்ட அலுவலராகப் பணி புரிந்து வருகின்றார்.

இக்கல்லூரியில் 3.4 இலட்ச ரூபாய் செலவில் உடற்கூறு கட்டடம் அமைந்துள்ளது. மேலும் அதற்கு வேண்டிய தள வாடங்கள் ரூ. 99,200க்கு வாங்கவும் அரசு அனுமதி அளித் துள்ளது.

30.90 இலட்சம் ரூபாய்க்கு 204 மாணவர்கள் தங்குவதற்கு வசதியாகப் புதிய ஆண்கள் விடுதி வண்ணார்ப் பேட்டையில் கட்ட தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. அந்தக் கட்டடப் பணி முடிவுறும் தறுவாயில் உள் ளது.

இக்கல்லூரி வளைவிற்குள் ஐம்பத்து நான்கு மாணவிகள் தங்குவதற்கு வசதியாக ஆறு இலட்ச ரூபாய் செலவில் கட்ட டம் கட்ட தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. கட்டடப் பணி முடிவுறும் நிலையிலுள்ளது. நான்கு இலட்ச ரூபாய் செலவில் மருத்துவமனைக் கட்டடத்தின் இரண்டாவது அடுக்காகப் பயிற்சி மருத்துவர் விடுதி கட்ட தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. கட்டடப் பணி முடிவுறும் தரு ணத்தில் உள்ளது.

# அரசின் அறிவிப்புகள்
# ஆக்கப் பணிகள்

**1—1—83**

சேலம் மாவட்டத்தில் ஆனைமடுவு நீர்த் தேக்கத் திட்டத்திற்கும் கரியகோயில் நீர்த்தேக்கத் திட்டத்திற்கும், நீர்ப் பாசனத்துறை அமைச்சர் திரு கா. இராஜாமுகமது அடிக்கல் நாட்டினார். இத் திட்டங்கள் 11 கோடி செலவில் நிறைவேற்றப்படும்.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடியைச் சமாளிக்க வழிவகைகள் காணுவது பற்றி ஆராய 45 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு இருப்பதாக மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

'தமிழ்மாநில பெண்கள் வேலைவாய்ப் புக் கழகம்' என்ற அமைப்பு ரூ. 208 இலட்சம் செலவில் விரைவில் தொடங் கப்பட இருப்பதாக மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் அறிவித்தார்.

'ரிசர்வ் வங்கி'யின் அதிகப்பற்று இன்றியே தமிழக அரசின் நிதிநிலைமை சிறப்பாக உள்ளது என்று மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாட்டிலுள்ள இஸ்லாமியப் பெரு மக்களுக்குத் தமிழக அரசு, பல்வேறு சலுகைகள் அளித்து வருகிறது என்று மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச் சர் திரு கா. இராஜாமுகமது அவர்கள் அறிவித்தார்.

ஒரே வீட்டில் பல குடும்பங்கள் வசித் தால், அந்த வீடுகளுக்கு மின்சார வெட்டிலிருந்து சலுகை அளிப்பதுபற்றி அரசு ஆலோசித்து வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் திரு எஸ். இராமச் சந்திரன் அவர்கள் அறிவித்தார்.

**4—1—83**

தமிழ்நாட்டில் 79-80-ஆம் ஆண்டில் சிறப்பான முறையில் சிறுசேமிப்பு சாதனைகளைப் புரிந்த 137 உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு பரிசுக் கோப்பைகள் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

நெல்லை மாவட்டத்தில் மேலும் 4 இடங்களில் மணிக்கூண்டுகள் கட்டுவ தற்குத் தமிழக அரசு அனுமதித்துள்ளது.

**2—1—83**

தமிழக அரசின் பத்திரிகைச் சட்டம் தற்காப்பு ஆயுதந்தான், அது தாக்கும் ஆயுதம் அல்ல என்று மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித் தார்.

கிராமப்புறங்களில் வீட்டுவசதி வாரியத் தின் சார்பில், தவணை முறையில் வீடு கட்டித் தரும் திட்டத்தைச் சேலம் மாவட்டம் பள்ளிப்பாளையம் அருகே ஆயக்காடு கிராமத்தில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**3—1—83**

இலட்சோப லட்சம் குழந்தைகள் பட்டினி கிடக்க விடமாட்டோம்; எந்த நிலையிலும் சத்துணவுத் திட்டத்தைக் கைவிட மாட்டோம் என்றும் சத்துணவு திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்றும் மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்தார்.

**5—1—83**

தமிழகத்தில் பால் உற்பத்தியில் ஈடு பட்டிருக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு தமிழக அரசு நடப்பு (1982-83) ஆண் டில் 52 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கியிருக்கிறது என்று மாண்புமிகு ஆதிதிராவிடநலத்துறை அமைச்சர் திரு எம். விஜயசாரதி அவர்கள் அறிவித்தார்.

**6—1—83**

'முதலமைச்சர்குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காக' தனி லாட்டரி குலுக் கல் நடத்துவது பற்றி அரசு பரிசிலீத்து வருகிறது என்று மாண்புமிகு நிதியமைச் சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ் செழியன் அவர்கள் அறிவித்தார்.

தமிழக அரசு, உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு மாவட்டத்திலும், சுயதொழில் தொடங்கும் வகையில் 21 லட்ச ரூபாய் ஒதுக்கியுள்ளது என்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் அறிவித்தார்.

தமிழகம் முழுவதிலும், கிராம அதிகாரிகள் இல்லாமலேயே 'கெடுபிடி' இல்லாமலேயே 25 கோடி ரூபாய் வசூலாகியுள்ளது என்று மாண்புமிகு வருவாய்த்துறைஅமைச்சர்திரு எஸ்.டி.சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்.

திருச்சி, நெல்லை, சேலம் ஆகிய மூன்று நகரசபைகள் விரைவில் மாநகராட்சிகளாக மாற்றப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்.

**7—1—83**

இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூர்த் தொகுதியில் வத்தியிராயிருப்பையும், அர்ஜுனாபுரத்தையும் இணைத்து, 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட இருக்கும் பாலத்திற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

பதிப்பகங்கள் வெளியிடுகிற புத்தகங்களை இனி மாவட்ட நூலகங்களே வாங்கிக் கொள்ளும்; ஆனால், புத்தகங்களைச் சென்னையிலுள்ள மத்திய நூலகமே தேர்வு செய்யும் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் திரு சி. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்.

**8—1—83**

தஞ்சை மாவட்டத்தில் தொழில் வளர, இம்மாவட்டத்தைத் தொழிலில் பின்தங்கிய மாவட்டமாக அறிவித்துத் தொழில் தொடங்க தமிழக அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்.

தமிழக அரசு சீட்டுக் கம்பெனி (சிட் பண்ட்) விரைவில் தொடங்கப்படும் என்றும், இதற்கென பத்திரப் பதிவுத் துறையின் மூலம் ரூபாய் 1 கோடி ஒதுக்கப்பட்டு அந்தப் பணிகள் முடிந்து விட்டன என்றும் மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அறிவித்தார்.

சீனப்பட்டையும் காஞ்சிபுரம் பட்டையும் இணைத்துத் தயாரிக்கப்படும் 'காஞ்சீனா' ரகப்பட்டுப் புடவைகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது என்று மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு சி. அரங்கநாயகம் அறிவித்தார்.

குடும்பக் கார்டு வைத்திருப்பவர்களுக்கு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, 1983 ஜனவரி, பிப்ரவரி ஆகிய இரண்டு மாதமும் 5 கிலோ சர்க்கரை கூடுதலாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**10—1—83**

தமிழ்நாட்டில் மின்சார உற்பத்தி அதிகரித்ததைத் தொடர்ந்து, விவசாயத்திற்குக் கூடுதல் மின்சாரம் வழங்கப்படும். அத்துடன், நகரங்களில் மின்சார விநியோகக் கட்டுப்பாடுகளும் ரத்து செய்யப்படும் என்று மாண்புமிகு மின்சார அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரன் அறிவித்தார்.

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் 60,000 ஊழியர்களுக்கு ஊக்கபோனசாக தலா ரூ. 300 வழங்க அரசு முடிவெடுத்துள்ளது என்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அறிவித்தார்.

—சாமி பழனியப்பன்—

## பெருமைக்குரிய பொருனை நதி!

வேறொரு மாநிலத்திலே பிறந்து நம்முடைய மாநிலத்திலே தவழும் காவிரியால் ஏற்பட்டுவரும் பிரச்னைகள் நமக்குத் தெரியும். காவிரிமட்டும் நமது மாநிலத்திலேயே பிறந்திருக்குமானால் இந்தச் சிக்கலுக்கு இடமிருக்குமா?

இந்த வகையில், திருநெல்வேலி மாவட்டத்திலே தவழும் தாமிரபரணிக்குத் தனிச் சிறப்புண்டு.

மயிலாறு, பாம்பாறு, பாணதீர்த்தம், காரியாறு, கௌதலாறு, பேயாறு போன்ற சிறு சிறு நதிகளெல்லாம் இணைந்து பெருகித் தாமிரபரணியாகும் பொருநை நதி அகத்திய மலைச் சாரலில் பிறக்கிறது. 75 மைல் தூரம் அழகு நடை பயின்று இதே திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புன்னைக்காயல் என்ற இடத்தில் கடலில் கலக்கிறது! வற்றாத ஜீவ நதி இது!

அகத்திய மலை என்றதும் சிந்திக்கிறீர்களா?

ஆமாம், திரிகூடமலை எனப்படும் குற்றால மலையில் இருந்துதான் அகத்திய மாமுனிவர் அழகு தமிழ் வளர்த்தாராம்.

# இரண்டே பெறுக! இனிதே வாழ்க!

குடும்பநலத்தின் முக்கிய அங்கமாகத் திகழ்வது தாய்நலமும் சேய்நலமுமாகும்.

குடும்பநலத் திட்டம் கருவுற்ற தாய்மார்களைப் பேணிக் கவனிப்பதிலிருந்தே தொடங்கிவிடுகிறது. கருவுற்ற தாய்மார்களுக்கு இரத்த சோகையைப் போக்க இரும்புச்சத்து மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

கருவுற்ற தாய்மார்களுக்கு இசிவு நோய் வராவண்ணம் தடுக்க தடுப்பூசிகள் ஏழாவது மாதத்திலிருந்து ஒன்பதாவது மாதத்திற்குள் ஒரு மாத இடைவெளியில் இருமுறை போடப்படுகின்றன. அரசு மருத்துவமனைகளிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் மகப்பேறு நிலையங்களிலும் குழந்தைப் பேறு பார்க்கப்படுகின்றது.

குக்கிராமங்களில் பயிற்சி பெற்ற தாதியர்களால் பிரசவம் பார்க்கப்படுகின்றது. குழந்தை பிறந்த மூன்றாவது மாதத்திலிருந்து ஒரு மாத இடைவெளியில் மூன்று முறை முத்தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன. இத்தடுப்பூசி கக்குவான், தொண்டை அடைப்பான், வில்வாத ஜன்னி ஆகியவை வராவண்ணம் குழந்தைகளைக் காக்கிறது. சிறுவர்களின் கண்ணொளியை நன்கு காத்திட வைட்டமின் 'அ' திரவம் சிறார்களுக்கு அளிக்கப்படுகிறது.

நெல்லை மாவட்டத்தில் தாய்சேய் நலத்திட்டத்தில் 30-11-82 முடிய பயனடைந்தவர்கள் விவரம் :

முந்நோய் தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகள் — 31,088, இருநோய் தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகள், 25,890, இசிவுநோய் தடுப்பூசி போடப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் —2,194.

இரும்புச்சத்து மாத்திரைகள் அளிக்கப்பட்ட தாய்மார்கள், —30,384.

இரும்புச்சத்து மாத்திரைகள் அளிக்கப்பட்ட சிறார்கள்,29,476.

வைட்டமின் 'அ' திரவம் அளிக்கப்பட்ட சிறார்கள் 92,601.

### குடும்பநல விளம்பரப் பணிகள்

குடும்பநலம் பற்றியும், கல்வியும், விளம்பரப் பணிகளும் இம்மாவட்டத்தில் பெருவாரியாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மக்கள் பெருக்கத்தின் தீமையும் சிறு குடும்ப நெறியின் அவசியம் மாவட்டத்தின் மூலைமுடுக்குகள் எல்லாம் முழங்கப்பட்டு வருகின்றன.

துன்பம் வந்தபின் தவிப்பதை விட வருமுன் காப்பது அறிவுடைமை. எனவே, வருமுன்னர்க் காக்க தடுப்பூசி போடுதல், மகப்பேறு மற்றும் குழந்தைநலம் சுற்றுப்புறச் சுகாதாரம் மக்கள் தொகைக் கல்வி, தாமதித்து திருமணம் செய்வதால் ஏற்படும் நன்மைகள் சிறு குடும்ப நெறியின் அவசியம், குடும்பநல தற்காலிக முறைகள், நிரந்தர முறைகள், சுற்றுப்புறச் - சுகாதாரம் ஆகியவை பற்றி குழுவிவாதம் மூலமாகவும் குழுக் கூட்டங்கள் மூலமாகவும் கிராமப்புற மக்களுக்கு குடும்பநலக் கல்வி எடுத்துச் சொல்லப்படுகின்றது. சுவரொட்டிகள், மூலமாகவும், துண்டு வெளியீடுகள் மூலமாகவும் திரைப்படங்கள் மூலமாகவும் கிராமப் புறங்களில் குடும்பநலத் திட்டம் பற்றிய கல்வி புகட்டப்படுகிறது. இவ்வாண்டு இம்மாவட்டத்தில் 125 கிராமங்களில் கிராமத் தலைவர்களுக்கான குடும்பநலப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

கீழப்பாவூர், அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, களக்காடு, பாளையங்கோட்டை, நாங்குநேரி, திருச்செந்தூர், ஆழ்வார்திருநகரி, கருங்குளம் ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி, ஓட்டப்பிடாரம், ஆகிய 8 ஊர்களில் 'திருவிழா' என்னும் குடும்பநலப் பிரச்சார நாடகங்கள் நடத்தப்பட்டன. மாவட்ட அளவில் கிராமத் தலைவர்களுக்கான பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது.

இன்றைய இளந்தலைமுறையினரே நாளைய பாரதத்தின் சிற்பிகள். அவர்களிடையே மக்கள் தொகைப் பெருக்கக் கல்வி பரவிட பள்ளி மாணவர்களுக்குத் தனியாகவும் கல்லூரி மாணவர்களுக்குத் தனியாகவும் இளைஞர் மன்றங்கள் மாதர் சங்கங்கள் முறைசாரா மற்றும் முதியோர் கல்வி நிலையங்கள், பயிற்சி நிலையங்கள் போன்றவற்றிற்குத் தனியாகவும் மும்மூன்று கட்டுரைப்போட்டி, பேச்சுப் போட்டி, நாட்டுப் பாடல் போட்டி ஆகியன நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன. குடும்பநலக் கண்காட்சி பெரிய அளவில் 2ம் சிறிய அளவில் 2ம் இம்மாவட்டத்தில் போடப்பட்டது. மேலும் 8 குடும்பநல மன்றங்களும், நடத்தப்பட்டு வருகின்றன.

### குடும்பநலத் திட்டத்தில் நவீன முறைகள்

குடும்பநல நவீனமுறை அறுவைச்சிகிச்சை எனும் "லேப்ப



ராஸ்கோப்'' அறுவைச் சிகிச்சை முகாம் இம்மாவட்டத்தில் 3.9.82 முதல் 6.9.82 வரை திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்றது. மூன்று நாள் முகாமில் 300 பேருக்கே அறுவைச்சிகிச்சை செய்ய முடியும் என்ற நிலையில் ஏறக்குறைய 822 தாய்மார்கள் ஆர்வத்தோடு இச்சிகிச்சையைச் செய்து கொள்ள முன்வந்து விட்டனர். முகாம் குறுகிய காலமாக இருந்தால் 272 தாய்மார்களுக்கு மட்டுமே நவீன முறை சிகிச்சை அளிக்க முடிந்தது. ''மினி லேட்ராடமி'' ( Mini Latrotomy ) எனப்படும் புதிய முறையையும் கடைப்பிடித்து முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இதுவரை இம்மாவட்டத்தில் 23 தனியார் மருத்துவ மனைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவை குடும்ப நலத் திட்டத்திற்கு உறுதுணை புரிந்து வருகின்றன. இம்மாவட்டத்திலுள்ள இந்திய மருத்துவக் கழகக் கிளைகளோடு இணைந்து 17.12.82 அன்று தனியார் மருத்துவர்களுக்குக் குடும்பநலத் திட்டத்தில் நவீன முறைகளும் தனியார் மருத்துவர்களின் பங்கும் என்ற தலைப்பில் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு என்.எஸ். ஹூரா தலைமையில் நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்ட தனியார் மருத்துவர்கள் இத்திட்டம் மேலும் சிறந்து செயற்பட பெரிதும் துணை புரிய உறுதியளித்தனர். குடும்ப நலத் திட்டத்தில் இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் வருமாறு: அறுவை சிகிச்சைகள்..4,800;கருத்தடை வளையம் பொருத்தியவர்கள் 1,201; வழங்கப்பட்டுள்ள ஆணுறைகள் 3,03,662.

திருநெல்வேலி மாவட்டத்தில் கணிசமாக கிருத்துவர்களும் முஸ்லிம் மக்களும் உள்ளனர். ஆழ்ந்த சமயக் கொள்கையோடும் பாரம்பரிய நம்பிக்கைகளிலும் மூழ்கியிருந்தவர்களும் கூட குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தை உணர்ந்து பின்பற்றி வருகின்றனர். சாதி, மத வேறுபாடின்றி எல்லா இனத்தவரும் எல்லா மதத்தவரும் இம்மாவட்டத்தில் குடும்பநலத்திட்டத்தை ஏற்று வருகின்றனர். இந்து சமயப் பெரியவர்கள் தலைமையிலும் கிருத்துவப் பாதிரிமார்கள் தலைமையிலும், முஸ்லிம் ஆலிம்கள் தலைமையிலும் குடும்நலப் புத்தறிவுப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தில் இத்திட்டம் ஒரு மக்கள் இயக்கமாக வெகுவிரைவில் மாறும் என்பதில் எத்துணையும் ஐயமில்லை!





## தொழில் வளம்

பல்வகைத் தொழில் வளங்களும் நெல்லைச் சீமையில் நிறைந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத் தக்க சில பின்வருமாறு:

| | |
|---|---|
| இந்தியா சிமிண்ட்ஸ் | —சங்கர் நகர் |
| தரங்கதாரா கெமிகல்ஸ் | —சாகுபுரம் |
| சன் பேப்பர் மில்ஸ் | —சேரன்மாதேவி |
| கணபதி மில்ஸ் | —தாழையூத்து |
| நெல்லை காட்டன் மில்ஸ் | —தாழையூத்து |
| தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பாலை | —பேட்டை |
| லட்சுமி மில்ஸ் | —கோவில்பட்டி |
| லாயல் மில்ஸ் | —கோவில்பட்டி |
| மதுரை கோட்ஸ் | —விக்கிரமசிங்கபுரம் |
| கோமதி மில்ஸ் | —வீரவநல்லூர் |
| பலராமவர்மா மில்ஸ் | —செங்கோட்டை |
| கூட்டுறவு நூற்பாலை | —நாசரேத் |
| கீதாஞ்சலி | —சங்கரன்கோயில் |
| பெல் மேன்யூபாக்சரிங் அன்கோ | —பாளையங் கோட்டை |
| பெல் பிராடக்ட்ஸ் அல்கோ | —பாளையங் கோட்டை |
| நூற்பாலை | —தூத்துக்குடி |
| துறைமுகத் திட்டம் | —தூத்துக்குடி |
| தூத்துக்குடி அல்காலிக் கெமிகல்ஸ் | —தூத்துக்குடி (டி.ஏ.சி.) |
| மதுரை கோட்ஸ் | —தூத்துக்குடி |
| ஸ்பிக் | —தூத்துக்குடி |
| சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் | —நாங்குனேரி |
| பம்பாய் பர்மா தேயிலைத் தோட்டம் | —மாஞ்சோலை |



# கல்வி சிறந்த மாவட்டம்



நெல்லை மாவட்டத்தில் 2459 துவக்கப் பள்ளிகளும், 875 நடுநிலைப் பள்ளிகளும், 118 உயர்நிலைப் பள்ளிகளும், 132 மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன.

தமிழ்நாட்டில் மேல்நிலைக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து இம்மாவட்டம் 45 அரசு பள்ளிகளிலும், 81 உதவி பெறும் பள்ளிகளிலும், 3 நகர் மன்ற பள்ளிகளிலும், ஒரு அரிசன நலத்துறைப் பள்ளியிலும், இரண்டு உதவி பெறாத பள்ளிகளிலும் மேல்நிலைக் கல்வியை அமல்படுத்தியுள்ளது.

இம்மாவட்டத்தில் மொத்தம் 24073 ஆசிரியர்கள் பணி புரிகின்றனர். 4,33,070 மாணவர்களும், 3,43,154 மாணவிகளும் கற்பிக்கப்படுகின்றனர்.

மேல்நிலைக் கல்வி அறிமுகப் படுத்தப்பட்டதிலிருந்து தனியார் பள்ளிகளில் இடவசதியை அதிகரிக்கவும், விரிவான ஆய்வுக் கூடங்கள் அமைத்தலுக்கும் அரசு ரூ. 2,77,500 மான்யமாக வழங்கியுள்ளது.

25 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 1979-80-ல் தலா ரூ. 1.5 இலட்சம் மதிப்புள்ள விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

1980-81-ல் தலா 2.3 இலட்சம் மதிப்புள்ள 5 விஞ்ஞான ஆய்வுக் கூடங்களும் 1981-82-ல் தலா 2.5 இலட்சம் மதிப்புள்ள 3 விஞ்ஞான ஆய்வுக் கூடங்களும், அரசு பள்ளிகளுக்காக அமைக்கப்பட்டுள்ளன.

விஞ்ஞான அறிவை மாணவர்களுக்கு அதிகரிக்கும் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ. 3 இலட்சம் மதிப்பில் அரசுப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

1981-82-ல் ரூ. 2,54,000 செலவில் மூன்று அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் இடவசதி செய்யப்பட்டுள்ளது.

1980-81 மற்றும் 81-82-ஆம் ஆண்டில் ரூ. 27 இலட்சம் செலவில் 12 விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டன.

இவ்வாண்டில் ரூ. 3,66,000 மதிப்புள்ள ஐந்து அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 35 அரசு பள்ளிகளுக்குக் கழிவறைகள்

**சிவதாணுப்பிள்ளை**
**முதன்மைக் கல்வி அலுவலர்**
**திருநெல்வேலி.**

கட்டுவதற்காக அரசு ரூ. 4,50,000 நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இம்மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் கல்வித் துறையில் 3033 சத் துணவு மையங்கள் செயல்படு கின்றன. இவற்றில் 3,82,999 மாணவர்கள் சத்துணவு அருந்து கின்றனர். இத்திட்டத்தின் பய னாக இம்மாவட்டத்தில் 19,300 மாணவர்கள் கூடுதலாகப் பள்ளி களில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டில் குழந்தைகள் தினவிழாவையொட்டி, எட்டு மேல்நிலைப் பள்ளிகளில் அறி வியல் கண்காட்சி நடத்தப்பட் டது. பெற்றோர்-ஆசிரியர் சங்கத்திலிருந்து இதற்காக ரூ. 4000 செலவு செய்யப்பட்டது.

இம்மாவட்டத்திலுள்ள 36 சரகங்களிலும், கண்காட்சிகள் நடத்தப்பட்டன. இதற்கு, பெற் றோர் - ஆசிரியர் சங்க நிதி யிலிருந்து ரூ. 3600 வழங்கப் பட்டது. இக்கண்காட்சிகளில் முழுவதும் மாணவர்களாலேயே செய்யப்பட்ட பொருட்கள் பார் வைக்கு வைக்கப்பட்டன.

முயற்சியில் மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

இம்மாவட்டத்தில் தமிழகத்திலேயே பள்ளியிறுதி வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று இரண்டு மாணவர்கள் வெற்றி பெற்றது பாராட்டுக்குரியது. இம்மாவட்டத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் அமைக்கப்பட்டுள்ள கல்விக்குழு, விளையாட்டுக்குழு, கலைக்குழு, இலக்கியக் குழு ஆகியவை மிகச் சிறந்த சேவை செய்கின்றன.

சாரண சாரணீய இயக்கம் தற்பொழுது புதுப்பொலிவுடன் இம்மாவட்டத்தில் இயங்குவது மிகச் சிறப்பானதாகும். இம் மாவட்டத்தில் 4872 சாரணர்களும், 2907 சாரணியர்களும் தற்பொழுது உள்ளனர்.

இம்மாவட்டத்தில் மாணவர்கள் உடல் நலம் பரிசோதிக்கவும், தக்க மருத்துவ ஆலோசனைகள் கூறவும், நான்கு மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நெல்லை மாவட்டத்திலுள்ள 4 கல்வி மாவட்டங்களிலும் மருத்துவ உதவிக்குழு அமைக்கப்பட்டு இதற்கென ஊர்தி வசதியும் செய்யப்பட்டுள்ளது.

துவக்கப்பள்ளி மாணவர்களும் விஞ்ஞான அறிவு பெறும் முகத்தான் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் நடமாடும் ஆய்வுக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற அலுவலர் இத்த



ஆய்வுக் கூடப் பணிகளைச் செய்கிறார்.

கல்வியறிவு பெருகி மாணவர்கள் சிறந்த குடிமகனாகத் திகழ பல்வேறு வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன.

இம்மாவட்டம், வரும் காலங்களிலும் கல்வியில் சிறந்த மாவட்டமாகத் திகழும் என்பதில் சந்தேகமில்லை.

# பிற்பட்டோர் நலம் பெற...

**வி. ஆதிமூலம்,**
மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர்,

திருநெல்வேலி மாவட்டத்தில் பிற்பட்டோர் நல முன்னேற்றத் திற்காகப் பல்வேறு திட்டங்கள் அமலாக்கப்பட்டு வருகின்றன.

பின் வரும் இடங்களில் ஆதாரப்பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

1. அருகன்குளம், 2. செண்பக புரம், 3. அரியூர், 4. நொச்சி குளம், 5. தெற்கு சுப்பையா புரம், 6. பனைவடலிசத்திரம், 7. வடக்குபுளியம்பட்டி, 8. தெற்கு அச்சம்பட்டி, 9. வெள்ளப்ப னேரி, 10. சங்கரப்பேரி.

குறைந்த வருவாயுடைய பெற்றோர்களின் குழந்தைகள் தங்கி கல்வி பயிலுவதற்கு வசதியாக, இத்துறையினரால் 27 ஊர்களில் மாணவர் விடுதிகள் நடத்தப் பட்டுவருகின்றன. இதே போல, பின்வரும் இடங்களில் பள்ளிகளில் பயிலும் மாணவியருக்காகத் தனி விடுதிகள் நடத்தப்படுகின்றன: 1. பாளையங்கோட்டை, 2. சங்கரன்கோவில், 3. தூத்துக்குடி, 4. புதூர், 5. நாங்குனேரி, 6. பணிக்கநாடார் குடியிருப்பு, 7. கருங்குளம் 8. சங்கர்நகர், 9. கூட்டப்புளி,

கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர் தங்கிப் பயிலுவதற்கு வசதியாக இல்லங்களும் நடத்தப் படுகின்றன. அவை கல்லூரி மாணவர் இல்லம் பேட்டை, கல்லூரி மாணவியர் இல்லம் பாளையங்கோட்டை, கல்லூரி மாணவர் இல்லம் தூத்துக்குடி.

இவை தவிர மீனவர்களின் குழந்தைகளுக்காகத் தனியே ஒரு விடுதி தூத்துக்குடியில் நடத்தப் பட்டுவருகின்றது. ஆக, மேற்கண்ட 40 விடுதிகளிலும் 723 மாணவர்களும், 433 மாணவியரும் தங்கி கல்விபயில வசதி செய்யப் பட்டுள்ளது.

இத்துறையினரால் நடத்தப் படும் 10 ஆதாரப் பள்ளிகளிலும் முதல்வரின் குழந்தைகள் இலவசச் சத்துணவுத் திட்டம் நல்லமுறையில் அமல் நடத்தப்பட்டு வருகிறது.

உயர்நிலைப்பள்ளியில் 9,10 வகுப்புப் படிக்கும், பிற்பட்ட வகுப்பு ஏழை மாணவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.5000-க்கு மிகையின்றி இருந்தால், இம் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகிறது. 82-83ல் 209 உயர்நிலைப்பள்ளிகளில் படிக்கும் 5042 மாணவ, மாணவியருக்கு ரூ.68004.65 மதிப்புள்ள இலவச பாடபுத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவ்வாறே விமுக்த சாதி ஏழை மாணவ, மாணவியருக்கு அவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.5000-க்கு மிகையின்றி இருந்தால் 4ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. 34800 மாணவ, மாணவிகளுக்கு ரூ.3,26,027,05 மதிப்புள்ள இலவசப்பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவ்வாறே மாணவர், மாணவியர் உயர்நிலைப்பள்ளிக்குச் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணத்தையும் இந்தத் துறை மூலம், பள்ளிக்குச் செலுத்தப் பட்டு வருகிறது. இதன் மூலம், ஆண்டு சுமார் 7500 மாணவ, மாணவியர்கள் பயன் பெறுகிறார்கள்.

11,12ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கும் மற்றும் கல்லூரியில், தொழிற்பள்ளி தையல், தட்டெழுத்து முதலான சான்றிதழ் படிப்பு, இவைகளில் படிக்கும் மாணவர்களுக்கு ரொக்கமாக உபகாரச் சம்பளம் வழங்கப் பட்டு வருகிறது. நடப்பு ஆண்டு முதல் பள்ளிப்படிப்பு நீங்கலாக மற்றும் உள்ள படிப்பு மாணவ, மாணவியருக்குத் தாமதமின்றி உபகாரச்சம்பளம் கிடைத்திடும் பொருட்டு கல்வி நிலையத் தலைவர்களுக்கு (முதல்வர், தலைமை ஆசிரியர்) அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. இதுவரை 5012 மாணவ மாணவியர்களுக்கு ரூ. 15,92,750 உபகாரச்சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது. இதுவரைக்கும் ரூ.20,92,000 நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. 31.3.82க்குள் மீதம் உள்ள பணமும், மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவிடும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் கீழ்க்கண்ட நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் சலவையாளர்களின் உபயோகத்திற்காகப் பாதி கடன், பாதி மானியம் என்ற அடிப்படையில் அரசாங்க நிதி உதவி பெற்று சலவைத்துறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1. வடகரைகீழ்பிடாகை பேரூராட்சி, 2. தூத்துக்குடி நகராட்சி, 3. மணிமுத்தாறு நகரியம், 4. ஸ்ரீ வைகுண்டம் பேரூராட்சி 5. வண்ணார்ப்பேட்டை, திருநெல்வேலி நகராட்சி, 6. நாங்குனேரி பேரூராட்சி, 7. நாரணம்மாள்புரம் பேரூராட்சி.

சங்கரன்கோவில் நகராட்சி, கீழ்ப்பாவூர் பேரூராட்சி ஆகிய இடங்களில் சலவைத்துறை கட்டப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளன.

தூத்துக்குடி நகராட்சி (மாப்பிள்ளையூரணி) கழுகுமலை பேரூராட்சி, கயத்தாறு பேரூராட்சி, காயல்பட்டணம் பேரூராட்சி ஆகிய இடங்களில் சலவைத்துறை கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட மறவர் இனத்தைக் சேர்ந்தவர்களுக்கு, விவசாயத்திற்குக் கிணறு வெட்டுவதற்காகத் தகுதி வாய்ந்த ஒவ்வொருவருக்கும் ரூ. 2500 மானியமாக் வழங்கப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டிற்கு ரூ.50,000 ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது. இதுவரையிலும் ரூ.25,750-வழங்கப்பட்டுள்ளது. இதுவரையிலும் இத்திட்டத்தின் கீழ் 285 நபர்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் நரிக்குறவர்கள், ஒட்டர்கள், சலவையாளர்கள், சவரத் தொழிலாளர்கள் ஆகிய நான்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு-சொந்த வீடுகள் இல்லாத குறைந்த வருவாய் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா மூன்று செண்டு வீதம் தனியார் நிலங்களைக் கையகம் செய்து வீட்டுமனை வழங்கு திட்டம் செயல்பட்டு வருகிறது.

மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த சலவைத் தொழிலாளர்கள், சவரத்தொழிலாளர்கள் தங்கள் பணியினைச் செவ்வனே செய்வதற்கு வசதியாக அவர்களுக்குத் தொழிற் கருவிகள் இனாமாக வழங்கப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின் கீழ் சலவைத் தொழிலாளர்களுக்கு நடப்பு ஆண்டில் 400 தேய்ப்புப் பெட்டிகளும், சவரத் தொழிலாளர்களுக்கு 500 தொழிற் கருவிகள் அடங்கிய பெட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன..

# ❋❋❋ நெஞ்சம் கவர் நெல்லை! ❋❋❋

நெல்லை மாவட்டத்தில், சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க கண்கவர் இடங்கள் பல உள்ளன. அவை கண்ணுக்கு மட்டுமல்ல, கருத்துக்கும் விருந்தூட்டுவனவாக அமைந்துள்ளன. தாமிரபரணி தவழ்ந்து செல்லும் இத்திரு மண்ணில் எத்தனை எத்தனைக் காட்சிகள் நம் எண்ணத்தை ஈர்க்கின்றன!

**திருக்குற்றாலம் :** அழகிய ஐந்தருவிகளைக் கொண்டது. இனிய சுற்றுலாத் தலமாக மட்டுமல்ல, இலக்கியச் சிறப்பும் உடையது, இது. அருள்மிகு திருக்குற்றாலநாதர் ஆலயமும், சித்திர சபையும் இங்குள்ளது.

**பாஞ்சாலங்குறிச்சி :** வெள்ளையரை எதிர்த்து, உரிமைக்குரல் எழுப்பிய வீர பாண்டியக்கட்டபொம்மன்நினைவுக்கோட்டை உள்ள இடம்.

**எட்டயபுரம் :** பாட்டுக்கொரு புலவன் பாரதி பிறந்த இடம். இங்கே பாரதியின் மணிமண்டபமும் உள்ளது.

**பாபநாசம், மணிமுத்தாறு :** இரண்டும் அழகிய அணைக்கட்டுகள். சுற்றுலா வருவோரை மட்டும் அல்ல, சுற்றியுள்ளோரையும் கவர்ந்திடும் இடங்கள். பூங்காவும், நீச்சல் குளமும், தேயிலைத் தோட்டமும் உள்ள எழிலார்ந்த இடம்.

இவையன்றி, திரும்பும் திசையெல்லாம் திருக்கோயில்களும் காட்சி தருகின்றன அவை:

**சங்கரன் கோயில் :** அருள்மிகு சங்கர நாராயணசாமி திருக்கோயில்.

**திருச்செந்தூர் :** அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்.

**ஆழ்வார் திருநகரி :** அருள்மிகு மகர நெடுங்குழைக்காதன் திருக்கோயில்.

**செண்பகராமன் நல்லூர் :** நுண்ணிய வேலைப்பாடமைந்த சிற்பங்கள் உள்ள அருள்மிகு ஜகந்நாதப் பெருமாள் திருக்கோயில்.

**திருக்குறுங்குடி :** அருள்மிகு மலை நம்பி திருக்கோயில்.

**கிருஷ்ணாபுரம் :** அருள்மிகு விஷ்ணு திருக்கோயில்.

**திருநெல்வேலி :** அருள்மிகு நெல்லையப்பர்—காந்திமதி அம்மன் திருக்கோயில்.

**கழுகுமலை:** மலைக் குகைக்கோயில்கள். ஜைனர்களின் முக்கியத் தலம். அருள்மிகு கழுகாசலமூர்த்தி திருக்கோயில் இங்கு உள்ளது.

**வீரசிகாமணி :** அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில். பல்லவர் காலத்துச் சிற்பங்கள்; குகைக்கோயில் காணத்தக்கவை.

**தூத்துக்குடி :** வரலாற்றுப் புகழ்மிக்க துறைமுகம், முத்துக்குளிக்குமிடம்; சிறந்த தொழில் நகரம்.

**பத்தமடை :** புகழ் பெற்ற அழகிய கோரைப் பாய்கள் தயாரிக்கும் சிற்றூர்.

**தென்காசி :** இதைத் தென்னாட்டுக் காசி (வாரணாசி) எனவும் வழங்குவர். 400 ஆண்டுகளுக்கு முந்திய கலையழகு மிக்கக் கோயில்கள் உள்ள திருவிடம். காசி விசுவநாதர் திருக்கோயில் இங்கு உள்ளது.

**ஒட்டப்பிடாரம் :** கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் பிறந்த ஊர்.

**காணவேண்டிய வனவிலங்கு உய்விடங்கள்**

1. முண்டந்துறை :—புலிகள் உய்விடம்.
2. களக்காடு : சிங்கவால் குரங்குகள் உய்விடம்.
3. மூன்றடைப்பு, கூந்தங்குளம் : பறவைகள் உய்விடம்.

**தொகுப்பு : பி. வி. ஜி.**



'வானம் பொழியுது பூமி விளையுது; உனக்கேன் கப்பம்?' என உரத்த குரல் கொடுத்த வீரபாண்டியக் கட்டபொம்மன்...

வெள்ளை ஆதிக்கத்தின் வணிக நரம்பறுக்கக் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி...

'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என நம் எல்லோரையும் சிந்தித்துச் செயல்படத் தூண்டிய நூற்றாண்டு விழாக் கவிஞன் சுப்பிரமணிய பாரதி...



ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்று இந்நாட்டாரின் எதிர்ப்பு வேகத்தை ஆங்கில ஏகாதிபத்தியத்துக்குணர்த்திய வாஞ்சிநாதன் போன்ற விடுதலை விரும்பிகளையெல்லாம் ஈன்ற பெருமை கொண்டது திருநெல்வேலி மாவட்டம்.

# வேளாண்மையில் வேகமான முன்னேற்றம்

வரகு முதல் வாழை வரை சோளம் முதல் சூரியகாந்தி வரை கம்பு முதல் கரும்பு வரை தினை முதல் தித்திக்கும் திராட்சை வரை அரிய பயிர்கள் அனைத்தும் பயிராகும் மாவட்டம் நெல்லை மாவட்டம்.

வற்றாத ஆறு தாமிரபரணி வளஞ்செய்யும் நெல் விளையும் பகுதிகளையும் வான்மழைக்குத் தவங்கிடக்கும் மானாவாரி கரிசல் மற்றும் செவ்வல் நிலப்பகுதிகளையும் தன்னகத்தே கொண்டு, வடகிழக்குப் பருவமழையையே பெரிதும் நம்பி இருக்கிற இம்மாவட்டத்தில், பல்வேறு பயிர்களும் பாங்குடன் பயிரிடப்படுவது, பார்த்து மகிழ்ந்து பாராட்டத் தக்கது. இதற்குக் காரணம் இங்குள்ள உழவர் பெரு மக்களின் மன வளமும் உழைக்கும் திறனும் அறிவியல் வேளாண்மையில்அவர்கள் காட்டுகின்ற ஆர்வமும் இவற்றை ஏற்றவண்ணம் பயன்படுத்திக்கொண்டு சாதனைகளுக்கு வழிவகுக்கும் வேளாண்மைத்துறையின் சீர்மிகு பணியுமாகும்.

அரிசி உற்பத்தியில் சராசரி ஏக்கர் விளைச்சலில் எக்டேருக்கு 2,690 கிலோ விளைவித்து, தமிழகத்திலேயே நெல்லை மாவட்டம் முதலிடம் பெற்றுளதே இதற்குச் சான்றாகும்.

உயர்வள ரகங்கள் பயிரிடும் திட்டம், தீவிர விவசாயப் பகுதித் திட்டம், மானாவாரி நில வளர்ச்சித் திட்டம், பருத்தி பயிரிடும் திட்டம், பயறு வகைப் பெருக்குத் திட்டம், பலப்பயிர்ச் சாகுபடித் திட்டம், எண்ணெய் வித்துப் பெருக்குத் திட்டம் போன்ற பல்வேறு வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களையும், ஒப்பற்ற முறையில் செயல்படுத்தி, உன்னத சாதனைகளை நிலைநிறுத்தி, அனைவரது கருத்தையும் ஈர்க்கின்ற சிறப்பைநெல்லை மாவட்டம் பெற்றுள்ளது.

## உயர் வள ரகம் பயிரிடும் திட்டம்

முன்கார் மற்றும் கார் பருவங்களில் ஏறத்தாழ ஒரு இலட்சம் ஏக்கர்களிலும் பிசானப் பருவத்தில் ஏறத்தாழ 2.57 இலட்சம் ஏக்கர்களிலும் நெல்லை மாவட்டத்தில் நெல் பயிரிடப்படுகின்றது. நெல் உற்பத்தியை உயர்த்த வல்ல வழிமுறைகளில், உகந்த உயர்வள ரகம் முதன்மையானது. முன்கார் மற்றும் கார் பருவங்களில் பலன் குறைந்த பயிர் ரகங்களுக்குப் பதிலாக மிகு விளைச்சல் தரும் மேன்மையான ரகங்களான ஆடுதுறை 31, கண்ணகி மற்றும் டி கே எம் 9 ரகங்களை அறிமுகப்படுத்தி, உழவர் பெருமக்களை விரும்பிப் பயிரிட உற்சாகப்படுத்தியதன் காரணமாக ஏக்கருக்கு ஒரு மேனிக்கும் (1620 கிலோ) குறைவாக இருந்த முன்கார் மற்றும் கார் விளைச்சல் இன்று 1 மேனியிலிருந்து 2 மேனியாக (2400 கிலோ முதல் 3200 கிலோ வரை) உயர்ந்துள்ளது. பிசானப் பருவத்தில் பயிராகிவந்த பலன் குறைந்த உள்ளூர் ரகங்களை அகற்றிவிட்டு அமோகவிளைச்சல் தரவல்ல ஐ.ஆர் 20, பொன்னி ஆகிய ரகங்களைப் பயிரிடவகை செய்ததன் வாயிலாக பிசான நெல் விளைச்சல் பெரிதும் உயர்ந்துள்ளது. இதனால் நெல் பயிரிடும் பரப்பு மிகுதியாக அதிகரித்திடாத சூழ்நிலையிலும் அரிசி உற்பத்தி மட்டும் கடந்த 10 ஆண்டுகளில், 3.95 இலட்சம் டன்னிலிருந்து 5.08 இலட்சம் டன்னாக இம்மாவட்டத்தில் உயர்ந்துள்ளது. சராசரி எக்டேர் விளைச்சல் 2625 கிலோவிலிருந்து 2922 கிலோவாகக் கூடியுள்ளது.



## சிறு தானிய உற்பத்தியிலும் சிறப்பான சாதனை

சிறு தானியங்கள் பயிரிடும் பரப்பு 2.75 இலட்சம் ஏக்கராக நிலைத்து நின்ற போதிலும், உற்பத்தி குவிக்கும் உயர்வள ரகங்களை அறிமுகப்படுத்தியதாலும், உகந்த உழவியல் நுட்பங்களை உழவர் பெருமக்கள் கடைப்பிடிக்க வகை செய்த

**சே. ஹாஜா ஷெரீப்,**
**துணை வேளாண்மை இயக்குநர்**
**உழவியல்**
**திருநெல்வேலி.**

தாலும் சிறுதானிய விளைச்சல் 1.19 இலட்சம் டன்னிலிருந்து 1.33 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. சராசரி எக்டேர் விளைச்சல் 1086 கிலோவிலிருந்து 1280 கிலோவாகக் கூடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

விளைச்சல் குறைந்த உள்ளூர் உளுந்து, பாசிப்பயறு, தட்டைப் பயறு, துவரை ஆகிய வகை வித்துக்களுக்குப் பதிலாக, குறுகிய காலத்தில் நிறைபலன் தரவல்ல, உயர்வள ரகங்களான, கே. எம். 1, கே. எம். 2, ஏ. டி. டி. 1, ஏடி. டி. 2, கோ. 3 ஆகியவற்றை உளுந்திலும் கே.எம். 1. கே.எம். 2, கோ. 3 பிஎல் 7, ஏ. டி. டி. 1, ஏ. டி. டி. 2 ரகங்களைப் பாசிப் பயறிலும் சி. 152, கே. எம். 1 ரகங்களை தட்டைப் பயறிலும் எஸ். ஏ. 1, கோ. 3 ரகங்களை துவரையிலும் அறிமுகப்படுத்தியதுடன், மானாவாரியிலும் இறவையிலும், தஞ்சைத் தரிசிலும், தனிப் பயிராகவும் பருத்தி மற்றும் இதர பயிர்களுடன் ஊடு பயிராகவும் பயிர் செய்ய வகை செய்ததாலும், டை-அமோனியம் பாஸ்பேட்டை இலை மேல் தெளித்தல், பயிர் பாதுகாப்புச் செய்தல் போன்ற புதிய நுட்பங்களைக் கடைப்பிடிக்கச் செய்ததாலும் பயறு வகைப் பயிர்கள் பயிரிடும் பரப்பும் மகசூலும் மிகுதியாக உயர்ந்துள்ளன. சராசரி எக்டேர் விளைச்ச



லும் 350 கிலோவிலிருந்து 425 கிலோவாக உயர்ந்துள்ளது. மேலும் சிறப்பான உற்பத்தியை நிலைநாட்ட பயறு பயிரிடும் விவசாயிகளுக்கு மானிய உதவியுடன் 4 கட்டங்களில் முறையான செயல் முறைப் பயிற்சி அளிக்கப் படுகிறது.

## உரங்களைப்பயன்படுத்த ஊக்குவித்தல்

இரசாயன உரங்களை வாங்கிப் பயன்படுத்த அஞ்சிய நிலையிலிருந்த வேளாண் பெருமக்களை, இரசாயன உரங்களில் நேரடி உரங்கள், கலப்பு உரங்கள் கட்டு உரங்கள் மற்றும்இணைப்பு உரங்களைப் பயன்படுத்தும் நிலைக்கும், சிறப்புமிகு யூரியா, மற்றும் - டை - அமோனியம் பாஸ்பேட் உரங்களை மிளகாய் மற்றும் பயறு வகைப் பயிர்களுக்கு இலைமூலம் தெளிக்கும் நிலைக்கும் வேளாண்மை விரிவினைப் பணியாளர்கள் அழைத்துச் சென்று முன்னேற்றி இருக்கின்றார்கள். இரசாயன உரங்களைப் பயன்படுத்தும் அளவு நெல்லை மாவட்டத்தில் மூன்று மடங்குக்கும் மேலாகக் கடந்த 10 ஆண்டுகளில் உயர்ந்துள்ளது. உர உபயோகம் 1981-82ஆம் ஆண்டில் தழைச்சத்து 25,000 டன் மணிச்சத்து 7305 டன், சாம்பல் சத்து 2350 டன்னாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் அங்கக உரம், பசுந்தாள் உரம், இரசாயன உரம்,



இவற்றைக் கடந்து, விண்ணிலுள்ள தழைச்சத்தை மண்ணில் நிலைநிறுத்திப் பலன் காணும் வகையில் நுண்ணுயிர் உரமிடல், நீலப்பச்சைப் பாசி இடல், அஸோலாணைப் பயன்படுத்துதல், நுண்ணூட்டச் சத்துக்களை இடுதல் ஆகிய புதிய நுட்பங்களிலும் முன்னேற்றம் போற்றத் தக்க வகையில் ஏற்பட்டுள்ளது.

## மானாவாரி வேளாண்மையிலும் மலர்ச்சி

வான் மழைக்குத் தவங்கிடக்கும் வறட்சி மிகுந்த மிகுதியான



பரப்பினைக் கொண்ட மானாவாரி கரிசல் நிலங்களிலும் செவ்வல் நிலங்களிலும். வேளாண்மையை இலாபகரமானதாக ஆக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வறட்சி தாங்காத, வயது மிகுந்த, விளைச்சல் குறைந்த சிறு தானிய ரகங்களை இதர பயிர்களை அகற்றி விட்டு பயிர் மாற்றத் திட்டத்தின் மூலம் வறட்சியை வென்று விளைச்சல் குவிக்கும் வீரியச் சோளம் கோவில்பட்டி நெட்டை சி. எஸ். எச். 6 மற்றும் உயர் வள ரகம் கோ. 23 கோ. 24 ஆகியவைகளைப் பயிரிட ஆவன செய்யப் பட்டுள்ளன. கம்பு வித்துக்களில் கே. எம். 2, கே. 2, கே. 4 எச்.பி போன்ற ரகங்கள் உகந்தவையாக அமைந்துள்ளன. அமோக விளைச்சல் தரும் ஏற்றமிகு எண்ணெய் வித்து சூரியகாந்தி தனிப் பயிராகவும், ஊடுபயிராகவும், ஓரப் பயிராகவும், இடம் பிடித்து மிகுந்த பரப்பில் தனது சாம்ராஜ்யத்தை விரிவு செய்து கொண்டு வருகின்றது. பயறு வகைப் பயிர்களுக்கு மானாவாரியில் பாங்கான இடம் அளிக்கப் பட்டு, பருத்தி, சிறு தானியம் போன்ற அனைத்துப் பயிர்களிலும் ஊடுபயிராகவும், ஓரப்பயிராகவும் பயிரிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சின்னஞ்சிறிய தானியங்களான சாமை, வரகு, பனிவரகு, குதிரைவாலி போன்றவற்றிற்கும் கொத்தமல்லி, கொண்டைக் கடலை ஆகியவற்றிற்கும் புதிய உயர்வள ரகங்கள் வழங்கப்பட்டுள்ளன. மானாவாரிவேளாண்மை வெற்றி பெற புதிய உழவியல் நுட்பங்கள் புகுத்தப்பட்டுள்ளன. மழை நீரைச் சேமித்து, மண் வளம் காத்து பயிர் வளம் பெருக்கிட வகை செய்திட கோடையில் நிலத்தை உழவு செய்து வைத்தும், அகன்ற வரப்பும் ஆழக் கால்களும் அமைத்தும், அங்கக உரங்களை இட்டும், உயர்வள ரகப் பயிர்களை கொருக்கலப்பை கொண்டு வரிசையில் சீராக விதைக்கச் செய்தும், இடையுழவு கருவிகள் மூலம் பின் செய்நேர்த்திகளைச் செய்திட வழி காட்டியும், இலை மூலம் உர மூட்டியும், பக்குவமாகப் பயிர் பாதுகாப்புச் செய்தும், பயிர் வளம் பெருக்கி விளைநலன் உயர்ந்திட வகை செய்யப்பட்

பரிசுச்சீட்டு

[illegible] 3,00,000 [illegible] விற்பனையாகின்றன.

# நெல்லைச் சீமையில் ஐவகை மண்வளம்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பழந்தமிழர் நில அமைப்பினை ஐந்து வகையாகப் பிரித்தனர். இந்த ஐவகை நில அமைப்பும் கொண்ட ஒரே மாவட்டமாகத் திகழ்கிறது திருநெல்வேலி மாவட்டம்.

**குறிஞ்சி:** மலையும், மலை சார்ந்த இடமும் இது. இதற்கு எடுத்துக்காட்டு குற்றாலம்.

**முல்லை:** காடும், காடு சார்ந்த பகுதியுமாகும் இது. பாபநாசம் பகுதியிலுள்ள காடுகள் இதற்குச் சான்று.

**மருதம்:** வயலும், வயல் சார்ந்த பகுதியும் இது. நெல்லுக்கு வேலி காத்தாராம் நெல்லையப்பர், இதனாலேயே இம்மாவட்டம், திருநெல்வேலி' என்று பெயர் பெற்றதென்பர். நெல்லை, அம்பாசமுத்திரம்; திருச்செந்தூர் (வடக்கு) ஆகிய பகுதிகள் நெல்லும் கரும்பும் செழித்து வளரும் பகுதிகள்.

**நெய்தல்:** 'முத்துக் குளிப்பதொரு தென் கடலிலே' என மகாகவிபாரதி பாடிய தூத்துக்குடி, அலைமோதும் திருச்செந்தூர், மீன்பிடி தொழிலில் மேம்பட்டு விளங்கும் மணப்பாடு கிராமம் எல்லாம் நெல்லை மாவட்டத்தைச்சார்ந்தவைகளாயிற்றே கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் என்பதற்கு இது சான்று.

**பாலை:** நிலக்கூறுகெட்டு, வறண்ட மணல் பகுதி பாலை எனப்படும். தமிழகத்தில் வேறெங்கும் இல்லாத செம்மணல் பகுதியுள் 'செம்மண் தேரி' இங்கிருக்கிறது. பாலைப் பகுதி மக்களுக்கு என்னவெல்லாம் தொழிலென இலக்கணம் சொல்கிறதோ, அதெல்லாம் இப்பகுதி மக்கள் தொழிலாக உள்ளன.

டுள்ளது. இதனால் மானாவாரி வேளாண்மை மலர்ச்சி பெற்று வருகின்றது.

**ஆயிரம் ஏக்கர் பெருவிளக்கப் பண்ணைகள்**

நெல்லை மாவட்டத்தில் விவசாயம் செய்யப்படாமல் தரிசாக மண்ணரிப்புக்கும், காற்று அரிப்புக்கும் இலக்காகிக் கிடக்கும் உழவர் பெருமக்களின் நிலப் பகுதிகளை ஒருங்கிணைத்து, 10 இடங்களில் ஆயிரம் ஏக்கர் பெருவிளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. உழவர் பெருமக்களுக்கு உகந்தவண்ணம் பயிற்சி அளித்து, பொறியியல், மற்றும் வேளாண்மை விரிவினை அலுவலர்களும் இணைந்து செயல்பட்டு, தரிசு நிலங்களிலும்வெற்றிகரமாகப் பயிர் விளைக்க உழவர் பெருமக்களுக்கு இதன் மூலம் வாய்ப்பளிக்கப்படுகிறது. நிலவாகுக்கேற்ப பலனும், பயனும், தரவல்ல மர வகைகளை நட்டு வளர்க்கவும் இதில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**உழவர் பயிற்சி நிலையம்**

உழவர் பெருமக்களுக்கும் உழவர் மகளிருக்கும், உற்பத்தியை உயர்த்தவல்ல விரிவினை முறைகளைக் கற்பிக்க, பல்வேறு நிலையப் பயிற்சிகளும் வயல் வெளிகளில் செயல்முறைப் பயிற்சிகளும் உழவர் பயிற்சி நிலையம் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டு அவர்களின் ஆர்வமும், ஆற்றலும், தொழில்நுட்பத்திறனும் பெரிதும் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் அறிவியல் வேளாண்மை ஆக்கம் பெற்று வருகின்றது.

பருத்தி விளைச்சல் சிறந்திடவும், மிளகாய் மகசூல் மிகுந்திட சூரிய காந்தி போன்ற புதிய எண்ணெய் வித்துப்பயிர்கள் விளைச்சல் ஏற்றம் பெறவும், இதர பல்வேறு பயிர்களிலும் விளைச்சல் உகந்த வண்ணம் உயர்ந்து நிலைக்கவும் பல்வேறு புதிய உழவியல், பயிரியல், பயிர்க்காப்பு நுட்பங்கள் உழவர் பெருமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. உற்பத்தி உயர வகைவகையான வளர்ச்சித் திட்டங்களை வேளாண்மைத்துறை விழைவுடன் செயல்படுத்தி வருகின்றது.

**பயிற்சி வழித் தொடர்புத் திட்டம்**

வேளாண்மை விரிவாக்கப் பணியில் மேற்கூறியவாறு சிறப்பான சாதனைகளைச் செய்து வேளாண்மை வளர்ச்சிக்கும், விளை பொருள் உற்பத்திக்கும் வழி வகுத்துள்ள வேளாண்மைத் துறை, நெல்லை மாவட்டத்தில் சென்ற 1-7-82 முதல் புரட்சிகரமான புதியதொரு விரிவாக்கத் திட்டத்தைப் ''பயிற்சி வழித் தொடர்புத் திட்டம்'' என்ற பெயரில் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் விரிவாக்கப் பணி மேலும் விரிவுபடுத்தப்பட்டு உழவர் குடும்பங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அவர்களின் தொழில் நுட்பத்திறனையும் வேளாண்மை உற்பத்தித் திறனையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்தி, கிராமங்களின் மொத்த உற்பத்தியைக் கணிசமாக உயர்த்த வகை செய்யப்பட்டுள்ளது. ஆராய்ச்சியில் கண்ட அரிய முறைகள் அனைத்தும் அவ்வப்போது உழவர் பெருமக்களுக்குக் கிடைக்க இத்திட்டம் வழி வகை செய்கிறது. உழவர் பெருமக்களின் பிரச்சினைகளுக்கு இத்திட்டம் உடனே தீர்வு காண்கிறது. 'வீடு தேடி வரும் தொழில் கல்வியாக' இத்திட்டம் உழவர்களின் குடும்பங்களுக்கு உற்ற வகையில் உதவி வருகிறது.



கடந்த பத்தாண்டுகளில் ஒவ்வொரு பயிரிலும் உற்பத்தியை மிகுதியாக உயர்த்தி உன்னத சாதனங்களைப் படைத்த நெல்லை மாவட்ட வேளாண்மைத்துறை, தனது புதிய பல திட்டங்களைச் செயல்படுத்துவதின் மூலமாக, பொருநை ஆற்றைப்போல் பொதிகை மலைத் தென்றலைப்போல், குளிர் தரும் குற்றால அருவியைப்போல் பயன் தந்து, உன்னதப்பணியால் உழவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்படையத் தொடர்ந்து செயல்படும் என்பதில் ஐயமில்லை!



வறுமையை ஒழிக்க வல்லது
ஒன்றே ஒன்று தான்—
ஒழுங்கும் லட்சிய உணர்வும் கொண்ட
கடுமையான உழைப்பு.
—இந்திரா காந்தி

# சத்யமேவ ஜயதே—ச்ரமேவ ஜயதே

## (உண்மையே வெல்லும்—உழைப்பே வெல்லும்)



davp 82/492



# 34-வது குடியரசு நாள் விழா அணிவகுப்பு

சென்னை மெரினாக் கடற்கரையில் 34-வது குடியரசு நாள் விழா அணிவகுப்பு நிகழ்ச்சி 26.1.83 அன்று காலை 8 மணிக்குத் தொடங்கி, கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் வகையில் ஈடில்லாச் சிறப்புடன் நிகழ்ந்தது. ஹெலிகாப்டர் விமானம் மலர் மாரி பொழிய விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

மேதகு ஆளுநர் அவர்கள் காந்தியடிகள் சிலைஅருகே நாட்டு கொடியை ஏற்றி வைத்த பின்னர், அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

இந்த அணிவகுப்பில் தரைப் படை, கடற்படை, விமானப் படை, காவல்துறை, முன்னாள் இராணுவத்தினர், இரயில்வே பாதுகாப்புப்படை, தேசிய மாணவர் படை, தீயணைப்புப் படை, சாரணர்படை, பள்ளிக் குழந்தைகள் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு அணிவகுப்பாக ஆவடி டேங்கு பாக்டரியின் விஜயந்தா, சப்மெரின், நாட் முதலியனவும், தருமபுரி காவல் துறையினரின் காவடி - கரக ஆட்டமும், இமாசலப் பிரதேசத்தின் கலைக்குழுவும் பங்கேற்றன. அத்துடன் தேசிய ஒருமைப் பாட்டுக் கொள்கையும்புதிய இருபது அம்சத் திட்டக் கொள்கைகளையும், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டக் கொள்கையையும் விளக்கும் வகையில் அலங்கார ஊர்திகள் அமைந்திருந்தன.

இவ்விழாவில் பள்ளிச் சிறுவர் சிறுமியர் பங்கேற்ற ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் எல்லோருடைய கருத்தையும் கவர்ந்தன. வண்ண வண்ண உடைகள் உடுத்தி, இந்தியத் திருநாட்டின் பல்வேறு நாட்டிய நிகழ்ச்சிகளை மாணவியர் ஆடிவந்தது அருமையான காட்சியாகும்.

அணிவகுப்பு நிகழ்ச்சி முடிந்து, சிறுவர் சிறுமியர் ஆடல் பாடல் தொடங்கும் முன்னர் மாண்புமிகு முதல்வர் விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தாமிரப் பதக்கங்களை வழங்கினார். வீரச் செயல்கள் செய்தோருக்கு அண்ணா பதக்கங்களை வழங்கினார். தீயணைப்புப் பிரிவினர் ஏணி அமைந்த ஊர்தியை இயக்கிக் காட்டியது அனைவரையும் கவர்ந்த நிகழ்ச்சியாக விளங்கியது.



விழா இறுதியில் பல்வேறு வண்ணங்களில் பறக்கவிடப்பட்ட பலூன்கள் வானில் வண்ணக் கோலமிட்டன.

முப்பத்து நான்காவது குடியரசு நாள் விழா அணிவகுப்பு அலங்கார ஊர்திகள், ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் அனைத்தும் மிகச் சிறப்பாக அமைந்து, குடியரசு நாளின் மாட்சியை உணர்த்தின.

—மாமூலன்.



## அண்ணா வீரப் பதக்கம்

சென்னையில் நடைபெற்ற 34-வது குடியரசுநாள் (26.1.83) விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 31 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு தாமிரப்பத்திரம் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து குடியரசுநாள் விழாவன்று வழங்கப்படும் அண்ணா வீரப்பதக்கங்களை மூவருக்கு முதல்வர்வழங்கினார். வீரப் பதக்கம் பெற்றோர் விவரம் வருமாறு:-

### செல்வன் பூம்பொழிலன்

29.6.82 அன்று மாலை 5 மணியளவில் சென்னை நகரின் பீட்டர்ஸ் சாலை குடியிருப் பில் உள்ள ஒரு கிணற்றில் 5 வயதுடைய பாலாஜி என்ற சிறுவன் விழுந்துவிட்டான் இதைப் பார்த்த 15 வயதுடைய ரியாஜ் எனும் பையன் பாலாஜியைக் காப்பாற்றுவதற்காகக் கிணற்றுள் குதித்தான். இருவருக்கும் நீச்சல் தெரியாததால் உயிருக்காக கிணற்றுக்குள் போராடினர். இதனைப் பார்த்த 10-ஆம் வகுப்பு படிக்கும் பூம்பொழிலன் எனும் சிறுவன் கிணற் றினுள் குதித்து இருவரையும் காப்பாற்றினான்

### டாக்டர் பி. எ. கணிக்கர்

1979-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உதகமண்டலத்தில் வகுப்புக் கலவரம் நடை பெற்றபோது அய்யப்பன் என்பவரை ஒரு கூட்டம் தாக்கியது. இதனால் அவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படும் போல் இருந்தது. திரு. கணிக்கராஜ் எனும் ஹோமியோபதி டாக்டர் கூட்டத்தினுள் புகுந்து அய்யப்பனைக் காப்பாற்றி ஒரு காவல் நிலையத்தில் சேர்ப்பித் தார். மேலும் அவர் அய்யப்பனை சிகிச்சைக்காக உதக மண்டல அரசு மருத்துவமனைக்கு எடுத் துச் சென்று வேண்டிய உதவிகள் செய்து அவரைக் காப்பாற்றினார்.

### திரு எஸ். கலியன்

தஞ்சாவூர் மணம்புச்சாவடியில் உள்ள கேட்ல்ஸ் பாலத்தின் அருகே உள்ள நதியில் மசாக் எனும் மேல்நிலைப்பள்ளி மாணவன் 25.7.81 அன்று குளித்துக் கொண்டிருக்கும் போது, நீரில் அடித்துச் சொல்லப்பட்டான். இதைப் பார்த்த கலியன் என்னும் சிறுவன் நதியில் குதித்து, மிகுந்த சிரமத்துடன் போராடி தன்னுடைய உயிரையும் பொருட்படுத்தாது மாணவன் மசாக்கைக் காப்பாற்றினான்.






# திக்கெல்லாம் புகழ் திருநெல்வேலி



திரு நிர்மல்சிங் ஹீரா, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி.

கிராமங்கள் மிகுதியாக உள்ள நம்நாட்டில் நகரங்கள், தொழில் நகரங்கள் போன்றவைகளும் தங்களின் முக்கியத் தேவைகளான உணவு, உடை போன்ற மூலப் பொருள்களுக்குக் கிராமப்புறங்களையே பெரிதும் நம்பியிருக்கின்றன. எனவே கிராமங்கள் தான் நாட்டின் முதுகெலும்பாகும். கிராமத்தின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சியாக அமைகிறது.

கிராமங்கள் புத்துணர்ச்சியையும் புதுப்பொலிவையும் பெற்று, கிராமப்புற வாழ்வைப்பொருள் பொதிந்த விருப்பு மிகுந்த வாழ்வாக மாற்றும் திட்டமே தன்னிறைவுத் திட்டமாகும். கிராம மக்களின் வாழ்வில் புதிய வரலாற்றைத் தோற்றுவிக்கும் அடிப்படை இலட்சியத்துடன் உருவாக்கப்பட்டதுதான் இத்திட்டம்.

கிராம மக்கள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்ல சாலை வசதியில்லா கிராமங்கள், கல்வி அறிவைப் பெருக்கிக் கொள்ள வசதியில்லாத—அதாவது பள்ளிக் கட்டடம் இல்லாத சிற்றூர்கள், தாய் சேய் நலம் பேணி வளர்க்க வசதியில்லாத கட்டட மற்ற தாய்சேய் நிலையங்கள், கிராம மருத்துவக் கட்டடம் இல்லாத நிலை போன்ற இடர்ப்பாடுகளை நீக்கி கிராமங்களின் ஆதார வசதிகளைப் பெருக்கும் பணிகளே தன்னிறைவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன.

திட்டங்கள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்துக்குள் முனைந்து பணியாற்றி நிறைவேற்றப்படவேண்டும் என்ற அரசின் முடிவு இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இதுபோன்ற திட்டத்தை வேறு எந்த மாநில அரசும் மேற்கொள்ளவில்லை என்பதும், தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இதற்கு முன் இப்படியோர் திட்டம் அறிமுகப் படுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கவை

பொருநை வளமாக்கும் நெல்லைச் சீமையிலே தன்னிறைவுத் திட்டம் 1980-1981ல் 5 ஊராட்சி ஒன்றியங்களிலும் 1981-1982ல் 12 ஒன்றியங்களிலும் அரசு நிர்ணயித்த காலத்திற்கு முன்னரே செவ்வனே நிறைவேற்றப்பட்டன. இணைப்புச் சாலைகள், பாலங்கள், பள்ளிக்கட்டடங்கள் மகப்பேறு நிலையக் கட்டடங்கள் மருந்தகக் கட்டடங்கள் ஆதி திராவிடர் குடியிருப்பிலிருந்து மயானங்களுக்குச் சாலைகள் அமைத்தல் போன்ற வேலைகள் ரூபாய் 637.010 இலட்சம் செலவில் கிராம மக்கள் மன நிறைவெய்தி பூரிக்கும் நிலையில் முடிக்கப்பெற்றன. பாதுகாக்கப் பட்ட குடிநீர் வசதி 287 குடியிருப்புகளுக்கு ரூபாய் 212.630 இலட்சம் செலவில் சிறப்பாக முடிக்கப்பட்டது. ஆதி திராவிடர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் 1311, 2974 குடிசைகளுக்கு மின்னொளி வழங்கும் திட்டம் செயல் படுத்தப்பட்டது.

முதல், இரண்டாம் கட்ட தன்னிறைவுத் திட்டங்களால் பயனடைந்தோர் எண்ணிக்கை 14,07,864. அதில் ஆதி திராவிடர் மக்கள் மட்டும் 2,64,909.

மூன்றாம் கட்டமாகத் தன்னிறைவுத் திட்டம் கீழே குறிப்பிட்டுள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்த அரசு பணித்துள்ளது.

1. பாளையங்கோட்டை 2. ஆலங்குளம், 3. கீழ்ப்பாவூர், 4. கடையநல்லூர் 5. செங்கோட்டை, 6. களக்காடு, 7. பாப்பாக்குடி, 8. அம்பாசமுத்திரம், 9. ஸ்ரீவைகுண்டம் 10. ஆழ்வார்திருநகரி, 11. உடன்குடி, 12. சாத்தான்குளம், 13. வாசுதேவநல்லூர், 14. குருவிகுளம்.

செயல்படுத்தப்படவிருக்கும் திட்டங்கள் பற்றிய விவரம் வருமாறு

| வேலைகள் விவரம் | எண்ணிக்கை | மதிப்பீட்டுத்தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. இணைப்புச் சாலைகள் | 418 | 139.510 |
| 2. சிறு பாலங்கள் | 859 | 177.220 |
| 3. பள்ளிக் கட்டடங்கள் | 4 | 2.600 |
| 4. கிராம மருந்தகங்கள் | 27 | 17.550 |
| 5. மகப்பேறு நிலையங்கள் | 48 | 28.800 |
| | 1356 | 365.680 |



பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் – தருவையிலுள்ள கிராம மருந்தகம்

மேலும் கிராம மக்களுக்குக் கூடுதல் பயன் அளிக்கும் திட்டங்களாகப் பின்வரும் திட்டங்களும் நிறைவேற்றப்பட உள்ளன.

1. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி.
2. கிராமப்புற வீட்டு வசதி.
3. ஆதி திராவிட நலத்துறையினரின் சிறப்புத் திட்டம்.

மூன்றாவது கட்ட திட்டங்களினால் பயன் பெறும் மக்கள் தொகை 11,74,036. ஆதிதிராவிடர்கள் 1,87,375.

## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் கிராம வேலை வாய்ப்புகள் அளிப்பதும், தனி நபர் வருமானத்தை உயர்த்துவதும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் நோக்கங்களாகும். தனி மனிதனின் வாழ்க்கை முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு அவனை உயர்த்துவதன் மூலம் சமுதாயத்தை உயத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டதுதான் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமாகும். நலிவடைந்தோர் நலன் நாடும் இந்த நல்ல திட்டம் ஏழை விவசாயிகள், விவசாயக் கூலிகள், மற்றும் கைவினைஞர்கள் ஆகியோர்க்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

கிராம மக்களின் பொருளாதார வளங்காண வழிகோலும் இத்திட்டம், நெல்லை மாவட்டத்தில் சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டது. அரசு நிர்ணயித்த குறியீடான ரூ. 186 இலட்சங்களையும் விஞ்சி ரூ. 290.33 இலட்சங்களை அரசு மானியமாகப் பல்வேறு திட்டங்கள் மூலமாக 39,499 மக்களுக்கு வழங்கி இம்மாவட்டம் நற்பணியாற்றி சரித்திரம் படைத்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த ஆதிதிராவிடர் 14,505 பெண்கள் 13,767.

வேளாண்மை வளர்ச்சிக்கு ரூ31.34 லட்சங்களும், சிறுபாசன வளர்ச்சிக்கு 8.34 இலட்சங்களும் கால்நடை மேம்பாட்டிற்கு ரூ. 133.85 லட்சங்களும் மீன்வளம் காண ரூ.3.98 லட்சங்களும் அரசு மானியமாக இம்மாவட்டத்தில் உள்ள 145 வங்கிகள், 345 கூட்டுறவு வேளாண்மைக் கடன் வழங்கும் சங்கங்கள், 17 நில்வள வங்கிகள் ஏழை எளிய மக்களுக்கு வழங்கிய கடன்கள் மூலம் வழங்கப்பட்டிருக்கிறது.

## கிராம இளைஞர் சுய வேலை வாய்ப்பு

வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி நிற்கும் இந்நாளில் இளைஞர்களைத் தன்னம்பிக்கையுடன் எதிர்காலத்தை எதிர் நோக்கும் வகையில் வாழ வழி வகுக்க 'கிராம இளைஞர் சுய வேலை வாய்ப்புத் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது. 18 முதல் 35 வயதுக்குட்பட்ட இருபால் இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் திறமைக்கேற்ப, கிராமச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தொழில்கள் வகுக்கப்பட்டு அவர்களுக்கு அத்தொழில்களில் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களைக் கொண்டு பயிற்சியும், தொழில் செய்முறைப் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 9 வகையான பல்வேறு தொழில்களில் இளைஞர்கள் ரூ. 113.19 இலட்சம் அரசு மானிய உதவியுடன் பயிற்றுவிக்கப்படுகின்றனர். பயிற்சிக்குப் பின்னரும் அவர்கள் பயின்ற தொழிலைச் செய்து வாழ்க்கை பயன்பெற வங்கிக் கடன் உதவி பெற்று வாழ வழி வகுக்கப்படுகின்றது.

## தொழில் வளர உற்பத்தி பெருக ஆதார வசதிகளைப் பெருக்குதல்

கூட்டுறவு பால் பண்ணைகளுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கவும், கறவைக் கூடங்கள் கட்டவும், பால்பதன குளிர்நீர் சாதனங்கள் வாங்கவும், பால் விநியோகம் செய்ய



ஊர்திகள் வாங்கவும், செயற்கை முறை இனவிருத்தி செய்ய உபகரணங்கள் வாங்கவும், மண்பாண்டத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நவீன சூளைகள் கட்டவும், தொழிற் கூடங்கள் கட்டவும், நவீன இயந்திரங்கள் வாங்கவும், பொருட்களை ஏற்றி செல்ல ஊர்திகள் வாங்கவும் 50 சதவிகித மானியமாக ரூ. 28 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

சங்கரன்கோவிலில் விசைத்தறிக்கூடம், மற்றும் விசைத்தறிகள் அமைக்க அரசு ஒதுக்கீடு செய்த தொகை ரூ. 40 இலட்சத்தில் ரூ. 20 இலட்சம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியமாக வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 100 ஆதிதிராவிட வகுப்பினருக்கும், 100 இதர வகுப்பினருக்கும் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 1982-83க்கான திட்டம்

கிராமங்கள் தோறும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் கணக்கெடுப்பு எடுத்துஐந்தாண்டுகளுக்கான தொகுப்பு பொருளாதாரத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 248 இலட்சம் அரசு மானியமாகவும் ரூ. 25 இலட்சம் உபகரணங்களுக்காகச் செலவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## குழந்தைகளுக்கு நண்பகல் உணவு வழங்கும் திட்டம்

குழந்தைகளுக்கு நுண்ணறிவு வளர்ச்சி 5 முதல் 14 வயதுக்குள்ளாகவே முடிவடைந்துவிடுகிறது. எனவே நல்ல சத்துணவினை இந்தப் பருவத்தில் குழந்தைகளுக்கு ஊட்டினால் அவர்கள் வருங்காலத்தில் ஆற்றல் மிக்கவர்களாக திடகாத்திர உடலும் தெளிந்த நல்லறிவும் கொண்டவர்களாக, எண்ணியது எண்ணியவாறு முடிக்கும் திண்ணியராய்த் திகழ முடியுமென்ற அறிஞர் பெருமக்களின் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு குழந்தைகளுக்கு நண்பகல் உணவு வழங்கும் திட்டத்தினை வகுத்துச் செயலாக்க அரசு பணித்துள்ளது.

''திருநெல்வேலியுறை செல்வர் தாமே'' என்று திருஞான சம்பந்தரால் பாராட்டப்பெற்ற வள்ளல் பாங்குமனம் கொண்ட, நல்லோர் உதவி கொண்டு கிராமந்தோறும் வாடகையில்லாக் கட்டடங்கள் பெற்றும் மற்றும் உபகரணங்கள் பெற்றும் இத்திட்டத்தினைச் செயலாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் இத்திட்டத்திற்கென 1336 உணவு மையங்கள் செயல்படவும் வாழ்க்கையிலே வசதியில்லா 1,31,340 குழந்தைகள் நல்ல சத்துணவும், 'நர்சரி' கல்வி பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கென மாதம் ஒன்றுக்கு 1,103 மெட்ரிக் டன் புழுங்கல் அரிசியும், 169 மெட்ரிக் டன் துவரம் பருப்பும், 78 மெட்ரிக் டன் பாமாயிலும் செலவாகிறது.

## இலவசப் பற்பொடி திட்டம்

பல்லில் ஏற்படும் நோய், உடலின் பல பாகங்களிலும் ஏற்படும் நோய்களுக்கு ஆதாரமாக இருக்கிறது. இதனை உணராத கிராமப்புற மக்கள் பெரிதும் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள்.

எனவே, அவ்வாறான துன்பங்களிலிருந்து கிராமப்புற ஏழை எளிய மக்கள் வீட்டுச் சிறார்கள் விடுபடவெனத் தமிழக அரசு இலவசப் பற்பொடி வழங்கும் திட்டத்தைத் துவக்கியது. பண்டித நேரு பிறந்த நாளான குழந்தைகள் நாளன்று (14-11-82) இத்திட்டம்நெல்லை மாவட்டத்தில் சீரும் சிறப்புமாகத் துவக்கி வைக்கப்பட்டது.

அத்திட்டத்தின்படி - 1536 குழந்தைகள் காப்பகங்களிலும், 2838 கிராமப்புறப் பள்ளிச் சிறார்களுக்கும் இலவசப் பற்பொடி வழங்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் இதற்காக மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் பற்பொடி பாக்கெட்டுகள் 4,39,452 ஆகும்.

''எல்லோரும் வாழ வேண்டும் இன்புற்றிருக்க வேண்டும்'' என்ற ஆன்றோர்வாக்கிற்கிணங்க அரசின் திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றி அதன் பயன் உரியோருக்கு உரிய காலத்தில் உடமையாக்க இம்மாவட்டத்து அலுவலர்கள் அனைவரும் அரசின் எண்ணத்திற்கொப்ப முனைந்து செயல்படுகின்றனர். 'உரிமையை மட்டும் எண்ணிய எந்தச் சமுதாயமும் மேன்மை அடைந்ததில்லை. கடமைகளைக் கருதியவர்களே மேன்மையடைந்திருக்கிறார்கள். கடமையைச் செய்தால் உரிமை தானாக வந்து விடும்' என்ற உணர்வுள்ள நல்ல சமுதாயத்தை உருவாக்க 'பிறருடைய துன்பத்தைத் தன்னுடையதாக ஏற்றுக் கொள்வதில் எவன் இன்பமடைகிறானோ அவனே உண்மையான தொண்டன்' என்ற அறிஞர்களின் கருத்தைக் கருவாகக் கொண்டு, திருஞான சம்பந்தர் பாடியது போல் 'திக்கெல்லாம் புகழ் திருநெல்வேலி' என்ற பெயர் நிலைத்து நிற்க எழிலுறு எல்லா நலன்களும் பெற்ற மக்கள் வாழும் பகுதியாக இதனை உருவாக்க அனைவரும் பாடுபட்டு வருகிறோம்.

## அட்டையில்...

எட்டயபுரத்தில் உள்ள மகாகவி பாரதியார் பிறந்த இல்லம் இது. தொல்பொருள் ஆய்வுத் துறையின் பாதுகாப்பில் உள்ளது.

இங்கு பாரதி பயன்படுத்திய பொருள்கள்- கைத்தடி, வாள், கிளி, கிருஷ்ணன் பொம்மைகள் உள்ளன. பாரதி பற்றிய நூல்கள், அவரது வாழ்க்கைக் குறிப்புகள், தமிழ் ஆங்கிலக் கையெழுத்துப் பிரதிகள், ஆஷ் கொலை குறித்து பாரதி எழுதிய ஆங்கிலக் கடிதம் முதலியன அழகுற தொகுக்கப்பட்டுள்ளன.

மகாகவி பாரதி நூற்றாண்டு விழா நினைவாகத் தமிழக அரசு அழகுற உருவாக்கவிருக்கும் மணிமண்டப அமைப்பே, சென்னையில் நடைபெறும் சுற்றுலா வர்த்தகத் தொழில் பொருட்காட்சியில், செய்தித்துறை அரங்கின் வெளித் தோற்றமாக உருவாக்கப்பட்டுள்ளது. அதுவே இந்த இதழின் அட்டையை அலங்கரிக்கிறது. எட்டயபுரத்தில் இம்மணிமண்டபம் அமையும்



# ஆதிதிராவிடர் நலம் பெற...



திருநெல்வேலி மாவட்டத்தில் 5,12,387 ஆதிதிராவிட மக்கள் உள்ளனர். இவர்களில் பாதிக்குமேல் வறுமை நிலையிலுள்ளார்கள். வறுமை நிலையிலுள்ளவர்களுக்குப் பொருளாதார மேம்பாடு ஏற்பட வேண்டுமானால் அவர்களை நிரந்தர வருமானம் தரக்கூடிய தொழில்வகைகளில் ஈடுபடச் செய்வதேயாகும்.

தமிழ்நாடு அரசு வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தில் பொருளாதார மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டங்கள் 1980-81 முதல் ஆரம்பிக்கப்பட்டன. ஏழை ஆதிதிராவிட மக்கள் இத்திட்டங்களில் ஈடுபடச் செய்து பொருளாதார வளர்ச்சி பெற மாவட்டங்கள் தோறும் மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மாவட்டத்திலுள்ள அனைத்து வளர்ச்சிப் பணி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, அந்தந்த துறை மூலம் ஆதிதிராவிடர்கள் பலன் பெறச் செய்வதே இக்கழகத்தின் முக்கியப் பணியாகும்.

மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம் மூலம் சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் கைவினைஞர்கள் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டங்கள் ஆதிதிராவிட மக்களுக்குப் பயன் அளிக்கக் கூடிய வகைக்காக குறியீட்டுக்கடன் 'தாட்கோ' மூலம் வழங்கப்படுகிறது.

1981-82ல் 6417 பேர் பயன்பெற்றார்கள். குறியீட்டுக் கடன் ரூ 37,72,752.00 1982-83ல் 280 பேர் பயன் பெற்றார்கள். குறியீட்டுக் கடன்ரூ1,39,650.00 குறியீட்டுக் கடனாக மொத்தம் 43,21,100.00 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

1982-83ல் திருநெல்வேலி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டாரம் தேர்ந்தெடுக்கப்பட்டு தாட்கோவின் சிறப்புக் கூட்டுத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி ஓட்டப்பிடாரம் வட்டாரத்தில் ஆதிதிராவிடர்கள் மிகுதியாக வாழும் 12 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள 1000 குடும்பங்களின் மேம்பாட்டிற்கான கீழ்க்கண்ட சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

நகரப்பகுதியிலுள்ள ஆதிதிராவிடர் வறுமை நிலையிலுள்ள 500 குடும்பங்களுக்கு மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்த புள்ளி விவரங்கள் தயார் செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு துறையும் தனக்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் 18 விழுக்காடு ஆதி திராவிடர்களுக்காகச் செயல்படுத்த வேண்டுமென வலியுறுத்தும் சிறப்புக் கூட்டு இத் திட்டம் மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் நேரடி கவனத்தின் மூலம் செயல்படுகிறது

ஆதிதிராவிட மக்களுக்காகத் தனிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அச்சங்கங்கள் வளர்ச்சி பெற அதற்கு வேண்டிய மூலதனச் செலவினங்கள் மத்தியச் சிறப்புத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தின் தொழில்கள் செழிக்க தாட்கோ மானியம் வழங்கப்பட்டுள்ளது. அவை வருமாறு:

பாலையாபுரம் பாதிரியார் நெசவாளர் சங்கம், பணிக்கூடம் அமைக்க, ரூ. 1,38,000. செந்தியம்பலம் நெசவாளர் சங்கம் பணிக்கூடம் கட்ட ரூ.1,38,000. சுப்பிலாபுரம் நெசவாளர்கள் சங்கம் தறிகள் வாங்க ரூ.1,01,250. வடக்கு காரு

**எஸ். திருமலைச்சாமி**
மாவட்ட வளர்ச்சி அலுவலர்,
திருநெல்வேலி.

குரிச்சி செங்கல் மற்றும் ஓடு தொழிற் கூட்டுறவுச் சங்கம் லாரி வாங்க ரூ.2,26,000. நெசவு ஆலை, தூத்துக்குடி ரூ.5,57,000. கிராமிய நூற்பு ஆலை, புளியங்குடி ரூ.2,44,000. விசைத்தறி நிலையம் சங்கரன் கோவில் ரூ.40,00,000. பாரதியார் கூட்டுறவு நூற்பு ஆலை, எட்டயபுரம் ரூ 4,97,00,000. அருந்ததியர்களுக்குக் காலணிகள் செய்யத் தொழிற் கூடம் அமைத்தல் ரூ. 3,50,000. மாவட்ட கிராம வளர்ச்சி நிறுவன அரிசனங்களுக்கு இரண்டாவது தடவை பால் மாடுகள் வாங்க ரூ 48,30,000.

ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டி வழங்கப்பட்டுள்ள வீடுகளில் தலா இரண்டு தென்னைகள் வளர்க்க இம்மாவட்டத்தில் இவ்வாண்டு 1250 தென்னைக் கன்றுகள் நடப்பட்டுள்ளன.

ஆதிதிராவிட இளைஞர்கள் காவல்படை மற்றும் இராணுவத்தில் சேருவதற்குத் தகுதி பெற அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

போக்குவரத்துக் கழகங்கள் ஒவ்வொன்றிலும் 100 ஆதிதிராவிட மக்களை நியமனம் செய்ய 'தாட்கோ' மானியம் வழங்கியுள்ளது.

ஆதிதிராவிட மாணவ மாணவிகள் தங்கிப் படிக்க விடுதிகள் கட்டுதல், சமுதாயக்கூடங்கள் பள்ளிக்கூடங்கள் கட்டுதல், பாலர் பள்ளிகள் கட்டல், சுகாதாரப் பணியாளர்கட்கு வீடுகள் கட்டுதல் போன்ற பணிகளைக் கழகம் செய்துள்ளது.

1982-83 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் 593 அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள தலா ரூ.3250 வீதம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் 207 சதுர அடிக்குக் குறையாத பரப்பில் ரூ.4000 மதிப்புள்ள வீட்டினைத் தானே கட்டிக் கொள்ள அரசு உத்தரவிட்டுள்ளது.

## வயது வந்தோர் கல்வி

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் "வயது வந்தோர் கல்வியில் எவ்விதத் தாமதமும் நேராமல் விரைவு படுத்தப்படும்" என அறிவித்தற்கிணங்க நெல்லை மாவட்டத்தில் முதியோர் கல்விப் பணி [illegible]



## கடைசி அட்டையில்...

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோயில்களில் உள்ள நுணுக்கமான வேலைப் பாடமைந்த சிற்பங்கள் சில இச் சிறப்பிதழின் கடைசி அட்டையை அணி செய்கின்றன.

இன்னும் சில நெல்லை மாவட்டச் செய்திகள் "தமிழரசு" அடுத்த இதழில் (16-2-'83) இடம் பெறும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



குரிச்சி செங்கல் மற்றும் ஓடு தொழில் கூட்டுறவுச் சங்கம் | கட்டி வழங்கப்பட்டுள்ள வீடு களில் தலா இரண்டு தென்னை | விகள் தங்கிப் படிக்க விடுதிகள் கட்டுதல், சமுதாயக்கூடங்கள்


Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676
















# தமிழரசு




COMMISSIONER OF TAMILNADU
ARCHIVES & HISTORICAL RESEARCH
22 FEB 1983
EGMORE, MADRAS-8




பழம்பெரும் நாடக ஆசிரியர் ஏகை சிவசண்முகம் பிள்ளை,
கவிஞர் எஸ். டி. எஸ். யோகியார்,
இசைப் பாடலாசிரியர் கீவளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை,
தமிழ்த்தென்றல் திரு.வி.கல்யாணசுந்தரனார்,
வயலின் மேதை பாப்பா வெங்கட்டராமையா,
நாதசுரமேதை குளிக்கரை எஸ். பிச்சையப்பா,
பரத நாட்டிய மேதை பந்தணைநல்லூர் சொக்கலிங்கம் பிள்ளை,
நாடக ஆசிரியர் சலகை ப. கண்ணன்,
நாடக-திரைப்பட நடிகர் பி. பி. ரங்காச்சாரி,
திரைப்படத் தயாரிப்பாளர் சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பத் தேவர்,
நாடக-திரைப்பட நடிகர் கே. பி. கேசவன்,
நாடக நடிகை கோல்டன் பி. சாரதாம்பாள்,
நாடக-திரைப்பட நடிகை எம். ஆர். சந்தானலட்சுமி.
நாடக-திரைப்பட நடிகை எம். எஸ். திரௌபதி,

# வீர சாதனைக்கொரு வள்ளிராணி



இருளையும், நிழலையும் பார்த்ததும் பயந்துவிடக்கூடிய சுபாவம் குழந்தைகளுடையது. அந்த மன நிலையிலும் தன்னுயிரையும் பொருட்படுத்தாது உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் இன்னொரு உயிரையும் காப்பாற்றும் துணிவு பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியதாகும். அந்தத் துணிச்சலுக்கான வீர விருதை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்களிடமிருந்தும் (1982), இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்களிடமிருந்தும் பெறும் சிறப்பினைப் பெற்றவள் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 11 வயது சிறுமி வள்ளிராணி ஆவாள்.

1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் நாள் காலை சுமார் 9 மணி; மேகல சின்னம்பள்ளி அரசு உயர்நிலைப்பள்ளியில் இன்னும் சற்று நேரத்தில் முழு ஆண்டுத் தேர்வு துவங்க இருக்கிறது. ஆறாம் வகுப்பைச் சேர்ந்த நான்கு மாணவிகள் அந்த இடைநேரத்தில் தண்ணீர் அருந்துவதற்காக ஒரு கிணற்றில் இறங்குகிறார்கள். இவர்கள் நீர் அருந்திக் கொண்டிருக்கும்போதே தேர்வு துவங்க இருப்பதற்கான மணியோசை கேட்கிறது.

உடனே அவசர அவசரமாகப் படியேறும் அவர்களில் சாந்தி என்ற மாணவியின் பாவாடை காலில் சிக்கிக் கொள்ள, அவள் தவறி 30 அடி ஆழமுள்ள அந்தக் கிணற்றில் விழுந்து விடுகிறாள். இதைக்கண்டு திகைத்த மாணவிகளில் இருவருக்கு என்ன செய்வதென்றே தெரியாமல்-ஆபத்துக் குரலெழுப்பக்கூட மறந்து நிற்கிறார்கள். விழுந்த மாணவி தலையில் அடிபட்டு மயக்க நிலையில் கிணற்றுத் தண்ணீரில் கிடக்கின்றாள். அவளின் நெருங்கிய தோழியான வள்ளிராணிக்கு மட்டுமே நீந்தத் தெரியும். எதையும் யோசிக்காமல் அந்த வினாடியே கிணற்றுக்குள் குதித்து நீரில் மூழ்கித் தேடுகிறாள். சாந்தியின் பாவாடை கையில் சிக்க, அதைப்பிடித்து இழுத்து அவளை நீரை ஒட்டியுள்ள படிக்குக் கொண்டுசென்று படியின் மீது கிடத்துகிறாள்.

இதனிடையே மற்ற மாணவிகள் இருவரும் நிலைமையை உணர்ந்து உதவிக்குக் கூச்சல் போடுகின்றனர். இதைக்கேட்டு ஓடிவந்த ஆசிரியர்களும் மாணவர்களும் கிணற்றுக்குள் இருந்த சாந்தியையும்வள்ளிராணியையும் வெளியே கொண்டு வந்து ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெறச் செய்கின்றனர். அந்த நிலையிலும் அன்று நடந்த தேர்வுக்கு வள்ளிராணி செல்கிறாள்.

ஏழைக் குடும்பத்தைச் சேர்நத சிறு விவசாயியான சந்திரன், ரத்தினம்மாள் ஆகியோரின் ஒரே பெண் குழந்தை வள்ளிராணி எப்போதுமே தன்னுடன் பயிலும் மாணவியர்க்கு உதவும் மனப்பான்மையும் கொண்டவள். படிப்பிலும் மிகுந்த ஆர்வம் காட்டி, படித்து, பட்டம் பெற்று தான் ஒரு டாக்டர் ஆக வேண்டும் என்ற கொள்கை உள்ளவள்.

பள்ளி ஆண்டு விழாவின் போது தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு கே. இராமமூர்த்தி அவர்களால் பாராட்டப்பட்டுப் பரிசுகளும் இவளுக்கு வழங்கப்பட்டது. 1982 ஆம் ஆண்டு குடியரசு நாளில் சென்னையில் தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களது திருக்கரத்தால் வீரச்செயலுக்கான அண்ணாவீரப் பதக்கமும் ரொக்கம் ரூபாய் ஆயிரமும் வழங்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டு ஜனவரி 26 குடியரசு நாளன்று புதுடில்லியில் இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் வள்ளிராணியின் துணிவைப் பாராட்டி விருது வழங்கினார். குழந்தைகளுக்கான வீரச் செயலுக்காக இவ்வாண்டு கௌரவிக்கப்பட்ட 16 குழந்தைகளில் வள்ளிராணியும் ஒருத்தி. தற்போது வள்ளிராணி மேகல சின்னம்பள்ளி அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு பயிலுகிறாள்.

அட்டை சொல்லும் செய்தி

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு
2014
துந்துபி — மாசி 4
மலர்: 13
இதழ்: 16
16-2-1983

# தொழில்வளம் பெருக்குவோம்!



**மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்**
**திரு எஸ். திருநாவுக்கரசு**

இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, பிரான்சு ஆகிய நாடுகளில் உள்ள தொழில் பிரிவுகளை நேரில் கண்டு வரவும். தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து அங்கு நிலையாகக் குடியிராத இந்தியர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தவும் அந்நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ள நானும் தொழில் துறையின் அரசு ஆணையாளர் - செயலாளராக முன்னர் இருந்தவரும் தற்போது தமிழ்நாடு மின்னணுக் கழகத்தின் தலைவராகவும், தமிழ்நாடு பத்திரிகைக் காகிதம் - பிற காகித நிறுவனத்தின் நிருவாக இயக்குநராகவும் உள்ளவருமான திரு. சி. இராமச்சந்திரன், இ. ஆ. ப. அவர்களும், தமிழ்நாடு மேக்னசைட்டு நிருவாக இயக்குநர் திரு. எஸ். சுப்ரமணியம் அவர்களும், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களால் அனுமதிக்கப் பட்டோம்.

நான் சென்னையை விட்டு 8-6-1982-ல் புறப்பட்டு பம்பாயை அடைந்தேன். மறு நாள் பம்பாயை விட்டுப் புறப்பட்டேன், பிராங்க்ஃபர்ட், ஜூரிச், பாரிஸ், லண்டன், நியூயார்க், வாஷிங்டன், பால்டிமோர், பப்பலோ, சிக்காகோ, லாஸ் ஏஞ்சல்ஸ், டோக்கியோ, சிங்கப்பூர் ஆகிய நகர்களைச் சுற்றிப் பார்த்த பிறகு 2-7-1982 ஆம் நாளன்று நான் சென்னை வந்தடைந்தேன்.

தொடர்ந்து பயணம் மேற்கொண்டு பல இடங்களைச் சுற்றிப் பார்த்த இச்சுற்றுப் பயணம் பின்வருவனவற்றிற்குப் பெரிதும் பயனுள்ளதாக இருந்தது. அவை ; யாவன:

வளர்ச்சி பெற்ற நாடுகள் தொழில் துறையில் அடைந்துள்ள சாதனைகளை நேரில் காண்பது,

தொழில் பிரிவுகளுக்கு நேரடியாகச் சென்று அவற்றின் செயல்பாட்டினை நேரில் கண்டறிவது,

நமது மாநிலத்தில் புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளைக் கண்டு பிடிப்பது,

நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான புதிய தொழில் நுட்ப ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகளை ஆய்வது,

இந்நாடுகளில் நிலையாகக் குடியிராத இந்தியர்களை, குறிப்பாகத் தமிழர்களைச் சந்தித்தல் ;

தமிழ்நாட்டில் நிலவும் தொழில் நிலவரம் குறித்தும், எதிர்கால வளர்ச்சிக்கான நம்முடைய திட்டங்கள், வாய்ப்புகள், கடன் உதவி, சலுகைகள் பற்றிய விவரங்கள் குறித்தும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லுதல்,

தமிழ்நாட்டில் உள்ள புதிய தொழில் திட்டங்களுக்கு நிதிகளை முதலீடு செய்யவும் தொழில்நுட்ப உத்திகளை அளிக்கவும் அவர்களுக்கு ஆர்வம் ஊட்டுதல்,

நம்முடைய உற்பத்திப் பொருட்களை எங்கெல்லாம் ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன என்பது குறித்து ஆய்வு செய்தல்.



மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தின் போது மாண்புமிகு முதல்வர் (8-6-1982-இல்) வாழ்த்தி வழியனுப்பி வைக்கிறார்.

மின்னணுவியல், இரசாயனப்பொருட்கள், மருந்துப் பொருட்கள், தாள், பத்திரிகைத் தாள், கனிவளங்கள், கைத்தறி ஆகியவை போன்ற துறைகளை அறிந்து கொள்வதற்காகவும் அவற்றின் விவாதங்களில் கலந்து கொள்வதற்காகவும் அவ்விடங்களைப் பார்க்கச் சென்றேன். மாக்னசைட்டின் பயன் தொடர்பாகவும் மாக்னசைட்டின் ஏற்றுமதி தொடர்பாகவும் ஐரோப்பாவில் என்னுடைய பேச்சு வார்த்தைகளின்போது, தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனத்தின் ('டேன்மாக்') நிருவாக இயக்குநர் திரு. எஸ். சுப்ரமணியம் அவர்கள் என்னுடன் இருந்தது எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. பல்வேறு இந்தியத் தூதரகங்கள், இந்திய முதலீட்டு நிறுவனங்களின் கிளைகள், நிலையாகக் குடியிராத இந்தியர்களின் அரசுச் சார்பற்ற சில அமைப்புகள், தமிழ்ச் சங்கங்கள் ஆகியவை தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் உதவியையும் எங்களுக்கு நல்கின.

## மேற்கு ஜெர்மனி

பம்பாயிலிருந்து 9-6-'82 அன்று காலை 8.00 மணிக்கு 'ஏர்இந்தியா' விமானம் 165-ன் மூலம் புறப்பட்டேன். அன்று மாலையே 'பிராங்க்ஃபர்ட்' நகரத்திற்குப் போய்ச்சேர்ந்தேன். 10-6-'82 அன்று அங்குள்ள இந்தியத் தூதரகத்திற்குச் சென்றேன். தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்வதற்குரிய சாத்தியக் கூறுகள் குறித்தும், மேற்கு ஜெர்மானிய நிறுவனங்கள் சிலவற்றிடமிருந்து தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஏற்பாடுகள் குறித்தும் அங்குள்ள அதிகாரிகளுடன் பேசினேன். அங்கே, தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற ஆயத்த உடைகள் (ready made garments) கோடைக் கால ஆடைகள் ஆகியவற்றிற்கு அதிக வரவேற்பு இருப்பதாகச் சொன்னார்கள். பிராங்க்ஃபர்ட் நகரிலுள்ள 'இந்தியா இல்லத்தில்' கைத்திறன் பொருட்கள் கொண்ட பொருட்காட்சி ஒன்று நடைபெற்றது. அப்பொருட்காட்சிக்கு நான் சென்றபோது, தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகின்ற கைத்திறன் பொருட்களுக்கு ஐரோப்பிய நாடுகளில் நல்ல விற்பனை மதிப்பு இருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். அத்தகைய கைத்திறன் பொருட்களின் விற்பனையின் மூலம் நூறு ஆண்டுக் காலத்திற்கும் மேலாக அந்நாடுகள் இந்தியாவுடன் கொண்டிருக்கும் கலாச்சாரத் தொடர்பு, எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. நாம் விற்பனை நடவடிக்கைகளை நன்முறையில் மேம்படுத்தினால், ஜெர்மனி ஏனைய ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றிற்கு நம்முடைய கைத்தறி, கைத்திறன் பொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி கணிசமான அளவுக்கு உயரும் என்று நான் நினைக்கின்றேன்.

தமிழ்நாட்டில் கருப்புக்கல் ( Black Granite ) ஏற்றுமதி தொடர்பாகவும் தமிழ்நாட்டில் கருப்புக்கல்லை வெட்டி எடுத்து மெருகிடுகின்ற தொழில் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாகவும் பிராங்க்ஃபர்ட் நகரில் திருவாளர்கள் டாகோ கிரானைட்ஸ் நிறுவனம் ( M/s. Tako Granites ) ரெயின் என்ஜினிரிங் ( M/s. Rhein Engineering Company ) நிறுவனம் ஆகியவற்றுடன் நான் பேச்சு வார்த்தை நடத்தினேன். திருவாளர்கள் டாகோ கிரானைட்ஸ் நிறுவனம், இந்தியா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து கிரானைட்டை இறக்குமதி செய்து. ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளிலுள்ளவர்களுடைய தொழிற்சாலைகளில் அதனை வெட்டி, மெருகிட்டு, ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா,

**லண்டன் மார்க்கோனி தொலைத் தொடர்பு நிறுவன அலுவலர்களுடன்...**



கனடா முதலிய நாடுகளுக்கு விற்பனை செய்கின்றது. கச்சா கருப்புக்கல்லின் விலை கனமீட்டருக்கு 400 டாலராகும்; வெட்டி, மெருகிட்டு, வேலை நிறைவு பெற்ற கருப்புக் கல்லின் விலை, மூல விலையைப் போல் மூன்று மடங்கு ஆகும். திருவாளர்கள் டாகோ கிரானைட்ஸ் நிறுவனம், தமிழ்நாடு கனிவள நிறுவனத்திடமிருந்து (டாமின்) அதிக அளவுக்குக் கருப்புக் கற்களை இறக்குமதி செய்கின்றது, நல்ல ஆதாயம் கிடைப்பதன் காரணமாக 'டாமின்' நிறுவனம், சுமார் 50,000 சதுர மீட்டர் மெருகிட்ட கருப்புக்கல் ஓடுகளையும், 8,000 சதுர மீட்டர் மெருகிட்ட கற்களையும் தயாரிக்கக் கருப்புக் கற்களை வெட்டி எடுத்து மெருகிடும் தொழில் பிரிவு ஒன்றைச் சுமார் 3.6 கோடி ரூபாய் செலவில் நிறுவக் கருதியுள்ளது. இவற்றிற்காக, தமிழ்நாடு கனிம நிறுவனம், மேற்கு ஜெர்மனி அல்லது ஜப்பானிலிருந்து தேவையான இயந்திரங்களை வாங்க வேண்டியுள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனம், இயந்திரங்கள் வாங்குவதற்கும் கருப்புக்கற்களை வெட்டி எடுத்து மெருகிடும் தொழில் பிரிவு ஒன்றை விரைவில் தொடங்குவதற்குமான அதன் செயற்குறிப்பை முடிவு செய்ய உள்ளது. இதனால், நமது மாநிலம் வேலை நிறைவு பெற்ற கருப்புக்கல் பொருள்களை ஏற்றுமதி செய்யலாம்.

மாக்னசைட் பொருட்களை ஏற்றுமதி செய்வது குறித்து, திருவாளர்கள் கான்டி-எர்ஸ் மான் ஹீம் ( Conte-ErzMannheim நிறுவனத்துடன் நாங்கள் விவாதித்தோம். சேலத்திலிருந்து சுமார் 3,000 டன் எடையுள்ள மாக்னசைட் பொருள்களை இறக்குமதி செயது கொண்டிருந்த இந்நிறுவனம் சீனாவிலிருந்தும், கிரீஸிலிருந்தும் கிடைக்கும் மாகனசைட் பொருள்களுடன் ஒப்பிடும் போது, விலை அதிகமாக உள்ளதால் சேலத்திலிருந்து இறக்குமதி செய்வதை நிறுத்தி விட்டது. நமது உற்பத்திப் பொருட்களை இந்தியாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கான சரக்குக் கட்டணங்கள் அதிகமாக இருந்ததே, அதிக விலைக்கான காரணமாகும். நமது உற்பத்திப் பொருட்களின் விலையைக் குறைக்கக் கூடுமா என்று தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனத்தின் நிருவாக இயக்குநரை - ஆலோசிக்க -இயக்குனர்கள் குழுக் கூட்டத்தில் விவாதிக்க அறிவுறுத்தப்பட்டது. இதன் மூலம், ஜெர்மன் நாட்டு விற்பனையில் பங்கு கொண்டு அந்நியச் செலாவணியை ஈட்ட இயலும்.

**சுவிட்சர்லாந்து**

11-6-1982 அன்று மாலை 5.05 மணிக்கு பிராங்க்ஃபர்ட்டிலிருந்து புறப்பட்டு மாலை சுமார் 6.00 மணிக்கு சுவிட்சர்லாந்திலுள்ள ஜூரி என்னுமிடத்தை அடைந்தோம். பெர்ன் நகரிலுள்ள இந்தியத் தூதரகத்திலிருந்து அதிகாரி திரு பி. என். ஐயர் (நிருவாகம்) எங்களை வரவேற்றார். திருவாளர்கள் சுல்சர் சகோதரர்களின் தொழிற்சாலையில் மாக்னசைட்டைச் செய்முறைப்படுத்தும் முறையைக் காண்பதற்காக அருகிலுள்ள விண்டர்தாருக்கு 12-6-1982 அன்று சென்றேன். சுல்சர், ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 1,800 கோடி அளவிற்கு வியாபாரம் செய்யும்மிகப் பெரிய நிறுவனமாகும். நீராவி எஞ்சின்கள், டீசல் எஞ்சின்கள் கனிமத்தைச் செய்முறைப்படுத்தல், உலோகக் கனியை வெட்டியெடுத்தல்,



**ஒருமைப்பாடு என்பது அகத்தைப் பொறுத்ததே தவிர, புறத்தைப் பொறுத்ததேயல்ல. உள்ளத்தில் மாற்றம் இருந்தாக வேண்டும். அந்த உள்ளமாகிய மாற்றம் வரும் போதுதான் மனிதனுக்கு மனிதன் ஏற்றத்தாழ்வு இருக்க முடியாதென்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். உள்ளத்தில் மாற்றம் வேண்டுமானால், வாழ்க்கையிலே சமத்துவம் இருந்தாக வேண்டும்.**

முதலிய பல்வேறு துறைகளில் சாதனங்களை உருவாக்குதல், தயாரித்தல், வழங்குதல் போன்ற பல்வேறு பணிகளில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

சேலத்தில் உள்ள மாக்னசைட் சுரங்கங்களில் தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் உயர்தரமுள்ள மாக்னசைட்டையும் 8 சதம், 'சிலிகா' அடங்கிய குறைந்த தரமுள்ள மாக்னசைட்டையும் வெட்டி எடுக்கிறது. 'ரிப்ரேக்டரி' தொடர்பான காரியங்களுக்காக இந்தக் குறைந்த தரமுள்ள மாக்னசைட் பயன்படுத்தப்படுவதில்லை. தற்போது ஆண்டு ஒன்றுக்கு 35,000 டன் குறைந்த தரமுள்ள மாக்னசைட் உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்கு வரவேற்பு அதிகமானால் அதனை மேலும் வெட்டி எடுக்க வாய்ப்புண்டு. கச்சா மாக்னசைட்டில் சிலிகாவுக்கான அனைத்து நாட்டுத் தரம் சுமார் ஒரு சதவீதமாக இருக்க வேண்டும். எனவே, நாம் உற்பத்தி செய்யும் மாக்னசைட்டைப் பயனுள்ள வகையில் மேம்படுத்துவது அவசியம் என்று கருதப்பட்டுள்ளது. அதற்குத் திருவாளர்கள் சுல்ஸர் நிறுவனம் 'சுல்மாக்' என்ற ஒரு முறையை உருவாக்கியுள்ளது. சேலத்திலிருந்து சுமார் 150 டன் கச்சா மாக்னசைட் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. விண்டர்தார் என்னுமிடத்தில் உள்ள ஆலையில் இது பயனுக்கு உரியதாக்கப்பட்டது. சோதனையில் இறுதியாக வரும் மாக்னசைட்டில் 0.5 சிலிகா மட்டும்தான் உள்ளது. ஆண்டு ஒன்றிற்கு 25,000 டன் மாக்னசைட்டைச் செய்முறைப் படுத்தும் திறனுடன் ரூ.25 கோடி செலவில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. அதிக மூலதனம் தேவைப்படும் தொழிற்சாலையாக இருந்த போதிலும் இது ஆண்டு ஒன்றுக்கு 2 கோடி ரூபாய் நிகர இலாபம் ஈட்டும் 'சுல்சர்' தொழில் நுட்ப உத்தியைப் பயன்படுத்தி மாக்னசைட் ஆலை ஒன்றை அமைக்க நமது அரசும் 'டான்மாக்' நிறுவனமும் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

நான் ஜூரிச்சில் தங்கியிருந்தபோது, அம் மாநகரில் வசித்து வரும் இந்தியர் சிலரைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். தமிழ்நாட்டிலுள்ள தொழில்களில் முதலீடு செய்வதைப் பற்றியும் அவர்களுக்கு விளக்கினேன்.

அடுத்த இதழில் முடியும்



# ஊனமுற்றோருக்கு உதவுவோம்!

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்
**திருமதி கோமதி சீனிவாசன்**

ஒரு இலட்சிய சமுதாயத்தில் எல்லோருக்கும் சமவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். சமுதாயத்தில் எல்லாப் பகுதியினரும் முறையாக முன்னேறுவதற்குரிய சூழ்நிலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அதிலும் இயற்கையால் வஞ்சிக்கப்பட்ட ஊனமுற்றோர்களுக்கு உரிய வாய்ப்புகளும், முன்னுரிமைகளும், சிறப்புச் சலுகைகளும்,வழங்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் ஒருங்கிணைந்த முன்னேற்றத்தினைச் சமுதாயத்தில் நாம் காணமுடியும்.

இத்தகைய இலட்சிய சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தோடு தமிழக அரசு அயராது பாடுபட்டு வருகிறது.

கண் தெரியாதவர்கள், காது கேளாதவர்கள், கை, கால் குறைவுடையோர்கள் மனவளர்ச்சி குன்றியோர்கள், தொழுநோயால் பாதிக்கப்பட்டுக் குணமடைந்தோர்கள் ஆகிய பலவகையான ஊனமுற்றோர்களைத் தாங்கள் அறிவீர்கள். அவர்களுடைய உடலிலே குறை இருக்கலாம். ஆனால் உள்ளத்திலே குறை இல்லை. அறிவில் மற்றும் ஆற்றலில் குறையில்லை என்பதனை நாம் அறிவோம். அதையே வாழ்வுக்கு வழிகாட்டும் வள்ளுவப் பெருந்தகை,

'பொறியின்மை யார்க்கும் பழியன்று:
அறிவற்றது
ஆள்வினை இன்மை பழி''

என்று கூறுகிறார்..

அதாவது உறுப்புக் குறைவு என்பது பெரும் பழி அல்ல. பாவமும் அல்ல. ஆனால் முயற்சியின்மை தான் பெரும் பழியாகும். உடல் ஊனமுற்றோரிடத்தில் முயற்சிக்குக் குறைவே இல்லை.

இன்றைய சமுதாயம் உடல் ஊனமுற்றோரிடம் மறைந்து கிடக்கும் அறிவாற்றலை உணர வேண்டும். அவற்றை வெளிக்கொண்டு வருவதற்கு உதவ வேண்டும். நாம் அவர்களிடம் பரிவு காட்ட வேண்டியதில்லை. ஆனால் உறவுக் கரங்களை நீட்டினாலே போதும். அவர்களும் உழைப்பால் உயர வேண்டும்.

சமுதாயத்தையும் முன்னேற்றுவதற்கு அவர்களால் உதவ முடியும். தமிழக அரசைப் பொறுத்தமட்டில் அவர்களின் பிரச்சனைகளை நன்கு உணர்ந்துள்ளது.

உலக ஊனமுற்றோர் ஆண்டான 1981ல் 20 புதிய சிறப்புத் திட்டங்களைத் தீட்டி 128 லட்சம் ரூபாய்களை அவர்களின் நலனுக்காகச் செலவு செய்தது. நடப்பு ஆண்டிலும் உடல் ஊனமுற்றோர் நலனுக்காக 109 லட்சம் ரூபாய் செலவிடப்பட இருக்கிறது. 1981-82ல் மட்டும் சுமார் ஊனமுற்றோர் 44000 பேர் பயனடைந்தார்கள்.

கண் பார்வையற்றோர் பள்ளிக்கூடங்கள், காது கேளாதோர் பள்ளிக்கூடங்கள் ஆகிய சிறப்புப் பள்ளிகளின் மூலம் 4400 குழந்தைகள் கல்வி வசதி பெற்று வருகிறார்கள். மேலும் சாதாரணப் பள்ளிகளில் முதல்வகுப்பு முதல் 8வது வகுப்பு வரை கல்வி பயிலும் ஊனமுற்றோர்களுக்குப் புத்தகங்கள் வாங்குவதற்காக ஒவ்வொருவருக்கும் 25 ரூபாய் தமிழ்நாடு அரசு உதவிப் பணம் வழங்குகிறது.

இதனால் சுமார் 8000 மாணவர்கள் பயனடைகிறார்கள்.

பொதுக்கல்வி வழங்கப்படுவதோடு இவர்களுக்குத் தொழிற் கல்வியும் கற்றுத் தரப்படுகிறது. கண்பார்வை இழந்தவர்களுக்கு இயந்திரப் பணியாள், புத்தகம் கட்டுதல், நெசவுத் தொழில், சாக்கட்டி செய்தல் போன்ற பணிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. காதுகேளாதவர்களுக்குப் பொறிப்பகுதி பொருத்துபவர் ( Fitter ) மின்கம்பியாளர் (Wire man) போன்ற பணிகளில் பயிற்சி தரப்படுகிறது.

பயிற்சி பெற்ற ஊனமுற்றோரைப் பணியில் அமர்த்தும் பொருட்டு நமது தமிழக அரசு ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வரு

கிறது. இத்திட்டத்தின்கீழ் தொழில் பழகுவதற்காக ஓராண்டு நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். இந்த ஓராண்டுக் காலத்தில், மாதம் 150 ரூபாய் வீதம் அரசால் உதவிப் பணம் வழங்கப்படுகிறது. ஓராண்டு பயிற்சி முடிந்த பின், இந்த நிறுவனம் அவர்களை நிரந்தரமாகப் பணியில் அமர்த்திக் கொள்ள வேண்டும். இத்திட்டத்தின்கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 735 பேர் பயனடைந்திருக்கிறார்கள்.

மேலும் இவர்களுக்குச் சுய வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் பொருட்டுக் குறைந்த வட்டியில் வங்கிக் கடனுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. 1000 ரூபாய் என்ற வரம்புக்குட்பட்டு அரசு மானியமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கடந்த 2 ஆண்டுகளில் 10,000 பேர் பயன் பெற்றுள்ளனர். மான்யமாக நமது அரசு 25 லட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறது. ஆண்டுதோறும் சுமார் 1600 பேர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் சக்கர நாற்காலிகள், காது கேட்கும் கருவிகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

கடந்த ஆண்டு ஊனத்தினைத் தடுக்கும் நோக்குடன் திருச்சி மாவட்டத்தில் ஒரு சிறப்புத்திட்டம் செயல்படுத்தப் பட்டது. இதன்கீழ் குழந்தைகளுக்கு இளம் பிள்ளை வாதத் தடுப்பு மருந்தும், முத்தடுப்பு ஊசியும் போடப்பட்டு சுமார் 1,32,000 குழந்தைகள் ஊனம் ஏற்படாதவாறு பாதுகாக்கப்பட்டுள்ளனர். மேலும் ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டம் செயல்படுத்தப்படும் 32 திட்டப் பகுதிகளில் ஊனத்தைத் தடுக்கும் மருத்துவப் பணித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் மேலும் சுமார் 1,20,000 குழந்தைகள் என எதிர்பார்க்கப்படுகிறது.

உடல் ஊனமுற்றோர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தொழிற்கூடம் ஆரம்பிக்க இருக்கிறோம். இந்த வகைக்குத் தமிழக அரசு பரிசுச்சீட்டு வருமானத்திலிருந்து 21 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

இது தவிர, கை, கால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட ஊனமுற்றோர்க்கு மருத்துவ வசதி, கல்வி வசதி, தொழிற்பயிற்சி தவசதி, சுயவேலை வாய்ப்பு ஆகிய எல்லா வசதிகளும் ஒரே இடத்தில் வழங்கப்படுவதற்காகச் சென்னையிலும், திருச்சியிலும் 2 நிலையங்கள் ஏற்படுத்தத் தமிழக அரசு ஆய்வு செய்து வருகிறது. இதற்காக 50 லட்சம் ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஊனமுற்றோர் மறுவாழ்வு என்பது ஒரு சமுதாயப் பிரச்னை. அதனை அரசு மட்டும் முழுமையாகத் தீர்த்துவிட முடியாது. பொது மக்களும் கை கொடுத்து உதவ வேண்டும். தொழில் அதிபர்கள் ஊனமுற்ற நண்பர்களைப் பணியில் அமர்த்தி அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க மேலும் முன்வரவேண்டுமென நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். அதே போன்று வங்கிகளும், இதர நிதி நிறுவனங்களும் இவர்களுக்குத் தாராளமாகக் கடன் வழங்கி அவர்களது சுயவேலைக்கு ஊக்கமளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். நலிந்தோர் நலனில் அக்கறை கொண்டுள்ள தமிழக அரசும், பொது மக்களும் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காக மேலும் நம்மை ஈடுபடுத்திக் கொள்வோம் என்று இந்த நன்னாளில் சூளுரை ஏற்போம். ஊனமுற்ற சகோதர, சகோதரிகளுக்கு என்னுடைய சார்பிலும் அரசின் சார்பிலும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

(6-1-'83-ல் சென்னை வானொலியில் ஆற்றிய உரை).



# எல்காட்

## குவார்ட்ஸ் டிஜிட்டல் வாட்ச்

அனைத்து இந்தியாவில் பொதுத் துறையில் உள்ள மாநில மற்றும் மத்திய மின் அணு நிறுவனங்களில், தமிழ்நாடு அரசின் நிறுவனமான எல்காட்தான் முதன்முதலாக டிஜிட்டல் கைக்கடிகாரங்களைத் தயாரித்து, பெருமிதத்துடன் வெளியிட்டுள்ளது.

இந்திய சூழ்நிலைக்கேற்ப பல சிறப்பு அம்சங்கள் கொண்ட இந்தக் கைக்கடிகாரங்கள் வளர்ச்சி அடைந்த நாடுகளான ஜப்பான், ஹாங்காங் போன்ற இடங்களில் தயாரிக்கப்படும் கடிகாரங்களின் தரத்திற்கு இம்மியும் குறைந்ததல்ல.

முதல் கட்டமாக, எல்காட் நிறுவனம் 50 ஆயிரம் கடிகாரங்களை - ரூபாய் 150 இலட்சம் மதிப்புள்ளவை-தயாரிக்கும். பின்பு படிப்படியாக, உற்பத்தியைப் பெருக்கி மத்திய அரசினால் அனுமதிக்கப்பட்ட அளவான 2 இலட்சம் கடிகாரங்களைத் தயாரித்து விற்பனை செய்து ரூபாய் 6 கோடி ஈட்டத் திட்டமிட்டுள்ளது.

ரூபாய் 1 கோடி மூலதனம் செய்தால் மின் அணுத் துறையில் 312 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும். இது, நீண்ட காலமாக இருந்து வரும் சர்க்கரைத் தொழிலுடனும் (70 பேருக்கு வேலைவாய்ப்பு) பருத்தித் துணி தொழிலுடனும் (133 பேர்) ஒப்பிட்டுப் பார்த்தால் பல மடங்கு அதிகமாகும்.

எல்காட் நிறுவனம் அலுமினியம் எலக்ட்ரோலிடிக் கபாசிட்டர்ஸ், இருவழி கம்பியில்லாத் தொடர்புக் கருவி, ஆய்வு மற்றும் வளர்ச்சிக்காக, சீரிய வானொலிப் பெட்டிகள், தூக்கிச் செல்லக்கூடிய தொலைக்காட்சி பெட்டிகளைத் தயாரித்து குறுகிய காலத்திலேயே, ஈராண்டுக்குள் ரூபாய் 6 கோடி முதல் 7 கோடி வரையான பொருள் ஈட்ட முடிவு செய்துள்ளது.









# திரு.வி.க.வின் சிந்தனைகள்


திரு எஸ். டி. காசிராஜன், இ.ஆ.ப.,

இயக்குநர்

செய்தி-மக்கள் தொடர்புத் துறை.


தமிழாய்ந்த மாமுனிவர் திரு. வி. க. மனிதன் வாழும் முறைகளை உலகுக்குத் தந்தருளினார். அவைகளைத் தானே ஏற்று வாழ்ந்தும் காட்டினார். ''தமிழினைப் போல் உயர்ந்த மொழி தரணியில் வேறெங்குமில்லை. . தமிழனைப்போல் மொழிக் கொலையில் தலைசிறந்தோர் எவருளரே'' என்று அறுதியிட்டு உறுதியாக உரைக்கிறார். பண்டைத் தமிழ்மக்கள் உரை நடையில் அவருக்குப் பெரும் பற்றுண்டு. பிற மொழிக் கலப்பின்றித் தமிழ் பேசல் வேண்டும், எழுதல் வேண்டும் என்னும் ஆர்வமும் அவர்க்குண்டு. எனவே

எனினும் விதிவிலக்குகள் விதியை நிரூபிக்கின்றன என்று அறைந்து இறும்பூது எய்தியிருப்பார்.

விரல் விட்டு எண்ணக்கூடிய இப்படிச்சில விதிவிலக்குகள் நம் தமிழகத்தில் இருந்தன என்பது பெருமிதமான பழைய வரலாறுதான்.

திரு. வி. க. வின் கருத்துக்கள் ஔவையார் ஆத்தி சூடி போன்று பிஞ்சு நெஞ்சங்களில் பெரிய எண்ணங்களை விதைக்கின்றன.

"ஆக்கத் தொழிலில் ஊக்கம்
வேண்டும்
ஈரம் சுரக்கும் வீரம் வேண்டும்

தான் வட்டின்பத்தில் வெறுப்பும், தமிழ்நாட்டில் பலமுறை பிறவி தாங்கித் தொண்டு புரிவதில் விருப்பும் அவருக்கு நிகழ்ந்தன என்கிறார்.

அவரது தமிழ்க் காதல் கரையிலாதது. தமிழர்கள் தாய் மொழியில்தான் பொதுக்கூட்டங்களில் பேசுதல் வேண்டும். அயல் மொழியில் பேசுதல் கூடாது, எவரேனும் அயல்மொழியில் பேசப் புகுந்தால் அவரைத் திருத்தும் பொறுப்பைப் பொதுமக்கள் ஏற்றல் வேண்டுமென்று வலியுறுத்தி, தீர்மானங்கள் நிறைவேற்ற உதவி புரிந்து, பல்லாற்றானும் தொண்டாற்றினார். இறந்த காலத்தின் தன்மைகளைச் சரித்திரக் கண்கள் வாயிலாகவும், கற்பனா சக்தி மூலமாகவும் கண்டால், இந்தச் சூரத்தனமான பணியின் செம்மாந்த சிறப்புத் தெரியும். புத்தகம் எழுதினார், மொழிவளர வேண்டுமென்ற ஓரே உயரிய நோக்கில்தான், நல்ல கருத்துக்கள் வலம் வரவேண்டும் என்ற தீர்க்கமான எண்ணத்தில்தான். பணம் பண்ண வேண்டும் என்ற எண்ணமே கிஞ்சித்தேனும் கிடையாது.

ஆங்கில நாட்டு இலக்கிய மன்னன் என்று போற்றப்படும் டாக்டர் ஜான்சன், உயிர் பெற்று தமிழகம் வந்து தமிழ்த்தென்றலின் இச்சீரிய செயலை அறிந்திருந்தால், தான் சொன்னது, முட்டாளைத் தவிர வேறு ஒரு மனிதனும் பணத்தைத் தவிர வேறு ஒன்றிற்காகவும் எழுதுவது இல்லை என்றுதான் இயம்பியது எவ்வளவு தவறு என்று மூக்கின்மேல் விரல் வைத்து அதிசயப்பட்டிருப்பார்.



உலகொரு குலமெனும்உணர்வு
வேண்டும்"

''சிந்தனை செய்க, சிந்தனை
செய்க
எந்தப் பொருளையும் சிந்தனை
செய்க
சிந்தனை ஆய்வை உந்துதல்
உறுதி

சிந்தனை செய்க, சிந்தனை
செய்க
வளர்ச்சி என்றே உணர்ச்சியில்
படுமே''

—''வளர்ச்சியும், வாழ்வும்''

சிந்தனையில் முனைந்தால் தான் உலகம் உய்ய உரிய வழி பிறக்கும். அருளறமும் பொருளறமும் பெருகும். அறம் கொழுத்தால்தான் அகிலத்தில் அன்பும் அமைதியும் செழிக்கும், இன்பமும் இனிமையும் தவழும்; கூடி வாழும் மனித சமுதாயத்தின் ஆன்மா அறம். அறம் அழிந்தால் இந்தச் சமுதாயத்தின் கட்டுக்கோப்பே தகர்ந்து விடும். அதனால்தான் திரு. வி. க. அறத்தின் பெருமையை விரித்துரைக்கிறார்.

அறத்திற்கு அடுத்த இடம் தொண்டு. திரு. வி. க. இரண்டு கண்களெனப் போற்றியவை

அறமும் தொண்டும் ஆகும். தொண்டு செய்தால் அறம் துலங்கும். தொண்டு உள்ளம் அறச் சிந்தனை சுரக்கும் கேணி. அறம், தொண்டு இரண்டும் ஒட்டிப் பிறந்த இரட்டை வாழைகள். பிரிக்க இயலாதவை. அறவாழ்க்கையின் அடையாளமே தொண்டு தான். "தொண்டே இறைவழிபாடு. இறைபோற்றும் நிறை வழிபாடும் அதுவே.

ஆசை, பித்து இதெல்லாம் துன்பத்தை விலைக்கு வாங்குவதாகும். வருவாய்க்குத் தகுந்த வாழ்க்கை நடத்து. அதைமிஞ்சிய வாழ்வுக்கு ஆசைப்படாதே. தேவைக்கு மேல் தேவை இல்லை என்ற தத்துவம் வாழ்க்கைமுறையானால் உலக நலிவுகள் பெருமளவு நீங்கிப் போகும்.

தனி மனித ஒழுக்கம், சமுதாய ஒழுக்கம் ஆகியவற்றை வலியுறுத்துகிறார், திரு. வி.க.

கற்றபடி ஒழுகு. கற்றபடி நட. அதுதான் கல்வியின் பயன். பருவத்தே பயிர் செய் என்பார்கள். கல்விப் பயிர் செய்ய வேண்டிய பருவம் இளமைப்பருவம்.

பெற்றோரைப் போற்றி மதித்தல்-நெஞ்சில் நிலை நிறுத்த வேண்டிய போதனை இது. சான்றோரைப் போற்றி மதிக்காதவன் உலகில் வேறு எதையும் போற்றி மதிக்க அறியான். குருவும், தெய்வமும் வணக்கத்திற்குரியவர்கள். அவர்களுக்கும் முன்னர் வணங்கப்பட வேண்டியவர்கள் மாதா, பிதா என்பதை மறவாதே.

மண வாழ்க்கையில் அன்பு வேண்டும்; அன்பும் அறமும் இல்லா மணவாழ்க்கை நரக வாழ்க்கை. கணவனும், மனைவியும் உயிர், உடல் போன்று ஒன்றிடல் வேண்டும். எளிய வாழ்வு, எளிய உணவு, எளிய உடை-இவையே வாழ்க்கை வெற்றியின் ரகசியங்கள்.

போலித்துறவு வாழ்க்கை வேண்டா, இல்லறத்தோடு இயைந்து வாழ். அதுதான் வாழ்வின் சிறப்பு.

பிறர் துன்பத்தை உன் துன்பமாகக் கருது. உன் உதவிக்கரங்களை நீட்டு. துன்பச் சகதியில் சிக்கித் தவிப்போரைக் கை தூக்கிவிடு. அதுவே உனது துன்பத்தைப் போக்கிக்கொண்டதாகும்.

அன்பு, அடக்கம், உள்ள நிறை உண்மை, சுருங்கக்கூறின் திரு. வி. க. காட்டிய வாழ்க்கைப் பாதைகள், வாழ்வின் முறைகள், ஒவ்வொரு மனிதனும் பின்பற்ற



நடக்கத்தக்கவை. அவரே சிர மேற்கொண்டு வாழ்ந்து காட்டியவை. சொன்னதைச் செய்தது, செய்ததைச் சொன்னது, இதுதான் அவரின் தனிச்சிறப்பு. அப்பழுக்கற்ற வாழ்வு வாழ்ந்தவர், பலர் வாழத்தான் வாழ்ந்தவர். தன்னலம் கருதாப் பெருந்தகையாளர். அவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறிகள் சமுதாயப் பிணிகள் நீக்கிடும் அருமருந்து. மானுடம் பெற்ற பெரும் பேறு. அவர் விட்டுச் சென்றதைத் தொட்டுச் சென்றால் உலகம் உய்யும். இது நிச்சயம், நிச்சயம் நிச்சயம்.

* * * *

தமிழ்த் தென்றல் திரு.வி.க. ஓர் அறிவார்ந்த ஆன்மீகச் சிந்தனையாளர். விஞ்ஞான யுகத்தின் அறைகூவல்களுக்கு சடு கொடுத்த சன்மார்க்க நெறியாளர். அறிவையும், ஆன்மீகத்தையும் இணைத்த புதுமையாளர். பழமைக்கும், புதுமைக்கும் பாலமாகத் திகழ்ந்த பண்பாளர். அவர் பழமையில் மலர்ந்த புதுமை மலர். பழமை எனும் தாய் ஈன்ற சேய்தான் புதுமை. இன்றைய புதுமை நாளைய பழமை என்றார். பழமையின் பெயரால் அறிவை ஒதுக்குவதையும் புதுமையின் பெயரால் அறியாமைக்கு ஆளாவதையும் சாடினார். அறிவு பூர்வமான ஆன்மீகமே மனிதனைத் துன்பக் கடலிலிருந்து மீட்கவல்லது என வாதித்தார். அறிவும், ஆன்மீகமும் ஒன்றுக்கொன்று புகை அல்ல என்று பகர்ந்து, அறிவில் ஆன்மீகத்தையும் ஆன்மீகத்தில் அறிவையும் கண்டார்.

இயற்கையே ஆன்மீகத்தின் ஆன்மா. இயற்கையைப் போற்றி வணங்குவதே இறை வணக்கம். திரு. வி. க. வின் இறைக் கொள்கை பகுத்தறிவின்பாற்பட்டது. பகுத்தறிவு இல்லாத ஆன்மீகம் மூடத்தனம். ஆன்மீகம் இல்லாத பகுத்தறிவு அரக்கத்தனம். பகுத்தறிவு மூளைக்கு, ஆன்மீகம் ஆன்மாவுக்கு என்று கண்டவர் தமிழ்த் தென்றல்.

அறிவையும், ஆன்மாவையும் பக்குவப்படுத்துவதே சமயம். சமயம் என்ற வார்த்தைக்குப் பக்குவப்படுதல் என்பதே பொருள். மனிதனை மனிதனாக வாழப் பக்குவப்படுத்துவதே சமயங்களின் நோக்கும் போக்கும் ஆகும். நெறி தவறா வாழ்க்கை, நேர்மை தவறா வாழ்க்கைக்கு ஆகியவற்றுக்கு வழிகாட்டியாகச் சமயங்கள் விளங்க வேண்டும். பாதைகள் பலவானாலும் மார்க்கங்கள் வேறுபட்டாலும் நோக்கம் ஒன்றே.

திரு. வி. க. சமரச சன்மார்க்க சான்றோர். மனிதனை ஒன்றுபடுத்தும் மதமே அவரின் மதம். மதத்தின் பேரால் ரணகளங்களும் ரத்தக்களங்களும் தோன்றுவதே ஆன்மீக நெறிகளுக்கு முரண்பட்டவை. அதனால்தான் சமயங்களுக்கிடையே சமரசம் தோன்ற வேண்டுமென எண்ணினார். சமரச சன்மார்க்கமே மனிதனை ஒன்றுபடுத்த வல்லது என்று திடமாக நம்பினார். எல்லாச் சமயங்களிலும் அவர் பொது அம்சங்களைப் பார்த்தார். எல்லாத் தெய்வ வரலாறுகளிலும் பொதுத் தன்மைகளைக் கண்டார். முகமதுவின் தெய்வ ஒருமை, கிறிஸ்துவின் அன்பு, புத்தரின் தர்மம், அருகரின் அகிம்சை, கிருஷ்ணனின் நிஷ்காமியம், தட்சணாமூர்த்தியின் சாந்தம், முருகனின் அழகு எல்லாம் பொதுமை அறத்தை வேராகக் கொண்டவை என்று அவர் கண்டவை, கண்டு விண்டவை, தானே பின்பற்றியவை. சமரச சன்மார்க்கம் பாரெங்கும் பரவவேண்டுமென விழைந்தார். சமரச சன்மார்க்கம் தழைத்திட்டால் உலகெங்கும் மகாத்மா காந்தி, வள்ளலார், திருவள்ளுவர் உலா வருவர்.

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம்)

# தேவையும் சேவையும்



"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாடினார் உலக மகாகவி பாரதியார். அவர் கூற்றுக்குச் செயல் வடிவம் கொடுத்து, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள உழவர்களுக்கும், மற்றும் ஏழைத் தொழிலாளர்களுக்கும் வேண்டிய நிதி உதவி செய்து அவர்கள் வாழ்க்கை மேம்பாடடையச் செய்கிறது, திருநெல்வேலி மத்திய கூட்டுறவு வங்கி. இவ்வங்கி 12.4.1918ஆம் ஆண்டு தனது சேவைப் பணியைத் துவங்கி கடந்த 64 ஆண்டுகளாகச் செவ்வனே ஆற்றி வருகிறது.

இதன் தலைமையகம் நெல்லையில் பொருனையாற்றங்கரையில் அமைந்துள்ளது. மாவட்டம் முழுதும் 26 கிளைகளையும், பேட்டையில் தென்னிந்தியா கூட்டுறவு நூற்பாலையில் ஒரு விரிவாக்கக் கிளையையும் கொண்டு இவ்வங்கி செயல்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கூட்டுறவு இயக்கத்தின் தலைமை நிறுவனம் திருநெல்வேலி மத்திய கூட்டுறவு வங்கி. இந்த வங்கி மக்களுடைய வங்கி; மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் வங்கி. இதன் சொந்தக்காரர்கள் 950க்கு மேற்பட்ட இம்மாவட்டத்திலுள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள். இதில் பங்குகள் எடுத்துள்ள அனைத்து உறுப்பினர்களும்- ஒவ்வொரு உறுப்பினரும் எத்தனைப் பங்குகள் எடுத்துக் கொண்ட போதிலும், சம பங்குதாரர்களேயாவர். எனவே, இலாபம் கருதாது, சேவையே நோக்கமாகக்கொண்டு, எல்லோரும் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொருவரும் எல்லோருக்கும் என்ற கூட்டுறவுச்சமத்துவக்கொள்கையைச் செயல்படுத்தி, மக்களுக்குக் குறிப்பாக நலிந்த பிரிவு மக்களுக்கு மகத்தான சேவையை இந்த வங்கி ஆற்றிவருகிறது.

வழக்கமான வங்கியில் பணிகளான வைப்புகள் சேகரித்தல், வாடிக்கையாளர்களுக்கு வங்கி வசதிகள் அளித்தல் மட்டுமல்லாது, மக்களுடைய பொருளாதார மேம்பாட்டுக்கு, வாழ்க்கை வளத்துக்கு, கடன் வசதிகளை நியாயமான வட்டி விகிதத்தில் வழங்கி வருகிறது இந்த வங்கி.

இந்த வங்கி விவசாய சேவைச் சங்கங்கள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர்களுக்கு நடைமுறை மூலதனம், கூட்டுறவு நூற்பாலைகள், கூட்டுறவு நகர வங்கிகள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், பிரதமக் கூட்டுறவுப் பண்டகசாலைகள், ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், மீனவர் கூட்டுறவுச் சம்மேளனம், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கிளைகள் மூலம் நகைக் கடன் என்ற வகையில் இதுவரை வழங்கியுள்ள கடன் தொகை மொத்தம் ரூ. 1537.13 இலட்சம் ஆகும்.

வங்கியின் வைப்புகள் ஆண்டுக்கு ஆண்டு கணிசமாக வளர்ந்து வருகின்றன. தற்போது ரூ.12.00 கோடி அளவுக்கு இவ்வங்கி வைப்புத்தொகை சேகரித்துள்ளது. ஆண்டுதோறும் வைப்புநிதி அதிகரித்துவருவது மக்கள் இவ்வங்கியின்மீது கொண்டுள்ள நம்பிக்கையைப் பெரிதும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் நலத்துக்காகப் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது இந்த வங்கி.

கூட்டுறவுச் சங்கங்கள், வெறும் பொருளாதார மேம்பாட்டு நிறுவனங்கள் மட்டுமல்லாது சமூக நல மையங்களுமாகும். நெல்லை மாவட்டத்தில் திருநெல்வேலி மத்தியக்கூட்டுறவு வங்கி பல்வேறு சமூகநலப் பணிகளையும் ஆற்றி வருகிறது. அவை பின்வருமாறு:

உடல் ஊனமுற்ற சிறார்களுக்கு முடநீக்க கருவிகளை நன்கொடையாக அளித்தது. நெல்லை மருத்துவமனையின் எலும்பு



அகில இந்தியக் கூட்டுறவு வார விழாவையொட்டி உடல் ஊனமுற்ற சிறார்களுக்கு வங்கி நன்கொடை வழங்கிய முடநீக்குக் காலணிகளை நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ்.எஸ். ஜீரா, ஐ.ஏ.எஸ். அவர்கள் அளிக்கிறார்.

முறிவுச் சிகிச்சைப் பிரிவிற்குத் ( orthopaedic ) தசை இயக்கிக் கருவியை (Muscle stimulator) நன்கொடை அளித்தது. 'போலியோ' பிணியிலிருந்து சிறார்களைக் காக்க 'போலியோ' தடுப்பு ஊட்டு மருந்தை நெல்லையிலுள்ள சிறார்களுக்கு ஊட்ட குழந்தைகள் நலப் பாதுகாப்பு முகாம் நடத்தப்பட்டது. தமிழக முதல்வரின் சத்துணவுத் திட்டத்திற்கு ரூ.10000 நன்கொடை அளிக்கப்பட்டது. எட்டையபுரத்தில் நடைபெற்ற மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழாவில் கவின்மிகு அலங்கார வளைவு அமைத்து வங்கி பங்குகொண்டது. 1981 மற்றும் 1982ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அகில இந்திய கூட்டுறவு வார விழாக்களில் வங்கி ஊழியர்கள் இரத்த தானம் செய்தனர். புளியங்குடியில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட நெசவாளர்களுக்குப் புதிய தறிகள் வாங்கி தொழில் துவங்க உடனடி நிவாரணமாக ரூ. 0.60 இலட்சம் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்டு, பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்த இயலாத, புதிய கடன்களைப் பெறத் தகுதியிழந்திருந்த விவசாயப் பெருமக்களின் கடன் சுமைகளை நீக்கவும், அவர்கள் புதிய கடன்கள் பெற உதவும் வகையிலும் தமிழக அர்சு நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரை இவ்வாறு தள்ளுபடி செய்த பயிர்க் கடன்கள் ரூ. 4.34 கோடிகள் ஆகும்.

சென்ற ஆண்டு (1981-82) நெல்லல மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறிய விவ்சாயிகளுக்கு மற்றும் மிகச்சிறிய விவசாயிகளுக்கும் முறையே 25 சதவிகிதம், 33 1/3 சதவிகிதம் விலையைக் குறைத்து உரம், பூச்சிமருந்துகள் விநியோகம் செய்யப்பட்ட வகையில் தமிழக அரசு இம்மாவட்ட விவசாயிகளுக்கு அளித்த மான்யம் ரூ. 7.41 இலட்சங்கள் ஆகும்.

வேளாண்குடிப் பெருமக்களுக்குக் கடன்கள் வழங்குதலோடு அவர்கள் தேவை நிறைவு பெறா தென்பதைக் கருத்திற்கொண்டு அவர்களுடைய விளைபொருட்கட்கு நல்ல விலைகளைப்பெற்றுத் தருவதுதான் அவர்களுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகோலும் என்ற பெருநோக்கோடு, தமிழக அரசு தற்பொழுது உற்பத்தியாளர்கூட்டுறவு சங்கங்களை அமைக்கின்றது. நெல்லை மாவட்டத்தில் தற்போது கருங்குளம் மற்றும் திருவேங்கடம் பகுதிகளில் இத்தகைய உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கங்கள் அமைக்கப்படுகின்றன.

தேவைகள் முடிவுறுவதில்லை. தேவைகள் உள்ளவரை சேவையும் அவசியம்; அதிலும் இலாபநோக்கற்ற கூட்டுறவு சேவை மனிதனின் பொருளாதார மேம்பாட்டுக்கு, சமுதாய நல்வாழ்துக்கு மிக மிக அவசியம். எனவே, திருநெல்வேலி மத்தியக் கூட்டுறவு வங்கியின் கூட்டுறவு சேவை, காலமுள்ளவரை தேலவயான சேவை. அச்சேவை தொடர்கிறது.


**இரா. தங்கவேலு,**
**இணைப் பதிவாளர்/**
**தனிஅலுவலர்,**
**திருநெல்வேலி மத்தியக் கூட்டுறவு வங்கி.**




## பாங்காய் வளரும் பட்டுத்தொழில்!

திருநெல்வேலி மாவட்டத்தில் பட்டு வளர்ப்புப் பணிகள் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. பட்டு வளர்ப்புத் தொழிலைத் தீவிரப்படுத்தும் நோக்கத்தோடு, இந்த ஆண்டு 500 ஏக்கரில் புதிதாக மல்பரி பயிரிடத் திட்டமிடப்பட்டது. 1982 டிசம்பர் 328.70 ஏக்கரில் புதிதாக மல்பரி பயிரிடப்பட்டுள்ளது.

மல்பரி நடுகை செய்வதற்குப் புதுரக விரிய எம் 5 விதைக் குச்சிகள் சேலம், இராசிபுரம் ஆகிய இடங்களில் இருந்து கொண்டுவரப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 1982 டிசம்பர் வரை 101 லாரி நிறைய விதைக் குச்சிகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 210 விவசாயிகள் புதிதாக மல்பரி பயிரிட்டுள்ளனர். சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 137 இளைஞர்களுக்குப் புழு வளர்ப்பு மற்றும் பட்டு நூற்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

திட்டப்பணியின் கீழ் 45 விவசாயிகளுக்குப் புழு வளர்ப்புப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றது.

குற்றாலத்தில் உள்ள அரசு கலப்பின வித்தகத்தில் 1982 டிசம்பர் 45930 முட்டைத் தொகுதிகள் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

செங்கோட்டையில் உள்ள அரசு பட்டுப் பண்ணையில் 1982 டிசம்பர் வரை 3.06 இலட்சம் உள்நாட்டின் விதைக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு முட்டை தயாரிப்பிற்காக குற்றாலம் கலப்பின வித்தகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதே காலத்தில் 2056.360 கிலோ பட்டுக்கூடுகள் அறுவடை செய்யப்பட்டுள்ளது. 113.010 கிலோ கச்சாப் பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.





# திருநெல்வேலித் துணுக்குகள்

"ஓடி விளையாடு பாப்பா—நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா.."

என்று பாடிய தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் பிறந்த நெல்லை மாவட்ட இளைஞர்கள் விளையாட்டுத் துறையிலே பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

எனவே, 1981-82ல், 14வது பொங்கல் வார விளையாட்டுப் போட்டிகளிலும், 1981-82 குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கேற்று வெற்றிவாகை சூடிய மாணவர்களுக்கு மானியத் தொகையாக ரூ. 600 மற்றும் ரூ. 400 தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

1981-82-ல், இளமையில் தெரிந்தெடுத்தல் என்ற திட்டத்தின்படி கோவையில் நடைபெற்ற மாநில தடகளப் போட்டியில் நெல்லை மாவட்டக்குழு 'சாம்பியன்' பட்டம் பெற்றது.

பெரியார் மாவட்டத்தில் நடைபெற்ற கூடைப்பந்து போட்டியிலே நெல்லை மாவட்ட விளையாட்டுக் குழுவிற்கே வெற்றிக் கோப்பை கிட்டியது.

இந்த ஆண்டு (1982-83) மாநில அளவிலான பொங்கல் வார விளையாட்டு விழா பாளையங்கோட்டை அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்டம் கோயில்பட்டி அருகே உள்ளது பருத்தி-சிறுதானிய ஆராய்ச்சி நிலையம்.

1901ல் துவக்கப்பட்ட இந்த நிலையம் 160 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளதாகும். சோளம், கம்பு, கேழ்வரகு, பருத்தி, கோயில்பட்டி நெட்டைச் சோளம் போன்றவற்றின் விதை ஆராய்ச்சிப் பண்ணையாக இது விளங்குகிறது.

பெண்கள் 120 பேர்களும், ஆண்கள் 35 பேர்களும் அலுக்காமல் விவசாயப் பணியாற்றும் இங்கே இன்னொரு முக்கியப் பயிர் விளைச்சல் சூரியகாந்தி.

நெல்லை மாவட்டத்தில் ஓடும் 'கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக டவுன் பஸ்'களில் பெண்களுக்கே முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆண்களைப் ''பின்னால் போ, பின்னால் போ!'' என்கிறார்கள்.

நவதிருப்பதி எனப்படும் ஆழ்வார் திருநகரியில் உள்ள புளியமரம் 'உறங்காப் புளி' எனக் குறிப்பிடப்படுகிறது. எல்லாப் புளிய மரங்களும் போல இந்த மரம் இரவில் உறங்குவதில்லையாம்; அதாவது இலைகள் தூங்கி வழிவதில்லையாம்! அதனருகே உள்ள ஒரு மண்டபத்தில் 108 வைணவத் தலங்களிலும் உள்ள மூலவர் விக்கிரகங்கள் வடிக்கப்பட்டுள்ளன கல்லில்! எல்லாத் தலங்களுக்கும் செல்ல இயலாதவர்கள், இங்கே வந்து எல்லாத் தலத்தையும் கண்டு தொழலாம்!

திருநெல்வேலி நகர் வாழ் பெரும்பான்மை மக்களின் ஒரே குறை Number Dialing Telephone இன்னும் வரவில்லையே' என்பது!

திருநெல்வேலி விரைவிலேயே மாநகராட்சி ஆகலாம்; அதற்கான வாய்ப்புக் கூறுகள் தமிழக அரசால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன!

# மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே!





நாதசுர இசை என்றால் உடனே நம் நினைவுக்கு இப்போது வருபவர் காருகுறிச்சி அருணாசலம் ஆவார். நெல்லை மாவட்டத்தில் உள்ள அவர் பிறந்த காருகுறிச்சியில் மண்பாண்டத் தொழில் மேம்பட்டு வருகிறது.

இங்குள்ள காருகுறிச்சி மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவு குடிசைத்தொழில் சங்கம், 30அங்கத்தினர்களைக் கொண்டு, ரூ. 820 பங்குத்தொகையுடன் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 64 அங்கத்தினர்களைக் கொண்டு ரூ. 20,980 பங்குத்தொகையுடன் இச்சங்கம் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வருகிறது.

ஆரம்ப காலத்தில் ரூ. 10,000 செலவில் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம் ஒன்று கதர் கிராமத்தொழில் வாரியத்தின் மூலமாக ஆரம்பிக்கப்பட்டு, இச்சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு நவீன மண்பாண்ட முறைகளைப் பற்றிப் பயிற்சி அளிக்கப்பட்டது.

1968ல் கதர் கிராமத்தொழில் கமிஷன், தமிழகக் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக ரூ. 20,000 செலவில் மூலப் பொருட்கள் மற்றும் விற்பனை வசதிகள் செய்து கொடுப்பதற்காக, மாவட்ட மண்பாண்டப் பொதுப்பணி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பொதுப்பணி நிலையம் மூலம் இம்மாவட்டத்திலுள்ள மண்பாண்டக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மூலப்பொருட்கள் வழங்கியும், சங்கங்களில் உற்பத்தியாகும் பொருட்களை வாங்கி விற்பனை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. 1972ல் தமிழகக் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக ஓடு மற்றும் செங்கற்கள் உற்பத்தி நிலையம் ஒன்று ரூ. 30,000 செலவில் ஆரம்பிக்கப்பட்டு இங்குள்ள அங்கத்தினர்களுக்கு முழு நேர வேலைவாய்ப்புகள் கொடுக்கப்பட்டன.



கேரளா, செவ்வாய்ப்பேட்டை போன்ற மண்பாண்டப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வந்த வல்லுநர்களால், இப்போது இங்கே காய்கறி குளிர் பாத்திரம், கூஜாக்கள், தண்ணீர் பீப்பாய்கள், புகைபோக்கி அடுப்புகள், பொம்மைகள், பலதரப்பட்ட பூந்தொட்டிகள் இதர அலங்காரப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்பொருட்களுக்கு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. மேலும் இச்சங்கத்தில் மின்விசையினால் இயங்கும் 14 சைலா சக்கரங்கள் இயங்குகின்றன. இதற்குமுன் ரூ. 3 முதல் 7 வரை சம்பாதித்தவர்கள் தற்பொழுது சைலா சக்கரத்தின் மூலம் நவீன முறைகளைக் கையாண்டு இரட்டிப்பு உற்பத்தி செய்து பத்து ரூபாய்க்கு மேல் வருவாய் பெறுகிறார்கள்.



மேலும், 25 மெம்பர்களுக்குக் கடன் ரூ. 36,250ம், மான்யம் ரூ. 36,250ம், கொடுக்கப்பட்டுள்ளது. சங்கத்திற்குக் கதர் கிராமத்தொழில் கமிஷனும், தமிழகக் கதர் கிராமத்தொழில் வாரியமும் தேவையான நிதி உதவிகளையும் தொழில் நுட்ப ஆலோசனையும் கொடுத்து வருகிறது. இதனால் சங்கம் நன்கு வளர்ச்சியடைந்து வருகிறது.

திருநெல்வேலி மாவட்டம்-தென்காசி வட்டம் தேன்பொத்தையிலும் மண்பாண்டத்தொழில் மேம்பாடடைந்து வருகிறது. இங்குள்ள மண்பாண்டக் கூட்டுறவுச் சங்கம் 51 அங்கத்தினர்களைக் கொண்டு ரூ.1500பங்குத் தொகையுடன் துவக்கப்பட்டது. தற்பொழுது 68 அங்கத்தினர்களைக் கொண்டு மூலதனம் ரூ. 25,590 பங்குத்தொகையுடன் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது.

அங்கத்தினர்களிடம் உற்பத்தி ஆகும் மண்பாண்டங்களைச் சங்கத்தின் மூலம் நேர் முகமாகக் கொள்முதல் செய்யப்பட்டு 10 சதவீதம் இலாபத்துடன் சங்கத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இச்சங்கத்தில் உற்பத்தியாக்கும் மண்பாண்டங்கள் அனைத்தும் பெரும்பாலும் அண்டை மாநிலமாகிய கேரள வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

சங்கத்தின் வேலைவாய்ப்பினை அதிகப்படுத்தும் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு 19,500 மானியமும், 27,500 கடனும் தமிழ்நாடு கதர்கிராமத்தொழில் வாரியத்தின் மூலம் கடன் வழங்கப்பட்டது. அதன்பின் மெருகு மண்பாண்ட வேலைவாய்ப்பு அதிமாயிற்று. இச்சங்கம் தமிழகத்தில் மெருகு மண்பாண்டத்தைக் கூட்டுறவுத்துறை மூலம் உற்பத்தி செய்வதில் முதன்மை பெற்றது ஆகும். மெருகு மண்பாண்டப் பிரிவில் இங்கு சுமார் 30 தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள்.

மெருகு மண்பாண்டத்தில் ஜாடிகள், கிண்ணங்கள், பொம்மைகள் மற்றும் இந்திய கழிவுரைக் கோப்பைகள் போன்றவைகள் உற்பத்தி செய்யப்பட்டுப் பெரும்பான்மைக் கதர் அங்காடி மற்றும் சர்வோதய சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இச் சங்கம் 1981-82ஆம் ஆண்டில் 5,34,000 ரூபாய்க்கு விற்பனை செய்து ரூ. 27,208க்கு நிகர லாபம் சட்டி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தேன்பொத்தை சங்கம், கடந்த 1980-81, 1981-82. இரண்டாண்டுகளிலும் தமிழகத்தில் தலைசிறந்த மண்பாண்டக் கூட்டுறவுச் சங்கம் என்று கருதப்பட்டும், இரண்டாண்டாக, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் கேடயம் பெற்றும் வநதுள்ளது.

இச்சங்கத்திற்குத் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் மூலம் 33 அங்கத்தினர்களுக்கு ரூ. 37,000 மானியமும், ரூ. 70,200 கடனும், தரப்பட்டுள்ளது. மேலும் அங்கத்தினர்கள் ஐந்து பேருக்குச் சைலா சக்கரமும் இங்கே வழங்கப்பட்டு உள்ளது.

சங்கத்திற்கு மொத்தத்தில் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் மூலம் ரூ. 1,56,703 மானியமும் ரூ. 3,98,295 கடனும் வழங்கப்பட்டுள்ளது.



நெல்லைப் பகுதியில் மட்டுமே சிறப்புற்றிருக்கும் பூவிலாச்சுண்டன் என்ற வாழை, பூ இல்லாமலே காய்க்கும் என்கிறார்கள்:

அலைமோதா சமுத்திரங்கள் ஐந்துள்ளன நெல்லை மாவட்டத்தில். அம்பா சமுத்திரம், கோபால சமுத்திரம், வடமலை சமுத்திரம், இரவண சமுத்திரம், ரெங்க சமுத்திரம் ஆகியவையே அவை!

—ராஜூ

## நெல்லை மாவட்டச் சிறப்புகள்!

தஞ்சை மாவட்டத்தில் கோயில்கள் அதிகமிருக்கலாம்; ஆனால் சிற்பச் சிறப்பு மிக்க கிருஷ்ணாபுரம், கழுகுமலை, தென்காசி, திருமலாபுரம் ஆகியவை நெல்லை மாவட்டத்திலேதான் இருக்கின்றன!

தூத்துக்குடி உப்பில் பெரும்பகுதி ஜப்பான் நாட்டுக்கு ஏற்றுமதியாகிறது!

கருங்குளம் என்ற கிராமத்தில் உள்ள பெருமாள் கோயில், எல்லாச் சமயத்தினரும் வழிபடுவதாக இருக்கிறது!

கைலாசமும், வைகுண்டமும் இங்குள்ளன. ஆம்; கங்கைகொண்டானில் கைலாசநாதரும், ஸ்ரீ வைகுண்டத்தில் வைகுந்த நாதரும் இந்த மாவட்டத்திலேதான் மும்மூர்த்திகளாக விளங்குகிறார்கள்.



# நெல்லையின் ஜீவநதி



திருநெல்வேலி மாவட்டத்தின் ஜீவநதியாக அமைந்துள்ளது தாமிரபரணி நதியாகும். நெல் விளையும் பழனங்கள் சூழ்ந்த பகுதியானதால் திருநெல்வேலி எனப் பெயர் பெற்றது. அப்பெயர் காரணத்திற்கும் மூலமாய் அடைந்தது, தாமிரபரணியே.

தாமிர வண்ணப் படுகைப் பரப்பினைக் கொண்ட காரணத்தினால் தாமிரபரணி என்றாயிற்று எனக் கூறுவர். இந்நதியின் பண்டைப் பெயர்தான் பொருநை என்பதாகும். 'தண் பொருநை' என்னும் சொல்லே தாம் பொருணி, தாம்பரணி, தாமிரபரணி என மருவிற்று எனக் கொள்ளுதலே ஏற்ற விளக்கமாகும்.

தமிழ்மொழி தோன்றிய இடம் பொதிகை என்பர். அகஸ்திய கூடமலை என்பதும் அதுவே. பொதிகை மலையினின்றும் உற்பத்தியாகி 75 மைல் ஓடி புன்னைக்காயல் என்னுமிடத்தில் மன்னார் வளைகுடாவில் கலக்கிறது. தாமிரபரணியும் அதன் கிளை நதிகளும் 1750 சதுர மைல் பரப்பின் வடிநீரை ஏந்தி வரும். திருநெல்வேலி மாவட்டத்தின் நடுவாய் அமைந்துள்ள இந்நதி இருமருங்கினையும் வளமுறச் செய்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலையினின்றும் உற்பத்தியாகின்ற காரணத்தால் தென்மேற்குப் பருவமழையும் இந்நதிக்குப் பயன்தரும். வடகிழக்குப் பருவமழையே மிகுதி பலன் தருவது.

காட்டுப் பகுதியில் பேயாறு, வெள்ளாறு, காரையாறு, சேர்வலாறு, பாம்பாறு என்பன தாமிரபரணியுடன் சேர்கின்றன. மணிமுத்தாறு ஓர் முக்கிய கிளை நதியாகும். இராமநதி, ஜம்புநதி, கடனாநதி ஆகியவை ஒன்றாக இணைந்து வராகநதியென இணைகிறது. பச்சையாறு தருவைக்கருகே தாமிரபரணியில் கலக்கிறது. தாமிரபரணியின் பிரதான கிளை சிற்றாறு ஆகும். சுற்றுலாச் சிறப்புமிகு குற்றாலம் மலைகளில் உற்பத்தியாகி 17 அணைக்கட்டுகள் மூலம் இருபக்க நிலங்களுக்கும் பாசனமளித்துப் பின் சீவலப்பேரியில் தாமிரபரணியில் கலக்கிறது.

கார் காலத்தில் பலன்தரும் பயிர் கார் பயிர் எனப்படுகிறது. தென்மேற்குப் பருவமழையினால் கார் பருவம் வளம் பெறும். வடகிழக்குப் பருவமழைப் பயனால் ஏற்றப் பெறும் பயிர் பாசனம் எனப்படுகிறது. பின் பனிப் பாசனம், பிசானம் என மருவிற்றாதல்வேண்டும்

மழைக் காலங்களில் வீணாகும் தண்ணீரைத் தேக்கி மின்சார உற்பத்திக்கும் பாசனத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது. 5,500 மில்லியன் கன அடி கொள்ளளவினைக் கொண்ட பாபநாசம் அணை 1944-ல் செயல்படத் துவங்கிற்று. இதற்குத் துணையாய் 1225 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட சேர்வலாறு நீர்த்தேக்கத் திட்டமும் செயல்பாட்டில் உள்ளது. பாசனத்திற்கென்றே ஏற்படுத்தியுள்ள நீர்த்தேக்கம் மணிமுத்தாறு ஆகும். இஃது 1957-ல் நிறைவுற்றது. இதன் கொள்ளளவு 5511 மில்லியன் கன அடியாகும். மணிமுத்தாறு நீர் வீழ்ச்சியும், பூங்கா முதலிய அமைப்புகளும் உல்லாசப் பயணிகளைக் கவரும் சிறப்பின. 350 மில்லியன் கன அடிக் கொள்ளளவு கொண்ட கடனா நீர்த்தேக்கமும், 182 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட இராமநதி நீர்த்தேக்கமும் பாசனத்திற்கேற்ப அமைக்கப் பெற்றுள்ளன.

தாமிரபரணி நதியின் குறுக்கே கட்டப்பெற்றுள்ள எட்டு அணைக்கட்டுகள் மூலம் கால்வாய்களும் கால்வாய்கள் மூலம் குளங்களும் பாசனம் பெறும் கடைசி அணை ஸ்ரீவைகுண்டம் அணையாகும். அதற்கு மேல் உள்ள ஏழு அணைகளும் பாறைகள் மேல் கட்டப்பெற்றுள்ள பழைய அணைகளாகும். மருதூர் அணைக் கட்டு வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும்.

தாமிரபரணியாற்றின் எட்டு அணைக்கட்டுகள் மூலம் 86,000 ஏக்கர் நன்செய் நிலம் பயன் பெறுகிறது. மணிமுத்தாறு கால்வாய் மூலம் 22,800 ஏக்கர் பயன் பெறும். மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தின் 80 அடி மட்டத்தில் மணிமுத்தாறு தலைவாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. மிகுதியும் நெற்பயிர்தான் பயிர் செய்யப்படுகிறது. 5% பகுதிகளில் வாழை வெற்றிலை போன்ற பணப் பயிர்களும் பயிரிடப்படுகின்றன.

தூத்துக்குடித் துறைமுகம் விருத்தி செய்யப்பட்டதனைத் தொடர்ந்து தொழில் விருத்தி மிகவும் முன்னேறி வருகிறது. ஸ்பிக் உரத்தொழிற்சாலை அனல் மின்உற்பத்தி நிலையம் மற்றும் பல தொழிற்சாலைகள் ஏற்படுத்தப் பெற்றுள்ளன. இத்தொழில் வளத்திற்கும் தாமிரபரணி உறுதுணை புரிகிறது. நாடோறும் 20 மில்லியன் காலன் தண்ணீர் விடப்படுகிறது.

மக்கள் பெருக்கத்திற்கேற்ப உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுவது இன்றியமையாததாகும். ஆகவே, தாமிரபரணியாற்றின் அனைத்துக் கால்வாய்களையும் லைனிங் செய்து, அதனால் மிச்சமாகும் தண்ணீரைப் பயன்படுத்தி பாசனப் பரப்பினைப் பெருக்குவதோடு தொழில் வளர்ச்சிக்கும் உதவ முடியும்.

# ஆதிதிராவிடர் நலத்துக்கு அரசு ஆற்றிவரும் பணிகள்




ஆதி திராவிடர் நலத்துக்கு அரசு ஆற்றி வருகின்ற பணிகள் பலப்பல. கல்வி, வீடு, வேலை இப்படிப் பலவேறு துறைகளில் அவர்களுக்கு உதவிகளும், சலுகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆதி திராவிட மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக, நெல்லை மாவட்டத்தில் ஆதி திராவிட நலத் துறையினரால் கல்விக் கூடங்கள், விடுதிகள் ஆகியவை நடத்தப்படுகின்றன.

மேல்நிலைப்பள்ளி—1 பயன் பெறுவோர் 650 மாணவர். இதே போல 21 ஆரம்பப்பள்ளிகளில் 2,553 மாணவரும், 2 ஓராசிரியர் பள்ளியில் 109 மாணவரும், ஒரு மலைவாழ் மக்கள் உண்டுறைப் பள்ளியில் 69 மாணவர்களும் பயன்பெறுகிறார்கள்.

இரண்டு அரசு கல்லூரி மாணவர் விடுதிகளில் 80 பேரும், ஒரு அரசு கல்லூரி மகளிர் விடுதியில் 50 பேரும், 40 அரசு மாணவர் விடுதிகளில் 1,178 பேரும் 25 அரசு மகளிர் விடுதிகளில் 1095 பேரும் உள்ளனர். தனியார் கட்டடத்தில் இயங்கும் 22 அரசு மகளிர் விடுதிகளில், 15 அரசு மகளிர் விடுதிகளுக்கு அரசு கட்டடம் கட்டிட நிலம் தாட்கோவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 7 இடங்களுக்கு நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை தொடரப்பட்டுள்ளது.

இம்மாணவர்கட்குத் தேவையான பாடப்புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும், கரும் பலகைகளும் ஆண்டுதோறும் இரண்டு இணை சீருடைகளும் உரிய காலத்தில் வழங்கப்பட்டு விட்டன.

முதலமைச்சர் குழந்தைகள் இலவசச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் இம் மாவட்டத்தில் ஆதி திராவிட நலத்துறையினரால் நடத்தப்படும் 25 பள்ளிகளிலும் அனைத்து மாணவர்களுக்கும் சத்துணவு வழங்கப்படுகின்றன.

பயன் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 2760. இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ. 85,000.

தமிழக அரசின் ஆணைப்படி, ஆதி திராவிட மாணவர் மாணவியர்க்கு உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படுகின்றன.

இதுவரை பயன்பெற்ற மாணவர்கள் 2,82,000. தொகை ரூ. 2.5 கோடி. இவ்வாண்டு ஒதுக்கீடு ரூபாய் 37,40,000 செலவினங்கள் ரூபாய் 14,00,480.

தீண்டாமை ஒழிப்பில் சிறந்து விளங்கும் கிராமங்களுக்குப் பரிசு என்ற வகையில் 28 கிராமங்கள் பயன் பெற்றுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஒரு வட்டத்திற்கு ஒரு வானொலிப் பெட்டி என்ற வகையில், சுத்தமாகப் பராமரிக்கப்பட்ட ஆதிதிராவிடர் காலனிகளுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்கல் மூலம் 178 கிராமங்கள் பயன்பெற்றுள்ளன. கலப்புத் திருமணத் தம்பதியர்க்குப் பரிசு என்ற வகையில் 46 தம்பதியர் பயன்பெற்றுள்ளனர். ஒவ்வொருவருக்கும் திருமணச் செலவுத் தொகை மற்றும் தங்கப்பதக்கம், பாராட்டுப்பத்திரம் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை இம்மாவட்டத்தில் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பட்டாக்கள் 19830. இம் மனைகளில் கட்டப்பட்ட வீடுகள் 12237 இதுவரை நிலம் கையகம் செய்திட செலவிடப்பட்ட தொகை 41.07 இலட்சம் ரூபாய்

ஆதி திராவிடர்களுக்கு காலாட்படை - காவலர் படையில் சேர்ந்திடத் தக்க உடல், உள்ள வலு அளித்திட 115 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 27.12.82 முதல் 24.2.83 வரை இப் பயிற்சி முகாம் மாவட்ட முன்னாள் இராணுவ வீரர்கள் நல இணை இயக்குநர் அவர்களால் நடத்திட இருக்கிறது. இதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 63,300.

1981-82ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 72 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, 65 மாணவர்கள் தேர்வு பெற்றனர். இவர்களில் 40 பேர் தற்பொழுது இந்திய விமானப்படையில் பணிபுரிகின்றனர்.

ஆதி திராவிட மக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைய நெல்லை மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தில் 12 கிராமங்களிலுள்ள பொருளாதார முன்னேற்றம் 925 ஆதி திராவிட குடியிருப்புகள் தேர்வு செய்யப்பட்டு, இவர்களுக்குப் பொருளாதார முன்னேற்றம் செய்திட திட்டங்கள் 1982-1983ஆம் நிதியாண்டில் ''தாட்கோ'வினரால் செயல்படுத்தப்பட உள்ளது.

மேலும் பல துறைகளிலும், இந்தியப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தில் 7வது அம்சத்தின்படி ஆதி திராவிட மக்கள் முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்கள் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**சே. பொ. சீனிவாசன்**
**மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்,**
**திருநெல்வேலி**



# கைத்தறி மறுமலர்ச்சி

தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஆடையை மேல் நாட்டவரெல்லாம் விரும்பி வாங்கிக் கொண்டனர் என்பது வரலாறு. ஆலைகளின் போட்டி அதிகரித்துள்ள இக்காலத்திலும், கைத்தறியால் நெசவு செய்யப்பட்ட ஆடைகள் அயல் நாட்டவரும் விரும்பும் வண்ணம் தமிழ்நாட்டு நெசவாளர்களால் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

நம் நாட்டில் இன்று இயங்கி வரும் சுமார் 36 இலட்சம் தறிகளில், தமிழ்நாட்டில் மட்டும் 5.6 இலட்சம் தறிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தத் தறிகளை நம்பி சுமார் 30 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அதில் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் சுமார் 48,000 தறிகளை நம்பி 2.50 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அரசு கைத்தறி நெசவுத் தொழிலைப் பாதுகாக்கப் பல திட்டங்களைக் கொண்டு வந்தது.

இதனடிப்படையில் - நெசவாளர்களை ஒருங்கிணைத்துக் கூட்டுறவின் அடிப்படையில் நெசவாளர்கள் சங்கங்கள் அமைத்து அரசு பல வகைகளில் உதவி புரிந்து வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் 17,300 தறிகள் கொண்ட 106 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தற்பொழுது இயங்கி வருகின்றன.

நெசவாளர்கள் நலிந்த சமூகத்தினராக இருப்பதால் அவர்கள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினராகச் சேருவதற்கு 90 சதவிகிதம் பங்குத் தொகை கடனாக அரசு வழங்குகிறது. சேரும் நெசவாளர்கள் தாழ்த்தப்பட்ட பிரிவினராக இருந்தால் 10 சதவிகித தொகையையும் இரண்டு சம தவணைகளில் கட்டினால் போதும். மேலும் ஆண்டு தொட்டே குழித்தறிகளில் நெசவு செய்து வரும் நெசவாளர்களின் வசதியை முன்னிட்டு சட்டக் கூட்டுத்தறி வாங்குவதற்கு அரசு ரூ. 2500 வரை நிதியுதவி, மூன்றில் ஒரு பங்கு மானியமாகவும், மீதி கடன் என்ற அடிப்படையிலும் ஒரு நபருக்கு வழங்குகிறது. இந்த நிதியுதவி பாலியஸ்டர் மற்றும், நவீன ஏற்றுமதி ரகங்கள் உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கு அச்சு, விழுது வாங்கவும் அளிக்கப்படுகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உற்பத்திக்குத் தேவைப்பட்ட த்ரமான நூல், எந்த நெருக்கடியான நிலையிலும் தகுந்த விலையில் தட்டுப்பாடின்றிக் கிடைக்க அதற்காகவே நிறுவப்பட்ட 12 கூட்டுறவு நூற்பாலையிலிருந்து பெற்று தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகிக்கப்படுகின்றது. இவ்வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் 75,000 கதிர்கள் கொண்ட இரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. மேலும் எட்டயபுரத்தில் ஒரு ஆலை ஆரம்பிக்கப்பட்டு பாலியஸ்டர் ரக நூல்கள்போன்ற பருத்தி நூலில்லாத நூல் உற்பத்தி செய்வதற்கு வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதே போல் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் சரக்குகள் தேக்கமின்றி விற்பனையாகத் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் கொள்முதல் செய்து சங்கங்கள் தொடர்ந்து தொழில் புரிய ஏற்பாடு செய்கிறது. அது தவிர மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் சங்கங்களில் தேங்கியுள்ள சரக்குகளைப் பண்டிகைக் காலங்களில் விற்பனை செய்ய 10 சதம் முதல் 20 சதம் வரை தள்ளுபடி மானியம் அளித்து உதவுகிறது. ஆண்டுக்கொரு முறை கைத்தறி வார விழா நடத்தி விற்பனை செய்யவும் தமிழ்நாடு அரசு தள்ளுபடி மானியம் அளித்து உதவுகிறது. இதனால் நெசவாளர்கள் ஒழுங்கான முறையில் சங்கத்திலிருந்து நூலும் கூலியும் பெற்றுத் தொழில் புரிய வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும் தற்கால நாகரிகத்தை ஒட்டி அனைவரும் விரும்பும் பாலியஸ்டர் ரகம் கைத்தறித்துணியினால் உற்பத்தி செய்யப்பட்டு ஆலைத் துணியையும் மிஞ்சும் வகையில் போட்டியில் வெற்றி பெற்றுள்ளது. மேலும் 'காஞ்சீனா' என்ற ஒரு வகைப் பட்டுத் துணியும், கைத்தறியில் உற்பத்தி செய்யப்பட்டு அதற்கு மக்களிடத்தில் அமோக வரவேற்பு ஏற்பட்டுள்ளது.

தற்கால நாகரிகத்திற்காக 'டிசைன்' தயாரித்து நெசவாளர்களைப் பயிற்றுவிக்க, இம்மாவட்டத்தில் கடையநல்லூரில் ஒரு 'டிசைன் சென்ட'ரும் செயல்படுகிறது. மேலும் தரமான முறையில் சாயம் பிடிக்க தமிழ்நாட்டில் 8 சாயச் சாலைகள் நிறுவப்பட்டு அதில் ஒன்று திருநெல்வேலியில் செயல்பட்டு வருகின்றது.

பெருமளவில் நெசவாளர்கள் தறியில்லாமலும், அதனால் தனிப்பட்ட முதலாளிகளிடம் நெசவு செய்து கூலிகளாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களை விடுவிக்கும் பொருட்டுத் தொழிற்கூட அடிப்படையில், தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகம் முழுவதும் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தத் தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 100 முதல் 150 தறியில்லாத நெசவாளர்கள் ஒரு சங்கத்தில் வேலை வாய்ப்புப் பெற முடிகின்றது. இவ்வித நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்க ஒரு சங்கத்திற்கு அரசு ரூ. 4 இலட்சம் முதல் 6.50 இலட்சம் வரையிலும் கடனாகவும், மானியமாகவும் கொடுத்து உதவுகிறது. இவ்வகையில் திருநெல்வேலி சரகத்தில் 30 சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் 4 சங்கங்கள் ஆதி திராவிடர்களுக்கென்றே அமைக்கப்பட்டவை.

வீடில்லாத நெசவாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டம் ஒன்று ஏற்படுத்தி, அதன் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் 100 வீடுகள் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டன.

தற்போது கட்டப்படவிருக்கும் வீடுகளுக்கு வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக ஒரு வீட்டிற்கு அதிகபட்சம் தொகையாக ரூ. 12,000 கடனாகவும், தமிழக அரசு மானியமாக வீடு ஒன்றுக்கு ரூ. 1000 மான்யமும் வழங்குகிறது.

இப்பொழுது தமிழகத்திலுள்ள 5.6 இலட்சம் தறிகளில் சுமார் 3.15 இலட்சம் தறிகள் கூட்டுறவின் கீழ் செயல்பட்டுவருகின்றன.



# மன நிறைவு தரும் மகத்தான திட்டம்

கிராமத்தின் வளர்ச்சிதான் நாட்டின் வளர்ச்சியாகும். குடிநீர் வசதி, சாலைகள், பள்ளிக் கட்டடங்கள், மகப்பேறு நிலையங்கள், மருந்தகங்கள், ஆதி திராவிட மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், மேம்படுத்தப்பட்ட சிறுபாசன ஆதாரங்கள், குடிசைகளுக்கு மின்னொளி ஆகியவை முழுமையாகவும், விரைவாகவும் கிடைக்க வகை செய்வதற்காகத் தமிழக அரசு தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

இதுபோன்ற திட்டம் மாநில அளவில் எந்த மாநில அரசும் மேற்கொள்ளவில்லை என்பதும் தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இதற்கு முன் அறிமுகப்படுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கவை

## திட்டத்தின் கரு

தனி மனிதனின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு அவனை உயர்த்துவதன் மூலம், சமுதாயத்தை உயர்த்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தையும் விஞ்சியது இத்திட்டம்; அது மட்டுமல்ல, கிராம மக்களின் எல்லாப் பிரிவினருக்கும் நல்வாழ்வு ஏற்படுத்தி அவர்களின் அடிப்படைத் தேவைகளை தீர்ப்பதன் மூலம் சமுதாயத்தை முன்னேற்றமடையச் செய்வதே இத்திட்டத்தின் கருவாகும்.

பொருநை நதி வளமாக்கும், முல்லைத்தமிழ் பேசும் நெல்லை, மாவட்டத்திலே, தன்னிறைவுத் திட்டம் சென்ற 1980-81-ல் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப்பட்டது. இந்தப் பகுதி ஊராட்சி ஒன்றிய மக்களின் ஆதாரமான வசதிகளான இணைப்புச் சாலைகள், பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், மகப்பேறு நிலையக் கட்டடங்கள், மருந்தகக் கட்டடங்கள், ஆதி திராவிடர்கள் குடியிருப்பிலிருந்து மயானங்களுக்குச் சாலைகள் அமைத்தல் போன்ற 623 வேலைகள் ரூ. 129.06 இலட்சங்கள் செலவில் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பெற்றன.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, கிராமங்களில் வாழும் நலிந்த பிரிவினரான ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டுதல், குடிசைகளுக்கு மின்னொளி ஆகிய திட்டங்களும் உரிய அரசுத் துறையினரால் ரூ. 106.461 இலட்சங்கள் செலவில் செவ்வனே முடிக்கப் பெற்றன.

இரண்டாம் கட்டமாக 1981-82ல் நாங்குநேரி, வள்ளியூர், ராதாபுரம், சேரன்மாதேவி, கடையம், மானூர், தென்காசி, கோவில்பட்டி, கயத்தாறு, மேலநீலித நல்லூர், தூத்துக்குடி திருச்செந்தூர் ஆகிய 12ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தன்னிறைவுத் திட்டம் சிறப்பாகச் செயலாக்கப்பட்டது.

இதன் மூலம் இணைப்புச் சாலைகள், சிறுபாலங்கள், ஆதி திராவிடர் குடியிருப்பிலிருந்து மயானப் பாதைகள் அமைத்தல் பள்ளிக் கட்டடங்கள், சிறுபாசன வேலைகள், கிராம மருந்தகங்கள் மகப்பேறு நிலையங்கள் அமைத்தல் போன்ற வேலைகள் நிறைவேற்றப்பட்டன. மேலும், குடிநீர் வழங்கும் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினராலும், கிராம மக்களுக்கு வீட்டுவசதி செய்தல், ஊரகக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலமும், ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு, மயானங்களுக்குச் சாலை அமைக்கும் பணி ஆதி திராவிடர் நலத்துறையினராலும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டன.

மூன்றாம் கட்டமாக 1982-83 இல் 14 ஊராட்சி ஒன்றியங்களில் - அதாவது, 1 குருவிகுளம், 2. வாசுதேவநல்லூர், 3. அம்பாசமுத்திரம், 4. பாப்பக்குடி, 5. களக்காடு, 6. ஆலங்குளம், 7. கடையநல்லூர், 8. கீழப்பாவூர், 9. பாளையங்கோட்டை 10. செங்கோட்டை. 11. ஆழ்வார்த் திருநகரி, 12. சாத்தான்குளம், 13. திருவைகுண்டம். 14. உடன்குடி ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், தன்னிறைவுத் திட்டம் சிறப்பாகச் செயல்பட முனைப்பான பணிகள் நடந்து வருகின்றன.

## குருவி குளம் :

குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 120 பணிகளைச் செயல்படுத்த ரூ. 31.742 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



குன்னத்தூரிலுள்ள மகப்பேறு நிலையம்

இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 7.512 இலட்சங்களில் 25.6 கி. மீ. நீளமுள்ள 27 சாலைகளை அகலப்படுத்தி கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும்.

ரூ. 20.480 இலட்சம் மதிப்பீட்டில் 87 சிறு பாலங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.

ரூ. 1,800 இலட்சம் மதிப்பீட்டில் 3 மகப்பேறு நிலையங்களும் ரூ. 1.950 இலட்சம் செலவில் 3 கிராம மருந்தகங்களும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 23,746 ஆதிதிராவிட மக்களும் 67,338 மற்ற இன மக்களும் பயன் பெறுவார்கள்.

## வாசுதேவ நல்லூர் :

வாசுதேவ நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 127 பணிகளைச் செயல்படுத்த ரூ. 38.368 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 7.248 இலட்சங்களில் 30.2 கி. மீ. நீளமுள்ள 27 சாலைகளை அகலப்படுத்தி கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும்.

ரூ. 28.070 இலட்சம் மதிப்பீட்டில் 95 சிறு பாலங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.

2.400 இலட்சம் மதிப்பீட்டில் 4 மகப்பேறு நிலையங்களும் ரூ.0.650 இலட்சம் செலவில் 1 கிராம மருந்தகமும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 23,745 ஆதிதிராவிட மக்களும், 76,288 மற்ற இனமக்களும் பயன்பெறுவார்கள்.

## அம்பா சமுத்திரம்

அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 76 பணிகளைச் செயல்படுத்த ரூ. 18.240 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 9.280 இலட்சங்களில் 30 கி.மீ. நீளமுள்ள 28சாலைகளை அகலப்படுத்தி கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும்.

ரூ. 4.110 இலட்சம் மதிப்பீட்டில் 40 சிறு பாலங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.

ரூ. 4.200 இலட்சம் மதிப்பீட்டில் 7 மகப்பேறு நிலையங்களும், ரூ.0.650 இலட்சம் செலவில் 1 கிராம மருந்தகமும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 14,387 ஆதிதிராவிட மக்களும், 97,563 மற்ற இன மக்களும் பயன் பெறுவார்கள்.

## பாப்பாக்குடி

பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 120 பணிகளைச் செயல்படுத்த ரூ. 28.730 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 14.370 இலட்சங்களில் 34 கி.மீ. நீளமுள்ள 42சாலைகளை அகலப்படுத்தி கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும். ரூ. 10.660 இலட்சம் மதிப்பீட்டில் 72 சிறு பாலங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன. ரூ. 2.400 இலட்சம் மதிப்பீட்டில் 4 மகப்பேறு நிலையங்களும், ரூ. 1.300 இலட்சம் செலவில் 2 கிராம மருந்தகங்களும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 8,413 ஆதிதிராவிட மக்களும் 45,398 மற்ற இனமக்களும் பயன்பெறுவார்கள்.



மேல திருவேங்கடபுரத்திலுள்ள சமுதாயக் கூடம்



மணப்பாடு - சிலுவைக் கோயில்



தெற்கு ஆத்தங்கரை - பள்ளிவாசல்

## தேவாலயங்கள்

நெல்லை மாவட்ட தெற்கு, கிழக்குப் பகுதிகளில் மிகுதியாக கிறிஸ்தவர்கள் வாழ்கிறார்கள். பாளையங்கோட்டை தூத்துக்குடி சாயர்புரம், மெய்ஞ்ஞானபுரம், வடக்கன் குளம், முதலூர், இடையங்குடி, மணப்பாடு ஆகிய இடங்களில் புகழ்பெற்ற — மிக உயரமான தேவாலயங்கள் (சர்ச்சுகள்) உள்ளன. கடற்கரையைச் சார்ந்த உவரி என்னுமிடத்தில், கத்தோலிக்கர்களின் நூதனமான தேவாலயம் ஒன்றும் உள்ளது. இங்கு சமய வேறுபாடின்றி எல்லாரும் வந்து வழிபடுகின்றனர். இம்மாவட்டத்தில் 300 புராட்டஸ்டன்ட் கோயில்கள் உள்ளன. வடக்கன் குளம் மாதாகோயிலிலும், சமயவேறுபாடின்றி மக்கள் வந்து வழிபடுகின்றனர்.

## பள்ளிவாசல்கள்

பொட்டல்புதூர், காயல்பட்டணம், செல்வமருதூர் பெட்டைக்குளம், ஏர்வாடி, ஆத்தங்கரை, மேலப்பாளையம், கடையநல்லூர் ஆகிய இடங்களில் முஸ்லீம்கள் பெருமளவில் வாழ்கின்றனர். ஆத்தங்கரை பள்ளிவாசல் புகழ் பெற்ற புனிதத் தலமாகும்.

இந்தியாவின் மிகப்பெரும் தர்க்கா பொட்டல்புதூரில் உள்ளது. இதைக் கட்டியவர்கள் இந்துக்களே. அதனால்தான் இந்தத் தர்க்கா, வடிவில் இந்துக்கோயில் போல உள்ளது. இன்றும் சந்தூரியில் ஒரு தினம், தீப அலங்கார தினமாக இந்துக்களுக்காகக் கொண்டாடப்படுகிறது.

## களக்காடு

களக்காடு ஊராட்சி தன்னிறைவுத் திட்டத்தில் 98 பணிகளைச் செயல்படுத்த ரூ. 30.420 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூ. 14,500 இலட்சங்களில் 33.9 கி.மீ. நீளமுள்ள 32 சாலைகளை அகலப்படுத்தி கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும். ரூ. 14.620 இலட்சம் மதிப்பீட்டில் 64 சிறு பாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. ரூ. 1.300 இலட்சம் செலவில் 2 கிராம மருந்தகங்களும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 11,291 ஆதிதிராவிட மக்களும், 65.398 மற்ற இனமக்களும் பயன் பெறுவார்கள்.

## ஆலங்குளம்

ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 121 பணிகளைச் செயல்படுத்த ரூ. 26.330 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூ. 8.250 இலட்சங்களில் 30 கி. மீ. நீளமுள்ள 22 சாலைகளை அகலப்படுத்திக் கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும். ரூ.14.380 இலட்சம் மதிப்பீட்டில் 93 சிறு பாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. 2.400 இலட்சம் மதிப்பீட்டில் 4 மகப்பேறு நிலையங்களும் ரூ. 1.300 இலட்சம் செலவில் 2 கிராம மருந்தகங்களும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 10,599 ஆதிதிராவிட மக்களும் 67,543 மற்ற இன மக்களும் பயன் பெறுவார்கள்.

## கடையநல்லூர்

கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 70 பணிகளைச் செயல்படுத்த ரூ. 21.100 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் 13.200 இலட்சங்களில் 30 கி. மீ. நீளமுள்ள 30 சாலைகளை அகலப்படுத்திக் கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும். ரூ. 5.45 இலட்சம் மதிப்பீட்டில் 36 சிறு பாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. 1.800 இலட்சம் மதிப்பீட்டில் 3 மகப்பேறு நிலையங்களும், ரூ.0.650 இலட்சம் செலவில் 1 கிராம மருந்தகமும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 12,084 ஆதிதிராவிட மக்களும், 34,145 மற்ற இன மக்களும் பயன் பெறுவார்கள்.

## கீழ்ப்பாவூர்

கீழப்பாவூர் ஊராட்சிஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 92 பணிகளைச் செயல்படுத்த ரூ. 30.330 இலட்சங்கள்



பாரதி நூற்றாண்டு நினைவுத் துவக்கப் பள்ளி (தருவை)

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூ. 9.960 இலட்சங்களில் 29.2 கி. மீ. நீளமுள்ள 27 சாலைகளை அகலப்படுத்திக் கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும்.

ரூ. 17.07 இலட்சம் மதிப்பீட்டில் 60 சிறு பாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. ரூ. 1.800 இலட்சம் மதிப்பீட்டில் 3 மகப்பேறு நிலையங்களும், ரூ. 1.300 இலட்சம் செலவில் 2 கிராம மருந்தகங்களும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 9.283 ஆதிதிராவிட மக்களும் 93,245 மற்ற இன மக்களும் பயன் பெறுவார்கள்.

## பாளையங்கோட்டை

பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 109 பணிகளைச் செயல்படுத்த ரூ. 37 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 10.910 இலட்சங்களில் 30.4 கி. மீ. நீளமுள்ள 29 சாலைகளை அகலப்படுத்திக் கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும். ரூ. 21.04 இலட்சம் மதிப்பீட்டில் 72 சிறு பாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. ரூ. 1.800 இலட்சம் மதிப்பீட்டில் 3 மகப்பேறு நிலையங்களும், ரூ. 2.600 இலட்சம் செலவில் 4 கிராம மருந்தகங்களும், ரூ. 0·650 இலட்சம் செலவில் 1 பள்ளிக் கட்டடமும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 23,702 ஆதிதிராவிட மக்களும் 82,270 மற்ற இன மக்களும் பயன் பெறுவார்கள்.

எடுத்துக் காட்டுக்கு, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பகுதிகளைப் பார்க்கச் சென்றபோது பல பணிகள் முடியுந்தறுவாயிலும், முடிந்தும் இருந்ததைப் பார்க்க முடிந்தது. தருவை என்னும் கிராமத்தில் ரூ. 96,000 மதிப்பில் கிராம மருந்தகக் கட்டடம் முடியும் தருவாயில் உள்ளது. இதே போல பொன்னாக்குடி, திருவேங்கடநாதபுரம், சீவலப்பேரி ஆகிய இடங்களிலும் மருந்தகங்கள் உள்ளன.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், பாரதி நூற்றாண்டு நினைவு உயர் துவக்கப் பள்ளி ஒன்று தருவை கிராமத்தில் ரூ. 66,000 மதிப்பில் கட்டப்பட்டுள்ளது.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேலத்தம் கிராமத்தில் ரூ. 86,000 மதிப்பில் துவக்கப்பள்ளி ஒன்று கட்டப்பட்டு முடியுந்தறுவாயில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் விளாகம் சாலையில் 1.4 கி. மீ. தூரத்துக்கும் கல்பரத்தும் வேலை நடந்துள்ளது.

போக்குவரத்து தடை இல்லாமல் இருக்க, குன்னத்தூர் - மேல திருவேங்கடநாதபுரம் சாலையில் ரூ.30,000 சிமெண்ட் குழாய் பாலம் கட்டப்பட்டுள்ளது. குன்னத்தூரில் ரூ. 80,000 செலவில் மகப்பேறு நிலையம் முடியும் தருவாயில் உள்ளது. இதேபோல, நடுவர்குறிச்சி, மேலபுத்தனேரியிலும் மகப்பேறு நிலையங்கள் உள்ளன. மேலபுத்தனேரி, ஆதிதிராவிடர்கள் மிகுதியாக வாழக்கூடிய பகுதியாகும்.

தேசிய ஊரக் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், சமுதாயக் கூடம் ஒன்று, மேலதிருவேங்கடநாதபுரத்தில் ரூ. 38,500 மதிப்பில் கட்டப்பட்டுள்ளது. இது மதிய சத்துணவுக்கும் பயன்படுத்தப்படும்.

## செங்கோட்டை

செங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 94 பணிகளைச் செயல்படுத்த ரூ. 18.520 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூ. 7.520 இலட்சங்களில் 24.1 கி.மீ. நீளமுள்ள 32 சாலைகளை அகலப்படுத்திக் கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும். ரூ. 9.750 இலட்சம் மதிப்பீட்டில் 60 சிறு பாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. ரூபாய் •600 இலட்சம் மதிப்பீட்டில் 1 மகப்பேறு நிலையமும், ரூ. •650 இலட்சம் செலவில் 1 கிராம மருந்தகமும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் 12,339 ஆதிதிராவிட மக்களும், 40,274 மற்ற இன மக்களும் பயன் பெறுவார்கள்.

## ஆழ்வார் திருநகரி:

ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 100 பணிகளைச் செயல்படுத்த ரூ.27.460 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 7.660 இலட்சங்களில் 28.4 கி. மீ. நீளமுள்ள 29 சாலைகளை அகலப்படுத்திக் கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும். ரூ. 12.900 இலட்சம் மதிப்பீட்டில் 60 சிறு பாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. ரூபாய் 3 இலட்சம் மதிப்பீட்டில் 5 மகப்பேறு நிலையங்களும், ரூ. 3.900 இலட்சம் செலவில் 6 கிராம மருந்தகங்களும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 12,664 ஆதிதிராவிட மக்களும், 88,035 மற்ற இனமக்களும் பயன் பெறுவார்கள்.

## சாத்தான் குளம்:

சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 97 பணிகளைச் செயல்படுத்த ரூ. 25.910 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 11.160 இலட்சங்களில் 31 கி.மீ. நீளமுள்ள 35 சாலைகளை அகலப்படுத்திக் கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும். ரூ. 12.300 இலட்சம் மதிப்பீட்டில், 58 சிறு பாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. ரூ. 1.800 இலட்சம் மதிப்பீட்டில் 3 மகப்பேறு நிலையங்களும், ரூ0·650 இலட்சம் செலவில் 1 பள்ளிக் கட்டடமும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் 4,888 ஆதிதிராவிட மக்களும், 78,252 மற்ற இன மக்களும் பயன் பெறுவார்கள்.

## திருவைகுண்டம்:

திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 84 பணிகளைச் செயல்படுத்த ரூ. 13.968 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 7.248 இலட்சங்களில் 30 கி.மீ. நீளமுள்ள 33 சாலைகளைஅகலப்படுத்திக் கல்பரத்தும் வேலை மேற்கொள்ளப்படும்.

ரூ. 3.070 இலட்சம் மதிப்பீட்டில் 45 சிறு பாலங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன. ரூ. 3 இலட்சம் மதிப்பீட்டில் 5 மகப்பேறு நிலையங்களும், ரூ.0·650 இலட்சம் செலவில் 1 கிராம மருந்தகமும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 15,529 ஆதிதிராவிட மக்களும், 88,159 மற்ற இன மக்களும் பயன்பெறுவார்கள்.



சிமெண்ட் குழாய்ப் பாலம்

## உடன்குடி:

உடன்குடி ஊராட்சி ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டத்தில் 49 பணிகளைச் செயல்படுத்த ரூ, 17.562 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்ட ஒதுக்கீட்டில் ரூபாய் 10.692 இலட்சங்களில் 29.7 கி. மீ. நீளமுள்ள 25 சாலைகளை அகலப்படுத்தி கல்பரத்தும் வேலைமேற்கொள்ளப்படும். ரூ. 3.12 இலட்சம் மதிப்பீட்டில் 17 சிறுபாலங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. 1.800 இலட்சம் மதிப்பீட்டில் 3 மகப்பேறு நிலையங்களும், ரூ0·650 இலட்சம் செலவில் 1 கிராம மருந்தகமும் ரூ. 1.300 இலட்சம் மதிப்பீட்டில் 2 பள்ளிக் கட்டடங்களும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 4,725 ஆதிதிராவிட மக்களும் 62.573 மற்ற இனமக்களும் பயன்பெறுவார்கள்.

கிராமங்களுக்கும், நகரங்களுக்குமுள்ள இடைவெளியைக் குறைத்து நகர மக்கள் பெறும் வசதிகள் அனைத்தும் கிராமங்களில் அமைய தன்னிறைவுத் திட்டம் முனைந்து செயல்படுத்தப்படுகிறது. மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அளிப்பதில் புதிய அணுகுமுறை பின்பற்றப்பட்டு. அரசின் அனைத்துத் துறையினரின் ஒத்துழைப்புடன், கால வரையறையும் நிர்ணயிக்கப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. இப்புதிய மாபெரும் முயற்சியால் கிடைக்கும் நன்மைகளோ கணக்கற்றவை. இதனால் கிராமப்புறங்களில் புத்துணர்ச்சியும், புதுப்பொலிவும், புது நம்பிக்கையும் காண முடிகிறது.

கிராமத்தில் வாழும் நலிவடைந்த பகுதியினரான ஆதிதிராவிட மக்களை ஒளிபடைத்த கண்ணினராய், உறுதிகொண்ட நெஞ்சினராய், ஆற்றல்மிக்கவராய் வையத்து வாழ்வாங்கு வாழ வைக்க தன்னிறைவுத் திட்டங்களில் முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை நாம் மன நிறைவோடு குறிப்பிட வேண்டும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## மணிமுத்தாறு நீர்த்தேக்கம்



மணிமுத்தாறு நீர்வீழ்ச்சி

திருநெல்வேலியிலிருந்து 45 கி.மீ. தூரத்தில் உள்ள அழகிய நீர்த்தேக்கம் இது. இங்கு நீர் வீழ்ச்சி, பூங்கா, நீச்சல் குளம், விலங்குக் காட்சிச் சாலை, மாஞ்சோலை தேயிலைத் தோட்டம் ஆகியவை உள்ளன.

இதன் நீர் வடிப்பரப்பு: 62.4 சதுர மைல். அணையின் மொத்த நீளம் 9605 அடி. மண் அணையின் நீளம் 8375 அடி கட்டட அணையின் மொத்த நீளம் 1230 அடி. நீர்த்தேக்க நிறைமட்டம் 358.00 அடி. நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 5511 மில்லியன் கன அடி.

பாபநாசம் — தாமிரபரணி மூலம் 83,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. மணிமுத்தாறு மூலம், அம்பை, நாங்குநேரி, நெல்லை, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், வட்டங்களிலுள்ள 322 குளங்கள் வாயிலாக கார் பருவத்தில் 22.748 ஏக்கர் நிலம் ஒரு போக விளைச்சலுக்குப் பயன்படுகிறது.











# கைவண்ணம் இங்கே கண்டோம்!

அந்தத்தொழிற் கூடத்தினுள் நுழைகிறோம்.

ஆரணங்குகள் பலர் அழகிய பொருள்களைச் செய்து கொண்டிருக்கின்றனர்.

வெறும் பனை ஓலை விதவிதமாய் வடிவம் பெறுவதைப் பார்க்கின்றோம்.

மனத்தைக் கவரும் அந்தப் பொருள்கள் தயாராகும் இடம் தான், மணப்பாடு பெண் தொழிலாளர் பனை ஓலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.

திருச்செந்தூருக்குப் போகிற வழியில், அழகிய கடற்கரைக்கு அருகே அமைந்துள்ள சிறிய தொழிற்கூடம் தான் இது.

பனை ஓலையினால் கைவினைப் பொருட்கள் செய்யும், வறுமையில் வாடிடும் பெண் தொழிலாளர்களின் மேம்பாட்டுக்காக ஆரம்பிக்கப்பட்ட இத் தொழிற்கூடம் 1957 முதல் இயங்கி வருகிறது. குலசேகரப் பட்டணம் நகரப்பஞ்சாயத்துக்குட் பட்ட கிடங்குகளைத்தனது விவகார எல்லையாகக் கொண்டு இச் சங்கம் செயல்பட்டு வருகின்றது.

94 உறுப்பினர்களையும் ரூ. 517 செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்கள் எண்ணிக்கை 517, செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 36,365 - ஆகும். இதில் மாநில அரசின் பங்கு ரூ. 2500- உறுப்பினர்களை ஊக்குவிக்கு முகமாக 1977-78 லிருந்து பங்குத் தொகையின் மேல் டிவிடெண்ட் 9 சதவிகிதம் கொடுக்கப்பட்டு வருகிறது. 1980-81ஆம் ஆண்டில் இலாபம் பங்கீடு செய்யும்போது பங்குத் தொகையின்மேல் சட்டப்படி அனுமதிக்கப்பட்டுள்ள அதிகப்படி டிவிடென்ட் 12 சதவீதம் கொடுக்கப்படும்.

அரசிடமிருந்து பெற்ற சகல கடன்களையும் 6.11.74க்குள் வட்டியுடன் முழுமையாகத் திரும்ப செலுத்தி தற்போது அரசு கடன் எதுவுமில்லாமல் நிதி நிலைமையில் தன்னிறைவுபெற்று தனது சொந்த மூலதனத்திலேயே இச்சங்கம் செயல்பட்டு வருகிறது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

துவக்கத்தில் நட்டத்திலேயே இயங்கிவந்த இத்தொழிற்கூடம், படிப்படியாக முன்னேறி இன்று 1981-82ம் ஆண்டில் மொத்த விற்பனை ரூ. 315969. இதில் ஏற்றுமதி விற்பனை மாத்திரம் ரூ. 241076 ஆகும். சங்கம் அடைந்துள்ள மொத்த லாபம் இவ்வாண்டில் ரூ. 1,00,600 ஆகும்.

சங்கம் தொடங்கிய காலத்திலிருந்ததைவிட உற்பத்தியும், விற்பனையும் சுமார் 10 மடங்கு பெருகியுள்ளது. தொடக்ககாலத்திலிருந்து 1981-72 வரை சங்கம் தனது உற்பத்திப் பொருட்களைத் தனியார் வியாபாரிகளிடமே விற்பனை செய்து வந்ததால் மிகவும் குறைந்த லாபமே கிடைத்தது. 1972-73 முதல் சங்கமே தனது. தயாரிப்புகளை நேரடியாக மேல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருவதால் உற்பத்திபெருகி வேலை வாய்ப்பு அதிகரித்துள்ளதுமல்லாமல், அந்நியச் செலாவணியையும் சட்டிவருகிறது. தமிழ்நாட்டிலேயே பொருட்களை நேரடியாக ஏற்றுமதி செய்யும் ஒரே தலைமைச் சங்கமாக இது இயங்கி வருகிறது.

இச் சங்கத்தின் செயல்படு திறனை ஆய்ந்து 1980-81 1981-82லும் மாநில அளவில் பனை ஓலை தொழிற்கூட்டுறவுச் சங்கங்களில், சிறந்த சங்கமாகத் தேர்ந்தெடுத்து தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தினரால் பாராட்டுக் கேடயங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆண்டுக்கு 200க்குக் குறையாமல் பொருட்கள் செய்து அளித்த உறுப்பினர்களின் குழந்தைகளுக்கும், திருமணமாகாத உறுப்பினர்களாக இருந்தால் அன்னாரின் சொந்தத் தம்பி தங்கைகளுக்கும் 12ஆம் வகுப்புவரை பள்ளிப் பாடப்புத்தகங்கள் சங்கப் பொது நல நிதியிலிருந்து வாங்கி இலவசமாக வழங்கி வருகிறது.

இதே போன்று ஆண்டு ரூ: 200க்குக் குறையாமல் பொருட்கள் செய்து கொடுத்த உறுப்பினர்களுக்கு, உறுப்பினர்களில் பெரும்பாலோர் கிறிஸ்தவர்களாக இருப்பதால், கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி தலா பருத்தி நூல் சேலை ஒன்று, 76 ஆம் ஆண்டு முதல் சங்கப் பொது நல நிதியிலிருந்து வாங்கி இலவசமாக வழங்கப்படுகிறது.

தற்போது இத் தொழிற்கூடத்தில் 350 பெண்கள் பணியாற்றுகின்றனர். இங்குத் தயாராகும் அழகிய கண்கவர் பனை ஓலைப் பொருள்கள் அமெரிக்கா, இலண்டன், நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 50 காசிலிருந்து 50 ரூபாய் வரை பொருள்கள் உள்ளன.

''சங்கத்தின் தேவைகளை அறிந்து, தகுந்த ஆலோசனைகளையும், தேவையான நிர்வாக அனுமதிகளையும் உடனுக்குடன் தந்து வரும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் அலுவலர்கள் அனைவருக்கும் இச்சங்கத்தின் முன்னேற்றத்தில் முக்கிய பங்கு உண்டு'' என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறார் சங்கச் செயலாளர் டாக்டர் பி. வி. பால்ராஜ்.

— பி.வி.ஜி.



# தமிழ் வளர்த்த மாவட்டம்!


வித்வான்
தி. சு. ஆறுமுகனார்,
திருநெல்வேலி


செந்தமிழ் நாட்டில் தெய்வத் தமிழ் வளர்த்த பணியில், நெல்லை. மாவட்டத்துக்கும் பெரும் பங்குண்டு. அங்ஙனம் பங்கு கொண்ட இம்மாவட்டத்துப் பெரு மக்களுள், கடந்த ஓரிரு நூற்றாண்டுகளில் வாழ்ந்து பணி புரிந்து, மறைந்தாருள் ஒரு சிலரைப் பற்றி, யானறிந்தவாறு கோடி காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பைந்தமிழ் வளர்த்த பாவலர் பெருமக்கள் பல நூற்றுவர் ஆவர். அவருள் ஒரு சிலர் தமிழ்வானில் ஆதவனெனவும், அருமதியெனவும் அரிய புகழொளியோடு பவனி வருகின்றனர்; மற்றும் ஒரு சாரார் உடுக்களென ஒளிர்கின்றனர்; பெரும்பான்மையர் பெயரளவில் பேசப்படுகின்றனர். அவருள் பதின்மரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் இங்கே தரப்படுகின்றன.

## குமரகுருபர சுவாமிகள்

இப்பெருமகனார் நெல்லை மாவட்டத்தில் இன்றைய ஸ்ரீவைகுண்டமாம் கைலாசபுரத்தில் சைவ வேளாளர் மரபில் சண்முக சிகாமணிக் கவிராயருக்கும், சிவகாமி அம்மையாருக்கும் அருமகவாய்த் தோன்றினார். ஐந்து ஆண்டளவும் மூங்கையாக இருந்து, பின்னர் பேசுந்திறன் பெற்றார். அவ்வமயமே கந்தர் கலிவெண்பாவைப் பாடி முருகபிரானைப் பரவினார்.

கைலாசபுரம் வந்து தந்தையாரிடமும் மற்றும் அருந்தமிழ்ப் புலவர்கள் மாட்டும் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். கயிலைக் கலம்பகம் எனும் அரிய நூலொன்றினைப் பாடினார். மணவாழ்வினுள் செலவிழையாமல் வடக்கு நோக்கிச் சென்றார். மதுரை திருயம்பதியை அடைந்தார். திருமலை நாயக்க மன்னரால் ஆதரிக்கப் பெற்றார். மன்னர் விழைந்தவாறு திருக்குறள் கருத்துக்களை எளிய நடையில் நீதிநெறி விளக்கமாகப் பாடினார். மற்றும், மதுரைக் கலம்பகம், மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழ், மீனாட்சியம்மன் குறம், மீனாட்சியம்மன் இரட்டைமணி மாலை ஆகிய நூல்களையும்



வ. உ. சிதம்பரனார்

யாத்தருளினார். பிள்ளைத்தமிழ், அம்மன் திருமுன் மன்னர் மேற்பார்வையில் அரங்கேறியது.

பின்னர் தருமபுரத்தை அடைந்தார். தருமையில் அப்போது நான்காவது மடாதிபதியாக மாசிலாமணி தேசிகர் வீற்றிருந்தார். அவருடன் சொற்போர் நடாத்தித் தோற்றதனால் அவரைத் தம் ஞானாசிரியராக ஏற்றுக் கொண்டார். தம் ஆசிரியரைப் பரவிப் பண்டார மும்மணிக் கோவை பாடினார்.

மற்றும் வேளூர்க்கலம்பகம், முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழ், திருவாரூர் நான்மணி மாலை, சிதம்பரம் மும்மணிக் கோவை, சிதம்பரம் செய்யுட் கோவை ஆகிய நூல்களையும் அவர் பாடியுள்ளார்.

ஞானாசிரியர் கட்டளையிட்டவாறு வடக்கே காசிக்குச் சென்றார். 'சகலகலாவல்லி மாலை'யைப் பாடி, இந்துஸ்தானி மொழியுணர்ந்து, மன்னனைப் பேட்டி கண்டு, அனுமதி பெற்று ஆங்கே காசி மடத்தை நிறுவினார். காசிக் கலம்பகம் பாடினார். ஒரு முறை தருமபுரம் வந்து ஞானாசிரியரைக் கண்டு வணங்கி மீண்டும் காசியை யடைந்து அங்கே தமிழையும்சைவத்தையும்வளர்த்தார்.

## திரிகூடராசப்பக் கவிராயர்

இவர், திருக்குற்றாலத்திற்கும் தென்காசிக்கும் இடையேயுள்ள மேலகரம் என்னும் ஊரில் சைவ வேளாளர் மரபில் தோன்றினார். முறையாகத் தமிழ் நூல்களைக் கற்றுப் புலமை பெற்றார். யமகம், திரிபு முதலிய பாடல்களையும் விரைந்து பாடும் ஆற்றல் பெற்றார். குறவஞ்சி நூல்களுள் தலையாயதாய் ஒளிரும் 'திருக்குற்றாலக் குறவஞ்சி' இவரால் பாடப்பட்டதேயாம். இவ்வினிய நூல் திருக்குற்றால நாதர் சன்னதியில் அரங்கேறியது. இதன் பீடுணர்ந்த அன்றைய பாண்டி மன்னன் முத்து விசயரங்க சொக்கநாத நாயக்கன் இவரைப் பாராட்டிப் போற்றித் ''திருக்குற்றால நாதர் கோயில் வித்துவான்'' என்ற விருதுப் பெயரையும், ''குறவஞ்சி மேடு'' ஆகிய இறையிலி நிலத்தையும் இவருக்கு அளித்துச் சிறப்பித்தான்.

இப்புலவர் பெருமானுக்கு ஆண் மகவில்லை. பெண் வழி மரபினர் இன்றும் அவ்வுரிமையை ஆண்டனுபவித்து வருகின்றனர்.

மற்றும், இப்புலவர் பெருமான் திருக்குற்றாலம் பற்றிக் குறவஞ்சிதவிர, வேறு பல நூல்களையும் பாடியுள்ளார். அவற்றுள் 'திருக்குற்றாலத் தல புராணம்' சிறப்புடைத்தாம். ஏனையவை, அத்தலம் பற்றிய மாலை, சிலேடை வெண்பா,



ஜெகவீர பாண்டியன்



# எட்டயபுரத்தில் பாரதி மணிமண்டபம்

எட்டயபுரத்தில் மகாகவி பாரதி மணிமண்டபம் அழகுற அமைந்துள்ளது. 11.12.80இல் இது புதுப்பிக்கப்பெற்றது. இந்த மணி மண்டபத்தில் பாரதியின் சிலை, அவரது வரலாற்றைச் சித்திரிக்கும் கண்காட்சி, நூலகம் ஆகியவை உள்ளன.

யமக அந்தாதி, உலா, ஊடல், பரம் பொருள் மாலை கோவை, குழல்வாய்மொழி மாலை, கோமளமாலை, வெண்பா அந்தாதி, பிள்ளைத்தமிழ், நன்னகர் வெண்பா என்பனவாம்.

### வெ.ப. சுப்பிரமணிய முதலியார்

இவர், தென்காசி வட்டத்தில் சுரண்டையை அடுத்துள்ள வெள்ளக்கால் எனும் சிற்றூரில் தோன்றியவர். தோன்றிய காலம் கி.பி. 1857, ஆகஸ்டு திங்கள், 14ஆம் நாள். கால்நடை மருத்துவத் துறையின் தலைமையதிகாரியாகப் பணி புரிந்தவர். தமிழ்க் காப்பியங்களிலும் பிரபந்தங்களி



வெ.ப. சுப்பிரமணிய முதலியார்

லும், ஆங்கில நூல்களிலும், சிறந்த பயிற்சியுடையவர். மதி நுட்பமும் பரந்த நூலறிவுமுடையவர். இனிய உரைநடை நூல்களும், அரிய கவிதை நூல்களும் பல யாத்தவர், இராவ் சாகிப் விருது பெற்றவர்.

சிறப்பாகக் கம்பராமாயணத்தில் பெரிதும் ஈடுபாடுடையவர். அதன் சாரத்தைப் பிழிந்தெடுத்துக் ''கம்பராமாயண சாரம்'' என நூல் வடிவில் தந்தவர்.

இது தவிர, இவர்தம் நூல்களில் சிறப்புடையவை — சுவர்க்க நீக்கம் (மில்டனின் ''பேரடைஸ் லாஸ்ட்'' எனும் ஆங்கில நூலின் தமிழாக்கம்) அகலிகை வெண்பா, கோம்பி விருத்தம், நெல்லைச் சிலேடை வெண்பா என்பனவாகும்.

### அண்ணாமலை ரெட்டியார்

இவர், கரிவலம் வந்த நல்லூரை யடுத்துள்ள சென்னிகுளத்தில் கி. பி. 1861-ல் தோன்றினார். முப்பது ஆண்டுகளே வாழ்ந்தார். இவரிழப்பு தமிழுக்குப் பெரிய நட்டமாகும். தந்தை சென்னவ ரெட்டியார். தாயார் ஓவு அம்மாள். ஏழை விவசாயக் குடும்பத்தினர். அன்னதான மடம் எனப் புகழ் பெற்ற, கூவலப்புரம் மடத்தின் தலைவர் சுந்தர அடிகளாரின் உதவியால் முகவூர் இராமசாமிக் கவிராயரிடம் தமிழிலக்கண இலக்கியங்களைக் கற்றுத்தேர்ந்து கவிபாடும் திறன் பெற்றார். இவருக்கு விழுப்புகழைத் தந்த நூல், இவர் பாடிய காவடிச் சிந்தே ஆகும். ஊற்றுமலை மன்னர் இருதயாலய மருதப்பத் தேவரால் ஆதரிக்கப் பெற்றவர். இவரது காவடிச் சிந்தை ஊற்றுமலை வித்துவான் இரா. தங்கப் பாண்டியன் சிறந்த முறையில்



தேவநேயப் பாவாணர்

பதிப்பித்துள்ளார். மற்றும் அவர்தம் சீட்டுக் கவிகளைப் பாளை புனித யோவான் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் நெல்லை க. சுப்பிரமணியம் பதிப்பித்திருக்கின்றார்.

மற்றும், வீரையந்தாதி, நவநீதிகிருட்டிணன் பிள்ளைத்தமிழ் சங்கர நாராயணர் திரிபந்தாதி, கருவை மும்மணிக் கோவை கோமதி அந்தாதி என்பன இப்புலவர் பாடியுள்ள பிற நூல்களாம்.

### சங்கரதாஸ் சுவாமிகள்

நாடகத் தந்தை எனப்புகழ்



கா. சுப்பிரமணிய பிள்ளை

பெற்ற இவர் கி. பி. 1867-ல் தூத்துக்குடியில் பிறந்தார். தந்தை தாமோதரக் கணக்கப் பிள்ளை என்பவராவர். தமிழ்ப் புலமையுடைய தாமோதரனார் இராமாயணச் சொற்பொழிவில் வல்ல வராதலால் மக்களால் இராமாயணப் புலவர் என அழைக்கப்பட்டார். வண்ணச் சரபம் தெல்லைத் தண்டபாணி சுவாமிகளிடம், சங்கரதாஸ் இளமையில் பாடம் கேட்டவர். உடுமலைச்சரபம் முத்துசாமிக் கவிராயரும் உடன் பயின்றார்.

சங்கரதாசும் சிறிது காலம் கணக்கு வேலை பார்த்தார். பின்னர் நாடகப் பணியில் சேர்ந்தார். அடுத்துத் துறவியாகச் சிலகாலம் திரிந்தார். இறுதியாக மான்பூண்டியா பிள்ளையின் தூண்டுதலால் மீண்டும் நாடகத் துறையில் இணைந்து, அத்துறைக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

சமரச சன்மார்க்க சபை, பால மீனரஞ்சனி சபை, தத்துவ மீன லோசனி சபை—என்பன இவர் நடத்தி வந்த நாடகச் சபைகளாம். இரணியன், எமன், இராவணன்போன்ற ஆர்ப்பாட்ட பாத்திரங்களில் இவரைப்போல் நடித்தார் எவருமில்லை. செகநாத நாயுடு, கோவிந்தசாமிப் பிள்ளை, கன்னையா நாயுடு சாமண்ணா ஐயர், கே. எஸ். அனந்த நாராயண ஐயர், அவர் அண்ணன் செல்லப்ப ஐயர், நவாப் ராஜமாணிக்கம், டி.கே.



மு. சி. பூரணலிங்கம் பிள்ளை

எஸ். சகோதரர்கள் முதலியோர் இவரது சீடர்களில் முக்கியமானவர்கள். இவர் கி. பி. 1922-ல் இயற்கை எய்தினார்.

அபிமன்யு சுந்தரி, பிரபுலிங்க லீலை, அல்லி அர்ச்சுனா, சதி அனுசூயா, சதி சுலோசனா, சீமந்தனி, பாதுகா பட்டாபிஷேகம், மிருச்சகடி, மணிமேகலை, கோவலன், ரோமியோ ஜூலியத் போன்ற சுமார் இருபது நாடகங்களை இவர் படைத்துள்ளார்.

### வ.உ. சிதம்பரனார்

செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன் என ஒல்காப் புகழ் படைத்த இப்பெருமகனார் நாட்டு விடுதலைக்காகப் போராடிய முன்னணி வீரர்களுள் ஒருவர் என்பதை யாவரும் அறிவர். ஆயின் இவர்து தமிழ்ப் பணியை ஒரு சிலரே அறிவர்.



க. வையாபுரிப் பிள்ளை

இவர் ஒட்டப்பிடாரத்தில் கி. பி. 1872-ல் உலகநாத பிள்ளைக்கும் பரமாயி அம்மையாருக்கும் தவமகனாய் அவதரித்தார். இவர்தம் தமிழ்ப் பணியினை மட்டும் இவண் காட்டின், அமையும் எனக் கருதுகின்றேன். தம் சுயசரிதையை இரண்டு பாகங்களாகப் பாடியுள்ளார். சிவஞான போதத்துக்குத் தெளிவுரை வரைந்துள்ளார். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இன்னிலைக்கு விருத்தியுரை எழுதியுள்ளார். மற்றும் மெய்யறம், மெய்யறிவு, அகமேபுறம், மனம்போல் வாழ்வு வலிமைக்கு மார்க்கம், சாந்திக்கு மார்க்கம் ஆகிய நூல்களையும் ஆக்கியுள்ளார்.

சிறப்பாகத் திருக்குறள் மணக்குடவர் உரையையும், தொல்காப்பியம் இளம்பூரணர் உரையையும் தெளிவாக நன்முறையில் செப்பம் செய்து பதிப்பித்துள்ளார். 1936-ல் இறையடி சேர்ந்தார்.

### தேசியகவி சுப்பிரமணிய பாரதியார்

பாரதி நூற்றாண்டு விழா நாடெங்கும் கொண்டாடப்பட்டு வரும் இந்நாளில் இவரை அறியாதார் இலர். இவரது தமிழ்ப்



ச. சோ. பாரதியார்

பணியையும்நாட்டுப் பணியையும் நாடு நன்கறியும். காலம் கி. பி. 1882-1921.

### எஸ். வையாபுரிப்பிள்ளை

இவர் நெல்லை நகரையடுத்துள்ள சிக்கநரசய்யன் கிராமத்தில் கி. பி. 1888-ல் சரவணப் பெருமாள் பிள்ளையின் திருமகனாய்த் தோன்றினார். தொடக்கக் கல்வியும் உயர்நிலைக் கல்வியும் நெல்லையில் கற்றார். க. அ. நீலகண்ட சாஸ்திரியார், பெ. நா. அப்புசாமி ஐயர், பி. ஸ்ரீ. ஆச்சார்யா ஆகியோர் இவருடன் பயின்றவர்கள்.

அப்போது குறுக்குத் துறையில் தங்கியிருந்த பாம்பன் குமர குருதாச அடிகளிடம் தமிழைக் கற்றார். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பி. ஏ. பட்டம் பெற்றார். இதில் முதன்மையாகத் தேர்ந்து சேதுபதியின் தங்கப்



ரா. பி. சேதுப்பிள்ளை

பதக்கத்தையும் பெற்றார். 1912-இல் திருமணம். திருவனந்தபுரத்தில் சட்டப்படிப்பு. 1922 முதல் நெல்லையில் வழக்கறிஞர் தொண்டு செய்தார். 1926-இல் சென்னை சென்று தமிழ் அகர வரிசைக்குப்பதிப்பாசிரியர் (ரீடர்) ஆனார். 1936 முதல் சுமார் பத்தாண்டுகள் தமிழ் ஆராய்ச்சித் துறையின் தலைவராகப் பணியாற்றினார். 1938ல் இராவ் சாகிப் பட்டம். 1951 முதல் 3 ஆண்டுகள் திருவனந்தபுரம் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர். இவர்தம் நூல்களுள் சில : இலக்கியச் சிந்தனைகள், இலக்கிய உதயம், இலக்கிய மணிமாலை, தமிழின் மறுமலர்ச்சி, காவிய காலம், சொற்கலை விருந்து ஆகியவை. இவர் 1956-இல் காலமானார்.

### பி. ஸ்ரீ. [illegible]

கம்பராமாயண மேதை எனப்



தண்டபாணி சுவாமிகள்

படும் பி. ஸ்ரீ. ஆசாரியா தென் திருப்பேரையில் தோன்றியவர். அபிநவ காளமேகம், கவி அனந்த கிருஷ்ண ஐயங்காரின் சகோதரரின் புதல்வர். நெல்லை இந்து கல்லூரியில் கற்றார். சிறிது காலம் காவல் துறையில்' பணியாற்றினார். அதை உதறிவிட்டுத் தமிழ்ப் பணிக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். இடைக்காலத்தில் சென்னையிலும், இறுதி நாட்களில் விட்டிலாபுரத்திலும், வாழ்ந்து வந்தார். கம்பர் மீதும் அவர்தம் காவியத்தின் மீதும் மிக்க ஈடுபாடுடையவர். ஆனந்த விகடனில் இவர் எழுதி வந்த கம்ப சித்திரம், சித்திர ராமாயணம், திவ்ய பிரபந்தசாரம், சிவநேசச் செல்வர்கள், சித்திரத் திருப்பாவை முதலிய படைப்புகள் இவருக்கு அழியாப் புகழை அளித்தன.

இராமானுஜர் என்ற நூல் இவருக்குச் சாகித்ய அகாடமிப் பரிசைப் பெற்றளித்தது. மதுரையில் நடை பெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக அரசு இவருக்குப் பொன்னாடை போர்த்தியும் பொற்கிழி அளித்தும் பாராட்டியது.

நாற்பதுக்கும் அதிகமான அரிய தமிழ் நூல்களை வடித்துதவி தமிழன்னைக்குச் சிறந்த தொண்டாற்றியுள்ள இவர், 28-10-81-ல் இயற்கை எய்தினார்.

**ரா. பி. சேதுப்பிள்ளை**

சொல்லின் செல்வராகிய இவர் இராஜவல்லிபுரத்தில் தோன்றியவர். சட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர். தாம் பி. ஏ. பட்டம் பெற்ற சென்னை பச்சையப்பன் கல்லூரியிலேயே தமிழ்த் தொண்டாற்றிக் கொண்டே சட்டப் படிப்பும் படித்து வெற்றி பெற்றார். கம்பராமாயணத்திலும் திருக்குறளிலும் மிகுந்த ஈடுபாடுடையவர். அவற்றில் பெரும் பான்மையான பாடல்கள் இவருக்கு மனப்பாடம்.

ஆறு ஆண்டுகள் நெல்லை நகர்மன்ற உறுப்பினராக (1924-1930)ப் பணி செய்தார். அதில்-இறுதி இரண்டாண்டில் துணைத் தலைவராகவும் தொண்டாற்றினார். 1930-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளரானார். 1936-ல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணி புரியச் சென்றார். பின்னர் அங்கே தமிழ்த் துறைத் தலைவராகவும் பணியாற்றினார். ஆற்றொழுக்காக இனிய இசை



தேசிய கவி பாரதி

கலந்த நடையில் சொற்பெருக்காற்றும் திறனுடையார். இவர் தம் காலம் கி. பி. 1896-1961. தமிழ்த் தாய்க்கு இவர் படைத்துள்ள அணிகள் பலவாம்.

இவரை நினைவுறும் போதெல்லாம் இவருக்குப் பல்லாற்றானும் உதவியவரும், நெல்லையின் சிறந்த தமிழ்த் தொண்டரும், தாகூர் சட்ட விரிவுரையாளரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவரும் எம். எல். பிள்ளை என மக்களால் போற்றப்படுபவரும் ஆகிய கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களே முன் வந்து நிற்பார். இவர் வரைந்துதவிய தமிழ் ஆராய்ச்சி நூல்கள் பலவாம்.

— இவர்கள் தவிர விக்கிரமசிங்கபுரம், சிவஞான முனிவர், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், ரசிகமணி டி.கே.சி., தச்சநல்லூர் அழகிய சொக்கநாத பிள்ளை, கடிகை முத்துப் புலவர், தேவநேயப் பாவாணர், நாவலர் சோமசுந்தர பாரதியார், சுந்தர சுவாமிகள், சுந்தரராசப் பாண்டியர், பால்வண்ணனார், ரெட்டியாபட்டி அடிகள், மு. பொ. ஈஸ்வர மூர்த்தியா பிள்ளை, ஞானசித்தர், சிதம்பர நாதத்தம்பிரான், ஆழ்வாரப்பப் பிள்ளை, தி. செ. சுப்பிரமணிய பிள்ளை, பொ. முத்தையா பிள்ளை, அனந்தகிருஷ்ண ஐயங்கார், திருமலைவேற் கவிராயர், தொண்டைமான் முத்தையா, பாஸ்கரத் தொண்டைமான், எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, சாமிக்கண்ணு பிள்ளை, எஸ். இராகவனார், மு. நல்லுசாமி நாடார் போன்ற தமிழறிஞர் பெருமக்களையும் நன்று சிறப்புற்றது நெல்லைச் சீமையாகும்.



**வ.வே.சு. ஐயர் நினைவு மண்டபம்**

பாபநாசம் அருவியிலுள்ள கல்யாணி தீர்த்தத்தில் விழுந்து இறந்த சுதந்திரப் போராட்ட வீரர் வ.வே. சுப்பிரமணிய ஐயர் நினைவாக, அந்த இடத்தில் அழகிய நினைவு மண்டபம் ஒன்று எழுப்பப் பெற்றுள்ளது. இது 8.8.1957-ல் கட்டப்பட்டது.



# இயற்கையின் எழிற்கோலம்!

வனவளம் மிக்க தமிழ்நாட்டில் வகை வகையான வனவிலங்கு உய்விடங்களும் உள்ளன. பல் வேறு வகையான விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் புகழ் பெற்ற இடங்கள் பல உண்டு. ஆனைமலை, முதுமலை, முண்டந்துறை, களக்காடு, கோடிக்கரை, வேடந்தாங்கல் மூன்றடைப்பு கூந்தன் குளம் இப்படி பல வனவிலங்கு உய்விடங்கள் சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்து வருகின்றன.

**களக்காடு**

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள களக்காடு, சிங்கவால் குரங்குகளுக்கான உய்விடமாகும். இது திருநெல்வேலி மாவட்டத்தின் தென்மேற்கில் அமைந்துள்ளது. நாங்குநேரி வட்டாரத்தில் களக்காடு ஒதுக்கு காடு முழுவதும் இவ்விதக் காப்பகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

களக்காடு நகரிலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் இந்தக் காப்பகம் உள்ளது. நெல்லையிலிருந்து 48 கிலோ மீட்டர் தொலைவில் - நாங்குநேரியிலிருந்துசாலைமூலம் இந்தக் காப்பகத்தை எளிதில் அடையலாம்.

இதன் நிலப்பரப்பு - 22,358 எக்டேர். இங்கு மாறி மாறி உயர்ந்தும் தாழ்ந்தும் உள்ள மலைப் பிரதேசம் குறிப்பிடத்தக்கது. குன்றுகள் செங்குத்தானவை இங்கு குன்றுகளினூடே வற்றாது ஓடும் சில சிற்றாறுகளும் ஓடைகளும், மழைக் காலங்களிலும் மட்டுமே பாயும் ஓடைகளும் உள்ளன. அவை கீழ்மணிமுத்தாறு, குசங்குளியாறு, நம்பியாறு, குளிராத்தியாறு, மேலமணி முத்தாறு, பச்சையாறு, கொடுமுடியாறு முதலியன.

இந்தக் காடுகளின் வெளிப்புறத்தில் வெப்பமாகவும் வறட்சியாகவும் இருக்கும். சமவெளிப் பகுதியில் 43 டிகிரி சென்டிகிரேட் முதல் 24 டிகிரி சென்டிகிரேட் வரை இருக்கும் மலைப் பகுதிகளில் கோடைக் காலத்தில் குளிர்ச்சியாக இருக்கும்.

தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் ஆண்டு முடிய தொடர்ந்து மழைபெய்யும். வடகிழக்குப் பருவமழை அக்டோபர் முதல் டிசம்பர் முடிய பெய்யும். வடகிழக்குப் பருவமழையே இப் பகுதிக்குப் பெரிதும் உதவுகிறது.

அடர்த்தியான இக்காட்டில் நாவல், கொங்கு, மருது முதலிய மரங்கள் மிகுதியாக உள்ளன. இங்குள்ள தெட்டேரிக்கல் நீர்வீழ்ச்சி குறிப்பிடத்தக்கது.

வேங்கை நாயக்கன் அணைக்கட்டும் காண வேண்டிய ஒன்றாகும்.

களக்காடு ஒதுக்கக்காட்டில்-(1) களக்காடு - செங்கல்தேரிசாலை இந்தச் சாலையில் பராமரிப்பு பணிகள் நடைபெறுகின்றன. (2) திருக்குறுங்குடி நம்பிகோயில் சாலை காப்பகத்தின் மத்தியில் செல்லும் பாதை, இதனை இரண்டாகப் பிரிக்கிறது.

களக்காடு உய்விடம் சிங்கவால் குரங்குகள் வளர்ந்து வரும் ஒரு பகுதியாகும். இங்கு சிங்கவால் குரங்கு தவிர, புலி, காட்டுநாய், கரடி, ராட்சச அணில், குள்ள நரி, யானை, நீலகிரி மலை ஆடு மற்றும் அழகிய பல வண்ணப் பறவைகளும் உள்ளன.

களக்காடு உய்விடம், 1980-81ஆம் ஆண்டில் ரூ. 1.20 இலட்சமும், 1981-82ஆம் ஆண்டில் ரூ. 10.73 இலட்சமும் செலவிட்டு மேம்படுத்தப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 11.28 இலட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

காட்டில் - 1907-இல் கட்டப்பட்ட ஓய்வு இல்லம் தங்கும் விடுதி உள்ளது. பிறகு இது 1977-ல் புதுப்பிக்கப்பட்டது. இதற்குச் 'சிங்களம் இல்லம்' என்று பெயர். களக்காட்டிலிருந்து 20 கி. மீ. தொலைவிலுள்ள இந்த விடுதி மிக்க அழகிய சூழ்நிலையில் அமைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்கும் விடுதிகள், அலுவலர்களுக்கு இல்லங்கள் முதலியனவும் கட்டப்பட்டு வருகின்றன.

இங்கு முக்கியமாக, கடல் ஆமைகளின் முட்டைகளிலிருந்து

**பி.வி. கிரி**



குஞ்சு பொரிக்கும் பண்ணை ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இந்த இனம் அழிந்து விடாது

பாதுகாக்க மைய அரசும், மாநில அரசும் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. கடல் ஆமை களின் முட்டைகள் குஞ்சுபொரிப் பதற்குப் பண்ணை அமைத்துப் பின்னர் குஞ்சுகளைக் கடலில் விடுவதற்கு ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன. நெல்லை மாவட்டத்திலும், கன்னியா குமரி மாவட்டத்திலும் - திருச் செந்தூர் - கன்னியாகுமரி கட லோரப் பகுதிகளில் இவை விடப் படும். சுற்றுலாப் பயணிகளுக்கு இந்தக் காட்சி நல்விருந்தாக அமையும்.

## முண்டந்துறை

கடல் மட்டத்திலிருந்து 655 அடி உயரத்தில் உள்ளதுதான் முண்டந்துறை வனவிலங்கு உய் விடம். 1970-ல் துவக்கமான இந்த உய்விடத்தில், புலிகள்

அதிகம் எனக் கூறப்படுகிறது. அதனால் முக்கியமாக புலிகளுக் கான உய்விடமாக இது கருதப் படுகிறது. பாபநாசம் வன விலங்குச் சரகத்தைச் சேர்ந்து முண்டந்துறை.

இந்தக் காட்டில் புலிகள் தவிர, காட்டெருமைகள், மிளா, மான்கள், காட்டுப் பன்றிகள், கரடி, காட்டுக் கோழிகள், முள்ளம் பன்றிகள் ஆகியவையும் உள்ளன. இவையன்றி வண்ணப் பறவைகளும் இங்கு அதிகம்.

முண்டந்துறையில் தற்போது வன அலுவலராக உள்ள திரு தி. குற்றாலிங்கம் வனத்துறை யில் 22 ஆண்டுகளாகப் பணி புரிகிறார். அவர் கூறுகிறார்.

''வனவிலங்குகளைப் பாது காப்பதும், காடுகளைப் பரா மரிப்பதும் வனத்துறையின் முக்கிய நோக்கமாகும். இங் குள்ள சேர்வரலாறு நீர்ப்பகுதி களிலுள்ள மரங்களை வெட்டி நாகர்கோயில் மரக்கிடங்குக்கு அனுப்புகிறோம். இதன் மூலம் வனத்துறைக்கு நல்ல வரு வாய் கிடைக்கிறது. நீர்மூழ்கிய பகுதியை வனத்துறை சரி செய்தது போக, மீதியுள்ள பகுதியை 'சர்வே' செய்து பகி ரங்க ஏலம் விடுகிறோம். இதன் மூலம் சுமார் 12 இலட்சம் ரூபாய் கடந்த ஆண்டு வருமானம் கிடைத்தது.

''நாங்கள் காடுகளைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்போது, கரடிக் குட்டிகளையும், புலிக் குட்டிகளையும் பார்ப்பதுண்டு. ஒரு சமயம் மாலை 5.30 மணிக்கு ஒரு பெரிய புலியும், அதன் குட்டி யும் சென்று கொண்டிருந்தது. அது யாரையும் ஒன்றும் செய்ய வில்லை. விலங்குகளுக்கு நாம் தொந்தரவு கொடுத்தால்தான் அது நமக்குத் தொந்தரவு கொடுக் கும்.

''இங்கு கொடமாடிக்கு மேலே உள்ள சோலையிலும், கன்னிக் கட்டிப் பகுதியிலும் யானைகள் அதிகம் உள்ளன. இப்பகுதி முண்டந்துறையிலிருந்து 10கி.மீ. தூரத்தில் உள்ளது. யானைகள் மனிதர்களைக் கண்டால் ஒரு விதச் சத்தம் போடும். அப்போது நாம் விலகிக் கொள்ள வேண்டும்.''

முண்டந்துறை வனப்பகுதியில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற் கான அழகிய பங்களா ஒன்று உள்ளது. அது தாமிரபரணி ஆற்றங்கரையில் உள்ளது. சலசல வென ஓடும் ஆற்று நீரும், கல கலவென ஓடும் மரங்களின் இலை களின் ஒலியும் மனத்துக்கு இன்பம் தருகின்றது. அதேசமயம் மனத்துக்கு அச்சந்தரும் மந்திக் கூட்டங்களும் இங்கு உண்டு! நாம் கொஞ்சம் அசந்தால் போதும், ஒரு குரங்கு தாவி வந்து

ஜன்னலைத் திறந்து பார்க்கும். ஏதாவது பண்டம் இருந்தால் எடுத்துக் கொண்டு ஓடும். அத னால்தான் பங்களா வரண் டாவைச் சுற்றி கம்பி வலை அடித்திருக்கிறார்கள்.

இங்கு சந்தனம், தேக்கு நெருப்புக் கொன்னை, கருங் கோங்கு, வைமரம், சரக் கொன்னை இப்படிப் பலமரங்கள் பங்களாவைச் சுற்றி இருக்கின் றன. பங்களாவுக்குச் சற்றுத் தொலைவில் மலைப் பாம்பு ஒன்று உள்ளது, காட்சிக் கூடத் தில்!

வனங்கள் நம்மை வாழ்விப்ப தால், வேட்டையாடுதல் கடுமை யாகத் தடை செய்யப்பட்டுள் ளது.

வனங்களைப் பார்க்கும்போது - வனம் பூமித்தாயின் மனம், அவள் புன்னகையோ பூத்துக் குலுங்கும் புதுமலர், அவளது ஆனந்தக் கண்ணீர்தான் அடை மழை, அவள் அசைவோ இலை களின் சலசலப்பு, இயற்கை யன்னையின் எழிற்கோலம் நம் இதயத்தை வருடவில்லையா— என்று கவிதை பாடத் தோன்று கிறதல்லவா?



இந்த ஆமைக் குஞ்சுகளுக்குத் தஞ்சம் திருச் செந்தூர் கடல்



# ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!

சேர்வலாறு நீர்மின் திட்டம் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் புகைவண்டி நிலையத்திலிருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில், முண்டந்துறை வன விலங்கு சர ணாலயத்தினுள் அமைக்கப்பட்டு வருகிறது.

சேர்வலாறு தாமிரபரணி நதி யின் முக்கியமான கிளைகளில் ஒன்றாகும். தாமிரபரணி நதி, பொதிகை மலையில் அடர்த்தி யான பசுமை நிறைந்த காடு களில் கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 1500 மீட்டர் உயரத் திற்கு மேலுள்ள பகுதியிலிருந்து உற்பத்தி ஆகி, பல கிளை நதிகள் சேர்ந்து வங்க விரி குடாக் கட லில் திருச்செந்தூருக்கு வடக்கே கலக்கிறது.

பாபநாசம் நீர்மின் திட்டம் இந்த நதியின் குறுக்கே அமைக் கப்பட்டு 1946ஆம் ஆண்டில் இருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு அணை கட்டப்பட்டு தண்ணீர் தேக்கப் பட்டுள்ளது. இந்நீர்த் தேக்கத்தி லிருந்து நீர்ப்பாசனத்தின் தேவைக்குத் தக்கபடி தண்ணீர் கீழேவிடப்பட்டு தாமிரபரணியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஒரு சிறிய அணைக்கு வந்து சேர்கிறது. இந்த சிறிய நீர்த்தேக்கத்தில் இருந்து இரண்டு பெரிய எஃகுக் குழாய்கள் வழியாகத் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு, நான்கு குழாய்களாகப் பிரிந்து பாப நாசம் மின் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள நான்கு மின் உற்பத்திக் கலன்களுக்கும் சென்று அங்கு மின்சாரம் உற் பத்தியாகிறது. இங்கே அமைக் கப்பட்டுள்ள மின்கலன்களின் திறன் ஒவ்வொன்றும் 7 மெகா வாட்டுகள் ஆகும்.

சேர்வலாறு தாமிரபரணி ஆற் றுடன் கீழ் அணைக்கு மேல் புறத் தில் முண்டந்துறை என்னுமிடத் தில் சேருகிறது. கீழ் அணையின் கொள்ளளவு குறைவாக இருப்ப தால், மழைக் காலங்களில் சேர்வ லாற்றில் வெள்ளம் வரும்போது பாபநாசம் மின் உற்பத்தி நிலை யத்தின் தேவைக்கு அதிகமாக வரும் நீர் கீழ் அணையின் மீது வழிந்தோடி மின்சாரத்திற்குப் பயனில்லாமல் பாய்ந்தோடி விடு கிறது. மேலும் தாமிரபரணி குறுக்கே அணைக்கட்டுகள் மட் டுமே இருப்பதால் ஆண்டுக்குச் சுமார் 3000 மில்லியன் கன அடி தண்ணீர் விவசாயத்திற்கும் பயன்படாமல் கடலில் கலந்து விடுகிறது.

சேர்வலாறு நீர்மின் திட்டத் தின் கீழ் பின்வரும் வேலைகள் நடைபெறுகின்றன. 1. சேர்வ லாறு அணை, 2. தாமிரபரணி நீர்த்தேக்கத்தையும் சேர்வலாறு நீர்த் தேக்கத்தையும் இணைக் கும் சுரங்கம். 3. சேர்வலாறு அணையின் கீழ் 20 மெகாவாட் திறன் கொண்ட ஒரு மின் உற் பத்திக் கலன் உள்ள மின் நிலை யம்.

சேர்வலாற்றில் அணை கட்டப் படுவதால் சேர்வலாற்றின் தண் ணீர் தேக்கப்பட்டு சேர்வலாறு மின் நிலையத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் தற்போது தாமிரபரணி நீர்த் தேக்கத்தில் இருந்து கீழே விடப்படும் தண்ணீரும் சுரங்கம் வழியாகச் சேர்வலாறு தேக்கத் திற்கு வந்து சேர்வலாறு மின் நிலையத்தில் மின் உற்பத்திக்குப் பயன்படுகிறது. இவ்வாறு உற் பத்தி செய்யப்படும் மின்சாரம் சராசரி ஆண்டு ஒன்றிற்கு 55.5 மில்லியன் யூனிட்டுகளாகும்.

சேர்வலாறு நீர்த் தேக்கத்தின் காரணமாக, பாபநாசம் கீழ் அணையின் மீது தண்ணீர் வழிந் தோடுவது தவிர்க்கப்படுவதால், பாபநாசம் மின்நிலையத்திற்கு கூடுதலாகத் தண்ணீர் கிடைக் கிறது. இதனால் பாபநாசம் மின் நிலையத்தில் சராசரி ஆண் டொன்றிற்குக் கூடுதலாக 19.5 மில்லியன் யூனிட்டுகள் கிடைக் கும்.

ஆக, இத்திட்டத்தினால் சரா சரி ஆண்டொன்றிற்கு 175 மில்லி யன் யூனிட்டுகள் மின்சாரம் கிடைக்கும்.

சேர்வலாறு நீர்த்தேக்கத்தில் தண்ணீர் சேமிக்கப்படுவதால் கடலில் தண்ணீர் கலப்பதும் தவிர்க்கப்பட்டு தாமிரபரணி நீர்ப்பாசனப் பகுதிகளில் விவ சாயத்திற்குக் கூடுதலான தண் ணீர் கிடைக்க ஏதுவாகிறது. இதன் காரணமாக, சேர்வலாறு அணைக்காகும் செலவில் 60 விழுக்காட்டை பொதுப்பணித் துறை ஏற்றுக் கொள்கிறது.

ஆக, இத்திட்டம் மின்சாரம், விவசாயம் ஆகிய இருதுறைகளுக் கும் பயனளிக்கிறது. அதே தண் ணீர், சேர்வலாறு பாபநாசம் ஆகிய இரு மின் நிலையங்களிலும் மின் உற்பத்திக்குப் பயன்படுவ தும் இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.



# மகளிர் நலம்

பூ. சண்முகவடிவு
சமூகநல அலுவலர்,
நெல்லை மாவட்டம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மகளிர், குழந்தைகள், ஊனமுற்றோருக்கான பல சிறப்புத் திட்டங்கள் சமூகநலத்துறை மூலம் செயல்படுத்தப் படுகின்றன.

முதலமைச்சர் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் ஊராட்சிப் பகுதிகளில் 1536 குழந்தைகள் காப்பகங்களும் நகராட்சிப் பகுதிகளில் 262 குழந்தைகள் காப்பகங்களும் செயல்பட்டு வருகின்றன. இக்குழந்தைகள் காப்பகங்களில் 2 வயதுக்கு மேல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனுமதிக்கப்பட்டு அனைவருக்கும் ஆண்டு முழுவதும் மதிய உணவு வழங்கப்படுகிறது. இத்திட்டம் நல்லமுறையில் செயல்பட ஒவ்வொரு குழந்தைகள் காப்பகத்திலும் ஒரு குழந்தைகள் நல அமைப்பாளரும் மதிய உணவு தயாரிக்கவும் குழந்தைகளைக் கவனிக்கவும் இரு உதவியாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். குழந்தைகளுக்கெனக் கல்வி உபகரணங்களும் விளையாட்டுப் பொருள்களும் உள்ளன.

30.6.82க்கு முன்பு செயல்பட்டு வந்த காப்பகங்கள் அனைத்தையும் நர்சரி பள்ளிகளாக மாற்றி அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அக்காப்பகங்களில்பணியாற்றும் குழந்தைகள் நல அமைப்பாளர்கள் தற்போது ஒரு மாத சிறப்புப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இம்மாவட்டத்தில் 930 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

இம்மகளிர் மன்றங்களில் குழந்தைகள்நலம், சுத்தம், சுகாதாரம் குடும்பநலம், சிறுசேமிப்பு ஆகியவை கற்றுத் தரப்படுகின்றன. சமையல் செய்முறை விளக்கங்களும் செய்து காண்பிக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கென அரசு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,24,000 - நிதி ஒதுக்கீடு செய்கின்றது. குழந்தைகள் கண்காட்சி நடத்தி சிறந்த குழந்தைகளுக்குப் பரிசு வழங்கப்படுகிறது. ஆண்டுக்கொருமுறை சுற்றுலாவுக்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆண்டுஒன்றுக்கு 8 பயிற்சி முகாம்கள் சமூகநலத்துறை மூலம் நடத்தப்படுகிறது.

இத்துறையின் கீழ் ஆத்தூரில் ஆதிதிராவிடர்களுக்கு ஒரு தையல் பயிற்சி நிலையம் நடைபெறுகிறது. அதில் 15 பெண்கள் பயிற்சி பெறுகிறார்கள். தேவர் குலத்தில் பிற்பட்ட வகுப்பினரான 18 பெண்கள் இங்கே பயிற்சி பெறுகிறார்கள். ரெட்டியார்பட்டியில் 19 பெண்கள் பயிற்சி பெறுகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 30 உதவித்தொகை வழங்கப்படுகிறது.

மூக்குப்பேரியில் 22 பெண்களும் மருதகுளத்தில் 10 பெண்களும் பனைஓலைப் பயிற்சிபெறுகிறார்கள். திருச்செந்தூரில் 9 பேர் துணி பொம்மை தயாரிக்கும் பயிற்சி பெறுகிறார்கள். இவர்களுக்கும் ரூ. 30- உதவித்தொகை வழங்கப்படுகிறது.

பாளையங்கோட்டையில் ஒரு மெழுகுவர்த்தி உற்பத்தி நிலையம் உள்ளது. அங்கு 6 அபலைப் பெண்கள், பயிற்சிக்குப் பின் மெழுகுவர்த்தி தயாரிக்கிறார்கள். அவர்களுக்கு ரூ.100 மாதக் கூலியாக வழங்கப்படுகிறது.

மறுமணம் செய்து கொண்ட 30 வயதுக்குட்பட்ட இளம் விதவைகளுக்குத் தலா ரூ. 1000- தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கப்படுகிறது. விதவைகளின் குழந்தைகளில் 269 குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 13,000க்கு 1 முதல் பிளஸ் 2 வரை புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. ஊனமுற்ற 640 குழந்தைகளுக்கு 1 முதல் 8 வரை படிப்பவர்களுக்கு ரூ. 25 உதவித்தொகை வழங்கப்படுகிறது. விதவைகளின் மகள் திருமணத்திற்கு ஆயிரம் ரூபாய் மான்யம் வழங்கப்படுகிறது.

70 ஏழை மாணவிகளுக்குத் தட்டச்சு படிக்க ஒரு மாணவிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 150ம், கணக்கியலுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 165ம், சுருக்கெழுத்து பயில ரூ. 220ம் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

விதவைகள், அனாதைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எட்டாம் வகுப்புவரை படித்திருந்தால், அவர்களுக்கு இரண்டாண்டுக் காலக் குறுகிய காலப் பயிற்சி அளித்து பள்ளி இறுதித் தேர்விற்கு அனுப்பப்படுகிறது. எட்டாம் வகுப்புவரை படித்தவர்களுக்குத் தையல் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

பணிபுரியும் மகளிர் இல்லம் ஒன்று தூத்துக்குடியில் இத்துறையால் நடத்தப்பட்டு வருகிறது. அதில் தற்போது 26 பேர் தங்கியுள்ளனர்.

பாளையங் கோட்டையில் நடைபெறும் பிளாரன்ஸ் ஸ்வின்ஸன் செவிகேளாத - பேசுந்திறனற்ற விழி இழந்தோர் பள்ளி, சிவசைலம் காந்தி கிராம சாந்தி கல்வி நிறுவனம் முதலியனவாகும். இம்மூன்றுசிறப்புப் பள்ளிகளுக்கும் சமூகநலத்துறையிலிருந்து ஆசிரியர் ஊதியம், பராமரிப்புத் தொகை வழங்கப்படுகிறது.

தன்னிச்சை நிறுவனங்களால் நடைபெற்று வரும் குழந்தைகள் காப்பகம், ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள், பணிபுரியும் மகளிர் இல்லம், காவலர் குடியிருப்பு மகளிர் மன்றம் ஆகியவைகளுக்குத் தமிழ்நாடு மாநில சமூகநல வாரியம் மூலம் அவ்வப்போது நிதி உதவி வழங்கப்படுகிறது.





# பார் போற்றும் பத்தமடைப் பாய்கள்

அந்த ஊர் மிகச் சிறியது என்றாலும், அதன் புகழோ மிகவும் பெரியது; மூர்த்தி சிறியது என்றாலும் கீர்த்தி பெரியது என் பார்களே அப்படி!

திருநெல்வேலியிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்தில், முண்டந்துறை புலிகள் உய்விடத்திற்குப் போகிற வழியில் உள்ளது தான் பத்தமடை கிராமம்.

சேலம் என்றதும் மாம்பழம் நினைவுக்கு வருவதுபோல, பத்தமடை என்றதும் பாய்தான் நம் கண்முன் காட்சியளிக்கிறது.

முஸ்லீம்கள் மிகுதியாக வாழும் பகுதியில், பாய் தயாரிக்கும் தொழிற்கூடம் உள்ளது. உள்ளே நுழைகிறோம். சின்னஞ்சிறிய கைகளினால் உருவான பலவண்ணப் பாய்கள் நம் கண்ணைக் கவர்கின்றன.

இவர்களுக்கென ஒரு சங்கம் உள்ளது. அது,- பத்தமடை உயர்ரகப் பாய் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட். இது 1954ல் துவக்கப்பட்டது. கடந்த 28 ஆண்டுகளாக இச்சங்கம் பாய் உற்பத்தியில் பேரும் புகழும் பொருளும் ஈட்டி வருகின்றது. தற்சமயம் இச்சங்கத்தில் 190 உறுப்பினர்கள் உள்ளனர். கூட்டுறவு அடிப்படையில் இத்தொழில். இவர்களுக்கு நிலையான வருமானத்தையும் புகழையும் ஈட்டித் தருகின்றது.

அங்குள்ளவர்களை மேலும் விசாரிக்கும்போது, கடந்த 300 ஆண்டுக் காலமாகவே இத்தொழில் நடந்து வருகிறதென்றும், பரம்பரையாக இது இன்றளவும் தொடர்ந்து வருகிறது என்றும் அறிகிறோம். குலத் தொழில் கல்லாமல் பாகம்படும் என்பது போல, இத்தொழில் ஒரு குடும்பத் தொழிலாக, குடிசைத் தொழிலாக ஆல்போல் தழைத்து வருகிறது. குடும்பத்தில் பெரியவர்கள் மட்டுமல்ல, சிறுவர்கள் கூட இத்தொழிலில் ஈடுபட்டு குடும்ப வருவாய்க்குக் கை கொடுக்கிறார்கள். இவர்கள் ஒரு நாளைக்கு நான்கு ரூபாய் வரை சம்பாதிக்கிறார்கள். குடும்பத்தில் எல்லாரும் இத்தொழிலில் ஈடுபடுவதால் குடும்ப எண்ணிக்கையைப் பொறுத்து வருமானம் சற்றுக் கூடுதலாகக் கிடைக்கிறது. அதாவது வேலைக்குத் தகுந்தாற் போல கூலி கிடைக்கிறது. பொதுவாக, ஒரு குடும்பத்தில் கோரை பதனிடுதல் முதல் நெசவு வரை எல்லாருக்கும் எல்லாத் தொழிலும் தெரியும். சுமார் 50 குடும்பங்கள் இத்தொழிலில் ஈடுபட்டு வேலைவாய்ப்பு பெற்றுள்ளன.

பாய்த் தொழிலுக்கு முக்கியமான மூலப்பொருள் கோரை இது எங்கு கிடைக்கிறது? நெல்லையில் தாமிரபரணி பாயும் கரைகளில் கோரை நிறையக் கிடைக்கிறது. இது தவிர கரூரிலிருந்தும் தருவிக்கப்படுகிறது.

சாதாரணக் கோரைதான் என்றாலும், இதைப் பதப்படுத்தி வகைப்படுத்தி, அதைச் சன்னம் சன்னமாகக் கிழித்து, அதில் கைவண்ணம் காட்டுவதே பெருங் கலையாயிற்றே?

நூலைச் சாயத்தில் தோய்த்து வண்ணப்புடவை . தயாரிப்பது போல, கோரை நாரையும் சாயத்தினால் ஊறவைத்து வண்ணப் பாய்கள் தயாரிக்கின்றனர்.

படுக்கைப் பாய்கள், மடிக்கும் பாய்கள், பந்திப் பாய்கள், உட்காருவதற்கான பாய்கள் இப்படி பல அளவுகளில், பல வண்ணங்களில், பல வடிவமைப்புகளில் தயாரிக்கப்படுகின்றன. கோரை



களினால் பாய்கள் தவிர அழகிய கைப்பைகள், தட்டுகள், மணி பர்சுகள் முதலியனவும் தயாரிக்கப்படுகின்றன. இவையன்றி பெயர்களும்கூட பாய் நெசவில் மிக நேர்த்தியாகச் செய்யப்படுகிறது. எல்லாவற்றுக்கும் எல்லா இடங்களிலும் நல்ல வரவேற்பு இருக்கிறது. கைவண்ணமும் தரமும் இருந்தால் எதுவும் எளிதில் விலை போகும் அல்லவா?

பாய்நெசவு மிகவும் கவனமாகச் செய்யப்படுகிறது. வெள்ளை மற்றும் வண்ணங்களில் நெசவு செய்யும்போது, தேவைப்படும் வடிவங்கள் (டிசைன்கள்) அதில் வரவழைக்கப்படுகின்றன. சாதாரணப் பாய் தயாரிக்க 3 நாட்கள் ஆகும். உயர்ரகப் பாய்கள் தயாரிக்க 10 அல்லது 15 நாட்கள் ஆகும். ஒரு பாயின் குறைந்த விலை ரூ. 6.50 லிருந்து அதிக விலை ரூ. 120 வரை உள்ளது. உயர்ரகப் பாயின் அதிக நீளம் 6 அடி அகலம் 3 அடி. உயர் ரகப் பாய், சன்னமான துணி போன்று மிகவும் மிருதுவாக அழகாக இருக்கின்றது.

பத்தமடை கிராமத்தில் தயாராகும் பாய்கள் நம்நாடு மட்டுமல்ல, உலகமே விரும்பி வாங்குகிறது. இந்தப் பாய்கள் ரஷ்யாவுக்கு ஏற்றுமதியாகிறது. ராணி எலிசபெத்துக்கும், அவரது மகன் சார்லஸ் திருமணத்துக்கும் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாயின் நேர்த்தியைப் பண்டித நேரு அவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். இந்தப் பாய்களை காதிகிராப்ட், வி.டி.ஐ. ஆகிய நிலையங்களிலும் நாம் வாங்கிக் கொள்ளலாம்.

பாய் நெசவுக்கு முந்தி, உயர் ரகப் பாய்களுக்கான கோரைகள் முறுக்கேற்றப்படுகின்றன. 40, 50 நெம்பர் பாய்களுக்கான நார் அவ்வாறு முறுக்கேற்றப்படுவதில்லை.



கோரை இழைக்கும் பணி நடைபெறுகிறது.

பச்சைக் கோரையானது உருண்டை வடிவில் இருக்கும். அதை இரண்டாகக் கிழித்து வெயிலில் காயப்போடுவார்கள். 10-15 நாள் கழித்து ஓடுகிற தண்ணீரில் ஊற வைப்பார்கள். மூன்று நாள் கழித்து அதை எடுத்து, அதிலுள்ள சதைப் பற்றை எடுத்துவிட்டு, ரக வாரியாகக் கிழிப்பார்கள். இவ்வாறு நார் எவ்வளவு மெல்லியதாகக் கிழிக்கப்படுகிறதோ அது பாயின் தரத்தை உயர்த்துகிறது. நூலில் 100ஆம் நெம்பர் இருப்பது போல, பாய் தயாரிக்கும் கோரை நாரிலும் 40, 50, 100, 120, 140 என்று நெம்பர்கள் உள்ளன.

முதலில் கோரையைப் பதப்படுத்துகிறார்கள். இதை 'இழைத்தல்' என்கிறார்கள்.

1980-81ல் ரூ. 1,71,028க்குப் பாய்கள் தயாரிக்கப் பெற்றன. விற்பனை ரூ. 2,32,650. இலாபம் ரூ, 10,659. தமிழகத்தில் குறிப்பாக நெல்லைக்குப் பெருமை சேர்க்கும் பத்தமடைப் பாய்கள் பார்போற்றும் பாய்களாக விளங்குகின்றன என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிடவேண்டும்.

— பி. வி. கிரி.

## கயத்தாற்றில் கட்டபொம்மன் நினைவுத் தூண்

வெள்ளையனை எதிர்த்து வீரமுழக்க மிட்ட வீரபாண்டியக் கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட கயத்தாறு என்னுமிடத்தில் அமைந்துள்ள நினைவுத்தூண்தான் இது. 16.7.1970இல் இத்தூண் எழுப்பப்பெற்றது.



# சிறுசேமிப்பில் முதலிடம் வகிக்கும் மாவட்டம்!

சேமமுற வாழ்வதற்குச் சிறுசேமிப்பு இன்றியமையாதது என்பதை நாமறிவோம்.

நெல்லைமாவட்டம் தொடர்ந்து 1978-79, 1979-80, 1980-81 ஆகிய மூன்று ஆண்டுகளாகச் சிறுசேமிப்பில், மாநிலத்திலேயே முதலிடம் வகித்து வருகின்றது. அதற்குக் காரணம் என்ன?

இந்த இயக்கம் மக்கள் இயக்கமாக மாறியதுதான்!

பெருவாரியான மகளிர் முகவர்கள் மற்றும் ஒழுங்குபடுத்தப் பட்ட முகவர்களின் சலியா உழைப்பின் மூலம் இவ்வியக்கம் மக்களின் நம்பிக்கையைப் பெற்றது.

இந்த முகவர்களைக் கவனமாகத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அடிக்கடி பயிற்சி மற்றும் பல வழிகளில் ஊக்கம் அளித்து, சரியான முறைகளில் வழி நடத்துவதற்கு ஊராட்சி ஒன்றியக் களப் பணியாளர்கள், நகராட்சி மத்திய மாநிலச் சேமிப்பு அலுவலர்கள் இடையறாது உதவினர்.

அஞ்சலகங்களும் தங்களது பணியினைச் சுணக்கமில்லாமலும் பயனுள்ள வழியிலும் செயல்பட அஞ்சலகச் சேமிப்பு வளர்ச்சி அலுவலர் மற்றும் பல அலுவலர்கள் உதவினர். கிராமங்களில் பரவியுள்ள கிளை அஞ்சலக அலுவலர்களின் பணியும் குறிப்பிடத் தக்க அளவில் அமைந்தது. எனவே இது ஒரு கூட்டு முயற்சி என்றால் மிகையாகாது.



1981-82-ல் குறியீடு ரூ. 275 இலட்சம். வசூல் மொத்த தொகை ரூ. 1822-95 இலட்சம். முதிர்ச்சி அடைந்த கணக்குகளுக்குத் திரும்பக் கொடுத்த தொகை போக நிகர வசூல் தொகை ரூ. 427.25 இலட்சம். இதே போல், 1982-83 ல் இலக்கு ரூ. 300. இலட்சம். மொத்த வசூல் ரூ. 1297.78 இலட்சம். நிகர வசூல் தொகை ரூ. 261.11 (நவம்பர் முடிய) இலட்சம்.

மகளிர் முகவர்கள் பெருவாரியாகப் பட்டி தொட்டிகளில் நியமிக்கப்பட்டனர். கிராமங்கள் தோறும், வீடு வீடாகச் சேமிப்புப் பிரச்சாரம், அஞ்சலக அலுவலர்கள், ஊர்நல அலுவலர்கள், விரிவாக்க அலுவலர்களின் நேரடிக் கவனிப்பில், மாவட்ட ஆட்சித் தலைவரின் ஊக்கத்தின் பேரில், மத்திய மாநில சேமிப்பு அலுவலர்களின் தொடர்ந்த ஈடுபாட்டுடன் நடைபெற்றது. இதன் காரணமாக, ஆயிரக்கணக்கில் கணக்குகள் குவிந்தன. பல கிராமங்கள் முழுச் சேமிப்புக் கிராமங்களாக அறிவிக்கப்பட்டன.

அதற்குப் பிறகு உள்ள ஆண்டுகளில் இந்த இயக்கம் மேலும் மேலும் வளர்ந்தது. மக்கள் சேமிப்பினை அஞ்சலகம் மூலம் சேமிக்கத் துவங்கினர். நீண்ட காலச் சேமிப்பும் அவசியம்-அதனை அஞ்சலகம்மூலம் சேமித்தால் வட்டி அதிகம் என்ற உணர்வும் ஏற்படலாயிற்று. எனவே, ஒழுங்குபடுத்தப்பட்ட முகவர்கள் மாவட்ட முழுவதும் வலை பின்னியதுபோன்று தோன்றினர். பலன், வரலாறு காணாத அளவில் தனிப்பட்ட மக்கள் மூலமும், அஞ்சலகக் குறிப்பிட்ட காலவைப்புக் கணக்குகளின் மூலமும், தேசிய சேமிப்புப் பத்திரங்கள் விற்பனை மூலமும் வரவு பெருகுகின்றது.

தரமான முகவர்களின் சாதனை விவரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1977—78 | ... ரூ. | 8,64,450 |
| 1978—79 | ... ரூ. | 40,16,280 |
| 1979—80 | ... ரூ. | 75,41,470 |
| 1980—81 | ... ரூ. | 92,27,830 |
| 1981—82 | ... ரூ. | 1,04,47,250 |
| 1982—83 (நவம்பர் முடிய) | ... ரூ. | 1,30,00,000 |

இந்தக் கால கட்டத்தில் தொடர்ச்சியாக 800-க்கும் மேற்பட்ட, இளை அஞ்சல அலுவலர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டது. இதன் விளைவாக இளை அஞ்சல அலுவலர் மூலம் வசூல் மேலும் தீவிரமடைந்தது. அஞ்சலகங்களின் ஒத்துழைப்பு கணிசமான அளவு உயர்ந்தது ஒரு சிறப்பு அம்சம்.

மேலே கண்ட சிறப்பு அம்சங்கள் தவிர சம்பளப்பட்டியல் சேமிப்பு, 'சஞ்சாயிகா' என்று அழைக்கப்படும் பள்ளி மாணவர் சேமிப்பு ஆகிய இரு திட்டங்களும் முறையாக அமல் நடத்தப்பட்டன.

சம்பளப் பட்டியல் சேமிப்பு திட்ட மூலம் வசூல் விவரம் :—

| | | |
|---|---|---|
| 1977—78 | ... ரூ. | 52,39,000 |
| 1978—79 | ... ரூ. | 81,72,000 |
| 1979—80 | ... ரூ. | 77,79,000 |
| 1980—81 | ... ரூ. | 85,72,310 |
| 1981—82 | ... ரூ. | 1,01,46,675 |
| 1981—83 (நவம்பர் முடிய) | ... ரூ. | 76,24,500 |

1978—79-ல் நெல்லையின் சாதனை 253.43 இலட்சம் குறியீடாகிய 75 இலட்சத்தைவிட இது 338 சதம் ஆகும். தமிழக அரசு, மேற்கண்ட சாதனையைப் பாராட்டி வெள்ளிக்கேடயம் இம்மாவட்டத்திற்கு வழங்கியுள்ளது. சுழல் கேடயம் பரிசளிக்கும் போது மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் மூன்றாண்டுகள் தொடர்ச்சியாக முதலிடம் வகித்தால், கேடயம் சுழலாது, நெல்லைக்குப் பெருமையளிக்கும் வண்ணம் நிலைபெறும் என்றார்.

நெல்லை 1979-80-லும் முதலிடம் பெற்றது. 1980-81-ல் மறுபடியும் முதலிடம் பெற்று சுழல் கேடயத்தைச் சுழலவிடாமல் நிலை நிறுத்தியது. 1978-79, 1979-80 இரண்டு ஆண்டுகளுக்கும் தமிழக அரசு, குறியீட்டை அடைந்ததற்கு ரூ. 25,000மும் முதலிடம் பெற்றமைக்கு 1 இலட்ச ருபாயும் ஆக 1,25,000 ஊக்கப் பரிசாக நெல்லைக்குத் தந்து பெருமைப்படுத்தியது. 1980-81ஆம் ஆண்டிற்கும் இதே போல் ஊக்கப் பரிசு எதிர்பார்க்கப்படுகிறது.

1978-79, 1979-80 ஆண்டில் அரசினர் வழங்கிய ஊக்கப் பரிசுத்தொகையாகிய ரூ. 2.50 இலட்சத்தை இம்மாவட்டத்தில் அதிகமாக மக்கள் கூடும் இடங்களிலும், பேருந்து நிலையங்களிலும் மணிக் கூண்டுகள் கட்டி சிறுசேமிப்புத் திட்டம் மற்றும் குடும்பநலத் திட்டம் போன்ற திட்டங்கள் விளம்பரப்படுத்த அரசினர் அனுமதி பெற்று, திட்டம் செயல்படுத்தப்படுகிறது.



ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழகமெங்கும் 2 இலட்சம் வீடுகளைக் கட்டி முடிக்க தமிழக அரசு திட்டம் வகுத்தது. இந்தத் திட்டத்தினை கோட்ட மற்றும் வட்ட அளவில் அமைக்கப்பட்ட கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் நிறைவேற்றவும் முடிவு செய்யப்பட்டது.

இந்த அடிப்படையில் நெல்லை மாவட்டத்தில் 1981-82 ஆம் ஆண்டில் 3000 வீடுகள் கட்டி முடிக்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு, குறியீடும் நிறைவேற்றப்பட்டு விட்டது. 1980-81ஆம் ஆண்டு முதல் 1982-83 ஆம் ஆண்டு அதாவது 30.11.82வரை 7150 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு உள்ளன. அதில் 5762 வீடுகள் ஆதிதிராவிட மக்களுக்குக் கட்டப்பட்டு உள்ளன.

1.7.82 முதல் 30.11.82 முடியவுள்ள காலத்தில் 1509 கடன் மனுக்கள் பெறப்பட்டு, தற்சமயம் கடன் மனுக்கள் வாங்கவும் ஒப்புவிக்கவும் தடையுள்ளது. ஹட்கோ திட்டத்தின் கீழ் மட்டும் கடன் மனு வாங்கத் தடையில்லை. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்குப் பட்டுவாடா கோரிக்கைகள் அனுப்பப்பட்டதில், இன்னும் 1705 கடன் மனுக்களுக்கு ரூ.48.43 இலட்சம் பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டியுள்ளது.

1.7.82 முதல் 30.11.82வரை திருநெல்வேலி மாவட்டத்தில் 417 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. அதில் 362 வீடுகள் ஆதிதிராவிடர்களைச் சார்ந்தது.

31.10.82 தேதியில் 904 வீடுகள் கட்டப்பட்டுப் பல்வேறு நிலையில் உள்ளன. அவை அடிமட்டம்-765, ஜன்னல்மட்டம்- 110, கூரை மட்டம்-29, ஆக மொத்தம் 904 வீடுகள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 10 கிராமிய வீட்டுவசதிச் சங்கங்களை நிர்வகிக்க, ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒரு கூட்டுறவு முதுநிலை ஆய்வாளரின் பதவி இலவசமாக அரசினரால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

ஆதிதிராவிடர்களுக்கும், கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்த ஆதிதிராவிடர்களுக்கும் மற்றும் பெரும்பான்மையாக ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதியில் வசிக்க முன்வரும் ஆதிதிராவிடரல்லாதாருக்கும் வழங்கப்படும் கடன் தொகைக்கு வட்டி வசூலிக்கப்படுவதில்லை. ரூ.3750 மதிப்பீடுடன் உள்ள வீட்டுக்கு ரூ. 3000 கடன் தொகை வழங்கப்படுகிறது. ஆதிதிராவிட மக்களுக்கு ரூ 1000 மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் கட்டும் உறுப்பினர்களுக்குச் சிமெண்ட் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதற்காக இச்சங்கங்கள் மூலம் சிமெண்டும் விநியோகம் செய்யப்படுகிறது.






**துணை மின் நிலையங்கள்:**

1. 230 கே. வி. தானியங்கி துணை மின் நிலையம் 2, 2. 110 கே. வி. துணை மின் நிலையம் 5, 3. 66 கே. வி. துணை மின் நிலையம் 16, 4. 33 கே. வி. துணை மின் நிலையம் 3, 5. 66 கே. வி. மின்பாதை துணை மின் நிலையம் 4, 6. 33 கே. வி. மின் பாதை துணை மின் நிலையம் 1.

**1982—83 ஆண்டில் அமைக்கப்படவிருக்கும் துணை மின் நிலையங்கள்:**

1. நாராயணபுரம் 66 கே. வி. துணை மின் நிலையம், 2. சுரண்டை 66 கே. வி. துணை மின் நிலையம், 3. பாளையங்கோட்டை 110 கே.வி. துணை மின் நிலையம், 4. உடன்குடி 33 கே. வி. துணை மின் நிலையம்.

புதிதாகத் துவங்கப் பெற்ற தூத்துக்குடி அனல் மின் நிலையம் 210 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மூன்று இயந்திரங்களுடன் செயல்பட்டு வருகிறது. அம்பாசமுத்திரம் வட்டத்தில் பாபாநாசத்தின் அருகில் சேர்வலாறு என்ற இடத்தில் புனல் நீர் மின் உற்பத்தி நிலையம் கட்டுமான வேலைகள் நடைபெற்று வருகின்றன. மணிமுத்தாறு, மேல்தாம்பிரபரணி, புனல்நீர், மின்நிலைய திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கூடங்குளம் அருகே அணு மின் நிலையம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கூறிய திட்டங்களின் நற்பயனாக, திருநெல்வேலி மாவட்டத்திற்கு மட்டுமல்லாது அண்டை மாவட்டங்களான இராமநாதபுரம், மதுரை மற்றும் கன்னியாகுமரி ஆகியவற்றின் மின் தேவையைத் தன்னிறைவுசெய்வதோடு, நெல்லை மாவட்டத்தில் குறிப்பாக, கிராமப்புறங்களில் மின் இழப்பு குறைந்து. மின் அழுத்தக் குறைபாடு வெகுவாகச் சீர் செய்யப்படும்.

**அரிசனக் குடியிருப்புகளுக்கு:**

1. 1-11-82 நிலவரப்படி மொத்த அரிசனக் குடியிருப்புகளின் எண்ணிக்கை, 859. 2. 30-11-82 முடிய தெரு விளக்கு மின் இணைப்பு வழங்கப்பட்ட அரிசனக் குடியிருப்புகள், 857. 3. மின் இணைப்பு வழங்கப்பட வேண்டிய மீதி அரிசனக் குடியிருப்புகள் 2, (1) சிவலப்பேரி அரிசனக் குடியிருப்பு—நாங்குனேரி தாலுகா, (2) பிரதான்குளம் அரிசனக் குடியிருப்பு — (மனகாவலம்பிள்ளைநகர்) திருநெல்வேலி தாலுகா.

**குடிசைகளுக்கு:**

1. 30-10-82 முடிய பெறப்பட்ட மனுக்கள்-3,048. 2. 30-11-82 முடிய மின் இணைப்பு வழங்கப் பெற்ற குடிசைகளின் எண்ணிக்கை-21,974. 3. 30-11-82 முடிய மின் இணைப்பு வழங்கப்பட வேண்டிய மீதி குடிசைகளின் எண்ணிக்கை - 2,818.

# நூல் நயம்

## புனித கோயில்களும், புண்ணிய தீர்த்தங்களும்!

**ஆசிரியர்:**
புலவர் சி. முத்துப் பிள்ளை,

**கிடைக்குமிடம்:**
இலக்குமி நிலையம்,
10, காசிம் சாகிப் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

**விலை ரூ. 21.50 பக். 340**

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றின் சிறப்புடையவாகிய சிவன், சக்தி, திருமால், முருகன், விநாயகர் உள்ளிட்டனவுமான ஐம்பத்து மூன்று திருக்கோயில்களின் புனித அருள் நலத்தை விளக்கும் அற்புதமான நூலாகத் திகழ்கிறது இது.

பக்திநெறி அன்பர்கட்கும் பயன்பட வேண்டும் என்ற நோக்கோடு இந்நூல் எழுதப்பட்டிருந்தாலும் திருக்கோயில்கள் பற்றிய பல விவரங்களை எடுத்துரைக்கின்றது. திருக்கோயில்கள் அமைப்பு முறையிலிருந்து, தலங்களின் தன்மை பெருமைகளை விளக்கி, திருக்கோயில் வழிபாட்டு முறைகளையும் விளக்கிக் கூறுகிறது இந்நூல்.

திருக்கோயில்களைப் பற்றிய முறையான விவரங்களைவேண்டுவோரும், பக்திநெறி மிகுந்த அருள்நலம் வேண்டுவோரும் விரும்பிப் படிக்க பயன்தரக்கூடிய நிலையில் உள்ள இந்நூல், அனைவருக்கும் பயன்தரத்தக்கதாகும்.

## மேடை மின்னல்

**ஆசிரியர்:**
மு.முத்துக்காளத்தி,

**கிடைக்குமிடம்:**
பாரி நிலையம்,
184, பிராட்வே,
சென்னை-600 001.

**விலை ரூ. 10.75 பக். 168**

நெருப்பினும் சுடும் புழுதியில் செருப்பின்றி தனக்காகத்தேய்ந்த 'ஆசைக்குரிய மீசை வாத்தியார்' ஜான் ஜேசுதாசன் அவர்களின் திருப்பாதங்களுக்கு ஆசிரியர் சூட்டியுள்ள இந்தக் கவிமலர்கள் பல்வேறு நேரங்களில் கவியரங்குகளில், விழாக்களில், மாநாடுகளில் கருத்தரங்குகளில் தனி நிகழ்ச்சிகளில் பாடியதாகும்.

புதுக்கவிதைப் போக்கில் அமைந்த இக்கவிதைகள் மேடையில் வீசிய மேன்மைத் தமிழின் பாட்டரங்குத் திங்களிகள்.

வாழும் நெறிமுறையை வகைப்படுத்திக் காட்டுவதில் வல்லவரான நூலாசிரியர்

''கண்டு மகிழ்ந்து குலவினால் போதாது
கொண்டு கொடுத்துக்
கொள்வோம் உறவு''

என்று ஒருமைப்பாட்டு உணர்வுக்கு எளிமையாக அடித்தளம் அமைத்துக் காட்டுகிறார். இப்படி எத்தனையோ எடுத்துக்காட்டுகளை நயம்பட எடுத்துரைக்கலாம்.

சிந்தனை முத்துக்களின் குவியலான இந்நூல், எல்லாரும் படித்துப் பயனடைய வேண்டிய பைந்தமிழ் நூலாகும்.

## பாரதியைப் பற்றி ஜீவா!

**ஆசிரியர்:**
ப. ஜீவானந்தம்,

**கிடைக்குமிடம்:**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட்,
சென்னை-600 098.

**விலை ரூ. 6.50 பக். 134**

1962-ஆம் ஆண்டில் பாரதியைப்பற்றி அவருடைய பிறந்த நாள் விழாவில் மறைந்த தலைவர் ஜீவானந்தம் அவர்கள் ஆற்றிய உரையே பாரதியைப் பற்றி கடைசியாக ஆற்றிய உரையாகும் அதில் 'பாரதியார் பெயரில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும்' என்று ஜீவா கூறியுள்ளார். இந்தக் கருத்தை இன்று தமிழ் நாடு அரசு செயல்படுத்தியுள்ளதை அறிவோம்.

இப்படி பாரதியைப் பற்றி தீர்க்க தரிசனமான கருத்துக்களை ஜீவா மொழிந்ததை அள்ளித் தருகிறது இந்நூல்.

கவியரசர் பாரதியாரின் படைப்புகளை புதிய நோக்கில் ஆராய்ந்து ஜீவானந்தம் அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் பாரதியின் புகழுக்கு அடித்தளமாக அமைந்தவை ஆகும்.

பாரதி உலகமகாகவி என்பதை ஆணித்தரமாக ஜீவானந்தம் அன்றே கூறிய கருத்துக்கள் எத்தனை உண்மையானவை என்பதை இன்று இந்நூலைப் படிப்பவர்கள் ஒவ்வொருவரும் உணருவர்.

'பாரதியைப் பற்றி ஜீவா' என்ற இந்நூல் இரண்டாம் பதிப்பாக இப்பொழுது வெளிவந்துள்ளது. பாரதி நூற்றாண்டு விழா ஆண்டில் வெளியாகியுள்ள சிறந்த நூல்களில் இது மிகவும் பாராட்டுக்குரிய நூலாகும்.

—மாமூலன்

## சர்வாதிகாரி இடி அமீன்

**ஆசிரியர்:** பிரபு சங்கர்,
**வெளியீடு:** மருதமலையான் பதிப்பகம்,
33, பொன்னுச்சாமி நாயக்கன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை-600 014

**பக்கம்: 376 விலை ரூ. 24.**

உகாண்டாவை ஆட்சி செய்த சர்வாதிகாரி இடி அமீனின் வரலாற்றை இனிய தமிழ்நடையில் விறுவிறுப்பான முறையில் எழுதியிருக்கிறார் நூலாசிரியர். இட்லரைவிடக் கொடியவன், ஜார் மன்னனைவிடக் கொடுங்கோன்மையாளன் இடிஅமீன் என்பதைத் தக்க சான்றுகளுடன் தெரிவித்து நிறுவியிருக்கிறார்.

கொடூரமான நடவடிக்கைகளும் குரூரமான சிந்தனைகளும் பிறரைத் துன்புறுத்தி இன்பம் காணும் சுபாவமும் கொண்ட இடிஅமீன் - நமது புராண காலத்துக் கம்சன் - சூரபத்மன் போன்ற கொலைபாதக உணர்வுகளைக் கொண்டவன் என்னும் செய்தி இந்நூலில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காட்டு தர்பார் எப்படி இருக்கும் என்பது காட்சிபூர்வமாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

வரலாற்று நூலைப்படிக்கின்ற உணர்வு ஏற்படவில்லை - ஒரு சுவையான நவீனத்தைப் படிப்பது போல - ஆர்வநிலைகள் நிறைந்துள்ள ஒரு நாடகத்தைப் பார்ப்பது போன்ற உணர்வே நமக்கு ஏற்படுகிறது. நிகழ்ச்சிகளை வாசகர்களுக்கு ஆசிரியர் எடுத்துக் கூறியுள்ள பாங்கு தான் இச்சிறப்புக்குக் காரணம்.

இடி அமீனால் சித்திரவதைக்கு ஆளாகிய ஆடவர்களையும், பெண்டிரையும் குறித்து நாம் அறிந்து கொள்ளும் போது - அவர்களுக்காக நமது உள்ளம் இரங்குகிறது; கண்களில் நீர் சொரிகின்றது.

ஆசிரியரின் முன்னுரையே ஒரு நவீனம்போல் சுவையளிக்கிறது. படிக்கத் தொடங்கினால் கீழே வைக்க முடியாதபடி, அலுப்புத் தட்டாதவாறு நூல் அமைந்துள்ளது பாராட்டுக்குரியது. ஓர் ஆராய்ச்சியாளரின் திறமையும் பண்பும் இந்நூலாசிரியருக்கு உண்டு என்பது புரிகிறது. ஒவ்வொரு அத்தியாயமும் சுவையான தலைப்புப் பெற்றுள்ளது. ஆசிரியரின் உழைப்பு, நூல் முழுதும் காணப்படுகிறது.

—தமிழ்ப்பித்தன்

# தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம்

பள்ளிகளில் ஏற்படுகிற அமைதியின்மையைப் போக்கும் நோக்கத்தோடு, அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டன் நகரில் 1895 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் பெற்றோர் ஆசிரியர் கழகம் நிறுவப்பட்டது; தமிழகத்தில் இக்கழகம் 1964ல் அமைக்கப்பட்டது. இது சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு செயல்படுகிறது. இதற்கு மாவட்ட அளவிலும் பள்ளி அளவிலும் கிளைகள் உள்ளன.

தமிழகத்தைப் பொறுத்தவரை, கல்வி அமைச்சரைத் தலைவராகவும், அரசுக் கல்வித்துறை ஆணையர்-செயலர், பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோரைத் துணைத் தலைவர்களாகவும் கொண்டு செயல்படும் இக்கழகம், ஒவ்வோராண்டும் சுமார் 4லட்ச ரூபாய் வரை பள்ளிகளுக்கும் பள்ளி மாணவ மாணவியர்க்கும் பரிசுகள் வழங்கியும், பள்ளிகள் வளர்ச்சிபெற ஆக்கப்பணிகளுக்குத் தேவையான பொருட்களை வழங்கியும், பணம் வழங்கியும் சிறப்பாகப் பணியாற்றுகிறது.

தமிழ்நாடு பெற்றோர்-ஆசிரியர் கழகம், ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்தியது. தமிழக அரசு, நீதி-சமூகக் கல்விக்கென உயர்மட்டக்குழு ஒன்றினை அமைத்தது. இந்தக் குழு தனது முதல் கூட்டத்தில், மாணவர்களிடையே தேசிய உணர்வு, நாட்டுப்பற்று, சமூகத்தொண்டு, சேவை மனப்பான்மை ஆகியவற்றை வளர்க்கவும், நல்லொழுக்கம், தன்னடக்கம், கடமையுணர்வு ஆகியவற்றை ஊக்குவிக்கவும் நல்ல நீதி-சமூகக் கதைகளைப் பள்ளி ஆசிரியர், மாணவர், பெற்றோர், கல்வியாளர், மாநில தேசிய விருது பெற்றோர் ஆகியோரிடமிருந்து பெற முடிவு செய்தது. அதன்படி, தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் சங்கம், சிறப்புச் சிறுகதைப்போட்டி ஒன்றினை நடத்தியதுதேர்ந்தெடுக்கப்பெற்ற சிறுகதைகளின் ஆசிரியர்களுக்குப் பரிசளிப்பு விழாவும், வானொலி கல்வி நிகழ்ச்சிகளைக் கேட்டுப் பயனடைந்த சிறந்த பள்ளிகளுக்கான பரிசளிப்புவிழாவும், தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பில், சென்னை நுங்கம்பாக்கம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 19.1.83ல் நடைபெற்றன. பள்ளிக் கல்வி இயக்குநர் திரு ஜே. ஏ. இரயான் அவர்கள் தலைமை வகித்தார்.

சென்னை மாநகராட்சிக் கல்வி அலுவலரும் தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழக இணைச் செயலாளருமான திரு ஓ.அ.கனகசபை தமது வரவேற்புரையில், ''மாநகராட்சியின் கீழ் உள்ள 410 பள்ளிகளிலும் பெற்றோர் ஆசிரியர் கழகக் கிளைகள் ஆரம்பிக்கப்பெற்றுள்ளன'' என்று கூறினார்.

பெற்றோர் ஆசிரியர் கழகச் செயலாளர் திரு பெ. இராமமூர்த்தி அறிக்கை படித்தார்.

கல்வி இயக்குநர் திரு ஜே.ஏ. இரயான், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற்காக 4 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை கல்வியமைச்சரிடம் வழங்கி, பரிசு பெறும் பள்ளிகளுக்கும் - மாணவர்களுக்கும் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

அடுத்து, மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள், சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்குப் பரிசுகளையும், வானொலி கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை நன்கு கேட்டு,சிறந்த மதிப்பீட்டுத் தாள்களை அதிக அளவில் அனுப்பியதில் மாநில அளவில்,உயர்நிலைப் பள்ளிகளுக்கான சுழற்கேடயங்களையும், தொடக்கப் பள்ளிகளுக்கான பரிசுக் கோப்பைகளையும் வழங்கினார்.

சிறுகதைப் போட்டியில் ''இன்னா செய்தார்க்கு'' என்ற கதையை எழுதிய திரு என். கோபி என்பவருக்கு முதற்பரிசு ரூ. 1,000ம், 'நிறைவு' என்ற கதையை எழுதிய திரு வில்லவன் என்பவருக்கு இரண்டாம் பரிசு ரூ. 500-ம் 'பிரிய முடியாத உறவுகள்' என்ற கதையை எழுதிய திரு அ.முகமது அஸ்லாம் என்பவருக்கு மூன்றாம் பரிசு ரூ.250-ம் வழங்கப்பட்டது. மற்றும் 10 பேருக்கு ஆறுதல் பரிசாக தலா ரூ.50 வழங்கப்பட்டது.

தஞ்சை மாவட்டம் திருவாரூர் திரு அரங்கநாத முதலியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சென்னை சிந்தாதிரிப்பேட்டை ராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி நடுநிலைப் பள்ளி ஆகியவற்றிற்குச் சுழல்கேடயங்கள் வழங்கப்பட்டன. இந்த வரிசையில், தொடக்கப்பள்ளிகளுக்கான பரிசுக் கோப்பைகள் மாவட்டத்திற்கு ஒன்றாக 17-ம், பல்வேறு வகுப்புகளுக்கு ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் சிறந்த 4 மாணவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

பின்னர், மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''நான் அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்றபோது, பெற்றோர் ஆசிரியர் சங்கங்களே பள்ளிகளை எல்லாவகையிலும் சிறப்பாக நிருவகித்து வருவதைக் கண்டேன். இப்போது இங்கும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் அமைத்த பிறகு, முன்பு நல்ல முறையில் நடைபெறாத பள்ளிகளும் நல்லமுறையில் நடைபெறுகின்றன. எனினும், இம்முறையில் பெற்றோர்களிடமிருந்து இன்னும் போதுமான ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. இன்னும் பல பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளைப் பள்ளியில் கொண்டு வந்து சேர்ப்பதற்காகக் கூட வருவதில்லை. இந்த நிலை மாறவேண்டும். பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையே ஒரு நல்ல தொடர்பு ஏற்பட வேண்டும்.

''தேசபக்தியுணர்வை நமது குழந்தைகள் உள்ளத்தில் நாம் வளர்க்க வேண்டும். தேசத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற நான் எனது உயிரையும் தரத் தயாராக இருப்பேன் என்கிற உணர்வு நம் குழந்தைகளிடத்தில் ஏற்படுத்தியாக வேண்டும்.''

—சாமிபழனியப்பன்



# சத்தான சமையலுக்கு

மு. முத்துக்காளத்தி

மனிதனுக்கு அடிப்படைத் தேவை உணவு. ஆரோக்கியமான வாழ்வு பெற ஒவ்வொருவருக்கும் போதுமான உணவு கிடைக்க வேண்டும். போதிய உணவை உற்பத்தி செய்ய, காலம் காலமாக மனிதகுலம் அரும்பாடுபட்டு வருகிறது.

இந்தியாவில் 1947-ல் 5.5 கோடி டன் உணவு தானியங்கள் உற்பத்தியாயின. இப்பொழுது 13.2 கோடி டன் உற்பத்தியாகிறது. இன்னும் உணவு உற்பத்தியைப் பெருக்கவும், உணவின் தரத்தை உயர்த்தவும் இந்தியா அயராது பாடுபட்டு வருகிறது.

சமைக்கும்பொழுது உணவுப் பொருள்களில் உள்ள வைட்டமின்கள், உப்புச் சத்துகள், ஆகியவை சேதமடைந்துவிடுகின்றன. அதைத் தடுக்க சமையல் பாத்திரங்கள் சிறியவையாக இருக்க வேண்டும். தண்ணீர் குறைவாக வைத்துச் சமைக்க வேண்டும். குறைவான நேரத்தில் சமைக்க வேண்டும்.

நாகரிகச் சமையல் முறைகளால் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. சமையல் சுலபமாகிறது. இது நன்மை. ஆனால் சத்துகள் அழிந்து விடுகின்றன. இது தீமை.

இயந்திரத்தில் தீட்டிய அரிசியில் எல்லாச் சத்துமே போய் விடுகின்றது. கைக்குத்தல் அரிசியில் அனைத்துச் சத்தும் அப்படியே இருக்கின்றது. அரிசியில் தவிட்டை ஒட்டியுள்ள பகுதியில் தான் உடம்பை வளர்க்கும் புரதம், உப்பு, வைட்டமின், வைட்டமின் பி காம்ப்ளக்ஸ் எல்லாம் இருக்கின்றன. நெல்லை இயந்திரத்தில் தீட்டும் பொழுது, வெள்ளையாக அரிசி கிடைக்கிறதே தவிர, அதில் உள்ள சத்து அனைத்தும் கொள்ளை போய் விடுகிறது. இதனால் இயந்திரங்களில் தீட்டப்படும் அரிசியை விடுத்து, கைக்குத்தல் அரிசியைச் சாப்பிடும் பழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும்.

தவிடு சாப்பிடும் மாட்டைக் கவனித்துப் பாருங்கள். எப்படி வலிவும் பொலிவும் உள்ளதாக இருக்கிறது! தவிடு சாப்பிடாத மனிதனைப் பாருங்கள்! எப்படி எலும்பும் தோலுமாக இருக்கிறான்!

மைதா, ஆட்டாவைவிடக் கோதுமை மாவு சத்துள்ளது. கோதுமை அரைக்கும்போதும் ஆட்டாமாவு சலிக்கும்பொழுதும் கோதுமையில் உள்ள தவிடு போய்விடுவதால், அந்தத் தவிட்டோடு சேர்ந்து வைட்டமின், உப்பு, புரதம் போன்ற சத்துப் பொருள்களும்போய்விடுகின்றன.

அரிசியைக் கழுவும்பொழுது ஒரு தட்வை கழுவினால் போதும். கழுவோ கழுவென்று நான்கு ஐந்து முறை கழுவக் கூடாது. அப்படிக் கழுவினால் அரிசியில் உள்ள சத்தும் கழுவப்பட்டுப் போய்விடும். உலையில் கொஞ்சமாகத் தண்ணீர் வைத்து, சோறு கொதித்து வெந்ததும்இறக்கிவிட வேண்டும். தண்ணீரை வடிப்பதால், அதில் கரைந்துள்ள வைட்டமின் சத்து வயிற்றுக்குள் போகாமல் வீணாகக் கீழே போய் விடுகிறது.

காய்கறிகளை எடுத்துக் கொண்டாலும் சமைக்கும் பொழுது, நன்றாகத் தோலைச் சீவிவிடுவதால் சத்துப் பொருள்கள் குப்பைக்குத்தான் போகின்றன. தொப்பைக்குப் போவதில்லை. இதனால் நாம் சப்பையாக இருக்கிறோம்! எதையும் தோல் சீவாமல் சமையலுக்குப் பயன்படுத்துவதுநல்லது. காய்கறிகளில் இலைகளிலும் மேல் தோலிலும்தான் சத்துகள் இருக்கின்றன. உருளைக் கிழங்கில் தோல் உரித்தால் என்ன பொருள் தெரியுமா? உருளையிலுள்ள வைட்டமின் 30 சதவிகிதம் வீணாகப் போகிறது என்று பொருள்! ஆப்பிளையும் தோலோடுதான் சாப்பிட வேண்டுமே தவிர, தோலைச் சீவிவிட்டு அல்ல.

காய்கறிகள், கனிகளை அதிகம் அலம்புவதும் நீரில் ஊறவைத்தலும் ஆகாது. காய்கறிகளை அரிவதற்கு முன்பு தண்ணீரில் கழுவினால் போதும். வேண்டாத பகுதிகளை நறுக்குவதோடுநின்றுவிட வேண்டும். அதிகம் தோல் சீவக்கூடாது. பொடிப்பொடியாக நறுக்குவதாலும் சத்துப் பொருள் போய்விடுகிறது. நீண்ட நேரம் வேக வைப்பதும்ஆகாது. மூடிய பாத்திரத்திலேயே சமைக்க வேண்டும். இந்தவழிமுறைகளைக் கடைப்பிடித்தால் சத்துகள் இழப்பைக் குறைக்கலாம். பிரஷர் குக்கரில் சமைப்பதும், நீராவியில் சமைப்பதும் சத்துப் பொருள் வீணாவதை மிகவும் குறைக்கின்றன.

மண்பாண்டச் சமையல் உடம்புக்கு நல்லது. பித்தளை, பித்தளை கலந்த உலோகங்கள், இரும்பு ஆகியவை உணவின் தரத்தைக் கெடுத்துவிடுகின்றன. துத்தநாகம், அலுமினியம் போன்ற உலோகங்கள் உணவுப் பொருள்களில் உள்ள சில அமிலங்களில் கரைவதால் உடம்புக்கு ஊறு விளைகிறது.

''சாப்பாடு தயார்'' என்று மனைவி சொன்னதும், நீங்கள் ''சாப்பிடத் தயார்'' என்று உட்கார்ந்துவிட வேண்டும். சாப்பாட்டுக்குக் காத்திருக்கலாமே தவிர, சாப்பாட்டைக் காக்க வைக்கக்கூடாது. ''ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறாதா?'' என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் ஆறப்பொறுக்கக்கூடாது. அதனால் சத்துகள் அழிந்துவிடுகின்றன.

சமைத்த உணவை எடுத்துக் குளிர்பதனப் பெட்டியில் வைத்து நேரங்கழித்துச் சாப்பிடுவதும் நல்லதல்ல. அதனாலும் சத்துப் பொருள் போய் விடுகிறது. சமைத்த எந்த உணவையும் மீண்டும் சூடுபடுத்திச் சாப்பிடக் கூடாது. அதுவும் உடலுக்குக் கெடுதல்.

சத்தான சமையலுக்கு முத்தான மூன்று வழிகள் :

1. பாத்திரத்தின் பரப்பைக் குறைத்தல்.

2. சமையல் நேரத்தைக் குறைத்தல்.

3. சமையல் வெப்பத்தைக் குறைத்தல்.

# அறிவியல் கண்காட்சி

தமிழக அரசின் கல்வி, அறிவியல், தொழில் நுட்பத் துறையும் பெங்களூர் விஸ்வேஸ்ரய்யா தொழில் மற்றும் தொழில் நுட்பக் கண்காட்சியகமும் இணைந்து 19.1.83 முதல் 23.1.83 வரை தென்னிந்திய அறிவியல் கண்காட்சியினை, 1983ஐ சென்னையில் மதர் ஏ ஆசாம் பள்ளி வளாகத்தில் உருவாக்கியிருந்தன.

தமிழ்நாடு, ஆந்திர மாநிலம், கருநாடக மாநிலம், கேரள மாநிலம், புதுவை மாநிலம் ஆகிய ஐந்து மாநிலங்களையும் சேர்ந்த உயர் நிலைப்பள்ளிகள் மேநிலைப் பள்ளிகள் என ஏறக்குறைய 300 பள்ளிகள் பங்கு பெற்றன.

மாணவர்கள் தாங்களாகவும், அறிவியல் ஆசிரியர்களின் துணை கொண்டும் பல்வேறு விதமான விஞ்ஞானத் தொழில் நுட்பக் கருவிகள் பலவற்றை உருவாக்கியிருந்தனர். அறிவியல் மாணவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் வகையில் இந்தக் கண்காட்சி விளங்கியது.

வெளிமாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களும் மாணவியர்களும் ஆசிரியர்களும் 'வேற்று மாநிலத்தில் இருக்கின்றோம்' என்ற உணர்வில்லாத வகையில் அன்புடனும் ஆதரவுடனும் நடத்தப்பட்டனர்.

மின்னணுவினால் உருவாக்கப்பட்ட வாக்களிக்கும் இயந்திரம், நீராவிக் குழாய், நீரின் ஆற்றலால் பல அற்புதங்கள், மின்சக்தியின் விளைவுகளும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளும், தானியங்கித் துளைபோடு கருவி, தானியங்கிகார், கணிப்பான்கள், சிறு கம்ப்யூட்டர்கள், மழை அமைப்பு, வானவில் அமைப்பு இன்னும் இதுபோன்று பல்வேறு அறிவியல் நுட்பங்கள் இடம்பெற்றிருந்தன.

தொட்டிலில் கிடக்கும் குழந்தை அழுதால், தொட்டில் தானே ஆட்டிக் கொள்ளும் வகையில் ஒரு 'மாதிரி' செய்யப்பட்டிருந்தது. கழிவுப் பொருள்களைப் பயனுள்ள பணிகளுக்குப் பயன்படுத்தும் அமைப்புகள் உருவாக்கப்பட்டிருந்தன.

ஏறக்குறைய 46 மாணவ மாணவியர் தமது அறிவியல் படைப்புகளுக்காகப் பரிசு பெற்றனர். 16 பேர் படிப்புதவித் தொகை பெற்றனர். 13 ஆசிரியர்கள் ரொக்கப் பரிசு பெற்றனர்.

கேரள மாநிலத்தைச் சேர்ந்த திருவனந்தபுரத்தில் உள்ள ஹோலி ஏஞ்சல்ஸ் கான்வெண்ட், மிகச் சிறந்த பள்ளிக்குரிய தமிழக முதல்வரின் கேடயத்தைப் பெற்றது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் கட்டளையின்படி இந்தக் கேடயத்தில் முழுக்க முழுக்க வெள்ளியினால் ஆன பொருள்களையே இடம் பெறச் செய்தனர். 13 ஆயிரம் ரூபாய் செலவில் ஆனது இது.

அதிகமான பரிசுகளைப் பெற்ற மாநிலத்துக்கு 'ஆந்திர' மாநிலம் வழங்கும் உருள் கலனைத் தமிழ்நாடு பெற்றது.

இந்த அறிவியல் கண்காட்சி மாணவ சமுதாயத்தினரிடம் புது எழுச்சியையும் புதிய ஆர்வத்தையும் உருவாக்கியுள்ளது. ஏறக்குறைய 30 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இந்தக் கண்காட்சியைக் கண்டு களித்துள்ளனர். காண வாய்ப்புப் பெறாதவர்கள் - கண்காட்சியின் சிறப்பைப் பற்றிக் கேள்விப்பட்டு இனி இது போன்ற கண்காட்சி எப்போது வரும், என்று ஏங்கிய வண்ணம் உள்ளனர். இவர்கள் எல்லாம் அடுத்த ஆண்டு இந்தக் கண்காட்சியைக் காண முடியும்! ஆனால் ஒன்று! இவர்கள் பாண்டிச்சேரிக்குச் செல்ல வேண்டும் அல்லது கேரள மாநிலத்திற்குச் செல்லவேண்டும். அடுத்த ஆண்டு அறிவியல் கண்காட்சியை 'எங்கள் மாநிலத்தில் நடத்த வேண்டும்' என்று இந்த இரு மாநிலங்களும் வேண்டுகோள் விடுத்திருப்பதுதான் காரணம்!



—தமிழ்ப்பித்தன்

**மாணவர் பக்கம்**

# மாணவர்க்கு ஒரு மன்றம்

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும், தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கும் அல்லும் பகலும் அயராது பாடுபட்டவர்களுள் பேராசிரியர் மணி திருநாவுக்கரசர் அவர்களுக்கு சிறப்பானதோர் இடம் உண்டு. அவர்காலத்திலிருந்த பல கழகங்கள்- தமிழ்க் கழகங்கள் அவருடைய தொடர்புகொண்டு தமிழ்ப் பணியாற்றிவந்தன. அப்பேராசிரியரின் நினைவாக, பேராசிரியர் மயிலை சிவமுத்து முதலான அவர்தம் மாணவர்கள் 'மணி யரசு மன்றம்' என்னும் ஓர் அமைப்பினைத் தொடங்கித் தலைசிறந்த தமிழ்ப் பணியாற்றி வந்தனர். பேராசிரியர்களும் அறிஞர் பெருமக்களும் கலந்து தமிழ் வளர்த்த அம்மன்றச் சார்பில் மாணவர் நலம் கருதி 1931ஆம் ஆண்டில் 'மாணவர் மன்றம்' என்ற அமைப்பு தொடங்கப் பெற்றது.

இம் மன்றம் மாணவர்கள் பலர் கூடிப் பல பொருள் பற்றிப் பேசித் தம் சொல்லாற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடனேயே தொடக்கத்திலே பணியாற்றி வந்தது. சென்னையில் உள்ள உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மாணவர்களைக் கொண்டு சென்னைக் கடற்கரையில் மாணவர் மாநாடு நடத்திய பெருமை இம் மன்றத்திற்கு உண்டு.

எட்டாம் வகுப்பு மாணவர்க்கென ஒரு மாதிரித் தமிழ்த் தேர்வு நடத்தப்போது, முதலில் ஐந்நூறு மாணவர்களே தேர்வில் கலந்து கொண்டனர். பிறகு நிலைமாறி ஆண்டுதோறும் ஆயிரம், இரண்டாயிரம் என வளர்ந்து பதினாயிரக்கணக்கான மாணவர்கள் மன்றத் தேர்வுகளில் பயன்பெறும் நிலை ஏற்பட்டது. அந்நிலையில்தான் வீரத் தமிழன்னை டாக்டர் தருமாம்பாள் அவர்களுடைய தலைமை மன்றத்திற்கு வாய்த்தது. அவருடைய செல்வாக்கு மன்றத்திற்கு உரமாக அமைந்தது.

1957ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 20,21ஆம் நாட்களில் நாவலர் சோமசுந்தர பாரதியார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியவர்கள் தலைமையில் தியாகராயர் கல்லூரி திறந்தவெளி அரங்கில் அமைந்த பெரிய பந்தலில் மன்ற வெள்ளி விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா அவர்கள் மற்றும் பல தமிழறிஞர்கள் விழாவில் பங்கேற்று மன்றத் தொண்டுகளைப் பாராட்டி வாழ்த்தினார்கள்.

இம்மன்றம் பல்வேறு நோக்கங்களுக்காகப் பாடுபட்டு வருகின்றது. அவை:

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் வளர்த்தல். பள்ளிக்கூடம் நிறுவிச் சின்னஞ் சிறு குழந்தைகளிடம் உள்ள கலையுணர்வைத் தூண்டுதல், மாணவர்கள் கதை, கட்டுரை, நாடகம், கவிதை, கையெழுத்து, ஓவியம் முதலிய பல துறைகளிலும் சிறந்து விளங்க ஊக்குவித்தல், மாதிரித் தமிழ்த் தேர்வுகள் நடத்தி மாணவர்க்குப் பயிற்சி அளித்தல், மாணவர் பேச்சுத் திறனை வளர்த்தல், பேரறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவாற்றச் செய்தல்; மாணவர்கட்கும் பொதுமக்கட்கும் பயன்படக்கூடிய வகையில் நூல் நிலையம் ஒன்று நிறுவுதல், சிறந்த தமிழ் நூல்கள் வெளியிடுதல், முதியோர் கல்வி வளர்ச்சிக்குத் தொண்டாற்றல், இலக்கியத் திங்களிதழ் நடத்துதல்.

மாநிலம் தழுவிய அளவில் ஆண்டுதோறும் நடைபெறும் கதை, கட்டுரை, கவிதை, கையெழுத்து, ஓவியம் முதலிய கலைப் போட்டிகளில் தமிழகம் முழுவதும் உள்ள பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் பலர் ஆர்வமுடன் கலந்து கொள்கின்றனர்.

மன்றம் இன்று நாடறிந்த ஒரு பேரமைப்பாக இயங்குவதற்கு மன்றத் தமிழ்த் தேர்வுகளே காரணமாகும். கல்லூரி, மேல் நிலை வகுப்புக்கள், பத்தாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு ஆகியவை பல வகுப்புகளுக்கும் மன்றம் ஆண்டுதோறும் மாதிரி தமிழ்த்தேர்வுகள் நடத்தி, பல்கலைக் கழகத் தேர்வு, அரசுத் தேர்வுகள் ஆகியன தொடங்குவதற்கு முன் தேர்வு முடிவுகளை அறிவித்து ஊக்கி வருகிறது. தற்போது ஒன்றரை இலட்சம் மாணவர்கள் இம்மன்றத்தோடு தொடர்புகொண்டுள்ளனர். இதுவரை 20,000 திருக்குறள் நூல்கள் மாணவர்களுக்குப் பரிசாக வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு ஜூலைத் திங்களில் மன்றத்தின் பொன்விழா சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.



## ஆழம் தெரிவிக்கும் கருவி

மசாசூசெட்சைச் சேர்ந்த டேடாமெரின் நிறுவனம் (Data Marine) உருவாக்கியுள்ள எல்சிடி ஆழம் தெரிவிக்கும் கருவி (LCD Depth Sound) பாட்டரியினால் இயங்கக் கூடியது. 2 அடியிலிருந்து 100 அடி வரை ஆழத்தைத் துல்லியமாகச் சிறிய திரையில் எண்களால் தெரிவிக்கக் கூடியது. எண்கள் தெளிவாகத் தெரியும் வண்ணம் ஒளியூட்டப்பட்டது. ஆழத்துடன், மீன் மற்றும் நீருள் கிடக்கும் பொருட்களையும் தெரிவிக்கக் கூடியது.

— கலைக்கதிர்

## இமயத்தில் மூவர்

உலகிலேயே மிகவும் உயர்ந்த சிகரமான இமயமலையேற்ற வீரர் ஒருவரும், இரு நேபாள ஷெர்பாக்களும் ஏறி வெற்றி கண்டனர்.

இந்த இமயமலைச் சிகரத்தில் அவர்கள் ஏறிக்கொண்டிருக்கும் போது, கனடா டெலிவிஷனில் அது உடனுக்குடன் ஒளிபரப்பப்பட்டது!

அந்தக் கனடா வீரர் லாரி ஸ்கேரெஸ் லெட், (வயது 34) அவருடன் சென்ற ஷெர்பாக்கள் சுந்தரே ஷெர்பா (36 வயது) லக்கப்பா டோர்ஜி (25) கிழக்கு நேபாளம் வழியாக இவர்கள் எவரெஸ்டை எட்டினர்.

## அறிவுச் சுடர்

டான்சிலைட்டிஸ் சிறு பிள்ளைகளுக்கு தொண்டையில் ஏற்படுகின்ற நோயாகும். தொண்டைவலி, சளி, காதுவலி, மூக்கடைப்பு, மூச்சடைப்பு, சுரம் ஆகியவை இந்நோயின் அறிகுறிகள். பொதுவாக ஸ்டெரப்டோ காக்கஸ் என்னும் நுண்ணணுக்களால் டான்சிலைட்டில் ஏற்படுகின்றது.

சரிவர சிகிச்சை அளிக்காமல் இருந்தால் மேற்கொண்டு பல நோய்கள் உண்டாகின்றன. குறிப்பிட வேண்டிய நோய் ருமாட்டிக் சுரம் ஆகும். ஓட்டைடிஸ் மீடியா, மெனின்ஜைட்டிஸ் ஆகிய நோய்கள் டான்சிலைட்டிஸ் காரணமாக வரக்கூடியவை; இவற்றிற்கு பெனிசிலின் தான் சிறந்த மருந்தாகக் காணப் படுகிறது.

1. டான்சில்களை அறுவையால் அகற்றலாமா?
2. எந்த வயதில் அகற்றுவது?
3. அகற்றுவதற்கான காரணங்கள் யாவை?

1. சில டான்சில்களை அறுவையால் அகற்றுவது நலம். ஆனால் டான்சில் என்றால் அறுவை என்னும் கொள்கை நல்லதல்ல.

2. நான்கு வயதிற்கு குறைந்த பிள்ளைகளுக்கு அறுவை அவசியம் அல்ல என்று நிபுணர்கள் அறிவிக்கின்றனர்.

3. டான்சில்களை அகற்றுவதற்கான காரணங்கள் அல்லது நோயின் குணங்கள் பின்வருமாறு :-

மீண்டும் மீண்டும் வருகின்ற டான்சிலைட்டிஸ்

இரண்டு ஆண்டுகளில் தொடர்ந்து ஆறுமுறை வரும் அல்லது ஏற்படும் டான்சிலைட்டிஸ்

காதில் சீழ் வருவதற்குக் காரணமாக இருக்கும் டான்சிலைட்டிஸ்

மூச்சு விட தடை செய்யும் டான்சிலைட்டிஸ்

புற்றுநோய்க்கான அறிகுறிகள் காணப்படும் டான்சிலைட்டிஸ் (வயதானவர்கள்)

நன்றி; விஞ்ஞானச் சுடர்

## சின்னஞ்சிறு மலரே...!

சின்னஞ்சிறு மலரே—தினம் நீ
சிரித்து மகிழ்ந்திடுவாய்
பள்ளி சென்று பாடம்—தினம் நீ
படித்து மகிழ்ந்திடுவாய்

வெள்ளை அலை போலே—தினம் நீ
துள்ளி மகிழ்ந்திடுவாய்
கிள்ளை மொழி தனிலே—செந்தமிழ்
கீதம் இசைத்திடுவாய்

இன்பம் அருவியெனத்—தம்பி
எங்கும் பெருகி வர
அன்பை மழைஎனவே—அள்ளி
எங்கும் பொழிந்திடுவாய்

நாட்டுக் குழைத்திடுவாய்—நல் நூல்
நண்பனைக் கொண்டிடுவாய்
வீட்டுக்குள் இல்லாமல்—வெளி
உலகும் கண்டிடுவாய்

சாலை வழி ஓரம்—தம்பி
நடந்து சென்றிடுவாய்
ஏழைதனைக் காணின்—தம்பி
இரக்கம் கொண்டிடுவாய்!

—குழ. கதிரேசன்



(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகைமை அழியும், நேசம் வளரும், ஜீவகாருண்யம் செழிக்கும், சமயப் பகைகள் மறையும். ஆத்ம ஞானம் பெருகும். பூலோகம் ஆன்மீக சொர்க்கம் ஆகும்.

உயிர்கள் அனைத்தும் கடவுள் படைப்பு. அனைத்து உயிரும் ஈசன் குடியிருப்பு. மாசில்லா மனமே ஈசன் கோயில். உயிர்களை நேசி. உனக்குண்டு இறைவன் ஆசி. உயிர்களை வழிபடு. அதுவே கடவுள் வழிபாடு. உயிர்களுக்குத் தொண்டு செய். அதுவே கடவுள் தொண்டு. சடங்குகளும் சம்பிரதாயங்களும் நம்மை கடவுளிடம் இட்டுச் செல்லா. இவ்வாறு திட்டவட்டமாகவே தீட்டுகிறார் திரு. வி. க.

ஆன்மா வயப்படும் இடம் எதுவோ அதுவே ஆலயம் என்பது திருமூலர் வாக்கு. ஆண்டவன் பால் லயப்பட்ட உள்ளங்களுக்கெனத்தொன்றுதொட்டு அமைக்கப்பட்டவைகளே ஆலயங்கள். ஆலயங்களும், மடங்களும் ஆன்மீகம் வளர்க்க வந்தவை. ஆலயங்கள் ஆடம்பரமற்று இருத்தல் வேண்டும். எளிமை - அமைதி தெய்வ குணங்களல்லவா? ஆடம்பர ஆர்ப்பாட்டங்கள் ஆண்டவனை மறக்கச் செய்யும் மாயைகள், அர்த்தமற்ற பூசனைகள், பொல்லாக் காட்சிகள் வழிபாட்டுக்கு ஊறு விளைவிக்கின்றன. எளிய கோயில்களே அவரின் உள்ளம் கொண்டது. எனவே ஆலயங்களின் செயற்பாடு குறித்து திரு. வி. க. கவலை மிகக்கொண்டார். ஆலயங்கள் அருள் நெறி பரப்ப வந்தவை. அவை இரண்டு விதம். ஒன்று படமாடுங்கோயில். மற்றது நடமாடுங்கோயில். ஆரம்பகாலத்தில் திரு. வி. க. படமாடுங் கோயில் தொண்டில் ஈடுபட்டார். பிற்காலத்தில் நடமாடுங்கோயில் தொண்டில் ஈடுபாடு கொண்டார். மனிதனே நடமாடுங்கோயில். அவனுக்காற்றும் தொண்டே ஆலயத் தொண்டு, ஆண்டவன் தொண்டு எனக் கருதினார். அதுவே அவர் வாழ்க்கையில் நாளேற நாளேற வளர்ந்து பெருகியது.

எனவே, தொழிலாளர் நலம் கருதி அவர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. தமிழகத்தில் முதன் முதலாகத் தொழிற்சங்கம் நிறுவி, சரித்திரம் படைத்தவரில் அவரும் ஒருவர். அல்லும் பகலும் அனவரதமும் அவர்களுக்காக அயராது உழைத்தார்; அவர்களுக்காக எழுதினார்; எழுதிக் கொண்டே இருந்தார். தொழிலாளர் வாழ்க்கைக்குத் துணை போவது உலகத் தொண்டென உணர்ந்தவர். எனவே, அவர்களின் எழிலான வாழ்வுக்கு இன்னும் ஒருமுறை பிறப்பேன் என சூள் கொட்டியவர். எழுத்தில் ஏற்றம், கருத்தில் ஆழம், நடவடிக்கையில் ஒருபற்றற்ற தன்மை, சரமிக்க தீரம், தீரமிக்க சரம், யாருக்கும் எவர்க்கும் எதற்கும் எப்போதும் அஞ்சாத உருக்குலையாத போக்கு, தன்னலமற்ற தமிழ்ப்பற்று, உயர்ந்த நாட்டுப் பற்று-இவை அவரின் அணிகலன்கள். அவருக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந்நாளில் அவரிடமிருந்து ஒரு சில அணிகலன்களையாவது அடைய முயலுவோமாக!

* * * * *

'கலியுகமா? பொல்லாத யுகம்' என்று பலர் கூறுகிறார். உலகில் நடைபெறும் பலதிற மீச்செயல்களை நோக்கும் போதெல்லாம், 'எல்லாம் கலியின் கோலம்' என்று நம்மவர்கள் பேசிக்கொள்வது வழக்கம். மனிதன் செய்யும் அடாத செயல்கட்கெல்லாம் கலியுகத்தின் மீது பழி சுமத்தப்படுகிறது... கலியுகம் பொல்லாத யுகம் என்று கூறும் மக்கள், அப்பொல்லாமைக்குக் காரணம் கலியா அல்லது தங்கள் செயலா என்பதைச் சிந்திப்பார்களாக. ''எல்லாம் மனிதனால் என்னும் உண்மையைக் கலியைக் குறை கூறும் நேயர்கள் உணர்வதில்லை போலும்! நன்மைக்கும் தீமைக்கும் பிறப்பிடம் மனிதன் செயலேயாகும்'' என்று ஆணித்தரமாகச் சொல்லுகிறார் திரு. வி. க.

மனிதனுக்குத்தான் பகுத்தறிவு உண்டு. அதன் துணை கொண்டு அவன் தெய்வநிலை அடைதல் வேண்டும். இக்கலியுகம் கடவுள் யுகமாகும், மனிதன் மனிதனாக வாழ்ந்தால். ஆனால் மனிதன் எத்தனை எத்தனை மீச்செயல்புரிந்து விட்டான். அவை கணக்கில் அடங்குமா?

சாதிகளும் சாதீய அமைப்புகளும் சமுதாய முன்னேற்றத்திற்கு எவ்வளவு இடையூறுகளாக இருக்கின்றன? திரு. வி. க. மனம் வருந்தி, சாதிகள் ஒழிய வழி வகைகளைக் காண விழைந்தார். எண்ணம், எழுத்து, சொல், செயல் அனைத்திலும் திரு. வி. க. சாதியைத் துறந்தார்.

சாதி எதிர்ப்பாளர்கள் மூன்று விதம். உள்ளத்தில் சாதி, எனினும் உதட்டில் சமத்துவம் இருக்கும். அவர்கள் சாதியை மறைப்பவர்கள். ஆனால் சாதியை எதிர்ப்பதுபோல் நடிப்பார்கள்.

இன்னொரு சாரார், சாதியை மறுப்பார்கள். இல்லை எனச் சாதிப்பார்கள். ஆனால் உள்ளத்தில் சாதீய சிந்தனைகளே நிறைந்திருக்கும்.

திரு. வி. க. இந்தவகைகளைச் சாராதவர். அவர் சாதியை மறைத்தவரோ அல்லது மறுத்தவரோ அல்லர். அவர் மூன்றாவது ரகம். சாதியை அடியோடு மறந்தவர். சாதி நினைவே இல்லாதவர். சாதியின் சாயல் படாமலே வாழ்ந்தவர்.

சாதி எனும் சொல்லே தமிழ்ச் சொல் அல்ல என்று தொல்காப்பியத்தினை மேற்கோள் காட்டி தன் வாதத்துக்கு வலுவூட்டி, சாதி - மக்களுக்கு இடையில் இழைக்கப்பட்ட இடுக்கண் என்று புலப்படுத்துகிறார்.

பிறப்பால் உயர்வு, தாழ்வு கருதுவது பேதைமை அறியாமையின் அடையாளம். சாதி வேற்றுமையைக் கனவிலும் எண்ணாதே. தீண்டாமையை விலக்கு-இப்படி இளைஞர்களை அறைகூவி அழைக்கிறார். இந்தச் சமுதாயத் தீமைகளைக் களைய இளைஞர்களால் முடியும் என்று திரு.வி.க. நம்பினார். நமது இளைஞர்களின்பால் அவருக்கு அவ்வளவு நம்பிக்கை.

பிறப்பபொட்டித் தொழி... அமைவதை திரு. வி. க. ...

கலப்பு மணமே....



வில்லை. இன்னின்ன வகுப்பார்க்கு இன்னின்ன தொழில் என்று நிர்ணயம் செய்வது சமூக ஆரோக்கியத்துக்கு அறிகுறி அல்ல. தொழில்கள் அவரவர் இயல்புக்கு ஏற்றவாறு அமைதல் வேண்டும். அதுதான் இயற்கை. பிறப்பையொட்டித்தான்தொழில் என்பது முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுவது போன்றதாகும். சாதி அடிப்படையில் தொழில்களைப் பிரிப்பது பத்தாம் பசலித்தனமானது, விஞ்ஞான யுகத்திற்கு விரோதமானது.

''சாதி ஒழிய திரு.வி.க. கண்ட கைகண்டமருந்து கலப்பு மணம், மக்களின் மனக்கலப்பும், இனக் கலப்பும் சாதிகளை ஒழிக்கும் மார்க்கங்கள் என்றார். "சாதி நோயை அறவே நீக்க வல்ல மருந்து தேவை என்று நினைந்தேன். நினைந்தேன், நினைந்தேன், பன்னெடுநாள் நினைந்தேன். ஒன்று கண்டேன். எது? அதுதான் கலப்பு மணம்'' என்கிறார் திரு. வி. க. அவர் பல கலப்பு மணங்கள் செய்து வைத்தார். மேலும் கலப்பு மணங்கள் செய்ய முனைந்து நின்றார். அதற்கெனப் பல பிறவிகள் தாங்கல் வேண்டுமென்பது அவரது தவம் என்கிறார். கலப்பு மணம் உலகெங்கும் பரவ வேண்டும். கலப்பு மணப் பிரச்சாரங்கள் அயராது எக்கணமும் நடத்தல்வேண்டும் என்று கூறுகிறார் திரு.வி.க.

கலப்பு மணத்தால் ஆங்காங்கு விளையும் தீமைகளையும் திரு. வி. க. பார்க்கத் தவறவில்லை. ஆயிரக்கணக்கில்கலப்புமணங்கள் நடந்தால் தீமைகளுக்கு இடமிராது - இது திரு. வி. க. வாதம்.

திரு. வி. க. பெண்ணுரிமை போற்றினார். பெண்ணுரிமை போற்றிய பெருமான் திரு.வி.க. என்றே போற்றப்பட்டார். பெண்ணுரிமை என்பது என்ன? ஆணுடன் போரிடுவதா? இல்லை. ஆணுடன் இயைந்து, இணைந்து வாழ்ந்து அன்பை வளர்ப்பதே பெண்ணின் உரிமைக் கடன், ஆணை அடக்கி ஆள உரிமை கேட்பதன்று. பெண்ணை அடக்கி ஆள ஆண் நினைப்பதும், ஆணை அடக்கி ஆளப்பெண் நினைப்பதும் இயற்கை வழி வாழ்வாகாது. இருவரும் ஒத்துவாழ்தலே இன்பமாகும். ஆண், பெண் சேர்ந்ததே வாழ்வு. உடல் நலத்திற்கு எப்படி தட்பம், வெப்பம் இரண்டும் தேவையோ அதுபோல வாழ்வு நலத்திற்கு ஆண்மை, பெண்மை இரண்டும் தேவை.

பெண்களின் மேம்பாட்டிற்குக் கல்வி மிக அவசியம். கல்வியே பெண்களைக் கரை சேர்க்கும் கட்டுமரம்.

நகைப்பித்து பெண்ணின் இயற்கைக் குணமான இரக்கத்தையும் சிதைக்கிறது. பெண் என்பவள் வீட்டை இன்ப ஒளி வீசுமாறு செய்யும் தெய்வமணி விளக்கு. பெண்கள் அறிவால் மனத்தை அடக்கி, கற்பெனும் தீபத்தை அணையாமல் காக்க வேண்டும்.

இளம் பெண்களை வயது முதிர்ந்தோர்க்கு மணம் முடிப்பது பெண் கொலையே என்றுரைக்கிறார் திரு. வி. க.

பெண்கள் தீய எண்ணங்கள் ஊட்டவல்ல போலி நாவல்களை கையால் தொடுதலும் ஆகாது. அவை வாழ்வை நஞ்செனஎரிப்பவை என்று திரு. வி. க. எச்சரிக்கிறார்.

பெண்களை ஒதுக்கிவிட்டு எந்த நாடும் முன்னேற முடியாது. பெண்ணுரிமையுள்ள நாடே நாகரிக நாடெனக் கருதப்படும். பெண் நலனே நாட்டு நலன். பெண் கண்ணீர் விடும் நாடு— வறுமை நாடு; அடிமை நாடு. அது எரிந்து போகும். இவை தமிழ்த் தென்றல் அன்பர்களை வேண்டியிருப்பதுபோல அவரது நூற்படங்களில் அவரைப்பார்த்து கண்டெடுத்த அவரது வைர முத்துக்கள். அவை வாழ்க்கைக்கு வழிகாட்டும் துருவ நட்சத்திரங்கள்.

**நன்றி: சென்னை வானொலி நிலையம்**

---

## எல்காட்

### குவார்ட்ஸ் டிஜிட்டல்வாட்ச்

### எல்காட்டின் முன்னோடிச் சாதனை!

இந்தியாவில் உள்ள மாநில மற்றும் மத்திய பொதுத்துறை மின் அணு நிறுவனங்களில், தமிழ்நாடு அரசின் நிறுவனமான எல்காட் ( Elcot ) ஒன்றே முதன் முதலாக டிஜிட்டல் கைக் கடிகாரங்களைத் தயாரித்துப் பெருமிதத்துடன் அளிக்கிறது.

மிகப் பெரிய அளவில் கடிகாரங்களைத் தயாரிக்கும் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் (HMT ) நிறுவனம்கூட இதுவரை, இதுபோன்ற, டிஜிட்டல் கைக்கடிகாரங்களைத் தயாரித்து, வெளியிடாத நிலையில், எல்காட்டின் இந்தச் சாதனை ஒரு முன்னோடியாக அமைந்துள்ளது.

கடிகார வரலாற்றில் குறிப்பிட்டுக் கூறினால், பத்து ஆண்டுகளுக்கு முன்புகூட இயந்திர (மெகானிக்கல் - Mechanical) கடிகாரங்கள் மட்டுமே தயாரிக்கப்பட்டு வந்தன. தற்பொழுது இந்நிலை மாறி டிஜிட்டல் கைக் கடிகாரங்கள் தொழிற் நுட்பத்திலும், உற்பத்தி உயர்விலும் எண்ணிலடங்காச் செயல் திறன்களிலும், பெருமளவில் தயாரிக்கப்படுகின்றன.

உலகில், தற்பொழுது, ஆண்டொன்றுக்குத் தயாரிக்கப்படும் 20 கோடி கைக்கடிகாரங்களில் 60 சதத்திற்கும் மேல் மின் அணு, டிஜிட்டல் கைக்கடிகாரங்களே! ஜப்பான், ஹாங்காங் போன்ற நாடுகளில் இந்த விகிதாச்சாரம் இன்னும் அதிகமாகும்.

இந்நிலையில், உலகத்தில் 1990-ஆம் ஆண்டுக்குள் இயந்திர கைக்கடிகாரங்களின் உற்பத்தி அறவே நின்று விடலாம் என்ற சாத்தியக் கூறு இருக்கிறது. ஆனால் இந்தியாவில் ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தியாகும் சுமார் 50 இலட்சம் கைக்கடிகாரங்கள் முழுவதும் இயந்திரக் கடிகாரங்களே: ஆதலால் இந்தியாவில் உள்ள நிலை உலகத்தில் வளர்ந்து வரும் கைக்கடிகாரங்கள் நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது

இந்நிலையை மாற்றி அமைக்க மத்திய அரசு, இந்தியாவில் மின் அணு டிஜிட்டல் கைக்கடிகாரங்கள் தயாரிக்க மத்திய அரசுக்குச் சொந்தமான இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் பாக்டரிக்கும் (HMT) மற்றும் 13 மாநில மின் அணு நிறுவனங்களுக்கும் அனுமதி அளித்துள்ளது. அவ்வாறு அனுமதி பெற்ற நிறுவனங்களில், எல்காட் நிறுவனம் ஒன்றுதான் முதன் முதலாக டிஜிட்டல் கைக் கடிகாரங்களை உற்பத்தி செய்து வெளியிடும் சிறப்புப் பெற்றிருக்கிறது.

ஜப்பானின் புகழ்மிக்க இட்டாச்சி (Hitachi) நிறுவனத்தின் தொழில்நுட்பத்துடன், நம் எல்காட்டின் தொழில் திறன்களையும் இணைத்து டிஜிட்டல் கைக்கடிகாரங்கள் எல்காட்டில் தயாரிக்கப்படுகின்றன.

---



# கவர்ச்சிமிகு கைக்கடிகாரங்கள்

தமிழ்நாடு மின் அணு நிறுவனம் தயாரித்துள்ள 'எல்காட்' டிஜிடல் கவர்ச்சிமிகு கைக்கடிகாரங்கள் வெளியீட்டு விற்பனை சென்னை இராசாசி மண்டபத்தில் 4-2-83 அன்று நடைபெற்றது. விழாவில் எல்காட் நிறுவனத் தலைவர் திரு கே. ஸ்ரீதரன் இ. ஆ. ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

விழாவிற்குமாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள்தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:'' மின் அணு தொழிலுக்கு மின்சாரம், தண்ணீர் அதிகம் தேவையில்லை. எலெக்ட்ரானிக் கைக்கடிகாரம் தயாரிப்பதுபோல இன்னும் 10 தொழில்களை ரூ.20 கோடி செலவில் தொடங்க உள்ளோம். ஓசூரில் ரூ. 2 கோடி செலவில் மின் அணு சம்பந்தப்பட்ட அலுமினிய தயாரிப்புத் தொழிற்சாலை விரைவில் உற்பத்தியைத் தொடங்கும்.

எக்ஸ்ரே கருவிகள், ரேடியோ ரிசீவர், டெலிபோன் கருவிகள், போன்றவற்றைக் கூட்டாகவும் தனியாகவும் தொடங்க மத்திய அரசிடம் உரிமம் பெற்று இருக்கிறோம். மின்சாரப் பொருட்கள் எலக்ட்ரானிக் மின்அணு தொழில்கள், ஆட்டோ மொபைல்ஸ் சம்பந்தப்பட்ட தொழில்கள் தொடங்க மான்யம் அளித்து வருகிறோம். எலக்ட்ரானிக் பொருட்கள் தொழில் எந்த மாவட்டத்தில் தொடங்கினாலும் வசதிகளை அரசுசெய்து தரும். 1980-81-ல் தொழில் உற்பத்தி ரூ. 19 கோடி ஆக இருந்தது. ஆனால் 1983-84ல் ரூ. 34 கோடி தொழில் உற்பத்தியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.''

**அ. மருதவிநாயகம்**

எல்காட் முன்னேற்ற மேலாளர் திரு எம். இராமசந்திரன் அவர்கள் தொழில் நுட்பத்தைப் பற்றி விளக்க உரையாற்றினார்.

எல்காட் குவார்ட்ஸ் டிஜிட்டல் வாட்சை வெளியிட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்: ''சாப்பிட வந்தவனை, சமையல் செய்யச் சொன்னதுபோல கைக்கடிகாரத்தைப் பார்த்து அபிப்பிராயம் சொல்ல வந்த என்னையே, பேசிப் பேசியே பணம் கொடுத்து வாங்க வைத்த திறமையைப் பாராட்டுகின்றேன். கைக்கடிகாரத்தைப் பார்த்து உண்மையிலேயே மகிழ்ச்சியடைந்தேன் என்பதை மனநிறைவோடு தெரிவிக்கின்றேன்.

''பல மாநிலங்களும் கைக்கடிகாரம் தயாரிக்கும் உரிமத்தைப் பெற்றிருந்தும், தமிழகத்தின் எல்காட் நிறுவனம்தான் இந்த கைக்கடிகாரத்தை முதன் முதலில் தயாரித்து அறிமுகப்படுத்தி இருக்கிறது என்ற பெருமை தமிழகத்திற்குக் கிடைத்துள்ளது. இந்தக் கைக் கடிகாரங்களை விற்கும் பணம் தமிழகத்துக்கேதான் வந்து சேருகிறது என்பதை அனைவரும் உணர வேண்டும். இங்கு வரவேற்புரையாற்றுகையில் கடிகாரத்திற்கு வரி குறைக்க வேண்டும் என்று சொன்னார்கள். வரி போடாமல் எந்த ஒரு நாட்டிலும் ஆட்சி நடத்த முடியாது. மத்திய அரசு வரி விலக்கு அளிப்பதைப் பொறுத்து மாநில அரசும் நடவடிக்கை எடுக்கும்.

கைக்கடிகாரத்திற்கு தரப்படுகின்ற விளம்பரத்தைப் பொறுத்துத்தான் விற்பனை இருக்கும்.

ஜப்பானில் கைக்கடிகாரத்திற்குத் தேவையான உதிரி பாகங்களைக் குடிசைத் தொழிலாக செய்து வருகிறார்கள். அதுபோல இங்கும் கடிகாரத் தொழிலைக் குடிசைத் தொழிலாக்கி, பல ஆயிரக்கணக்கான பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க அலுவலர்கள் அரசுக்கு ஆலோசனை கூற வேண்டும்.''

தமிழ்நாடு மின் அணு நிறுவனமான எல்காட் நிறுவனம் ஜப்பான் நாட்டுடன் இணைந்து 'எல்காட் குவார்ட்ஸ் டிஜிட்டல்' என்ற 'எலக்ட்ரானிக்' கைக்கடிகாரங்களைத் தயாரித்துள்ளது. இந்தியாவிலேயே இத்தகைய எலக்ட்ரானிக் கைக்கடிகாரங்களை தமிழக அரசின் நிறுவனம் தான் முதன் முதலில் தயாரித்து வெற்றி கண்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் விற்பனையைத் துவக்கி வைக்கும் முறையில் முதல் கடிகாரத்தை விலைக்கு வாங்கினார்கள்.

விழா இறுதியில் 'எல்காட்டின்' விற்பனை மேலாளர் திரு ஆர். டி. அரசன் நன்றி கூறினார்.



# கலைமாமணி விருது வழங்கும் விழா!

—ரா

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் எந்த ஆண்டும் போல் இந்த ஆண்டும் சிறந்த கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கும் விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது. சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கத்தில் (26.1.83) சிறப்புற நடைபெற்ற இவ்விழாவிற்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் தலைமை தாங்கி தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த 32 கலைஞர்களுக்கும் தங்கப் பதக்கங்கள் வழங்கினார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள், அந்தக் கலைஞர் பெருமக்களுக்கெல்லாம் கலைமாமணி பட்டம் வழங்கிச் சால்வை அணிவித்தார்.

ஏற்கெனவே கலைமாமணி விருது பெற்ற 12 கலைஞர்களுக்கு, மாண்புமிகு கல்வி யமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் பொற்கிழி வழங்கிச் சிறப்பித்தார்.

இவ்விழாத் தொடக்கத்தில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவரான உயர்நீதிமன்ற நீதிபதி திரு. பு.ரா. கோகுல கிருஷ்ணன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

விழா முடிவில் மன்றச் செயலாளர் கலைமாமணி திரு. டி.வி. நாராயணசாமி அவர்கள் நன்றி கூறினார்.

விருது பெற்ற கலைஞர்களைப் பாராட்டி மேதகு ஆளுநர், மாண்புமிகு கல்வியமைச்சர், மாண்புமிகு நிதியமைச்சர் ஆகியோர் உரையாற்றினர்.

விருது பெற்ற கலைஞர்கள் சார்பில் நன்றி தெரிவித்து திரு, கி. வா. ஜகந்நாதன், திரு. ரஜனிகாந்த், திரு, பாரதிராஜா, செல்வி சரிதா ஆகியோர் பேசினார்கள்.



இந்த ஆண்டில் (1983) பொற்கிழி பெற்ற கலைமாமணிகளின் பெயர்கள் விவரம் வருமாறு:

திரு. மதுரை சி. எஸ். சங்கர சிவம் (இசைக் கலைஞர்),
திரு. மதுரை டி. சீனிவாச அய்யங்கார் (ஜலதரங்கக் கலைஞர்),
திரு. தஞ்சாவூர் டி. டி. சங்கரய்யர் (வயலின் கலைஞர்),
திரு. எம். வி. கிருஷ்ணப்பா (இசை நாடக நடிகர்),
திரு. டி. கே. அப்புக்குட்டி பாகவதர் (இசை நாடக மிருதங்கக் கலைஞர்),
திரு ந. மு. க. சண்முகசுந்தரக் கவிராயர் (பழம் பெரும் இசை நாடக நடிகர்),
திருமதி எஸ். ஆர். பார்வதி (இசை நாடக நடிகை),
திரு ஏ. எஸ். தங்கவேல் (இசை நாடகப் பாடலாசிரியர்),
திரு. எம். கே. ஆத்மநாதன் (நாடகப் பாடலாசிரியர்),
திரு. திலகம் நாராயணசாமி (நாடகாசிரியர்),
திரு. டி. எம். கணேசன் (புரவி நாட்டியக் கலைஞர்),
திரு. மூன்றடைப்பு ஆர். ராமசுப்பு (கிராமியக் கலைஞர்–கணியான் கூத்து).

இந்த ஆண்டில் (1982-1983) விருது பெற்ற கலைஞர்கள் விவரம் வருமாறு:

திரு. கி. வா. ஜகந்நாதன் — இயற்றமிழ்க் கலைஞர்,







திரு. மைலம் ப. வஜ்ஜிரவேலு முதலியார் — இசைக் கலைஞர்,
திரு. சிக்கில் ஆர். பாஸ்கரன் — வயலின் கலைஞர்,
திருமதி. சாரதா சிவானந்தம் — வீணைக் கலைஞர்,
டாக்டர் பிரபஞ்சம் சீதாராம் — புல்லாங்குழல் கலைஞர்,
திரு. இஞ்சிக்குடி இ. பி. கந்தசாமி — நாதசுரக் கலைஞர்,
திரு. இஞ்சிக்குடி இ. பி. கணேசன் — நாதசுரக் கலைஞர்,
திரு. டி. ஆர். கோவிந்தராசன் — தவில் கலைஞர்,
திருமதி. பாலமீரா சந்திரா — கதாகாலட்சேபக் கலைஞர்,
திருமதி. சூலமங்கலம் ஆர். ஜெயலட்சுமி — இறையருட்பாடற் கலைஞர்,
திருமதி. சூலமங்கலம் ஆர். ராஜலட்சுமி — இறையருட் பாடற் கலைஞர்,
திரு. வடபழநி ந. ஆறுமுக ஓதுவார் — இறையருட் பாடற் கலைஞர்,
திரு. பி. எஸ். குஞ்சிதபாதம் பிள்ளை — பரதநாட்டிய ஆசிரியர்,
திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன் — பரதநாட்டியக் கலைஞர்,
திரு. வி. கோபாலகிருஷ்ணன் — நாடக நடிகர்,
திரு. எம். கே. முஸ்தபா — நாடக நடிகர் (சிறப்பு),
திருமதி சண்முக சுந்தரி — நாடக நடிகை,
திரு. சட்டாம்பிள்ளை கே.என். வெங்கட்ராமன் — நாடக நகைச்சுவைக் கலைஞர்,
திரு. அடியார் — நாடக ஆசிரியர்,
டாக்டர். ஆறு அழகப்பன் — நாடகக் கலை ஆய்வாளர்,
திரு. எஸ். ஆர். சபாபதி — அயல் மாநிலத் தமிழ் நாடகக் கலைஞர்,
திரு. ரஜினிகாந்த் — திரைப்பட நடிகர்,
செல்வி சரிதா — திரைப்பட நடிகை,
திரு பாரதிராஜா — திரைப்பட இயக்குநர்,
திரு. எஸ். சி. கிருஷ்ணன் — திரைப்பட பின்னணிப் பாடல் கலைஞர்,
திரு. என். வி. மாமுண்டி — இசை நாடக நடிகர்,
திருமதி. கே. பி. மெஞ்ஞானவல்லி — இசை நாடக நடிகை,
திரு. ஏ. கே. காளீஸ்வரன் — பழம்பெரும் இசை நாடகக் கலைஞர்,
திரு விகடம் ஜி. சந்துரு — விகடக் கலைஞர்,
திரு. புரிசை மண்ணுசாமி உடையார் — கிராமியக் கலைஞர் (தெருக் கூத்து),
சிறந்த கலை நிறுவனம் — நாரத கான சபா—அரு.




# அறநிலையத் துறையின் அரும்பணிகள்

ஐ. எல். ராஜேந்திரன்

கால்டுவெல், ஜி. யு. போப், வீரமாமுனிவர் போன்ற மேனாட்டு அறிஞர்களெல்லாம் தங்கித் தமிழ் வளர்த்த பெருமை திருநெல்வேலி மாவட்டத்திற்கு உண்டு.

நாம் இப்படிச் சொல்லுவதால்-அங்கே தமிழோ இந்து சமயமோ பலவீனப்பட்டிருந்ததாகப் பொருளில்லை. ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலரை ஈன்றமண் நெல்லை மண். நூற்றுக்கணக்கான பெருங்கோயில்கள் விளங்கும் மண் நெல்லை மண் என்பது வெளிப்படை.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சமய நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை மட்டும் 2700க்கு மேலாகும்.

திருச்செந்தூர்-அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சங்கரன்கோவில் - அருள்மிகு சங்கர நாராயணசுவாமி திருக்கோயில், பண்பொழி - திருமலைக் குமாரசுவாமி திருக்கோயில், நெல்லை - அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், குற்றாலம் - அருள்மிகு குற்றாலநாத சுவாமி திருக்கோயில், நெல்லை - பிள்ளையன் கட்டளைகள், நெல்லை - மேடை தளவாய் கட்டளை, கழுகுமலை-அருள்மிகு கழுகாசல மூர்த்தி திருக்கோயில், சிங்கம்பட்டி — அருள்மிகு சொரிமுத்தையனார் திருக்கோயில், கோவில்பட்டி — அருள்மிகு பூவனநாத சுவாமி திருக்கோயில், இலஞ்சி-அருள்மிகு இலஞ்சி குமாரர் திருக்கோயில், தென்காசி-அருள்மிகு காசி விசுவநாத சுவாமி திருக்கோயில், வீரகேரளம் புதூர் - அருள்மிகு நவநீத கிருஷ்ணசுவாமி திருக்கோயில், ஆழ்வார் திருநகரி—அருள்மிகு ஆதிநாத ஆழ்வார் திருக்கோயில், செட்டியாபத்து-அருள்மிகு சிதம்பரேசுவரர் வகையறா திருக்கோயில்கள், சிவகிரி-இராணி கருப்பாயி நாச்சியார் கட்டளை, நான்குநேரி—வானமாமலை பெருமாள் திருக்கோயில் ஆகிய பதினேழு திருக்கோயில்கள் இம்மாவட்டத்தில் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் உடையவைகளாகும்.

தமிழ்நாடு அரசினுடைய அறநிலையத்துறைக்கு உட்பட்டதான நெல்லை மாவட்டக் கோயில்களுக்கு உள்ள நில புலன்கள் பற்றிய மொத்த விவரங்களையும் இங்கே நாம் தெரிந்து கொள்ளுவது நலன் பயப்பதாக இருக்கும். நெல்லை மாவட்டத்திருக்கோயில்களுக்குச் சொந்தமாயுள்ள நன்செய்நிலம் 15 ஆயிரத்து 670 ஏக்கர், 37 செண்ட். புன்செய் நிலமோ 37 ஆயிரத்து 590 ஏக்கர் 94 செண்ட். மானாவாரியோ 2 ஆயிரத்து114 ஏக்கர்,39செண்ட்.

இவை தவிர, திருக்கோயில்களுக்குச் சொந்தமாயுள்ள கட்டடங்களின் எண்ணிக்கை மட்டும் 2346 ஆகும்.

நெல்லை மாவட்டத்தில் உண்டியல் மூலம் அதிக வருமானம் வரும் திருக்கோயில்கள் திருச்சீரலைவாய் எனப்படும் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலும், நெல்லை அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயிலுமாகும். அதன் விவரம் வருமாறு:

முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாவதாகிய அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் (பசலி 1388) ரூ. 14,27,890.84, (பசலி 1389) ரூ. 16,60,669.79, (பசலி 1390) ரூ. 18,08,907.02.

அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் (பசலி 1388) ரூ. 2,56,229.84 (பசலி 1389) ரூ. 3,07,745.62; (பசலி 1390) 3,56,455.21.

**நிதிமூலம் நலன்கள்**

இந்தக் கோயில்களுக்கு வரும் வருமானங்கள் யாவுமே அந்தந்தக் கோயில்களின் திருப்பணிகளுக்காகவோ பராமரிப்புகளுக்காகவோ மட்டுமே செலவிடப்படுகிறதா என்றால் அதுதான் இல்லை.

அன்பு இல்லம், சிறுவர் இல்லம், முதியோர் இல்லம், அன்பு ஆசிரமம், வேத பாடசாலை, சித்த வைத்திய சாலை, தேவாரப் பாடசாலை, திருமுறைப் பயிற்சி வகுப்பு, சமய நூலகம், மதிய உணவுத் திட்டம், சிறப்புத் திருமணம், ஆரம்பப்பள்ளி, துவக்கப்பள்ளி, மகளிர் மேநிலைப் பள்ளி, மகளிர் தங்கும் விடுதி போன்ற பல அமைப்புகளெல்லாம் திருக்கோயில்களின் வருமான நிதியிலே சிறப்புற நடத்தப்பட்டு வருகின்றன.





பக்தர்கள் தங்கிடவெனப் பயன்மிகு விடுதிகள் பலவும் கட்டப்பட்டுள்ளன. மதுரை - குற்றாலம் போன்ற இடங்களில் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பில் செய்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நுணுக்கமான சிற்ப வேலைப் பாடுகளின் சிறப்புத் தெரிவிப்பவை திருநெல்வேலி திருக்கோயில்கள். நெல்லையப்பர் கோயிலில் ஆனித் திங்களில் நடைபெறும் தேரோட்டத் திருவிழா தமிழகத்திலேயே மூன்றாவது தேர்த் திருவிழாவாகும்.

தமிழும் சைவமும் தழைத்தோங்கிடும் நெல்லை மாவட்டத்திலேயே சிறப்புற்றதெனக் கருதப் பெறும் திருச்செந்தூர்—அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருநெல்வேலி - அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோயில் இரண்டின் சார்பிலும் நடைபெறப்படும் பொதுப் பணிகள் குறிப்பிய குறிப்புகளே மற்ற கோயில்களின் பணிமுன் னோட்டமாக அமையக் கூடும்.

எனவே, அந்த இருகோயில்களின் நிதிச்செலவினைச் செய்முறை விவரங்கள் பற்றித் தெரிந்து கொள்ளுவோம்.

**திருச்செந்தூர்**

திருச்செந்தூர்க்கோயில் நிதிச்செலவில் அப்பகுதிப் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவியருக்கு 235 கட்டிகள் சாதம் வழங்கப்படுகிறது.

ஆதி திராவிடர்கள் -மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களுக்குத் திருமணம் செய்து கொள்ளத் தாலி, துணிமணி பாத்திரம் பண்டங்கள் யாவற்றுக்குமென ஒரு திருமணத்திற்கு ஆயிரம் ரூபாய் வரை உதவி செய்யப்படுகிறது.

ஆண்டொன்றுக்கு ரூ. 40 வீதம் செலுத்திடும் பக்தர்களுக்கு, அவர்கள் விரும்பும் நட்சத்திரத்தன்று சுவாமிக்கு மாதந்தோறும் கோயில் செலவிலேயே அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படுகிறது.

அன்பு இல்லம், சிறுவர் இல்லம், முதியோர் இல்லம், சித்த வைத்தியசாலை, நூல் நிலையம், வேத பாடசாலை, போன்ற பல அமைப்புகள் சிறப்புற நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

**திருநெல்வேலி**

நெல்லையப்பர் கோயில் நிதியிலிருந்து நாள்தோறும் ஏழை எளிய மக்களுக்கு உணவு வழங்கப்படுகிறது.

குழந்தைகளுக்காகத் தனி பொது தேவாரப் பாடசாலை நடத்தப்பெறுகிறது.

ஸ்ரீ காந்திமதியம்பாள் மகளிர் மேநிலைப் பள்ளி, சுவாமி நெல்லையப்பர் அன்பு ஆசிரம இல்லம், சுவாமி நெல்லையப்பர் ஆதாரப் பள்ளி, திருஞான சம்பந்தர் பாலர் பள்ளி ஆகிய கல்வி நிறுவனங்கள் நன்முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இன்னொரு பள்ளிக் கட்டடம் பெருமளவில் கட்டப்பட்டு வருகிறது. மேநிலைப் பள்ளிக்கு ரசாயன ஆய்வுக்கூடம் 60 ஆயிரம் ரூபாய் செலவில் பொருட்கள் வாங்கப்பட்டு மாணவியரின் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு உதவப்பட்டுள்ளது. சமய நூலகங்களும் நடத்தப் பெறுகின்றன.

நெல்லை மாவட்ட அறநிலையங்கள் ஆற்றிடும் பணி இத்தகு சீரும் சிறப்பும் உடையவைகளாகும்.






வரலாற்றுப் புகழ்மிக்க, சிறப்பு வாய்ந்த இந்தியத் துறைமுகங்களில் தூத்துக்குடி ஒன்றாகும். வரலாற்றுத் தொடக்க காலத்திலேயே முத்துக் குளிப்பதற்குப் பெயர் பெற்றது இந்தத் துறைமுகம்.

முத்து வாணிபத்தின் தொடக்கமே இங்கு ஆரம்பமாகியது என்று கூறலாம். சோழ மன்னர்கள் மற்றும் பாண்டிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் கிழக்கில் சீனாவையும், மேலை நாடுகளில் கிரேக்க நாட்டையும், ரோமாபுரியையும் முத்து வாணிபத்தில் இணைக்கும் பாலமாகத் தூத்துக்குடித் துறைமுகம் விளங்கியது. சிறிய துறைமுகமாக இருந்த இந்தத் துறைமுகம் இன்று மிகவும் விரிவாக்கப்பட்டிருக்கிறது.

1980-ஆம் ஆண்டு வாக்கில் ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் டன் வாணிகப் பொருட்கள் இந்தத் துறைமுகத்தின் வாயிலாகச் சென்றன. உரம், உணவுத் தானியங்கள், நிலக்கரி மற்றும் சரக்குகள் இறக்குமதியாயின. முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள் உப்பு, வெங்காயம், சிமிண்ட், பனைமரப் பொருட்கள் முதலியவையாகும். இந்தியநாடு சுதந்திரமடைந்த பின் இத்துறைமுகத்தின் வழியாக வாணிகம் பன்மடங்கு அதிகரித்துவிட்டது.



8634

நடுத்தரத் துறைமுகங்களின் விரிவாக்கக் குழு இந்திய அரசினால் 1959-ல் அமைக்கப்பட்டது. இங்கு தூத்துக்குடி துறைமுகத்தின் விரிவாக்கத்திற்கு ஒரு திட்டத்தைப் பரிந்துரை செய்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது சேர்க்கப்பட்டது.

## பெரிய துறைமுகம்

எண்ணெய்க் கப்பல் தளம் ஏற்பட்டதும் தூத்துக்குடி 1974-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 10-வது பெரிய துறைமுகமாகியது.

1979-80-ஆம் ஆண்டில் இத்துறைமுகத்தில் இறக்குமதியும், ஏற்றுமதியும் 24.11 இலட்சம் டன் எடை அளவை எட்டியது. முந்திய ஆண்டில் இந்த அளவு 17இலட்சம் டன்னாக இருந்தது.

## வருமானம்

1979-80-ஆம் ஆண்டில் இந்தத் துறைமுகத்தின் நடப்பு வருமானம் 332.26 இலட்சம் ரூபாயாகும். 290.08 இலட்சம் ரூபாய் செலவைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் இதன் நிகர வருமானம் 542.18 இலட்சம் ரூபாயாகும்.



## தூத்துக்குடி

தூத்துக்குடி மாபெரும் நகரமாக விளங்குகிறது. உப்பு உற்பத்தியும், முத்துக் குளித்தலும் இந்நகரின் பண்டையத் தொழில் பெருமையாகும். இன்றும் முத்துக்குளித்தல் சிறப்பாக நடைபெறுகிறது. மீன் பிடிக்கும் துறையாகவும் சிறப்புற்று விளங்குகிறது இது. கடலில் மூழ்கி முத்தெடுப்பவர்களின் பணி உயிராபத்திற்குள்ளானது என்றாலும் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள்.

திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பயிராகும் நிலவாகை மருந்து இலை (Semia) ஆண்டொன்றுக்கு 2500 டன் ஏற்றுமதியாகிறது. இது பேதி மருந்து உட்பட, மருந்து தயாரிப்பதற்குப் பெரிதும் உதவுகிறது.

பிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம், சுவிட்ஸர்லாந்து, பிரிட்டன், இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் இதனை வாங்குகின்றன.

இப்பொழுது 'ஸ்பிக்' நிறுவனத்தின் மூலமாக உர உற்பத்தியும் அதிகரித்துள்ளது. மற்றும் பல தொழில்களும் பெருகி வருகின்றன. கனரக உற்பத்தித்தொழிற்சாலை, அனல் மின்நிலையம் ஆகியவைகள் குறிப்பிடத்தக்கவை.

## மற்றும் சில குறிப்புகள்

தூத்துக்குடி துறைமுக விரிவாக்கத் திட்டத்திற்கு 1963-ல் ரூ. 46.55 கோடி செலவில் அங்கீகாரமளிக்கப்பட்டது. இத்துறைமுகத்தில் கப்பலோட்டிய தமிழர் திரு வ. உ. சிதம்பரம் பிள்ளையின் உருவச்சிலை நிறுவப்பட்டிருக்கிறது. 1979-ஆம் ஆண்டு முதல் இது பெரிய துறைமுக




மாகச் செயல்படுகிறது.

1981-82-ல் இத்துறைமுகத்தின் வணிகப் போக்குவரத்து 3.66 இலட்சம் டன்னாகும்.

1981 செப்டம்பர் 1ஆம் தேதி முதல் துறைமுகத் தொழிலாளர்கள் 3 ஷிப்டுகளில் வேலை செய்து வருகிறார்கள்.

சரக்குகளை ஏற்றுமதி-இறக்குமதி செய்வதிலும் இத்துறைமுகம் புதிய சாதனைகளைப் புரிந்துள்ளது. ஒரே நாளில் (1981 ஜூலை 29ஆம் நாளன்று) 6150 டன் நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டது.

6-வது திட்டகாலத்தில் (1980-85) ரூ. 25.57 கோடி ரூபாய் செலவில் இத்துறைமுக வசதியைப் பெருக்க அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

வரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி
ஆயிரம் மலர்கள் பூத்து குலுங்கும்
அழகோவிய சேலைகள்...
ாக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
அனைவரும் விரும்பும் அருமை
திறையும் ஆடைகள் ஆயிரம்
...அழகார்ந்த ரகங்கள்
தும் உண்டு !
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி